அஹோவின் இக்கடிதம் பற்றிய பல உண்மைகளை, இம்மாதம் வெளிவரவிருக்கும் ஸ்ரீராமாநுஜனில் ஸ்ரீகாஞ்சீ மஹாவித்₃வான் ஸ்வாமி வெளியிடவிருக்கிருர். அதைக் கண்டு அன்பர்கள் தெளிவடைவார்களாக. நிற்க.

சோரம்போகும் கதைகளை வெளியிடும் வாரப்பத்திரிகையில், மத சோரம்போன அஹோவின் கடிதம் பிரசுரிக்கப்பட்டதிலும், அதை மறுக்கும் கடிதத்திற்கு இடமில்லாமல் போனதிலும் ஆச்சரியமில்லை. ஆயினும், இக்கடிதம் அஹோவின் வேஷத்தைக் கலைத்துவிட்டது. இத்தகையவரோடு இனியும் வைஷ்ணவ குலத்திற் பிறந்தவர்கள் ஸ்நேஹம் கொண்டிருந்தால், அவர்களது வைஷ்ணவத்வத்தையும் சங்கிக்க அடுக்கும். நிற்க, ஸூத₃ர்ஶனத்தில் வெளிவந்த மறுப்புரைகளுக்கு எவ்வித ஸமாத₄ானத்தையும் வெளியிட இயலாத அஹோ, நம்மைக் கண்டபடி இகழும் வசவுச் சுவடியொன்றைப் பிறர் பெயரில் அச்சிட்டு வருவதாகத் தெரிகிறது. ஏற்கனவே இவர் தன் உறவினனை ஓர் காலிப்பையலின் பெயரில் கேட்பார் செவிசுடும் கீழ்மை வசவுகளைப் பெய்து சில சுவடிகளை வெளியிட்டிருப்பதைப் பலர் அறிவர். இவற்றிலிருந்து — நமது இந்நூலில் ப்ரமாணங்களோடு நிரூபிக்கப்பட்ட விஷயங்களுக்குத் தம்மால் பதிலிறுக்கமுடியாது என்பதை இவர் காட்டிக் கொண்டவராகிருர். பயங்கொள்ளித்தனமாகப் பிறர் பெயரில் எழுதப்படும் வசவுநூல்களுக்கு மதிப்பளித்து நாம் பதிலிறுக்கமாட்டோம். தைரியமிருந்தால், இவ்வஹோ நமது நூலிலுள்ள மறுப்புக்களுக்கு, ஆத₄ாரங்காட்டி ஸமாத₄ானமுரைத்துத் தம் பெயரிலேயே நூல் எழுதட்டும். அப்படி எழுதிஞல் நாமும் அதை ஆராய்வோம். பிறர் பெயரில் வசவுச்சுவடிகளையே வெளியிட்டால், அவற்றைக் காற்கடைக்கொள்வோம்.

—[❋]—

ஸ்ரீஸூக்திமாலா வெளியீடுகள்

பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு
முதலானவற்றோடு கூடிய பெரியவாச்சான்பிள்ளை முதலான
பூர்வாசார்யர்களின் க்ரந்தங்கள், ஆழ்வாரருளிச்செயல்கள்.

	க்ரந்தங்கள்	விலை	தபால்
1.	பரந்த ரஹஸ்யம் முதலிய எட்டு ரஹஸ்யங்கள்	(அச்சில்)	
2.	ஸ்தோத்ரரத்நசது:ஶ்லோகீ ஜிதந்தே வ்யாக்யானங்கள்	8-00	1-00
3.	திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	1-50	-40
4.	முதல் திருவந்தாதி வ்யாக்யானம்	1-88	-50
5.	பெருமாள் திருமொழி		
6.	திருமாலை வ்யாக்யான		
7.	திருவாசிரியம் பெரிய	சில்)	
8.	சது:ச்லோகீ வ்யாக்	2-50	-50
9.	கத்ய வ்யாக்யானங்	4-50	-50
10.	நாச்சியார் திருமொ		
11.	திருச்சந்தவிருத்த வ்	3-00	-65
12.	நான்முகன் திருவந்		
		5-00	-75
13.	ஸ்ரீராமாயண தனி	3-50	-75
	ஷை இரண்டாம்	7-00	1-00
14.	திருப்பள்ளியெழுச்சி	0-50	-20
15.	பாசுரப்படி ராமாயண		-10
16.	அமலனாதிபிரான் வ்		
17.	கண்ணிநுண்சிறுத்தா		
18.	சிறியதிருமடல் வ்யா	3-00	-65
19.	முமுக்ஷுப்படி வ்யா	3-00	-65
20.	பெரியதிருமடல் வ்ய	5-00	-75
21.	முதல் திருவந்தாதி,		
		3-00	-65
22.	இரண்டாந்திருவந்தாதி வ்யாக்யானம் [விவரணத்துடன்]	4-00	-85
23.	ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் முதலியவை	12-00	1-50
24.	ஸ்ரீவசநபூஷண வ்யாக்யானம்		
	4-அரும்பதவுரைகளுடன் முதல் பாகம்	6-00	1-20
25.	மூன்றாந்திருவந்தாதி வ்யாக்யானம் [விவரணத்துடன்]	4-00	-85
26.	அருளிச்செயல் ரஹஸ்யம் [பூஷணத்துடன்]	2-50	-65
27.	திருவெழுகூற்றிருக்கை வ்யாக்யானம் [விவரணத்துடன்]	1-00	-35
28.	கைசிகபுராணம்	1-00	-25
29.	பகவத்விஷயம் (முதலிரண்டு திருவாய்மொழிகள்)	25-00	5-00
	ஷை இரண்டாம் பாகம் (முதற்பத்து 3-10 திருவாய்மொழிகள்)	28-00	5-00
30.	உபயவேதாந்த ஐககண்ட்யம்	2-50	-50
31.	கோயிலொழுகு	3-00	-50
32.	யதிராஜ வைபவம்—வடுகநம்பி அருளியது [விவரணத்துடன்]	1-00	-25
33.	நாலாயிர திவ்யப்ரபந்தம் [முதலாயிரம்]	7-00	1-00

அக்நிஹோத்ரியும் வைணவமும்

விஷயஸூசிகை

(ஸுத$_3$ர்ஶனம்—பிரமாதீ$_3$ச புரட்டாசி-ஐப்பசி இதழில் வெளிவந்தவை)

(ஸுத$_3$ர்ஶனம்—பிரமாதீ$_3$ச கார்த்திகை-மார்கழி இதழில் வெளிவந்தவை)

(ஸுத$_3$ர்ஶனம்—பிரமாதீ$_3$ச தை-மாசி இதழில் வெளிவந்தவை)

(ஸுத$_3$ர்ஶனம்—பிரமாதீ$_3$ச பங்குனி, ஆனந்த சித்திரை இதழில் வெளிவந்தவை)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அக்நிஹோத்ரியும் வைணவமும்

அகி2ல பா4க3வதோத்தமர்களுக்கும் 'ஸுத3ர்ஸனம்' பத்திரிகை ஆசிரியனான அடியேன் செய்யும் விண்ணப்பம்

ஒவ்வொரு மதத்திற்கும் உட்பகை வெளிப்பகை என இருவகைப்பட்ட பகைகள் உண்டு. நாத2யாமுநயதிவராதி3களான நமது பூர்வாசார்யர்கள் வெளிப்பகைகளால் தகர்க்கமுடியாதபடி அநாதி3வைதி3கமதமான நமது வைஷ்ணவ மதத்தைப் பேணிப் பாதுகாத்துள்ளனர். ஆனால், ஸமீபகாலத்தில் நமது மதத்தைச் சேர்ந்தவர்களே பலர் பொதுஜனப் பத்திரிகைகளிலும், தனிப்பட்ட நூல்களிலும் சொற்பொழிவுக் கூட்டங்களிலும் க்2யாதிலாப4பூஜைகளுக்கு ஆசைப்பட்டு நமது மதத்தை இழிவுபடுத்திப்பேசியும் எழுதியும் வருகின்றனர். இதனால் நமது மதத்தில வைஷ்ணவர்களுக்கே நம்பிக்கை குறைந்து வருகிறது. இத்தகைய செயல்களை அறிவாளிகளான உப4யவேதா3ந்த வித்3வான்களும், ஆக3மபண்டி3தர்களும், தமிழ்ப்புலவர்களும், ஆராய்ச்சியாளர்களும் ப்ரமாணயுக்திகளைக் காட்டிக் கண்டித்து நம்மவர்களுக்கு நமது மதத்தின் பெருமையில் அசையாத நம்பிக்கையை ஊட்டவேண்டியது அவர்களுக்குள்ள தலையான கடமையாகும். இதைச் செய்ய நாம் தவறினால், நமது மதத்தின் அழிவுக்கு நாமே காரணமாவோம் என்னும் பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிடும். இப்பழிச் சொல்லுக்கு ஆளாகாதபடி நம்மை நாமே காத்துக்கொள்ளும் வாய்ப்பு ஒன்று இப்போது ஏற்பட்டுள்ளது.

"வரலாற்றில் பிறந்த வைணவம்" என்னும் நூல் கும்பகோணம் ஸ்ரீ சார்ங்கபாணி சுவாமி தேவஸ்தானத்தாரால் ரூ. 12-00 விலைக்கு ஸமீபகாலத்தில் வெளியிடப்

பட்டுள்ளது. இதை எழுதியவர் பெயர் "அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியார்" என்று அந்நூலில் பொறிக்கப் பட்டுள்ளது. இப்பெயரையே சுருக்கங்கருதி நாம் 'அக்₃நி ஹோத்ரி' என்று தலைப்பில் குறித்துள்ளோம். இந்நூலில் ஏராளமான சொற்பொருட்பிழைகள் உள்ளன. சுமார் 300 பக்கங்கள் உள்ள இந்நூலில் பிழைதிருத்தம் 11 பக்கம் அச்சிடப்பட்டுள்ளது. பிழைதிருத்தத்தில் குறிக்கப்படாத பிழைகள் ஏராளம். பிழைதிருத்தத்திலேயே பல பிழைகள் உள்ளன. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல், வ்யக்தி தூ₃ஷணத்தில் இழியாமல், அறிவாளிகளான பல ஸ்ரீ வைஷ்ணவோத்தமர்கள் இந்நூலிலுள்ள அப₃த்₃த₄மான பல கருத்துக்களைக் கண்டிக்கவேண்டும் என்று பிரார்த்திக் கிறோம். அதற்காகவே 300 பக்கங்கொண்ட இந்நூலிலிருந்து பல வாக்யங்களைப் பல பாராக்களாகத் தொடர் இலக்க மிட்டுக் கீழே அச்சிட்டுக்கொடுத்திருக்கிறோம். இந்நூலை விலை கொடுத்து வாங்க சக்தியில்லாதவர்களும், கீழே அச் சிட்டிருக்கும் பகுதிகளிலிருந்து இந்நூலின் தன்மையை அறியலாம். இதைக்காணும் அறிவாளிகள் சுமார் 8 பக்கங் களுக்குமேற்படாமல் இதிலுள்ள விஷயங்களைக் கண்டித்து ஸுத₃ர்ஶனம் காரியாலயத்துக்கு அனுப்பினால் அவை இந் நூலில் சேர்க்கப்படும்.

"வரலாற்றில் பிறந்த வைணவம்" என்னும் நூலின் பகுதிகள்

தோற்றுவாய்

1. உலகில் உள்ள மதங்கள் யாவுமே ஒரு காலத்தில் தோன்றிப் பிறகு முறையாக வளர்ச்சியுற்று வந்தனவாகும். இம் முறையிலேயே தமிழ்நாட்டு வைணவமும் ஒரு காலத்தல் தோன்றி வளர்ந்து இன்றுள்ள நிலையை எய்தியுள்ளது என் பது உளங்கொளத்தக்கது. [பக்கம் 1]

2. விஞ்ஞான அறிவு நாடோறும் வளர்ந்து வருகின்ற இக்காலத்தில், எந்த நூலை எடுத்தாலும் அதன் அகப்புறச் சான்றுகளைக் கொண்டு, நமக்கு முன்னமே உறுதி செய்யப் பட்டுள்ள நாட்டு வரலாற்றுக் கால அடிப்படையில் அந்த நூலின் காலத்தையும் அறுதியிட்டுக் கூறும் எண்ணம் ஏற் பட்டுவிட்டதால், வேதத்தின் வழிநூல் சார்புநூல்களாகிய ஏனையவற்றின் காலமும் வேதகாலமும் ஒன்றே என்று எண்ணிய எண்ணம் மாறவேண்டிய காலம் வந்துவிட்டது. [பக்கம் 2]

வைணவத் தோற்றம்

3. முத்தொழில் செய்யும் மும்மூர்த்திகளுள் காத்தல் தொழி லைச் செய்யும் விஷ்ணுவுக்கு முதலிடம் கொடுத்துத் தோன்றிய மதம் விஷ்ணுவையே பரம்பொருளாகக்கொள்ளும் வைணவ மதமாகும். இக் கொள்கைக்கும் அடிப்படை வேதமே எனினும், வைணவக் கருத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சி, அவ்வளர்ச்சி களைத் தெரிவிக்கும் நூல்களின் காலம், அக்கால வரலாற்றில் காணப்படும் உண்மைகள் ஆகியவற்றை நோக்க, **வைணவம் வேதகாலத்திற்குப் பிற்பட்டு ஒரு காலத்தில் உண்டாகிப் படிப்படியாகப் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து ஓர் ஆசார் யனை ஒப்புக்கொண்டு சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தொடங்கியதும்.** தன் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத் துள்ளது என்பதும் புலனாகின்றது. [பக்கம் 5]

வேதமதம்

4. வேதம், ஸ்மிருதிகள் இவற்றின் கொள்கைகள் உரு வாகப் பல நூற்றாண்டுக்காலம் கழிந்திருக்கும். அக்னியில் ஹோமம் பண்ணி மிகப்பெரிய யாகங்கள் செய்யத் தலைப்பட்ட காலத்தில் உபநிடதங்கள் தோன்றி இச்செயல்களில் புரட்சியை உண்டாக்கி, இச் சடங்குகள் செய்வதைக் காட்டிலும் ஞான மார்க்கமே மேம்பட்டது என்று அறுதியிட்டன. ஞான மார்க்கத்தைப் பின்பற்றி முன்னேறுவது என்பது சான்றோர் சிலருக்கன்றி ஏனைய பொதுமக்களுக்கு எளிய செயல் அன்று. ஆகவே, உபநிடதத்தில் கூறப்பட்ட பிரமத்தில் ஈடுபட்டுத் தியானம் வாயிலாகப் பக்தி செய்வது என்ற முறை கையாளப்

படலாயிற்று. அதுவும் பிற்காலத்து அரியதொரு செயலாகவே, 'ஒன்றுக்கும் பற்றாத அடியேனைக் குறைதீர்த்துக் காக்க வேண்டும்' என்று சரணாகதி பண்ணும் பிரபத்தி மார்க்கம் பின்பற்றப்பட்டது. இதனைவிட எளிய மார்க்கம் இன்றாதலே, இதுவே நிலைத்து நிற்கிறது. [பக்கம் 8]

வர்ண தர்மம் இல்லை

5. வேதம் குறிப்பிட்ட கர்ம தத்துவம், வர்ணத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததாதலின், கர்மதத்துவம் மறைந்ததோடு வர்ணதருமத்தின் முக்கியத்துவமும் மறைய வேண்டியதே. மிகச் சிறிய அளவிலேயே வர்ண தர்மம் வாழ்ந்து வருகிறது. பொதுவான இந்து மதத்தின் ஞான மார்க்கம், பக்திமார்க்கம், சமயக்கொள்கை இவை வர்ண தர்மத்தை அண்டி நிற்கவில்லை. ஞானதத்துவம், பக்தி பிரபத்திதத்துவங்கள் வர்ணக்கொள்கையோடு தொடர்புடையவை அல்ல. ஆகவே, இப்பொழுது வர்ணதர்மம் தன் முக்கியத்துவத்தை இழந்து சமுதாய தருமமாக நடைமுறையில் இருந்துவருகிறது. இது வரலாறு காட்டும் செய்தியாகும். [பக்கம் 9]

கவிகள் வாக்கில் வரலாற்றுண்மை

6. வைணவ வரலாற்றை உணர்வதற்குக் கவிகள், வேதாந்திகள், மதாசாரியர்கள் என்ற மூவகைச் சிந்தனையாளர் தம் கருத்துக்கள் நமக்குக் கருவியாக உள்ளன. கற்பனையுலகில் சஞ்சரித்துக்கொண்டு திவ்ய தேசங்களில் அர்ச்சாவதார மூர்த்திகளைத் தரிசித்து ஆனந்தப்பட்டு, அம்மூர்த்திகளை இராமன் கண்ணன் முதலிய அவதாரங்களாகக் கற்பனையில் கண்டு அம்மூர்த்திகளிடம் அவ்வவதார திருவிளையாடல்களை ஏற்றிப் பாசுரம் பாடிக் கற்பனையுலகில் இறைவனைக் கூடியும் பிரிந்தும் முறையே மகிழ்ந்தும் துயருற்றும் வாழ்ந்த திவ்வியக் கவிகள் வாக்கில், அரசர்கள் ஊர்கள் பற்றிய செய்திகளில் சிறிதளவு வரலாற்றுத் தொடர்பான செய்தியே புலனாதல் கூடும். [பக்கம் 9]

வைணவத்தைப் பற்றிய பொதுவான கருத்துக்கள்

7. வைணவம் என்ற சொல் வேதத்திலேயே காணப்படும் சொல். (யஜுர் வேதம் - முதல் காண்டம் - இரண்டாவது பிரஸ்னம் - இரண்டாவது அநுவாகம்) எனினும் அஃது வேறொரு கருத்தில் பயன்படுத்தப் பட்ட சொல்லாகும். விஷ்ணுவை மட்டும் வழிபடுவது என்பதும், விஷ்ணுவே பரதெய்வம் என்பதும் பின்னர் வந்த கொள்கைகளாம். [பக்கம் 10]

8. 'உபய வேதாந்த' என்ற விருது ஸ்ரீரங்கநாதனால் வேதாந்ததேசிகருக்கு முதல்முதல் வழங்கப்பட்டதாகப் பிரிதிவாதி பயங்கரம் அண்ணன் கூறுகிறார். [பக்கம் 13, 14]

9. தென்னாட்டு வைணவம் காலட்சேப கூடங்களில் வளர்ந்து எப்பொழுது ஆலயங்களோடு இரண்டறக் கலந்த தொடர்பு கொண்டது என்பதனை வரலாற்று உணர்ச்சியோடு நோக்கவேண்டியவர்களாக உள்ளோம். [பக்கம் 14]

10. இராமாநுஜர் ஆழ்வாருடைய பக்தி தெய்வீக உணர்ச்சியைப் பெறுதற்குரிய அடிப்படையேயன்றி வீடுபேறு அளிக்க வல்ல பக்தி ஆகாது என்று கருதுகிறார். பின்வந்த பேருரையாசிரியர்களும், ஆழ்வார்கள் வர்ண தர்மங்களுக்குக் கட்டுப் பட்டவர்கள் ஆதலின், உபநிஷத்துக்களில் கூறப்பட்ட பக்தி யோக நெறியை அவர்கள் பின்பற்ற இயலாததால், அவர்கள் பிரபத்தி யோகநிஷ்டர்கள்தாம் என்று விளக்கம் கூறுகின்றனர். [பக்கம் 15]

நாராயண என்னும் நாமம்

11. தெய்வத்திற்குப் பலபல பெயரிட்டுப் பலபல முறையில் வழிபாடு கூறும் வேதத்திலிருந்து, 'விஷ்ணுவே ஒரே கடவுள்' என்று அறுதியிடும் வைணவம் எப்படித் தோன்றியிருத்தல் கூடும் என்ற ஆராய்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. விஷ்ணு என்ற சொல்லினை அடிப்படையாகக் கொண்டு அமைந்த வைணவம், பரம்பொருளின் பெயராக விஷ்ணு என்பதனை முக்கியமாகக் கொள்ளாமல், நாராயணன் என்ற பெயரையே சிறப்பாகக் குறிப்பிடுகிறது. [பக்கம் 15]

வேத உபநிடதங்களில் வழிபாடு

12. வேதத்தில் யாகங்களே சொல்லப்பட்டுள்ளன. வேதத்தில் உருவ வழிபாடு சொல்லப்படவில்லை. [பக்கம் 16]

13. தமிழ் நாட்டு வைணவம் தனக்கு வேண்டிய அடிப்படைக் கருத்துக்களை வேதத்திலிருந்து பொறுக்கி எடுத்துக் கொண்டுள்ளது. [பக்கம் 17]

14. அக்கியில் ஹோமம் செய்து தெய்வங்களை வழிபடும் கொள்கைக்கு வைணவம் வேதத்தைப் பின்பற்றுகிறது. 'விக்கிரக வழிபாடு' 'ஆலய வழிபாடு' என்பனவற்றிற்கு வைணவம் ஆகமத்தைப் பின்பற்றுகிறது. சிறிய அளவில் விக்கிரக ஆராதனையைத் தொடங்கிய ஆகமங்கள், பிறகு தனியான வேதாந்தக் கொள்கைகள், மதக் கொள்கைகள் இவற்றோடு வளர்ந்து முடிவில் வைதிக மதத்தோடு உறவு கொண்டாடி, அக்கியில் ஹோமம் செய்வது முதலியவற்றை உட்கொண்டு மிகப்பெரிய அளவில் ஆலயபூஜைகளை வளர்த்துப் பலவிதத் திருவிழாக்களுக்கும் பூஜைகளுக்கும் வழி வகுத்து விட்டன. [பக்கம் 17]

15. வைணவ சம்பிரதாய ஆசாரியர்கள் விஷ்ணு புராணத்தை அடிப்படையாகக் கொண்டு வைணவ மதத்தைத் தொடக்கத்தில் வளர்த்தனர். உபநிஷத்துக்களில் கூறப்படும் உருவம் இல்லாத பிரும்மத்தை உருவமுடைய விஷ்ணுவாக ஆக்கி, குணம் இல்லாத பிரும்மத்தைக் குணமுடையதாக விளக்கிய பெருமை விஷ்ணு புராணத்தைச் சாரும். [பக்கம் 17, 18]

16. வைதிக மதத்திலிருந்து பாஞ்சராத்ர ஆகம மதம் வேறுபட்டது என்று புறக்கணித்தல் கூடாது எனவும், அதனையும் வைதிக மதக் கொள்கையை ஒத்த வேறொரு சிறந்த கொள்கையாகவே பாவிக்கவேண்டும் எனவும் நாதமுனிகள் பிரசாரம் செய்துவந்தார். [பக்கம் 18]

17. முன் இருந்த பிரும்மசூத்திர உரையாசிரியர்கள் பாஞ்சராத்திர ஆகமத்தில் வேதத்துக்கு எதிரான கொள்கை

கள் இருப்பதைச் சுட்டியுள்ளனர். ஆதலின், இராமாநுஜர் காலம்வரை ஆகமக் கொள்கைகளும் ஆழ்வாராதிகள் பாசுரங்களும் தமிழ்நாட்டு வைணவத்தில் கலக்கவில்லை என்று தெரிகிறது. இராமாநுஜரே தம் காலத்தில் ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களை மேற்கொண்டு வைணவக் கொள்கைகளை வளர்த்தார் என்று 'கோயிலொழுகு' 'வேங்கடாசல இதிகாச மாலா' 'குருபரம்பராப்ரபாவம்' முதலிய நூல்கள் குறிப்பிடும் செய்திக்கும், உபநிடதம் கூறும் பக்தியோக மார்க்கத்தைத் தம் நூல்களில் வலியுறுத்திய இராமாநுஜர் சரணாகதி கொள்கைக்கு காரணமாயிருந்தார் என்று குறிப்பிடுவதற்கும் அவர் நூல்களில் அகச்சான்று எதுவும் இன்மையால், இராமாநுஜர் சீடர்களுக்கு இரகசியமாக உபதேசம் செய்யவே, அச்சீடர்கள் வாயிலாக வெளிப்பட்ட செய்தியே 'குருபரம்பரை' முதலியவற்றில் குறிப்பிட்டுள்ளது என்று கூறும் சமாதானம் வேதாந்த தேசிகராலேயே ஒத்துக்கொள்ளப்படவில்லை. நூல்களில் ஏறுத தனியான ரகஸ்ய சம்பிரதாயம் கிடையாதென்று சம்பிரதாய பரிசுத்தி என்ற நூலில் கூறுகிறார். எந்தச் சிறப்புச் செய்தியும் பொதுச்செய்தியோடு முரண்பட்டதாயிருத்தல் கூடாது. இக்கால ஆராய்ச்சியாளர்களுள் **J.A.B. Van Buitenen** என்பார் இராமாநுஜர் ஆலய வழிபாட்டோடு நேருக்கு நேராகச் சம்பந்தப்பட்டதாகத் தெரியவில்லை எனவும், ஸிம்பாசலம் கோவிலைப்பற்றி நூல் எழுதும் காலத்தில் டாக்டர் சுந்தரம் என்பார் ஆலயவழிபாட்டை இராமாநுஜர் வகுத்தார் என்பது தவறு எனவும் குறிப்பிட்டுள்ளனர். [பக்கம் 18, 19]

ஆகமக் கலப்பு

18. இராமாநுஜருக்குப் பின் வந்த ஆசாரியர்கள், வைதிக மதக்கொள்கைகளோடும், ஆகமக் கொள்கைகளையும் ஆசரணைகளையும் கலந்ததோடு, ஆழ்வார் அருளிச் செயல்களையும் தங்கள் கொள்கைக்கு மேற்கோளாகக்கொண்டு வைணவத்தை வளர்த்துள்ளனர். [பக்கம் 19]

இராமாநுஜர் வரை வைணவக்கொள்கை வளர்ச்சி

19. இனி வைணவக் கொள்கை வளர்ச்சிபற்றி நோக்குவோம். நாதமுனிகளே தத்வத்ரயம் என்று கூறப்படும்

ஜீவாத்மா, இயற்கை, கடவுள் என்ற முப்பொருள்களை முதலான உண்மைகளாகக் கண்டுபிடித்தார். 'கடவுள் நாராயணனே' என்பது நாதமுனிகள் கண்ட முடிவு. ஸ்ரீஆளவந்தார் தம்முடைய சித்தித்ரயம் என்ற நூலில் தத்வத்ரயத்திற்கு எதிராக உள்ள அத்துவைதக் கொள்கைகளைக் கண்டித்து அவற்றை நிறுவுவதோடு, மகாலக்ஷ்மியையும் வழிபடுகிறார். [பக்கம் 19, 20]

20. ஆழ்ந்து கவனித்தால் சரீர சரீரி பாவம் ராமாநுஜரின் நூல்களிலேயே உருவாகிறதென்று தெரிகிறது. அதனோடு உருவம் இல்லாத பிரும்மத்துக்கு அழகான ஆண் உருவம் கொடுத்து, ஆடையுடுக்க செய்து, அவனோடு பெண் உருவில் உள்ள மகாலக்ஷ்மியையும் சேர்த்து, பரிவாரங்கள், இருப்பிடங்கள் இவற்றை விரிவாக வருணித்து. வைணவத்தை உருவாக்குகிறார். பக்தியால் வீடுபேறடையலாம் என்று கூறிய முதல் ஆசாரியர் இராமாநுஜர். சரணாகதியை இராமாநுஜர் ஒருவாறு ஒப்புக்கொண்டபோதிலும், அதை மோட்ச சாதநமாகக் குறிப்பிடவில்லை. அதனாலேயே இராமாநுஜருடைய ஞானபுத்திரரான திருக்குருகைப்பிரான் பிள்ளான் மோக்ஷ உபாயங்கள் கர்ம ஞானபக்திகள் தாம் என்றும், ஆழ்வார்கள் பக்தியோக நிஷ்டர்களே என்றும் குறிப்பிடுகிறார். [பக்கம் 20]

21. இராமாநுஜருக்குப் பின் வந்த ஆசாரியர்களுடைய கொள்கைகள் சில இராமாநுஜருடைய கொள்கைகளுக்கு முரண்பட்டாலும் வைணவத்தை விரிவாக வளர்த்த பெருமை அவர்களைச் சாரும். முரண்பட்ட கொள்கைகளாக நூல்கள் வாயிலாக அறியக்கிடப்பன யாவும், தாம் இராமாநுஜரிடமிருந்து இரகசிய சம்பிரதாயத்தால் அறிந்தனவே என்று கூறத் தொடங்கிவிட்டனர். இவர்கள் பக்தியை விடுத்துப் பிரபத்தியையே மோட்ச சாதனமாகக் கொண்டதனால் ஆழ்வார்களில் தலை சிறந்த நம்மாழ்வாரைப் பிரபன்ன சந்தான கூடஸ்தர் ஆக்கிவிட்டனர். முக்கியமாகப் பிரபத்திதான் உபாயம், 'அர்ச்சாவதாரம் முடிவான அவதாரம் என்ற கருத்து வலியுறுத்தப் பட்டது. 'ஆலயங்களில் உள்ள அர்ச்சைகளும் கடவுளுடைய

அவதாரமே. அங்குச் செய்யும் பணிதான் உண்மையான தெய்வத் தொண்டு' என்று கூறி ஆலயவழிபாட்டை வைண வத்தின் உயிர் நாடியாக்கிவிட்ட, பிற்பட்ட ஆசாரியர்கள் தங் கள் கருத்துக்களை வெளியிடத் தனிப்பட்ட சொற்களைப் பயன் படுத்தத் தொடங்கினர். ஆழ்வார் எம்பெருமானார், உடைய வர் என்று இவர்கள் குறிப்பிடும் சொற்கள் கல்வெட்டுக்களில் சிவ பெருமானுக்கும் திருமாலுக்கும் பொதுவாக உபயோகப் பட்ட சொற்கள் எனினும், இவர்கள் காலத்துக்குப்பின் இவை வைணவத்திற்கே உரிய சிறப்புச் சொற்களாகக் கொள்ளப் பட்டுவிட்டன. [பக்கம் 21]

விக்கிரக வழிபாடு

22. ஈஜிப்ட் முதலிய நாடுகளில் ஒரு காலத்தில் விரிவாக இருந்த உருவவழிபாடு அறிவு வளரவளரக் குறைந்து அழிந்து போகவும், தமிழ்நாட்டில் அறிவு வளர வளர விக்கிரக வழிபாட்டு முறை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்துகொண்டே இருக்கிறது. [பக்கம் 21]

23. உபநிடதங்கள் நிர்க்குணப் பிரும்மமாகக் கூறும் கடவுளைப் புராணங்களும் இதிகாசங்களும் அவதார புருஷ னுகக் காட்ட, அவனை யோகியர் தங்கள் உள்ளத்திலும், பக்தர்கள் தங்கள் பஜனையிலும் கொண்டு மகிழும் நிறைவைப் பொதுமக்கள் ஆலய வழிபாட்டின்மூலம் எளிதில் பெற்று அமைதியுறுகிறார்கள். [பக்கம் 24]

ஆழ்வார்களால் தலபுராணக் கதைகள் புறக்கணிக்கப்பட்டமை

24. இதிகாச புராணங்களின் கருத்துக்களைப் பலபடியாகப் பாடும் ஆழ்வாராதிகள் தலபுராணக் கதைகளை விட்டுவிட்டதன் அடிப்படை ஆராய்ச்சிக்குரியது. திருவரங்கநாதன் இக்ஷ்வாகு வம்சத்து மன்னர்களால் பூசிக்கப்பட்ட செய்தி ஆழ்வார்களால் சுட்டப்படுகிறது. தலபுராணங்கள் வளர்ந்தபிறகு தோன்றிய வேதாந்ததேசிகன் திருவரங்கக்கோயிலை 'அம்புயத்தோன் அயோத்தி மன்னருக்கு அளித்த கோயில்' என்று குறிப்பிடு கிறார். (மீமாம்சகர்களும் கதையை முழுதும் கொள்ளாது கதையில் உள்ள கருத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் என் பதை வற்புறுத்துகின்றனர்.) தொண்டரடிப்பொடித் தவிர

மற்ற ஆழ்வார்கள் இக்கதைக்கு முக்யத்வம் ஏன் கொடுக்க வில்லை என்று புரியவில்லை. [பக்கம் 46, 47]

இராமாநுஜரை இணைத்தலாகாது

25. ஸ்ரீரங்கம் இராமாநுஜர் கூறிய ஏற்பாட்டின்படி நிர்வாகம் செய்யப்பட்டு வருவதாகக் கொள்ளுவதற்குக் கல் வெட்டுச் சான்று எதுவும் இல்லை. இராமாநுஜர் காலத்துக்குப் பிறகு திருவரங்கத்தில் பல மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. பல புதிய உற்சவங்கள் தொடங்கப்பட்டுள்ளன. புதிய பிம்பங்கள் வைக்கப்பட்டுள்ளன. புதிய மண்டபங்கள் கட்டப் பட்டுள்ளன. அவ்வவ்வரசன் காலத்தில் சிலருக்கு வழங்கப் பட்ட சலுகைகள், அரசு மாறியபின் தாமே வழக்கற்றுப் போய்விட்டன. அரசு மாறினாலும் ஆகமங்களோடு இணங்க செய்திகளே என்றும் மாறும்ல் நிலைத்து நிற்பன. திருவரங்கக் கோயிலோடு இராமானுஜரை இணைப்பதற்கு வரலாறு சிறிதும் இடம் தரவில்லை. இராமாநுஜரின் பெருமையைத் திருவரங்க ஆலய நிர்வாகத்தோடு இணைத்துப் பேசுவது கற்பனையின் விசித்திரமேயாம். [பக்கம் 75]

தமிழ்நாட்டு வைணவம் ஆலயத் தொடர்பற்றது

26. ஆசாரியர்களுடைய கருத்தில் உருவாகி உபதேச பரம்பரையிலேயே தனியாக வளர்ந்துவந்த தமிழ்நாட்டு வைணவத்திற்கும், ஆகமங்களையும் ஆகம சம்பிரதாயங்களை யும் நேராகப் பின்பற்றி வந்த ஆலயங்களுக்கும் நேரான தொடர்பு கிடையாது. இந்தச் சம்பிரதாயத்திற்கு விஷ்ணு ஆலயத்தில் ஆகமப்படித் தனி இடம் கிடையாது. [பக்கம் 97]

இருவகை ஆகமங்கள்

27. இன்று தமிழ் நாட்டில் ஆலய வழிபாட்டுக்கு ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் இருவகை நூல்கள் அடிப்படை யாக அமைந்திருக்கின்றன. ஒருவகை நூல்களுக்கு பாஞ்ச ராத்ரம் என்றும், மற்றொரு வகை நூல்களுக்கு வைகாநசம் என்றும் பெயர். இவைகளில், ஆலயங்களில் பெரும்பா லானவை வைகாநச ஆகமத்தைப் பின்பற்றுபவை என்று தெரிகிறது. ஆனால் வைகாநச ஆகமத்தின் கொள்கைகள் வேத நெறியையே அடிப்படையாகக் கொண்டிருப்பதால் ஸ்ரீவைஷ்ணவ ஆச்சாரியர்கள் இதற்குத் தனியான முக்கி யத்துவத்தைக் கொடுக்கவில்லை. [பக்கம் 101]

பாஞ்சராத்திரம் பரவியமை

28. ஆனால், பாஞ்சராத்திரம் என்ற மற்ற வகை நூல் தமிழ்நாட்டில் மிகவும் சிறப்பான இடத்தை பெற்றுவிட்டது. இதற்குக் காரணம் தமிழ்நாட்டு வைணவ ஆசாரியர்கள் தங்களுடைய அடிப்படையான கொள்கைகளுக்கு இதையே நம்பியிருப்பதாகும். இதிலிருந்து பல மேற்கோள்களை ஆசாரியர்கள் எடுப்பதால் இது மிகவும் பிரசாரமாகிவிட்டது. வைகாநச ஆகமம் மிகவும் புராதனமானதாக இருந்தும், ஆகமங்களைப்பற்றி நூல் எழுதிய ஆளவந்தாரோ, அல்லது பாஞ்சராத்ர ஆகமங்களை ஆதரித்துப் பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதிய இராமானுஜரோ, இதைப்பற்றிக் குறிப்பிடவே இல்லை. ஆனால் வேதாந்த தேசிகர் மட்டும் தம்முடைய நூலான பாஞ்சராத்திர இரக்ஷையில் இதைப்பற்றிக் குறிப்பிடுகிறார். [பக்கம் 101, 102]

பாஞ்சராத்தர அமைப்பு

29. பாஞ்சராத்ர ஆகமம் பல ஸம்ஹிதைகள் உருவத்தில் பல பெயர்களோடு காணப்படுகிறது. பகவானே ஆகமங்களை உபதேசித்தான் என்ற கொள்கை பொதுவானது. இதனால் இன்று காணப்படும் எல்லா ஸம்ஹிதைகளுமே பகவான் நேருக்கு நேராக உபதேசித்தான் என்று கொள்ளமுடியாது. [பக்கம் 102]

30. ஆகவே ஒரு மதத்திற்கு வேண்டிய எல்லாக் கொள்கைகளுடன் நாராயண வழிபாட்டை முக்கியமாகக் கொண்ட மதம் பகவத் சாஸ்திரம் என்ற பெயரில் கலியுக ஆரம்பத்தில் உதயமாகிறது என்று தெரிகிறது. ஆரம்பத்தில் நாராயண வழிபாடு கர்மாக்கள மூலமாகவே நடந்து வந்திருக்கிறது என்றும் அக்காலத்தவர்கள் யாகங்களைச் செய்துவந்தார்கள் என்றும் அந்த யாகங்களில் 'பசு ஹிம்ஸை' கிடையாது என்றும் தெரிகிறது. இங்கு விக்கிரஹ வழிபாடு ஆலயவழிபாடு இவைகளைப் பற்றின குறிப்புக்கள் காணப்படாததனால் பிறகு தான் இவை சேர்ந்திருக்கின்றன என்று முடிவு செய்ய இடமேற்படுகிறது. [பக்கம் 103, 104]

31. பரமைக்காந்திகள் நாராயணன் ஒருவனையே தெய்வமாகக் கொண்டு மற்றவர்களுக்கு தெய்வத்தன்மை கிடையாது என்று மறுப்பவர்கள். அவ்விதமே உலக வாழ்க்கையில்

துறவியாக மற்றவர்கள் தொடர்பு அற்று தனித்து வாழ்ந்து மோட்சம் என்ற ஒரே குறிக்கோளையே மனதில் கொண்டு நடக்கும் இவர்கள் மறந்தும் புறம்தொழா மாந்தராவார். இந்தக் கொள்கைக்கும் ஆலய வழிபாட்டுக் கொள்கைக்கும் உறவு வெகுதூரத்தில் நிற்கின்றது. ஆலயவழிபாடு, விக்ரஹ வழிபாடு இவைகள் பொதுமக்களின் இம்மைக்கும் மறுமைக்கும் உதவ ஏற்பட்டது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு குறிக்கோள்களையும் அடைய உதவுவன. ஆகவே பரமைகாந்தி தர்மமும் ஆலய வழிபாடும் ஒன்றுபட இடமில்லை. [பக்கம் 104]

32. பாகவத தர்மம் வேறு, ஆலயவழிபாட்டை வகுக்கும் ஆகமங்களின் தர்மம் வேறு. தனியாகத் தோன்றிய இரண்டும் பிற்காலத்தில் ஒன்றாகக் கலந்துள்ளன. [பக்கம் 104]

33. சில ஸம்ஹிதைகளில் மிகுந்த தெளிவுள்ளவர்களுக்கு ஞானமார்க்கம் யோகமார்க்கம் இவைகள் சொல்லப்படுகின்றன. இவற்றைப் பின்பற்றும் ஆற்றல் இல்லாத பாமர மக்களுக்கு விக்ரஹ வழிபாடு, ஆலய வழிபாடு இவை ஏற்பட்டன என்றும் கூறப்படுகின்றன. இதைக் கொண்டுதான் கடவுளை மனதில் த்யானம் பண்ணுவதற்கு சக்தியில்லாத மக்களுக்கு விக்ரஹ வழிபாடு சொல்லப்படுகிறது என்று பழமொழியும் ஏற்பட்டுள்ளது. ஆகமங்கள் கிரியைகள் சம்பந்தப்பட்ட வரையில் வேத வழிகளை சிறிது பின்பற்றினாலும் போட்டி எண்ணத்தோடு புதிதான கர்மாக்களை உருவாக்கி புதிதான மந்த்ரங்கள் (நாம மந்த்ரங்கள்) முத்திரைகள் இவைகளையும் சேர்க்கச் சொல்லுகின்றன. [பக்கம் 105]

ஏகாயன வேதம்

34. பாஞ்சராத்திர ஆகமம் தனியான வேதாந்த கருத்துக்களையும் தெய்வக் கொள்கைகளையும் சொல்லித் தனக்கு மூலமாக ஒரு தனி வேதம் இருந்து வருகின்றது என்றும் சொல்கிறது. அந்த வேதத்திற்கு ஏகாயனம் என்று பெயர். அந்த வேதம் மற்றவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள வேதம் போல் இல்லாததாலும் எல்லா மக்களிடையேயும் பிரசாரத்தை அடையாததினாலும் அதை அடிப்படையாக கொண்டுள்ள பாஞ்சராத்ர ஆகமத்தை ஒப்புக்கொள்ள முடியாதென்று சிலர் சொல்லுகிறார்கள். ஏகாயனம் என்ற சொல்லுக்கு வடமொழியில் ஒன்றையே குறிக்கோளாக கொண்டது என்பது

பொருள். ருக்வேதம் முதலியவை பல தெய்வக் கொள்கையுடன் இருப்பதால் அவைகளுக்கு மாற்ருக ஒரே தெய்வக்கொள்கை யோடு ஏகாயனம் என்ற பெயருடன் ஒரு வேதம் தோன்றியது. அந்த வேதம் மற்றவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள வேதம் போல் இல்லாததால் எல்லா மக்களிடையேயும் பிரசாரத்தை அடையவில்லை. [பக்கம் 108]

35. வேத மந்திரங்கள் பல பெயருள்ள தெய்வங்களைச் சொல்வதால் இங்கு விஷ்ணுதான் முழுமுதற் கடவுள் என்ற கொள்கைக்கு இடமில்லாமல் போகிறது. அதனால் அங்கு மிச்ரயாஜிகள் அந்தந்த தெய்வங்களுக்கு உள்ளுக்குள்ளே விஷ்ணுதான் இருந்து வழிபாட்டை ஏற்கிருர் என்று சொல் கிருர்கள். [பக்கம் 113]

36. வேதத்திலுள்ள விஷ்ணு என்ற சொல்லை வாசுதேவ ஞேடு சேர்த்து காலக்கிரமத்தில் விஷ்ணு என்ற சொல்லை முக்கியமானதாக ஆக்கி பேசுவதால் வைணவ தர்மம் என்ற பெயரும் ஏற்பட்டுள்ளது. அவ்விதமே வேதத்திலுள்ள பகவான் என்ற சொல்லை எடுத்துக்கொண்டு அதை அடிப்படையாகக் கொண்டு உருவம் குணங்கள் இவைகளை விளக்கி, தனியான தெய்வமாக ஆக்கி பேசும் பண்பாட்டின்மூலம் பகவான் என்ற சொல்லும் விஷ்ணுவையே குறிப்பிடுவதாக ஆகிவிடுகிறது. அதனுல் பகவானைச் சேர்ந்த தர்மம் என்ற முறையில் பாகவத தர்மம் என்ற பெயருள்ளதாகவும் ஆகிவிடுகிறது.

[பக்கம் 115, 116]

37. சம்ஹிதைகள் பிற்காலத்தில் வளர்ந்துள்ளதற்கு உரிய அடையாளத்தை நாம் கண்கூடாக பார்க்கிறோம். பாஞ்சராத்ர நூல் விளக்கம் என்ற நூலில் வெங்கடாச்சாரியும், ஸ்மித்தும் — சம்ஹிதைகளில் சடகோபர், இராமானுஜர், வேதாந்த தேசிகர், இவர்களை ஆகமங்கள் குறிப்பதால் இவர் காலத்துக்குப் பிறகே சில ஆகமங்கள் உண்டாகி இருக்கின்றன என்று கருதுகிருர்கள். [பக்கம் 117]

38. மேலும், தென்னுட்டுக்கு வந்த இந்த சம்ஹிதைகள் அந்தந்த க்ஷேத்திரத்தோடு ஐக்கியமாகிவிட்டதும் தெரிகிறது. தோத்தாத்திரி அல்லது வானமாமலை, மேல் கோட்டை, ஸ்ரீரங்கம் | முதலிய ஊர்களைக் குறிப்பிடும் ஆகமங்கள் மிகமிகப் புராதனமானவை என்று ஒப்புக்கொள்ள முடியாது. மேலும்

ஈசுவர சம்ஹிதை, பரமேசுவர சம்ஹிதை முதலிய நூல்களில் ஆழ்வார்களுடைய பாடல்கள், திராவிட ச்ருதி (தமிழ் வேதம்) என்று குறிப்பிடப்பட்டு யாகசாலையில் அவைகளுக்கு இடமும் அளிக்கப்படுவதால் அநேக சம்ஹிதைகள் ஆழ்வார் காலத்துக்குப் பிற்பட்டன என்பதும் வெளிவாகிறது. [பக்கம் 117]

39. மேலும் தனிப்பட்ட மனிதனின் ஒழுக்கத்தைச்சொல்லும் காலத்தில் நெற்றியில் போட வேண்டிய பல குறிகளைச் சொல்லுகின்றன. இவைகள புராதனமானவை ஆகா என்பதும் தேற்றம். ஆகம ஸம்பிரதாயத்திலேயே மூன்று ரத்னங்கள் என்று குறிப்பிடப்படும், ஜயாக்யம், சாத்வதம், பௌஷ்கரம் என்ற இவை மூன்றும் ஆலய பூஜைகளுக்கான விதிகளை விஸ்தாரமாகச் சொல்லவில்லை. இப்பொழுதுள்ள சம்ஹிதைகளில் பாத்மசம்ஹிதை ஒன்றுதான் பூரணமாகக் காணப்படுகிறது. இது காலத்தால் மிகவும் பிற்பட்டது என்று தெரிகிறது. [பக்கம் 118]

40. நான்கு விதமாக பகவான் இருந்து வருகிறார் என்ற அடிப்படையில் உபாசனம் செய்வது என்ற முறையை சாதுராத்ய உபாசனம் என்று ஆகமங்கள் பரக்கப்பேசுகின்றன. கடவுள் ஒருவர் தான் என்ற உபநிஷத்தின் கொள்கைக்கும் நாலு விதமாக இருந்து வருகிறான் என்ற கொள்கைக்கும் உறவே கிடையாது. அதனாலேயே பாஞ்சராத்ர ஆகமத்தின் தெய்வக் கொள்கை உபநிஷத்தின் கொகைபிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. [பக்கம் 119]

41. எளிய நடையிலிருந்த பஞ்சவீரபூஜை வேதாந்திகளின் கைக்கு போய் கடவுள் இலக்கணத்தை உட்கொண்டு வேதாந்தக் கொள்கையாக மாறி, உபாசனமாகவும் மாறிவிட்டது. பலவித உருவங்களை உட்கொண்டு பல மந்திரங்களை உருவாக்கி, பல உபாசனங்களையும் வகுத்துவிட்டார்கள். வ்யூகக் கொள்கையில் வரும் பெயர்கள் கிருஷ்ணவதாரத்தோடு சம்பந்தப் படுவது வரலாற்று உண்மை. வாசுதேவர் கிருஷ்ணனே. சங்கர்ஷணன் அவருடைய அண்ணன், ப்ரத்யும்னன்பிள்ளை, அநிருத்தன் பேரன். [பக்கம் 120]

42. தெய்வம் ஒன்ருக இருக்கவேண்டுமா பலவாக இருக்கலாமா என்பது பெரிய சர்ச்சை. மதக் கொள்கையின் சரித்ரத்தை கவனித்தோமானல் முதலில் பல தெய்வக்கொள்கை

இருந்துவந்து, பிற்காலத்திலேயே ஒரு தேவதைக் கொள்கை உதயமாகிறதென்று தெரிகிறது. பல தேவதைக் கொள்கையும் ஆதிபுருஷர்கள் எங்கெல்லாம் தெய்வ சக்தியை உணர்ந்தார்களோ அங்கெல்லாம் ஒரு தெய்வத்தை கற்பித்ததால் ஏற்பட்டது. பல தேவதைக் கொள்கையில் அலுத்துப்போன பிறகு, யாராவது ஒருவரை தலைவராகக் கொண்டு மற்றவர்களை அவனுக்கு கட்டுப்பட்டவர்களாகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் உதயமாகிறது. [பக்கம் 120, 121]

43. ஆனால் ஏற்றத் தாழ்வுகளை ஒப்புக் கொண்டாலும் இதுவும் ஒருவழியில் பல தேவதை கொள்கையாகத்தான் நிற்கிறது. அதனால் ஒரே கடவுள்தான். பல கிடையாது என்று மத சீர்திருத்த ஆசார்யர்கள் கூற ஆரம்பித்தனர். பழங்கால கொள்கைகளை மாற்றி புதிதாக ஒரே தேவதை கொள்கையை வற்புறுத்தினர். [பக்கம் 121]

44. பாஞ்சராத்ராகமம், வாசுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்ற நான்கு தெய்வங்களை வழிபடச் சொல்வதால் பல தேவதைக் கொள்கையா, ஒரே தெய்வம் என்ற கொள்கையா என்ற ஐயம் உண்டாகிறது இயல்பு. [பக்கம் 121]

45 பிறக்கும் இயல்பில்லாமல் உயர்நிலையிலிருந்த தெய்வம் தாழ்ந்துள்ள நிலையை அடைந்து பிறப்பை எடுப்பதும் அவதாரக் கொள்கையைச் சார்ந்தது. இந்தக் கொள்கையும் உபநிடதக்கருத்தோடு ஒத்துப்போகக் கூடியதில்லை. [பக்கம் 123]

46. வைணவர்கள் உபநிடத்தின் பிரம்மக் கொள்கையையும் ஆகமங்களின் அவதாரக் கொள்கையையும் ஒப்புக் கொள்ளுவதால் இரண்டையும் சமரசப்படுத்த மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த அவதாரக் கொள்கையின் அடிப்படை புராணங்களிலும் பரவிவிட்டது. ஆனால் வைணவம் சம்பந்தப்பட்ட வரையில் எங்கிருந்து எந்த அவதாரம் உண்டாகிறது. என்ற கருத்தை வெளியிடுவதில் வேற்றுமை காணப்படுகிறது. புராணங்கள், ஸ்ரீ வைகுண்டத்திலுள்ள பகவானே அவதாரம் பண்ணுகிறான் என்று கூறுகின்றன. ஆனால் ஆகமங்கள் தங்கள் வழியிலேயே அவதாரங்களை விளக்குகின்றன. வ்யூகங்களிலிருந்துதான் அவதாரங்கள் ஏற்படுகின்றன என்று

ஆகமங்கள் கூறுகின்றன. ஆகமங்களில் அவதாரம் என்ற கொள்கை பிறந்திருந்தாலும் அது இன்றைய ஹிந்து மதத்திற்கு ஜீவநாடியாக ஆகிவிட்டது. [பக்கம் 124]

47. மேம்போக்காகப் பார்க்குமிடத்து ஆகமங்களே அவதாரக் கொள்கைகளை முதல் முதல் வெளியிடுவனவாகத் தோன்றினாலும் கூர்ந்து நோக்குமிடத்து வேதங்களே அவதாரக் கொள்கைக்கு அடிப்படையாகும் என்பது பெறப்படும். சுக்ல யஜுர் வேதத்திலுள்ள புருஷஸூக்தத்தின் இரண்டாம் அநுவாகத்தில் 'பிறக்காதவன் பிறக்கிறான்' என்ற ஒரு கருத்து காணப்படுகிறது. யூபத்தில் கயிறுகட்டும் பொழுது சொல்லப்படும் விஷ்ணுவைச் சேர்ந்த மந்திரம் ஒன்று 'அவன் பிறந்துகொண்டு பெருமையை அடைகிறான்' என்று கூறுகிறது. இக்கருத்துக்களின் விளக்கமே அவதாரம் என்று ஏற்படுகிறது. தெய்வக்கொள்கைவேறு, வேதாந்தக் கொள்கை வேறு. உபநிஷத்தின் வேதாந்தக் கொள்கைப்படி அவதாரம் கிடையாது. வேதத்தில் காணப்படும் தெய்வக் கொள்கைப்படி கடவுளுக்கும் பிறப்பு உண்டு என்று ஏற்படுகிறது. [பக்கம் 126]

48. பாஞ்சராத்ர கருத்துக்களுக்கு 'சாத்வத விதி' என்ற பெயர் இருப்பதால், விக்ரஹ வழிபாடு சாத்வதர்களிடமிருந்து தான் ஆரம்பமாகிறது என்று எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. [பக்கம் 133]

49. ஆலய வழிபாட்டிற்கு மூலமாக அமைந்துள்ள வ்யூகங்கள் வாசுதேவ, சங்கர்ஷண, ப்ரத்யும்ன, அநிருத்தன் என்று குறிப்பிடப்படுகிறார்கள். இவர்களில் வாசுதேவன் என்பவர் கண்ணன்தான். சங்கர்ஷணன் என்பான் அவருடைய அண்ணனான பலராமன். ப்ரத்யும்னன் பகவானின் பிள்ளை. அநிருத்தன் பகவானுடைய பேரன். இந்த நான்கு பேர்களும் கிருஷ்ணனுடைய குடும்பத்தோடு சம்பந்தப்பட்டிருப்பதால் கிருஷ்ணாவதார காலத்திற்கு பிறகுதான் இவர்களை வழிபடும் கொள்கை உருவாகயுள்ளது என்று நினைக்கவேண்டி வருகிறது. [பக்கம் 133]

50. வேதத்தில் காணப்படும் பண்பாட்டில் விக்ரஹ வழிபாடு கலக்கவேயில்லை. கலந்திருந்தால் வேதகர்மாக்களுக்கு பிரயோகம் எழுதிய கல்பசூத்திரக்காரர்கள் இதை விட்டிருக்க மாட்டார்கள். சுத்தமாகச் செய்யும் ச்ரௌதகர்மாவில் அக்னி

மூலம் வழிபாடு காணப்படுகிறதேயன்றி விக்ரஹ வழிபாடு காணப்படவில்லை. ரிக்வேதத்தில் மரப்பதுமைகள் எடுத்துக் காட்டாக சொல்லப்பட்டுள்ளன. தெய்வத்திற்கு விக்ரஹங்கள் சொல்லப்படவில்லை. உபநிஷத்துக்கள் உருவமில்லாத ப்ரம் மத்தை த்யானம் பண்ண வற்புறுத்தினாலும் கர்மகாண்ட மந்த்ரங்களில் கடவுள் தத்துவத்திற்கு அழகான உருவம் மனித உருவம் குணங்கள் இவைகள் சொல்லப்படுகின்றன.
[பக்கம் 134, 135]

51. குறிப்பிட்ட தர்மத்தை விளக்கவந்துள்ள இதிகாச புராணங்களும் ஆலய வழிபாடு விக்ரஹ வழிபாடு இவைகளை தங்கள் கொள்கையில் சேர்த்துக் கொள்ளவில்லை. சில இடங் களில் புராணங்களில் ஆலய வழிபாடு விக்ரஹ வழிபாடு இவை குறிப்பிடப்படுவது அந்தந்த காலத்தின் நிலைமையைத் தான் விளக்கும். புராணங்களின் அடிப்படைக் கொள்கை யோடு விக்ரஹ வழிபாட்டிற்கு நேர் உறவு கிடையாது. உதாரணமாக ருக்மணி கல்யாண காலத்தில் ருக்மணி துர்கையை பூஜித்ததாக பாகவதம் தெரிவிக்கிறது. ஆனால் சீதா கல்யாணத்தில் இவ்வித வரலாற்றை நாம் பார்க்க முடியவில்லை. ஆகவே ஆலய வழிபாடு விக்ரஹ வழிபாடு இவை வேதம் ஸ்மிருதிகள் இதிகாச புராணங்கள் இவை களுக்குப் பிறகு தெய்வ வழிபாட்டில் வந்து கலக்கின்றன என்று தெரிகிறது.
[பக்கம் 135]

52. காலக்கிரமத்தில் நான்கு வ்யூகங்களில் ப்ரத்யும்னன், அநிருத்தன் இவர்களுடைய வழிபாடு சிறிது சிறிதாக மறைந்து வாசுதேவ சங்கர்ஷணன் இவர்கள் வழிபாட்டில் போட்டி ஏற் பட்டு பாமர மக்கள் சங்கர்ஷண வழிபாட்டை கைக்கொண்டு விட்டார்கள். வாசுதேவ வழிபாடு நாராயண வழிபாட்டோடு ஒன்றாக ஆகி பலவித தெய்வக் கொள்கைகளுக்கு இருப்பிட மாக ஆகிவிட்டது.
[பக்கம் 136, 137]

53. பல மூர்த்தங்களை வைத்து பூஜிப்பது என்ற கொள்கை காலக்கிரமத்தில் ஒரு மூலமூர்த்தியில் வந்து நின்று விட்டது. இதற்குப் பிறகு மூர்த்தியை வெளியில் கொண்டு வந்து வீதிதோறும் எழுந்தருளப் பண்ணி, எல்லா மக்களும் தரிசனம் செய்ய வகை செய்யவேண்டும் என்ற நோக்கம்

உண்டான காலத்தில் மூலமூர்த்தியை அசையா மூர்த்தியாகச் செய்து வெளியில் உத்சவங்களுக்கு போய்வர தனியான மூர்த்தியை வைக்க ஆரம்பிக்கிறார்கள். இதற்கு உத்சவமூர்த்தி என்று பெயர். [பக்கம் 138]

54. ஆழ்வார்கள் பாடல்கள் எல்லாம் மூலமூர்த்தியை மட்டும் பற்றியவை என்று தெரிந்தது. [பக்கம் 139]

55. சடகோபத்தையும் நம்மாழ்வாரையும் ஒன்றுபடுத்தி பேசுவது கவி கற்பனையை அடிப்படையாகக் கொண்ட பக்தியின் வெளி அடையாளம்தான். தெய்வத்தை விட்டுப்பிரியாத பாதுகையை தலையில் வைப்பதும், மக்களை திருப்தி பண்ணவே ஏற்பட்டது. ஆகமங்கள் இதற்கு இடங்கொடுக்கா. ப்ரதிஷ்டையான சடாரியை மற்ற மனிதர்களுடன் ஸம்பந்தப்படுத்துவது அசுத்திக்குக் காரணமாகும். இன்றும் மைசூர் பரகால மடத்தில் சடாரியை மனிதன் தலையோடு சம்பந்தப்படுத்துவது இல்லை. [பக்கம் 141]

56. ஸ்ரீவேதாந்த தேசிகர் பரமபத பங்க ரஹஸ்யத்தில் பாஞ்சராத்ர ஆகமக் கொள்கைகளுக்கு அத்வைதம் பேதாபேத வாதம் இவைகளைப் பின்பற்றி விளக்கம் கூறியவர்கள் இருந்திருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார். [பக்கம் 142]

57. நான்கு வ்யூகங்கள் என்ற கொள்கை ஒருபக்கத்தில் வளர்ந்து வரும் காலத்தில் பன்னிரண்டு வ்யூகங்கள் என்ற ஒரு கொள்கை வேறிடத்திலிருந்து வந்து சேருகிறது. [பக்கம் 145]

58. சூரியனுக்கும் மாதங்களுக்கும் சம்பந்தம் உண்டு. சூரியனைத்தான் விஷ்ணு என்று வேதம் கூறுகிறது. சூரியனையும், நாராயணனையும் ஒன்றுபடுத்தி பேசும் பழக்கம் இருந்து வருவதால் வேதத்திலுள்ள விஷ்ணு தத்துவத்தை சிந்தனை பண்ணியவர்கள் இந்த பன்னிரண்டு வ்யூகக் கொள்கையை வளர்த்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. [பக்கம் 145 146]

59. ஆனால் ஆழ்வார்கள் நான்கு வ்யூகம் என்ற கொள்கையை எங்கும் வெளியிடவில்லை. அவர்களுடைய பெயர்களையும் நேருக்கு நேராகச் சொல்லவில்லை. வாசுதேவன், சங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்ற பெயர்களைக்

கொண்டு அவரவர்களுக்கு தனியான பாடல்களும் சொல்லப் படவில்லை. கேசவன் முதலான பன்னிரண்டு பெயர்களைக் கொண்டு வழிபடும் ஆழ்வார்கள் அங்கும் வ்யூஹம் என்ற கொள்கையை சொல்லவில்லை. பன்னிரண்டு வ்யூஹங்கள் என்ற கொள்கை பிரபலமாக இருந்ததால் அதை ஒத்துக் கொண்டு பேசவேண்டிய அவசியம் ஆகமங்களுக்கு ஏற்பட்டு விட்டது. நான்கு வ்யூகக் கொள்கை விருஷ்ணிகளுடைய வழிபாட்டிலிருந்து கிளம்புகிறது. பன்னிரண்டு வ்யூகக் கொள்கை வேதத்தில் காணப்படும் விஷ்ணுவின் வழிபாட்டி லிருந்து வருகிறது. ஆனால் பன்னிரண்டு வ்யூகக் கொள்கை உள்ளவர்கள் காலக்கிரமத்தில் நான்கு வ்யூகக் கொள்கைக்கு வழிவிட்டு விட்டார்கள் என்று தெரிகிறது. [பக்கம் 146]

60. இங்கு ஒரு முக்கியமான விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். பன்னிரண்டு வ்யூகக் கொள்கையில் யார் முக்கிய மானவர்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. பிற்காலத் தில் பிரபலமாக ஆகிய விஷ்ணு, நாராயணன் என்ற இரு வர்களும் இங்கு மற்றவர்களோடு சேர்ந்திருக்கின்றார்களே தவிர தனியான இடத்தைப் பெறவில்லை. ஏதோ ஒரு காரணத் தைக் கொண்டு நாராயணன் என்ற பெயர் முக்கியத்துவத்தை பெற்ற பிறகு நான்கு வ்யூகக் கொள்கையில் முக்கியமாக நிற்கும் வாசுதேவனும் இவனும் ஒத்துப்போகவேண்டிய அவசியம் வந்துவிட்டது. வாசுதேவன்தான் நாராயணன். நாராயணன்தான் வாசுதேவன் என்று பரிமாறறம் ஏற்பட்டு விட்டது. இந்த வரலாற்று உண்மையை ஆலயங்களில் இன்று நாம் பார்க்கிறோம். [பக்கம் 147]

61. வைகாநச ஆகமங்களில் நவக்கிரகங்கள் கோயிலில் வைக்கப்படும் இடங்கள் சொல்லப்படுகின்றன. நவக்கிரகங்களை அடிப்படையாகக்கொண்ட விக்ரக வழிபாடு வைணவத்துக்குப் புறம்பானதன்று. நவக்கிரஹப் பிரதிஷ்டை வைணவ வழிப் பாட்டிற்குப் புறம்பானது என்பது தவறான கருத்தேயாம். பாஞ்சராத்ர ஆகமங்களில் நவக்கிரக நியாஸ ஹோமம் தனி யாகச் சொல்லப்படுகிறது. [பக்கம் 155, 156]

ஆகமங்களும் விக்ரக வழிபாடும்

62. ஞானபாதம், யோகபாதம், இவற்றிற்குப் பிறகே கர்ம பாதத்தைப் பேசும் பாஞ்சராத்திர ஆகமங்கள் ஞானம்,

யோகம் ஆகிய கடுமையான வழிகளைப் பின்பற்றி இறைவனை அடைய முடியாத பொதுமக்களுக்கே ஆலயவழிபாடு ஏற்பட்டுள்ளது என்று கூறிவிட்டது. ஆனால் தொடக்கத்தில் வீட்டில் சாதாரணமாக ஏற்பட்ட பிம்பவழிபாடு கோயில்களுக்கு வந்ததும் மந்திரம் மூலமும், ஆகமம் விதிக்கும் கர்மாக்கள் மூலமும் தான் பிம்பங்களுக்குச சாந்நித்யம் வரும் என்ற நிலைக்கு வந்துவிட்டது. ......ஆலயங்களைப் பொதுவாக எல்லா மக்களுக்கும் தேவையானவை என்று ஆகமங்கள் குறிப்பிடவில்லை.
[பக்கம் 156, 157]

வேதத்தில் விஷ்ணு

63. வேதத்தில் விஷ்ணு என்கிற தெய்வம் சொல்லப்படுகிறது. நூறு மந்திரங்களுக்குமேல் விஷ்ணுவைப் பெரிதும் ஏற்றிப் புகழும் மந்திரங்கள் காணப்படுகின்றன. வேதத்தில் காணப்படும் விஷ்ணு தனியான தேவதையா? அல்லது பரந்த கடவுள் தத்துவத்தில் ஒரு அம்சமா? என்பது நாம் முடிவு பண்ணவேண்டிய விஷயம். ......ஆனால் நம்முடைய இதிகாசப் புராணங்கள் வேதங்களில் பல தேவதைகள் புகழப்பட்டிருப்பதாகவே கூறுகின்றன. அவ்விதத் தேவதைகளில் விஷ்ணுவும் ஒருவர். ஆனால், இந்த விஷ்ணு வேறு யாருமில்லை; சூரியன் தான் என்பது வேத மந்திரங்களிலிருந்து வெளியாகிறது. அந்த விஷ்ணுவும் மற்ற தேவதைகளோடு சமமான நிலையில் இருந்து வருகிறாரே தவிரத் தனியான பெருமையுடன் இருப்பதாகத் தெரியவில்லை. வேத உரை ஆசிரியரான யாஸ்கர் சூரியன் தான் விஷ்ணு என்று கூறிவிட்டார்.
[பக்கம் 161]

உபநிடதக் கூற்று

64. உபநிஷத்துக்கள் ஒரே தெய்வம் என்ற கொள்கையைச் சொல்லும் காலத்தில் அந்தத் தெய்வத்தைப் பிரம்மம் என்றே சொல்லுகின்றது.......ராமானுஜர் அந்த பிரம்மத்திற்குக் குணம் உண்டு, உருவம் உண்டு என்று விளக்கம் கூறினார். யார் எந்த விளக்கம் கூறினாலும் பிரம்மம் என்பது பிரம்மம்தான்; அதற்குத் தனியான பெயரில்லை. [பக்கம் 162]

புராணங்களின் கூற்று

65. பிறகு வந்த புராணங்கள் பிரம்மம் என்று குறிப்பதை விட்டு வேத நூலிலே காணப்படும் விஷ்ணு என்ற பெயரை

முக்கியமாக வைத்துப் பேச ஆரம்பித்தன. பெரும்பான்மையான புராணங்கள் விஷ்ணுவை தங்களுடைய முக்கிய தெய்வமாகக் கொண்டுள்ளன. உபநிஷத்தில் சொல்லப்படும் பிரம்மம் விஷ்ணுதான் என்று வேதவியாசரின் தகப்பனரான பராசரர் விஷ்ணுபுராணத்தில் கூறினர். இதனல் விஷ்ணு என்ற பெயரோடு ஒரு கொள்கை உருவாக ஆரம்பித்துவிட்டது. [பக்கம் 162]

66. எப்படி விஷ்ணு வேதகாலத்திற்குப் பிறகு முதல் தெய்வம் ஆனர் என்பது பெரியபிரச்சினை. ஒரு தனித்தெய்வம் வேண்டும் என்ற கொள்கை வேதகாலத்திற்குப் பிறகு உண்டாயிற்று என்பது திண்ணம். மக்கள் தங்களிஷ்டப்படி வேதத்தில் காணப்படும் விஷ்ணுவைக் கற்பித்துத் தங்களிஷ்டப்படி ஓர் உருவையும், பெயரையும் அவருக்குக் கொடுத்து வணங்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆனல் வரலாற்றின் ரீதியில் என்ன நடந்திருக்கின்றது என்பது புரியவில்லை. மற்ற தேவதைகள் எல்லோருக்கும் விஷ்ணுதான் தெய்வம் என்று கூறிவிட்டார்கள். [பக்கம் 163, 164]

வேதாந்தங்களும், உருவ வழிபாடும்

67. உருவம் இல்லாத கடவுளுக்கு நிலையான உருவத்தைக் கொடுக்கவேண்டும். இருப்பிடத்தைக் கொடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கருத்தில் தோன்றிய கருத்துக்களைச் சமாதானத்திற்காகவே சான்றோர்கள் ஒப்புக்கொண்டனர் என்று தெரிகிறது. அதனலே வேதாந்திகள் பிரம்மத்திற்குச் சரீரத்தையே ஒப்புக்கொள்ளவில்லை. ஆனல் காலத்தை ஒட்டிப் பிரம்மத்திற்கு உருவத்தை ஒப்புக்கொண்டவர்களை வேதாந்திகள் ஒப்புக்கொண்ட பிறகு தங்கள் கருத்துக்கு இணங்கச் சரீரம், ஆயுதம் இவைகளுக்குப் பொருள்கூற ஆரம்பித்துவிட்டார்கள். 'பாஞ்சராத்ர' ஆகமங்களிலேயே இந்தக் கருத்துக்கள் காணப்படுகின்றன. ஸ்ரீ வேதாந்ததேசிகரும் 'ரஹஸ்யத்ரயஸாரம்' மூலமந்திராதிகாரத்திலும் இந்தக் கருத்துக்கு இடங்கொடுத்துப் பேசுகிறர். [பக்கம் 164; 165]

மும்மூர்த்திக் கொள்கை

68. புராணங்கள் கதைகளை விளக்க வந்தாலும் அவைகளால் யார் உயர்ந்ததெய்வம் என்று முடிவுபண்ணமுடியவில்லை. விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகச் சொன்னவர்கள் மற்ற தேவதைகளை அடியோடு மறுக்கவில்லை. ஆனல்

அவர்கள் எல்லோருக்கும் மேலுள்ள தெய்வம் இவர்தான் என்று சொல்லிவிட்டார்கள். அவ்விதமே உபநிடதத்தில் உருவமில்லாத பிரும்மமும் உருவுள்ள விஷ்ணுவும் ஒன்றாகிவிட்டன. அந்த விஷ்ணுவே உலகத்தைக் காக்கிறான், படைக்கிறான், அழிக்கிறான் என்ற கடவுள் இலக்கணமும் விஷ்ணுவோடு சேர்ந்து விட்டது. ஆனால் படைப்பது, காப்பது, அழிப்பது என்பது ஒரே கடவுள் செய்ய முடியாததனால் மும்மூர்த்திகளைக் கற்பித்துக்கொண்டு ப்ரும்மா படைப்பிற்காகவும், விஷ்ணு பாதுகாப்பிற்காகவும், சிவன் அழிப்பதற்காகவும் ஏற்பட்ட கடவுள் என்று சொல்லி மும்மூர்த்திகளும் கடவுள்தான் என்ற கொள்கை உருவாகிறது. ஆனால் மும்மூர்த்திகளுக்கு நடுவில் இருப்பதினால் விஷ்ணுவினுடைய அதிகாரம் குறைந்து விடுவதால் கடவுள் இலக்கணம் விஷ்ணுவினிடத்தில் முழுவதும் இல்லாமல் போய்விடுவதினால் அந்த குறையைத் தவிர்ப்பதற்காக மும்மூர்த்திகளில் ஒருவரான விஷ்ணுவே மும்மூர்த்திகளுக்கும் மூலம். அவர் மூலக்கடவுளாக இருப்பதுமட்டுமில்லாமல் மும்மூர்த்திகளில் ஒருவராகவும் அவதாரம் செய்திருக்கிறார் என்றும் ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஸ்தோத்திரத்தில் வெளியிடுகிறார். [பக்கம் 165, 166]

வேதத்தின் பல தெய்வக்கொள்கை

69. வேதத்தில் பல தேவதைகள் கொள்கை இருக்கிறது என்று மக்கள் நினைத்துவிடப் போகிறார்களே என்று சந்தேகப்பட்டு, வேதமே, வேதத்தில் பல தெய்வக் கொள்கைகள் கிடையாது; கடவுள் ஒருவனே; அவன் ஒருவனே பல பெயர்களில் குறிப்பிடப்படுகிறான் என்று முடிவு சொல்லி விட்டது. இந்த அடிப்படையிலேயே ஹிந்துமதம் இயங்கி வந்தால் இதற்கு ஆபத்தே கிடையாது. இதன் கண் சிக்கல்களையும் காணமுடியாது. கடவுள் ஒருவன்தான், அவனை நாம் தான் பல உருவங்களுடன் பல பெயர்களுடன் கற்பிக்கிறோம் என்பது ஏற்பட்டுவிடுகிறது. இதை ரிக்வேதமே "ஏகம் சந்தம் பகுதா கல்பயந்தி" என்று சொல்லிவிட்டது. ஆனால் இந்தக் கொள்கை பின்பற்றப்பட்டால், மும்மூர்த்திகள், முப்பத்து மூன்று தேவதைகள், முப்பத்துமூன்று கோடி தேவதைகள் என்ற விரிவான கொள்கைகளும், இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்டுள்ள புராணங்களின் கொள்கைகளும் இருக்கும் இடம் தெரியாமல் போய்விடும். [பக்கம் 167]

பிரும்மமும், கடவுளும்

70. வேதாந்திகள் பிரும்மம் கடவுளாக ஆக முடியாது என்று நினைத்துக் கடவுள் தத்துவமே சிந்தனையின் கற்பனை என்று கூறிவிடுகிறார்கள். ஆனால் கடவுள் கொள்கைக்காரர்கள் பிரும்மக் கொள்கையோடு சேர்ந்து, எங்களுடைய கடவுள் தான் அந்தப் பிரும்மம் என்று கூறுகிறார்கள். இவையெல்லாம் கருத்தளவில் ஏற்படும் மாறுபாடுகளே தவிர தத்துவத்தில் ஒரு மாறுபாட்டையும் ஏற்படுத்தமாட்டா. [பக்கம் 168]

கருத்துக்களின் வளர்ச்சி

71. வேதாந்திகளுள் சிலர் பிரும்மம் ஒன்றுதான் சத்யம். மற்றது எல்லாம் கல்பிதமென்று சொல்லிவிட்டார்கள். இவர்களுக்குச் சிக்கல்கள் மிகக் குறைவு. ஆனால் அந்தப் பிரும்மத்தைக் கடவுளாகக் கொண்டு உருக்கொடுத்து, உலகோடும், வாழ்க்கையோடும் சம்பந்தப்படுத்தும்போது பல பிரச்சனைகள் தாமாகவே உண்டாகின்றன......நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான நூல்களில், நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் உள்ள அறிவாளிகளின் கருத்துக்களை ஒழுங்குபடுத்திப் பேசுவது என்பது எளிய காரியம் அன்று. பல நூற்றாண்டுகளில் பல சூழ்நிலையில் உண்டான கருத்துக்களை ஒன்றுபடுத்திப் பேசுவது நம்முடைய சாமர்த்தியத்தைக் காண்பிக்குமே தவிர உண்மையைப் பிரதிபலிக்காது....விஷ்ணு என்ற கொள்கையை வேதம்தான் சிந்தனையாளர்களுக்கு அளிக்கிறது. அந்த விஷ்ணு என்ற சொல் வெவ்வேறு சூழ்நிலையில் எப்படி எப்படி இருந்திருக்கிறது என்பதை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும்... நம்முடைய கருத்துக்குத் தகுந்தாற்போல் வேதங்களுக்குப் பொருள் கொள்ள வேண்டுமா? அல்லது அங்கு இருப்பதை அப்படியே எடுத்துக்கொள்ளவேண்டுமா? என்று அவரவர்கள் தான் முடிவு எடுக்கவேண்டும். வேதத்திலுள்ள கருத்துக்களுக்குத் தானே விளக்கம் கூறுகிறேன் என்றால் இது தன்னுடைய கருத்தை ஸ்தாபித்துக் கொள்ளச் செய்யும் முயற்சியாகுமேயன்றி, உண்மையான கருத்தாகாது. இந்த நிலையிலேயே வேதத்திற்குப் பின் வந்த சிந்தனையாளர்கள் தம் கருத்தை ஒட்டியே வேதத்திற்குப் பொருள் கூறுகிறார்கள். சைவ சிந்தனையாளர்கள் சிவன்தான் வேதத்தில் சொல்லப்படுகிறான் என்கிறார்கள். விஷ்ணு சிந்தனையாளர்கள் விஷ்ணு தான் வேதத்தில் சொல்லப்படுகிறான் என்கிறார்கள். வேதம்

சிவன், விஷ்ணு என்ற இரண்டு பெயர்களைக் கொடுத்து விட்டதால் இவர்களுக்கு இந்த வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. ஆனால் இவர்கள் சிவன், விஷ்ணு என்ற கருத்துக்களுக்கு முழுவதும் வேதத்தை எதிர்பார்க்கவில்லை. [பக்கம் 169, 170]

ஆகம வைணவத்தின் தனித்த நிலை

72. ஆகமங்கள் தங்களுக்கு மூலமாக இப்போதுள்ள வேதங்களைச் சொல்லுவதில்லை. அதற்குப் பதிலாக தங்களுடைய ஆகமங்கள், தங்களுடைய தெய்வத்தின் வாயிலிருந்து நேரே பிறந்ததாகச் சொல்ல ஆரம்பிக்கின்றன....தமிழ் நாட்டு வைணவத்தில் ஆகமம் உட்புகுந்து விட்டதால் வைணவம் இரண்டு விதமாகப் பிரிந்தது. ஒரு சிலர் ஆகமங்களைப் பின்பற்றி வேதத்தின் கொள்கைகளைக் கைவிட்டார்கள். மற்றும் சிலர் வேதத்தைப் பின்பற்றி ஆகமங்களைக் கைவிட்டார்கள். இந்த நிலையெல்லாம் வேதம் ஆகமம் இவை வகளுக்குப் பிறகு வந்த ஆசாரியர்களிடம் காணப்படும் செய்தியாகும். [பக்கம் 171, 172]

தமிழ்நாட்டு வைணவப் போக்கு

73. தமிழ்நாட்டு வைணவம் ஆகமம்போல் தனது கொள்கையைத் தனியாக உருவாக்கியிருந்தால் தமிழ் நாட்டின் வரலாறு வேறுவிதமாக இருந்திருக்கும். ஆனால் அப்படியில்லை. கர்மாக்களுக்கு வேதங்களிடம் போகச் சொல்லுகிறார்கள். வர்ணாச்சிரம தர்மத்திற்கு ஸ்மிருதிகளிடம் போகச் சொல்லுகிறார்கள். அடிப்படையான வேதாந்தக் கொள்கைகளுக்கு உபநிடதங்களிடம் போகச் சொல்லுகிறார்கள். கதைகளுக்கு இதிகாசப் புராணங்களிடம் போகச் சொல்லுகிறார்கள்..... இந்து மதத்தில் ஆசாரியன் என்ற கருத்து குறுகிய பொருளில் இருந்து வருகிறது. பழையதை கண்டித்து புதிதான ஒன்றை தங்களிஷ்டப்படி இவர்கள் கூறமுடியாது. [பக்கம் 174, 175]

ஆசாரியர்கள் கருத்துக்களின் அடிப்படை

74. தமிழ்நாட்டு வைணவம் முழுவதும் வேதம் காட்டியுள்ள வழியிலேயே போகவில்லை. முழுவதும் ஆகமம் காட்டியுள்ள வழியிலேயும் போகவில்லை. முழுவதும் புராணங்கள் காட்டியுள்ள வழியிலேயும் போகவில்லை. வைணவ ஆசாரியர்கள் தங்களுடைய கருத்துக்கிணங்கக் கூடிய மேற்கோள்களை வேதம், ஆகமம், இதிகாசங்கள் இவைகளிலிருந்து ஆங்காங்கு எடுக்கிறார்கள். [பக்கம் 175]

குரு பரம்பரைக் கதைகள்

75. இவர்களுடைய அடிப்படையான கருத்துக்களுக்கு மூலமாக அமைந்துள்ளவை குரு பரம்பரை நூல்களில் காணப்படும் கதைகள். இதிகாசப் புராணங்களில் ஒவ்வொரு நோக்கத்தோடு ஒவ்வொரு கதை அமைந்திருப்பதால் இவைகளைக் கொண்டு வைணவக் கருத்துக்களை விளக்க முடியவில்லை. ஆகவே ஆசாரியர்களுடைய காலத்தில் நடந்த அநேக சம்பவங்களைக் குருபரம்பரை என்ற நூலில் ஒன்று சேர்த்துப் புராணத்திற்குப் பதிலாக அதை வைத்துக்கொண்டு விட்டார்கள்.......அநேகமாக குரு பரம்பரைக் கதைகள் இரண்டே அடிப்படையில் அமைந்திருக்கின்றன என்று கூறலாம். ஒன்று தெய்வத் தன்மை ஜாதிக் கட்டுபாட்டிற்கு அப்பாற்பட்டது என்பது. மற்றொன்று - எவ்வளவு ஆபத்து வந்தாலும் விஷ்ணு ஒருவனே தெய்வம் என்ற கருத்தை மாற்றிக்கொள்ளக்கூடாது என்பதாம். எனவே, மற்றொரு தெய்வத்துடனோ அல்லது தெய்வத்தைச் சேர்ந்தவர்களுடனோ எந்த வழியிலும் சேர்ந்தால் ஆத்மாவிற்கு அழிவு ஏற்படுமென்று சொல்லப்படுகிறது. [பக்கம் 177]

ஆசாரியன் பெருமை

76. நூல்களில் உள்ள கடவுளை நிர்ணயம் பண்ண இவர்களால் முடியவில்லை. யுக்தியைக் கொண்டு நூல்களுக்குப் பொருள் விளக்கிக் கொள்ளவும் சக்தியில்லை. நேரில் தெய்வத்தையும் பார்க்க முடியவில்லை. ஆசாரியன்தான் நேரில் காணப்படும் தெய்வம். அவனருள் இருந்தால் போதும் என்ற கொள்கை தமிழ் நாட்டு வைணவத்தின் தனிச்சிறப்பு வாய்ந்த கொள்கையாக ஆகிறது. [பக்கம் 178]

77. சங்கிலியால் மனிதனைக் கட்டிப்போட்டு 'நீ நட' என்று எந்த அறிவாளியும் சொல்லமாட்டான். ஜீவாத்மா அறிவில்லாதவன், சக்தியில்லாதவன், புண்ணிய பாபங்களால் கட்டுண்டவன். இந்த உண்மையை உணர்ந்த ஆசாரியர்கள் பகவானை மகிழ்விக்க நீ ஒன்றையும் செய்யவேண்டாம். கருணாமூர்த்தியான அவன் தன்பேராகவே தானாகவே உன்னைக் காப்பாற்றுவான் என்று கூறிவிட்டார்கள். ஆன்மாவின் நிலையை உணர்ந்த தெய்வமும் ஜீவாத்மாவைப் பார்த்து,

நீ அதைச் செய்தால்தான் மோட்சம் கொடுப்பேன் என்றோ, ஒரு பயனைக் கொடுப்பேன் என்றோ சொல்லக்கூடாது. இப்படிச் சொன்னால் அந்தத் தெய்வம் உண்மையை உணராத தெய்வமாக ஆகிவிடும். [பக்கம் 185]

கடவுளுடைய பெருமை

78. ஆசாரியர்கள் கடவுளுடைய பெருமையை மிகவும் வளர்த்து விட்டார்கள். உலகிலுள்ள எல்லாத் தெய்வக் கொள்கைக்காரர்களும் ஆன்மாவைக் காட்டிலும் எம்பெருமானுக்குப் பெருமை உண்டு என்று நினைக்க பகவானுடைய பெருமையை மிகமிகப் பெரிதாகச் செய்து மலைபோல் ஆக்கி விட்டார்கள். இந்த நிலையில் அவனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் காலத்தில், ஆன்மாவோ, ஆன்மாவின் சக்தியோ இருக்கும் இடம் தெரியவில்லை. [பக்கம் 187]

கர்மாவும் கருணையும்

79. நாம் செய்யும் கர்மாக்களுக்கு பலன் ஏற்படுகிறதா? அல்லது கடவுளின் கருணை காரணமாகப் பலன் கிடைக்கிறதா? என்ற கேள்வி பிறக்கும்போது நம்முடைய கர்மா இருக்கும் இடம் தெரியாமல் போகவே அவன் கருணைதான் முன் நிற்கிறது. கருணை என்பது பகவானுடைய இயற்கையான குணம். அதனால் பகவானுடைய ஆதரவைப் பெறுவதற்காக நாம் ஒன்றும் செய்யவேண்டா. பகவானே தானாகவே நமக்கு வேண்டியவற்றைக் கொடுக்கிறான் என்ற முடிவை ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்கள் தைரியமாக ஒப்புக்கொண்டுள்ளனர். பகவானுடைய ப்ரீதிக்காகச் செய்யவேண்டியது ஒன்றுமேயில்லை என்றும், நாம் செய்யும் கர்மா அறிவில்லாததானால் அது பயனைக் கொடுக்காது. அறிவுள்ள ஈசுவரன் கருணைக் கடலாக இருப்பதனால் அவன் ஒருவனே நாம் விரும்பியதை அடையப் போதும் என்றும் "சித்தோ பாயம்" என்ற ஆசாரியர்களின் கொள்கை தெரிவிக்கிறது. எம்பெருமானை உபாயமாகப் பற்றிய பிறகு நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அது கடவுளுடைய பெருமைக்கு மாசை உண்டுபண்ணும். ஆதலினால் உபாயங்களைப் பற்றிச் சிந்திக்கவே வேண்டாம் என்றும், சிந்தித்தால் பாபம் உண்டு என்றும் பெரியோர்கள் கூறிவிட்டார்கள். இதனால் கர்மாக்களிலேயே பிறந்து கர்மாவை அனுஷ்டித்து அதிலேயே வளர்ந்து பெரிய கர்மாக்களைசெய்து

பழக்கப்பட்ட பாரதப்பண்பாட்டில் பகவானுக்காக ஒன்றுமே செய்யவேண்டாம் என்பது முடிவாகிவிட்டது. பகவான் தன் பேருகவே உலகத்தைப் படைக்கிருன், பாதுகாக்கிருன், அழிக்கிருன் என்ற கொள்கை ராமானுஜருடைய சேஷ சேஷி பாவத்தில் விளைவாக ஏற்பட்டுள்ளது. [பக்கம் 188, 189]

80. தெய்வம் உண்டு என்ற அடிப்படையில் யுக்தியை வளர்த்து இந்த யுக்தி கொண்டுவிடும் இடத்திற்குப் போக ஆசாரியார்கள் தயாராகி விட்டார்கள். அதன் காரணமாகவே முடிவான பல கொள்கைகள் தமிழ் நாடு வைணவத்தில் சேர்ந்து விட்டன. [பக்கம் 19.]

ஞானமும் பக்தியும்

81. அத்வைதிகள் ஞானத்திஞல் தான் மோட்சம் சித்திக்கும் என்றனர். ராமானுஜர் அது கிடையாது; அது பக்தியாக உருவாக வேண்டும் என்று சொன்ஞர். [பக்கம் 194]

பிரபத்தி மார்க்கம்

82. பிற்கால ஆசாரியர்களால் இவ்வழியைப் போற்ற முடியவில்லை. அவர்களுக்குச் சிந்தனை அளவில் யுக்தி எந்த இடத்தில் கொண்டுபோய் விடுகிறது என்ற கவலை இல்லை. பக்கள் நிலையிலிருந்து கருத்துக்களை உருவாக்கி அந்த நிலையில் சிந்தனை செய்து அதற்குத் தகுந்தாற்போல் யுக்திகளையும் கண்டுவிட்டார்கள். எல்லோரும் மோட்சம் அடையவேண்டும். எல்லோரும் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே, இதற்கு உபநிடத்தில் கூறப்படும் பக்தி சிறிதுகூடப் பயன்படாது. ஏனென்ருல் எல்லா பக்களும் எளிதாக அந்தப் பக்திமார்க்கத்தில் போக முடியாது என்று இந்தக்குறையை மனத்தில் கொண்டு ப்ரபத்தி என்ற உபாயத்தை உருவாக்கிஞர்கள்.......ஈசுவரன் ஒருவன் இருக்கிருன், அவனுக்குத் தான் அடிமை என்று அறிவு இருந்தால் போதுமானது. இந்த அறிவு இருந்தால் தாஞகவே கடவுளைச் சரணம் அடைவான் என்று கூறும் இந்த மிகவும் எளிய நடைக்கு இறங்கிஞர்கள். எந்த அறிவும் இவனுடைய மோட்சத்திற்குச் சாதனமில்லை. அறிவு பெற்றுள்ள மனிதஞக இருக்கிருன் என்பதற்காத்தான் ஆன்ம அறிவு அவசியமாகிறது. ஆஞல் இது இவனுக்கோ ஈசுவரனுக்கோ ஒரு பயனையும் உண்டுபண்ண ஏற்பட்டுள்ளதன்று என்று கூறிவிட்டார்கள். மனிதனுடைய நிலையிலிருந்து பார்த்து மட்டும் இந்த

முடிவை எடுக்க அவர்கள் வரவில்லை. கடவுள் நிலையில் இருந்து இதைக் கவனிக்கிறார்கள். கடவுள் தனக்காகத்தான் இயங்குகின்றான் என்ற கொள்கை உருவாகிவிட்டதால் ஜீவாத்மாவை ரட்சிப்பது தன் பேராகவேச் செய்யப் போகிறான். இங்கு ஆன்மாவிற்கு இடமே கிடையாது என்று கூறிவிட்டனர்.
[பக்கம் 195, 196]

ராமாநுஜரும் பிற்பட்ட ஆசாரியர்களும்

83. ராமாநுஜர் ஆன்மாவுக்கும் கடவுளுக்கும் உயிர் மெய் போன்ற பிரிக்க முடியாத உறவைச் சொல்லி ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் உடலும், ஆன்மாவுமாகச் சேர்த்து கடவுள் ஒருவன்தான் என்ற முடிவைச் செய்தார். ஆனால் பிற்கால ஆசாரியர்கள் கடவுளே ஆன்மாவை ரட்சிக்கக் கடமைப்பட்டுள்ளான், உடையவன்தானே உடைமையைப் பாதுகாப்பான். ஆன்மா செய்ய வேண்டியதொன்றுமில்லை என்று கூறிவிட்டார்கள். இந்த முடிவான கருத்தைக் கண்டு பிடித்த ஆசாரியர்கள் இதைத் தைர்யமாகத் தங்கள் நூல்களில் எழுதிவிட்டார்கள். அதுமட்டுமன்று; இந்தக் கொள்கையை பழக்கத்திலும் கொண்டுவந்து விட்டனர். ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஒரு வகுப்பினர் இந்தக் கொள்கையை இன்றும் பின்பற்றுகிறார்கள். பக்தி வேண்டா பக்தியைச் செய்யமுடியாது; ப்ரபத்தியே போதும். ப்ரபத்தியும் அறிவினிலேயே நின்றால் போதும். அந்த அறிவும் மனிதனுக இருப்பதால் தான் வேண்டும் என்று கூறிவிட்டார்கள். ராமாநுஜர் வகுத்த பக்தி மார்க்கத்தில் சில குறைகளை இவர்கள் காண்கிறார்கள்.
[பக்கம் 196]

84 ராமாநுஜர் பதினெட்டுத் தடவை திருக்கோட்டியூர் நம்பியிடம் கீதார்த்தத்தைக் கேட்கப்போனார் என்றும் பதினெட்டாவது தடவையில் தான் அவர் 'நான்' என்பதை விட்டுப் பேசினார் என்றும் அதன்பிறகுதான் அவருக்கு உபதேசிக்கப் பட்டது என்று கூறும் விளக்கக் கதையும் இங்கு உதவுகிறது.
[பக்கம் 198]

85. ஸ்ரீஸ்துதியில் வேதாந்த தேசிகர் வழிபடுகிறார். பூஸ்துதி, "கோதாஸ்துதி" மூலம் பூதேவி, நப்பின்னையின் அவதாரமான கோதை இவர்களையும் வேதாந்த தேசிகர் வழிபடுகிறார். ச்ருதி. ஸ்மிருதி, புராணங்கள், பாகவதம் ஆகிய

வற்றின் லக்ஷ்மி சம்பந்தமாகக் கருத்துக்களை ஒழுங்குபடுத்திப் பேசவந்த ஆசார்யர்கள் தங்களுடைய நூல்களில் முடிவாக லக்ஷ்மிக்கு இடம் கொடுக்க முடிவு பண்ணுகிறார்கள். ராமானுஜர் பகவான் நாராயணனுக்குத் தனியான "பத்நீ" உண்டு என்பதோடு மட்டும் நின்றுவிட்டார். [பக்கம் 200]

86. மகாலக்ஷ்மி பெண்ணுருவில் இருப்பதால் பெண்களுக்குள்ள தனியான குணங்களை அவளோடு சேர்த்து யாரும் சிந்தித்தது இல்லை ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யர்கள் பெண் என்றும் மகாவிஷ்ணுவின் பத்நி என்றும் சொல்லிய பிறகு அவளுக்கு ஏதாவது தொழிலைக் கொடுத்தாக வேண்டும் என்று சிந்தனை செய்து நமக்கும் மகாவிஷ்ணுவுக்கும் நடுவில் நின்று நமக்காகப் பரிந்து பேசுகிறாள் (புருஷகாரம்) என்று புதிதான கருத்தை உருவாக்குகிறார்கள். மனித உருவைக் கடவுளுக்குக்கொடுத்தபிறகு, அவருக்கு ஒரு மனைவியையும் கற்பித்த பிறகு, உலக வாழ்க்கையில் உள்ள அநேக அம்சங்களை அங்கு கற்பிப்பது இவர்களுக்கு எளிதானதாக ஆகிவிட்டது. தம்பதி (கணவன் மனைவி) என்ற உறவை ஏற்படுத்திய பிறகு மகாலக்ஷ்மிக்கு மதிப்புக் கொடுக்க ஆசார்யர் தயங்கவில்லை. இவள் பெருமையை விளக்குவதற்காக விஷ்ணுவின் பெருமையைச் சிறிது இறக்கத் தயங்கியதும் இல்லை. மகாலக்ஷ்மி என்ற கொள்கை தேவி வழிபாட்டின் வழியாக முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. ......மகாலக்ஷ்மி தத்துவத்திற்குப் பெருமை கொடுக்க அளவற்ற உயர்ந்த குணங்கள் உள்ள விஷ்ணுவுக்கும் கோபம் என்ற மாசை கற்பிக்கிறார்கள். ......இந்தக் கருத்தை ராமாயணத்திலும் ஆசாரியர்கள் ஏற்றிட்டுக் காண்பிக்கிறார்கள். [பக்கம் 201, 202]

87. ஆலயங்களில் முக்கியமான ஆண் பிம்பமும் பெண் பிம்பமும் ஒரே பீடத்தில் எழுந்தருளுவதை ஆகமங்கள் அனுமதிக்கவில்லை. கர்ப்பக்கிருகத்தினுள்ளோ பக்கத்திலோ இருப்பதையும் அனுமதிக்கவில்லை. இரு பக்கங்களிலும் ஸ்ரீதேவி, பூதேவி இருக்கும்போது தனிக்கோயில் நாச்சியார் ஒவ்வோர் ஊருக்கும் தனித்தனிப் பெயருடன் இருக்க வேண்டிய தேவை நமக்குப் புலனாகவில்லை. இவர்கள் தவிரப் பெருமாள் பிம்பத்தின் மார்பிலும் லக்ஷ்மி இருக்கிறாள். மார்பில் உள்ள லக்ஷ்மியை லயார்ச்சை எனவும், பக்கத்தில் உள்ளவர்களைப் போகார்ச்சை

எனவும், தனிக்கோயில் நாச்சியாரை காம்யார்ச்சை எனவும் பெயரிட்டு அழைக்கின்றனர். அர்ச்சகர்கள் கோயிலின் பிரதானபிம்பத்தை ஸ்ரீ பூமி நீலா ஸமேத என்ற மூன்று பத்நிகள் உடைய பகவானுகவே எல்லாக் கோயில்களிலும் குறிப்பிடுகிறுர்கள் எனினும் நீலாவுக்குத் தனி உருவம் ஆலயங்களில் கற்பிக்கப்படவில்லை. பெண் உருவத்தைத் தனியாக வழிபடும் தேவி வழிபாடு பாவிய பின்னரே தனிக்கோவில் நாச்சியார் வழிபாடு ஏற்பட்டிருக்க வேண்டும். [பக்கம் 205, 206]

ஆசாரியர்களும் லக்ஷ்மி தத்துவமும்

88. புராண இதிகாச காலங்களுக்கும் வெகுகாலம் பிற்பட்டே (கி. பி. 13-ம் நூற்றுண்டு) வைணவ சம்பிரதாயம் வருவதால் லக்ஷ்மியை விஷ்ணு விட்டுப்பிரியாதமனைவியாகக் கொண்டதோடு லக்ஷ்மி இல்லாத நாராயணன் நாராயணனே அல்லன் என்று கூறும் நிலைக்கு வந்துவிட்டனர். அஷ்டாக்ஷரத்தில் லக்ஷ்மியின் நேரான தொடர்பு இல்லாததனுல், நேருக்கு நேராக லக்ஷ்மி சம்பந்தம் உடைய ‘த்வயம்’ என்ற மந்திரத்தில் முன் வாக்கியத்திலும் பின் வாக்கியத்திலும் ஸ்ரீ என்ற சொல்லைச் சேர்த்து அக்குறையை நீக்கிவிட்டார்கள். ...... புருஷகாரம் என்ற கருத்தை அடிப்படையாகக்கொண்டு பல விளக்கங்கள் காணப்படுகின்றன. ஆனுல் இந்த கொள்கை, இயற்கை, யுக்தி, லோகாநுபவம் இதையே அடிப்படையாகக் கொண்டதென்று வேதாந்த தேசிகர் கூறுகிறுர். இதனுல் மூலநூல்களில் இக்கருத்து இடம்பெறவில்லை என்று ஏற்படுகிறது. ஆனுல் மணவாள மாமுனிகள் பாஞ்சராத்ர நூலை மேற்கோளாகக் காண்பிக்கிறுர். [பக்கம் 206, 207, 208]

89. ஆழ்வார்கள் பகவானேடு லக்ஷ்மியைச் சேர்த்துப் பல பாடல்களில் பேசியிருந்தும் தனிப்பட்ட முறையில் லக்ஷ்மி ஸ்தோத்திரம் செய்யவில்லை. ஆசாரியர்கள் லக்ஷ்மியைப் பற்றிப் பேசும் செயல்கள், பகவானைக் கருணைக் கடலாக அநுபவிக்கும் ஆழ்வார்களுடைய கருத்துக்கு பகவானின் கோபத்தை லக்ஷ்மி அடக்கிறுள் என்ற கொள்கை ஒத்ததில்லை. தன் அடியார் திறத்துத் தாமரையாளாகிலும் சிதகுறைக்குமேல், ‘என் அடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார் என்று உகப்பர்’ தம் பெருமாள் என்று குறிப்பிடும் ஆழ்வார்கள் மனநிலை, ஆன்மாக்களுக்குப் பரிந்துரை கூறிப் பகவானுடைய

கோபத்தைத் தணிக்கும் லக்ஷ்மியாகப் பிற்கால ஆசாரியர்கள் கூறும் கருத்துக்கு இது ஒத்ததாக இல்லை. பகவான், லக்ஷ்மி, ஆத்மாக்கள் இவர்களைக் கணவன், மனைவி, குழந்தை உறவில் அமைத்துப் பல கருத்துக்களையும் ஆசாரியர்கள் உலகியலை ஒட்டி வளர்த்து விட்டனர். [பக்கம் 208]

தேவிகள் மூவர்

90. பகவானுக்கு லக்ஷ்மி மட்டும் மனைவியல்லள். பூமியும் நீளாதேவியும் மனைவியாகக் கூறப்பட்டுள்ளனர். பகவானுக்கு ஒரே பத்தினிதான் இருக்கவேண்டும் என்ற கருத்தில் "மற்றவர்கள் லக்ஷ்மியின் அவதாரம்தான்" என்று வேதாந்த தேசிகர் கருதுகிறார். [பக்கம் 209

நீளாதேவி

91. நீளா என்ற பெயர் கருநிறமுடையவள் என்ற பொருள் உடையது. இவளைத் தமிழ் நூல்கள் 'பின்னை' என்று குறிப்பிடுகின்றன. லக்ஷ்மி, பூதேவி இவர்களுக்குப் பின் வந்தவள் என்று பொருள். லக்ஷ்மியும் பூமியும் குறிப்பிட்ட அவதாரத்தோடு சம்பந்தம் உடையவரல்லர். பின்னை கண்ணனுடைய மாமன் மகள். ஆயர் மடமகள் எனப்படுபவள். ஏழு காளைகளை வென்று இவளைக் கண்ணன் மணந்துகொண்டதாக ஆழ்வார் 'காம்பணை தோள் பின்னைக்கா ஏறுடன்ஏழ் செற்றதுவும்' என்று குறிப்பிடுகிறார். வடமொழிப் புராணங்களில் இவளுக்கு இடம் இல்லை. ......பாஞ்சராத்ர ஆகமங்களில் வைகுந்தத்தில் லக்ஷ்மிக்கே பகவான் பக்கத்தில் இடம் சொல்லப் படுகிறது. ஏனைய இருவரும் லக்ஷ்மியின் அவதாரமானதால் இவர்களுக்கு அவதார காலத்தில் பூலோகத்தில் இடம் இருக்குமே தவிர வைகுந்தத்தில் இடம் ஏற்பட வாய்ப்பு இல்லை. கிருஷ்ணாவதாரத்தில தோன்றிய நப்பின்னை வைகுந்தத்தில் எப்படி இடம் பெற்றிருக்க முடியும் என்பது புலப்படவில்லை. ......ராமாநுஜர் இயற்றியதாகக் கூறப்படும் கத்யத்ரயம் என்ற நூலில் ஸ்ரீ பூமிநீளா நாயகன் என்ற தொடர் காணப்படுகிறது. ஆனால் அவருடைய வேதாந்த சங்கிரகத்தில் 'மகிஷி' என்ற ஒரு மனைவிதான் குறிப்பிடப்படுகிறாள். அதனால் பிற்காலத்தில் கருத்தளவில் லக்ஷ்மிதத்துவமே பூமி நீளாவாகப் பரவியது என்று கருதவேண்டிவருகிறது. [பக்கம் 209, 210]

விஷ்ணுபத்நி

92. ஸ்ரீ ஸூக்தத்தில் ஸ்ரீ லக்ஷ்மி என்ற இரண்டு சொற்களும் ஒன்றுசேர்ந்து விடுகின்றன. ......சர்வப்ரஷ்டம் என்ற பெயருடைய யாகத்தில் 33 எண்ணிக்கை உடைய ஒரு ஸ்தோமத்தைப் பெண் தெய்வமாக வழிபடவேண்டும் என்று கூறும் யஜுர் வேதப் பகுதியில் வந்துள்ள மந்திரத்தில் காணப்படும் 'விஷ்ணு பத்நீ' என்ற சொல் உலகத்தின் தலைவி என்ற பொருளில் வருகிறதேயன்றி படட்ர் குறிப்பிடுவதுபோல லக்ஷ்மி என்ற கருத்தில் வரவில்லை. ......எது எங்ஙனமாயினும் ஸ்ரீ என்ற சொல் விஷ்ணுவின் மனைவி என்ற பொருளிலோ தெய்வம் என்ற பொருளிலோ வேதத்தில் வழங்கப்படவில்லை. ......ஸ்ரீமான், லக்ஷ்மீவான் முதலிய சொற்களை நோக்க ஸ்ரீ என்பது செல்வம் முதலிய பல பொருள் தரும் பொதுச் சொல்லாகவே கொள்ளக் கிடக்கிறது. ஸ்ரீ என்ற லக்ஷ்மியை மட்டும் குறிக்கும் சொல்லானால் ஸ்ரீமான் என்ற சொல் பகவான் ஒருவனையே குறித்தல் வேண்டும். நடைமுறையில் அப்படியில்லை. கருத்தளவில் இருந்த ஸ்ரீக்குப் பிற்காலத்தவர் லக்ஷ்மி என்ற வடிவம் கொடுத்துப் பகவானோடு சேர்த்து விட்டனர் என்பதே ஆராய்ச்சியாளர் துணிவு. [பக்கம் 212, 213, 214]

93. இவ்வாறு பேசும் ஆகமங்களில் பிற்பட்டுத் தோன்றியவை 'ஸ்ரீ வைகுந்தத்தில் பகவான் ஆண் உருவத்தில் இருப்பதுபோல சக்தியும் பெண் உருவத்தில் உள்ளார். பக்தர்கள் அவ்விருவரையும் அனுபவிக்கிறார்கள். பரிவார தேவதைகள் என்ற பெயரில் பெண் உருவத்தில் உள்ள பல சிறு தேவதைகளும் அங்கு இருக்கின்றனர். புஷ்டி என்ற பூதத்துவமும் நீளாதத்துவமும் ஆழ்வார்கள் காலத்துக்குப் பிற்பட்ட பாஞ்சராத்ர சம்ஹிதைகளில் இடம் பெற்றுள்ளன...... பாஞ்சராத்ர ப்ரகாச சம்ஹிதை கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அது ஸ்ரீ சக்தி ஸாத்விக குணமுடையவர்களையும், பூசக்தி ராஜஸ குணமுடையவர்களையும், நீளாசக்தி தாமஸ குணமுடையவர்களையும் காப்பதாகக் கூறுகிறது. ...... ஆதிகாலத்தில் கருத்தளவில் இருந்த விஷ்ணு தத்துவமும், லக்ஷ்மி தத்துவமும், வேதாந்தக் கருத்துக்களைக்கொண்டு விளக்கப்பட்டன. பின் மந்திர சாஸ்திர வழியைப் பின்பற்றிப் பெயர் உருவம் என்பன கொடுக்கப்பட்டன. பிறகு, ஆகமம் சிற்பம் இவற்றைப் பின்

பற்றி பிம்பங்கள் செய்து ஆலயங்களில் மந்திரங்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றன. வைணவ ஆசாரியர்கள் ஆண் பெண் உருவங்களை அடிப்படையாகக் கொண்டு தங்களுடைய சம்பிரதாயக் கொள்கைகளை வளர்த்து விட்டார்கள் என்பனவற்றை வரலாற்று வாயிலாகக் காணலாம். [பக்கம் 115, 116]

94. புத்தருடைய மரபுப்படி லக்ஷ்மி பாரத வர்ஷத்தின் வடபகுதியை ஆண்ட 'தாதரத்தன்' என்பவன் மகளாகக் குறிக்கப்படுகிறாள். புராணங்களில் அவள் பிரமாவினுடைய பெண்ணாகவும். 'தாதா' 'விதாதா' இவர்களின் தாயாகவும் குறிக்கப்படுகிறாள். ......சதபதத்தில் லக்ஷ்மி பிரஜாபதியின் பெண்ணாகச் சொல்லப்படுகிறாள் (S. B. 243). தக்ஷ பிரஜாபதியின் பெண்கள் பதின்மருள் ஒருத்தியான லக்ஷ்மி தர்மதேவனைக்கு மணம் செய்துகொடுக்கப்பட்ட செய்தியும் காணப்படுகிறது. ......மகாலக்ஷ்மியை இந்திரனோடும் மற்றவர்களோடும் சேர்க்கும் கதைகளும் புராணங்களும் காணப்படுகின்றன. மகாபாரதம் ஆதிபருவத்தில்—லக்ஷ்மி இந்திரனுடைய பத்நி ஆதலால், பாண்டவர் ஐவரும் சென்ற பிறப்பில் ஐந்து இந்திர்களாக இருந்ததால் லக்ஷ்மி அவதாரமான திரௌபதி அந்த ஐவரையும் ஒருசேர மணந்தது பொருத்தமே என்ற செய்தி காணப்படுகிறது. ...... ஸ்ரீ ஸூக்தத்தில் லக்ஷ்மி தேவஸகன் (குபேரன்) கீர்த்தி, மணி இவற்றோடு தொடர்பு கொண்டிருக்கும் செய்தி காணப்படுவதால் லக்ஷ்மிக்குக் குபேரனுடைய தொடர்பும் அறியப்படுகிறது. ...... மகாபாரதம் வனபருவத்தில் ஸ்கந்தனுடைய மனைவிமார்களாகத் தேவசேனையோடு லக்ஷ்மி. சஷ்டி முதலியவர்களும் குறிப்பிடப் படுகிறார்கள். இங்கு லக்ஷ்மி ஒரு சரீரத்தோடு ஸ்கந்தனை அடைந்த செய்தியைக் காண்கிறோம். பாரதத்தில் லக்ஷ்மி தேவசேனை என்ற உருவத்தோடு ஸ்கந்தனைக் கூடியிருக்கும் செய்தியும் குறிப்பிடப்படுகிறது...... விக்ரஹங்களில் மஹாலக்ஷ்மியை விஷ்ணு விக்ரஹத்தின் மார்பில் பதியவைக்கலாம். ஆனால் மனித உருவில் இருக்கும் விஷ்ணுவின் மார்பில் எப்படி மஹாலக்ஷ்மி இருக்க முடியும். விஷ்ணுவின் மனதை கோவிலாகக் கொண்டுள்ளாள் என்று தான் கொள்ளவேண்டும். ......பாஞ்சராத்திரத்தின் பிற்பட்ட

சம்ஹிதைகளில் லக்ஷ்மி தத்துவம் விரிந்த இடம்பெற்று, ஒரு காலத்துத்தனித்து இயங்கும் நிலை நீங்கி, இப்போது விஷ்ணுவோடு பிரிக்கமுடியாமல் இணைந்த தத்துவமாகக்கொள்ளப் பட்டுப் பயன்படுகிறது. [பக்கம் 220, 221, 222, 226, 2 9]

95. ராமானுஜருக்குப் பிறகு வந்த ஆசாரியர்கள் இதனோடு நிற்க முடியவில்லை. அறிவை அனுபவம் வரையில் கொண்டு போனதை அவர்கள் ஒப்புக்கொண்டு அதற்குமேல் யுக்தியை வளர்த்து அனுபவத்தோடு நிற்கக்கூடாது, அதைச் செயலில் காண்பிக்கவேண்டும் என்று கருதி கைங்கர்யம் என்ற ஒரு கொள்கையை வகுத்து விட்டார்கள். ......ஸ்ரீவைகுந்தத்தில் கைங்கர்யம் செய்ய இடமுண்டு என்பதை வேதாந்ததேசிகர் ஒருவரே தர்க்கரீதியில் ஸ்தாபிக்கிறார்கள். ...... ராமானுஜர் கைங்கர்யம்தான் மோட்சம் என்ற கொள்கையை வேதார்த்த சங்கிரகத்தில் ஒப்புக் கொள்ளாமல். பகவானுக்கு அடிமை என்ற உணர்ச்சியைப் பெற்று ஆனந்தப்படுவதே மோட்சம் என்று கூறுகிறார். [பக்கம் 233, 234]

பாகவத கைங்கர்யம்

96. பாகவதர்களிடத்தில் ப்ரியம் காண்பிப்பது பெரிதா? பகவானிடத்தில் ப்ரியம் காண்பிப்பது பெரிதா? என்ற பெரிய சர்ச்சையும் காணப்படுகிறது. ......எம்பெருமானுக்காகத் தானே ஆசாரியர்கள். அவர்கள் வழிபடத்தக்கவர் என்ற முறையில் எம்பெருமானுக்கு மேம்பட்டவர்களாகச் சொல்லுவதும் மிகைப்படுத்திப் பேசுவதே. [பக்கம் 236, 237]

ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தின் வளர்ச்சி. முன்னுரை :

97. ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயம் என்ற பெயரால் சில கருத்துக்களை நாதமுனிகள் தொகுக்க ஆரம்பிக்க, மணவாள மாமுனிகள் வரையில் உள்ள ஆசாரியர்களால் அது உருவாக்கப் பட்டுள்ளது. ...... **நாராயணனே முதல் ஆசாரியன்** வைணவ சம்பிரதாயம் ஒரு தனிப்பட்ட மனிதனுடைய மனத்திலிருந்து உருவாகவில்லை என்று காண்பிப்பதற்காக நாராயணனே முதலாசாரியன் என்று சம்பிரதாயத்தில் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. ...... மகாலக்ஷ்மியிடமிருந்து வைணவக் கொள்கைகளை விஷ்வக்சேனர் (சேனைமுதலியார்) உபதேசம் பெறுகிறார். விஷ்வக்சேனர் என்பவரிடமிருந்து நம்மாழ்வார் உப

தேசம் பெறுகிறார். சேனை முதலியாரிடமிருந்து எப்படி நம்மாழ்வார் உபதேசம் பெற்றார் என்பது விளங்கவில்லை. ...... வேதாந்த தேசிகரோ லோகாசாரியரோ சொல்லும் கொள்கை அப்படியே ஆதிகாலத்தில் இருந்தது என்று ஒப்புக்கொள்ள நூல்கள் இடம் தரவில்லை. ராமானுஜர் காலத்திலிருந்த வைணவக்கொள்கைகள் வேறு. ராமாநுஜர் காலத்துக்குப் பிறகு வந்த ஆசாரியர்கள் வளர்ந்த கொள்கை உருவத்தில் வேறாக நிற்பதை நாம் பார்க்கிறோம். வைதிக மதத்தைச் சேர்ந்த நூல்களும் (ஸ்மிருதி, இதிகாச புராணங்கள்) ஆழ்வார்களுடைய பாடல்களும், பாஞ்சராத்ர ஆகமமும் ஆகிய மூன்றும் தனித் தனியாக உற்பத்தியாகி இதில் வந்து சேர்கின்றன. மற்றும் சேர்ந்துதான் பிற்கால வைணவமாக உருவாகிறது. இதைப் பிற்கால வைணவ ஆசாரியர்கள் நூல்கள் வெளிப்படுத்தும்.
[பக்கம் 239, 242, 243 244]

நம்மாழ்வார்

98. ஆசாரியர் 'ப்ரபன்ன சந்தான கூடஸ்தரான நம்மாழ்வாருடைய நூல்கள் பாடல்கள் உருவத்தில் ப்ரத்யட்சமாக இருந்து வருகின்றன. அவரைப்போன்ற மற்ற ஆழ்வார்கள் இருந்தும் அவர்களுடைய பாடல்களுக்குத் தனித்த இடத்தைக்கொடுத்து ஆழ்வார்களுள் இவர் ஒருவரே ஆசார்ய பரம்பரையில் சேர்க்கப்பட்டுள்ளார். நாராயணனை இஷ்ட பர தேவதையாகக் கொள்ளுமிவர், வாஸுதேவன், சங்கர்ஷணன், ப்ரத்யும்நன், அநிருத்தன் என்ற ஆகமப் பெயர்களைக் குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது. பூமகள் – மண்மகள் — ஆயர்மகள் இவர்களை மனைவிகளாகச் சொல்லுமிவர் மஹாலக்ஷ்மிக்கு தனியாக ஒரு பாடலைக்கூட அர்ப்பணம் பண்ணவில்லை. பட்டர் குறிப்பிட்டபடி பகவானைச் சொல்லுமிடங்கள் இவளையும் சொல்லியதாக நினைக்கிறார் போலும், சரணாகதி பண்ணுபவர்கள் முதலில் லக்ஷ்மியை சரணாகதி பண்ணவேண்டும். லக்ஷ்மீதான் புருஷகாரம் என்ற கருத்துக்கள் இங்கு இடம் பெறவில்லை. இவர் தன் பாசுரங்களில் பகவானைக் கருணைக் கடலாகவே அநுபவித்துப் பேசுவதால் புருஷகாரம் என்ற கொள்கையே இவருடைய கருத்துக்கு எதிரானதென்று தெரிகிறது. அவ்விதமே இவருடைய நூல்களில் காணப்படும் சரணாகதி எல்லா நூல்களிலும் சொல்லப்படும் சரணாகதியே.

உபாயமாகப் பற்றப்படவில்லை. மேலும் இவரைப் பரந்யாஸ்தான கூடஸ்தராக எல்லா ஆசாரியர்களும் வர்ணிக்கிறார்கள். உண்மை அப்படி இல்லை. இவர் பக்தியோக நிஷ்டர் தான். இவரது பக்தி ராமாநுஜர் கூறும் உபநிஷத்தைப் பின்பற்றிய உபாசனை இல்லை. புராணங்களில் சொல்லப்பட்டுள்ள கடவுளிடம் அன்பைச் செலுத்துவதே. நம்மாழ்வார் பக்தியோக நிஷ்டர் என்றுதான் திருக்குருகைப் பிரான் பிள்ளான் கூறுகிறார். பத்தாவது பத்தில் உள்ள ஒரு பாசுரத்திற்கு வ்யாக்யானம் கூறும்போது 'பத்துடைய அடியவர்க்கெளியன்' என்ற பாசுரத்தில் ஆரம்பித்த பக்தியோக சுலபத்வத்தை நிகமிக்கிறார் என்ற கருத்தைவெளியிட்டிருக்கிறார். இதனால் ஆறாயிரப்படி உரைப்படி நம்மாழ்வார் பக்தியோக நிஷ்டர்தான். இவர் மோக்ஷோபாயமாகக் கர்ம ஞான பக்திகளை மட்டும் குறிப்பிடுகிறார். ப்ரபத்தியை உபாயமாக நேருக்கு நேராகக் குறிப்பிடவில்லை. ப்ராசீனமாக பன்னீராயிரப்படிவரை இதே கருத்து தொடர்ந்து வருகிறது. ஆனால் இருபத்து நாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி வியாக்கியானங்களில் புதுவழி ஆரம்பிக்கப்படுகிறது. "மயர்வற மதிநலம் அருளினன்" என்ற இடத்தில் ஆரம்பித்த ப்ரபத்தியோக சுலபத்வத்தை இங்கு நிகமிக்கிறார் என்று அவர்கள் கூறுகிறார்கள்; இது ஒரு புதிய திருப்பம். ராமானுஜருக்கு அந்தரங்கராயிருந்த பிள்ளான் கூறிய வழியை மீறிப் புதிய வழியை ஏன் கண்டுபிடிக்கிறார் என்பது புரியவில்லை. ஆனால் ஒன்று தெளிவாகிறது. வைணவ சம்பிரதாயத்தில் ராமாநுஜர் பக்தியை வற்புறுத்துகிறார். பிற்காலத்தவர்கள் ப்ரபத்தியை வற்புறுத்துகிறார்கள்......நம்மாழ்வாருடைய பக்தி உபநிடதத்தில் சொல்லப்படும் பக்தியில்லை. புராணங்களில் காணப்படும் விபவாவதாரங்களில் ஈடுபடுவது பக்தி என்று இவர் நினைப்பதாகத் தெரிகிறது. ராமாநுஜர் உபநிடதத்தில் சொல்லப்பட்டுள்ள உபாசனங்களையே பக்தி என்கிறார். இந்த விஷயத்தில் ஆழ்வாருடைய கருத்தும் ராமானுஜருடைய கருத்தும் ஒத்துப் போகவில்லை. ராமானுஜர் உபநிடதத்துக் கொள்கைகளை வற்புறுத்துகிறார். ஆழ்வார்கள் எல்லா மக்களுக்கும் பொதுவான பக்தியைச் சொல்லுகிறார்கள். ஆழ்வார்கள் அடிக்கடி எம்பெருமானைச் சரணம் புகுகிறார்கள். அர்ச்சாவதாரத்திலேயே சரணாகதி பண்ணுகிறார்கள் என்றும் லோகாசாரியார் கூறுகிறார். ஆனால் இந்தச் சரணாகதி பாஞ்சராத்ர ஆகமத்தில் சொல்லப்

பட்டுள்ள சரணாகதியாகத் தெரியவில்லை. உலக வழக்கத்தைப் பின்பற்றியதே......சரணாகதியைப் பற்றி உள்ள கருத்துக்கள் பாஞ்சராத்ர ஆகமத்திலேயே வளர்க்கப்பட்டுள்ளன. அந்தக் கருத்துக்களுக்கு இங்கு பேச்சில்லை. ஐந்து அங்கங்களோடு கூடியது சரணாகதி என்று ஆழ்வார் எங்கும் வெளியிட வில்லை. மேலும் 'த்வயம்' என்ற மந்திரம் சரணாகதிக்கு மிக வும் முக்கியமானது. உரையாசிரியர்கள் நம்மாழ்வாருடைய பாடல்களுக்கு உரை கூறுங்கால் த்வயத்தினுடைய விளக்க மாகவே அவை அமைந்திருப்பதாகக் கொள்கிறார்கள். ஆனால் எட்டு எழுத்து என்ற அஷ்டாக்ஷரத்தைச் சொல்வதுபோல் ஆழ்வார்கள் த்வயத்தைப் பற்றிச் சொல்லவேயில்லை. ஆழ்வார் கள் பக்தியோக நிஷ்டர்கள் அல்லர் என்று அறுதியிட்டுக் கூறும் பெரியவாச்சான் பிள்ளையும் வடக்குத்திருவீதிப் பிள்ளை யும் ஆழ்வார்கள் வேறு ஜாதியில் பிறந்திருப்பதால் உபநிட தத்தில் சொல்லப்பட்டுள்ள பக்தியோகத்திற்கு இவர்கள் அதி காரிகள் அல்லர் என்று கூறிவிட்டார்கள்....... இவ்விதம் வைணவ சம்பிரதாயத்திற்குக் கொள்கைகளை வழங்கும் மூன்று வகை நூல்களும் ஒவ்வொன்றும் தனித்தனியே அமைந்திருப் பதைப் பார்க்கிறோம். [பக்கம் 246, 247, 248]

99. மஹாலக்ஷ்மியைப் பற்றி 'சதுஸ் ஸ்லோகி' என்ற நூல் எழுதியுள்ளார் (ஆளவந்தார்). இதுதான் வைணவ சம்பிரதாயத் தில் மகாலக்ஷ்மியை வழிபடும் முதல் நூல். இங்கு மகாலக்ஷ்மியின் பெருமையை விளக்குகிறார். ஆனால் பிற்காலத்தில் தோன்றிய புருஷகார கொள்கைக்கு இவர் காலத்தில் இடமேயில்லை. [பக்கம் 250, 251]

இராமாநுஜர் நூல்கள்

100. அடுத்தாற்போல் ராமாநுஜர் வருகிறார். இவருடைய நூல்களில் சூத்திர பாஷ்யம், கீதாபாஷ்யம், வேதார்த்த சங்கிர கம் இவை முக்கியமானவைகளாக நிற்கின்றன. ...... பத்னியை ஒப்புக்கொள்ளும் இவரும் இவருடைய வேதாந்தக் கருத்துக்களை வெளியிடும் நூல்களில் சொல்லவில்லை. புருஷகாரம் என்ற சொல்லை இவர் உபயோகப் படுத்தவேயில்லை. பக்தியினால் மோட்சம் என்று முதல் முதலாக இவர்தான் குறிப்பிடுகிறார். ...... கீதைக்கு உரை எழுதும் காலத்தில் எல்லோராலும் சரணா கதியை வெளியிடும் இடமாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள 'சரமஸ் லோகம்' என்பதற்குப் பொருள் கூறும் காலத்தில் பக்திக்கு

அங்கமாக உள்ள சரணாகதியை இந்த ஸ்லோகம் வெளியிட்டுள்ளதாகவே உரை எழுதிவிட்டார். இது பிற்காலத்து ஆசாரியர்களுக்கு முக்கியமான ப்ரமாணமாக இருப்பதினால் இதற்குப் பொருள் கூற வந்த ஆசாரியர்கள் ராமானுஜர் வழியை விட்டு வேறு வழியிலேயே திரும்பி விட்டார்கள். ஒரு சிலர் மறைமுகமாக ராமானுஜர் கருத்துக்களைக் கண்டித்தும் இருக்கிறார்கள். 'கத்யங்கள்' என்ற நூல்கள் வசன நடையில் அமைந்துள்ள நூல்கள். சரணாகதியைப் பற்றியும், ஸ்ரீரங்கத்தைப் பற்றியும், ஸ்ரீ வைகுண்டத்தைப் பற்றியும் வர்ணித்துப் பேசுகிறது. இந்த நூல் ராமானுஜருடைய நூல்தான் என்று பெரியவாச்சான் பிள்ளை, வேதாந்த தேசிகர் உள்ளிட்ட சகல ஆசாரியர்களும் ஒப்பிப் பேசுகிறார்கள். பெரியவாச்சான் பிள்ளை, வேதாந்த தேசிகர் இவர்கள் இவைகளுக்கு உரையும் எழுதியுள்ளார்கள். ஆனாலும், ராமானுஜரின் மற்ற வேதாந்த நூல்களில் காணப்படும் கொள்கைகளுக்கும் இதற்கும் வேற்றுமை காணப்படுகிறது. இது ராமானுஜருடையது அன்று என்று நினைக்கவும் வேண்டி வருகிறது. ...... பொதுவாகக் கவனிக்குமிடத்தில் ராமானுஜருடைய நூல்கள் பிற்காலத்து ஆசாரியர்களின் கருத்துக்களுக்கு முழுவதுமே ஒத்து நிற்கவில்லை. ராமானுஜர் தம்முடைய நூல்களில் ஓரிடத்திலாவது ஆழ்வாருடைய பாசுரங்களை எடுக்கவும் இல்லை, விளக்கவும் இல்லை. பிற்காலத்தில் வந்த ஆசாரியர்கள், எப்படி ஆழ்வார்களுடைய பாடல்களை உதாரணமாகக் கொண்டார்களோ அப்படி உதாரணமாகக் கொள்ளவில்லை. பாஞ்சராத்ர ஆகமங்களை ஒப்புக் கொண்டாலும், அவற்றினுடைய கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு தமது நூல்களில் விளக்கம் கூறவில்லை. ஆகமங்களைப் பற்றி சொல்லுங்காலத்தில், அர்ச்சாவதாரம் என்று கொள்கையிருப்பதாகத் தெரிவிக்கவில்லை. அவர் காலத்தில் வடமொழி நூல்கள் எவ்வெவை இருந்தனவோ, அவைகளைக் கொண்டுதான் தம்முடைய கொள்கைகளை ஸ்தாபிக்கிறார். பிறகு வந்த ஆசாரியர்களுக்கு ராமானுஜருடைய நூல்களிலிருந்து கிடைக்கும் உதவி மிகக் குறைவாக உள்ளது. ராமானுஜருடைய நூல்களிலிருந்து அவர் எங்கு பிறந்தார், எங்கு வளர்ந்தார் என்ற விவரங்களையும் நாம் காண முடியவில்லை. பொதுவாக ப்ரபத்தி சம்பிரதாயம் வளர்ச்சி அடைந்த

பிறகு ராமானுஜருடைய நூல்களுக்கு முக்கியத்துவம் குறைந்து விட்டது. அதனாலேயே அவர் பிறரைத் திருப்தி பண்ணி வைக்க ராமானுஜர் ஸ்ரீபாஷ்யம் எழுதினார். ..... அதன்பிறகு அவராலேயே 'கத்யத்ரயம்' கஷ்டப்படுகிறவர்களின் மனத்தைச் சமாதானம் பண்ண ஏற்பட்டுள்ளது - என்று கூறுகிறார்கள் என்று ஸ்ரீ வேதாந்த தேசிகர் தெரிவிக்கிறார். ...... 'ராமானுஜர் வர்ண தர்மத்தை வெறுத்தார்' என்று விளக்கும் கதைகள் கணக்கற்று இருக்கின்றன. ஆனால், அவர் வர்ணாச்சிரம தர்மத்தை அப்படியே வற்புறுத்துபவர். அபசூத்ராதிகரணி பாஷ்யம், ராமானுஜரின் ஜாதிக் கொள்கைக்கு எடுத்துக்காட்டாக நிற்கிறது. அவருடைய நூல்களிலிருந்து கிடைக்கும் சான்றுகள் ராமானுஜர் வைதிக தனிவழியிலேயே நிற்கிறார் என்பதைத் தெரிவிக்கின்றன. ...... ராமானுஜருக்குப் பிறகு வைணவ சம்பிரதாயம் புது உருவைப் பெற்றுப் புதுக்கொள்கையோடு வாழ்ந்து வருகிறது என்பதைப் ப்ரத்யட்சமாகப் பார்க்கிறோம். ராமானுஜருடைய நூல்களையும், பிற்கால ஆசாரியர்களுடைய நூல்களையும் ஒன்று சேர்த்துப் படித்துப் பார்த்தால் இந்த உண்மை நன்கு விளங்கும். [பக்கம் 251, 252, 253, 254, 255]

கூரத்தாழ்வார் மரபு

101. ராமானுஜர் வழியாக வந்த சீடர் பரம்பரையில் கூரத்தாழ்வார், பட்டர் நஞ்சீயர், நம்பிள்ளை, லோகாச்சாரியர், மணவாளமாமுனிகள் இவர்கள் வரை வந்த நூல்களில் பெரும்பான்மையானவை மணிப்பிரவாள நடையில் உள்ளவை பட்டர் வரை நூல்கள் வடமொழியிலேயே காணப்படுகின்றன. நம்பிள்ளை ஆழ்வார்களுடைய பாடல்களுக்கு மிக அழகாக உரை எழுதியுள்ளார்கள். வடக்குத் திருவீதிப் பிள்ளையின் சீடரான பெரியவாச்சான் பிள்ளை ஆழ்வார்களுடைய எல்லாப் பாடல்களுக்கும் விரிவான உரை எழுதியுள்ளார். அங்காங்குப் பல அபூர்வமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள்.

[பக்கம் 256]

ரகஸ்ய நூல்கள்

102. தமிழ்நாட்டு வைணவத்திற்கு ரகஸ்யம் என்ற வகையைச் சேர்ந்த நூல்கள் நடுநாயகமாக இருந்து வருகின்றன. பிறருடைய காதில் படாமல் கேட்கப்படவேண்டியதாக இருப்பதால் ரகஸ்யம் என்று சொல்லப்படுகிறது. இங்கு சித்

(ஆன்மா) சுசித் (இயற்கை உலகம்) ஈச்வரன் (நாராயணன்) என்று மூன்று தத்வங்களும் விளக்கப் படுகின்றன. வடமொழி நூல்களில் ஆங்காங்கு காணப்படும் கருத்துக்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளன. சில ரகஸ்யங்கள் திருவஷ்டாக்ஷரம் த்வயம்-சரமச்லோகம் என்ற மந்திரங்களுக்கு உரை நூலாக அமைந்துள்ளன. இங்கு வைணவக் கருத்துக்கள் மந்திரங்களில் ஏற்றிட்டுக்காண்பிக்கப் படுகின்றன. பெரிய வாச்சான் பிள்ளை, லோகாசார்யர் வேதாந்த தேசிகர் இவர்கள் இந்த நூல்களை எழுதியுள்ளார்கள். ......ரகஸ்யங்களுள் வேதாந்த தேசிகரின் ரகஸ்யத்ரய ஸாரம் மிகப் பெரியது. ஸ்ரீவசந பூஷணம் வைணவத்திற்கடிப்படையான சில கருத்துக்களை விளக்குகிறது. ஆசார்ய ஹ்ருதயம் ஆழ்வாரின் பாடல்களின் கருத்தை விளக்க ஏற்பட்டது. லோகாசார்யரின தம்பியான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் எழுதியது. திருவாய்மொழிக்குப் பல இடங்களுக்கு ஸ்வாபதேசப் பொருள் சொல்லுவது. ஆனால் புரட்சிகரமான வைணவத்தின் கருத்தை இங்கு நாம் பார்க்கிறோம். வேதத்தின் இடத்தில் திராவிட வேதத்தையும், ரிஷிகள இடத்தில் ஆழ்வார்களையும், வர்ணாச்ரமத்தினிடத்தில் ஜாதிக்கலப்பிலா வைஷ்ணவத்வத்தையும் அளித்து வைணவத்தை உருவாக்கிய பெருமை இந்நூலுக்கு உண்டு. வைதிக மதத்தின் பல அடிப்படை கொள்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த நூல் இது. [பக்கம் 257, 258]

வைணவமும் சைவமும்

103. ஆலயங்களில் நேருக்கு நேராக சம்பந்தப்பட்டுள்ள காரியங்களில் வைணவ சம்பிரதாயத்திற்குத் தனியாக ஒரு இடமும் கிடையாது. வைணவ சம்பிரதாயத்தோடு கலந்த பாராயணம், சாத்துமுறை, கோஷ்டி என்பவை பூஜையோடு சம்பந்தப்பட்டவையல்ல. .....பாராயணம் முதலியவை வெளியார் செய்யும் அவர்களின் தொழில். பூஜகர்களுக்கும், பூஜைக்கும் இங்கு ஸம்பந்தமில்லை கிடையாது. வைணவக் கருத்து ஒரு கட்டுப்பாடான நிலையில் படித்த பிராம்மணர்களிடையில் நானூறு வருடங்களாக உருவாகி வளர்ந்துவிட்டது. அது போல் சைவம் வளரவே இல்லை. நாட்டு அரசர்களின் அதிகாரம் மறைந்த பிறகு அதிகாரி யார் என்று புரியாமல் இருந்த காலத்தில் வைணவம் கோவிலில் புகுந்துவிட்டது.

[பக்கம் 260]

104. ஸ்ரீரங்கத்தின் 'கோயிலொழுகு' என்ற நூலும், திருப்பதியின் 'வெங்கடாசல இதிகாசமாலா' என்ற நூலும் ராமாநுஜரையும் ஆலயங்களையும் சம்பந்தப்படுத்தப் பல கதைகளை எழுதியுள்ளன. ராமாநுஜரே ஆலய வழிபாட்டை உருவாக்கினார் என்று கூறுகின்றன. இவைகளுடைய வரலாற்று முக்கியத்துவம் ஒரு புறமிருக்க இவைகளில் காணாத பல நிகழ்ச்சிகளையும் இன்று நாம் பார்க்கிறோம். [பக்கம் 261]

105. எம்பெருமானை விளக்கும் காலத்தில் ஸ்வரூப, ரூப, குண, விபூதி, ஐசுவர்ய என்று ஆசாரியர்கள் சொல்லுகிறார்கள். ஸ்வரூபம் என்பது பகவானுடைய வடிவத்தைக்குறிக்கும். குணம் என்பது பகவானுடைய இயற்கையைக் குறிக்கும். ரூபம் என்பது நல்ல குணங்களைக் குறிக்கும். விபூதி என்பது அவனுடைய மாண்பைக் குறிக்கும். ஐசுவர்யம் என்பது அவனுடைய செல்வத்தைக் குறிக்கும். [பக்கம் 275]

106. இந்த அவதாரங்கள் ஐந்து விதமானவை. இவை பர, வ்யூக, விபவ, ஹார்த்த அர்ச்சை என்பன. [பக்கம் 276]

107. அவருடைய கட்டளையை மீறுபவர்களிடத்தும் கருணையைக் காண்பிப்பது ஒப்புக்கொள்ளக் கூடியதேயில்லை. தண்டனை கொடுப்பதும் தயையின் விளைவாக ஏற்பட்டது என்றுதான் ராமாநுஜர் கூறுகிறார். ஆனால் பின் வந்துள்ள ஆசாரியர்கள் பகவானை அண்டினவர்கள் தப்புக்களைச் செய்தாலும் தண்டிக்கமாட்டான் என்று கூறுகிறார்கள்....வாசுதேவனுக்கு தனித்த நிலை கிடையாது என்று வைத்துக்கொண்டு மற்ற வ்யூகங்கள் மட்டும் உண்டென்று சொல்லுவார்கள். [பக்கம் 278, 279]

108. பகவதநுபவத்தை இரண்டாம் தரமாக்கி தன்னுடைய பரிசுத்த ஸ்வரூபத்தை பகவானுடைய தொடர்போடு அநுபவிப்பது கைவல்யம். இதை அபேக்ஷிப்பவர்களுக்கு இதுவும் ஸ்ரீ வைகுண்டத்தில் கிடைக்கும். [பக்கம் 292]

109. மனிதப் பண்பாட்டைப் பின்பற்றி ஸ்ரீ வைகுண்ட வாழ்க்கை அமைந்திருப்பதால் பகவதநுபவத்தில் போட்டியிட்டு பிணங்கிப் பேசுவது பகவானுக்கு எப்பொழுது என்ன ஆபத்து வந்து விடுமோ என்று காரணமில்லாமல் பயப்படுகிறது

போன்றவைகளும் கற்பிக்கப்படுகிறன. உண்மையில், இது மிகைப்படுத்திப் பேசுவதே. ஸ்ரீவைகுண்டத்தில் அவனிடம் கோபம், பயம் இவைகளுக்கு இடமேது? [பக்கம் 293]

110. ரிக் வேதக்காலத்திற்குப் பிறகு தெய்வங்களை வருணித்துப் பாடும் பாடல்கள் தமிழிலுள்ள பரிபாடல்களே. இப் பரிபாடல்களே ஆழ்வார்களுக்குத் தெய்வத்தைப் பற்றிப் பாட வழிவகுத்துக் கொடுத்தன. ......**சடகோபர் பொதுநோக்கு:-** நம்மாழ்வார் திருவாய்மொழியின் முதல் இரண்டு பதிகங்களில் தம்முடைய அடிப்படையான கருத்துக்களை வெளிப் படுத்தி, மும்மூர்த்திகளும் சமம் என்ற கருத்தைத் திருவாய் மொழியில் ஆங்காங்குப் புலப்படுத்தி வேதாந்தக் கருத்துக்களுக் கும் சமய சமரசக் கருத்துக்களுக்கும் இடையிடையே இடம் அளித்து, பகவானையே பரம்பொருளாகக் கொள்பவர் ஆனாலும் மற்ற தேவதைகளையும் மறக்காமல் புகழ்ந்து பேசி 'அரியை அயனை அரனை அலற்றி அவாவற்று வீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்' என்ற நிலையில் திருவாய்மொழியை முடிக்கும் திறன் இவருடைய பரந்த மனப்பான்மையைத் தெளிவாக எடுத்துரைக்கிறது ......நாராயணனின் ஒரு கூறுகச் சிவபெரு மான் உள்ளான் என்று குறிப்பிடும் நம்மாழ்வாரின் தெய்வக் கருத்தைக் கண்டுபிடிப்பதில் பிற்காலத்தவரான திருவாய்மொழி உரையாசிரியர்கள் மிகுந்த சிக்கலுக்கு உள்ளாகின்றனர்.

[பக்கம் 298, 299, 300]

குரு பரம்பரையும், வரலாறும்

111. குரு பரம்பரையில் கூறப்படும் ஆழ்வார்களின் காலம், வரலாற்றுணர்ச்சி கொண்ட இக்காலத்தார் உள்ளத் துக்குச் சற்றும் ஏலாது. காலத்தால் முற்பட்டவர்கள் தாம் பெரியோர்களாய் இருப்பர் என்பதும் நேரிய கருத்தன்று. எந்தக் காலத்தில் தோன்றினாலும் சான்றோர் சான்றோர்களே. அப்படி நோக்குமிடத்து, ஆழ்வார்கள் பாசுரங்களில் காணப் படும் அரசர்கள் பெயரைக் கொண்டு அவர்கள் காலம் கி. பி. 5 முதல் 9 ஆம் நூற்றாண்டுக்கு உட்பட்டது என்று வரலாற்றறி ஞர் கூறும் முடிவே ஏற்கத் தக்கது. [பக்கம் 303]

வியாக்யானங்கள்

112. ஆழ்வார்களுடைய பாடல்களுக்குப் பிற்காலத்தில் உரை வரைந்த பேரறிஞர்கள் தம்காலத்து வைணவக் கருத்

துக்களுக்கெல்லாம் அப்பாடல்களில் இடம் காட்டவேண்டும் என்ற எண்ணத்தால் பல வடமொழி நூற்செய்திகளையும் ஆழ்வார்கள் பாடல்களின் கருத்துக்களாக வலிய அமைத்து, உரை செய்துள்ளனர். தமிழ் மொழி இலக்கணம், நிகண்டு, மொழி இலக்கியமரபு இவைகளைக்கொண்டே ஆழ்வார்களின் பாடல்களுக்கு விளக்கம் கூறவேண்டி இருக்க இதனை விடுத்து வடமொழி வான்மீகி ராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்கம் கூறுவதின் காரணம் புரியவில்லை. இவற்றைத் திவ்வியபிரபந்த உரை என்பதைவிட வைணவ சம்பிரதாயத்தை விரித்துக் கூறும் நூல் என்று கூறுவதே மிகவும் பொருத்தமானது. *[பக்கம் 304]*

113, பகவான் ஆலயங்களில் பிம்பங்களாக இருந்து அருள் செய்கின்றான். திருமகள், மண்மகள், ஆயர்மடமகள் மூவரும் அவனுக்குத் தேவிகள் என்று குறிப்பிடும் ஆழ்வார்கள் தத்துவ ஹித புருஷார்த்தங்களைத் தங்கள் கருத்தில் பட்டவாறு சுதந்திரமாக பேசுகிறார்கள். *[பக்கம் 304]*

114. இவற்றுள் திருவாய்மொழிக்கு மாத்திரம் ஆறாயிரப் படி முதல் முப்பத்தாறாயிரப்படிவரை பல வியாக்கியானங்கள் உள்ளன. ஏனைய பாசுரங்களுக்குப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் மாத்திரம் உள்ளது. *[பக்கம் 305]*

(தென்கலை வடகலை நாமங்கள்)

115. இந்தக்குறி சம்பந்தமாக கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்காது போனாலும் சமீபகாலத்தில் ஸ்ரீரங்கம் ரங்கநாதன் மூலபிம்பத்திற்கு ஏற்பட்ட விபத்தின்போது பிம்பத்தின் நிஜ உருவைப் பார்க்கும் காலத்தில் ஒர் உண்மை வெளியாயிற்று. ரங்கநாத பிம்பத்தின் முகத்தில் 'தீபசிகை' விளக்கின் ஒளியின் உரு போன்ற அடையாளம் நெற்றியில் பதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவரலாயிற்று. இந்ததகவலை அப்போது நிர்வாக அதிகாரியாக இருந்த கே. கே. மேனன் அவர்களே வெளியிட்டார். இப்பொழுது பார்க்கப் பட்டுள்ள அடையாளத்துடனேயே எழுநூறு வருடங்களுக்கு முன்பும் ரங்கநாதன் இருந்திருக்கலாம் என்று எண்ண இடம் இல்லை என்று ஏற்படுகிறது. ஸ்ரீ வேதாந்த தேசிகர் வைணவ ஒழுக்கத்தை விளக்கி ஸச்சரிதராக்ஷை என்ற ஒருநூலை எழுதியுள்ளார். அந்தநூலில் முதல் பாகம் நெற்றியில் குறியிடுவதைப் பற்றி

விசாரம் செய்ய ஏற்பட்டது. அங்கு வைணவக் கோயில் பிம்பங்களின் நெற்றியில் தீபசிகை போன்ற அடையாளம் தான் இருந்து வந்திருக்கிறது என் று தெளிவாகக்கூறுகிருர். மேலும் பாரதநாட்டில் மற்ற இடங்களில் இருந்துவரும் வைண வர்கள் ஒவ்வொரு உருவம் உள்ள அடையாளத்தைப் போட்டுக் கொள்ளுவதால் இந்தக்குறி எப்படி வேண்டுமாலுைம் இருக்க லாம் என்பது தெரிகிறது. தமிழ் நாட்டு வைணவர்கள் இட்டுக் கொள்ளும் குறிக்குத் தமிழ் நாட்டு வைணவத்தோடு தான் தொடர்பு இருக்கிறது. என்பது வெளியாகிறது, தங்கள் நூலில் இருவைணவ மரபைச் சேர்ந்த ஆச்சாரியர்களும் இதைப்பற்றிச் சர்ச்சை செய்யாததனுல் அவர்கள் காலத்தில் நெற்றிக்குக் குறியிட்டுக் கொள்ளுவதில் கருத்து வேற்றுமை இல்லை என்பது ஏற்படுகிறது. ......வேதாந்த தேசிகர் ஸச்சித் திரஜை்ஷயில் 'சாம்பலைக்' கொண்டு நெற்றிக்குறி இடக்கூடாது என்று கூறுவதிலேயே புணேந்து விளக்கம் கூறுகிருர். "ஊர்த்துவபுண்ட்ரம்" என்ற குறிதான் மோட்சத்தைக் கொடுக் கும் என்றும் கூறுகிருர், முடிவாக பகவானுடைய திருவடி போல் நெற்றிக்குறி அமைய வேண்டும் என்ற கருத்தை வற் புறுத்துகிருர். பகவானுடைய பாதம் போலுள்ள குறியிலும் இடைவெளி வேண்டும் என்றும் கூறுகிருர். குறிக்கு அடை யாளத்திற்காக பகவானுடைய பாதம் சொல்லப்படுவதால் இரண்டு பாதங்கள் என்று பொருள் கொள்ள இடமில்லை. இதைப்பார்த்தால் இப்பொழுது இட்டுக்கொள்வது போலப் பெரிய இடைவெளிக்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை. மகாலெக்ஷ்மியை அர்ச்சனை செய்து அவருடைய பிரசாதமாகக் கிடைத்ததை நடுவில் வைத்துக்கொள்ளவேண்டும் என்பது ஏற்படுகிறது. அவருடைய நூல்களிலிருந்து கிடைக்கும் மற் ெருரு கருத்தும் நம்முடைய கவனத்தை ஈர்க்கிறது. ஆழ் வார்களின் பாடல்களில் சாம்பலால் குறியிட்டுக் கொள்வது தான் சொல்லப்பட்டிருக்கிறது என்று வேதாந்த தேசிகர் காலத்தில் ஒரு கருத்து இருந்து வந்திருக்கிறது என்பது தெரிகிறது. இந்த ஆட்சேபத்திற்குப் பதில் அளிக்க மூன்வரும் காலத்தில் வேதாந்த தேசிகர் கூறுவது கவனிக்கத்தக்கது. ஆழ்வார்களின் பாடல்களுக்கு திருநீர் என்ற சொல் இருந்தா லும் வடமொழி நூல்களில் காணப்படும் வசனங்களையும் அவைகளின் மரபுகளையும் கொண்டே பொருள் கூறவேண்டும்.

மொழி தமிழாக இருந்தாலும் வடமொழி மரபில் இது வளர்ந்திருப்பதனுல் அப்படியேதான் பொருள் கூறவேண்டும் என்கிருர். 'நீறு' என்ற தமிழ்ச்சொல்லிற்கு வடமொழி நூல்களின் மரபைக்கொண்டே விளக்கம் கூறவேண்டும் என்று நினைக்கிருர். ஊர்த்துவ புண்ட்ரம் என்ற சொல் மேல் நோக்கியுள்ள தாமரைப்பூவின் இதழைக் கருத்தில் கொண்டு ஏற்பட்ட பெயர். இதனுல் குறியும் அவ்விதம் இருக்கலாம் என்று நினைக்க இடம் உண்டு. ஆகவே நெற்றியில் குறியிடுவது என்பது பல சிந்தனையாளர்களின் கருத்தில் உருவாகிக் காலப் போக்கில் பலவித மாறுதல்களை அடைந்து இன்று இவ்விதம் இருந்து வருகிறது. ஆதலின் இந்நெற்றிக் குறியின் குறிக்கோள பற்றி சர்ச்சையில் ஈடுபடுவது பயனில் செயலாகும்.

[பக்கம் 307, 308, 309, 310, 311]

வைணவ தீக்ஷை

116. வைணவ தீக்ஷையில் மிகவும் எளிதானது பஞ்ச சம்ஸ்காரம். இதை இரண்டு சம்பிரதாயத்தின் ஆசாரிய புருஷர்கள் இன்றும் செய்து வருகிருர்கள், ஆனுல் பெரியாழ்வார் திருப்பல்லாண்டில் இது ஆலய நெருப்பிலேயே செய்யப்படுகிறது என்று குறிப்பிடுகிருர். பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச் சக்கரத்தின் கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று குடியாட்சி செய்கின்ருேம். இதைக்கொண்டு பார்த்தால் கோயில்களிலேயே பூஜகர்களே கோயில் பொறியால் பஞ்ச சம்ஸ்காரங்கள் செய்து வந்தனர் என்பது தெரிகிறது.

[பக்கம் 313]

117. பாஞ்சராத்ர ஆகமம் வாசுதேவன் என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்ட துவாதசாக்ஷரத்தை வேதத்திற்கு போட்டியாக ஒப்புக்கொள்ளுகிறது. (துவதசாக்ஷர வித்யைவ தேஷாம் வித்யா நசத்ரயி) ஆலயங்களில் இந்த வழக்கமே பின் பற்றப்பட்டு வருகின்றது. ஆனுல் வைணவ ஆசாரியர்கள் வாசுதேவன் என்ற சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுக்காதது பட்டுமில்லை. அந்த மந்திரத்தையும் தங்களுக்கு வேண்டாம் என்று ஒதுக்கி விட்டார்கள். இதனுல் பாஞ்சராத்ர ஆகமமும் வைணவ சம்பிரதாயமும் ஒத்துப்போக இடமில்லை என்று தெளிவாகிறது. ஆழ்வார்களும் ஆங்காங்கு நாராயணன் என்ற சொல்லுக்கே முக்கியத்துவம் கொடுத்து எட்டெழுத்து என்று அதன் மந்த்ரத்தையும் குறிப்பிடுகிருர்கள். நாராயணன்

என்ற சொல் திடீரென்று எப்படி முக்கியத்துவத்தை பெற்றது என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம். [பக்கம் 318, 319,]

கடவுள் இலக்கணம்

118. இந்த நிலையில் இதற்கு பெயர் உருவம் ஒன்று மில்லை. அதனாலேயே இந்த அடிப்படையில் உள்ள தத்துவத்தை விஷ்ணு என்று வைணவர்கள் கூறுகிறார்கள். சிவபெருமான் என்று சைவர்கள் கூறுகிறார்கள். அம்பாள் என்று சாக்தர்கள் கூறுகிறார்கள். முத்தொழில்களை ஒருவரிடமே வைக்கக்கூடாது என்ற கருத்து புராணங்களில் வளரவே முத்தொழில்களுக்கும் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற மும்மூர்த்திகள் சொல்லப்பட்டுள்ளார்கள். ஆனால் மும்மூர்த்திகளிடையில் உள்ள விஷ்ணு, சிவன் இருவர்களை முழுமுதற் கடவுளாக வைணவர்களும், சைவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள் அவர்கள். மும்மூர்த்திகளுக்கிடையில் உள்ள சிவ விஷ்ணு தத்துவம் குறிப்பிட்ட காரியத்திற்காக ஏற்பட்டிருப்பதால் இவர்கள் முழுமுதற்கடவுள் இல்லை என்று சொல்லி இவர்களுக்குமேல் ஒரு தத்துவத்தைச் சொல்லி சைவர்கள் அவரையே சிவபெருமான் என்றும் வைணவர்கள் அவரையே விஷ்ணு என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவரே முழுமுதற்கடவுள். அவர் மும்மூர்த்திகளுக்கிடையில் ஒரு காரியத்தைச் செய்ய இருந்து வருகிறார்கள் என்று கூறுகிறார்கள். [பக்கம் 321 322]

கீதைச் செய்தி

119. கீதையில் பகவான், யார் எந்தப்பெயருள்ள தெய்வத்தை உபாசித்தாலும் தான் எங்குமிருப்பதால் தன்னையே தான் அவர்கள் உபாசிப்பதாக கொள்ளுகிறேன் என்று கூறுகிறார். இதுவும் ஒருவழியில் ஒரே தெய்வம் என்ற கொள்கையுடன் நெருங்கி நிற்கிறது. ஆனால் இங்கு பகவான் தன்னுடைய பெயரை குறிப்பிடாமல் இருப்பது கவனிக்கத்தக்கது. [பக்கம் 323]

விஷ்ணு சகஸ்ரநாமம்

120. இங்குள்ள சொற்கள் சகஸ்ரநாமம் என்ற நூலில் முதல் வேற்றுமையிலேயே அமைந்திருக்கின்றன. பிற்காலத்தவர்கள் இதை அர்ச்சனைக்கு பயன்படுத்த நம, என்ற சொல்லையும் சேர்த்து சொற்களை நான்காவது வேற்றுமையோடு மாற்றிவிட்டார்கள். அர்ச்சனைக்காக சகஸ்ரநாமம் ஏற்படவில்லை. அனுபவத்திற்கும் தியானத்திற்கும் தான் ஏற்பட்டது. [பக்கம் 324]

அக்நிஹோத்ரி நூலின் முக்கிய பகுதிகள் முடிவுற்றன.

ஸ்ரீதர்ஶனம் ஆசிரியரின் வேண்டுகோள்

ஆரியர்களே! நற்றமிழர்களே! நடுநிலைநிற்கும் ஆராய்ச்சியில் வல்ல நல்லோர்களே! பத்திரிகையாளர்களே! ஸ்ரீ வைஷ்ணவோத்தமர்களே! இதுவரையில் அச்சிடப்பட்டுள்ள பாராக்களில் உள்ள விஷயங்களை நடுநிலை நின்று பலதடவை நன்றாக வாசித்துப் பாருங்கள். பாரதத்தில் ஆங்கில அரசாட்சி ஏற்பட்டபின் நமது வைதிகமதக் கொள்கைகளையும் பண்பாட்டையும் அடியோடு அழிக்கப் பல முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. அவற்றில் முக்கியமானது — நமது பண்பாட்டின் அடிப்படையையும். மதக்கொள்கைகளின் சீர்மையையும் அறியாதவர்களும், அழிக்க விரும்பியவர்களுமான மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்களும். அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்கின்றவர்களாய். ஆங்கில—மதச்சார்பற்ற — மதவிரோத அரசாங்கங்களிடம் க்யாதிலாப பூஜைகளைப் பெற விரும்பியவர்களான நம்மவர்களும், நமது மதத்தை அழிக்க விரும்பிய கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும், திராவிடக்கழகக்காரர்களும். அத்வைதிகளும். சைவர்களும் ஒன்றோடொன்று முரண்பட்ட பல ஆராய்ச்சிகளைச் செய்யத்தொடங்கி வளர்த்து வருவதேயாகும். அவ்வாராய்ச்சிகளைப் படித்துவிட்டு, பரம வைதிகமதமான நமது வைஷ்ணவ மதத்திற்கு அடிப்படையான ஶ்ருதிஸ்ம்ருதிஇதிஹாஸ புராணங்களையும். ஸ்ரீவைஷ்ணவாகமங்களையும் ஆழ்வார்களின் அருளிச்செயல்களையும், ஆசார்யர்களின் திவ்யஸூக்திகளையும் சரியாகப்படிக்காமல் தன் நெஞ்சில் தோற்றினதையெல்லாம் எழுதிக்குவித்திருக்கும் சுவடியே 'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்னும் இப்புத்தகம் என்பதை ஒருதரம் படிக்கும்போதே எவரும் எளிதில் உணர்ந்து கொள்ளலாம். இந்நூலின் முக்கியமான பகுதிகளான கீழே அச்சிட்டிருக்கும் 120 பாராக்களில் உள்ள விஷயங்களும் நமது ஶாஸ்த்ரங்களையும். ஆழ்வார்கள் ஆசார்யர்களுடைய திவ்யஸூக்திகளையும் சரியாகப்படிக்கா

மல், நமது மதவிரோதிகளின் தூண்டுதலினாலும், க்யாதி லாபபூஜைகளில் விருப்பத்தாலும் எழுதப்பெற்றவை என்பதைத் தக்க ஆதாரங்களைக் காட்டி நிரூபிக்கும் கட்டுரைகளையும் நூல்களையும் நீங்கள் எல்லோரும் எழுதவேண்டும். தென்கலை வடகலை முதலான வாசியற ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்திலுள்ள அறிவாளிகள் அனைவரும் இந்நூலை ஒருமுகமாகக் கண்டித்துத் தம் மதத்தைப் பாதுகாத்தனர் என்னும் பெருமை ஏற்படவேண்டும். நடுநிலை நிற்கும் சைவர்களும் அத்வைதிகளும் இந்நூலைக் கண்டிக்க முன்வருவார்களாகில், அவர்களிடமிருந்தும் கட்டுரைகளை வரவேற்கிறோம். ஸ்ரீகாஞ்சி மஹாவித்வான் ஸ்வாமி ஏற்கனவே இந்நூலை மறுத்து "போலிவைணவரின் பொய்யுரை மறுப்பு" என்னும் தலைப்பில் தமது (300வது) ஸ்ரீராமாநுஜனில் அத்புதமான க்ரந்தமொன்றை எழுதத்தொடங்கியுள்ளார். இதைப்போலவே ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா, ஸ்ரீரங்கநாத பாதுகா, புநர்வஸு ஆகிய ஸ்ரீவைஷ்ணவ பத்திரிகைகளும் இப்புத்தகத்தைக் கண்டிக்கும் நூல்களை எழுதி வெளியிடவேண்டும். அச்சிடுவதற்கு சக்தியுள்ளவர்கள் தனி நூல்களை எழுதி அச்சிட்டு இவற்றைக் கண்டிக்கலாம். அந்த சக்தியில்லாதவர்கள் செய்யவேண்டியதைச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறோம். இந்தப் பாராக்களின் கருத்துக்களை நாம் அடுத்த பாராவில் சுருக்கமாக வெளியிடுகிறோம். அக்கருத்துக்களை நடுநிலை நின்று ப்ரமாணயுக்திகளைக் காட்டிக் கண்டித்து ஸுதர்சனத்தில் எட்டுபக்கங்களுக்குள் வரும்படி எளிய தமிழ் நடையில் கட்டுரைகளை எழுதி 25—10—73க்குள் நமக்கு அனுப்பவேண்டும். மேலே உள்ள பாராக்களில் உள்ள சில விஷயங்களையும் கண்டிக்க விரும்புகிறவர்கள் இவற்றில் தாம் முக்கியமாகக் கண்டிக்கக்கருதும் பாராக்களை (10க்கு மேற்படாமல்) பொறுக்கி எடுத்து அவற்றின் இலக்கங்களைக் குறிப்பிட்டுத் தம் கண்டனங்களை எழுத வேண்டும். கட்டுரைகள் எட்டு

பக்கங்களுக்கு மேலே போகக்கூடாது என்பது முக்கியம். அவற்றைச் சுருக்கும் அதி$_4$காரம் நமக்கு உண்டு. பல துறையிலுள்ள அறிவாளிகள் அனைவருடைய கட்டுரைகளையும் வெளியிட்டபின் நமது க$_2$ண்ட$_3$னத்தை எழுதி அக்$_3$நிஹோத்ரியும் வைணவமும் என்னும் இந்நூலை நிறைவு படுத்தி இதை மலிவுவிலை வெளியீடாக வெளியிடுவோம்.

'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்னும் நூலின் சுருக்கம்

வேதம், ஸ்ம்ருதிகள், இதிஹாஸபுராணங்கள், ஆகமங்கள், ஆழ்வார்களுடைய பிரபந்தங்கள், ஆசாரியர்களுடைய நூல்கள் ஆகிய எல்லா கிரந்தங்களும் ஒரே கருத்தை உடையவை என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் சொல்லுவது சரியல்ல. அவை ஒவ்வொன்றும் அந்தந்தக்கால சமூகசூழ்நிலைக்கேற்ப ஒவ்வொருகாலத்தில் தோன்றி, ஒவ்வொரு கருத்தைச் சொல்லுபவையாகும். வேதங்களில் பூர்வப$_4$ாக$_3$ங்கள் பல தெய்வக்கொள்கையையும், அந்த தெய்வங்களைக் குறித்த யாகங்களாகிற கர்மாநுஷ்டானங்களையும் சொல்லுகின்றவை. உத்தரப$_4$ாக$_3$மாகிற உபநிஷத்துக்கள் நிர்கு$_3$ண ப்$_3$ரஹ்மமாகிற ஒரு தெய்வக் கொள்கையையும், ஜ்ஞாநத்தினாலேயே மோக்ஷம் ஏற்படும் என்னும் கருத்தையும் கூறுகின்றன. வேதத்தில் ஸூர்யனே விஷ்ணு எனப்படுகிறான். ஸூர்யனைத் தவிர விஷ்ணு என்று ஒரு தனி தெய்வம் கிடையாது. வேதகாலத்திற்குப் பின்தோன்றியதே வைஷ்ணவ மதம். இதிஹாஸபுராணங்கள், ஆகமங்கள், ஆழ்வார்கள் ஆசார்யர்களால் அது படிப்படியாக வளர்க்கப்பட்டுவிட்டது. பராசரர் விஷ்ணு புராணத்தில் விஷ்ணு என்னும் தனி தெய்வத்தைக் கற்பித்துவிட்டார். ஆழ்வார்களும், ஆசார்யர்களும் விஷ்ணுவுக்குப் பத்னிகள், பரிவாரம் முதலான பல விஷயங்களைக் கற்பித்துவிட்டார்கள். வைஷ்ணவாகமங்கள் உருவ வழிபாட்டை முக்கியமாகக் கொண்டவையல்ல. அறிவில்லாத

வர்களுக்கே அவ்வழிபாட்டைக் கூறுகின்றன. ஆழ்வார்கள் ஞானவழி அரிதாகையாலே பக்தியினுலேயே மோக்ஷம் ஏற்படும் என்ருர்கள். இவர்கள் கூறும் பக்தி உபநிஷத்தில் கூறப்பட்ட உபாஸனமல்ல. இவர்களும் ராமாநுஜரும் ப்ரபத்தியைச் சொல்லவில்லை. ராமாநுஜர் கைங்கர்யத்தைப் பற்றியும் சொல்லவில்லே. கத்₃யத்ரயம் ராமாநுஜருடைய நூலன்று. பிற்பட்ட ஆசாரியர்கள் தம் கால மக்கள் பக்தியால் மோக்ஷமடைவதும் இயலாது என்று கருதி—ப்ரபத்தியையும், பகவானுடைய நிர்ஹேதுககிருபையையும், ஆசாரியனையும் மோக்ஷோபாயமாகச் சொல்லி, கைங்கர்யத்தைப் புருஷார்த்தமாகக்கூறி வைணவத்தை வளர்த்து விட்டார்கள். பகவானுக்குக் கோபம் உள்ளதாகக் கற்பித்து விட்டார்கள். ஸ்ரீதேவிக்கு சாஸ்திரங்களும் ஆழ்வார்களும்கூருத புருஷகாரத்வத்தையும் இவர்களே கற்பித்துவிட்டார்கள். பரமபத₃த்தில் அஸ்த₂ாநேப₄யம் முதலானவைகளையும் கற்பித்துவிட்டார்கள்; பூமி நீளே முதலான பல பத்னிகளையும் விஷ்ணுவுக்குக் கற்பித்து விட்டார்கள்.

'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்னும் நூலின் சுருக்கம் முற்றிற்று.

'ஸுத₃ர்சனம்' ஆசிரியரின் பிரார்த்தனே

அக்₃நிஹோத்ரி வைஷ்ணவ மதத்தை அடியோடு அழிக்கக் கருதி எழுதியிருக்கும் இக்கருத்துக்களே ஸ்ரீவைஷ்ணவவுலகிற்கு அவர் விடுத்திருக்கும் சவாலாகக் கொண்டு, பண்டி₃தோத்தமர்கள் பதில் எழுதி அவருடைய நூலே அழித்தொழிப்பார்களாக.

ஸ்ரீவைஷ்ணவ தா₃ஸன்,

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,

16—7—73 'ஸுத₃ர்ஶனம்' ஆசிரியர்.

'ஸுதர்சனம்' ஆசிரியரின் குறிப்பு
(26—10—73)

சென்ற இதழில் நமது ஸுதர்சனத்தில் வெளிவந்த அக்னிஹோத்ரி நூலின் சுருக்கத்தைக் கண்ட ஸ்ரீவைஷ்ணவ வுலகம் முழுதும் கடல்கலங்கினாற்போலே கலங்கிநிற்கிறது. உண்மையான ஸ்ரீவைஷ்ணவர் அனைவரும் 'அஹோ' 'அஹோ' (ஐயோ ஐயோ) என்று வருத்தத்தின் எல்லையிலே நிற்கின்றனர். இப்படி நல்லார் அனைவரையும் 'அஹோ' என்னப் பண்ணிய அக்நிஹோத்ரியை, பொருத்தம் நோக்கிச் சுருக்கமாக இனி 'அஹோ' என்றே குறிப்போம். நிற்க.

நமது வேண்டுகோளின்படி தென்கலை, வடகலை, ப்ராஹ்மண அப்ராஹ்மண விபாகமற பற்பல ஸ்ரீவைஷ்ணவோத்தமர்கள் கட்டுரைகளை எழுதி அனுப்பியிருக்கிறார்கள். இன்னும் சில நாட்களில் எழுதி அனுப்புவதாகக் கூறியிருக்கிறார்கள் பலர். 21—10—73ல் நாம் நமது பௌத்ரியின் புண்யாஹவாசனத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்னை சென்றிருந்தபோது ஸ்ரீராமாநுஜமிஷன் சார்பில் சென்னை திருவல்லிக்கேணியில் தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெருவிலுள்ள தவநோத்ஸவபங்களாவில் இவருடைய அபத்த நூலைக்கண்டிப்பதற்காகவே மைக்முதலான வசதிகளுடன் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பிரபல பத்திரிகைகளில் இதுபற்றி அறிவிப்பும் செய்யப்பட்டிருந்தது. ஸ்ரீராமாநுஜமிஷன் தலைவரும். முன்னாள் சென்னை மேயருமான திரு. ராதாகிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அடியேனும். Dr. V. V. ராமாநுஜம், பேராசிரியர் ஜகந்நாதாசாரியர், K. K. A. வெங்கடாசாரியர், குமாரவாடி ராமாநுஜாசாரியர் முதலான பல அறிஞர்களும் கலந்து கொண்டு அஹோ நூலைப் பல ப்ரமாணங்களைக் காட்டிக் கண்டித்தனர். "அருகிலுள்ள ஓர் வீட்டில் ஒளிந்திருந்து பேச்சுக்களைக் கேட்டுவிட்டுச் சென்றார் அஹோ" என்றும் பலர் கூறினர். இதேபோல் கூட்டங்கள் சென்னையில் மற்றும் பலவிடங்களிலும். ஸ்ரீரங்கம் முதலிய பல ஸ்ரீவைஷ்ணவ க்ஷேத்திரங்களிலும், நடைபெறப்போவதாக அறிகிறோம். அஹோவிற்கு

உண்மையில் நேர்மை சிறிதளவாவது இருந்தால், இக் கூட்டங்களுக்கு நேரில் வந்து அறிஞர்களின் கண்டனங் களுக்கு பதில் உரைக்கவேண்டும். அல்லது தாம் செய்தது தவறு என்று உலகறிய மன்னிப்புக் கேட்கவேண்டும். ஆனல். இந்நேர்மையை அஹோவிடம் நாம் எதிர்பார்க்கமுடியாது. இதற்கு மாருகப் பல கபடநாடகங்களை ஆடிவருகிறுர் அஹோ என்பதையும் நாம் பல ஸ்ரீவைஷ்ணவ அறிஞர்களோடு வார்த்தையாடியதிலிருந்தும், பலருடைய கடிதங்களிலிருந் தும் அறிந்தோம். அபத்தமான தம் நூலைப் பலதேவஸ் தான நூல் நிலையங்களைக் கட்டாயப்படுத்தி வாங்கச் செய்து விட்டார் அஹோ. தமக்கு வேண்டிய ஸஜாதீயர்களைக் கொண்டு ஹிந்துவிலும், தினமணி சுடரிலும் ஒருதலைப் பட்சமாகத்தம்மை வானளாவப்புகழும் விமரிசனங்களையும் வெளியிடச் செய்துவிட்டார். ஸஜாதீயர்களான ஸ்ரீவைஷ்ணவ வித்வான்களிடம் நேரில் சென்று அவர்களை ப்ரணாமாதிகளால் உச்சிகுளிரச்செய்து, "என்னைக் காட்டிக் கொடுத்து விடாதீர்கள்; உங்களை த்ருப்திசெய்வதற்கு நான வைஷ்ணவத்தையும், ஆழ்வார்களையும் புகழ்ந்து நூல் ஒன்றையும் வெளியிட்டுவிடுகிறேன்" என்று கூறி, அத் தகைய சிறு சுவடியொன்றையும் அச்சிட்டுவருகிறுர். உண்மையான வைஷ்ணவர்கள் இவருடைய கபடநாடகங் களைக் கண்டு ஒருசிறிதும் ஏமாறமாட்டார்கள். பெருமாளையும், பிராட்டியையும், ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும், மிகவும் இழிவு படுத்தித்தாம் வெளியிட்டிருக்கும் நூலை வாபஸ் வாங்கிக்கொண்டு, தாம் செய்த அஸஹ்யாபசாரத்திற்கு உலகறிய மன்னிப்புக் கேட்டாலொழிய இவரை வைஷ்ணவ வுலகம் மன்னிக்காது. நிற்க. நம்மிடம் வந்திருக்கும் கட்டுரை களை இனி வரிசையாக வெளியிடுவோம். இவர் எந்த ப்ரமாணத்தையும் ஒப்புக் கொள்ளாமல், ஆராய்ச்சிப் போர்வையில் பரம அபத்தமாகவும், எவ்வித ஆதாரமும் காட்டாமலும் எழுதியிருக்கும் நூலைப் பற்பல தலை சிறந்த ஆராய்ச்சியாளர்களும், ஸ்ரீவைஷ்ணவ வித்வத்வரிஷ்டர் களும் ப்ரமாண யுக்திகளைக் காட்டிக்கண்டித்து இவருடைய நூலைத்தலையெடுக்க முடியாதபடி செய்திருப்பதை நல்லோர் கள் அனைவரும் கண்டு மகிழலாம் இனி.

வரலாற்றில் பிறந்த வைணவம் மறுப்புரைகள்

1. ஸ்ரீ. உ. வே. கி. பக்ஷிராஜய்யங்கார், அட்வகேட், திருநெல்வேலி.

முன்னுரை

இம்மறுப்புரை ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் என்ற பத்திரிகையில் 'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்ற இந்நூலின் பகுதிகளை அவற்றின் பக்கங்களோடு காட்டி வெளியிட்ட வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பெற்றுள்ளது. அப்பகுதிகள் மட்டுமே மறுக்கத்தக்கன என்பதில்லை. நூல் முழுதும் பார்த்தபின் இதன்மேலும் அவசியமானுல் விரிவான மறுப்புரை எழுதப்பெறும்.

பக்கம் 1, 2,—"உலகிலுள்ள மதங்கள் யாவுமே ஒருகாலத்தில் தோன்றி வளர்ந்து இன்றுள்ள நிலையை எய்தியுள்ளது" என்கிற அக்னிஹோத்ரி வேதவேதாந்தங்கள் எப்போது தோன்றின? எப்படி வளர்ந்தன? என்று காட்டாமல் மழுப்புவது மோசடியாகும். வேதங்கள் உபநிடதங்கள் ஆகியவைகளைப் பார்த்தால் பல சான்றோர்கள் தங்கள் அறிவில் உதயமானதைப் பல்வேறு காலங்களில் வெளியிட அவை வியாசரால் வகுத்துத் தொகுக்கப்பெற்றன எனத் தெரிகிறது. ஆசாரியர்கள் போன்ற வேதாந்திகள்வேதம் அபௌருஷேயம் என்கிருர்களே. அது எப்படி? வியாசர் தொகுப்பும் தமிழில் அகநானூறு, புறநானூறு போன்ற ஒரு தொகுப்பே என அக்னிஹோத்ரி ஒப்புக்கொள்கிருரா? இவருடைய ஆராய்ச்சிப்படி குசிகபுத்ரன் பிறந்து வெகுகாலத்திற்குப் பின்புதானே அவர்சரிதம் கூறும் வேதப்பகுதி வந்திருக்கவேண்டும்? தொகுப்பிலே ஒரு ரிஷி சொன்ன பகுதியை வைத்துக்கொண்டு அவர் சொன்னபின்புதான் அந்த ஶ்ருதி ஏற்பட்டிருக்கவேண்டும் என்ற வாதம் தருக்கத்திற்கு ஒவ்வாதது.

பக்கம் 5— "வைணவம் வேதகாலத்திற்கு...புலனுகின்றது" என்றது மக்கள் நம்பிக்கைக்கும், வரலாற்றுக்கும் புறம்பான கற்பனையே.

பக்கம் 8— "வேதம் ஸ்ம்ருதிகள்...அறுதியிட்டன" என்று கூறுவதால் வேதம், ஸ்ம்ருதிகள் பல பல காலங்களில் தோன்றின என்று ஒப்புக்கொள்ளப்பட்டதாகின்றது. அறிவு வளர்ச்சிக்கே முடிவே இல்லாமையானும், பலர் கூறியது வேதம் எனக்கொள்ளப்படுகையால் பிற்காலத்தவர் அறிவில் உதயமானவையும் முன்னையவற்றைப்போல வேதமாகவும். அநாதியாகவும் கொள்ளத்தக்கன ஆகும்அல்லவா?

பக்கம் 9ல் இவர் கூறும் "இந்துமதம்" என்பது எந்த ரிஷி வாக்கியம்? எந்த வேதத்தில் விளக்கப்பட்டுள்ளது?

பக்கம் 10ல் "வைணவம் என்ற சொல்...கொள்கைகளாம்" என்று கூறுவது இவரது தவறுன கொள்கையாகும். பின்னர் வந்ததாக இவர் கூறும் கொள்கை வேதத்தில் சொல்லப்பட்ட கருத்தே என்று காட்ட அறிஞர்களுக்கு உரிமையில்லையா?

பக்கம் 15ல் "இராமானுசர்...கருதுகிருர்" என்று கூறுவதற்கு எவ்வித ஆதாரமும் காட்டப்படவில்லை. இது "பிரபந்நகாயத்ரியின்" வாசனையையே அறியாதவர் இவர் என்பதைக் காட்டுகிறது. பக்கம் 15ல் விஷ்ணு நாராயணபதங்களைப்பற்றிக் கூறுவது இவருக்கு உபனிஷத், இதிகாஸம் முதலிய சாஸ்திர பரிசயமே கிடையாது என்று காட்டுகிறது. "நாராயண பரம் ப்₃ரஹ்ம" முதலான அனைவரும் ஓதும் உபனிஷத் வாக்யங்களை இவர் அறியாரா? "ப₄வாந் நாராயணோ தே₃வ:" என்று ஸ்ரீராமாயணத்தில் பிரமன் எவனைத் துதித்தானே அவனையே "ஜஞ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந:" என்று ஆதி₃கவியான வான்மீகி முன்னலேயே சுட்டி "விஷ்ணு" "நாராயணன்" என்பவை ஒரே வியக்தியின் இருநாமங்கள் என்று காட்டும் ஸ்ரீ ராமாயணம் அக்னிஹோத்ரிக்குப் பிராமணம் இல்லை போலும்!

பக்கம் 18ல் கூறிய செய்திக்கு விடை பக்கம் 15க்கு அளித்ததிலேயே உளது. ஊன்றிநோக்குக.

பக்கம் 19, 20ல் "உயிர்வீடுடையான்" என்று உயிரையும் இறைவனையும் பேதப்படுத்தியும், "அந்நாள் நீதந்த ஆக்கையின் வழி உழல்வேன்" என்று ஜீவாத்மாவையும் பிரக்ருதியாலான சரீரத்தையும் வேறுபடுத்தியும் காட்டியுள்ளார் நம்மாழ்வார். இவை தத்துவத்ரயத்தை விளக்குபவை என்பதை, போமிடமெல்லாம் உமியும் இந்த₄னமும் (விறகும்) சுமந்து திரியும் காரியம் ஒன்றையே குறிக்கொண்ட அக்நிஹோத்ரி அறியார். "எண் பெருக்கந்நலத்து... வண்புகழ் நாரணன் திண்கழல்சேரே" என்ற குருகூர் சதுமறைப் புரோகிதன் சொல்லை அந்தோ அக்நிஹோத்ரி கண்ணல் கூடப் பார்த்ததில்லை. இப்படி இவரைப்போன்ற வியக்திகள் 20-ஆம் நூற்ருண்டில் தோன்றக்கூடும் என்பது கருதியே ஆதிசங்கரரும் நாராயணபாரம்யத்தைத் தமது பிரஸ்தானத்ரய பா₄ஷ்யத்திலும், ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமாத்யாய பாஷ்யத்திலும் கல்வெட்டாக்கியுள்ளார் என்பதை அறிவாராக.

பக்கம் 20, 21—'' ஸஹஸ்ரசீர்ஷா புருஷ: ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ'' என்ற புருஷஸூக்த ஶ்ருதிவாக்யங்கள் இராமாநுசருக்குப் பிற்பட்டுத்தான் தோன்றியவை என்பதுதான் அக்னிஹோத்ரியின் அபிப்ராயமா? '' தமிழ்நாட்டில் விக்கிரக வழிபாட்டுமுறை ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக வளர்ந்துகொண்டே இருக்கிறது'' என்கிறார். ஆயிரக்கணக்கான என்றால் பல ஆயிரம் ஆகுமே! இது இவர் பக்கம் 20ல் கூறிய கூற்றோடு நேரே முரண்படுகின்றது என்பதைக் கூட அறிந்திலர் பாவம்!

பக்கம் 46. 47— '' அரங்கம் என்பர் நான்முகத்தயன் பணிந்த கோயிலே '' என்ற திருமழிசைப்பிரான் வாக்கையும் அக்னிஹோத்ரி அறியவில்லை.

பக்கம் 75ல் '' திருவரங்கக் கோயிலோடு இராமானுசரை இணைப்பதற்கு வரலாறு சிறிதும் இடம் தரவில்லை '' என்ற அக்னிஹோத்ரியின் கூற்று ப்ரத்யக்ஷத்திற்கும் (காட்சியளவைக்கும்) வரலாற்றுக்கும் மாறுபட்டது. குரும்பரம்பரை, கோயிலொழுகு முதலானவை வரலாற்றுச் சான்றுநூல்களாக தமிழிலக்கிய வரலாற்றாசிரியர் ஏற்றுக்கொண்டுள்ளனர். அவைகளில் கூறும் செய்தி அக்னிஹோத்ரிக்கு வரலாற்றுச் சான்றுடன் கூடியதன்று போலும்! திருவரங்கத்தில் அன்று அவர் ஏற்படுத்திய நடைமுறைகளே இன்றும் திருவரங்கம் கோயிலிலும், இயன்றவரை பிற வைணவக் கோயில்களிலும் பின்பற்றப்பட்டு வருகின்றன என்பது கண்ணுடையார் அனைவரும் காண்பதே! '' ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம் '' என்று இருகலையார்களாலும் நிச்சலும் அநுஸந்திக்கப்பட்டு வருகின்றதே! அக்னிஹோத்ரி பிரம்மஸ்ரீயான பிறகு மறந்துவிட்டார் போலும்! ஒருவேளை ஒருக்காலும் கேட்டவரில்லையோ என்னவோ?

பக்கம் 97ல் '' தமிழ்நாட்டு வைணவத்திற்கும் ஆகமங்களையும், ஆகமஸம்பிரதாயங்களையும் நேரே பின்பற்றி வந்த ஆலயங்களுக்கும் நேரான தொடர்பு கிடையாது '' என்ற கூற்று உண்மைக்கு மாறானது. கோயில்களை மையமாகக்கொண்டே வைணவசமயம் தமிழ்நாட்டில் இயங்கி வந்ததே தவிர தனியாகத் தமிழ்நாட்டில் வைணவம் இயங்கியதாக வரலாற்றுச் சான்று கிடையாது.

பக்கம் 101, 102ல் '' பகவானே ஆகமங்களை உபதேசித்தான் என்ற கொள்கை பொதுவானது '' என்று அக்னிஹோத்ரியே கூறு

கிறர். அப்படியெனில் இரண்டு ஆகமங்களும் பகவானோடு ஒக்க புராதனமானவை என்று தானே தேறும். இவைகளில் ஒன்று முந்தியது, மற்றென்று பிந்தியது என்ற கூற்று பொருந்தாதது மட்டுமன்று விஷமத்தனமானதுமாகும். இவ்வாதம் வேதங்களையும் சாரும் என்பதை எரிவளர்ப்பார் உணர்ந்தாரா ?

பக்கம் 105ல் விக்கிரக வழிபாடு, ஆலயவழிபாடு ஆகியவை பாமரமக்களுக்காகத்தான் ஏற்பட்டவை என்று கூறும் அக்நிஹோத்ரி சமீபகாலம்வரை உச்சிமேல்வைத்துப் போற்றிவந்தவர்களும், விக்கிரக பூஜை, ஆலயவழிபாடு செய்துவந்தவர்களுமான நாதமுனி, யாமுநமுனி, ராமாநுசமுனி, நிகமாந்தமஹாகுரு முதலானவர்களும் இப்பொழுதும் தத்தம் மடங்களிலும் விக்கிரகவழிபாடும், திவ்யதேச மங்களாசாஸனம் மூலமாக ஆலயவழிபாடும் செய்துவரும்,அஹோபில, பரகால, ஸ்ரீமதாண்டவன் ஸன்னிதி, வானமாமலை ஜீயர் முதலானவர்களும் பாமரகோஷ்டியைச் சேர்ந்தவர்களே என்று கூறுகின்றாரா? இது என்ன கும்பகோணமா ?

பக்கம் 113ல் "வேதமந்திரங்கள் பலபெயருள்ள தெய்வங்களைச் சொல்வதாலும்" என்று கூறுவதாலும், பக்கம் 120, 121ல் "பலதேவதை...உதயமாகிறது" என்று கூறுவதாலும் அக்னிஹோத்ரியின் கொள்கைப்படி ஒவ்வொரு புருஷர்களும் தத்தம் கொள்கையை நிலைநாட்டத் தாங்களாகவே கற்பித்தவைகளே வேதமந்திரங்கள் என்று முடிவுகட்டவேண்டியுள்ளது. இதை அறிந்தேதான் அக்னிஹோத்ரி கூறினாரா ?

பக்கம் 134, 135ல் கல்பசூத்திரக்காரர் விக்கிரகவழிபாட்டைப் பற்றிக் கூறவில்லையென்பதினால் வேதப்பண்பாட்டில் விக்கிரகவழிபாடு கிடையாது என்று கூறும் வாதம் சிறுவர்களும் ஏற்கக்கூடியதன்று. இதிகாசபுராணங்கள் வேததர்மங்களை விளக்கவந்தவை தாமே. அவைகள் ஆலயவழிபாட்டையும், விக்கிரக வழிபாட்டையும் கூறினால் அது வேதசம்மதந்தானே. "ருக்மிணீ துர்க்கையை பூஜித்ததாக பாகவதம் தெரிவிக்கின்றது" என்று கூறிய அக்னிஹோத்திரி, அடுத்து "ஆலயவழிபாடு, விக்கிரகவழிபாடு இவை வேதம் ஸ்ம்ருதிகள் இதிஹாஸ புராணங்களுக்குப் பிறகு தெய்வவழிபாட்டில் வந்து கலக்கின்றன" என்று சொல்லுகிறார். இது முன்னுக்குப் பின் முரண்.

பககம் 139ல் கூறியது இவர் திவ்யப்ரபந்த வாசனை அற்றவர் என்பதைப் புலப்படுத்தும். "நோற்றநோன்பிலேன்" என்னும் பதிகத்தில் ஆழ்வார் "வானமாமலையே" என்று மூலவரையும், "தெய்வநாயகன்" என்று உத்ஸவரையும் மங்களாசாஸனம் செய்திருக்கிறாரே! மற்ற பலவிடங்களும் உண்டே!

பக்கம் 169, 170ல் "வேதாந்திகளுள் சிலர் 'பிரும்மம் ஒன்று தான் ஸத்யம். மற்றது கல்பிதம்' என்று சொல்லிவிட்டார்கள். இவர்களுக்குச் சிக்கல்கள் மிகக் குறைவு" என்கிறார். குறைவா? சிக்கல்கள் மிக அதிகமன்றோ. அவர் கற்பிக்கும் மாயை பிரம்மத்தையும் மயங்கச் செய்தது என்று அவர்கள் கூற்றாலே தெரிகிறது. அம்மாயை எங்கிருந்து உண்டாயிற்று? என்கிற வினாவிற்கு இன்னும் அந்த வேதாந்திகள் பதில் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி எத்தனை சிக்கல்கள்! பக்கம் 165, 166ல் தமது தோத்திரத்திலே ஸ்வாமிதேசிகன் ஸாதித்திருப்பதாகக் குறிப்பது ஸத்யவாதமா? குயுக்திவாதமா? என்பதை அக்னிஹோத்ரி முதலில் தெரிவிக்கவேண்டும். பக்கம் 168ல் "வேதாந்திகள் பிரும்மம் கடவுளாக முடியாது என்று நினைத்து கடவுள் தத்துவமே சிந்தனையின் கற்பனை என்று கூறி விடுகிறார்கள்" என்கிற அக்னிஹோத்ரி "நாராயணபரம் ப்ரம்ம தத்வம் நாராயண: பர:" என்பதுபோன்ற பல சுருதிகள் கூறுவது பிரமாணமல்ல என்று கூறுகின்றாரா?

பக்கம் 171, 172ல் 'தமிழ் நாட்டு வைணவப்போக்கு' என்னும் தலைப்பில் இவர் கூறுவது குறும்புத்தனமானது. அக்னிஹோத்ரி என்பதற்கு "ஸ்ரீவைஷ்ணவமதத்திற்கே தீயை வைப்பவர்" என்று கூடப் பொருளாக இருக்கலாம் போலத் தோன்றுகின்றது! ஆகமங்களும், வேதங்களும் இறைவனுகிய ஒரே இடத்தில் தோன்றி ஒன்றை ஒன்று சார்ந்ததுவே என்பது கற்றுத்துறைபோகிய வைணவரின் கொள்கை. தமிழகத்தில் "வேத அடிப்படை வைணவம்" "ஆகம அடிப்படை வைணவம்" என இரண்டு உள்ளதுபோல் கூறுவது பொருளற்றது. தமிழ் நாட்டு சமயவரலாற்றிற்கு மாறானது. தமிழ் மறைகளில் காணப்படும் தத்துவங்களும் ஆகமங்களிலும், வடமொழி வேதத்திலும் காணப்படுபவைகளும் யாவும் ஒன்றே, தமிழ் வைணவம், வடமொழி வைணவம் எனப் பிரிக்கப் பார்ப்பது தீ வளர்ப்பார் போன்ற ஸம்ஸ்க்ருத முரணர்களின் முயற்சியே. தமிழை ஒதுக்க முயன்று பின்னால் அது தவறு எனத் தெளிந்து தமிழுக்கும் ஸம்ஸ்க்ருதத்திற்கும் சம உரிமை அந்தஸ்தும் உண்டு என்று இவர்

கோஷ்டியாரும் தெளிந்துவரும் இக்காலத்தில் அவைஷ்ணவரும் ஸம்ஸ்க்ருத வெறியருமாகிய அக்னிஹோத்ரி தன் தீத்தொழிலைப் புதிய முறையில் தொடங்கியிருக்கிறார்.

பக்கம் 187–"ஆசாரியர்கள் .. ... தெரியவில்லை" என்று இவர் எழுதியிருப்பது "அடியேனுள்ளான்" என்ற ஆழ்வார் அருளிச்செய லின் பதப் பொருளைத்தெரிந்து ஒப்புக்கொள்ளாதவர் என்றும், தன்னையே பிரம்மம் என மயங்கும் அஹம்பாவக் கொள்கையை ஒப்புக்கொண்டவர் என்றும், பெரிய பிராட்டியார் தொடக்கமான நாதமுனி, யாமுநமுனி, ராமாநுசமுனி ஆகிய பரமாசார்யர்களையும், அவர்களது ஸ்ரீஸூக்திகளின் கருத்தையும் ஒப்புக்கொள்ளாதவர் என் றும் காட்டுகின்றது.

பக்கம் 191ல் "தெய்வம் உண்டு என்பதே யுக்திவாதம் தான். உண்மையில் தெய்வமில்லை" என்று பொருள்படக் கூறுவது இவர் நாத்தடித்த நாத்திகர் என்பதை விளக்குகின்றது.

பக்கம் 246ல் "பிராட்டி புருஷகாரம் என்பது நம்மாழ்வார் கருத்துக்கு எதிரானது" என்று பிரம்மஸ்ரீ கூறுகிறர். "மாரி மாருத தண்ணம்மலை ...... வேரிமாருத பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே" "மாயஞ்செய்யேல் என்னை ......திருவாணை நின்னாணைகண்டாய்" முதலிய அருளிச்செயல்களை இவரது நா உச்சரித்திருப்பதே கிடையாது என்பது தெளிவு. "நம்மாழ்வார் பிரபத்தியை நேரிடையாகச் சொல்ல வில்லை"என்பதற்கு மிகவும்அசட்டுத்துணிச்சல்வேண்டும்." "நம்பிரான் சரணே சரண்" முதலிய பல அருளிச்செயல்கள் பிரபத்தியை நேரிடை யாக விளக்குகின்றவே! இதை ப்ரம்மஸ்ரீ எங்ஙனே அறிவார்.!

பக்கம் 251—255-ல்-"இராமாநுசர் தம்முடைய நூல்களில்...... விளக்கவுமில்லை" என்று கூறி எம்பெருமானார் திவ்யப்பிரபந்தத்தைப் பிரமாணமாக ஒப்புக்கொள்ளாதது போல் பேசுகிறார். இதற்குக் காஞ்சி மஹாவித்வான் P. B. A. ஸ்வாமி மிகவிரிவாகவும், தெளிவாகவும் "த்ரமிடோபநிஷத் பிரபாவ ஸர்வஸ்வம்" என்னும் நூலில் ஏற்கனவே விடையிறுத்துள்ளார். தெளிவில்லா வடமொழி வேதம் ஒன்றுதான் பிரமாணம் என்று கூறும் கும்பல்களுக்கு பிரம்ம சூத்திரத்தின் உரை யில் தமிழ் வேதம் கூறிய தெளிபொருளை மட்டும் கூறி தமிழ் மறை யின் மேற்கோளைக் காட்டாது மறைத்தார் இராமானுசர். பொருளைச் சரியெனக்கொண்டனர் வடமொழி அறிஞர். இப்பொருளுக்குச்சான்று

களாகத்தமிழ் மறைகளைக் காட்டினர் பின்னர் வந்த ஆசாரியர்கள். இவ்வுண்மையை ''செய்யதமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித்தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே'' என்ற வேதாந்தவாசிரியர் வாக்கு பறையறைகின்றது. தெளிவிலாமறையையே இன்னும் பற்றி நிற்கும் பிரம்ம ஸ்ரீக்கு இது புரியாததில் வியப்பில்லை. உண்மைப் பொருள் தமிழ் மறையால் தான் தெளியப் பெற்றது என்பதை ஒப்புக் கொள்ள எரிவளர்ப்பாரின் வடமொழி வெறி குறுக்கிடுகிறது.

பக்கம் 257, 258–ல் ''ஆனால் புரட்சிகரமான ....உண்டு'' என்று, தான் தனது வேடத்தையும் தன்னையும் அறியாமல் உண்மையை ஒப்புக்கொண்டதற்கு நன்றி.

பக்கம் 260- ''நாட்டு அரசர்களின்......கோவிலில் புகுந்து விட்டது''-என்று சொல்வது தமிழ் நாட்டின் வரலாற்றில் சிறிதேனும் அறிவில்லாதவர் கூறும் கூற்றாகும். கோவில்களில் ஆழ்வார்களின் அருளிச்செயல்களை விண்ணப்பம் செய்ய முதலாம் குலோத்துங்கன் முதலான தமிழரசர்கள் ஏற்பாடு செய்ததை சாசனங்கள் கூறுகின்றன. கோ நெடுமாறன், அவனது மகன் முதலான பாண்டிய மன்னர் சிறந்த வைணவராகத் திகழ்ந்தனர் எனச்சாசனங்கள் பறைசாற்றுகின்றன. சேவை, சாத்துமுறை, கோஷ்டி முதலானவை பூஜையோடு ஸம்பந்தப்பட்டவையல்ல என்று சொல்வதற்கு ஆகம வழிபாட்டு முறையை நன்கு உணராததே காரணம். வைகானஸ ஆகம முறைப்படி பூஜை செய்யுங்கால் தீபாராதனையை அடுத்து வேத இதிஹாஸ புராண பிரபந்தகாதா முதலியவற்றைப் பெருமாள் திருச்செவிசாத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இது பஞ்சகாண்டவைகானஸ ஆராதனக்ரமம், ஐந்தாவது காண்டத்தில் சேவிக்கவேண்டியவை பற்றி வரும் பகுதியில் கூறப்பட்டுள்ளது. இதன் பின்புதான் பலி சாதிக்கப்படுகிறது. அதன் பின்புதான் பூஜை முடிகிறது. ''வைணவக் கருத்து......வளர்ந்துவிட்டது!'' என்று கூறுவது அபத்தம். பிராமணரல்லாதார் அனேகரிடையில் வைணவக்கருத்துக்கள் பிராமணர்களைக் காட்டிலும் வேரூன்றியிருந்ததாக ஆளவந்தார், இராமாநுசர் காலத்திலிருந்தே அறியப்படுகின்றது. திருக்கச்சி நம்பியும் மாறனேர் நம்பியும் சான்று.

பக்கம் 304-ஆழ்வார் பாடலில் பிறந்த வைணவக் கருத்துக்கள் பண்டைத் தமிழகத்தில் என்றுமே இருந்தவை, இந்தக் கொள்கைகளே தான் வடமொழி நூல்களிலும் கூறப்பட்டுள்ளன என்பதை அக்நி

ஹோத்ரி போன்ற ஸம்ஸ்க்ருத பூரணர்களுக்கும் உணர்த்தவேண்டி அவர்களுக்குப் பழக்கமான நூல்களிலிருந்தே மேற்கோள் காட்டினர் ஆசாரியர்கள். உபயவேதாந்தங்களும் ஒருகருத்துடையன என்பதே அவர்களுடைய கொள்கை. இவ்வளவுகாலம் சென்றும் ப்ரம்ம ஸ்ரீ தமிழ் மறையின் பெருமையை ஏற்கத்தயங்குகிறதே.

பக்கம் 307-311- ''நீறு'' என்பது நெருப்பால் பொடியாக்கப் படுவது. அது விபூதியைமட்டும் குறிப்பது அன்று. விபூதி மனித முயற்சியால் ஆக்கப்படுவது. திருமண் பூமியில் அந்தர்கதமான ஸ்ரீபகவானால் புடம் செய்யப்பட்டது. அதுதான் திருமண். ''நெற்றியுள் நின்றென்னையாளும் நிரைமலர்ப்பாதங்கள்சூடி'' என்ற பாசுரம் ஊர்த்வபுண்ட்ரம் பெருமாள் திருவடிகளின் வடிவில் தரிக்கப் படுவது என்பதைக்காட்டுகிறது. அவ்விருதிருவடிகட்கும் பீடமாக மூக்குத்தண்டில் ''இராமாநுசம்'' அணியப்பட்டுவருகின்றது. ஆழ்வாரைப் பிரபந்நஜனகூடஸ்தராகக் கொண்ட வைணவர் அனைவரும் தரித்துவந்த, தரிக்க வேண்டிய குறியீடு இதுவே என்பது சிற்றறிவுடையார்க்கும் தெளிவாகும்.

பக்கம் 313- சக்ரதாரணத்தைப் பற்றி திருப்பல்லாண்டுப்பாடலைக் காட்டி அதற்குச் சிறிது தமிழறிந்தாரும் பரிகசிக்கும் வண்ணம் ஒரு விளக்கம் கொடுத்திருக்கிருர் அக்னிஹோத்ரி. அங்கு ''கோயில்'' என்பது ''ஆழ்வான் மண்டலாகாரமான வாஸஸ்தானம்'' என்பர் பெரியவாச்சான் பிள்ளை. இது பெருமாள் கோயிலைச் சுட்டியதன்று. தனக்கும் தமிழ் தெரியாமல், வ்யாக்கியான சக்ரவர்த்தியின் உரையையும் காணுமல் தான்தோன்றியாகக் கூறிய பிதற்றலே இது.

பக்கம் 323- கீதை கிருஷ்ணன் திருவாய் மலர்ந்தருளியது. கிருஷ்ணன் பகவான் என்று அக்னிஹோத்ரியே கூறுகிருர். கிருஷ்ணன் விஷ்ணுவின் அவதாரம் என்பதை அக்னிஹோத்ரியும் கூட மறுக்கத்துணியமாட்டார் என்று நம்பலாம். அவனே நேரில் வந்து தன்னோடு வருடக்கணக்காகப் பழகிய அருச்சுனனிடம் பேசும் பொழுது தன் பெயர் என்ன என்று கூறவேண்டிய அவசியம் ஏது? அர்ஜுனன் கண்ணன் பெயர்களைப் பலகால் விளிக்கிருனே! தானேதான் பரதெய்வம் என்றும் கண்ணன் சொல்லியிருக்கையில் தன் பெயரைக் குறிப்பிடாமல், தானே தன் பெயரைச்சொல்லிக் கொள்ளாமல் இருப்பதால் என்ன குறைகண்டாரோ அக்னிஹோத்ரி. இப்படித்தன் பெயரைச் சொல்லிக்கொள்ளாமையால் தன் ஸ்வரூபத்தையே ஸந்

தோன்றிக்கக்கூடிய வியக்தி ஒன்று ஐயாயிரம் ஆண்டுகட்குப்பின்னால் தோன்றக்கூடும் என்று பகவான் திருவுள்ளத்திலும் கூடப்படவில்லை.

நல்ல வைதிக வைணவ குடும்பத்தில், ஒரு பண்டிதபுத்ரராகப் பிறந்து முன் செய்த தீவினையால் சிசுபால ப்ரப்ருதிகளோடு ஒக்க வைத்து எண்ணக்கூடிய வகையில் விஷ்ணுநிந்தையும், முநித்ரயாபசாரமும், பாகவதாபசாரமும் செய்யத் திட்டமிட்டுத் துணிந்தோ, அன்றி ஐஹிக பலன்களுக்காக வைஷ்ணவத்வேஷிகளின் வலையில் புகுந்தோ, உபயவேதேதிஹாஸ புராணங்களுக்கும், ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் விரோதமாகவும், ஸ்வவாக்ய பரஸ்பர விருத்தமாகவும் பிதற்றுகின்ற ஒரு ஆஸ்திக நாஸ்திகர் இவர் என்பதை இவர் நூலே மெய்ப்பிக்கின்றது.

தினமணிச் சுடரிலும், ஹிந்துவிலும் இந்நூலைப்பற்றி விமரிசனம் செய்திருப்பதைப் பார்த்தால் தமிழ்நாட்டில் ஒரு அக்னிஹோத்ரியல்ல பல அக்னிஹோத்ரிகள் வைணவத்துக்கு எரியிட கையில் பந்தத்தோடு திரிகின்றனரோ என்று ஐயுறவேண்டியுள்ளது.

இத்தகைய ஒரு நூல் ஒரு விஷ்ணு தேவாலயத்தின் வெளியீடாக வந்திருப்பது பெருவியப்பே! கோயில் நிருவாகிகளும், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையினரும் தாம் வெளியிடும் நூல்கள் தாங்கள் நிர்வகிக்கும் கோயில்களையும், அதனை வழிபடுவோர் கோட்பாடுகளையும் எவ்வகையிலும் பாதிக்காமல் இருக்கின்றனவா என்பதை ஆய்ந்து பாராமலேயே இதனை வெளியிட்டுவிட்டார்கள் என்பது அக்கோயிலை வழிபடுவோர் அனைவருடைய உள்ளங்களையும் புண்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இதற்கு மேலாகத் தமிழ்நாட்டில் தமிழ் வேதத்திற்கு முதன்மையளித்து வழிபாடு நடக்கும் முறைகளை இகழ்ந்து பேசும் ஒரு நூல் தமிழரசு செய்யும் நாட்டிலே, அவ்வரசின் ஒரு துறையினரைச்சார்ந்த அதிகாரிகளாலே வெளியிடப்பட்டிருப்பது மிக மிக வருந்துதற்குரிய நிகழ்ச்சியாகும். அறநிலைய ஆட்சித்துறையினர் இந்நூல் விநியோகத்தை உடனடியாக நிறுத்த ஆணையிடுமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

(1) கி. பக்ஷிராஜன், அட்வகேட்.

வானமாமலைமடம் ஸ்ரீ சின்னக்கலியன் ஸ்வாமி திருவடி ஸம்பந்தி.

(2) வானமாமலை வித்வான் N. S. கிருஷ்ணன்.

2. ஸ்ரீ. உ. வே. R. சிங்கமய்யங்கார், நிர்வாக அதிகாரி, ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட், மதராஸ்.

"வரலாற்றில் பிறந்த வைணவம்" என்ற நூலை இயற்றிய அக்னிஹோத்ரியைப்பற்றி "வைஷ்ணவத்தில் பிறந்தவரின் வரலாறு" என்ற நூலை எழுதுவது மிகப்பொருத்தமாயிருக்கும். ஏனென்றால் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூகத்துக்கோ ஸ்ரீ வைஷ்ணவக் கொள்கைகளைப் பற்றிய உண்மைகளை உள்ளபடி அறியவிரும்புகிறவர்களுக்கோ ஒரு சிறிதும் பிரயோசனமில்லாத, வைஷ்ணவர் என்று கூறித்திரியும் ஒருவருடைய பிதற்றல் நூல் தான் "வரலாற்றில் பிறந்த வைஷ்ணவம்" அது மட்டுமன்று. ஸ்ரீ வைஷ்ணவக் கொள்கைகளை எவ்வளவு திரித்துக்கூறி மாசுபடுத்தி இழிவாக்கி ஸ்ரீ வைஷ்ணவர்களின் உள்ளத்தை எவ்வளவு புண்படுத்தமுடியும் என்று அறியவேண்டியவர்களுக்கு "வரலாற்றில் பிறந்த வைணவமே" தகுந்த புகலிடம்.

வேதவேதாந்த சாஸ்திர சம்பிரதாய நூல்களை ஆராய்ந்து அலசியதாக நினைக்கும் அக்னிஹோத்ரி இக்கலைகளில் உள்ள உண்மைகள் ஒன்றிலும் ஆழ்ந்த அறிவுடையவராகப் புலப்படவில்லை. அஜ்ஞான, அன்யதாஜ்ஞான, விபரீதஜ்ஞான வாக்யங்களையே இட்டு நிரப்பியிருக்கும் அவருடைய நூலில் எதைக் கண்டிப்பது எதைக் கழிப்பது என்றே விளங்கவில்லை. இருந்தாலும் ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சன ஆசிரியரின் நியமனத்தை சிரஸாவஹித்து "சலமிலா வணிலும் போலேன்" என்ற ரீதியில் அடியேனும் சுருக்கமாகவே சிற்சில பாராக்களில் உள்ள விஷயங்களைக் கண்டிக்க முயல்கிறேன்.

பாரா 3ல் வைஷ்ணவக்கொள்கைக்கு அடிப்படை வேதம் என்று எழுதியவர் பின்னால் பல பகுதிகளில் வேதத்துக்கும் ஸ்ரீவைஷ்ணவ மதத்துக்கும் சம்பந்தமே இல்லாததாகப் பறைசாற்றுகிறார்.

பாரா 7ல் வைணவம் என்ற வேதத்தில் காணப்படும் சொல் வேறு எந்தக் கருத்தில் பயன்படுத்தப்பட்ட சொல் என்று அக்னிஹோத்ரி விளக்கினால் நன்றாயிருக்கும். "விஷ்ணுவே பரதெய்வம் என்பது வேதத்துக்குப் பின்னர் வந்த கொள்கை" என்றால் வேதப்ரகரமான புருஷநாராயண விஷ்ணுஸூக்தங்களில் ஓதப்பட்ட யாவுமே வேதத்துக்குப் பின்னர் வந்ததாக அக்னிஹோத்ரியின் நினைவா அல்லது அந்த ஸூக்தவாக்யங்களுக்கு அக்னிஹோத்ரி நூதன விளக்கம் ஏதாவது கற்பிப்பாரா என்று தெரியவேண்டியது அவசியம்.

பாரா 11ல் தெய்வத்திற்குப் பல பெயரிட்டுப் பலபலமுறையில் வழிபாடு கூறும் வேதத்திலிருந்து "விஷ்ணுவே ஒரே தெய்வம்" என்று கூறும் வைஷ்ணவம் எப்படித் தோன்றிற்று என்ற ஆராய்ச்சி நடத்தும் அக்னிஹோத்ரி பகவான், புருஷன் என்னும் சப்தங்கள் "வாஸுதேவே ஸநாதனே" என்கிறபடி வாசுதேவனிடமே இயற்கையாய் பொருந்தியுள்ளன என்பதையும், வேதத்தில் ஓதப்படும் மஹா புருஷாதிசப்தங்கள் விஷ்ணுவையே குறிக்கின்றன என்று மஹரிஷிகள் காட்டித்தந்த விஷயத்தையும் நன்கு ஜ்ஞாபகப்படுத்திக்கொள்ளட்டும்.

பாரா 15ல் "உருவம் இல்லாத பிரும்மத்தை உருவமுடைய விஷ்ணுவாக ஆக்கி, குணம் இல்லாத பிரும்மத்தைக் குணமுடையதாக விளக்கிய பெருமை விஷ்ணுபுராணத்தையே சாரும்." என்கிருர். புருஷஸூக்தத்தில் ஓதும் "ஸஹஸ்ரசீர்ஷா—ஸஹஸ்ராக்ஷ:—ஸஹஸ்ரபாத்" "நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா" இத்யாதி வாக்யங்களில் உள்ள உருவத்தை அக்னிஹோத்ரி மறந்து விட்டார் போலும். "அத்வைதிகளுக்கும் ஸகுணப்ரம்மமுண்டு. பரப்ரம்மமாகையாலே ஒரு தெய்வமாகவே, அதுவும் ஸாத்விக தெய்வமாகவே இருக்கவேண்டும். பல தெய்வங்கள் இருக்கமுடியாது." இத்யாதி விஷயங்களை அக்னிஹோத்ரி ஒப்புக்கொள்ளவில்லையா? ப்ராசீந அத்வைதிகள் விஷ்ணுவையே ஸகுணப்ரம்மமாகக் கொண்டிருந்தனர். ஆதிசங்கரர் இயற்றிய விஷ்ணுஸஹஸ்ரநாம, ஸ்ரீ கீதாபாஷ்யஙகளிலிருந்து இவ்விஷயம் அக்னிஹோத்ரிக்குப் புலப்படவில்லையா? சிவஸஹஸ்ரநாமத்திற்கு பாஷ்யமிட்டு இப்படி பிரம்மத்கை காட்டியதாக அக்னிஹோத்ரி சொல்ல முடியுமா?

பாரா 17– இராமாநுஜர் காலம்வரை ஆகமக்கொள்கைகளும் ஆழ்வாராதிகள் பாசுரங்களும் தமிழ்நாட்டு வைணவத்தில் கலக்கவில்லையாம். இராமாநுஜருக்கும் முற்பட்டவரான ஸ்ரீமந்நாதமுனிகள் ஸ்ரீ ஆராவமுதன் ஸந்நிதியில் செவிக்கினிய செஞ்சொற்களான ஆழ்வார் திருவாய்மொழியைக் கேட்டனுபவித்த காரணத்தாலே திவ்ய ப்ரபந்தங்களைத்தேடி அலைந்து ஆழ்வாரிடமே நாலாயிரமும் பெற்ருர் என்பது சரித்திரம். உண்மை இப்படியிருக்க, ஆராவமுதன் சன்னிதிப் பணத்தை துர்வினியோகம் செய்து இப்புத்தகத்தை வெளியிட்ட அக்னிஹோத்ரி ஸ்ரீஆராவமுதன் ஸந்நிதியிலே ஆகமக்கொள்கைகளைப் பின்பற்றவில்லை என்று கூறுகிருரா அல்லது அவர் திருச்செவி சாத்தினது ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருவாய்மொழியே அல்ல என்று பிரமிக்கிருரா என்று தெரியவில்லை.

பாரா 20– சரணாகதியை இராமாநுஜர் ஒருவாறு ஒப்புக்கொண்ட போதிலும் அதை மோட்ச சாதனமாகக் குறிப்பிடவில்லையாம். ஸ்ரீராமாநுஜர் வேதாந்தங்களை மூலப்ரமாணமாக்கொண்ட பிரம்ம சூத்ரங்களை மாறன்பணித்த திருவாய்மொழியால் தெளிந்து இவ்வரிய அர்த்தவிசேஷங்களை ஸ்ரீ பாஷ்யம் முதலான தர்சன க்ரந்தங்கள்மூலம் பரவச்செய்து ஆழ்வாரின் தர்மமான பிரபத்தி தர்மத்தையே தம் பக்ஷமாகக் கொண்டார். மேலும் பெரியபிராட்டியாரை முன்னிட்டுப் பெரியபெருமாளிடத்தில் தானே பிரபத்திசெய்து பகவதங்கீகாரம் பெற்று ஸத்ஸம்பிரதாயத்தை ஸ்திரமாக ஸ்தாபித்தார் என்கிற விஷயங்கள் பெரியோர்களிடம் அடிபணிந்து கேட்டவர்களுக்கு ஸுப்ர ஸித்தம். தான்தோன்றியான அக்னிஹோத்ரிக்கு அப்ரஸித்தம்.

பாரா 21– ஆழ்வார், எம்பெருமானார், உடையவர் என்ற சொற்கள் சிவபெருமானுக்கும் திருமாலுக்கும் பொதுவாக உபயோகப் பட்ட சொற்கள் என்று கல்வெட்டுகளில் காணப்பட்டதாகச் சொல்லும் அக்னிஹோத்ரியின் சொற்களை வெட்டி எறிய வேண்டியது தானே ஒழிய இதற்கு ஆதாரம் சாஸ்திர, சம்பிரதாய நூல்களில் காணப் பட்டதாகத் தெரியவில்லை. கல்வெட்டுகளும் அப்படியில்லை.

பாரா 25– திருவரங்கக்கோயிலோடு இராமாநுஜரை இணைப்ப தற்கு வரலாறு சிறிதும் இடம் தரவில்லை என்று பறை சாற்றும் அக்னிஹோத்ரி ஸ்ரீராமாநுஜ அவதார சரித்திரங்களை அறிய எந்தச் சுவடிகளில் படித்தார் என்பது தெரியவில்லை. ''ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்-ராமாநுஜார்ய திவ்யா ஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்வலா'' முதலிய வாக்கியங்கள் ஸ்ரீவைஷ்ணவ உலகத்தின் பிதற்றல் என்று இந்த 'மேதை' நினைக்கிறார் போலும்!

பாரா 45ல் ''தெய்வத்தின் அவதாரக்கொள்கை உபநிடதக்கருத் தோடு ஒத்துப்போகக்கூடியதில்லை'' என்று கூறும் அக்னிஹோத்ரி பாரா 47ல் ''கூர்ந்து நோக்குமிடத்து வேதங்களே அவதாரக் கொள்கைக்கு அடிப்படையாகும்'' என்று சொல்லியிருப்பது அவரே முன்னுக்குப்பின் முரணாகச் சொல்லியிருக்கும் பல வாக்கியங்களில் ஒன்று ஆகும். அல்லது வேதத்தின் முன்பின் பாகங்கள் முன்னுக்குப் பின் முரண் என்றதாகும்.

பாரா 79ல் ''பகவானுடைய ப்ரீதிக்காக நாம் செய்யவேண்டிய கார்யம் ஒன்றுமே இல்லை'' என்று தென்னாசார்யர்கள் ஒப்புக்கொள்ளு

நிற்கள் என்கிருர் அக்னிஹோத்ரி. மேலும் பாரா 85ல் ராமாநுஜர் கைங்கர்யந்தான் மோக்ஷம் என்கிற கொள்கையை ஒப்புக்கொள்ளாமல் பகவானுக்கு அடிமை என்கிற உணர்ச்சியைப்பெற்று ஆனந்தப்படுவதே மோக்ஷம் எனக் கூறினராம். எங்கு கூறினரோ? அடிமை என்கிற சேஷத்வ உணர்ச்சி உள்ள ஜீவாத்மா தன் கர்த்ருத்வத்துக்குச்சேர பகவதனுபவ ஜனித ப்ரீதிகாரித கைங்கர்யத்தையே நடத்திப்போருமவன். திருமந்திரத்திலும் த்வயத்திலும் உள்ள 'ஆய' என்கிறவித்தால் “சேஷிக்கு அதிசயத்தை விளைக்கையே சேஷபூதனுக்கு ஸ்வரூப லாபமும் ப்ராப்யமும்”-“ப்ராப்தவிஷயத்தில் கைங்கர்யமிறே ரஸிப்பது; கைங்கர்யந்தான் நித்யம்” இத்யாதி வாக்யங்களை ஒட்டி ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் வழுவிலா அடிமைசெய்யவேண்டும். என்று ப்ரார்த்தித்துப்பெற்ற ஜீவாத்மா பகவானுடைய ப்ரீதிக்குச் செய்யவேண்டிய காரியம் ஒன்றுமே இல்லை என்று எதை ஆதாரமாகக்கொண்டு அக்னிஹோத்ரி எழுதுகிருர் என்று விளங்கவில்லை.

பாரா 86ல் “அளவற்ற உயர்ந்த குணங்கள் உள்ள விஷ்ணுவுக்கு” என்று ஸகுணத்தை இவரே ஒப்புக்கொண்டு அப்படிப்பட்ட விஷ்ணுவுக்குக் கோபம் என்ற மாசை கற்பிப்பதாக வருந்துகிருர். பகவான் ஹிதபரனைகையாலே ஸ்வதந்த்ர அபிமானமுடைய சேதனன் தீரக் கழியப்பண்ணின அபராதத்துக்காக “க்ஷிபாமி” “ந க்ஷமாமி” என்கிறபடியே சீற்றம் பிறந்து அவனுடைய அபராதங்களைப் பத்தும் பத்தாகக் கணக்கிட்டு நிறுத்தறுத்துத் தீர்ப்பவன். ஸர்வலோக ஹிதபரன், தண்டதரன் என்கிற அவனுடைய நிலைமைக்குச்சேர கோபம் குணகோடியிலே சேருமேயொழிய மாசு என்று ஒருநாளும் சொல்லமுடியாது.

பாரா 98ல் ஆழ்வார்களில் நம்மாழ்வார் ஒருவரே ஆசார்ய பரம்பரையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கூறுகிருர் அக்னிஹோத்ரி. நம்மாழ்வார் அவயவி, மற்றைய ஆழ்வார்கள் அவருக்கு அவயவங்கள் என்ற விஷயம் அக்னிஹோத்ரி கேட்டதில்லையோ? மேலும் “பூதம் ஸரஶ்ச” இத்யாதி தனியன்களை அக்னிஹோத்ரி அறவே மறந்துவிட்டார்போலும்.

அக்னிஹோத்ரியின் அபத்தத ப்ரசாரங்கள் எல்லாவற்றையும் எடுத்துரைக்க நம் ஸுதர்ஶனம் ஆசிரியர் அளிக்கும் பக்கங்கள் போராததால் இத்துடன் நிறுத்திவிடுகிறேன்.

முடிவில் ஸ்ரீவைஷ்ணவ ஸமூகத்துக்கும், முக்கியமாக ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் போன்ற பத்திரிகைகளை நடத்துகிறவர்களுக்கும் அடியே னுடைய விநயமான விண்ணப்பம் ஒன்று செய்து கொள்ளுகிறேன். அக்னிஹோத்ரி போன்றவர்களின் துஷ்பிரசாரங்களுக்கு ஜனரஞ்ஜக மான அனேக பத்திரிகைகள் இடம் கொடுத்துவருவதும், விமர்சனம் செய்துவருவதுமே நம் ஸமூகத்துக்குச்செய்யும் பெரிய தீமையாகும். இவைகளைப் படித்து நம் ஸம்ப்ரதாய விருத்தமான கருத்துக்களை நம பாமரர்கள், ஸ்திரீகள், பாலர்கள் எல்லோரும் மனத்தில் கொள்ளக் காரணமாயிருக்கிறபடியால் ஸ்ரீவைஷ்ணவ பாகவத பண்டிதோத்தமர் கள் இவற்றுக்கு மறுப்பையும் நம் சாஸ்திர ஸம்ப்ரதாயக் கருத்துக் களையும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் தினசரியில் அறியவேண்டிய விஷயங் களையும் எளியநடையில் யாவரும் அறியும்வகையில் பத்திரிகைகள் வாயிலாகவும் உபந்யாஸங்கள் மூலமாகவும் பிரசாரம்செய்வது நம் ஸ்ரீ வைஷணவ ஸமூகத்துக்குச்செய்யும் மஹத்தான கைங்கர்யமாகும் என்பதே அது.

முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு
பின்னோர்ந்து தாம் அதனைப் பேசாதே—தன்னெஞ்சில்
தோற்றினதே சொல்லி இது சுத்த உபதேச வர
வாற்றதென்பர் மூர்க்கராவார்.

இங்ஙனம்,

R. சிங்கமய்யங்கார்,
நிர்வாக அதிகாரி,
ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட், மதருஸ்.

பெரியோர்களின் பொன்மொழிகள்

சதுர்வேத₃த₄ரோ விப்ரோ வாஸுதே₃வம் ந விந்த₃தி।
வேத₃பா₄ரப₄ராக்ராந்தோ ஸ வை ப்₃ராஹ்மண க₃ர்த்த₃ப₄: ॥

[ரிஷி வாக்கு]

[நாலு வேத₃த்தையும் ஓதிய அந்தணனாயினும், வாஸு தே₃வனை அடையவில்லையாகில், வேதச்சுமையால் அழுத்தப் படும் அந்தணக் கழுதையேயாவான் அவன்.]

3. வேதப்பிரான்பட்டர் விஷ்ணுசித்தன் ஸ்ரீவில்லிபுத்தூர்.

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சன இதழில் 'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்ற நூலின் சுருக்கத்தைப் படிக்க நேர்ந்தது. அந்நூலில் கண்டுள்ள கருத்துக்கள் ஆழ்வார்கள், ஆசாரியர்கள் முதலான மகான்களின் கருத்துக்கு முரணானவை. ஸ்ரீவைஷ்ணவர் திருவுள்ளத்தைப் புண்படுத்துபவை. கட்டுரையாசிரியர் அக்னிஹோத்ரம் ஸ்வாமியின் கருத்துக்கள் நமது (ஸ்ரீராமாநுஜ) எம்பெருமானார் தரிசனத்திற்குப் புறம்பானவை என்பதை நிலைநாட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

1. தோற்றுவாய் :–'விஷ்ணு' என்ற சொல்லுக்கு 'எங்கும் நிறை பரம்பொருள்' என்று பொருள். அப்பரம்பொருள் காலமும் கணக்கும் நீத்த காரணன். அப்பெருமானே பிறவிப் பிணிதீர்த்து வீடுபேறளிக்க வல்லான் என்று உணர்ந்தவர்கள் கிருதயுகத்திலும், திரேதாயுகத்திலும், துவாபரயுகத்திலும் இருந்தார்கள். கலியுகத்திலும் இருக்கிறார்கள். எனவே விஷ்ணுவின் பரத்துவத்தைப் போற்றும் வைணவம் பிறந்த காலத்தைக் கணக்கிடுதல் இயலாது.

3. 'வைணவம் வேதகாலத்திற்குப் பிற்பட்டு ஒரு காலத்தில் உண்டாகிப் படிப்படியாகப் பலதுறைகளிலும் வளர்ச்சியடைந்து ஓர் ஆசார்யனை ஒப்புக்கொண்டு சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தொடங்கியதும் தன் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது என்பது புலனாகின்றது' என்று எழுதுகிறார். ஆழ்வார்கள் நால்வேதக் கடலமுதைக் கடைந்து வேதாந்தத்தின் விழுப்பொருள் திருமாலே என்று அறுதியிட்டிருக்கிறார்கள். நற்றிணைகடவுள் வாழ்த்தில் 'மாநிலஞ் சேவடி யாக'என்று தொடங்கும் பாடலில் 'வேதமுதல்வன் என்ப தீதற விளங்கிய திகிரியோனே' என்றும், பரிபாடலில் 'வேதத்து மறைநீ பூதத்து முதலுநீ வெஞ்சுடரொளியுநீ திங்களுளளியுநீ' என்று வருவதுங் காண்க .எனவே வேதத்தில் உத்கோஷிக்கப்படும் பரம்பொருள் திருமாலே என்பதும், வைணவம் வேதகாலத்துக்குப் பிற்பட்டது என்ற கட்டுரை யாசிரியர் கொள்கை தவறானது என்பதும் அறியலாகும். மேலும் வைணவம் 'இறைவன் அனந்த கல்யாணகுண சம்பூர்ணன்' என்று கூறுகிறது. இது நிர்க்குணப்பிரம்மம் என்ற அத்துவைதக்கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டது. சீர்மை, எளிமை முதலிய கல்யாண குணங்களிலீடுபட்ட ஆழ்வார்களின் பக்திப் பெருவெள்ளமன்றோ அருளிச் செயல்கள்? எனவேதான் பிள்ளைப்பெருமாளய்யங்காரும்

சிந்திக்கத் தித்திக்கும்' என்ருர். சிந்தனை வளர்ச்சியினுல் தான் வைண வம் வளர்ந்து வருகிறது என்ற உண்மைக்கு மாருக வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது என்று எழுதுகிருர்.

4-58. வேதத்தினுள் பல தெய்வவணக்கம் கூறப்பட்டிருப்ப தற்குக் காரணம், பலன் விரும்பிச் செய்யும் யாகங்களில் அவற்றிற்குரிய தெய்வங்களைப்பற்றிப் பெருமையாகக் கூறியிருத் தலேயாம். எனினும் அத்தெய்வங்களுக்கு மேலான பரம்பொருள் பிறவிப்பிணி தீர்த்து வைகுந்தம் கொடுக்கும் பெருமான் திருமாலே என் பது அவற்றின் முடிவு. ''சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பதம் கச்சந்தி தேவை:'' என்று வேதமே இவ்வர்த்தத்தை ஓதிற்று.

பரிபாடலில்

'மாஅயோயே மாஅயோயே
மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடி' என்றும்,

'தீவளி விசும்பு நிலனீரைந்தும்
ஞாயிறும் திங்களு மறனுமைவருந்
திதியின் சிருரும் விதியின்மக்களும்...
மாயோய் நின்வயிற் பரந்தவை' என்றும்,

'தீயினுள் தெறல்நீ பூவினுள் நாற்றம்நீ
கல்லினுள் மணியுநீ சொல்லினுள் வாய்மைநீ
அறத்தினுள் அன்புநீ மறத்தினுள் மைந்துநீ
வேதத்து மறைநீ பூதத்து முதலுநீ
வெஞ்சுடரொளியுநீ திங்களுளளியுநீ...
பிறவாப் பிறப்பிலே பிறப்பித்தோரிலேயே' என்றும்

திருமாலைப் போற்றுகின்றனர் சங்கச் சான்ருேர். மோக்ஷமளிப்பவன், எல்லா தேவர்களையும் படைத்தவன், உபநிஷத்ப்ரதிபாத்யன், பஞ்ச பூதங்களுக்கும் காரணபூதன் திருமாலே என்பது இதன் கருத்து. இக் கருத்து உபநிடதங்களிலும் மூதலிக்கப்படுவதாக ஸ்ரீராமாநுஜரின் ஸ்ரீபாஷ்யத்தை ஆராய்ந்த மாக்ஸ் முல்லர் என்னும் மேனட்டறிஞர் தம்முடைய 'கீழைநாடுகளின் புனிதநூல்கள்' என்ற புத்தகத்தில் ஒப்புக்கொள்கிருர். அப்பகுதி வருமாறு:—

(Sacred books of the East)

He who, dwelling within Aditya (the sun) is different from Aditya, whom Aditya does not know, of whom Aditya

is the body, who rules Aditya from within; who dwelling within the Self is different from the Self (Bri. up III). Of whom the imperishable is the body, whom the Imperishable does not know; who moves within Death; of whom Death is the body, whom Death does not know: He is the inner self of all beings, free from evil, divine, the one God Narayana (Sub. up VII)

மேற்கூறப்பட்ட ஆங்கில வரிகள் மிக அழகாக நாராயணனுக்குக் கூறப்பட்டிருக்கும் பரத்துவத்தையும் சூரியனுக்கு அளிக்கப்பட்டிருக கும் ஸ்தானத்தையும் விளக்குகின்றன. அதனால் கட்டுரையாசிரியர் சூரியனே விஷ்ணு என்று எழுதுவது எங்ஙனம் பொருந்தும்?

11. 'வைணவம் பரம்பொருளின் பெயராக விஷ்ணு என்பதனை முக்கியமாகக்கொள்ளாமல் நாராயணன் என்ற பெயரையே சிறப்பாகக் குறிப்பிடுகிறது' என்று எழுதுகிறார். பரம்பொருளை வேதம் 'விஷ்ணு என விளிக்கும். உபனிஷத்துக்கள் நாராயணன் என அழைக்கும். தமிழிலக்கியங்கள் 'மாயோன்' என்று போற்றும். அருளிச் செயலில் ஆழ்வார்கள் ஆயிரமாயிரம் திருநாமங்களையிட்டு அழைப்பர். எல்லாம் அவன் திருநாமமே. ஆண்டாள் திருவாக்கின்படி அவன் நாமமாயிர மேத்த நின்ற நாராயணன். பிறசமயத்தவரையும் திரு வெட்டழுத்து எத்துணைதூரம் கவர்ந்திருக்கிறது என்பது இளங்கோ வடிகள் பாடலில் வெளிப்படுகிறது. 'பெரியவனை மாயவனை' என்று தொடங்கும் ஆய்ச்சியர் குரவைப் பாடலில் 'பஞ்சவர்க்குத் தூதுநடந் தானை ஏத்தாத நாவென்ன நாவே, நாராயணவென்ன நாவென்ன நாவே' என்று கேட்கிறார் இளங்கோவடிகள். இவற்றை அறியவில்லையே!

9. 'தென்னாட்டு வைணவம் காலட்சேபகூடங்களில் வளர்ந்து ஆலயத்தோடு தொடர்பு கொண்ட காலத்தை அறிய வேண்டியவர் களாக உள்ளோம்' என்று எழுதுகிறார். பண்டைநாளில் இயற்கைச் சூழலில் அமைந்த கோவில்கள் ஆழ்வார்கள் பாடல் பெற்றமையால் திவ்யதேசங்களாக மாறின. இத்தகைய தலங்களுள் ஒன்றே திருமா லிருஞ்சோலைமலை என்று அழைக்கப்படும் அழகர்கோவில். சிலம்பிலும் பரிபாடலிலும் இத்தலம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. எனவே வைணவத்தையும் ஆலயங்களையும் பிரித்துப் பார்ப்பது என் பது இயலாத ஒன்று. தமிழ்நாட்டில் கோவில்கள் பல இருப்பினும்

ஆழ்வார்கள் பாடல் பெற்ற தலங்களே நூற்றெட்டுத் திருப்பதிகள் என்று போற்றப்படுகின்றன. தமிழ்நாட்டு வைணவம் ஆலயத் தொடர்பற்றது என்று கட்டுரையாசிரியர் கூறுவதில் பொருளில்லை.

10. ஆழ்வாருடைய பக்தி வீடு பேறளிக்கும் வல்லமையற்றது என்று இராமாநுஜர் கருதுவதாக ஆசிரியர் குறிப்பிடுகிருர். 'பண்ணின்பம் வரப்பாடும் பத்தருள்ளார் பரமான வைகுந்தம் நண்ணுவரே' 'ஏராரும் வைகுந்தத்து இமையவரோடு இருப்பாரே' 'பேரணி வைகுந்தத்து என்றும் பேணியிருப்பரே' என்று வரும் பாசுரப் பகுதிகள் பக்தி வீடுபேறளிக்கவல்லது என்று உணர்த்துகின்றன.

119. கீதைச்செய்தி என்ற தலைப்பில் ''கீதையில் பகவான் யார் எந்தப் பெயருள்ள தெய்வத்தை உபாசித்தாலும் தான் எங்குமிருப்பதால் தன்னையே தான் அவர்கள் உபாசிப்பதாகக் கொள்ளுகிறேன் என்று கூறுகிருர். இதுவும் ஒருவழியில் ஒரே தெய்வம் என்ற கொள்கையுடன் நெருங்கி நிற்கிறது. ஆனல் இங்கு பகவான் தன்னுடைய பெயரைக் குறிப்பிடாமல் இருப்பது கவனிக்கத்தக்கது'' என்று எழுதுகிருர். பார்த்தனுக்கு கீதோபதேசம் செய்தது கண்ணனுய் அவதரித்த திருமாலே. கண்ணன் தானே நேரில் உபதேசம் செய்யும்போது தன் பெயரைக் குறிப்பிடவேண்டிய அவசியம் யாது? கண்ணன் நான் என்பது எங்கும் நீக்கமற நிற்கின்ற விஷ்ணுவையே குறிக்கும் என்பதை அறிந்திருந்தும் அறியாதவர்போல் எழுதுகிருர்.

இதுவரை 'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்ற கட்டுரையில் காணப்படும் முரணுன கருத்துக்கள் சிலவற்றை மட்டும் கண்டோம். அக்கட்டுரையில் உண்மைக்கு மாருனவை மலிந்து கிடக்கின்றன. அவற்றைக் கல்விகேள்விகளிற் சிறந்த வைணவப் பெரியோர்கள் எடுத்துக் காட்டிக் கண்டித்து உண்மையை நிலைநாட்டுவதன்மூலம் எதிர்காலத்தில் இத்தகைய நூல்கள் தோன்ருது தடுப்பார்களாக!

பெரியோர்களின் பொன்மொழிகள்

''யே து ஸாமாந்யபாவேந மந்யந்தே புருஷோத்தமம்।
தே வை பாஷண்டிநோ ஜ்ஞேயா: ஸர்வ கர்மபஹிஷ்க்ருதா:॥''

[ரிஷிவாக்கு]

[எவர்கள் புருஷோத்தமனை மற்ற தெய்வங்களோடு ஸமமாக எண்ணுகிருர்களோ, அவர்களே பாஷண்டிகள் எனப்படுவர்; அவர்கள் எக் கர்மத்திற்கும் தகுதியற்றவர்]

4. ந்யாயவேதா₃ந்தவித்₃வான் ஸ்ரீ உ. வே. கோழியாலம் ரங்க₃நாத₂ாசார்ய ஸ்வாமி, திருச்சி-1.

श्रीपतिप्रथमां नाथयामुनार्यादिमध्यमाम्।
असद्गुरुवरान्तां च, नमामि गुरुसन्ततिम्॥
श्रियःपतिः परं तत्त्वं हितं च तदुपासनम्।
कैङ्कर्यान्ता च तत्प्राप्तिः पुरुषार्थः प्रकीर्त्यते॥

ஸ்ரீபதிப்ரத₂மாம் நாத₂யாமுநார்யாதி₃மத்₄யமாம் ।
அஸ்மத்₃கு₃ருவராந்தாம் ச நமாமி கு₃ருஸந்ததிம் ॥
ஶ்ரிய:பதி: பரம் தத்வம் ஹிதம் ச தது₃பாஸநம் ।
கைங்கர்யாந்தா ச தத்ப்ராப்தி: புருஷார்த்த₂: ப்ரகீர்த்யதே ॥

உலகில் ப்ராணிகளைக் காட்டிலும் மனிதர்களுக்கு ஐந்தறிவுடன் ஆறுவதான பகுத்தறிவால்தான் ஏற்றமென்பது எல்லோரும் அறிந்ததொன்றாகும். அத்துடன் நில்லாமல். "दुर्मोचोद्भटकर्मकोटिनिबिडोप्यादेशवश्यः कृतः बाह्यैर्नैव विमोहितोस्मि कुदृशां पक्षैः न विक्षोभितः।" (தொலைக்க முடியாத பல கர்மங்களால் சூழப்பட்டவனாயினும் ஶாஸ்த்ரவஶ்யப் பிறவியில் சேர்ந்தவனாகவும். அதிலும் அவைதி₃கர்களால் மோஹமடைவிக்கப்படாதவனாகவும். அதிலும் வைதி₃கவேஷம் பூண்ட குத்₃ருஷ்டிகளால் கலக்கப்படாதவனாகவும் செய்யப்பட்டுள்ளேனே) என்ற ரீதியில் மனிதர்களாயும், அதிலும் வைதி₃கர்களாயும், அதிலும் கேவல வைஷ்ணவர்களாய் மாத்திரமல்லாமல் ஸ்ரீ வைஷ்ணவர்களாயும் பிறந்துள்ள நாம். ईश्वरस्य च सौहार्दम् என்கிறபடி ஸதா₃சார்யனைக்கிட்டி ஆத்மக்ஷேமத்தை அடைவதற்குப் பரமதத்வஹிதபுருஷார்த்த₂ங்களைத் தெளிந்து அதன்படி நடந்துகொள்வது நம் கடமையாகும். புத்தி திறமையுள்ள அதி₄காரியாயிருக்கும்பக்ஷத்தில் தான் விரிவாக ஶாஸ்த்ரங்களைக் கசடறக்கற்று, ஆசார்யனால் உபதேசிக்கப்பெற்ற வேதாந்தார்த்த₂ங்களில் "श्रोतव्यो मन्तव्यः" என்கிறபடி தத்வ

ஹித புருஷார்த்தங்களைச் சிந்தித்து அதன்படி நடக்க வேண்டும். ஸாமாந்ய அதிகாரியாக இருக்கும்பக்ஷத்தில் "शास्त्रज्ञानं बहुक्लेशं बुद्धेः चलनकारणम्। उपदेशात् हरिं बुद्ध्वा' என்கிறபடியே "स्वाधीनाशेषसत्तास्थितियतनफलं विद्धि लक्ष्मीशमेकं प्राप्यं नान्यं प्रतीयाः न च शरणतया कंचिदन्यं वृणीयाः। एतस्मादेव पुंसां भयमितरदपि प्रेक्ष्य मोक्षीः तदाज्ञां इत्येकान्तोपदेशः प्रथममिह गुरोरेकचित्तेन धार्यः" (ஸ்ரிய:பதியான நாராயணனுக்கே எல்லாப்பொருளுடைய இருப்பு முதலியவெல்லாம் அதீனமாயிருப்பது என்று அறிவாயாக. மற்றொருவனை ப்ராப்யனாகவும் ஶரணமாகவும் எண்ணாதே. இவனிடமிருந்துதான் பயமோ அபயமோ ஏற்படுகிறது என்பதை அறிந்து அவன் கட்டளையைக் கைவிடாதே என்கிற ஆசார்யனுடைய இந்த உபதேசத்தை முதலில் மனத்தில் வாங்கிக்கொள்ள வேண்டும்) என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அருளியபடி தத்வஹிதபுருஷார்த்தங்களைத் தெளிந்து அதன்படி நடக்க வேண்டும். இத்தகைய தத்வஹிதபுருஷார்த்தங்களில் தெளிவு ஏற்பட வைதிகர்களான நமக்கு, பரமபுருஷனைப் போல் அனாதியாய், (ஒரு புருஷனால் செய்யப்படாத) அபௌருஷேயமாய், ப்ரமப்ரமாதாதிகளுக்கு இடமில்லாத வேதம்தான் முக்யப்ரமாணமாகும். இது மறை (சந்தஸ்) என்ற தன் பெயருக்கேற்ப எதையும் கொஞ்சம் மறைத்தே சொல்லக்கூடியது. வேதபூர்வபாகத்தில் ஸர்வகர்ம ஸமாராத்யன் ஸ்ரீமந் நாராயணன் என்பதை ஒருவகையாகக் கூறுகிறது. உத்தரபாகமான உபநிஷத்பாகம் ஸர்வஜகத்ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹார காரணபூதன், ஸர்வ வித்யாவேத்யன் என்று பலபடியான அவனுடைய பெருமைகளைக் கூறுகிறது. ஸாத்விகமான ஸகல ஸ்ம்ருதி இதிஹாஸபுராணங்களைக்கொண்டு வேதவேதாந்தங்களை ஊன்றிப்பார்த்தால் தேறும் பொருள் ஒன்றே ஆகும். இதை— "வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே। நமோவை ப்ரஹ்மநிதயே வாஸிஷ்டாய

நமோ நம:॥'' என்று புகழ்ப்பெற்ற வ்யாஸப₄க₃வானே வற்புறுத்துக் கூறியுள்ளார்— ''ஆலோட்₃ய ஸர்வஶாஸ்த்ராணி விசார்ய ச புந: புந:। இத₃மேகம் ஸுநிஷ்பந்நம் த்₄யேயோ நாராயண: ஸதா₃॥'' என்று இங்கு ஸர்வஶாஸ்த்ரங்களை யும் ஆராய்ந்து தேறிய தத்வஹிதபுருஷார்த்த₂ங்களை நான்காவது பாத₃த்தில் காட்டியுள்ளார். ''நாராயண: த்₄யேய: ஸதா₃'' என்று மூன்று பத₃ங்களால் தத்வஹித புருஷார்த்த₂ங்களைக் காட்டுகிறார். ஸதா₃ என்பதால் முக்தி காலத்திலும் கைங்கர்யாந்தமாக ப₄க₃வத்₃த்₄யாநம் ஸ்வயம் ப்₃ரஹ்மரூபமாய் அநுவர்த்திப்பதைக் காட்டுகிறது. ஆக இது தான் ஸகல ஶாஸ்த்ரங்களுடைய ஸாரமான பொருள் என்பதாக ப்ராமாணிகர்களான ஸதா₃சார்யர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்படி உண்மை நிலை இருக்க, இதற்கு நேர்முரணாக தத்த்வஹித புருஷார்த்த₂ங்களில் விபரீதக் கருத்துக்களைக்கொண்டதான ''வரலாற்றில் பிறந்த வைணவம்'' என்று பெயர்பூண்ட ஒரு புத்தகம் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. சுமார் 300 பக்கங் கொண்ட இப்புத்தகம் அநேகமாய், வேத₃ வைதி₃க வைதே₃ஶிகமான பொருளைக் கருத்தில்கொண்டதாகவே காணப்படுகிறது. இதை மறுத்து பதிலுரைக்க ஸௌகர் யத்திற்காக அப்புத்தகத்தில் சில விஷயங்களை 120 பாராக்க ளாக அச்சிட்டு ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்ஶன பத்ராதி₄பர் வெளி யிட்டுள்ளார். அந்த 120 பாராக்களுக்குள்ள லக்கத்தின் படியே லக்கமிட்டு ஸ்தூ₂லீபுலாகந்யாயத்தைப் பின்பற்றி (ஒருபானைசோற்றுக்கு ஒருபருக்கை பத₃ம் என்கிறரீதியில்) சில விஷயங்களை மட்டும் எடுத்து இங்கு அவைகளுக்கு மறுப்புரைக்கிறோம்.

1.தோற்றுவாய். இங்கு வைணவம் ஒரு காலத்தில் வளர்ந்த தாகக் கூறபபட்டுள்ளது. இது சரியன்று-விஷ்ணு தத்வமும், வேத₃மும் என்று தோன்றினவோ அன்றே வைணவமும்

ஏற்பட்டுவிட்டது என்பதில் ஐயமில்லை. அதாவது— விஷ்ணு தத்வமும் வேதமும் அநாதி₃யாக உள்ளனவாகையால் வைணவ மதமும் அநாதி₃யாக உள்ளதேயாகும். "யதா₃ யதா₃ ஹி த₄ர்மஸ்ய க்₃லாநி: ப₄வதி" என்கிற ரீதியில் வைணவம் சில ஸமயம் சந்தர்ப்ப சூழ்நிலைகளையொட்டி நலிவுற்றும், சில சமயம் சிறப்புற்று ஓங்கியும் இருந்திருப்பதைக் காணலாமேயொழிய அடியோடு இல்லாமலிருந்து ஒரு காலத்தில் புதிதாகத் தோன்றியது என்று கூறுவது பொருந்தாது. "யோ ப்₃ரஹ்மாணம் வித₃த₄ாதி பூர்வம் யோவை வேதா₃ம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை" என்ற வேதப்படி ஸ்ருஷ்டி ஆரம்ப₄த்திலேயே ப்₃ரஹ்மாவைப் படைத்து அவனுக்கு வேத₃த்தை உபதே₃சித்தான் என்பதும், அந்த வேதத்தின் ஸாரப்பொருள் முற்கூறியபடி வைணவ மதத்தை உட்கொண்டது என்பதும் உண்மையானால் வைணவமதம் ஒரு காலத்தில் தோன்றியது என்பது எவ்வளவு பொருத்தமற்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியன்றோ.

3. வைணவத்தோற்றம். இங்கு—படைப்பது காப்பது அழிப்பதாகிற முத்தொழிலைக்கொண்ட மும்மூர்த்திகளுக்குள் காப்பதைத் தொழிலாகக்கொண்ட விஷ்ணுவையே பரம்பொருளாகக்கொள்ளும் வைணவம் வேதகாலத்திற்குப் பிற்பட்டு ஒரு காலத்தில் தோன்றி, படிப்படியாக வளர்ந்தது—என்பது முதலான கருத்துக்கள் காட்டப்பட்டுள்ளன. இது சரியன்று—வேதகாலம் என்று சொல்லுவது 'என் தாய் மலடி' என்பதுபோல் பொருந்தாத பேச்சேயாகும். வேத₃ம் நித்யம், அபௌருஷேயம் என்று வைதி₃கர்களின் ஸித்₃த₄ாந்தம். உப₄யமீமாம்ஸாகாரர்களும் அவ்வாறே ப்ரமாணங்களைக்கொண்டு நிலைநாட்டியுள்ளார்கள். "एतदेव वेदानामपौरुषेयत्वं नित्यत्वं च, यत् पूर्वपूर्वोच्चारणक्रम-जनितसंस्कारेण तमेव क्रमविशेषं स्मृत्वा तेनैव क्रमेणोच्चार्यमाणत्वम्॥" (வேத₃த்திற்கு அபௌருஷேயத்வமும் நித்யத்வமுமாவது

இதுதான்—முதலில் எந்த க்ரமத்தில் உச்சரிக்கப்படுவதால் ஸம்ஸ்காரம் ஏற்படுகிறதோ இந்த ஸம்ஸ்காரபலத்தால் அதே க்ரமத்தில் உச்சரிக்கப்படுவதேயாகும்) என்பது ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்தியாகும். ஆகையால் வேத வைதிக ஸித்தாந்தத்திற்கு முரணாக, வேதம் ஒரு காலத்தில் உண்டாயிற்று என்பதும். முன் கூறியபடி அந்தக் காலத்திற்குப் பின் வைணவம் தோன்றி வளர்ந்தது என்று கூறுவதும் சரியன்று. மேலும் முத்தொழிலைக் கொண்டவர்கள் மும்மூர்த்திகள் என்பதும் சரியல்ல. "ஸ்ருஷ்டி ஸ்தித்யந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம்। ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாந் ஏக ஏவ ஜநார்தந:॥" (அந்த பகவானான ஜநார்தநன் ஒருவனே படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிலைச் செய்வதற்கேற்ப ப்ரஹ்மா, விஷ்ணு, ஶிவன் என்று மூன்றுவிதமான பெயர்களையும் அடைகிறான்) என்பதால் விளக்கப்பட்ட "யதோ வா இமானி பூதானி ஜாயந்தே" "நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே; நாராயணாத்ருத்ரோ ஜாயதே" முதலிய ஶ்ருதி வாக்யங்களால் நாராயணன் ஒருவனுக்கே அஸாதாரண லக்ஷணமாக ஜகத்காரணத்வம் முதலியவை கூறப்பட்டுள்ளதன்றோ. "ரக்ஷார்த்தம் ஸர்வபூதாநாம் விஷ்ணுத்வமுபஜக்மிவாந்" (எல்லோரையும் காக்க விஷ்ணு உருவத்தை எடுத்துக்கொண்டாய்) என்கிற வாக்யத்தின்படி காப்பது என்ற தொழிலை நாராயணன் தானே நேரிலும், படைத்தல் அழித்தல் ஆகிய தொழில்களை பிரமன், உருத்திரன் எனப்படும் ஜீவர்களை ஆவேஶித்தும் செய்கிறான் என்று தேறுகிறது. ஆக முத்தொழில்கள் மும்மூர்த்திகளுடையவை என்பது சரியல்ல என்றதாகிறது.

4. வேதமதம். இங்கு—அக்னியில் ஹோமஞ்செய்து மிகப்பெரிய யாகம் செய்யத்தலைப்பட்ட காலத்தில் ஒரு புரட்சி உண்டாகி உபநிஷதங்கள் கூறும் ஜ்ஞானமார்க்கமே

மேலானதென்று அது கைக்கொள்ளப்பட்டது. பிறகு அதுவும் எல்லோர்க்கும் எளிதன்றென்று கைவிடப்பட்டு ப4க்திமார்க்க3மே அநுஷ்டிக்கப்பட்டது. பிறகு அதுவும் மிகக்கடி2னமாகி, ஸுலப4மென்று ப்ரபத்தி மார்க்கமே கைக்கொள்ளப்படுவதாக நிலைநின்றது—என்ற கருத்து காணப்படுகிறது. இதுவும் சரியல்ல என்பது உபநிஷத்துக்களிலும் ஶாரீரகமீமாம்ஸாபா4ஷ்யத்திலும், கீ3தாபா4ஷ்யம் முதலியவற்றிலும் நன்கு பரிசயமுள்ளவர்களுக்கு நன்கு விளங்கும். "கர்மணைவ ஹி ஸம்ஸித்3தி4ம் ஆஸ்தி2தா ஜநகாத3ய:" "நஹி ஜ்ஞாநேந ஸத்3ருஶம் பவித்ரமிஹ வித்3யதே" இம்மாதிரியான சில வசனங்கள் காணப்பட்டபோதிலும் ஒன்றுக்கொன்று விரோத4மில்லாத வகையில் ஸகல ஶாஸ்த்ரங்களும் ஒரு முக2மாக ஓரே அர்த்த2த்தைத்தான் சொல்லுகின்றன என்று நம் ஆசார்யர்கள் மீமாம்ஸா ந்யாயங்களைக்கொண்டு நிஷ்கர்ஷித்துள்ளார்கள். அதாவது—சில அதி4காரிகள் விஷயத்தில் கர்மஜ்ஞாநயோக3ங்களால் முறையே மநோ நைர்மல்யம் ஏற்பட்டு ஆத்மஜ்ஞாநம் பிறந்த பிறகு அதன் அப்4யாஸத்தால் ஆத்மஸாக்ஷாத்காரம் ஏற்பட்டு, இப்படி அங்க3ங்கள் நிறைவேறின பிறகு அங்கி3யான ப4க்தியில் ஈடுபட்டு அதன் ஸித்3தி4பெறுவது என்றும், மற்றோர் அதி4காரி (விளம்ப3த்தைப் பொறுக்காதவன்) விஷயத்தில் "ஆநுகூல்யஸ்ய ஸங்கல்ப:" இத்யாதி3யால் கூறப்பட்ட ஐந்து அங்க3ங்கள்கொண்ட ஆத்மரக்ஷாப4ரஸமர்ப்பணமென்கிற ப்ரபத்தியால் இஷ்டஸித்3தி4 ஏற்படுகிறதென்றும் இப்படி ப4க்திப்ரபத்திகளே வ்யவஸ்தி2த விகல்பமாக உபாயமாகின்றனவென்றும், கர்மஜ்ஞானங்கள் ப4க்திக்கு அங்க3ங்கள் என்றும் ஶாஸ்த்ர வசனங்களுக்குள் பரஸ்பரம் முரண்பாடில்லாமல் ஏககண்ட2மாக நிஷ்கர்ஷிக்கப்படும் ஶாஸ்த்ரார்த்த2மாகும். ஆகையால் ஒன்றைவிட்டு ஒன்றைக் கைக்கொண்டார்கள் என்று கூறு பொருந்தாதென்பது ஸ்பஷ்டம். விரிவு பூர்வாசார்ய க்3ரந்த2ங்களில் காண்க.

7. வைணவத்தைப்பற்றிய பொதுவான கருத்துக்கள். இங்கு — விஷ்ணு என்ற சொல் வேதத்திலேயே காணப் பட்டாலும் அது வேறொரு பொருளில் உள்ளதாகையாலே விஷ்ணுவை மட்டும் வழிபடுவது, அதுவே பரம்பொருள் என்பது பின்பு வந்த கொள்கை என்று கூறப்பட்டுள்ளது. இதுவும் அடியோடு சரியல்ல. வேதத்தில் பூர்வபாகத்தில் பல இடங்களில் காணப்படும் விஷ்ணுஶப்தமும் பரம் பொருளான ஸ்ரீமந் நாராயணனையே அவன்செய்த த்ரி விக்ரமாவதாரவைபவம் முதலியவைகளாலே துதிப்பதன் மூலம் குறிக்கிறது என்பது ஸ்பஷ்டமாக விளங்குகிறது. யஜுர்வேதத்தில் முதற்காண்டம் 2-ம் ப்ரஶ்னத்தில் "இதம் விஷ்ணு:, விஷ்ணோர் நுகம்" என்ற மந்திரங்களை யும், முதற்காண்டம் 3-ம் ப்ரஶ்னத்தில், "விஷ்ணோ: கர்மாணி, தத்விஷ்ணோ: பரமம். தத்விப்ராஸ:" முதலான மந்திரங்களையும் விஷ்ணுவைபவபரங்களாக உள்ளவை களைக் காணலாம். மேலும் விஷ்ணுவே பரதத்வம். வழி பட வேண்டியதும் அத்தத்வமே என்பது, நமது பூர்வா சார்யர்களால் ஸமீசீன ப்ரமாணயுக்திகளைக்கொண்டு நிலைநாட்டப்பட்டிருப்பது ஒருபுறமிருக்கச்செய்தே. 'ஸகல கலா கூலங்கஷ மநீஷரான வேதமூர்த்தி' என்று புகழப் பட்டுள்ள திருவிசநல்லூர் ராமஸுப்பாஶாஸ்த்ரிகளால் இயற்றப்பட்டுள்ள விஷ்ணுதத்வ ரஹஸ்யம் என்றுள்ள சிறந்த க்ரந்தத்திலும் விளக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

11. நாராயண என்னும் நாமம். இங்கு, 'பல தெய் வக் கொள்கையுள்ளதாகக் காணப்படும் வேதத்திலிருந்து விஷ்ணுவே ஓரே தெய்வம் என்ற கொள்கையுள்ள வைணவ மதம் எப்படித் தோன்றியிருக்கக்கூடும். இதுபற்றி ஆராய்ச்சி இன்றும் நடக்கிறது. வைணவமதம் விஷ்ணு என்கிற பெயரை முக்யமாகக் கொள்ளாமல் நாராயணன் என்பதையே சிறப்பாகக் கூறுகிறது" என்ற கருத்து காணப்படுகிறது. இதுவும் சரியல்ல. பல தெய்வக்

கொள்கை என்று பல பரதத்வமான முக்₂யதெ₃ய்வங்கள் என்று கருத்தானல் அது வேத₃க்கருத்தல்ல. ஸர்வ ஶாஸ்த்ரங்களும் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே பரதத்வம் என்று ஒருமுக₂மாகக் கூறுகின்றனவன்றே. "ஸ ஆத்மா அங்க₃ந்யந்யா தே₃வதா:" "ய: ப்ருதி₂வ்யாம் திஷ்ட₂ந் ய ஆத்மநி திஷ்ட₂ந், யஸ்ய ப்ருதி₂வீ ஶரீரம், யஸ்ய ஆத்மா ஶரீரம்" "ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:" "ஜக₃த் ஸர்வம் ஶரீரம் தே" "தத்ஸ்த₂த்வாத₃நுபஶ்யந்தி ஹ்யேக ஏவேதி ஸாத₄வ:" "வேதை₃ஶ்ச ஸர்வைரஹமேவ வேத்₃ய:" இது முதலிய ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணவசனங்களால் இவ்வர்த்த₂ம் ஸித்₃தி₄க்கிறது. ஆகையால் வேத₃ங்களுக்குப் பல முக்₂ய தெய்வக்கொள்கையில் கருத்தில்லை என்பது ஸித்₃த₄ம். "பீ₄ஷாஸ்மாத்₃வாத: பவதே பீ₄ஷோதே₃தி ஸூர்ய: பீ₄ஷாஸ்மாத₃க்₃நிஶ்சேந்த்₃ரஶ்ச ம்ருத்யுர் தா₄வதி பஞ்சம இதி" "ஏதௌ த்₃வௌ விபு₃த₄ஶ்ரேஷ்டௌ ப்ர ஸாத₃க்ரோத₄ஜௌ ஸ்ம்ருதௌ। தத₃ாத₃ர்ஶிதபந்தா₂நௌ ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரகௌ ||" இத்யாதி₃களான ப்ரமாண வசனங்களை அநுஸரித்து, தாழ்ந்த பல தெய்வங்கள் இருக்கின்றன என்பதில் ஒருவருக்கும் சிறிதளவும் ஆக்ஷேபம் இருக்க இடமேயில்லை. ஆக, ஸர்வஶாஸ்த்ரங்களுக்கும், ஓரே முக்₂யதெய்வம் என்பதிலும், அதிலும் அந்த முக்₂ய தெய்வம் விஷ்ணுவான ஸ்ரீமந் நாராயணனே என்பதிலும் கருத்தாகையால் இம்மதத்திற்கு வைஷ்ணவம் என்ற வழக்கு மிகவும் பொருந்தியதே. இதனால் 'விஷ்ணு என்பதைவிட்டு நாராயண என்பதுக்குச் சிறப்பு எப்படி என்கிற கேள்வியும் அடிபட்டு விடுகிறது. ப₄க₃வந் மந்திரங்கள் மற்ற மந்திரங்களைக் காட்டிலும் சிறந்தவை. அவை தன்னிலும் அஷ்டாக்ஷரம், த்₃வாத₃ஶாக்ஷரம், ஷடா₃க்ஷரம் என்கிற மூன்றும் மிகச்சிறந்தவை என்று ப்ரஸித்₃த₄ம். மற்ற இரண்டு மந்திரங்களைக்காட்டிலும் அஷ்டாக்ஷரத்திற்கு அநுஷ்டா₂ன மந்திரமான த்வயத்தில் சேர்ந்திருக்கும் பெருமையுண்டு. ஆகையால் இந்தக் கேள்விக்கு இடமில்லை.

12. வேத₃ உபநிடதங்களில் வழிபாடு—இங்கு—வேத₃த்தில் யாக₃ங்களைத் தவிர பகவானின் உருவவழிபாடு சொல்லப் படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. இதுவும் சரியல்ல; பூர்வோத்தர வேத₃தபு₄ரக₃ங்களிலே பல இடங்களில் மத்ஸ்யகூர்ம திரு₃ த₃ஶாவதாரங்களைப்பற்றியும், அர்ச்சாவதாரத்தைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது என்பதும், தாமரைக் கண்ணன் முதலான,உருவவழிபாட்டிற்கு முக்கியமான தி₃வ்யதிருமேனி ஸம்ப₃ந்த₄ம் ப₄க₃வானுக்குக் கூறப்பட்டுள்ளது என்பதும் விஷ்ணுசித்தவிஜயம் என்னும் க்ரந்தத்தில் ஸ்ரீஸுத₃ர்ஶனம் ஆசிரியரால் விரிவாக விளக்கப்பட்டுள்ளது காணத்தக்கது.

15. இங்கு — வைஷ்ணவ ஆசார்யர்கள் விஷ்ணு புராணத்தை அடிப்படையாகக்கொண்டு வைணவத்தை வளர்த்தனர். உருவமும் குணமுமற்றதாக உபநிஷத்தில் கூறப்பட்ட ப்₃ரஹ்மத்தை ரூபகு₃ணங்களுள்ள விஷ்ணுவாக விளக்கிய பெருமை விஷ்ணுபுராணத்துக்கே உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இதுவும் அடியோடு பொருந்தாததேயாம். "வேத₃த்தில் குணமில்லாததாகவும் உருவமற்றதாகவும் கூறப்பட்டது ப்₃ரஹ்மம். விஷ்ணுபுராணமோ ரூபகு₃ணங்களுள்ளதான விஷ்ணுவைக் கூறுகிறது. இவை இரண்டையும் ஒன்று சேர்த்துவிட்டார்கள்" என்பது உபஹாஸ்யமல்லவா. வேத₃த்திற்கு விளக்கம் கூறுவதன்றோ விஷ்ணுபுராணம். விளக்கம் கூறவந்தது வேத₃விருத்₃த₄த்தைக் கூறுமா? வேத₃த்தில் கூறப்பட்டதையே விளக்குவதன்றோ விளக்கத்தின் (உபப்₃ரும்ஹணத்தின்) கார்யம். "தஸ்ய யதா₂" கப்யாஸம் புண்ட₃ரீகம் ஏவமக்ஷிணீ" "யதா₂ மாஹாரஜநம் வாஸ:" 'ஆதி₃த்யவர்ணம்" "அபஹதபாப்மா விரஜ:....ஸத்யஸங்கல்ப:" இது முதலிய வேதவாக்யங்களாலே ப₄க₃வானுக்கு ரூபமும் குணங்களும் கூறப்பட்டுள்ளன. இப்படி ரூபகு₃ணாதி₃கள் உள்ளதாக உபநிஷத்துக்களில் கூறப்பட்டுள்ள ப்₃ரஹ்மம்தான் ஸ்ரீமந் நாராயணன் என்பதும் அதே உபநிஷத்₃ வாக்யங்களாலேயே.

ஸாதிக்கப்பட்டுள்ளது. பற்பல காரண வாக்யங்களில் 'ப்₃ரஹ்ம' 'ஆத்மா' முதலிய பத₃ங்களால் குறிக்கப்பட்டுள்ள காரணவஸ்துவையே, "ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்₃ரஹ்மா நேஶாந:" முதலிய வாக்யங்களில் நாராயண பத₃த்தால் குறித்திருப்பதால் ஸாமாந்ய விஶேஷ ந்யாயத்தைக்கொண்டு எல்லாக் காரண வாக்யங்களாலும் நாராயணன் ஒருவனே காரணவஸ்துவாகக் குறிக்கப்படுவதாக நிச்சயிக்கப்படுகிறது. இதைத்தான் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் "ஸாமாந்யபு₃த்₃தி₄ஜநகாஶ்ச ஸத₃ாதி₃ஶப்₃தா₃: தத்த்வாந்தரப்₄ரமக்ருதஶ்ச ஶிவாதி₃வாச:| நாராயணே த்வயி கரீஶ வஹந்த்யநந்யம் அந்வர்த்த₂வ்ருத்தி பரிகல்பிதமைககண்ட்₂யம் ||" என்று அருளியுள்ளார். ஆக, உபநிஷத்துக்களில் 'உருவமற்ற நிர்க்கு₃ணப்₃ரஹ்மம் சொல்லப்பட்டது' என்பதற்கு இடமேயில்லை.

இதனால் 23-வது பாராவில் கூறப்பட்டுள்ளதும் (உபநிஷதங்கள் நிர்கு₃ணப்₃ரஹ்மத்தைக் கூறுகின்றன என்பது) தள்ளப்பட்டதாகிறது. உபநிஷத்துக்களில் ப்₃ரஹ்மத்திற்கு கு₃ணமுண்டு என்று "பராஸ்ய ஶக்திர் விவிதை₄வ ஶ்ரூயதே" முதலிய வாக்யங்களாலும், கு₃ணமில்லை என்று "நிர்கு₃ணம் நிரஞ்ஜநம்" இது முதலிய வாக்யங்களாலும் கூறப்பட்டுள்ளது காண்கிறதாயினும், ஒன்றுக்கொன்று முரண்பட்ட பொருளைக்கூறுவதாக வேத₃வாக்யம் இருக்க முடியாதாகையால் பல ந்யாயங்களைக்கொண்டு கல்யாண கு₃ணங்கள் உண்டு என்றும், ஹேயகு₃ணங்கள் இல்லை என்றும் முன் எடுத்த உபநிஷத்₃ வாக்யங்களின் கருத்து என்று பூர்வாசார்யர்களின் அசைக்கமுடியாத முடிவன்றோ. நமது விசிஷ்டாத்₃வைத விஜய பூர்வபா₄க₃த்தில் இதை விளக்கியுள்ளோம். ஆக, நிர்கு₃ணப்₃ரஹ்மம் என்பது குதிரைக்கொம்புபோன்றதென்று ஸித்₃தி₄த்தது.

20. இங்கு—ஶரீரஶரீரிபா₄வம் இராமாநுஜர் க்₃ரந்த₂ங்களில்தான் முதலில் உருவானதாகத் தெரிகிறது. உருவ

மற்ற ப்₃ரஹ்மத்திற்கு ஆண் உருவம் கொடுத்து பெண்ணுருவமுள்ள மஹாலக்ஷ்மியை அவனுடன் சேர்த்து, பரிவாரங்கள் இருப்பிடம் இவற்றையும் பரக்க வருணித்து, வைணவத்தை உருவாக்கினார்கள். பு₄க்தி மோக்ஷஸாத₄நம் என்று முதலில் இராமாநுஜர் தான் கூறினார். ப்ரபத்தி மோக்ஷஸாத₄நமாக அவர் கூறவில்லை முதலான கருத்துக்கள் காணப்படுகின்றன. இவையும் பொருந்தாதவையே. ஶரீர ஶரீரிபா₄வம் ராமாநுஜர் க்₃ரந்த₂ங்களில்தான் முதலில் உருவாகிறதாகத் தெரிகிறது என்பது உண்மையல்ல. "யஸ்ய ப்ருதி₂வீ ஶரீரம் ....யஸ்ய ஆத்மா ஶரீரம், ய: ப்ருதி₂வ்யாம் திஷ்ட₂ந்.........ய ஆத்மநி திஷ்ட₂ந்||" [ப்₃ருஹதா₃ரண்யகம்] "ஜக₃த் ஸர்வம் ஶரீரம் தே" [ஸ்ரீராமாயணம்] "தாநி ஸர்வாணி தத்₃வபு:" "தத் ஸர்வம் வை ஹரேஸ் தநு:" [வி-பு] இத்யாதி₃ ஶ்ருதிஸ்ம்ருத்யாதி₃ ப்ரமாண வசநங்களால் ப்₃ரஹ்மத்திற்கும் உலகத்திற்கும் ஶரீராத்ம பா₄வம் ஸித்₃தி₄க்கிறதன்றோ. ஔபநிஷத₃மான இவ்வர்த்த₂த்தைத்தான் ஸ்ரீ பா₄ஷ்யகாரர் தம் க்₃ரந்த₂ங்களில் பல படியாக விஸ்தரித்து ஸ்தா₂பித்துள்ளார். இது மட்டுமல்ல. பூர்வமீமாம்ஸகர்களாலும் வைஶேஷிகர்களாலும் இந்த ஶரீராத்மபா₄வம் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இது விஷயங்கள் எல்லாம், நம்முடைய விஶிஷ்டாத்₃வைத விஜய பூர்வபா₄க₃த்தில் முகவுரை விமர்ஶத்தில் மிகத்தெளிவாகப் பரக்க நிரூபிக்கப்பட்டுள்ளன. "உருவமற்ற ப்₃ரஹ்மத்திற்கு ஆண் உருவம் கொடுத்து" இத்யாதி₃யான அநுவதி₃க்கவும் தகாத வாக்யங்கள் அநாத₃ரிக்கத்தக்கவை. "ஆதி₃த்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்" "அந்தராதி₃த்யே ஹிரண்மய: புருஷ:" "அஸ்யேஶாநா ஜக₃தோ விஷ்ணுபத்நீ" "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" "ஸதா₃ பஶ்யந்தி ஸூரய:" "க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே" இது முதலிய வேத₃வாக்யங்களாலேயே, ஹேயகு₃ணமற்று ஸகல கல்யாணகு₃ணமுள்ளது, அப்ராக்ருதமாய், தி₃வ்யமான திருமேனியுள்ளது, பிராட்டிமார்களோடும், நித்யஸூரிகளோடும், மற்ற பரி

ஜனபரிச்ச₂த₃ங்களோடும் கூடியது பரப்₃ரஹ்மம், அப்ராக்ருத மான பரமபத₂த்தில் ஸேவை ஸாதித்துக்கொண்டிருப்பது என்று ஸித்₃தி₄க்கிறதன்றோ.

"இராமாநுஜர்தான் முதலில் ப₄க்தியால் மோக்ஷம் வரும் என்றவர்" என்பதும் பொருந்தாது. ஆளவந்தாருடைய கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் ப₄க்தியால் மோக்ஷ ஸித்₃தி₄ பரக்கப் பேசப்பட்டுள்ளதே. அதற்கும் முன்பே ப₄க்தி மோக்ஷோபாயமென்பது உபநிஷத், கீ₃தை முதலிய ஸர்வப்ரமாண ஸித்₃த₄மே. ப்ரபத்தியை மோக்ஷஸாத₄னமாக இராமாநுஜர் ஒப்பவில்லை என்பதும் தவறு. தம்முடைய க₃த்₃யத்ரயத்தில் இது விஷயத்தைப் பரக்க ஸாதித்திருக்கிறாரன்றோ. க₃த்₃யத்ரயம் அவருடைய க்₃ரந்த₂மன்று என்பது மிகத் தவறு. இது விஷயத்தில் பூர்வர்கள் எவரும் விப்ரதிபத்தி கொண்டதேயில்லை. மேலும் ஸ்ரீஸ்வாமி தேசிகன் உள்பட ஆசார்யர்கள் பலர் அதை அவருடைய தாகவேதான் எடுத்துள்ளார்கள். பா₄ஷ்யங்களும் எழுதியுள்ளனர். ஸ்ரீ பா₄ஷ்ய கீ₃தாபா₄ஷ்யாதி₃களில் எத்தகைய வர்ணநாசைலியும், வாக்யசைலியும் காணப்படுகிறதோ அதே சைலிதான் க₃த்₃யத்திலும் உள்ளதாகையாலும் ஸ்ரீ பா₄ஷ்யகாரரேதான் க₃த்₃யத்ரயகர்த்தா என்பது எவராலும் அசைக்கமுடியாது.

இப்படியாக, "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்ற புத்தகத்தில் அநேகமாக எல்லாமே இந்த ரீதியில் மறுக்கத் தக்கவையேயாயினும், ஸ்₃தா₂லீபுலாக ந்யாயமாக முறையில் இங்கு சில விஷயங்களை மட்டும் எடுத்து பதில் கூறப்பட்டுள்ளது.

இத்த₂ம் சரித்ரநிஷ்பந்ந வைஷ்ணவாக்₂யோ ஹ்யநர்த்த₂த₃: ।
க்₃ரந்தோ₂ऽயம் ரங்க₃நாதே₂ந ப்ரத்யாக்₂யாத: ப்ரமாணத: ॥

[இவ்வண்ணமாக, விபரீதார்த்த₂ங்களைச்சொல்லும் (அநர்த்த₂த்தை அளிக்கும்) "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்னும் நூல் ("கோழியாலம் ஸ்வாமி" என்ற ஸுப்ரஸித்₃த₄ யதிஸ்ரேஷ்ட₂ரின் திருவடியான) ரங்க₃நாத₂த₃ாஸனால் ப்ரமாணங்காட்டி மறுக்கப்பட்டது.]

ப்ரமாதீ₃ துலா ஸுக்ல சதுர்த்தீ₃ (30—10—73)

இத்த₂ம்,
ஸ்ரீ வைஷ்ணவ தா₃ஸாநுதா₃ஸ:
கோழியாலம் ரங்க₃நாத₂ாசார்ய தா₃ஸ :

4. கே. ஏ. காளியப்ப முதலியார்.
உலகாரிய நிலையம், 21 செங்குந்தர் வீதி, திருப்பத்தூர், வ. ஆ.

" அக்நிஹோத்ரத்திற்கு ஆப்பு "

வரலாற்றில் பிறந்த வைணவம் எனும் நூலை எழுதியவர் அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியர் இவர் வைணவ மரபில் தோன்றி வைணவத்துக்கு எதிரம்பு கோத்து அத்3வைதத்தை அவலம்பித்து, அதிலும் ஆதிசங்கர பகவத்பாதாளுடைய முடிவான வைஷ்ணவ மதக் கொள்கையையும் உணராமல், கூறியது கூறல் முரண்படக் கூறல் முதலான பல குற்றங்களையுடைத்தான கட்டுரைகளை எழுதக்கற்றவர். இலக்கண இலக்கியங்களில் அல்பஸ்ருதராய் தான்தோன்றித்தனமாய் அபத்தக் கட்டுரைகளை எழுதிவிட்டு முறையே ' ஸ்ரீராமாநுஜன் ' ' ஸ்ரீ ஸுதர்சனம் ' ஆகிய இவ்விரண்டு ஸஞ்சிகைகளின் ஆசிரியர்களான இரண்டு சிங்கங்கள், ஸ்ரீமான் மஹாமஹோபாத்யாய P. B. அண்ணங்கராசார்ய ஸ்வாமி, ஸ்ரீமான் எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி (எம் ஏ. பி. எல்.) அட்வகேட், இவர்களிடத்தில் சிக்கிக்கொண்டு என்ன விடை கூறுவது என்று தெரியாமல் பரக்கப் பரக்க விழித்துக்கொண்டிருப்பவர். ஸுதர்சனம் ஆசிரியர் நியமனப்படி இந்த மறுப்பு எழுதியவர் கே. ஏ. காளியப்ப முதலியார், உலகாரிய நிலையம், 21, செங்குந்தர்வீதி, திருப்பத்தூர், வடாற்காடு மாவட்டம். அக்நிஹோத்ரத்திற்கு இவ்வாறுபதித நிலையேற்படக்காரணம், ஸ்ரீ வைஷ்ணவ அதிலும் குறிப்பாகத் தென்னாசார்ய ஸம்ப்ரதாயக் கொள்கைகள் பிடிக்காததே என்பது இவர் எழுதிய சுவடியினால் தெளிவாகிறது. பொற்கற்பகம் இராமானுசமுனி போந்தபின் குறும்பு செய் நீசர்கள் மாண்டொழிந்தனர் என்று அமுதனார் கூறினார். ஆனால் ஏதோ ஒரு மூலையில் முட்டாக்கிட்டு மறைந்த ஒன்று இப்போது அக்நிஹோத்திரியாகக் கிளம்பியது போலும். குடிசை பற்றியெரியும் போது இன்னார் இனியாரென்று பாராமல் அக்னியை அணைக்க முனைந்து ஓடுவது போல் இந்த அக்நிஹோத்ரியின் அகங்காரத்தை அவிக்க தென்கலை வடகலை சம்பிரதாயஸ்தர்கள் அனைவரும் இதில் பங்கு கொள்வது ஸ்ரீமத் பகவத் பாகவத ஆசார்ய கைங்கரியமாகும். இவரைத் திருத்துவதற்காக மறுப்பல்ல. இவர் சுவடியைக் கண்டு மந்தமதிகள் மயங்கி அனர்த்தப்பட்டுக் கெடுவர்கள். இதைத் தடுக்கவே மறுப்பெழுதுதல் அவசியம். ஆகவே, ஒரு சிலவற்றுக்கு ஆசாரியன் திருவடிகளை முன்னிட்டு மறுப்பெழுத முன்வருகிறேன்.

(ஸுதர்சனம் சுருக்கத்தில் உள்ள பாராக்களின் எண்களைக்குறிப்பிட்டு மறுப்பு எழுதப்படுகிறது.)

பாரா 1:- உலகமதங்கள் எல்லாம் ஒரு காலத்தில் தோன்றி, வளர்ந்தது போல், தமிழ் நாட்டு வைணவமும் தோன்றி வளர்ந்து இன்றுள்ள நிலையை எய்தியுள்ளது என்கிருர். இவர் கருத்துக்கு ப்ரமாணம் ஒன்றும் சொன்ஞர் இல்லை ஆகவே இதை ப்ராமாணிகர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

பாரா 2:- சித்து, அசித்து, ஈச்வரன் என்னும் தத்துவத்ரய ஞான சூனியரான இவர். வேதத்துக்குக் கால நிர்ணயம் செய்கிருர். வேதம் நித்தியமானது என்பதை வேதம் வல்லார்பால் கேட்டுத் தெளிக.

பாரா 3:- மூம்மூர்த்திகளுள் காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவுக்கு முதலிடம் கொடுத்துத் தோன்றியது விஷ்ணு மதம் என்கிருர். முதலிடம் கொடுத்தது யார்? இவரா? இவர் அப்பஞ? அல்லது இவர் பாட்டஞ? ''ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்₃ரஹ்மா நேசாந:'' ''நாராயணுத்₃ ப்₃ரஹ்மா ஜாயதே, நாராயணுத்₃ ருத்₃ரோ ஜாயதே'' என்று உபனிஷத்துக்களல்லவோ மும்மூர்த்திகளில் விஷ்ணுவுக்கு முதலிடம் கொடுத்தது. ஆகவே வைணவம், வேதகாலத்திற்குப் பிற்பட்டது என்பது பித்தம் தலைக்கேறியவரின் பிதற்றல்

பாரா 5:- ''வேதப்ரோக்தமான கர்மதத்வம் மறைந்து போயிற்று. வர்ணதர்ம முக்கியத்துவமும் மறைய வேண்டியதே. இது சமுதாய தர்மமாக நடைபெறுகிறது. இது வரலாறு காட்டும் செய்தி'' என்கிருர். இதற்கு ஆரூட₄ பதிதஞன இவரே சான்று

பாரா 6:- இதில் ''உலகம் கற்பனை. கவிகள். வேதாந்திகள். மதாசாரியர்கள் கற்பனை. அர்ச்சாவதார மூர்த்திகள் கற்பனை. விபவாவதாரமான ராமகிருஷ்ஞதி அவதாரங்கள் கற்பனை. ஆழ்வார்களின் பாடல்கள் கற்பனை. ஆழ்வார்கள் வாக்கில் அரசர்கள் ஊர்கள் பற்றிய செய்தி சிறிதளவே புலஞகிறது'' என்கிருர். ஞானநூல்களில் லௌகிக விஷயங்களுக்கு அதிக இடமிராது என்பது, எல்லாம் கற்பனையென்னும் இவர்க்குப் புலஞக ப்ரஸக்தி இல்லை. எல்லாம் கற்பனை என்னுமிவர் சொல்லுவதே உண்மையில் கற்பனை.

பாரா 7:- வைணவம் என்ற சொல் வேதத்தில் வேறொரு கருத்தில் பயன்படுத்தப்பட்ட சொல்லாகும் என்கிறார். வேறொரு கருத்தை விளக்காமல் மூடு மந்திரமாகச் சொல்லுவதென்னோ? இது பாமரரை ஏமாற்றவே. ஸஹஸ்ரநாம பாஷ்யங்களில், சங்கரர் பட்டர் பாஷ்யங்களைக் கண்டு விஷ்ணுவே பரம்பொருள் என்பதையும், காலவரையின்றி என்றுமுள்ள தத்துவமாகும் என்பதையும் உய்த்துணர்க.

பாரா 9:- தென்கலை என்றாலே, எதிர்மறை வடகலை என்றுள்ளது. தென்மொழி என்றாலே, வடமொழி ஒன்றுண்டு. இதேபோல் இவர் தென்னாட்டு வைணவம் என்று கூறும்போது, வடநாட்டு வைணவம் ஒன்று இருந்தே தீரவேண்டும். அந்த வடநாட்டு வைணவத்தைப் பற்றி இவர் இதுகாறும் வாய்திறக்கவேயில்லை. ஏன்? தென்னாட்டு வைணவத்தைக் குறிக்கொண்டு தூஷித்துத் திரியவே.

பாரா 11:- நாராயண என்னும் நாமம்-பகவன் மந்த்ரங்கள் பலவாயினும் மற்ற மந்திரங்களைக் காட்டிலும் நாராயண மந்திரத்தின் உட்பொருள்களின் சக்தியையும் மிடுக்கையும் நோக்கி உபனிஷத்தில் விஷ்ணு காயத்ரியிலும், திருமங்கை ஆழ்வார் அருளிய 'குலம் தரும்' இத்யாதி பாசுரங்களில், 'நான் கண்டு கொண்டேன் நாராயணா வென்னும் நாமம்' முதலான விடங்களிலும், நாராயண நாமத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. உபநிஷத்துக்களும் நாராயண பதத்தின் அர்த்த கௌரவத்தை நோக்கி, அதை மிகவும் விரும்பின. குருமுகமாக ரஹஸ்யக்ரந்தங்களைக் காலக்ஷேபம் செய்யாமையால் இவர்க்கு இதெல்லாம் விளங்காதது வியப்பல்ல.

பாரா 12:- வேதத்தில் யாகங்களே சொல்லப்பட்டுள்ளன. அதில் உருவ வழிபாடு சொல்லப்படவில்லை என்கிறார். வேதத்தில் பூர்வ பாகம் கர்ம காண்டத்தில் சொல்லப்பட்ட அபிசார ஹோமாதிகளான யாகங்கள் ராஜஸதாமஸர்களான நாஸ்திகர்களை நல்வழிக்குத் திருத்த, வேதம் வகுத்த உபாயம். வேத விதிப்படி கர்மங்களைச் செய்துவந்தால் நாளடைவில் இவனுக்கு ஞானம் உதயமாகி, ஜகத் காரண வஸ்து ஸ்ரீமந் நாராயணனே, இதர தெய்வங்கள் இவனுக்கு அங்கங்கள் என்ற அறிவு பிறந்து உத்தர பாகத்தில் ப்ரஹ்மத்திற்கு உருவுண்டு, குணமுண்டு என்றதைக் கற்றுணர்ந்து உருவவழிபாட்டில் ஈடுபடச் செய்கிறது. இதை உணர்வாராக.

பாரா 13:- தமிழ்நாட்டு வைணவம் தனக்கு வேண்டிய அடிப்படைக் கருத்துக்களை வேதத்திலிருந்து பொறுக்கி எடுத்துக் கொண்

டுள்ளது, என்கிறார். வேதத்தை ப்ரமாணமாக்கிக் கொண்டு முழுதும் கொள்ளாமல், 'தத்வமஸி,' 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' இத்யாதிகளான சில மஹா வாக்யங்களால் உண்டாகும் ஜ்ஞாநங்களாலே மோக்ஷம் என்கிற குத்ருஷ்டிகளான அத்வைதிகளின் சேர்க்கையாலே பொறுக்கி எடுக்கும் புத்தி இவர்க்கு வந்துள்ளது. வடநாட்டு வைணவத்தைப் பற்றி ஒன்றும் எழுதாமல் மௌனமாக இருக்கிறவர் பொறுக்கிக் கொண்டே இருக்கட்டும். பொறுக்குகிற வேலை தென் நாட்டு வைணவர்களுக்கு வேண்டாம்.

பாரா 14:- பட்டிமேய்த்துண்ணும் கொண்டிப்பசுவுக்குத் தடிகட்டி விடுவாரைப் போல, கொண்டிக்காளைபோன்ற ப்ரவ்ருத்திபரர்க்கு விஷயாந்தரங்களில் நெஞ்சு செல்லாமைக்காகவும் நல்வழியில் மனம் செல்வதற்காகவும் வேதத்திற் சொன்ன கர்மங்கள் என்பதையும் தேவாலயங்களிலும் க்ருஹங்களிலும் எழுந்தருளியிருக்கும் அர்ச்சா விக்ரஹங்களுக்குப் பூஜையும் திருவிழாக்களும் அநுபவத்திற்காக என் பதையும் அறிய இவ்வக்நிஹோத்ரிக்குப் ப்ராப்தமில்லை.

பாரா 20:- மோக்ஷ சாதனம் பக்தியே, ப்ரபத்தி என்று இராமாநு ஜர் குறிப்பிடவில்லை என்கிறார் இந்த அக்நிஹோத்ரி, தத்துவ நிர்ணயம் பண்ணின தூப்பில் உய்யக்கொண்டார் விஷயமாக இரா மாநுஜர் அருளிச்செய்த வார்த்தை ஒன்று உண்டு. இந்தத் தூப்பில் உய்யக்கொண்டார் பக்திநிஷ்டராகையாலே, ஸ்ரீ ராமாநுஜர் இவரை ப்ரபத்திநிஷ்டராக்கச் சரமஶ்லோகார்த்தத்தை அருளிச் செய்ய, "அர்த்தஸ்திதி அழகிதாயிருந்தது ஆயினும் பக்தியை விட்டு, ப்ரபத்தியைப் பற்றத்தக்க ருசி எனக்கில்லை" என்ன, "வித்வானாகையாலே அர்த்தத்துக்கு இசைந்தாய், பகவத்ப்ரஸாதம் இல்லாமையாலே ருசி பிறந்ததில்லை," என்றார் ஆகையால் இராமா நுஜர் ப்ரபத்தியை மோக்ஷ சாதனமாகக் குறிப்பிடவில்லை என்று எழுதி யிருப்பது தவிடுபொடியாயிற்று.

பாரா 22:-பொய்கையாழ்வார் (87வது பாசுரத்தில்) "கன்றெறிந்த தோளான் கனை கழலே காண்பதற்கு, நன்கறிந்த நாவலஞ்சூழ்நாடு" என்றபடி, நம் பாரதநாடு ஆன்ம விஷய அறிவு வளர வாய்ப்புள்ள நாடாகும். ஆன்மதத்துவத்தை உணராத, தேஹமே ஆத்மா என்கிற கொள்கை உடையவர்கள் (Materialists) தேசங்களான ஈஜிப்ட் முதலிய தேசங்களில் உருவ வழிபாடு அழியவும், நம்நாட்டில் விக்ரஹ வழிபாடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து கொண்டே போக

ஷமிருப்பது—நம்நாடு இயற்கையாகப் பெற்றுள்ள புண்ணியத்தின் பலனேயாகும்—என்பதை ஈஜிப்டில் பிறந்திருக்கவேண்டிய அக்நி ஹோத்ரி உணர்வாராக.

பாரா 23:- ''உபநிடதங்கள் கடவுளை நிர்க்குணப்பிரும்மமாகக் கூறுகின்றன.'' என்கிறார். உபநிடதங்கள் அதே கடவுளை சகுண பிரம்மமாகவும் கூறுகிறதே, இதை மறைத்து உலகத்தை ஏமாற்று கிறார். இரண்டையும் கூறி ஸமஞ்ஜஸப்படுத்தினால், இவர் அபிமானிக்கும் அத்வைதம் பாதிக்கப்படுகிறது. இவ்வாறு வஞ்சிப்பது குறும்பு செய் நீசர்களின் செயலாகும்.

பாரா 35:- ''வேத மந்திரங்கள் பல பெயருள்ள தெய்வங்களைச் சொல்வதால் இங்கு விஷ்ணுதான் முழு முதற்கடவுள் எனக்கூற இடமில்லை'' என்கிறார். அவ்யாபகமான சகல பகவன் மந்த்ரங்களிலும் ச்ரேஷ்டமாயிருக்கிற வியாபக மந்த்ர த்ரயத்தையும் பிரதிபாதிக்கிற விஷ்ணுகாயத்ரி (நாராயணாய வித்₃மஹே, வாஸுதே₃வாய தீ₄மஹி, தந்நோ விஷ்ணு:ப்ரசோத₃யாத்) சகல மந்த்ரங்களையும் கு₃ணவிப₄ாக₃த்தால் வடிகட்டி, மூன்று முக்கிய மந்த்ரங்களான, நாராயண, வாஸுதே₃வ, விஷ்ணுவாக ஓதுகிறது. ஆகையால் எங்கு விஷ்ணு சப்தம் சொல்லப்படுகிறதோ, அங்கு நாராயணனையே குறிக்கும். ஆகவே விஷ்ணுதான் முழுமுதற் கடவுள் என்ற நிரூபணத்தில் குறையொன்று மில்லை. வைஷ்ணவராகப்பிறந்தும் இவர் உய்த்துணராத குறையே உள்ளது.

பாரா :- 54. ''ஆழ்வார்கள் பாடல்களெல்லாம் மூல மூர்த்தியை மட்டும் பற்றியவை என்று தெரிந்ததே'' என்கிறார். எந்தெந்த ஆழ்வார், மூலவர், உத்ஸவர், இவர்களில் யார், எவரைப் பாடியுள்ளார்கள் என்பது—திராவிட வேதத்தையே விரும்பாது குத்₃ருஷ்டி மதமான அத்வைத மதத்தை அவலம்பித்த இவருக்கு எப்படிப் புலனாகும்?

பாரா 55:- ''தெய்வத்தை விட்டுப்பிரியாத பாதுகையை தலையில் வைப்பதும் மக்களை திருப்தி பண்ணவே ஏற்பட்டது. பிரதிஷ்டையான சடாரியை மற்ற மனிதர்களுடன் சம்பந்தப்படுத்துவது அசுத்திக்குக் காரணமாகும். இன்றும் மைசூர் பரகால மடத்தில் சடாரியை மனிதன் தலையோடு சம்மந்தப்படுத்துவது இல்லை'' என்கிறார். (திருவாய்மொழி 2.9.1.) ''எம்மா வீட்டுத் திறமும்'' பாசுரத்தில் ''நின் செம்மா பாத

பற்புத் தலை சேர்த்து'' என்றதில் ''(ஈட்டு வியாக்யானம்) உன்னுடைய அகவாய் சிவந்து, புறவாய் ஶ்யாமமாய், விகாஸம், செவ்வி, குளிர்த்தி நாற்றங்களுக்குத் தாமரையை ஒரு போலி சொல்லலாம்படியிருக்கிற திருவடிகளைக்கொண்டு வந்து என் தலையிலே வைக்க வேணும்'' என்று ஆழ்வார் பிரார்த்திக்கிறார். இப்படியே ஆழ்வாரை ஆசாரியராக அடைந்தவர்கள் திருவடிகளை சிரசின் மேல் வைத்து சுத்தி பெற முனைகின்றார்கள். திருவடி சம்பந்தத்தால் மனிதன் புனிதனாகிறான். இதுதான் சடாரியின் சக்தி. இதை இந்த அக்நிஹோத்ரி ஏழு ஜன்மம் எடுத்தாலும் உணர முடியாது.

பாரா 61:- ''நவக்கிரஹப் பிரதிஷ்டை வைணவ வழிப்பாட்டிற்குப் புறம்பானது என்பது தவறான கருத்தேயாம்'' என்கிறார். ஆம். பிரணவநமஸ்ஸுக்களோடு கூடிய நாராயண மந்த்ரத்தில் ஒரு முக்கியமான பொருளான அநந்யார்ஹ ஶேஷத்வத்தின் மஹிமையை அறியாத இவருக்குப் புறம்பானதல்ல. இதன் மஹிமையை அறிந்தவர்களுக்கு நவக்ரஹவழிபாடு புறம்பே. பாஷண்டிஸ்பர்ஶமுடையவர்களே நவக்ரஹ பூஜை செய்வார்கள். மாரியம்மனுக்குக் கூழும் வார்க்கிறார்கள். ஸ்ரீ சூர்ணத்தின் மேல் பஸ்மத்தையும் இடுகிறார்கள். மறந்தும் புறந்தொழாமாந்தர் இதையெல்லாம் செய்யமாட்டார்கள். பாஷண்டிஸ்பர்ஶமுடைய இவர் இதை அறிவாராக.

பாரா 84 :—''இராமாநுஜர் கீதார்த்தம் கேட்க பதினெட்டுத் தடவை திருக்கோட்டியூர் நம்பியிடம் போனவருக்கு பதினெட்டாவது தடவையில் இவருக்கு அஹங்காரம் நீங்கி, பின்புதான் உபதேசிக்கப் பட்டது'' என்று எழுதுகிறார். சரித்திர உண்மை தெரியாமல் அக்நிஹோத்ரி அஜ்ஞான ஹோத்ரியாகி உளருகிறார். அஹம்பாவம் இவருடையதே.

உண்மைகேண்மின் — பகவத் கீதையில் சரமஶ்லோகார்த்தத்தினுடைய கௌரவத்தையும் இதற்கு அதிகாரிகளின் தேட்டத்தையும் நோக்கி, இவருடைய ஆஸ்திக்ய ஆதர பரீக்ஷார்த்தமாகப் பலகால் நடந்து துவளப்பண்ணி சூளறவு கொண்டு மாஸோபவாஸம் கொண்டு அருமைப்படுத்தி அருளிச் செய்தார் திருக்கோட்டியூர் நம்பி என்பதே ஆசார்யர்கள் அருளிய உண்மை.

பாரா 88 :—''பின்புள்ள ஆசாரியர்கள் அஷ்டாக்ஷரத்தில் நாராயண பதத்துக்கு லக்ஷ்மியின் வாசகமான 'ஸ்ரீ' இல்லாததால்

த்வயத்தில் பூர்வோத்தர வாக்கியங்களுக்கு முதலில் 'ஸ்ரீ' சேர்த்து குறையை நீக்கிக் கொண்டார்கள்.'' என்கிறது இந்த அசடு. த்வய மந்த்ரம் ஸ்ரீயோடு கூடவே அவதரித்த விதம் கேண்மின்—கஜேந்த்ர ஸம்ஹிதையில் நான்காவது அத்யாயத்தில் பகவான் பெரிய திருவடியை நோக்கி, த்வயத்தின் பெருமையைச் சொல்லி வந்து இந்த த்வயத்தை விஷ்ணு லோகத்திலே பெரிய பிராட்டியாருக்கு உபதேசித்தேன் என்கிறன். இதில் ஸ்ரீமச் சப்தம் சேர்த்தேதான் அக்ஷர ஸங்க்யை உள்ளது. இந்த அக்நிஹோத்ரி சமைத்த சோறு மணற் சோறு என்று தெரிந்தும் பரார்த்தமாக இந்த மணற்சோற்றில் கல் ஆராய வேண்டிற்று.

பாரா 109 :—''ஸ்ரீ வைகுண்டத்தில் பகவானுக்கு என்ன ஆபத்து வருமோ என்று பயப்படுவது, கோபித்தல் இவை அங்கு கிடையாது'' என்கிறார். பெரியாழ்வாருக்குப் பெரிய திருவடிமேல் ப்ரத்யக்ஷமாகி ஸேவை தந்த பெருமானுடைய ஸௌந்தர்ய தர்ஶனத்தால், 'என்ன திருஷ்டி வந்து விடுகிறதோ' என்று பக்தி பாரவஶ்யத்தால் கலக்கம் ஏற்பட்டு, பல்லாண்டு பாடவில்லையோ? அதே போல் ஸ்ரீ வைகுண்டத் தில் நித்யர்களும் முக்தாத்மாக்களும் ஸேவிக்கும்போது விஷயவைலக்ஷண்யத்தாலே கலங்கி 'பெருமாளுக்கு என்ன பொல்லாங்கு ஏற்படுகிறதோ' என்று பல்லாண்டு பாடுகிறார்கள். ''ஜ்ஞாநவிபாககார்யமான அஜ்ஞாநத்தால் வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்'' என்னும் பிள்ளைலோகாசாரியரின் சூர்ணிகையை ஸேவித்துத் தெளிவு பெறுக.

பாரா 110:— தமிழில் உள்ள பரிபாடல்களே தெய்வங்களைப் பற்றிப் பாட ஆழ்வார்களுக்கு வழி வகுத்துக் கொடுத்தன என்கிறார். மயர்வற மதி நலம் அருளப்பெற்று பக்தி பாரவஶ்யத்தாலே ஆழ்வார்கள் பெருமாளைப்பாடினார்களே ஒழிய இவர் பிதற்றுதல் போல மற்றவரைக் காபி அடிக்கவில்லை. ஆழ்வாரின் திருவாய்மொழி தமிழ் வேதம். தெய்வ நியோகத்தால் வேதம் ஸ்ரீராமாயணமாக அவதரித்தாற்போல் திராவிட வேதமும் தைவநியோகத்தால் ஆழ்வார் வாக்கில் சகல இலக்கணங்களுடன் வெளியானது. ''ஆழ்வார் மும்மூர்த்திகளும் சமம் என்கிற கருத்தையுடையவராய், அரியை, அயனை, அரனை அலற்றி வீடு பெற்றார்'' என்கிறார். வியாகரண சூன்யமான இந்த மண்டூகத்துக்கு ஸாமாநாதிகரண்ய இலக்கணம் தெரியாததால் மும்மூர்த்திகள் சமம் என்று பிதற்றுகிறார். வியாக்கியானங்களை நல்லாசிரியனை அடிபணிந்து கேட்கட்டும்.

முடிவுரை:—

ஸ்ரீவைஷ்ணவ மதத்தை ஒழிக்கப் பாடுபடும் புற மதத்தினர் ஒருவரின் கைக்கூலியாகி, க்யாதி லாபபூஜைக்காக ஆசைப்பட்டு விஷ்ணுவையும் விஷ்ணு மதத்தையும் கண்டபடி தூஷித்தும், ஆழ்வார்களையும் அருளிச் செயல்களையும் பழித்தும், பூர்வாசார்யர்களையும் அவர்களின் வசநாநுஷ்டாநங்களையும் குறைகூறியும். 'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்னும் சுவடி ஆணவம் நிறைந்த அக்நிஹோத்ரியால் எழுதப்பட்டுள்ளது. கீழே சில பாராக்களுக்கு மறுப்பு எழுதியுள்ளேன். இவைகளை வைஷ்ணவ சம்பிரதாயஸ்தர்கள் வாசித்து இவரின் சொற்களையும் கருத்துக்களையும் கண்டு மயங்காமல். இவர் சுவடி அபத்தச்சுவடி, கூலிக்காக எழுதிய சுவடி வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் பொறாமை கொண்டு எழுதின சுவடி என்று கொண்டு, மேலும் நம் சம்பிரதாயத்தை நாளுக்கு நாள் பிரகாசமாம்படி செய்ய வேண்டும் என்று மிகவும் பணிவன்புடன் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,
அடியேன் இராமாநுஜதாசன்,
கே. ஏ. காரியப்ப முதலியார்,
திருப்பத்தூர், வடாற்காடு.

பெரியோர்களின் பொன்மொழிகள்

"ஶ்வபசோऽபி மஹீபால விஷ்ணுபக்தோ த்விஜாதிக: ।
விஷ்ணுபக்தி விஹீநஸ்து யதிஶ்ச ஶ்வபசாதம: ॥"

[ஸ்ரீ பாகவதம்]

[அரசனே! நாயமாமிசம் தின்னுமவனாயினும் விஷ்ணுபக்தனாகில், (விஷ்ணுபக்தியற்ற) அந்தணனைக் காட்டிலும் சிறந்தவன்; விஷ்ணு பக்தியற்ற அந்தணன் ஸந்யாஸியேயானாலும் நாய்மாமிசம் தின்னும் ஸாமாந்யனைக் காட்டிலும் தாழ்ந்தவன்.]

விப்ராத் த்விஷட்குணயுதாத்
அரவிந்தநாபபாதாரவிந்தவிமுகாத் ஶ்வபசம் வரிஷ்டம்

[ஸ்ரீ பாகவதம்]

[பனிரண்டு நற்குணங்களையுடையவனாய், தாமரையுந்தித் தனிப் பெருநாயகனிடம் ஈடுபாடற்ற அந்தணனைக் காட்டிலும் நாய்மாமிசம் தின்னும் ஸாமாந்யன் சிறந்தவன்.]

5. ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமியுடன் பேட்டி

(11-11-73)

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி$_3$ பி$_3$ருத$_3$ாலங்க்ருத
ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமிக்கும் கும்பகோணம்
அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசார்யருக்கும்
ஸ்ரீரங்கத்தில் நடந்த ஸம்வாதத்தின் சுருக்கம்

ஸுதர்சனம் ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் தாதாசார்யரை ஸ்வாமி ஸமீபத்தில் சந்தித்ததாக அறிந்தேன். அவர் ஸமீபத்தில் "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்னும் புத்தகம் ஒன்றை திருக்குடந்தை தேவஸ்தானத்தின்மூலம் வெளியிட்டிருப்பது ஸ்வாமிக்குத் தெரிந்திருக்கும். அதை ஸ்வாமி கடாக்ஷித்ததா? அதில் அவர் எழுதியிருப்பது பற்றி ஸ்வாமியின் திருவுள்ளம் என்ன?

ஜீயர் ஸ்வாமி:- ஸமீபத்தில் அவரோடு பேசினேன். முன்பே அந்தப் புஸ்தகத்தையும் பார்த்தேன். அந்தப் புஸ்தகத்தில் அவர் வெளியிட்ட அபிப்ராயங்களில் பெரும்பாலானவை வைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்கும், வைதி$_3$கமத ஸம்பிரதாயங்களுக்கும், நம்முடைய ஸநாதநஸித்$_3$த$_4$மான மநு முதலான ஸ்ம்ருதிகர்த்தாக்களின் நிர்ணயத்திற்கும், ஸநாதன பரம்பராக$_3$தமான வேத$_3$வேத$_3$ாந்த ஸித்$_3$த$_4$ாந்தங்களுக்கும், இதை விளக்கவந்த ஆழ்வார்கள், ஆசார்யர்கள் முதலியவர்களுடைய ஸ்ரீ ஸூக்திகளுக்கும் விருத்தமானவை என்பதுதான் எங்களபிப்ராயம்

ஸுதர்சனம் ஆசிரியர்:- இதுபற்றி அவரிடம் ஏதாவது ப்ரஸ்தாவம் வந்ததா?

ஜீயர் ஸ்வாமி:- நாங்கள் ப்ரஸ்தாவித்தோம்.

ஸுதர்சனம் ஆசிரியர்:- ப்ரஸ்தாவத்தின் விவரங்கள் என்ன?

ஜீயர் ஸ்வாமி:- இப்படி அவர் புஸ்தகத்தில் எங்களுக்கு விருத்தமாகத் தோற்றின விஷயங்களைப்பற்றி அவரிடம் சொல்லி, அதில் அவர் அபிப்ராயம் என்ன என்று கேட்டோம். அதற்கு அந்த ஸ்வாமி, "இந்த விவாதாஸ்பதமான விஷயங்களைப்பற்றி நான் என்னுடைய அபிப்ராயத்தையும், என்னுடைய விஸ்வாஸத்தையும், என்னுடைய அநுஷ்டானத்தையும் அந்தப் புஸ்தகத்தில் சிறிதும் வெளிப்படுத்தவில்லை. நான் ப$_3$ால்யத்திலிருந்து ஸலக்ஷணக$_4$நாந்த வேத$_3$ங்களை அத்யயநம் செய்தேன். வேத$_3$ப$_4$ாஷ்யத்தையும் படித்திருக்கிறேன். இதுவரையிலும் ஆயிரக்கணக்கான ஸத$_3$ஸ்ஸுகளிலே ஸநாதனமான இந்து தர்மத்தைப் பற்றியும், வைஷ்ணவ ஆழ்வாராசார்ய பரம்பராக$_3$தமான ஸ்ரீ வைஷ்ணவ தர்மத்தைப் பற்றியும் பல உபந்யாஸங்கள் செய்திருக்கிறேன். நான் பெரிய ஸிஷ்ட பண்டித$_3$ குடும்பத்திலே பிறந்தவன். நம் மதத்தைக் காப்பாற்றுவதற்காக அரசாங்கத்திலும் எத்தனையோ பாடுபட்டிருக்கிறேன். நான் இப்போது ஸ்வயமாக நித்யாக்$_3$நிஹோத்ரம் செய்துவருகிறேன். மஹாவிஷ்ணுவுக்கு ஆராத$_4$னரூபமான பல யஜ்ஞங்களையும் செய்

திருக்கிறேன். அர்ச்சாவதாரரூபமான கோயில்களில் லக்ஷ்மீவிசிஷ்ட ஸ்ரீ மஹாவிஷ்ணுவை ஆராதனம் செய்வதைக் காப்பாற்றுவதற்கு என் வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறேன். ஆனாலும், இந்த வைஷ்ணவ ஸித்தாந்தத்தைப்பற்றி சில விஷயங்களிலே நவீந ஆராய்ச்சியாளர்கள் எப்படி நினைக்கிறார்களோ, அப்படிப்பட்ட அவர்களுடைய நினைவுகளை அவர்களுடைய புஸ்தகங்களிலிருந்து எடுத்து வருங்காலத்தில் தேவைப்பட்டவர்கள் தெரிந்துகொள்வதற்காக மாத்திரமே அந்த புஸ்தகத்தில் நான் வெளியிட்டிருக்கிறேனே தவிர என் அபிப்ராயத்தையோ, என்னுடைய விஶ்வாஸத்தையோ என்னுடைய அநுஷ்டானத்தையோ அதில் சிறிதும் எழுதவில்லை.'' என்று கூறினார். அதற்கு நாங்கள் ''தேவரீர் வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் பிறருக்கு வழிகாட்டவேண்டியவராயிருக்கிறீர். தேவர் எழுதினது தேவர் அபிப்ராயம் என்று தானே படிப்பவர்கள் கொள்வார்கள். தேவரபிப்ராயமல்ல என்று காட்டியிருந்தால் நன்றாயிருந்திருக்குமே.'' என்று கேட்டேன். அதற்கு அவர் ''அந்தப் புஸ்தகத்தின் முதலில் எந்தப் புஸ்தகங்களிலிருந்து நான் விஷயங்களை எடுத்திருக்கிறேன் என்று ஓர் பட்டியல் கொடுத்திருக்கிறேன். என்னுடைய அபிப்ராயம் என்று எங்கும் எழுதவில்லை. என்னுடைய அபிப்ராயமும் அல்ல.'' என்று சொன்னார். அதற்கு நாங்கள் ''விஷயம் தெரியாதவர்கள் எதையாவது எழுதியிருந்தால், அதையெல்லாம் ஸர்வஜ்ஞரான நீர் அநுவாதஂம் பண்ணினால், அது உங்களுடைய அபிப்ராயம் இல்லாதுபோனாலும், வருங்கால ஜனங்கள் அதை உங்களுடைய அபிப்ராயமாகவே நினைத்துக் கெட்டுப்போக மாட்டார்களா? இந்த ஆராய்ச்சியெல்லாம் அஜ்ஞானத்தால் எழுதியது என்று கடைசியில் ஒரு வரியாவது தேவர் எழுதியிருந்தால் நன்றாயிருந்திருக்குமே'' என்றோம். அதற்கு அவர் ''சரித்திரம் எழுதும் போது அப்படி எழுதக்கூடாது'' என்று முடித்துவிட்டார்.

ஸுதர்சனம் ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் தாதாசாரியர் சொன்ன சமாதானம் ஸ்வாமிக்கு சரியாகப்படுகிறதா?

ஜீயர் ஸ்வாமி:- அக்நிஹோத்ரம் தாதாசாரியர் பெரிய பண்டிதர் என்று பெயர் பெற்றவர். அவர் எழுதிய புஸ்தகம் பலரால் மேற்கோளாக எடுக்கக்கூடியது. சரித்திரம் எழுதினாலும் லோகஸங்க்ரஹத்தை உத்தேசித்து, வருங்காலத்தில் ஜனங்களுக்கு உபகரிக்கக் கூடிய ப்ரதாநமான உண்மையான விஷயங்களை எடுத்துக்காட்ட வேண்டிய கடமை சரித்திரம் எழுதுபவர்களுக்கும் உண்டு. தவறான விஷயங்களைத் தெரிவிப்பது பெரிய தீமையாக முடியும். தெரிவிக்க வேண்டி நேர்ந்தாலும், கடைசியில் அதிலே உள்ள தவறுகளைக் காட்டி சரியான ஸித்தாந்தத்தை எழுதியிருக்கவேண்டும். கேவலம் பூர்வபக்ஷத்தையே எழுதி விட்டுவிட்டால் மிகவும் தீமையே ஏற்படும். அதனால், இவர் எழுதியிருக்கும் பூர்வபக்ஷங்களுக்கான ஸித்தாந்தங்களை அவரே எழுதினால்தான் இந்தத் தீமை தவிர்க்கப்படும் என்பதையும் அவரிடமே விண்ணப்பித்து விட்டோம்.

6. ஸ்ரீ உ. வே. வேங்கடாத்ரி அய்யங்கார் ஸ்வாமி,
ஸ்தாநீகம், திருக்கோஷ்டியூர்.

குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பு

''முன்னோர் மொழிந்த முறைதப்பாமற் கேட்டு
பின்னோர்ந்து தாமதனைப் பேசாதே—தன்நெஞ்சில்
தோற்றினதே சொல்லிஇது சுத்தவுபதேச வர
வாற்றதென்பர் மூர்க்கராவார்'' என்று

மாமுனிகள் உபதேசரத்தினமாலையில் அருளிச்செய்திருப்பதற்கு முக்கியமான உதாஹரணபுருஷராகத் திகழ்பவர் 'வரலாற்றில் பிறந்த வைணவம்'' என்னும் நூலை எழுதி வைஷ்ணவகுலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பாய் விளங்கும் அக்நிஹோத்ரியேயாவார். இவரது அபத்தநூலைச் சுருக்கமாகக் கண்டிக்கிறோம்,

ஶ்ருதி ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்கள் முதலானவை ஒரே கருத்தைச் சொல்லுகின்றவை என்று ஸ்ரீவைஷ்ணவர்கள் கூறுவது சரியல்ல, அவை ஒவ்வொன்றும் ஒவ்வொருகாலத்தில் சமூகசூழ்நிலைக் கேற்பத் தோன்றியவையே என்று நிராதாரமாக எழுதுகிறார். எல்லாம் ஒரே கருத்துடையவையே என்று பிரமாணங்காட்டி ஆயிரக் கணக்கான நூல்களில் நிரூபித்திருக்கும் எம்பெருமானார் முதலான பூர்வசார்யர்களைக்காட்டிலும் தம்மை மஹாமேதாவியாகக் கருதும் இவருடைய அஹம்பாவமே இதிலிருந்து விளங்குகிறது. பூர்வபாகங்களில் பல தெய்வக்கொள்கை உள்ளது என்கிறார். அதே பூர்வபாகங்களில் ''அக்நிரவமோ தேவாநாம் விஷ்ணு: பரம:'' என்று தேவதைகளுக்குள் அக்நி மிகக் கீழ்ப்பட்டவன் என்றும், விஷ்ணு மிக மேம்பட்டவன் என்றும் கூறியிருப்பதை ஏனோ இவர் காணவில்லை உபநிஷத்துகள் நிர்க்குணப்ரஹ்மத்தையே சொல்லுகின்றன என்னுமிவர் ''ஸர்வஜ்ஞ:, ஸர்வஸ்ய வஶீ, ஸர்வஸ்ய ஈஶாந:, பராஸ்ய ஶக்தி:, ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச'' முதலான கணக்கற்ற குணங்களைக் கூறியிருப்பதைக் கண்ணிருந்தும் காணவில்லைபோலும். உபநிஷத்தில் ஜ்ஞாநமே சொல்லப்பட்டிருக்கிறது, பக்தியும் ப்ரபத்தியும் படிக்கப்படவில்லை என்னுமிவர் ''உபாஸிதவ்யம்'' ''த்யேய:'' ''ஶரணமஹம் ப்ரபத்யே'' முதலான உபநிஷத் வாக்யங்களைக் காதிருந்தும் கேட்கவில்லைபோலும். வேதத்தில் ஸூர்யனே விஷ்ணுவெனப்படுவ

தாகக் கதைக்கிறார். திரிவிக்கிரமாவதாரம் முதலான அவதாரங்களை எடுத்தவனாகக் கூறப்படும் விஷ்ணு எப்படி ஸௌர்யனாகமுடியும் என்பதை அறிந்தாரில்லை. பராசரர் விஷ்ணுவைக் கற்பித்தார் என்கிறார். ''விஷ்ணு: பரம:'' ''நாராயண பரம்ப்3ரஹ்ம'' ''அதி4கம் மேதிரே விஷ்ணும்'' முதலான நூற்றுக்கணக்கான வேத3 வேதா3ந்த ஸ்ரீராமாயண வாக்யங்கள் இவர் கண்ணில் பட்டதேயில்லை போலும். விஷ்ணுவுக்குப் பத்னிகளும் ஆழ்வாராசார்யர்களால் கற்பிக்கப்பட்டுவிட்டனர் என்று கதைக்கிறார். ''ஹ்ரீஸ்ச தே லக்ஷ்மீஸ்ச பத்ந்யௌ'' [புருஷஸூக்தம்] ''விஷ்ணுபத்நீ'' [நீளாஸூக்தம்] முதலான வேத3வாக்யங்கள், வேதா3த்4யயநம் பண்ணியும் விஷ்ணு த்3வேஷத்தாலே விளங்கவில்லையந்தோ! வைஷ்ணவாகமங்கள் உருவ வழிபாட்டை முக்கியமாகக் கொண்டவையல்ல என்பதும், வைஷ்ணவம் ஆலயவழிபாட்டை அடிப்படையாகக் கொண்டதல்ல என்பதும் ப்ரஹ்மாண்டப்புளுகு. வைஷ்ணவத்தின் உயிர்நாடியே உண்மையில் அர்ச்சாவதாரவழிபாடுதான் என்பது குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பான இவருக்குத் தெரிந்திருந்தும், நாஸ்திகக்கும்பாங்களிடம் க்2யாதிலாப4பூஜைகளுக்கு ஆசைப்பட்டு இப்படிப் பொய்யெழுதுகிறார், இப்படி நூற்றுக்கணக்கான உண்மைக்கு மாறானதும் அபத்தமானதுமான கொள்கைகளைத்தன்னுட்கொண்டிருக்கும் ஒரு நூலை எழுதி, வைஷ்ணவவுலகிற்கு துரோகம் செய்ததோடு, தான் பிறந்த திவ்யதேசமான திருக்குடந்தையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆராவமுதனுடைய பணத்தைக் கொண்டே இதை வெளியிட்டிருப்பது வேறு எந்த மதத்திலும் நடக்காத, நடக்கமுடியாத பெரிய அநீதியாகும். இதைக்கண்டு வைணவவுலகமே மனக்கொதிப்புடன் குமுறிக்கொண்டிருக்கிறது இந்நூல் தனது அறியாமையால் எழுதப்பட்டது என்று ஒப்புக்கொண்டு வைஷ்ணவவுலகத்திடம் இதற்கு இவர் மன்னிப்புக் கேட்டாலொழிய இம்மையிலும், மறுமையிலும் இவருக்கு வேறு எந்தப்பரிஹாரமும், ப்ராயச்சித்தமும் கிடையாது. இதைச் செய்யாதவரையில். ''துஷ்டனைக் கண்டால் தூர விலகு'' என்னும் முதுமொழிக்கேற்ப, உண்மையான விஷ்ணுபக்தர்கள் இவரைக் காண்பதும், இவரோடு பேசுவதும் பெருந் தவறாகும்.

திருக்கோஷ்டியூர். இங்ஙனம்,

10—11—1973 A. வேங்கடாத்ரி அய்யங்கார்.

7. அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான் (காசிவாஸீ) வேதாந்தவாவதூக வில்லிவலம் ஸ்ரீ உ. வே. நாராயணசார்ய ஸ்வாமியின் கடிதம் 31-10-73.

''வரலாற்றில் பிறந்த வைணவம்'' (அல்ல அல்ல 'நட்டாற்றில் விட்ட வைஷ்ணவம்' என்னவேணும்) பற்றிச் சில வார்த்தைகள். தேவரால் உத்த்ருதமான பாகம் தவிர, பூர்ணமாக நான் பார்க்கவில்லை, பார்க்க விரும்பவுமில்லை. பானை சோற்றுக்கு ஒருசோறு பதம் பார்த்தல் மிகை. அதுபற்றி சிறிய கண்டநம் கேட்டிருக்கிறது. அதின் விஷயம் நமக்கு உடன்பாடல்லவெனினும் கண்டிப்பது என்பது வேறு பலவற்றையும் பொறுத்துள்ளது. தேவர் உடனே ''அப்ரதிஷித்தமநுமதம் பவதி'' (கண்டிக்கப்படாதது அனுமதிக்கப்பட்டதாகிறது) என்ற ந்யாயத்தை ஸஞ்சரிப்பிக்கும். ''ஸத்யாம் ஸாமக்ர்யாம், அஸதி ப்ரதிபந்தகே என்ற பூர்வோக்தந்யாயாபவாதக ந்யாயாந்தரஸ்ய நாத்ர ஸர்ப்பமார:, தண்டநிவாரணம் வா. ஆகையால் அச்சாபீஸ் முதலிய ப்ரகாஶநஸாமக்ரீஸம்பத்திம் விநா இம்மாதிரி காரியங்களில் இறங்குவது கடைசியில் அசமதகாரமாகவே முடிகிறது என்பது எம்முடைய சிராநுபவம்.

அந்நூலில் கண்டநம் ஆரம்பிப்பது — மணற்சோற்றில் கல்லாராய்ச்சி போல் பல்கிப் பெருகும். அங்கு சொன்னவை எல்லாம்— இருதுருவதேசங்களுக்குப் போலே ப்ரமாண பதவீ தவீயஸ்ஸுக்கள் (ப்ரமாணநெறியினின்றும் விலகிநிற்பவை) என்பதை யாரே அறியாதார்? அந்நூல் எழுதியவர் நெற்றியில் புண்ட்ரதாரணமோ,-பூர்வாசார்ய புரஸ்காரமோ இனிச் செய்யவே வேண்டாம் (முன்பு அவர் அதைச்செய்வது என்பது ஒன்று உண்டாயிருந்தால்). ஶாந்தம் பாபம். அலம் விஸ்தரேண.

வாரணஸீ இத்தம். வில்லிவலம் நாராயண தாஸ:

பிற்சேர்க்கை — அந்நூல் பற்றி என்னுடைய அபிஸந்தியும் ஏதாவது ப்ரகாஶிதமாக வேணும் என்று தேவருக்கு த்ருடாபிநிவேசம் இருக்குமாகில், இக்கடிதத்தையே பூர்ணமாக ப்ரகாஶிப்பிக்க அநுமதி தருகிறேன்.

[ஸுதர்ஶனம் ஆசிரியரின் குறிப்பு:— தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலான ப்ரபலரான தேசிக ஸம்ப்ரதாயஸ்தவித்வான்களை அடியேன் நேரிலும், கடிதம் மூலமும், ஆப்தர்கள் மூலமும் அஹோ நூலுக்குக் கண்டநம் எழுதப் பிரார்த்தித்திருக்கிறேன், அவர்களில் இன்று (15—11—73)வரை கோழியாலம் ஸ்வாமியும், வில்லிவலம் ஸ்வாமியும் தவிர மற்றெவரும் எதுவும் எழுதாமலிருக்கிறார்கள். ''அந்நூலில்'' என்று தொடங்கி வில்லிவலம் ஸ்வாமி ஒரு பாரா எழுதியிருப்பது ஆயிரம் பக்கம் கண்டனம் எழுதியதற்கு ஸமம். இத்தகைய ஸ்வாமி திறத்தில் அடியேன் '' அப்ரதிஷித்தமநுமதம் பவதி '' என்னும் ந்யாயத்தை ஸஞ்சரிப்பிக்க ப்ரஸக்தியேயில்லை-ஸுதர்ஶனம்ஆசிரியர்]

8. வேதப்பிரான்பட்டர் ஸ்ரீ உ. வே.
கோவிந்தராஜய்யங்கார் ஸ்வாமி, ஸந்நிதிவீதி, ஸ்ரீவில்லிபுத்தூர்

வைணவம் அநாதி

பரித்ராணாய ஸாதூ₄நாம் விநாஶாய ச து₃ஷ்க்ருதாம் |
த₄ர்மஸம்ஸ்தா₂பநார்த்தா₂ய ஸம்ப₄வாமி யுகே₃ யுகே₃ ||

என்றான் கீ₃தையில் கண்ணன். ஆழ்வார்கள் "தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்று அருளிச்செய்துள்ளார்கள்.

அடியேன் உலகமெலாம் அவதார விஶேஷம் எனப் போற்றி வரும் P. B. A. ஸ்வாமியின் ஜ்ஞாநாமுதப்பெருக்கான ஸ்ரீராமாநுஜனை யும் "தினவுகெடச் சொல்லுவன் திருவெள்ளறைச் சோழியன்" என்ற வசனத்திற்கு விஷயமான எங்களாழ்வான் திருவடிஸம்ப₃ந்தி₄ யான புத்தூர் ஸ்வாமியின் ஸ்ரீ வைஷ்ணவ ஸுத₃ர்ஶனத்தையும் ஸேவித்து நாட்களைக் கழித்துவருகிறேன்.

அக்னிஹோத்ரம் தாத்தாச்சாரியார் என்பவர், நல்ல உயர்ந்த குலத்தில் பிறந்தவர். வேதாத்யயநம்பண்ணி வேதத்திற்கு அர்த் த₂ங்களை எல்லார் மனத்திலும் படும்படி எடுத்துச்சொல்லி நல்ல புகழ் படைத்தவர். அவர் சமீபத்தில் சார்ங்கபாணி தேவஸ்தான மூலம் "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்ற நூலை வெளி யிட்டிருக்கிறார். அதில் உள்ள சில பாராக்களுக்கு ஆணித்தரமான மறுப்புகளை ஸுதர்சனமும் ஸ்ரீ ராமாநுஜனும் வெளியிட்டு வருகின்றன. தாத்தாசாரியர் எழுதியிருப்பதைப் பார்த்தால் 'இவர்தான் இப்படி எழுதியிருக்கிறாரா' என்று வியக்கும்படியிருக்கிறது. முன் நிலைமை மாறிவிட்டது. "காலஸ்ய குடிலா க₃தி:" என்றபடி கலியின் முதிர்ச்சி அந்த:ப்ரவேசித்துச் செய்கிறதித்தனை. வைணவம் பிறந்தது என்று ஒரு வைணவர் எழுதுவாரா? கைதான் எழுதுமா? ஆச் சரியத்திலும் ஆச்சரியம்!

வைணவம் அநாதி. விஷ்ணு என்ற சப்தத்திலிருந்து உண் டானது. விஷ்ணு என்ற சப்தம் 'விஷ்லுவ்யாப்தௌ' என்ற தா₄துவி லிருந்து உண்டானது. உலகத்தில் உள்ள அனைவரும் வைஷ்ண வர்களே. "விஷ்ணு: பரம: அக்₃நிரவம:" என்று வேதமோதுகிறது. விஷ்ணுவே உயர்ந்தவன். அவன் எல்லாரிடத்திலும் எல்லா வஸ் துக்களிலும் உள்ளும் புறமும் வியாபித்திருக்கிறான். "கரந்தசிலிடந் தொறும் இடந்திகழ் பொருள்தொறும் கரந்தெங்கும் பரந்துளன்"

என்று தமிழ் மறையும், "அந்தர்பஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித:" என்று வேதாந்தமும் அறைகின்றது. விஷ்ணு காயத்திரியான "நாராயணாய வித்மஹே, வாஸுதேவாய தீமஹி! தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத்!!" என்றதில் ஷடக்ஷரீ, த்வாதசாக்ஷரீ, அஷ்டாக்ஷரீ என்னும் மூன்றையும் ஒன்றாகச்சேர்த்துச் சொல்லியிருப்பதால், மூன்றினாலும் சொல்லப்படுபவன் ஒருவனே என்பது நன்கு விளங்குகிறது. "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத் ப்ரயந்தி அபிஸம்விஶந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்ம" என்று சொல்லி, "ஏகோ ஹவை நாராயண ஆஸீத்! ந ப்ரஹ்மா நேஶாந:" என்று உபநிஷத்துக்கள் பிரமருத்ரர்களை எடுத்துக்கழித்திருப்பதால் "நாராயணனிடத்திலிருந்தே எல்லாம் உண்டாகின்றன; அவனிடத்தில் லயமடைகின்றன; அவனே உள்ளே பிரவேசித்து எல்லாம் நடத்துகிறான். அவனுக்கே ப்ரஹ்மம் என்று பெயர். பிரமனோ, ஈசனோ பரம்பொருளல்லர்" என்று தெளிவாக விளங்குகிறதே. "நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: நாராயண பரோ ஜ்யோதி: ஆத்மா நாராயண: பர:" என்றும் உபநிஷத்தில் பேசியிருக்கிறது. நாராயணன் என்ற பதத்தை, "நாராணாம் அயநம்" "நாரா: அயநம் யஸ்ய ஸ:" என்று இரண்டுவிதமாகக்கொண்டு 'நித்ய வஸ்துக்களுக்கு இருப்பிடமானவன்', 'நித்யவஸ்துக்களை இருப்பிடமாக உடையவன்' என்று பொருள் கூறுவர் பெரியோர்கள். "காரணம் து த்யேய:" என்ற உபனிஷத் காரணம் நாரணனே என்றும் காட்டிற்று. "வேதேஷு பௌருஷம் ஸூக்தம்" என்று வேதங்களில் புருஷஸூக்தம் மிக உயர்ந்தது. அதில் முதலில் "ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ:! ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்!!" என்று சொல்லியிருக்கிறது. ஆழ்வாரும் "துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே" என்று தொடங்கி, "தோள்களாயிரத்தாய், முடிகளாயிரத்தாய், துணைமலர்க்கண்கள் ஆயிரத்தாய்" "காராயின காளநன்மேனியினன் நாராயணன்" என்று முழங்கினார். பொய்யாமொழிப் புலவரும் "அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால் பிறவாழி நீந்தலரிது" என்று சொல்லியிருக்கிறார். வேதங்களின் கருத்தை விளக்கவந்த இதிஹாஸ புராணங்களும் பகவானின் குணங்களையும் திருமேனியையும் மிக அழகாகப் பேசுகின்றன. "இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்" என்பது மஹாபாரத வசனம். "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை" என்று பிரமனைப்

படைத்து அவனுக்கு வேத₃த்தை உபதே₃சித்தான் என்கிறது உபனிஷத்து. வேதத்தாலேதான் பகவானைக் காணமுடியும்

"வேதை₃ர்ச ஸர்வைரஹமேவ வேத்₃ய: ।"
"ஸர்வே வேதா₃ யத்பத₃மாமநந்தி ॥"

என்று இதையே கீ₃தையில் கண்ணனும் சொல்லுகிறான். *"மறை நான்கினுளாயோ" என்றும் வடமொழி தமிழ்மொழி மறைகள் அறைகின்றன. "வேதே₃ாகி₂லோ த₄ர்மமூலம்" என்று எல்லா அறிவுககும் வேதம் காரணம். வேதத்தாலேயே அறியப்படுபவன் பகவான். வேத₃ம் அநாதி₃யாகையால், அது பரம்பொருளாகச் சொல்லும் விஷ்ணுவைப் பரம்பொருளாகக்கொண்ட வைணவமும் அநாதி₃யே.

'பகவான் எங்கிருக்கிறார்' என்று ஹிரண்யன் கேட்கும்போது "எங்குமுளன் கண்ணன்" என்ற ஆழ்வார் வாக்கின்படியே "எங்குமிருக்கிறான்" என்று சொன்னான் ப்ரஹ்லாத₃ன். "இந்தத் தூணிலிருப்பானா" என்று கேட்டான் ஹிரண்யன், அந்த சமயத்தில் பகவான் உலகம் பூராவும் எல்லா வஸ்துக்களிலும் வியாபித்து இருந்தால்தான் அவன் எந்த வஸ்துவைத் தொட்டுக் கேட்டாலும் அதனுள்ளிருந்து வெளிவர ஸௌகர்யமாயிருக்கும் என்று, எங்கும் நரசிங்கரூபத்துடனே இருந்தார் என்று நிக₃மாந்த மஹாதே₃சிகன் அனுப₄விக்கிறார். **அந்த** ஶ்லோகம் பின்வருமாறு:—

ப₄க்தஸ்ய தா₃நவஶிஶோ: பரிபாலநாய
ப₄த்₃ராம் ந்ருஸிம்ஹகுஹநா மதி₄ஜக்₃முஷஸ்தே ।
ஸ்தம்பை₄கவர்ஜமது₄நாபி கரீஶ நூநம்
த்ரைலோக்யமேதத₃கி₂லம் நரஸிம்ஹக₃ர்ப₄ம் ॥

அக்னிஹோத்ரிக்கு இவையெல்லாம் தெரியாது என்றோ, அவரைத் தெளிவுபடுத்தவோ எழுதவில்லை. அவர் எல்லாம் தெரிந்தும் வேணுமென்றே எழுதியிருக்கிறார். அவர் வாக்கியங்களைக் கண்டதும் மனம் தாங்காமல் ஏதாவது எழுதவேண்டும் என்று தோன்றியபடியாலும், பெரியோர்கள் நியமித்தபடியாலும் இதை எழுதினேன். நல்ல குலத்திலவதரித்த அந்த ஸ்வாமிக்கு யதா₂ர்த்த₂ஜ்ஞாநமும் ஸ்ரீ வைஷ்ணவாபி₄மானமும் உண்டாகுமாறு ப₄க₃வான் அநுக்₃ரஹிக்க வேணும் என்று பிரார்த்தித்து நிற்கிறேன்.

இங்ஙனம்,
வேதப்பிரான்பட்டர் வி. கோவிந்தராஜ அய்யங்கார்.
19—10—73

9. திருநாங்கூர் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீநிவாஸாசாரியர்,
[நியாய, வியாகரண சிரோமணி, தமிழ் வித்வான்,
ஸ்ரீராமாநுஜ மிஷன் (இந்தியா) கௌரவ பொதுச்செயலாளர்,
ஸ்ரீமதுபய வேதாந்தாசார்யபீடம் தமிழ் நாட்டுச் சீஃப் ஆர்கனைசர்,
ஸ்ரீ கு. சி. பாடசாலை ஆசிரியர், ஸ்ரீரங்கம்.]

"வரலாற்றில் பிறந்த வைணவ விமர்சனம்"

அக்நிஹோத்ரிக்கு வரலாற்றில் பிறந்த வைணவம் மிகுந்த சிரமத்தோடு பிறந்திருக்கிறது. இதுபோல் கஷ்டபிரசவம் இனி நமக்கு வேண்டவேவேண்டாம என்று எண்ணுமளவுக்கு இதன் பிறப்புள்ளது. பிரசவம் தாயின் பருவவனப்புக்குக்கேடு விளைவிப்பதொன்று. தாய்க்குக் கேடு விளைவிக்கும் பிரசவமுமுண்டு. அவ்வகையில் சேர்ந்தது அக்நி ஹோத்ரிக்கு வரலாற்றில் பிறந்த வைணவப்ரஸவமும்.

"வைணவம் வேதகாலத்திற்குப் பிற்பட்டு ஒரு காலத்தில் உண்டாகிப் பலபடியாகப் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து ஓர் ஆசார்யனை ஒப்புக்கொண்டு சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தொடங்கியதும், தன் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது, என்பதும் புலனாகின்றது" (வரலாற்றில் பிறந்த வைணவம் பக்கம் 5) என்ற சொற்றொடர் தாயான வரலாற்றாராய்சிக்கே முற்றுப்புள்ளி வைத்துவிட்டது. வரலாற்றாராய்ச்சியாளர்களின் கொள்கைப்படி ஒன்றுக்கும் முற்றுப்புள்ளி கிடையாது. இது வரலாற்றுண்மை. "தமிழ் நாட்டு வைணவமும் ஒருகாலத்தில் தோன்றி வளர்ந்து இன்றுள்ள நிலையை எய்தியுள்ளது, என்பது உளங்கொளத்தக்கது" (வ. பி. வை பக்கம் 1 தோற்றுவாய்) என்று தமிழ் நாட்டு வைணவத்தையே குறிக்கின்றது. ஆகவே பொதுவாக "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்ற தலைப்புப்பொருந்தாது. "விஞ்ஞான அறிவு நாடோறும் வளர்ந்துவருகின்ற இக்காலத்தில் எந்த நூலை எடுத்தாலும் அதன் அகப்புறச்சான்றுகளைக் கொண்டு, நமக்கு முன்னமே உறுதி செய்யப் பட்டுள்ள நாட்டு வரலாற்றுக்கால அடிப்படையில் அந்த நூலின் காலத்தையும் அறுதியிட்டுக் கூறும் எண்ணம் ஏற்பட்டு விட்டதால்" (வ. பி. வை. பக்கம் 2) என்ற இவ்வாக்கியத்தில் நமக்கு முன்னமே உறுதிசெய்யப்பட்டுள்ள நாட்டு வரலாற்றுக்கால அடிப்படையில், என்பது பொருந்தாது. வரலாற்றாராய்ச்சி ஆசிரியர்கள், ஒவ்வொருவரும் தங்கள் ஆராய்ச்சியில் ஒவ்வொரு விதமாகப் பலபடி நாட்டு

வரலாற்றுக்கால அடிப்படையைக் கூறுகின்றனர். விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கும் எடுத்துக் கொண்ட நூலின் காலத்தை அறுதியிட்டுக் கூறுவதற்கும் எந்த வகையில் எப்படித் தொடர்பு என்பது விளக்கப் படவில்லை.

''வரலாற்றில் பிறந்த வைணவம்'' என்ற இந்நூலாசிரியர் ஸ்ரீ. கும்பகோணம் அக்நிஹோத்ரம் ராமாநுஜ தாதாசாரியர், என்பவர். அவர் இன்றுள்ள நிலையை எய்தியுள்ள வைணவத்தின் கொள்கையைப் பின்பற்றுபவரா? இல்லையா? என நூலின் தன்மையைப் பார்த்தால் ஐயப்படவேண்டியுள்ளது

25—9—73ல் வெளியான ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம் 310 311 இதழில் இந்நூலிலிருந்து 120 பகுதிகளைக் குறித்து, ''வைணவர் அனைவரும் ஏற்றுக்கொண்ட இன்றுள்ள நிலையை எய்தியுள்ள தமிழ் நாட்டு வைணவக் கொள்கையை மறுப்பதாயுள்ளன இப்பகுதிகள். இதற்கு மறுப்பு எழுதவேண்டியது வைணவர் ஒவ்வொருவரின் கடமையாகும்'' எனக் குறிக்கப்பட்டுள்ளது. 30—9—73ல் வெளியான தினமணிச் சுடரில் இந்நூலுக்கு ஒரு தாத்தாசாரியார் மதிப்புரை எழுதியுள்ளார். அதில் ''ஒவ்வொரு ஆஸ்திகரும் வாங்கிப் படித்துப் பொன்னேபோல் போற்றக்கூடிய தகுதிபடைத்ததிந்த நூல்'' என்று எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு நேருக்கு நேர்மாறுபட்ட இரண்டு கருத்துக்களைப் பெற்றதான இந்நூலின் தன்மையை விமர்சனம் செய்யவேண்டியது அவசியமாகிவிட்டது. ''இந்நூலில் வரும் பல கருத்துக்களை மிகப்பெரும்பாலோர் ஏற்கமாட்டார்கள். ஆனால் ஒரு புதுக்கண்ணோட்டத்துடன் ஆக்கப்பட்ட நூல் என்று இந்த நூலையும் படிக்கவேண்டும்'' என்று இந்நூலுக்கு தினமணியில் மதிப்புரையமைந்திருந்தால் பத்திரிகையின் நடுநிலைமை காப்பாற்றப்பட்டிருக்கும். இக்குறைதீர ஸ்ரீகாஞ்சீ மஹாவித்வான் ஸ்வாமியின் ''ராமாநுஜன் 300ல்'' இந்நூலுக்குக் கண்டனத்தை மறுவாரமே விமர்ஸனம் செய்து, தினமணி தனது நடுநிலைமையை நிலைநாட்டிக் கொண்டுவிட்டது. ''தமிழ்மொழியில் இத்தகைய ஆராய்ச்சி நூல் இதுவரை வெளிவந்திலது. இந்நூல் பல புதிய கருத்துக்களை ஆங்காங்கே வெளியிடுவது இந்நூலுக்கு மேலும் சிறப்பை அளிக்கின்றது'' என்று சுடரில் இந்நூலுக்கு எழுதியுள்ள மதிப்புரை ஒருவகையில் உண்மையெனக் கொள்ளலாம். சிறப்பு—தனித்தன்மை. அது ஏற்று மதிப்பதற்குமாகலாம்; ஏற்காது தள்ளுவதற்குமாகலாம். இங்கு இரண்டாவது வகையே ஏற்புடையதாயிருக்கிறது.

நமது வைதிக மதக்கொள்கைகளையும், அதோடு பெருந்தொடர்புள்ள ஸ்ரீ வைஷ்ணவக் கொள்கைகளையும், பண்பாட்டையும் அடியோடு அழிக்கப் பல முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. எப்படியாவது எவரிடமிருந்தாவது க்யாதிலாபபூஜைகளைப் பெறவிரும்பியவர்களான நம்மவர்களும் அத்வைதிகளும் சைவர்களும் வைணவத்தைப் பற்றி ஒன்றோடொன்று முரண்பட்ட பல ஆராய்ச்சிகளைச் செய்யத் தொடங்கி வளர்த்துவருவதே அதற்கு எடுத்துக்காட்டாகும். "அவ்வாராய்ச்சிகளைப் படித்துவிட்டு பரமவைதிகமதமான நமது ஸ்ரீவைஷ்ணவ மதத்திற்கு அடிப்படையான ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களையும், ஸ்ரீ வைஷ்ணவாகமங்களையும், ஆழ்வார்களின் அருளிச்செயல்களையும், ஆசார்யர்களின் திவ்ய ஸ்ரீஸூக்திகளையும் சரியாகப்படிக்காமல் தன் நெஞ்சில் தோற்றினதையெல்லாம் எழுதிக் குவித்திருக்கும் சுவடியே "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்னும் இப்புத்தகம் என்பதை ஒருதரம் படிக்கும்போதே எவரும் எளிதில் உணர்ந்து கொள்ளலாம்" (ஸ்ரீவைஷ்ணவஸுதர்சனம் 310—311. அக்நிஹோத்ரியும் வைணவமும் பக்கம் 47) என்று இந்நூலைப்பற்றிய ஸுதர்சனபத்ராதிபரின் குறிப்பு அளவான குறிப்பேயாகும். "இந்நூலாசிரியர், தான்கொண்ட கொள்கைக்கு மாறான கொள்கைகளையும், அதைப் பின்பற்றுபவர்களையும் வெளிப்படையாகக் கூறாமல் தனக்கு அவற்றிடமும் அவர்களிடமுமுள்ள துவேஷம், வெறுப்பு, அவமதிப்பு எல்லாம் புலப்பட எழுதியயுள்ளார். தன் கொள்கையினையும், அதை உருவாக்கி உறுதிப்படுத்தினவராகக் கொண்டாடப்படும் தன் ஆசாரியரையும் வரலாற்று நூலாசிரியர் என்ற தன்மையில் சற்றுக் குறைவாக எழுத நேர்ந்தாலும், பிறர் கொள்கையினையும், அதை வளர்த்த ஆசாரியர்களையும் தன் விருப்பப்படி வேண்டுமளவு குறைவாக எழுதலாமே என்ற ஆத்ம த்ருப்தியில் எழுதப்பட்டது இந்நூல்; 'தனக்கு இரு கண் போனாலும் பிறருக்கு ஒருகண் போகிறதே' என்று திருப்திப்படுமவன் நிலைமையிலுள்ளமை இந்நூலில் தெரியவருகிறது" என்று மேலும் குறிப்பிடலாம். இன்றுள்ள நிலையை எய்தியுள்ள வைணவத்தின் இரு வகைக்கொள்கைக்கும் ஊறுவிளைப்பதாகவே இந்நூல் உள்ளது.

ஸ்ரீவைஷ்ணவரல்லாதவரொருவர் எழுதக்கூடிய இந்நூல், இவர் பெயரில் வெளிவர நேரிட்டதே, என இவரிடம் அநுதாபப்பட வேண்டியுள்ளது. "இவ்வாறு வைணவக்கொள்கைபற்றி மற்றவர் பலர் கருதுகின்றனர்" என்று ஒருவரி கூடுதலாக எழுதியிருந்தால் ஒருவாறு ஆறுதலடையலாம், அதற்கும் மனமில்லைபோலும்!

''வைணவக் கருத்து ஒரு கட்டுப்பாடான நிலையில் படித்த பிராம்மணரிடையில் நானூறு வருடங்களாக உருவாகி வளர்ந்து விட்டது. அதுபோல் சைவம் வளரவேயில்லை. நாட்டு அரசர்களின் அதிகாரம் மறைந்தபிறகு அதிகாரி யார் என்று புரியாமல் இருந்த காலத்தில் வைணவம் கோவிலில் புகுந்துவிட்டது'' (வ. பி. வை. பக்கம் 260) என்னுமிது ஸ்ரீவைஷ்ணவரல்லாத பிராம்மணர் ஒருவரோ, அல்லது சைவர் ஒருவரோ எழுதக்கூடிய எழுத்தேயாகும். ஸ்ரீவைஷ்ணவ பிராம்மணரான இந்நூலாசிரியர் எழுதக்கூடியதல்ல. தமிழ்நாட்டு வரலாற்றுண்மையும் தமிழ்நாட்டு வைணவ வரலாற்றுண்மையும் அறியாதவர் எழுதும் எழுத்திது.

தமிழ்நாட்டு மண், பாறை இவற்றின் ஆராய்ச்சியில் ''முதன் முதல் நிலமுண்டானதே தென்னகத்தேதான். குமரிமுனைக்குத் தெற்கே லெமூரியாக்கண்டம், கோண்ட்வானா என்ற பெயரில் வழங்கப்பெற்ற பெரிய தமிழ் நிலப்பரப்பு 7x7 = 49 நாடுகள் கொண்டது இருந்துள்ளது. கடற்கோளினால் அது சுருங்கி இப்போதைய தென்னக நிலவளவில் உள்ளது'' என அறியப்படுகிறது. ''முதுகெலும்பில்லா உயிரினம் முதல் மக்களினம் வரை உயிரினம் வளர்ந்ததும், முதன் முதல் நிலமுண்டானதும் தென்னகத்தேதான். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்த முதுகுடி மக்கள் தமிழ் மக்கள். மொகஞ்சதாரோ நாகரிகமும் திராவிட தமிழ் நாகரிகமே'' என ஆராய்ச்சியாளர் பலர் கருதுகின்றனர். ஒருகாலத்தில் பாரதநாடு முழுவதும் தமிழ் நாகரிகமே பரவியிருந்தது என்றும் கருதுகின்றனர்.

''பொருள்கள் எல்லாம் உண்மைப் பொருளே. இல்பொருள் என்பது ஒன்று கிடையாது. காலம் பொருளோடு இயைந்ததே'' என்ற வைணவக் கொள்கையைக்கொண்டதே தமிழர் கொள்கையும். ''இமையோர் தேஎத்தும் எறிகடல் வைப்பினும் அவையில் காலமின்மையான'' என்ற தொல்காப்பியம் இதை வலியுறுத்துகிறது. உடன்போக்குத்துறையில் முக்கோற்பகவரை வினாதல் என்ற துறை, பழமையான அக்காலந்தொட்டு வைணவக் கோட்பாடே (நடைமுறையே) தமிழ்க் கோட்பாடாயுள்ளது, என்று ஆராய்ச்சியில் தேறும். ஆகவே ஆராய்ச்சி முறையில் பார்த்தாலும், தமிழ்நாட்டு வைணவத்தின் உத்பத்திக்காலம், தமிழ் நிலத்தில் மக்கள் தோன்றி வளர்ச்சியுற்ற தொன்நெடுங்காலமேயாகும்.

''வேதமுரைத்திமையோர் வணங்கும் செந்தமிழ் பாடுவார் தாம் வணங்கும் ....அட்டபுயகரத்தேனென்றாரே'' ''கோவையின்

தமிழ்பாடுவார் ………… ஆறங்கம் வல்லவர் தொழும் திருக்கோட்டியூரானே'' ''செந்தமிழும் வடகலையும் திகழ்ந்தநாவர் ……… அணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே'' என்று வெளிப்படையாகவும் ''ஆங்கரும்பிக்கண்ணீர் சோர்ந்தன்புகூறும் அடியவர் கட்காரமுதமானன் தன்னை …… … திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே'' என்று உள்ளுறையாகவும் திருமங்கையாழ்வார், தான் மங்களாசாஸனம் செய்தருளும் திவ்யதேசங்களில் தனக்கு முந்தின ஆழ்வார்களின் தமிழ் மறையான திவ்யப்ரபந்தங்களைப் பயின்றுவந்துள்ளமையைக் குறிக்கிறார். இது அகச்சான்று. திருமங்கையாழ்வார் சிற்றரசரானபடியால் ஆங்காங்கு கோவில்களில வேதம் ஓதுவதற்கும் தமிழ் மறைபாடுவதற்கும் அரசர்கள் நிவந்தம், மானியம் வழங்கியிருப்பதைத்தான் நேரில் பராமரித்து வந்திருக்கலாம். மார்கழி சுக்லபக்ஷ ஏகாதசி முதல்10நாள் தமிழ் வேதமோதுதல் திருவிழா ஆகமப்படி நடந்து வந்ததில் திருமங்கை மன்னன் தன் அரசத்தன்மையினால் ஆழ்வார் திருநகரியிலிருந்து நம்மாழ்வாரைத் திருவரங்கம் பெரிய கோவிலுக்கு எழுந்தருளப்பண்ணி அவர் திருவாய் மொழியை ஸாம வேதத்தோடொப்ப நம் பெருமாள் கேட்கும்படி பண்ணிவைத்தார். அதற்குப் பரிசாக திருமங்கைமன்னனுக்குத்தான் தை அமாவாசையன்று கண்டருளும் மஞ்சள் குளி உத்ஸவத்தை நம்பெருமாள் ஸம்மானமாகக் கொடுத்தார் என்பது திருமங்கை மன்னனின் சரித்திரம். பெரியவாச்சான் பிள்ளையருளிய கவியணருள் பாடும் இதை விளக்கும். இதற்கு எப்பக்கத்திலிருந்தும் இன்றுவரை ஆக்ஷேபம் வந்திருக்கவில்லை. இதுபுறச்சான்று.

''நிறை மொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறை மொழி தானே மந்திரமென்ப'' என்று நிச்சயமாகப் பலித்தேதீருமதான ஆன்றோரின் உண்மை மொழியே மந்திரமாகையால், தமிழ் மறையாம் ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தமும் மந்திரத்தின் பாற்பட்டு, கோவில் பூஜைகளில் தொடர்பு கொண்டவையேயாகும். ''…மந்திரங்கள் நால்வேதம்…… ஆமனத்து மறையவர்கள்…'' என்று பரம்பொருளுக்கும் தமக்கும் உள்ள 'உடையான் உடைமை' என்ற ஸம்பந்த ஜ்ஞானத்தைப் பெற்று ஸத்தான மன முடைய ஆமனத்து மறையவர்கள், என்று திருமந்த்ரஜ்ஞானம்பெற்ற ஸ்ரீவைஷ்ணவர்களே குறிக்கப்படுகின்றனர். திருமங்கைமன்னனும் ''மணிமாடக்கோவில் நெடுமாலுக்கு என்றும் தொண்டாயதொல் சீர் வயல் மங்கையர் கோன்'' என்றும் ''வண் புருடோத்தமத்துள் அண்ணல் சேவடிக்கீழ் அடைந்துய்ந்தவன் ஆலிமன்'' என்றும் தன்னைக்குறித்துக் கொள்கின்றார். இவ்வாறு

அகச்சான்றுகளாலும் புறச்சான்றுகளாலும் அரசர்கள் வலுவாய் ஆட்சி புரிந்து வந்த காலத்திலேயே கோவில்களில் ஸ்ரீவைஷ்ணவ மரபுகள் பழக்கவழக்கத்தில் இருக்கச் செய்தேயும் ''நாட்டு அரசர்களின் அதிகாரம் மறைந்த பிறகு அதிகாரி யாரென்று புரியாமல் இருந்த காலத்தில் வைணவம் கோவிலில் புகுந்து விட்டது'' என்று எழுதுவது எவ்வளவு தவறானது என நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். வைணவ துவேஷம் தலை தூக்கியுள்ளவர் ஒருவர் எழுதுவதை இவர் எழுதுவதா? ஆகவே ''ஆராவமுதாழ்வான், அருளிச்செயல்களை உலகோர் உய்யுமாறு பெற்றுத்தந்த நாதமுனிகள் திருக்குலத் தோன்றலான இவ்வாசிரியரைக் கொண்டு இவ்வாராய்ச்சி நூலை வெளியிட்டிருப்பது சாலப்பொருத்தமானது'' என்ற சுடர் மதிப்புரை எவ்வளவு அபூத்₃த₄மானது என்பதை நடுநிலையிலுள்ள உண்மையாளர் அனைவரும் அறிந்தேயிருப்பர். ''ஒவ்வொரு ஆசாரியரும் ஒவ்வொரு கொள்கையை வற்புறுத்துவதால் எந்தெந்தக் கொள்கை எவரெவர் நூல்களிலிருந்து தோன்றி தனி உருவத்தைப் பெற்றது என்றறிய வரலாற்றுணர்ச்சியுள்ள இருபதாம் நூற்றாண்டின் இளைஞர் விரும்பவது இயற்கை. அவர்கள் அவாவை நிறைவு செய்வதற்காகவே இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது'' என்ற சுடர் மதிப்புரைப் படி இந்நூல் இளைஞருக்கு உபயோகமானது என்று தேறுகிறது. ஆனால் உண்மையில் இந்நூல் குழப்பம் விளைத்து அவர்களின் அறிவினைக்கெடுப்பதாய், அவர்களுக்கு எவ்வகையிலும் பயன்படாததாகவே உள்ளது.

''ஆழ்வார்கள் காலத்தைப் பழமையானது எனக்கொள்வதால் ஒரு பயனுமில்லை. காலப்புதுமையால் குறைவோ பழமையால் ஏற்றமோ இல்லை'' என்கிறது ஓரிடத்தில். ஆழ்வார்களையும் அவர் பிரபந்தங்களையும் கூறும் ஆகமங்கள் பிற்காலத்தவை என்கிறது மற்றோரிடத்தில். கோவிலில் இப்போது நடைமுறையிலுள்ள வைணவக் கோட்பாடு ஆகமத் தொடர்பிலலாதது என்கிறது வேறோரிடத்தில். ஆகவே திவ்யபிரபந்த சேவைசாற்றுமுறை கோஷ்டியைப் புதுமையானதென்று அவமதிக்வே ஆக்₃ரஹத்துடன் எழுதப்பட்டது இந்நூல் என்று விளங்குகிறது. ''ஆலயங்களில் நேருக்குநேராக சம்பந்தப்பட்டுள்ள காரியங்களில் வைணவ ஸம்ப்ரதாயத்துக்குத் தனியாக ஓரிடமும் கிடையாது. வைணவ சம்ப்ரதாயத்தோடு கலந்த பாராயணம் சாற்றுமுறை என்பவை பூஜையோடு சம்பந்தப்பட்டவையல்ல'' (வ. பி. வை. பக்கம் 260) என்றெழுதுவதால் இவர் யாது பயன்பெற எண்ணுகிறார்? 20ம்நூற்றாண்டின் 1973ம் வருஷத்திய இப்போதைய

நிலையை எய்தியுள்ள வைணவக்கோட்பாடுகளை இவர் இவ்வாறு எழுது வதால் மாற்றிவிட முடியும் என்று எண்ணுகிருரா?

''வைணவ தீக்ஷையில் மிகவும் எளிதானது பஞ்ச ஸம்ஸ்காரம். இதை இரண்டு ஸம்ப்ரதாயத்தின் ஆசார்ய புருஷர்கள் இன்றும் செய்துவருகிருர்கள். ஆனல் பெரியாழ்வார் திருப்பல்லாண்டில் இது ஆலய நெருப்பிலேயே செய்யப்படுகிறது என்று குறிப்பிடுகிருர். பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்கரத்தின் கோயிற்பொறி யாலே ஒற்றுண்டு நின்று குடிகுடியாட்செய்கின்றோம். இதைக்கொண்டு பார்த்தால் கோயில்களிலேயே பூஜகர்களே கோயிற்பொறியால் பஞ்ச ஸம்ஸ்காரங்கள் செய்துவந்தனர் என்பது தெரிகிறது'' (வ. பி. வை. பக்கம் 313) என்ற இச்சொற்றொடர்கள் இவரது ஸம்ப்ரதாய ஜ்ஞான மில்லாமையையே புலப்படுத்துகின்றன. ''சக்கரத்தின் கோயில்— ஆழ்வான் எழுந்தருளியிருக்கிற மண்டலாகாரமான வாஸஸ்தானம். (ஆழ்வான்—திருவாழியாழ்வான்) பொறியாலே ஒற்றுண்டு நின்று— அதாகிறது சிஹ்நத்தாலே சிஹ்நிதராய் நின்று—திருவிலச்சினையை தரித்தபின்றே இவன் ஜன்மாந்தரத்திற் போகாதே, மோக்ஷாந்தரத் தில் போகாதே ஸ்வஸ்திரனைகப் பெற்றது. பகவதங்கீகாரமும் இதுண்டானலிறே அதிசயிப்பது'' என்பது வ்யாக்யான சக்கரவர்த் தியான பெரியவாச்சான் பிள்ளையின் வ்யாக்யானம். நூலாசிரியர் கோயிற்பொறியாலே என்பதற்குத் தான் பொருள் கூறுவதற்குமுன் இதைப் பார்த்திருந்தரல் இம்மாதிரி எழுதியிருப்பாரா? ''இதை இரண்டு ஸம்ப்ரதாயத்தின் ஆசார்ய புருஷர்கள் இன்றும் செய்து வருகிருர்கள்'' என்று வருத்தப்படுகிருர். இவரும் ஆசார்ய புருஷரே– தன் சிஷ்யர்களுக்கும், ஸந்ததியினருக்கும் தன் ஊர் கோவில்— (சார்ங்கபாணி ஸ்வாமி கோவில்) பூஜகர்களைக் கொண்டு பஞ்ச ஸம் ஸ்காரம் செய்வித்து வழிகாட்டட்டுமே! அது செய்யாது இவ்வாறு எழுதுவதால் என்னபயன்? ஸ்ரீராமாநுஜருக்குப் பெரிய நம்பி மதுராந் தகத்தில் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்தருளினர். பெரிய நம்பிக்கு ஆள வந்தார், ஆளவந்தாருக்கு மணக்கால்நம்பி, நாதமுனிகளுக்கு நம் மாழ்வார் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்தருளினவர்கள். இவர்கள் அனை வரும் கோவில் அர்ச்சர்களே என்பது இவர் துணிவுபோலும்!

''கத்யங்கள் என்ற நூல்கள் வசனநடையில் அமைந்துள்ள நூல் கள். சரணுகதியைப் பற்றியும் ஸ்ரீரங்கத்தைப் பற்றியும் ஸ்ரீவைகுண் டத்தைப் பற்றியும் வர்ணித்துப்பேசுகிறது. இந்நூல் ராமாநுஜருடைய நூல்தான் என்று பெரியவாச்சான் பிள்ளை வேதாந்ததேசிகர் உள்ளிட்ட

சகல ஆசார்யர்களும் ஒப்பப்பேசுகிருர்கள். பெரியவாச்சான் பிள்ளை வேதாந்த தேசிகர் இவர்கள் இவைகளுக்கு உரையும் எழுதியுள்ளார் கள். ஆனாலும் ராமாநுஜரின் மற்ற வேதாந்த நூல்களில் காணப் படும் கொள்கைகளுக்கும் இதற்கும் வேற்றுமை காணப்படுகிறது. இது ராமாநுஜருடையது அன்று என்று நினைக்கவும் வேண்டிவரு கிறது...'' (வ. பி. வை. பக்கங்கள் 251 முதல்) என்ற வாக்கியங்கள் ஸ்ரீ வைஷ்ணவரல்லாதார் ஒருவர் எழுதியதை இவர் அப்படியே எழுதித் தன் கையொப்பம் இட்டு விட்டார் என்று நினைக்க வேண்டியிருக்கிறது. இது கொண்டே இவர், தன் ஆசாரியனை நிகமாந்த மஹாதேசிகனையும் குறைவுபட எண்ணுவதால், இவர் மிகவும் அப்ராமாணிகர். இவர் எழுத்தெல்லாம் பிராமாணிகர்களாய், பரம ஸாத்விகர்களாய் உபய கலையிலுமுள்ள ஸ்ரீவைஷ்ணவர் அனைவரா லும் அப்ராமாணிகம் என்று ஒதுக்கக் கூடியதே, என்று தெளியலாம்.

''பகவதநுபவத்தை இரண்டாம் தரமாக்கி தன்னுடைய பரிசுத்த ஸ்வரூபத்தை பகவானுடைய தொடர்போடு அனுபவிப்பது கைவல் யம். இதை அபேக்ஷிப்பவர்களுக்கு இதுவும் ஸ்ரீவைகுண்டத்தில் கிடைக்கும்'' (வ. பி. வை. பக்கம் 292) என்ற கைவல்யத்தைப்பற்றின இவர் விளக்கம் புதியதாயிருக்கிறது. இன்றுள்ள நிலையை எய்தியுள்ள வைணவத்தின் இருவகைக் கொள்கையினையுடைய இருகலையினரும் இதுவரை கூருததாயிருக்கிறது. இவருடைய புதிய வைணவத்தின் புதிய திருப்பம் போலும் இது!

''இவற்றைத் திவ்யபிரபந்த உரை என்பதைவிட வைணவ சம்பிரதாயத்தை விரித்துக் கூறும் நூல் என்று கூறுவதே மிகவும் பொருத்தமானது'' (வ. பி. வை. பக்கம் 304) என்று திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களைப் பற்றி எழுதுகிருர். இது ஆராய்ச்சியில்லாத அறிவினுல் எழுந்த வாக்கியம். வைணவக் கொள்கைகளை விரிப்பது திவ்யபிரபந்தம் என்ருல் அதன் உரை வைணவக் கொள்கையை விரிக்காது வேறு எதை விரிக்கும்? ''நம்மாழ்வாரின் தெய்வக் கருத்தைக் கண்டுபிடிப்பதில் பிற்காலத்தவரான திருவாய் மொழி உரை ஆசிரியர்கள் மிகுந்த சிக்கலுக்கு உள்ளாகின்றனர்'' (வ. பி. வை. பக்கங்கள் 298 முதல்) என்கிருர். உரையாசிரியர்கள் ஒரு சிக்கலுக்கும் உள்ளாகவில்லை. அவர்கள் தெளிந்த சிந்தையரே. இந்நூலாசிரியர் தான் பல சிக்கலுக்கு உள்ளாகித்திணறுகிருர்.

''ஆசார்ய ஹ்ருதயம் ஆழ்வாரின் பாடல்களின் கருத்தை விளக்க ஏற்பட்டது. லோகாசார்யரின் தம்பியான அழகிய மணவாளப்பெரு

மாள் நாயனார் எழுதியது. திருவாய்மொழிக்குப் பல விடங்களுக்கு ஸ்வாபதேசப் பொருள் சொல்லுவது. ஆனால் புரட்சிகரமான வைண வத்தின் கருத்தை இங்கு நாம் பார்க்கிறோம். வேதத்தின் இடத் தில் திராவிடவேதத்தையும், ரிஷிகள் இடத்தில் ஆழ்வார்களையும், வர்ணாச்ரமத்தினிடத்தில் ஜாதிக்கலப்பில்லா வைஷ்ணவத்தையும் அளித்து வைணவத்தை உருவாக்கிய பெருமை இந்நூலுக்கு உண்டு. வைதிகமதத்தின் பல அடிப்படைக் கொள்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்த நூல் இது'' (வ. பி. வை. பக்கங்கள் 287, 288). இது புகழ்வது போல் இகழ்ச்சியாக எழுதியது. ஆசார்ய ஹ்ருதயத்தின் கருத்தை மிக ஆழ்ந்து கற்றாலேயே காணமுடியும். அதிலேயே பழக்கமுடையவர்களுக்குமே சிரமப்பட்டே அறியக் கூடிய கருத்தையுடையது ஆசார்ய ஹ்ருதயம். பரம வைதிக மதத்தை நிலை நாட்டுவது இது. வேதத்தோடும், கீதையோடும் திருவாய்மொழியை ஒற்றுமைப்படுத்தி நிரூபிக்கும் இது, வைதிகமதத்தின் பல அடிப் படைக் கொள்கைகளுக்கு எப்படி முற்றுப்புள்ளிவைக்கும்? இந் நூலாசிரியர்தான் தன் சிற்றறிவினால் எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்க எண்ணி, தன் பெருமைக்குத் தானே முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டுவிட்டார். ''ஸ்ரீவைஷ்ணவ உலகம் இத்தகைய உட்பகை வெளிப்பகைகளை வென்று ஒற்றுமைகொண்ட உள்ளத் துடன் தலை நிமிர்ந்து வெற்றிப் பொலிவுடன் மிளிர்வதாக'' என்று சுப₄மங்க₃ளாஶாஸனம் செய்வோமாக; சுபம்.

ஸ்ரீரங்கம், 17—10—73

இங்ஙனம்,
P. B. K. ஸ்ரீநிவாஸாசாரியர்,
(திருநாங்கூர்)

பெரியோர்களின் பொன்மொழிகள்

யதா₂ஶக்தி நிக்₃ருண்ஹீயாத் தே₃வதாகு₃ருநிந்த₃கான்

[பரம்பொருளையும், ஆசார்யனையும் நிந்தி₃ப்பவர்களை சக்தி யுள்ளவரையில் த₃ண்டி₃க்கவேண்டும்]

''வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில் சாக்கியர்கள் நின்பால்
பொறுப்பரியனகள் பேசில் போவதே நோயதாகிக்
குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமங்கண்டாய் அரங்கமாநகருளானே'' [திருமாலை 8]

10. ஸ்ரீரங்கம் உபயவேதா₃ந்த ஆசார்யபீடம் ட்ரஸ்டின் ஆதரவில் நடைபெற்ற பொதுக்கூட்டம

ஸுதர்ஶனம் ஆசிரியரின் குறிப்பு :-22—10—73ல் நாம் ஸ்ரீகாஞ்சி சென்றிருந்தபோது, ஸ்ரீரங்கராஜவீதியில் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத்பரமஹம்ஸ ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமியை சந்தித்து வரலாற்றில் பிறந்த வைணவம் என்னும் நூலைத் தக்கவர்களைக்கொண்டு கண்டிக்கச் செய்ய வேணும் என்று பிரார்த்தித்தோம். அப்போது திருவல்லிக் கேணியில் பொதுக்கூட்டம் நடந்ததையும் விண்ணப்பித் தோம். "ஸ்ரீவைஷ்ணவராஜத₄ானியான ஸ்ரீரங்கத்தில் கூட்டம் நடத்தவேண்டாமா" என்று ஸ்வாமி கேட்டருள. "அவஶ்யம் நடத்தச் செய்கிறேன்" என்று விண்ணப்பித் தேன். அந்நியமனத்தைப் பின்பற்றி ஸ்ரீமத்பரமஹம்ஸ ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி தலைமையில், ஸ்வாமி ஸ்தாபித்திருக்கும் உப₄யவேதா₃ந்த ஆசார்யபீட₂ம் ட்ரஸ்டின் ஆதரவில், ஸ்வாமி எழுந்தருளியிருக்கும் திருமாளிகையிலேயே 18—11—73 அன்று நூறு திரு நாமங்களுக்குமேல் கலந்துகொண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ உ. வே. ஶதாபி₄ஷேகம் கோ₃விந்த₃ நரஸிம்ஹாசார்யஸ்வாமி, திருநாங்கூர் ப்ர. ப. ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. நங்கவரம் ராக₄வா சார்ய ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. பா₃லபண்டி₃தமணி திருமலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. (அத்₄யாபகம்) பா₄ஷ்யமய்யங்கார் ஸ்வாமி முதலான பல ஸ்ரீவைஷ்ணவவித்₃வந்மணிகளும், கோவில் அத்₄யாபக வேத₃பாராயணு தி₃ கைங்கர்யபரர்களும், கோயில் அர்ச்சகர்களின் தலைவரான ராகவபட்டர் ஸ்வாமி யும், ரங்கராஜபட்டர் ஸ்வாமியும், மற்றும் பல ஸ்ரீவைஷ்ணவோத்தமர்களும் எழுந்தருளியிருந்தனர். அஹோ நூலின் முக்கியமான பகுதிகள் அடியேனால் வாசித்துக்காட் டப்பட்டன. கேட்ட பலர் 'இப்படியும் ஒருவர் எழுதுவாரா?' என்று ஆச்சரியப்பட்டனர். பின்வரும் தீர்மானம் ஏகமன தாக நிறைவேற்றப்பட்டது:—

தீர்மானம்

உபயவேதாந்தாசார்யபீடம் ட்ரஸ்டின் ஸ்தாபகரான ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீமந்நாராயண ராமானுஜ ஜீயர் ஸ்வாமியின் தலைமையில் கூடிய சபையில் 18-11-73 மாலை 4 மணி முதல் "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்னும் நூல் ஆராயப்பட்டது. இந்நூலில் பல விஷயங்கள் வேதவேதாந்தங்களுக்கும், ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களுக்கும், பாஞ்சராத்ர வைகாநஸ ஆகமங்களுக்கும், ஆழ்வார்களின் அருளிச்செயல்களுக்கும், ஸகலபூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கும் மிகவும் விருத்தமாயுள்ளது. வைணவமதத்தையும், ஆலயவழிபாட்டையும் மிகவும் திரித்துக்கூறி இழிவுபடுத்துகிறது. இத்தகைய நூலை அறநிலைய அதிகாரிகள் வெளியிட்டது நியாயமல்ல என்று இந்த சபை கருதுகிறது. அதனால் இந்த நூலை விற்பதையும் பிரசாரம் செய்வதையும் உடனடியாக நிறுத்தும்படி அறநிலைய அதிகாரிகளை இந்த சபை கேட்டுக்கொள்கிறது.

பெரியோர்களின் பொன்மொழிகள்

ஆம்நாயாப்₄யஸநாந்யரண்யருதி₃தம் வேத₃வ்ரதாந்யந்வஹம
மேத₃ஶ்சே₂த₃ப₂லாநி பூர்த்தவித₄யஸ் ஸர்வே ஹுதம் ப₄ஸ்மநி।
தீர்த்த₂ாநாமவகா₃ஹநாநி ச க₃ஜஸ்நாநம் விநா யத்பத₃-
த்₃வந்த்₃வாம்பே₄ாருஹ ஸம்ஸ்ம்ருதீர் விஜயதே தே₃வஸ் ஸ நாராயண:॥
[முகுந்தமாலை 25]

[எவனுடைய திருவடித் தாமரையிணையை நினையாமல் வேதமோதுவது காட்டில் அழுவதாகிறதோ, யாக₃ங்களை அநுஷ்டி₂ப்பது கசாப்புத் தொழிலாகிறதோ, (அக்₃நிஹோத்ரம் முதலிய) இஷ்டாபூர்த்தங்கள் சாம்பலில் ஹோமம் செய்ததுபோலாகிறதோ, புண்ய தீர்த்த₂ங்களில் முழுகுவது யானைகுளிப்பது போலாகிறதோ, அப்பெருமையுடைய நாராயணன் வீறுபெற்று விளங்குகிறான்.]

11. தர்மபுரி ஸ்ரீவைஷ்ணவ சபையின் தீர்மானம்

ஸ்ரிய:பதியான எம்பெருமானை மக்களுக்கு அறிவிக்கும் வேதங்களும், அதன் கருத்தைத் தெளிவாக விரிவுபடுத்தும் மனுஸ்ம்ருதி, ஸ்ரீராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய க்ரந்தங்களும் இவைகளின் கருத்தைத் தெளியக்கூறும் அருளிச்செயல்களும், அவற்றின் வியாக்கியானங்கள், ரஹஸ்யங்கள் முதலான பல பூர்வாசார்ய க்ரந்தங்களும், ஒரே மாதிரியாகக் கூறுகின்ற பல கருத்துகளுக்கு மாறுபாடாக (அதாவது விரோதமாக) எழுதப்பெற்ற கருத்துக்களடங்கிய,

"வரலாற்றில் பிறந்த வைணவம்"

என்ற காகிதச்சுமையை, விலைக்கு வாங்கிப் படித்து, பகவதபசார, பாகவதாபசார,ஆசார்யாபசாரங்களுக்கு இரையாக வேண்டாம் என்று ஸத்ஸம்ப்ரதாயஸ்தர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரையும், இதன்மூலம், கோயிலில் எழுந்தருளியிருக்கும், திருமலை அநந்தாண்பிள்ளை கபிஸ்தலம் வித்$_3$வான் அஸ்மதா$_3$சார்யரான ஸ்ரீ. உ. வே. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிகள் அவர்களின் தி$_3$வ்யாஜ்ஞாஸநப்படிக்குப் பிரார்த்திக்கிறோம்.

ஏனெனில், ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்கு ஆதிப்ரமாணம் வேதம்-அதுநித்யமானது. குற்றமற்றது. ஸ்வத: ப்ரமாணம். அதின் ஸாரமான அநுஷ்டானமே ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம். காலநிர்ணயம் பண்ண அரிதானது இது. இத்தகைய பரமவைதிக மார்க்கத்தை — முன்னுக்குப்பின் முரணான வரலாற்றுக் காகிதங்களைக்கொண்டு, காலவரை குறிப்பிட்டும், மனிதர்களால் ஆக்கியதாகவும், எம்பெருமானார் முதலானோர் வளர்த்ததைப் புதிதாக உண்டாக்கினதாகவும் பொய்களைக்கூறி இழிவுபடுத்தி நமக்கெல்லாம் மேலோர்களான பெரியவாச்சான்பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், வேதா$_3$ந்ததே$_3$சிகர், மணவாளமாமுனிகள்

முதலான மஹான்களுடைய ஸ்ரீஸூக்திகளுக்கு விரோதமாக அதில் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். இந்த "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்னும் காகிதச்சுமையானது அரசியல் நோக்கங்கொண்டது. ஓரே பொருளைப் பலர் பலவித முரண்பாடுகளுடன் எழுதியதைக் கிளிப்பிள்ளை போல் திருப்பிப்படித்து, சமூகத்தில், பகைமை, பிரிவுமனப்பான்மை, பொய்ச்சுவை. உள்ளதைவிட்டுப் பிரிதொன்றைக் கைக்கொள்ளுதல் ஆகிய குற்றங்களை வளர்ப்பது. வரலாற்று ஆசிரியர்களான ஆங்கிலேயர் அமெரிக்கர் முதலான வெள்ளையர், முகமதியர், இவர்களுக்கு அடிவருடிகள் இவர்களையே ஆசார்யராகக் கருதிக்கொண்டு, இந்திய ஆசார்யர்களை அவமதிக்கும் ஆஸ்திக நாஸ்திகராகவும், தன் சம்ப்ரதாயத்திலேயே விஸ்வாஸமில்லாதவராகவும் ஜீவிக்கிற ஒரு அய்யங்காரால் எழுதப்பெற்றுள்ள இக்காகிதங்கள் குப்பை. இதை ஸ்ரீ வைஷ்ணவ சமூகம் ஏற்று ஏமாந்து போகக்கூடாது — என்று தர்மபுரிமாவட்டத்தில் ஸ்ரீவைஷ்ணவர்கள் சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை உலகுக்கு விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
எம்பெருமானார்க்கு அத்யந்தாபிமத நல்லடியாரடிப்பொடி,
அனந்தாழ்வான் ராமாநுஜதாசன்,
தலைவர்: தர்மபுரி ஸ்ரீ வைஷ்ணவ சபை,
16—11—73 தர்மபுரி.

பெரியோர்களின் பொன்மொழிகள்

விலைக்காட்படுவர் விசாதியேற்றுண்பர்
தலைக்காட்பலிதிரிவர் தக்கோர்—முலைக்கால்
விடமுண்டவேந்தனையே வேறாக ஏத்தாதார்
கடமுண்டார் கல்லாதவர். [நான்-திருவ 53]

12. ஸாரார்த்த₂ச் சொல்லழகர் ஸ்ரீ உ. வே.

தி. அ. சதாபிஷேகம் கோவிந்தநரஸிம்ஹாசார்ய ஸ்வாமி

உபயவேதாந்தாசார்யபீட பத்திரிகையாசிரியர், ஸ்ரீரங்கம்.

அக்நிஹோத்ரியின் அறியாமை

உலகில் எந்த தேசமானாலும் ஆங்காங்கு வஸிப்பவர்கள் தங்களுக்குள் ஓர் கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டேயாகவேண்டும். ஒவ்வொருவனுடைய மனமும் ஒவ்வொரு ஸமயம் ஓரோர் எண்ணமுள்ளதாகையால் மனம்போனபோக்கில் போனால், தானும் கெட்டுப் பிறரையும் கெடுப்பான். மிருகங்களும் தங்களுக்குள் ஓர் கட்டுப்பாட்டை இயற்கையிலேயே பெற்றிருக்கின்றன. மரம் செடி கொடி முதலியவைகளுக்கும் இயற்கையிலேயே அவ்வவற்றுக்கு ஓர் நிலையான தன்மையுண்டு. ஆனால் ஆறறிவு பெற்ற மனிதன் அந்த ஆறுவதான பகுத்தறிவின் பயனைப்பெறும்போது மிகமிக கவனத்துடன் அந்த அறிவைச் செயலாக்கவேண்டும். அதற்காகவே, அறிவுக் கூர்மை பெற்றவர்களால் சட்டங்கள் செய்யப்படுகின்றன. அவைகளை நன்கு பயன்படுத்தினால் மனிதஸமுதாயம் நல்வாழ்வு பெறும். இது உலக இயல்பு. ஆனால் ஓர் மனிதன் எவ்வளவு புத்திகூர்மைபெற்றவனாயினும், அவனால் சில காரணங்களால் அறிவுத் தடுமாற்றத்தைத் தவிர்க்க முடியாதாகையால் மனிதனால் இயற்றப் படும் சட்டங்கள் ஓட்டையுடையனவேயாகும். இக்காலத்தில் மனித ஸமுதாயம் வாழவென்று இயற்றப்பட்ட சட்டங்களிலிருந்து நாம் கற்கும் பாடம் இது. அத்துடன் மனிதனால் இயற்றப்படும் கட்டுப் பாடுகள், அவனனுபவத்தில் பெற்ற அறிவைக்கொண்டே இயற்றப் படுவதால், வெறும் தேஹத்தைப் பற்றியனவேயாம். ஆனால் அறிஞர்கள் தேகத்தைக்காட்டிலும் வேறுபட்டதாக ஒன்றை ஆன்மாவாகக் கொள்ளவேணுமென்பதை அநுபவத்தால் அறிந்திருக்கிறார்கள். அதைப்பற்றிய தெளிவைப் பெறும்போது பரமஆப்தமான (அதாவது விருப்பு வெறுப்பில்லாத) தொன்றை ப்ரமாணமாகக்கொள்ளவேணும். அது எது என்று ஆராயும்போது, வேதந்தான் அப்படிப்பட்ட ப்ரமாணமாகத் தேறுகிறது. அது ஓர் புருஷனால் பண்ணப்பட்டதன்று என்பது வைதிகர்களின் ஆராய்ச்சியால் தேறின உண்மை. அந்த முதல் நூலையும், அதை அடியொற்றி அதற்கு விவரணமாய் அமைந்த இதிஹாஸபுராணாதி₃ வழிநூல்களையும் பின்பற்றி ஓர் கட்டுப்பாட்டை விதித்துக்கொண்டவர்களே வைதிகர்கள் ஆவர்கள்.

மிகவும் விரிவானது வேதம் என்பதனை இக்காலத்து ஆராய்ச்சியாளர் களும் மறுக்கவில்லை. மிகப்பெரியதான வேதத்தைத் தங்கள் தபோ பலத்தால் ஸாக்ஷாத்கரித்தவர்கள் வ்யாஸாதிரிஷிகள். அவர்கள் எழுதிவைத்து இன்றும் நமக்குக் கிடைக்கிற க்ரந்தங்கள் அவர்கள் அத்தகைய ஆற்றல்பெற்றவர்கள்தான் என்பதை நமக்கு நன்கு காட்டுகின்றன. ஆக, வைதிகர்களான நாம் வேதத்தையும் அதன் வழி நூற்களையும் நம் மதத்திற்கு ஆதாரமாகக் கொள்ளக்கடமைப்பட்ட வர்களாகிறோம். எப்படியானால் ஓர் தேசத்தின் ப்ரஜை—அத்தேசத்திய எல்லாச் சட்டங்களுக்கும் கட்டுப்பட்டே தீரவேணுமோ, அவ்விதம் வைதிக குடும்பத்தில் பிறந்த நாம் வைதிக மர்யாதைக்குக் கட்டுப்பட்டே யாக வேண்டும். இதில் த்வைதி, அத்வைதி. விசிஷ்டாத்வைதி என்கிற பாகுபாடு கிடையாது.

வைதிக குடும்பத்தில் பிறந்த ஒவ்வொருவனும் வேதம் முதலிய சாஸ்த்ரங்களை நன்கு கற்றே தெளிவுபெற வேணுமென்பதும் ஸாத்ய மானதொன்றன்று. அதற்குத்தக்க அறிவின் கூர்மை சிலபேருக்குத் தான் உண்டாகும். ஆனாலும் பெரியோர்களின் உபதேசத்தையும் அநுஷ்டானத்தையும் பின்பற்றி நடப்பதுதான் எல்லா வைதிக குடும்பத்தில் பிறந்தவர்களுக்கும் நன்மைபயக்கும். மனிதனாய்ப் பிறந்தவன் யாவனாயினும் எக்காலத்தும் எத்தேசத்தும் இவ்வர்த்தங் களைக் கைக் கொண்டால்தான் வாழ்ச்சியுண்டென்பது வைதிகர்களின் கொள்கை. இவ்வர்த்தங்கள்காலாநுகுணமாகவோ தேசாநுகுண மாகவோ மாற்றத் தக்கவையல்ல.

ஆனால், ஸமீபகாலமாக அரசியல் கட்சிகள் ஓட்டுப்பெறுவதற் காக அனேக செப்பிடுவித்தைகள் செய்துவருகின்றன. அந்த வித்தைகளில் ஒன்று — ஆலயங்களின் பழக்கவழக்கங்களை மாற்றி யமைக்கவேணுமென்பது. அதாவது — எச்சாதியினரும் எந்த ஆல யத்திலும் பூஜை முதலியவைகளைச் செய்யலாம் எனக் கூறுவது. அதேபோல, வைஷ்ணவத்தின் வளர்ச்சியை ஸஹியாத பிறமதத்த வர்கள், அதிலும் அத்₃வைதசைவர்கள், வைஷ்ணவ குலத்தில் பிறந்துவைத்தே ஜன்மாந்தர பாபத்தால் அதில் ஶ்ரத்₃தை₄யில்லாத வர்களுக்கு அல்ப ப்ரயோஜநத்தை உண்டாக்கி, தம் மதத்துக்கு முரணான வாதங்களை அவர்களைக்கொண்டே எழுதி வைப்பதும் இக் காலத்தில் நடக்கும் மற்றொரு செப்பிடுவித்தையாகும். இவ்விதத் தீச்செயலைத்தான் அக்நிஹோத்ரம் தாதாசாரியர் என்பவர் செய் திருக்கிறார்.

இவர்- நாதமுனிகள் காலாயிர திவ்யப்ரபந்தங்களைப் பெறக்காரண மான திருக்குடந்தை என்னும் திவ்யதேசத்தில், அதே நாதமுனிகள் திருவம்சத்தில் பிறந்தவர் என்று கூறுகிருர்கள். வேதங்களை நன்கு அர்த்தத்துடன் ஓதினவர்; ஆயினும், குறுக்குவழியில் புகழும் பண மும் தேடவெண்ணி, தம்மதான ஸ்ரீ வைஷ்ணவ ஸித்₃த₄ாந்தத்தையும், அதின் பூர்வாசார்யர்களையும் ப்ரபலமான வேதத்தையும் அதின் உபப்₃ரும்ஹணங்களான ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களையும், ஸ்ரீபாஷ் யாதி ஸம்ஸ்க்ருத வேதாந்த க்ரந்தங்களையும், நாதமுனிகள் நிதியாகப் பெற்ற ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களையும், அதின் வ்யாக் யானங்களையும் சிறிதும் கணிசியாமல் தம் மனம்போனபடியெல்லாம் ஆராய்ச்சி என்கிற பெயரில், ஏதேதோ எழுதி அதற்கு ''வரலாற் றில் பிறந்த வைணவம்'' என்று பெயரும் சூட்டியிருக்கிருர். இவர் செய்த இத்தவறைவிடப் பெரிய தவறு, இவரின் அந்த அபத்தச் சுவடியை திருக்குடந்தை தேவஸ்தானத்தார் பல ஆயிரம் ரூபாய் கோயில் பணத்தைச் செலவழித்து அச்சிட்டு வெளியிட்டதேயாகும். அதைவிடப் மிகப்பெரியதவறு அந்தச் சுவடியை ஒவ்வொரு தேவஸ் தானமும் கட்டாயம் ரூ. 12 கொடுத்து வாங்கவேணுமென்று போர்டார் கட்டாயப்படுத்தியது. இவரின் அச்சுவடி ஸம்ப்ரதாய வித்வான்களை ஒன்றும் செய்யாமல் போனுலும், நடையுடைபாவனைகளில் புதிய தையே ஆசைப்படும் இளம்பருவத்திலுள்ள வைஷ்ணவப்பிள்ளைகளைப் பெரிதும் பாதிக்குமதொன்று.

ஆகவே உபயஸம்ப்ரதாய வித்வான்களும் இதன் பொய்ம்மையை விளக்கியும், இதை எழுதினவரின் கபடத்தை விளக்கியும் அவச்யம் கட்டுரைகள் எழுதத்தான் வேண்டும். அத்துடன் இவரைத் தங்கள் ஸமூஹத்தில் சேர்க்காமல் பஹிஷ்கரிக்கவும் வேண்டும். இவர் இந்தச் சுவடியை எழுதிய பிறகு பற்பல வித்வத்ஸதஸ்ஸுக்களில் மேல் விழுந்து கலந்துகொள்கிருராம். அங்குள்ளவர்கள் — இவருக்கு அச் சுவடியால் அரசியலில் உண்டாயிருக்கும் செல்வாக்கைக்கண்டு தாங்களும் க்ஷுத்ரப்ரயோஜனத்தைக் கணிசித்தோ, இவர் விரோதமே அநர்த்த₂ஹேதுவென்ருே இவரைத் தவிர்க்க முன்வருவதில்லையாம்.

ஓர் குலடை (நடத்தை கெட்டவள்) — பதிவ்ரதைகள் கூடுமிடங் களில் தானும் வலியப்போய் கூடுவாளாம்-தன் செய்கையை மறைக்க; அதுபோலவும், ஓர் பெரிய வியாதிக்காரன் யாரையும் தன் குறைக்கரத் தால் தொட்டுப்பேசுவானும்; அதுபோலவுமிருக்கிறது இவர் நடத்தை. அவர்கள் தன்னைக் கண்டால் வெறுப்படைவர்களே என்பதை இவர்

சிறிதும் நினைப்பதில்லை. இவர் நடத்தையைக் காணும்போது, தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருமாலைப் பாசுரமொன்று நினை விற்கு வருகிறது - ''குறிகொள் அந்தணமை தன்னை ஒளித்திட்டேன்'' என்பது அது. அதாவது—தாம் போட்ட ப்ராஹ்மண வேஷத்தால் உலகில் ப்ராஹ்மண்யத்தையே மறையச்செய்தாராம். அது நைச்யாநு ஸந்தானத்துக்காக அவர் சொன்னது. ஆனால் அதை இவரிடம் கண்கூடாக காணலாம்.

ஸ்ரீ வசனபூஷணத்தில் ஓர் சூர்ணை அத்புதமானது — ''கேவல நாஸ்திகனைத் திருத்தலாம். ஆஸ்திகநாஸ்திகனை ஒருநாளும் திருத்த வொண்ணாது'' என்று. இவர் — ஆஸ்திகநாஸ்திக கோஷ்டியில் சேர்ந்தவர்.

இவர் எழுதிய சுவடியின் அடிப்படைக்கருத்து இதுதான்:— விஷ்ணுகோயிலில் வைஷ்ணவர்கள்தான் பூஜைமுதலியன செய்ய வேண்டுமென்பதில்லை. யாரும் செய்யலாம், வைஷ்ணவத்துக்கும் கோயிலுக்கும் ஸம்பந்தம் கிடையாது என்பதுதான்.

இப்படி எழுதுகிறவரின் எண்ணமென்னவென்றால் தாம் ஆழ்வார் களின் அருளிச்செயலிலும், அவற்றில் கொண்டாடப்படும் கோயில் களிலும் ஈடுபாடில்லாதவராகையாலும், விசேஷித்து த்₃வேஷமும் கொண்டிருப்பதாலும், முன்பே ப்ரஹ்மஸ்ரீ எனப் பட்டம் பெற்றவ ராகையாலும், 'கோயில்கள் போனால் நமக்கொன்றும் நஷ்டமில்லை' என்பதே. இந்நூலால் தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர் மாத்திரம் ப₃ாதி₄க்கப்படப்போவதில்லை. தேசிகனும் தேசிக ஸம்ப்ரத₃ாயஸ்த₂ர் களும் தி₃வ்யதே₃ஶங்களைத் தங்களுக்கு ஜீவாதுவாகக் கொண்டிருப்ப தால் அவர்களுந்தான் பாதிக்கப்படுவார்கள். ஆகையால், இதில் கலாபே₄த₃மன்றியில் உப₄யஸம்ப்ரத₃ாய வித்₃வான்களாலும் இவர் சுவடி நிரஸிக்கத்தகுந்ததே. அனைவராலும் இவரின் அப்ராமாணிகத்வ மும், பொய்யான வைஷ்ணவ வேஷமும் ஸ்ரீவைஷ்ணவவுலகுக்கு நன்கு விளக்கப்படவேண்டியதேயாகும். ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவனும் கட்டுரை எழுத ஆற்றல் பெற்றிருந்தால் இவரின் அறியாமையை விளக்கிப்போருவதே ஸ்ரீ வைஷ்ணவத்துக்குச் செய்யும் தொண்டாகும். இதில் முக்கிய பங்குகொள்ளவேண்டியவர்கள் தே₃சிகஸம்ப்ர த₃ாயஸ்த₂ர்களே. அவர்கள் இவரைக் கண்டியாமல் விட்டால், '' அப்ரதிஷித்₃த₄ம் அநுமதம் ப₄வதி '' என்கிற ந்யாயப்படி, இவர்

மதமே தங்களுக்கும் மதமாகக் கொண்டவர்களாகி, "குளத்தை விட்டு ஸமீபகாலத்தில்தான் கோயிலுக்கு வந்தவர்கள்" என்னும் பழி நீங்காதவர்களாவர்கள்.

ஆனாலும் ஸ்ரீவைஷ்ணவகுலத்தில், அதிலும் நாதமுனிகள் வம்சத்தில், அதிலும் திருக்குடந்தையில் பிறக்கப்பெற்றவரின் ப₄ாக்₃யம் இப்படிச் சுவர்ந்துவிடவேணுமா? இவர் வேதத்தைப் பூர்ணமாகக் கற்று அர்த்தமும் கற்றிருந்தும், அதின் பயனைப்பெறுமல் போனாரே என இவருக்காக வருந்தத்தான் வேண்டியிருக்கிறது. ஒரு ஸ்ரீவைஷ்ணவனாகப்பிறந்தவன், வேதவேதாந்தங்களை அபௌருஷேயங்களென்றும், நித்யநிர்து₃ஷ்டங்களென்றும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அதே போல் தது₃பப்₃ரும்ஹணங்களான ஸ்ம்ருதிதிஹாஸபுராணங்களையும்— ப்ரமாணங்களாக ஒப்புக்கொள்ளவேண்டும். அதற்கும் மேலாக ப்₃ரஹ்மஸூத்ரங்களையும், தத்₃ப₄ாஷ்யமான ஸ்ரீப₄ாஷ்யத்தையும், தத்₃வ்யாக்₂யாநங்களையும் ப்ரமாணதமங்களாக ஒப்புக்கொள்ள வேணும். அதற்கும் மேலாக, ஆழ்வார்களினருளிச்செயல்களான தி₃வ்யப்ரப₃ந்த₄ங்களையும், தத்₃வ்யாக்₂யானங்களையும் ப்ரமாணங்களாக்கிக்கொண்டேயாகவேணும். இதுதான் ஒரு ஸ்ரீவைஷ்ணவனின் நிலை. இவ்வளவையும் கசடறக்கற்றுத்தான் நம் பெரியோர்கள் நமக்கு ஸத₃நுஷ்ட₂ாநங்களை ஶிக்ஷித்து வைத்திருக்கிறார்கள். ஒரு ஸ்ரீவைஷ்ணவன் தன் ஸ்ரீவைஷ்ணவ த₄ர்மத்தை நன்கு அறிந்தானேயாகில், சாஸ்த்ரங்களிடமும் சாஸ்த்ரவேத்₃யனிடத்திலும் சாஸ்த்ர ப்ரத₃ரான பூர்வாசார்யர்களிடத்தும் யாவதா₃த்மப₄ாவி க்ருதஜ்ஞனாகவே வர்த்திக்க வேணும். ஆனால், அக்நிஹோத்ரியோவென்றால். வேத₃ம் முதலானவைகளுக்குக் காலத்தையும், கர்த்தாக்களையும் கல்பித்துக் கொண்டும், ஸ்ம்ருதீதிஹாஸ புராணாதி₃களை பி₄ந்நாபி₄ப்ராயமுள்ளவையென்றெழுதியும், வேதத்தில் பூர்வபாகத்துக்கும் வேதாந்தபாகத்துக்குமே அத்₃வைதிகளைப்போல் அர்த்த₂பே₄த₃ம் கல்பித்துக்கொண்டும் எம்பெருமானாரின் ஸ்ரீபாஷ்யத்தையும தத்₃வ்யாக்₂யானங்களையும் அனாதரித்தும், ஆழ்வார்கள் திவ்யஸூக்திகளிலும் தத்₃வ்யாக்₂யாநங்களிலும் விப்ரதிபத்திகொண்டும் தாமே தம் சுவடியில் முன்னுக்குப்பின் விரோதமாய், உன்மத்தப்ரலாபங்களைச் செய்துபோருகிறார். இவர் பல நாளைக்கு முன்பே ஆழ்வார்கள் எம்பெருமானார் தேசிகன் இவர்களை தூஷித்து ஸ்ரீவைஷ்ணவத்தையிழந்து "ப்ரஹ்மஸ்ரீ" ஆனார். அதுமுதல் சங்கரரிடம் ஒட்டிக்கொண்டு அவ்வப்போது விசிஷ்டாத்₃வைததூ₃ஷகரானார். இப்போது அரசியலில் சேர்ந்து நாஸ்திகராகவேயாய்விட்டார்.

இவரால் அபத்தச்சுவடியில் தூஷிக்கப்படாத ஸச்சாஸ்த்ரமே கிடையாதெனலாம். கீதையில் தன் பெயரைச் சொல்லாமையாலே கண்ணன்தான் இதை சொன்னான் என்பதற்கு ஆதாரமில்லை என்று பொருள்படப் பேசுகிறார். இது அறிவின் கார்யமா?

இவரிடத்து ஒருசேர பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாப சாரரூப நாநாவிதாபசாரங்கள் நன்கு குடிகொண்டிருக்கின்றன. அதில் இவர் (Wholesale) மொத்த வ்யாபாரியாவர். எம்பெருமான் ஸ்ரீ கீதையில் ஓர் வார்த்தை அருளிச்செய்திருக்கிறான். ''தாநஹம் த்3விஷத: க்ரூராந்'' என்று. அதற்கு இலக்காகப் போகிறார் அந்தோ! இவ்வளவு நாஸ்திகரானவிவர் ஆஸ்திகவேஷங்கொண்டிருப்பதும் ஓர் ஆச்சரியம். அத்துடன், இவருக்கு ஆஶ்ரயபூ4தராய், நம்நாட்டுப் பத்திரிகைகளில் 'நடமாடும் தெய்வம்' என்று புகழப்படும் சங்கராசாரியரும் வேதம் முதலானவைகளைக் கல்பிதங்களென்ற இவரால் தன் மதமும் பொய்யாகிறதே என்றெண்ணாமல் இவருடன் குலாவுவது இன்னம் ஆச்சரியம்! ஆதிசங்கரர் வேதத்தை அபௌருஷேயமெனவும், கீ3தாதி3களையும் விஷ்ணுபுராணம் முதலியவைகளையும் ப்ரமாணமாகவும் ஒப்புக்கொண்டுதானே வைதி3கரானார். அந்த சங்கராசாரியர் வழிவந்தவரான இந்த சங்கரர், தம் மதம் தூஷிக்கப்பட்டாலும் இந்நூலைப் பொறுத்திருப்பது அவரையும் இவரைப்போன்றவரே என எண்ணப்பண்ணுகிறது.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி இவரை 'இவ்வித விபரீதகார்யம் கூடுமா' எனக் கேட்டதற்கு 'அது ப்ராபி4ப்ராயத்தாலே எழுதியது, நான் பரமாஸ்திகன்தான்' என்றாராம். இது எவ்வளவு அநார்ஜவவாத3ம்! ஒன்று நினைவுக்கு வருகிறது. ஓர் ஆட்டிடையன், தன் ஆட்டில் ஒன்றுக்கு வலிப்புவர, அருகிலிருந்த காளியிடம் ஆட்டுக்கு வலிப்பு நின்றால் ஓர் ஆட்டுக்குட்டியை ப3லியிடுவதாகச் சொன்னானாம். அவன் மனைவி அதட்டவே, கையால் வாயைக் காளிக்கு மறைத்துக்கொண்டு, மனைவிக்கு நாவை 'உளஉள' வென்று (பொய்யென்று) அசைத்துக்காட்டினாம். அதாவது—'ஆடு எழுந்திருக்கட்டும் எனச் சொன்னேன். குட்டியை பலிகொடுக்கிறேன் என்பது பொய்' என்று. அதுபோல், 'ஏன் இப்படி எழுதினீர்' என்றால், 'அது பொய் பொய்யாக எழுதியது. நான் ஜன்மஸித்3த4 வைஷ்ணவன். நிருபாதி4க வைஷ்ணவன். வேணுமானால் மது4ராந்தகம் ஸ்வாமியைக் கேளுங்கள்' என்கிறார். இவரை—ஸ்ரீ பா4ஷ்யாதி3ஸத3ஸ்ஸுக்களிலும் புகுரவிடுகிறார்கள்!

கலிகாலத்தில் நிஷேதித்திருக்கும்போது, ஸாக்ஷாத் பசு யாகத்தை ஸ்ரீரங்கத்திலேயே கூசாமல் செய்வித்தவர் இவர். இவரின் அந்த அதர்க்கணத்தை ஸ்ரீரங்கம் தேசிக ஸம்ப்ரதாயிகள் அத்தனைபேரும் கொண்டாடினார்கள். தன்னைப் பரமாஸ்திகன் எனக் காட்டவேண்டி—இவர் இப்போது பற்பல ஸதஸ்ஸுக்களுக்குச் செல்கிறார். ஓர் குலடை, பதிவ்ரதைகளின் கூட்டத்தில் வலியக் கலந்துகொள்வளாம்—'தன்னையும் அவர்களைப்போல் பார்க்கிறவர்கள் நினைக்கட்டுமே' என்று. ஓர் குஷ்டரோகி தன் குறைக்கையால் எல்லாரையும் தொட்டுப் பேசவருவனும்-தன்னை பூர்ணஹஸ்தனென்று மற்றவர்கள் நினைக்க. இவ்வுதாஹரணந்தான் அடிக்கடி நினைவுக்கு வருகிறது. அடியேன் செவிக்கெட்டினவரை இதுவரை இவரின் இவ்விபரீதச் செயலை இரண்டொருவர் தவிர மற்ற தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்கள் பஹிரங்கமாகக் கண்டித்ததாகத் தெரியவில்லை. அத்தால்-'அப்ரதிஷித்தம் அநுமதம் பவதி' என்கிற ந்யாயத்தால் 'அவர்களும் இவரின் கொள்கைகளைப் பின்பற்றுமவர்களோ' என அஞ்சவேண்டியதாகிறது. அப்படியானால் அவர்கள் கோயிலைவிட்டு யதாபூர்வம் குளத்துக்கேதான் போகவேண்டியவராவர்கள். இவர் வாதமே — ஸ்ரீ வைஷ்ணவ ப்ராஹ்மணனுக்குக் கோயில் வேண்டாம், பாமரன் உய்யத்தான் கோயில் என்பதுதானே. இதை தேசிகஸம்ப்ரதாயஸ்தவித்வான்களில் எவ்வளவுபேர் கண்டிக்கிறார்கள் என்பது மார்கழிமுதல் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவைப் பார்த்தால் தெரியும். இத்துடன் குப்பையான இவர் நூலைப்பற்றி எழுதுவதை நிறுத்திக் கொள்கிறேன்,

---

பெரியோர்களின் பொன்மொழிகள்

ஆத்மைக்யம் தேவதைக்யம் த்ரிகஸமதிகதா துல்யதைக்யம் த்ரயாணாம்
அந்யத்ரைச்வர்யமித்யாத்யநிபுணபணதீராத்ரியந்தே ந ஸந்த: |
த்ரய்யந்தைரேககண்டை: ததநுகுணமநுவ்யாஸமுக்யோக்திபிச்ச
ஸ்ரீமாந் நாராயணோ ந: பதிரகிலதநுர் முக்திதோ முக்தபோக்ய: ||

[ரஹஸ்யத்ரயஸாரம்]

['ஜீவர்கள் அனைவரும் ஒன்று' என்பது 'தேவதைகள் எல்லாரும் ஒன்று' என்பது 'மும்மூர்த்திகள்' என்னும் வழக்கினால் ஏற்படும் த்ரிமூர்த்தி ஸாம்யவாதமும், த்ரிமூர்த்யைக்யவாதமும், த்ரிமூர்த்யுத்தீர்ணவாதமும் முதலான ஆராய்ச்சியற்ற பேச்சுக்களை நல்லோர்கள் ஆதரிக்கமாட்டார்கள். ஒருமிடறான வேதங்களாலும், அதை ஒட்டிய மநு, வ்யாஸர் முதலான மஹர்ஷி வாக்யங்களாலும் ஸர்வசரீரியான ஸ்ரீமந் நாராயணனே நமக்கு ஸ்வாமியாகவும், மோக்ஷமளிப்பவனாகவும், மோக்ஷப்ராப்யனாகவுமிருக்கிறான்.]

13. ஸ்ரீ உ. வே. இளநகர் கெட்டம் விஜயராகவதாததாசாரியர்,
29, சன்னிதி வீதி, காஞ்சீபுரம்–3.

அநாதி வைணவம்

'வரலாற்றில் பிறந்த வைணவம்' எழுதியவர் ஸ்ரீ அக்னிஹோத்ரம் ராமானுஜதாதாச்சாரியரர். வெளியிட்டது ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி தேவஸ்தானம், கும்பகோணம்.

டை நூலை அடியேன் பார்க்க நேர்ந்தது. மனம் கலங்கித் தவிக்கலானேன். கால சோதனை. நிற்க. இந்நூலைப் பார்த்து வைணவர்கள் வரலாற்று ஆராய்ச்சி நூல் என்று குழப்பம் அடைய வேண்டாம். ''இந்நூல் உண்மையான வரலாற்றிற்குப் புறம்பானது, நியாயமற்றது, விஷமமானது என்பதைச் சுருக்கமாக எழுதி 'அநாதி வைணவம்' என்ற பெயரில் இந்த மறுப்பை ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்தின் மூலமாக வெளியிடுகிறேன்.

வேதம் அநாதியானது

உலகில் தலைசிறந்த மதங்களில் மிகவும் தொன்மையானது இந்து மதம். இந்து மதம் பல பிரிவுகளை உடையதாய் இருக்கின்றது. அப்பிரிவுகளில் மிகப் பழமையானது வைணவம். இதை எவராலும் மறுக்க இயலாது. இதுவரை எவரும் மறுக்கவுமில்லை.

வைணவத்தை வையகமெல்லாம் ஒளிரும் முறையில் அல்லும் பகலும் அனவரதமும் ஓயாதுழைத்து வைணவ மறுமலர்ச்சியை உண்டு பண்ணின பெருமை மூன்று முனிவர்களையே சாரும். ஸ்ரீமந்நாதமுனிகள், ஸ்ரீமத் யாமுன முனிகள், ஸ்ரீமத் ராமானுஜ முனிகள் என்பவர்களே அம்மூவர் என்பது உலகறிந்த விஷயம்.

'வைணவம் வேதகாலத்திற்குப் பிற்பட்டு ஒரு காலத்தில் உண்டாகி' என்று எழுதியுள்ளார் வரலாற்று வைணவ ஆசிரியர். வேத காலம் என்று ஒன்று கிடையாது. வேதம் அநாதியானது. வரலாற்று ஆசிரியர்கள் வேதகால ஆராய்ச்சியில் இறங்கிக் குழப்பிக்கொண்டு இருக்கிறார்கள். ஒவ்வொரு வரலாற்று ஆசிரியரும் தமது யுக்திக்கிணங்க வேதகாலத்தை ஒவ்வொருவிதமாக எழுதியுள்ளார்கள். அவைகள் ஒன்றும் ஏகமனதாக வேதகாலத்தைச் சொல்லவில்லை.

ஜெர்மனி நாட்டவரான ஓபிக் என்பவர் ''வேதத்திற்குக் கால நிர்ணயம் செய்ய இயலாது, வேதத்திற்கு உரையிட்ட சாயணர் அனேக இடங்களில் தவருன உரை எழுதியுள்ளார். B. C. 2000க்கு முன்பு வேதத்திற்கு மூன்று உரைகள் இருந்திருக்கின்றன, அவ்வுரைகளுக்கு விரோதமாய் சாயணர் பல இடங்களில் எழுதியுள்ளார். சாயணர் உரை ஆராய்ச்சிக்கிணங்க ஏற்கமுடியவில்லை. சப்தரிஷி ஸூக்தத்திற்கு உரையிட்ட சாயணர் சப்தரிஷி வானகணிதத்தைப் புறக்கணித்துவிட்டார். சப்தரிஷிகள் ஒரு மண்டலம் சுற்றிவர சற்றேறக்குறைய ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன. வேதத்தில் சப்தரிஷிகள் கிருத்திகையில் இருப்பதாகச் சொல்லுகிறது. ஆகவே வேதம் கிருத்திகை முதலாகவே நட்சத்திரமண்டலத்தை வரிசையாய்ப் படிக்கின்றது. முதல் ஆர்யபடீயத்தில் (Ist Aryabhatiya) அவர் காலத்தில் மகத்தில் சப்தரிஷிகள் காணப்பட்டதாக எழுதியிருக்கிருர். இதன்படி கணித்துப் பார்த்தால் வேதகாலத்தை நிர்ணயம் செய்ய இயலாது என்று 'வேதிக்' என்னும் நூலில் எழுதியுள்ளார். வரலாற்று வைணவ ஆசிரியர் வேதகாலத்தைக் குறிப்பாகக்கூட எழுதவில்லை. வரலாற்று வைணவர்க்கு வரலாறு கிடையாதுபோலும் !

மிகத் தொன்மையானது வைணவம்

சென்னைப் பல்கலைக் கழகத்தார் பி. ஏ. (B. A.), பி. எஸ்சி. (B.Sc.)க்கு வகுத்த பாடதிட்டத்திற்கேற்ப 1960இல் புத்தகம் வெளியிட்டு 1964 இல் ஆரும் பதிப்பாக வெளியிடப்பட்ட 'இலக்கிய வரலாறு' என்னும் நூலில் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சியாளரான திரு. அழகிரிசாமி அவர்கள் 169ம் பக்கத்தில் ''திருமால் வழிபாடு, தொல்காப்பியம், கலித்தொகை, பரிபாடல், போன்ற சங்க நூல்களில் பாராட்டப்பட்டுள்ளதை சங்க நூல்களில் காணலாம்'' என்று எழுதியுள்ளார். இதிலிருந்து சங்ககாலத்திற்கு மூந்தியே திருமால் வழிபாடு தமிழகத்தில் இருக்கின்றது என்று அறியலாம்.

(பாரா 88)ல் ''புராண இதிஹாஸகாலங்களுக்கும் வெகுகாலம் பிற்பட்டு (கி. பி. 13ஆம் நூற்ருண்டு) வைணவ சம்பிரதாயம் வருவதால்'' என்று வரலாற்று வைணவ ஆசிரியர் தமிழகத்தில் சங்க நூல்களுக்குப் புறம்பாக எழுதியுள்ள வரலாற்றை ஏற்கமாட்டார்கள் தமிழர்கள் என்பதே நமது கொள்கை. தவிரவும் 10ஆம் நூற்ருண்டிலேயே அநேக சிவன் கோயில்களில் தேவாரமும் விஷ்ணுகோயில்களில் திவ்யப்பிரபந்தமும், எல்லாக்கோயில்களிலும் வேதங்களும்

பாராயணம் பண்ணச் சில அரசர்கள் மான்யங்கள் அளித்திருப்பதைக் கல்வெட்டுக்களில் காணலாம்.

விஷ்ணுவே வாஸுதேவன்

வேதம், இதிஹாஸம், புராணம், பாஞ்சராத்ரம் இவைகள் எல்லாம் ஒன்றுக்கொன்று விரோதம் இல்லாமல் விஷ்ணுவையே பரதேவதையாகக் கூறுகின்றன. விஷ்ணு என்ற பதத்திற்கு வியாக்கியானமே வாஸுதேவ சப்தமாகும். ஸ்ரீ ராமாநுஜர் தமது பாஷ்யத்தில் ஸ்ரீ விஶிஷ்டனுடைய எம்பெருமானின் தனித் திருநாமம் என்ன என்பதை 'வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: இதி ஸூத்ராப்யாஸ: ஶாஸ்த்ர பரிஸமாப்திம் த்யோதயதி' என்று வாய் மொழியாகவே நிர்ணயம் செய்துள்ளார். பரிபாடல் என்னும் சங்க நூல் வைணவம் சங்ககாலத்திலேயே பரவியிருந்தமையைக் கூறுகிறது. 'தமிழ் இலக்கிய வரலாறு' பக்கம்75 காண்க:—''நமக்குக் கிடைத்துள்ள பரிபாடல் நூலில்..............திருமாலின் மீது ஆறு பாக்கள். திருமாலைப்பற்றிய பாடல்களில் அவரின் உருவ அழகையும் அவதாரச் செயல்களையும் விவரிக்கின்றது. திருமாலே எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் என்றும் மும்மூர்த்திகளும் அவருள் அடக்கம் என்றும் உரைக்கின்றன. அவர் எங்கும் நிறைந்தவர்'' என்று எழுதியுள்ளார் அதன் ஆசிரியர். ''தமிழ் நாட்டு வரலாற்றிலேயே கல்வி சிறந்த காலமாகத் திகழ்கிறது சங்க காலமே—என்று ஆணித்தரமாகக் கூறலாம்'' என்பர் அவ்வாசிரியர். ஆக, பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்த சங்க காலத்தில் பரம்பொருளாகத் திருமாலை வழிபடுவதே சிறந்து ஓங்கி இருந்தது என்பது நமக்குத் தெளிவாகப் புலப்படுகிறது.

ராமானுஜ ஶாஸனம்

விஷ்ணு வர்த்தனன் என்னும் அரசன் ராமானுஜரிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்று வைணவனானான் என்று செப்பேடுகள் கூறுகின்றன. அவன் ஒரு செப்பேட்டில் இராமானுஜரின் கட்டளைகளைச் சட்டமாகப் பிறப்பித்து, தான சாஸனங்களிலும் மற்றும் எல்லா சாஸனங்களிலும் மதத்தை எழுத உத்தரவிட்டான். அதுமுதல் ஸமீப காலம் வரை பத்திரங்களில் மதமும் எழுதப்பட்டு வந்திருக்கின்றன. பிறகு 15—8—1368 இல் புக்கர் காலத்தில் இராமாநுஜ சாஸனம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இராமானுஜ சாஸன காலத்திற்குப் பிறகு வைணவ மதக் கோட்பாடுகள் ஒருமுகமாய் இருந்தன என்பது அசைக்க முடியாத வரலாற்று

உண்மையாகும். தொல் பொருள் துறையினர் வெளியிட்ட கல் வெட்டுகள் செப்பேடுகள் இவைகளைப் புறக்கணிக்க வரலாறு இடம் தராது. வைணவத்தின் கோட்பாடுகளில் முக்கியமானவை ஆசாரியனிடம் தீட்சை பெறுவது, திருமண் காப்பு அணிவது, மந்திர உபதேசங்களைப் பெறுவது, திருமால் வழிபாடு முதலானவைகள் ஆகும். இப்பெருமைகள் அனைத்தையும் உடைய வைணவம் ஸ்ரீராமானுஜர் காலத்தில் ஓங்கி, சிறப்புடன் இருந்தது. தமிழ்நாட்டு வைணவம் வேறு, வடநாட்டு வைணவம் வேறு என்று பிரிக்க இயலாதவாறு வைணவக் கோட்பாடுகளை ஸ்ரீராமானுஜர் வெளியிட்டார்.

இராமானுஜரிடம் தீட்சை பெற்ற விஷ்ணுவர்த்தனன் என்னும் அரசனின் குடும்ப வரலாறு, தீட்சைக்கு முன் அவனுடைய பெயர், தீட்சைக்குப் பிறகு ஏற்பட்ட பெயர் இவைகளைக் குறிக்கும் தொல் பொருள் துறையினரின் படிவத்தின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது. அதிக விவரத்தைக் குறிப்பிட்ட புத்தகத்தில் கண்டு கொள்வது. A.D. 1368 சாசன குறிப்பும் இத்துடன் எழுதப்பட்டுள்ளது. குரு பரம்பரையில் குறிப்பிடும் அரசனின் பெயர் வருஷ, மாதங்கள் யாவும் உண்மையானவற்றையே குறிக்கப்பட்டிருக்கின்றன என்பதை இதன்மூலம் உணரலாம்.

GENEOLOGY OF VISHNUVARDHANA.

VINAYADITYA.

Also called Thirubuvana Malla I; Married Kalayabbe or Kaleyaladevi. Inscriptions A.D. 1047[2], 1076. He was a feudatory of the Western Chalukya Vikramamaditya VI

|

Ereyanga or Ereganga.
married Echaladevi.

|

BALLALA I	VISHNUVARDHANA	UDAYADITYA

|

Also called BITTIDEVA, BITTIGA, TRIBHUVANAMALLA II, BHUJABALAGANGA, VIRAGANGA, and VIKRAMAGANGA. Inscriptions A. D.

1117, 1137; Married Santaladevi. TOOK TALAKAD, the capital of Gangas. He is said to have made many conquests. This is belived to be the sovereign who was converted to the worship of Vishnu by Ramanujacharia.

The above information is available in P. 176 Archelogical Survey of Southern India Vol. II. Printed in 1884. Author Robert Sewell.

August 15, 1368. Date of a document known as "Ramanujacharya's Sasana" his name being mentioned in it. It states that Bukka I settled a dispute between rival religious factions in Central Mysore. [E.C. II Sr., Bel. 136]

The above reference is available in P. 197 of the Historical Inscriptions of Southern India. (Collected till 1923) By Robert Sewell. Printed in 1932.

வரலாற்று வைணவ ஆசிரியர் எழுதியிருப்பவை வரலாற்று உண்மைக்குப் புறம்பானவை என்பதைக் கல்லிலும், செம்பிலும் வெட்டிக்காட்டும் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் இதுபோல் ஏராளமாய் உள்ளன. விரிவிற்கஞ்சி இத்துடன் நிறுத்துகிறோம்.

பெரியோர்களின் பொன்மொழிகள்

மநஸ்யந்யத் வசஸ்யந்யத் கர்மண்யந்யத் து3ராத்மநாம் |

மநஸ்யேகம் வசஸ்யேகம் கர்மண்யேகம் மஹாத்மநாம் ||

[தீயநெஞ்சினர்க்கு. நெஞ்சில் ஒன்றும். வார்த்தையில் மற்றொன்றும். காரியத்தில் வேறொன்றுமாயுள்ளது. நன்னெஞ்சினர்க்கோவெனில். மனத்திலும். வார்த்தையிலும், காரியத்திலும் ஒன்றேயாயுள்ளது.]

14. ஸ்ரீ. M. S. நாராயணன், பௌரல உபந்யாஸக கேஸரி, ஸ்ரீ வில்லிபுத்தூர்.

'வரலாற்றில் பிறந்த வைணவம்' எனும் நூலில் வேதவாய்த்தொழிலுடைய அக்நிஹோத்ரி ஸ்வாமி குறைகுடம் போலவும், அர்த்தராத்ரியில் குடைபிடிக்கும் 'அறிவாளி' போல வும் தனக்குத் தோன்றியவற்றைத் தயக்கமின்றி எழுதி வெளியிட் டிருக்கிறார். பூருவாசார்யர்களிடத்திலே, ஆழ்வார்களிடத்திலே, தன்னைப் பெற்ற தாயான வைஷ்ணவத்தினிடத்திலே எதிலுமே தனக்கு நம்பிக்கையோ. பயமோ, பக்தியோ கிடையாது என்பதை நிரூபித்து வரும் இவர் வார்த்தைகளுக்குச் சிறிதும் மதிப்பே கிடையாது. நாஸ்திக சக்திகள் உருவெடுக்குமிந்நாளில் தன்னை ஆஸ்திகன் எனக் கூறிக் கொள்ளுமிவர் கண்ணிருந்தும் குருடர்போல ஏதேதோபிதற்றி அதற்காகத் தருக்கியுமலைகிறார். செருக்கு மிகக் கொண்ட இவருக் காக இல்லாவிடினும், இவர்தம் கொள்கைகளைப் பாமரர் நம்பா திருக்கவரவது இக்கண்டனங்கள் அவசியமே.

1. உலகிலுள்ள மதங்களோடு வைணவத்தை ஒப்பிட்டுக் கூறு மிவர் அநாதியான வைணவம் ஒரு காலத்தில் தோன்றியதாக மயங்கி, அக்காலத்தையும் உறுதியாகக் கூற இயலாமல் ''ஒருகாலம்'' எனக்குறிக்கின்றார்.

2. மூலநூல் என்று ஒன்றும், வழிநூல் என்று ஒன்றும் அமைந் தாலே அவை ஒரேகாலமல்ல என்பது தெளிவுதானே. இதை இவர் மட்டுமே அறிவதுபோலக் கூறியிருப்பது வியப்பே. ''வைணவம் சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தொடங்கியது; தன் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது'' என்று கூறியிருப்பதன் மூலம் தன் சிந்தனைக்கும் வளர்ச்சிக்கும் முற்றுப்புள்ளி வைத்துக்கொண்டுவிட்டார்.

3.வேதத்திலேயே பல விடங்களில் முழங்கப்படும் ப்ரபத்திமார்க்கத் தைப் பிற்காலத்துத் தோன்றியதாக இவர் கூறுவது இவரது அறி யாமையை விளக்குகின்றது.

4. வைணவம் என்று வேதத்தில் வரும் சொல் வேறொரு கருத்தைக் குறிக்கிறதெனக் கூறுமிவர் அக்கருத்தை ஏனோ கூறவில்லை. இராமா நுஜர் ஆழ்வார்களை முழுதும் அடியொற்றியவராயிருக்க, 'அவர்களது பக்தி வீடுபேறு பெற உதவாது' என்று கருதியதாகக் கூறுவது வியப்பையூட்டுகிறது.

5.வேதசிகரமாகிற உபநிஷத்துக்கள் விஷ்ணுவைப் பரமாக முழங்குவதையும் புராணங்களனைத்தும் அவனைப் புகழ்வதையும் புறக்கணித்து வைணவர்களின் கபடத்தாலுருவானவன் விஷ்ணு என்னும் இவரது அறியாமையும், கபடமும் வேதனையைத்தருகிறது.

6.வேதாங்கள் முதலிய ஸகல ப்ரமாணங்களிலும் 'அர்ச்சாவதாரம்' என்று அநாதிகாலமாக உருவவழிபாடு இருப்பதை அறியாதவராய், 'உருவமுடைய ஒருவனாக வைஷ்ணவர்கள் விஷ்ணுவை உருவாக்கினர்' என்று வைஷ்ணவர்களை இவர் தூற்றியுள்ளார்.

7.10வது பாராவில்'ஆழ்வாருடைய பக்தி வீடுபேறடைய உதவாது என்பது ராமாநுஜர் கருத்து' எனக்கூறிய இவர் 20ம் பாராவில் 'பக்தியால் வீடுபேறடையலாம் எனக்கருதிய ஆசாரியர் இராமாநுஜரே' என்று முன்னுக்குப் பின் முரணாக உளறியிருப்பது இவரது அறியாமை நிலையைப் பறைசாற்றுகிறது.

8.இராமாநுஜருக்குப் பின் வந்தவர்களது கொள்கைகள் இராமாநுஜருடைய கொள்கைகட்கு முரண்பட்டதென்று எழுதுமிவரது பெரும் பிழையை ஆசார்யர்கள் தான் பொறுத்து அருளவேணும். மனிதன் பாவத்தை மட்டும் வெகுவேகமாகச் செய்கிறான் என்பதற்கு இப்பெரியார் ஒரு சான்று ஆவார்.

இவரது அபத்தங்களை ஆராய்ச்சி செய்து எழுதுவது என்பது மணற்சோற்றில் கல்லாராய்வதையொக்கும். வைஷ்ணவராயும், அதிலும் வேதமோதுவதில் வல்லவராயுமிருக்கிற இந்த ஸ்வாமி ஏனோ விஷ்ணுவினிடத்திலே அபசாரப் படுவதோடு, ஸமஸ்த பாகவதர்களிடத்திலேயும் அபசாரப்படுகிறார். எம்பெருமான்தான் இவருக்கு நல்லறிவு தந்தருளவேணும்; இவரது கிறுக்குத்தளத்தைப் போக்க வேணும் என்றிறைஞ்சி இக்கட்டுரையை முடிக்கிறேன்.

பெரியோர்களின் பொன்மொழிகள்

யுக்தியுக்தம் வசோ க்₂ராஹ்யம் பா₃லாத₃பி ஶுகாத₃பி।
அயுக்தியுக்தம் ஹி வசோ ந வ்ருத்₃த₄ாத் பண்டி₃தாத₃பி॥

[ஒருசிறுவனோ அல்லது கிளிப்பிள்ளையோ சொன்னாலும் யுக்தியோடு கூடிய வார்த்தை ஏற்கத்தக்கது. முதுபெரும் புலவன் சொன்னாலும் யுக்தியோடு கூடியிராத வார்த்தை ஏற்கத்தக்கதன்று.]

15. சதுர்ப்பாஷா விசாரத வித்வான்
ஸ்ரீமத் உபயவே. S. V. நரசிம்ஹாசார்யர், M. A.
[மதுரைக்கல்லூரி, மதுரை]

மறைந்த சைவ வைணவங்கள்

[இன்றிலிருந்து 500 ஆண்டுகளுக்குப்பின்]

முன்னுரை

ஸ்ரீமத் அக்னிஹோத்ரம் ஸ்வாமியைத் தற்காலத்தில் பிராஹ்மண சமுதாயத்தினர் யாரும் அறியாதவரிலர். இவர் மிக்க நாவன்மை படைத்தவர். இவர்தம் சொற்பொழிவுகளில், ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகள், ஆகமாதி ப்ரமாண வாக்யங்களைவிட, ஆங்கிலேயர் களின் சொற்றொடர்களும், அறிவுரைகளுமே மேற்கோள்களாக இடம் பெற்றிருக்கும்: பைபிளிலிருந்தும், அமெரிக்க ஜனாதிபதி, பிரிட்டிஷ் பேரறிஞர்கள், கீத், மெக்டானல் போன்ற உரையாசிரியர்களின் வாக்கியங்களிலிருந்தும் பல பல மேற்கோள்களையும் புதியனவாய்க் காட்டிப்பேசிப் பலரும் மயங்குமாறு செய்யும் வல்லவரிவர்.

இந்த ஸ்வாமி தம் நூல்களை எவர்கட்காக எழுதிவருகிறார் என்பதை உணராமல், நம்மவர் பலரும், இவரைக் கண்டித்துப் பல கட்டுரைகளையும் வெளியிடுவது அடியேனுக்கு சரியெனப்படவில்லை. முற்காலத்தில், பகவான் ஆஸுர ப்ரக்ருதிகளை வஞ்சித்துத் திசை மாற்றிவிடத் திருவுள்ளம்பற்றினான். உடனே, ப்ருஹஸ்பதி முதலானோரைத்தூண்டி, பற்பல தாமஸ குண பூயிஷ்டமான புராணங் களையும், இதிஹாஸங்களையும் இயற்றும்படி நியமித்தான். அவ்வோ நூல்களைக் கற்று ஆஸுர ப்ரக்ருதிகள் மயங்கி—ஆஸ்திகத்தை வெறுத்து, நாஸ்திகத்தையே தழுவினர் என்று நாமறிவோம்.

அதேமுறையில், இந்த ஸ்வாமியும், வேத சாஸ்த்ரங்களைக் கற்றவராயினும், வைதிக மதத்தைத் திரித்தும், வேதாதி நூல்களின் கருத்துக்களை மாற்றி விளக்கியும், ''விக்ரஹ வழிபாடு (அர்ச்சாவ தாரத்தைப் பூஜிக்கும் முறை) மிக நவீனமானது, வேதத்தில் இதைப் பற்றியோ, தாய், தந்தை, ஆசிரியர், விருந்தினர், பெரியோர்களைத் தெய்வமாகத் வழிபடுவதுபற்றியோ சொல்லவில்லை. தெய்வத்திற்கு உருவமோ, குணமோ பெருமையோ ஒன்றுமே கிடையாது. விஷ்ணு என்பது மிகமிகப் பிற்காலத்தில் வைணவமதாசார்யர்களால் படைத்து

உயிரூட்டப்பட்டதோர் கற்பனைத் தெய்வம்; அதற்கு மனைவிகளும், மக்களும் கற்பனையால் அமைக்கப்பெற்றனவே. ஆனாலும், அந்தத் தெய்வம் இரக்கமே குணமாய்க்கொண்டிருக்க.. அதன் கோபத்தைத் தணிக்க லக்ஷ்மீதேவியென்று ஒரு தாயை, அதன் மனைவியாகப் பிற்காலத்தவரேயமைத்தனர்'' என்றெல்லாம் இவருக்கே தனிச்சிறப்பான ஆராய்ச்சித்திறன் கொண்டு நூல்களை வெளியிடுவார். எம்பெருமானின் நோக்கம் என்னவென்று நாம் யோசிக்க வேண்டும்.

விக்ரஹ வழிபாட்டை வெறுத்தும், ஹிந்து சமய நூல்களைப் பழித்தும் பிரசாரம் செய்யும் இஸ்லாமியர், கிறிஸ்துவர் முதலானவர்களும், நிர்க்குணவாதிகளும், ஹிந்து சமயத்திலேயே தோன்றி அதனையழிப்பதில் இராப்பகலாய் ஈடுபட்டுள்ள நாஸ்திகப் பெரியார்களும், மகிழவேண்டும். அவர்கள் மேன்மேலும் மயங்கவேண்டும். இதன் மூலம், சர்வதேசீயப்புகழை இவர் பெறவேண்டும்—என்று ஸ்ரீமத் ஆராவமுதன் இவருள்ளத்திலே புகுந்து தூண்டிவிட்டனன்போலும். இந்தத் தத்துவத்தை நாமுணர்ந்தால், இவர்மீது நாம் இவ்வாறு ஏராளமான கண்டனக் கணைகளைத் தொடுக்க அவகாசமேயிராது. ப்ருஹஸ்பதி பரமசிவாதிகள் தாமஸமான க்ரந்தங்களைப் படைத்த காலை அவர்களை யாரும் இம்மாதிரிகண்டித்து நூல்கள் எழுதினதாகத் தெரியவில்லை. மாறாக, ஏராளமான வ்யக்திகள் அவர்கள் காட்டிய தாமஸ மார்க்கங்களைப் பின்பற்றுவாராயினர். இதேபோல், இன்று நம் மதத்திலுள்ளோர் பலர், ஆராய்ச்சி மனப்பான்மையுள்ளவர்போல் எண்ணி, இவர்தம் சொற்பொழிவுகட்கும், நூல்களுக்கும் மயங்குவார் உளர். பிறமதத்தினர்க்கோ, இவர் நூல்கள் பெருவிருந்தாய் அமைபவை. 'கடவுளை நம்புபவன் முட்டாள்; கோயிலைக் கட்டியவர் கயவர்; புராணங்கள் புளுகுமூட்டைகள், வேதங்கள் புத்திபேதம் செய்பவை' என்றெல்லாம் கூறி, ''சாமிக்கு சிலை எதற்கு? எம்போன்ற ஆசாமிகளுக்கே சிலை தேவை'' என்று முழக்கமிட்டு மூலைமுடுக்குகளிலெல்லாம் தமக்குச் சிலையை நிறுவச்செய்துவரும் ஈரோட்டுப் பெரியாருக்கோ இவர் நூல்கள் கற்கண்டாய் இனிப்பவை. அந்தப் பெரியார் பட்டவர்த்தனமாய் வைதிகமதத்தைக் கண்டிக்கும் நாஸ்திகரெனப் புகழ் பெற்றவர். இந்த ஸ்வாமியோ வைதிக வேஷத்திலே புதிய புரட்சிகரமான கருத்துக்களை வெளியுலகிற்கு நல்கி நலம் பல பெறுபவர். முன் கூறிய பெரியாரைக் கண்டால் மடாதிபதிகளுக்குப் பிடிக்காது. ஆனல், இந்த ஸ்வாமியோ, மடாதிபதிகளின் நல்

லருளைத் துணைகொண்டே பல செயற்கரிய செயல்களையும் சாதித்து வருபவர்.

இன்று வைதிக மார்க்கத்தில் நம்பிக்கை கொண்டவர் மிகவும் குறைவு. நம்பிக்கையற்றவர்களான பெருவாரியான மக்களின் நன்னம்பிக்கையை இவர் பெற்றுவிட்டார் என்பதைச் சிறுபான்மை வகுப்பினரான நாம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். இவ்வுண்மையை நாம் தெரிந்துகொண்டால், நாமே விலகி வழிவிட்டு நின்றுவிடுவோம். இதே நிலையில், நமது மதமும், சமுதாயமும் மிக்க பொறுமையுடன் நடந்துவருவதனால், இன்னும் ஐந்நூறு ஆண்டுகளில்—நம் நாடும், மக்களும் வைணவம் போன்ற சமயங்களும் எப்படியிருக்கும்? என்று நினைத்துப் பார்க்கவே அச்சம் ஏற்படுகிறது. ஒவ்வோர் மதத்தின் நூல்களிலும், கொள்கைகளிலும் நம்புவதற்கரிய சில அடிப்படைத் தத்துவங்களும், வரலாறுகளும், சம்பவங்களும் பின்னிப்பிணிக்கப் பட்டிருப்பது கண்கூடு. அவற்றை மனப்பூர்வமாக நம்புவதே ஆஸ்திகத்திற்கு அடிப்படைத்தேவை. நம்பிக்கை இல்லையேல், மதமே ஆணிவேரற்ற மரமாய் இற்றுப்போகும்.

இந்த ஸ்வாமி வேத, புராண, இதிஹாஸ ரஹஸ்யக்ரந்தாதிகளை நம்புகிறாரா இல்லையா? என்பது கேள்வி. நம்புகிறார் என்றால் இத்தகைய நூலை எழுதியேயிருக்கமாட்டார். நம்பவில்லையென்றால் இவரின் நூல்களை நாம் கண்டிக்க முற்படுவது நமது அறியாமையாகும். பாதியை நம்பிப் பாதியை நம்பவில்லையென்றால், இரண்டுங்கெட்ட இவர் நிலையை யாரும் சீர்திருத்தவே இயலாது. ஆகவே, இந்த நூலை அடிப்படையாகக்கொண்டு ஐந்நூறாண்டுகளுக்குப்பின், இரண்டு அன்னிய மதத்தவர் உரையாடுவதை இங்கு கற்பனையாகக் காட்டுகிறேன். அஸம்ப்ரதாயமாக அன்னியர் பெயர்களைக் காட்டவேண்டியுள்ளது. வாசகமஹனீயர்கள் கட்டுரையின் தன்மையையும், நோக்கத்தையும் திருவுள்ளம்பற்றி, அன்னியர் பெயர், குறியீடு முதலியவற்றை க்ஷமித்தருளப் பிரார்த்திக்கிறேன். நம் சமயமும், சமுதாயமும், அவலநிலையில் உயிர் ஊசலாடி வருகின்றன. உள்ளிருந்தே பல புல்லுருவிகளும், கோடரிக்காம்புகளும் நம் மதம் என்னும் மாபெரும் தருவை வேரோடு அழித்து வருகின்றன. அரசியலும் — அந்நியர்க்கே இன்று புகலளித்துக் காக்கிறது. இதே நிலை நீடித்தால் ஐந்நூறு ஆண்டுகளில் முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களுமே பெரும்பான்மைப் பலம்பெற்று—அதிகார பீடங்களில் அமர்ந்திருப்பர். ஹிந்துக்களில் — ஆஸ்திகரென்பார் அன்று மிகவும் சிறு

பான்மையினராய், ஒடுக்கப்பட்டு மூலைக்கொருவராய்ப் பதுங்கிக் கிடப்பர். அந்தச் சூழ்நிலையில் கீழ்வரும் சம்பாஷணை உருவாக்கப் படுகிறது. அக்நிஹோத்ரம் ஸ்வாமிக்குப் பிடித்தமான பெயர்கள் கற்பனையாய்த் தரப்படுகின்றன.

இந்த சம்பாஷணையில் பங்கு கொள்பவர்கள் இருவர். ஒருவர் முறைஹதீனுண்டவர் கல்லூரி முதல்வர் — ஜான்முஹம்மது என்பவர், இரண்டாமவர், அந்தோணி கல்லூரியின்—ஆன்மீக ஆய்வுத்துறைத் தலைவர் டேனியல் தாமஸ் என்பவர். இவ்விருவரும் கி. பி. இருபத் தைந்தாம் நூற்றுண்டுவரை வளர்ந்து மறைந்த—சைவம், வைணவம் என்ற மதங்களை நன்கு ஆராய்ந்து, உலகப்புகழ் பெற்று டாக்டர் பட்டத்தைச் சூட்டிக்கொண்டவர்கள். (மனமில்லாவிட்டாலும் கற்பனை யில் சில தவருன சொற்றொடர்களைக் கையாளவேண்டியுள்ளது— வருந்துகின்றேன்.)

இனி அவர்தம் சம்பாஷணையைக் கவனிப்போம்:—

டேனியல் தாமஸ்:- வணக்கம் அறிஞரே! வாருங்கள்; இன்று நாம் பழமையான சைவ வைணவ மதங்களின் தத்துவங்களைப்பற்றிச் சிறிது ஆராய்வோமா?

ஜான்முஹம்மது:- வணக்கம் அன்பரே! நல்ல யோசனைதான். நானும், வேதம், உபநிஷத்துக்கள், புராணுதிகள், நாலாயிர திவ்ய பிரபந்தம், தேவாரம், திருவாசகம் முதலியவற்றின் கருத்துரைகளைச் சுருக்கமாக ஆங்கிலத்தில் படித்துள்ளேன்.

டேனியல்:- தாங்கள் இரண்டு மதங்களுக்கும் சான்றுகளாக எந்த நூலை ஏற்கின்றீர்கள்?

ஜான்முஹம்மது:- முற்காலத்தில், ஆழ்வார்கள், நாயன்மார்கள், சங்கரர், இராமானுஜர், மத்வர், வேதாந்ததேசிகர், மணவாள மாமுனி கள் போன்ருேரின் நூல்கள் பலவும் சான்ருயிருந்தன. அவற்றிற்கேற்ற வாறு, ஜ்ஞானயோகம், கர்மயோகம், பக்தியோர்கம், சரணுகதி போன்ற வழிகளை மக்களில் சிலர் புரிந்துகொண்டு பின்பற்றி, நற் கதியையடைவோம் என்று எண்ணிவந்தனர்.

டேனியல்:— இந்நூல்களைப் பின்பற்றிய பழக்க வழக்கங்களும் நம்பிக்கையும் எப்போது குலைந்தன? யாரால் விக்ரஹ வழிபாடுகள்,

பூஜைகள், நடைமுறைகள் எல்லாவற்றிலும் மாறுபாடுகள் தோன்றின? மக்கள் எப்போது உண்மை நிலையை உணர்ந்து இன்றைய நிலைக்குத் திருந்தினர்?

ஜான்முஹம்மது:- 2500 ஆண்டுகட்குமுன் காட்டில் வசித்துவந்த சில ரிஷிகள் வேதங்களையும், உபநிஷத்துக்களையும், புராணதிகளை யும் எழுதிவைத்தனர். பிறகுஆழ்வார்களும், நாயன்மார்களும் தமிழில் பல பாடல்களையும் இசையோடு பாடி மக்களைத் தம் கருத்தின்படி பக்திவழியில் ஈடுபடுத்தினர். பிறகு, சங்கரர் ராமாநுஜர் வேதாந்த தேசிகர் போன்ற ஆசிரியர்கள் பல உரைகளையும் எழுதினர். முதலில் புத்தர் வேதமார்க்கங்களைக் கண்டித்து யாகம் முதலியன செய்வதைத் தடுத்துப் பிரசாரம் செய்தார். அவர் மதம் எங்கும் பரவியது. பின் ஆசார்யர்கள் அந்த புத்தரின் மதத்தைக் கண்டித்து, தத்தமக்கு ஏற்றவாறு வேதம் முதலியவற்றுக்கு உரைகண்டனர். ஆதிசங்கரர், உலகே மாயம் என்றும், நாமே பிரஹ்மம் என்று பாவனை செய்துவந் தால் ப்ரஹ்மமாகவே ஆகிவிடலாம் என்றும் போதித்தனர். பிரஹ்மம் என்பது குணமோ ரூபமோ அற்றது என்றும், மாயையால்-நாம் பிரஹ்மம் என்பதை மறந்து வெவ்வேறான பெயர்களைப் பெற்று மயங்கு வதாகவும், உண்மையான ஜ்ஞானத்தால் பிறவாமையெனும் மோக்ஷம் கிட்டும் என்றும் தம் நூல்களில் விளக்கினார்.

இராமாநுசர். வேதாந்ததேசிகர், மத்வாசார்யர் போன்றவர்கள் பக்திமார்க்கத்தையும், சரணாகதி மார்க்கத்தையும் ஸ்தாபித்தனர். இப்படி ஆயிரக்கணக்கான வருஷங்கள் உருண்டோடின. பின்பு மக்க ளிடையே சோம்பலும், அவநம்பிக்கையும் மேலிட்டன. அவற்றால் ஒரு புத்துணர்ச்சி தோன்றியது. காவிரிக்கரை நகர்களான ஈரோடு, கும்பகோணம் என்ற ஊர்களில் இரண்டு பெரியார்கள் தோன்றினர், ஒருவர் பட்டவர்த்தனமாகவே நாத்திகப்ரசாரம்செய்து, ''சாமிகளுக்கு விக்ரஹங்கள் ஸ்தாபித்தலும், வழிபடுதலும் தவறு; அரசியல் தலை வர்களுக்கும், நம்போன்ற ஆசாமிகளுக்குமே சிலைகளையமைக்கவேண் டும்'' என்றெல்லாம் கூறி, புராணதிகளை இழிவுபடுத்திப் பிரசாரம் செய்துவந்தார்.

மற்றொருவரோ-வைதிகராகவே நடந்தும், நடித்தும், வேதாக மாதிகளைக் கற்றிருந்தும், வைணவகுலதிலகராய்க் காட்சிதந்தும், பல புரட்சிகரமான ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டார். அவருக்குச் சில மடாதிபதிகளும், கோவில்களும் கைகொடுத்து உதவவே, நூல்கள் எளிய மலிவான விலையில் பரவலாயின. பாவம்! அந்த மடாதிபதி

கள் நினைத்தது வேறு; நடந்தது வேறு; அவர்கள்-வைணவத்தை மட்டந்தட்டி மறைக்க நினைத்தனர். ஆனால், நடந்ததோ வேறு. கோயில்களில் விக்ரஹ ஆராதனை இடைக்காலத்தில் வந்த கற்பனைச் செயல் என்றும், உருவ வழிபாடு, ஸகுண உபாஸனை முதலியன தவறு என்றும் மக்கள் நம்பலாயினர். இதற்கெல்லாம் காரணமாயமைந்த நூல்கள். ஸ்ரீமான் அக்நிஹோத்ரம் ஆசார்யரின் அருளிச்செயல்களே. உணவைத்தேடிய எலி, பாம்புப்பெட்டியைக் கடித்து-உள்ளே பசியால் வாடிக் கிடந்த பாம்பிற்கு இரையாகியதாம். அதே கதையாயிற்று மடாதிபதிகளின் செயல். அக்னிஹோத்ரம் ஸ்வாமிகளின் கருத்துக் களே இளைஞர்களுக்குப் பெரும் ஊக்கம் நல்கினது. பலநாள் ஈரோட்டுப் பெரியார் பாடுபட்டுச் செய்ய முயன்றதை இவர் சில நூல்களாலேயே செய்துமுடித்தார்.

டேனியல்:- மேலும் பல புரட்சிகரமான கருத்துக்கள் அவர் நூல்களில் காணப்பட்டனவாம். கேள்விப்பட்டிருக்கிறேன்:- 'விஷ்ணு' என்ற சொல், வேதங்களில் சூர்யனையும், மற்றும் பல பொருட் களையுமே விளக்கியதாகும். விஷ்ணு என்ற ஓர் தனித்தெய்வத்தை ஸகலவித கல்யாணகுணங்களுடனும், லக்ஷ்மீ, பூமி, நீளா என்ற தேவிமாரோடும சேர்த்துப் பிற்காலத்தில் பராசரர் முதலிய முனிவர் களும், ஆழ்வார்களும் ஆசார்யர்களும் கற்பித்தனர். கோபமேயறியாத அத்தெய்வத்திற்குக் கோபத்தை ஏறிட்டுக் காட்டி, அக்கோபத்தைத் தணித்துச் சிபாரிசுகள் [புருஷகாரம்] செய்வதே-லக்ஷ்மீ போன்ற தேவி யரின் கடமையாகவும் சுட்டிக்காட்டினர். அத்தனையும் கற்பனையேயா கும். பராசரர் போன்றோரின் புராணங்களும், வேதம், உபநிஷத்து, திவ்யப்பிரபந்தம் போன்றவையும் ஒரே தெய்வமான விஷ்ணுவின் பெருமையையே பேசுவனவென்று ஆசார்யர்கள் ஸ்தாபித்துச் சென்றது அடியோடு தவறாகும். அவை வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு தெய் வங்களின் வழிபாட்டையும் விளக்குவன. உதாரணமாக- வேதத்தில் கர்மகாண்டத்திலே பல பல யாகாதிகளைச் செய்து பல தெய்வங்களை யும் வழிபடும் வகை காணக்கிடக்கிறது. ஆனால், அதன் பிற்பகுதி யாகிய உபநிஷத்துக்களிலோ 'பரப்ரஹ்மம்' என்ற ஒன்றே தெய்வ மாகக் காட்டப்படுகிறது. இதற்குக் கைகால்போன்ற உறுப்புக்களோ நற்குணங்களோ கிடையாது. ஞானத்தால் அவனை உகப்பித்து மோட்சத்தைப் பெறலாமென்று கூறப்படுகிறது — என்கிறார் அவர். மேலும் அவர் தம் நூல்களிலே கூறுகிறார்:- 'விஷ்ணு' என்ற சொல் பல பொருட்களைக் குறிக்கும்: 'சுக்லாம்பரதரம்' என்ற ச்லோகத்தைச்சொல்லி, சைவர்கள் தலையில் குட்டிக்கொண்டு விநாய

கரை வணங்குவர். வைணவர்களோ, அந்த ச்லோகத்தில் விஷ்ணு என்பது விஷ்வக்சேனர் என்னும் சேனை முதலியாரைக்குறிப்பது என்பர். இம்மாதிரி பலபொருள்கொண்ட இச்சொல்லை இடைக்காலத்திய ஆசார்யர்களே திருமாலைக் குறிப்பிடுவதாகக் காட்டினர். இப்படிக் கற்பிக்கப்பட்ட தெய்வத்திற்குச் சிலைநாட்டிக் கோயில்கட்டி ஆழ்வாராதியர் வழிபடலாயினர். இது எல்லாம் முழுப்பொய்யாகும்—என்றும் எழுதியுள்ளார். ராமாநுஜர் எழுதாத 'கத்யத்ரயம்' என்ற நூலை அவர் எழுதியதாகப் பிரமித்து வேதாந்த தேசிகர் போன்றோர் அதற்கு உரையையும் எழுதி சரணாகதிமார்க்கத்தை இராமாநுஜர் நிறுவியதாகக் காட்டிச் சென்றனர். உண்மையில் இராமாநுஜர் இதைப்பற்றித் தம் பிறநூல்களில் குறிக்கவேயில்லை—என்றெல்லாம் அழகுபடப் பல பல ஆராய்ச்சிகளையும் எழுதிப் பரப்பினார்அக்நிஹோத்ரம் ஆச்சாரியார். இவ்வாறு ஒரே கல்லில் (நூலில்) சைவம், வைணவம் என்ற இரண்டு கனிகளையும் வீழ்த்திப்புகழ்பெற்ற கும்பகோணம் பெரியாருக்கு நம் சமயங்களின் துணைவர் என்ற பெருமதிப்புடன் மறவாது சிறந்ததொரு ஞாபகச்சின்னத்தை நிலைநாட்டவேண்டும். ஹிந்துமதத்தையழித்த கற்காலத்துப் பெரியார்களுக்குப் பல நகரங்களிலும் சிலைநாட்டிப் போற்றுவோம். சரி: நண்பரே! நேரமாகிவிட்டது. பின் ஒருநாள் சந்திப்போம். வணக்கம்.

[ஸுதர்சனம் ஆசிரியரின் குறிப்பு:— இன்று, காமகோடி மடாதிபதியும், அறநிலையச் சைவர்களும், 'ஹிந்து' 'தினமணி' விமர்ஶகர்கள் போன்ற தேசிகஸம்ப்ரதாயஸ்த வித்வான்கள் சிலரும் அஹோவை ஆதரித்து வருகின்றனர். இந்நிலை சைவ வைஷ்ணவ ஸமூஹம் முழுவதும் சிறிது சிறிதாகப் பரவினால், ஐந்நூறு வருஷங்களில் வைணவம் 'மறைந்த வைணவ' மாகவும், சைவம் 'மறைந்த சைவ' மாகவும் ஆகிவிடும்—என்று காமகோடிகளுக்கும், முற்கூறிய தேசிக ஸம்ப்ரதாயஸ்த வித்வான்களுக்கும் தேஶிகஸம்ப்ரதாயஸ்தரான கட்டுரையாசிரியர் அழகுறக் காட்டியுள்ளார் — இக்கட்டுரையில். ஸுதர்ஶனம், ஸ்ரீராமாநுஜன், ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா ஆகிய பத்திரிகைகளும், அவற்றில் கட்டுரை எழுதிவரும் மஹநீயர்களும் வைணவத்திற்கு இந்நிலை வராமலிருக்கக் கங்கணங்கட்டிக் கொண்டிருக்கிறபடியால், இந்நிலை வைணவத்திற்கு ஐயாயிரம் வருடமானாலும் வராது; கற்பனையாகவேதான் நிற்கும். 'இந்நிலை வரும்படி விட்டுவிடாதீகள்' என்று சைவ வைணவர்களுக்கு எச்சரிக்கை செய்யவே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது — ஸுதர்ஶனம் ஆசிரியர்]

16. ஸ்ரீ பாஞ்சராத்ர வித்வான் ஸ்ரீ உ. வே.
A. V. பெரியதிருவடி பட்டாசார்யர், தெற்குமாடவீதி,
ஸ்ரீவைகுண்டம்.

பாஞ்சராத்ர தத்துவம்

புரட்டாசி ஐப்பசி மாத ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்தில் "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்ற நூலைப் பற்றியும் அதில் உள்ள கருத்துக்கள் பற்றியும் வாசித்தறிந்தேன். அக்னிஹோத்ரம் சுவாமி ஸ்ரீ பாஞ்சராத்ர ஆகமத்திற்கு இல்லாத தோஷங்களை ஏறிட்டுச் சொல்லியுள்ளார். அந்த அபவாதத்தைப் போக்க, அடியேன் பாஞ்சராத்ராசாரியனை ஸ்ரீ வைகுண்டபதியை ஸேவித்துக்கொண்டு அக்குறைகள் ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் இல்லை என்பதை ப்ரமாணமூலம், நடுநிலையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாரா 13-ல் "முன்பிருந்த ப்ரும்மசூத்ர உரையாசிரியர்கள் பாஞ்சராத்ர ஆகமத்தில் வேதத்திற்கு எதிரான கொள்கைகள் இருப்பதைச் சுட்டிக் காட்டி உள்ளனர். ஆதலின் இராமாநுஜர் காலம்வரை ஆகமக்கொள்கைகளும், ஆழ்வாராதியர் பாசுரங்களும் தமிழ்நாட்டு வைணவத்தில் கலக்கவில்லை என்று தெரிகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பாராவிலுள்ள விஷயத்திற்கு முன்னமேயே பூர்வாசார்யர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். அது ஸித்தாந்தமாகவும் உள்ளது. அப்படியிருக்க இது, இறந்த குழிப் பிள்ளையை மறுபடி எடுத்து அழுவதுபோலாகும். சில ப்ரஹ்ம சூத்திர உரைகாரர்கள் "பாஞ்சராத்திரத்தில் வேதத்தில் கூறப்படாத மோக்ஷம் கூறப்படுகிறது. அதுவும் சாண்டில்யாதி ருஷிகள் 'வேதங்களைக் கற்றோம், அதில் முக்திவழி தெரியவில்லை' என்று கூற பகவான் மோக்ஷப்ரதிபாதகமான ஸ்ரீ பாஞ்சராத்ரத்தைக் கூறுவ

தாகச் சொல்லுகிறார்கள். ஆகையால் இது வேத₃விருத்₃த₄ம்" என்று கூறுகிறார்கள். ஆனால் நியாயம் அப்படி அன்று. பகவான் கூறுமிடத்து "वेदार्थसारसर्वस्वं मम प्रीतिकरं परं। पाञ्चरात्राख्यममृतं कथयामि शृणुष्व मे" (विश्वामित्रसंहितायां) என்று சொல்லியுள்ளபடியால் பாஞ்சராத்ரம் வேதஸாரமே. மேலும் இது பாஞ்சராத்ர ப்ரஶம்ஸையே தவிர வேத நிந்தை ஆகாது. ஸங்கர்ஷணாதி ஜீவோத்பத்தி உள்ளதாகக் குறைகூறியுள்ளார்கள். அதுவும் சரியன்று. "किन्तु जीवोत्पत्युक्तेः शरीरसंयोगाभिप्रायकत्वात् — यथा वेदेषु "प्रजापतिः प्रजा असृजत" "यतो वा इमानि भूतानि जायन्ते" (तैत्ति) इत्यादिजीवोत्पत्तिः तथा अत्रापि पाञ्चरात्रे जीवोत्पत्तिः निषिद्ध एव"-என்கிறபடியே வேதத்தில் கூறும் ஜீவோத்பத்தி போன்றதே பாஞ்சராத்ர ஜீவோத்பத்தியும்; "संकर्षणपरमात्मनोरैक्यभावात्, भेदाभावात् न जीवोत्पत्तिः-மேலும். यत्तु ज्ञानादीनां गुणित्ववर्णनं पाञ्चरात्रेऽस्तीति, तदपि न हृदयंगमं-सत्यं ज्ञानमनन्तं ब्रह्मेतिवत् तादृशसामानाधिकरण्यप्रयोगादेः परमात्मनः ज्ञानप्रधानत्वाभिप्रायेणोपपत्तेः" என்னும் இத்யாதி₃களால் முற்கூறிய வாத₃ங்கள் முன்பே மறுக்கப்பட்டுள்ளன. மேலும். पाञ्चरात्रप्रामाण्यस्य वेदाविरुद्धत्वेन वक्तृदोषरहिततया पुराणाद्यादृतत्वेन, सत्परिग्रहेण पाञ्चरात्रं सर्वादरणीयतां भजते। पाञ्चरात्रशास्त्रं वेदवैदिकपौराणिकसकलतन्त्राभ्यर्हितविशेषांशप्रतिपादकं, इत्यादि प्रसिद्धं॥ ஆகவே ஸ்ரீபாஞ்சராத்ரம் வேத₃விருத்₃த₄மான கொள்கைகள் உடையதன்று.

பாரா 21ல் "ஆலயங்களில் உள்ள அர்ச்சைகள் கடவுளின் அவதாரம்; அங்கு செய்யும் பணிதான் உண்மையான தெய்வத்தொண்டு என்று பிற்பட்ட ஆசாரியர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடத் தனிப்பட்ட சொற்களைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்" என்று கூறுவது. பிற்பட்ட ஆசாரியர்கள்தான் அர்ச்சாவதாரத்தை ஏற்படுத்தியதாகக் கொள்ள இடமளிக்கிறது. இது முழுப் பொய். இதுபற்றி ஸ்ரீப்ரஶ்நஸம்ஹிதையில் பகவான் பிராட்டியிடம் கூறுகிறார்:—

यद्दर्शनं हि जन्तूनां सर्वसिद्धिप्रदं भवेत्। एतावत्कालपर्यन्तं ज्ञानिनो योगिनोपि वा।। इतरो वा नाभ्यजानन् अर्चारूपं वरानने। देवो वा मानुषो वापि पुमर्थेषु चतुर्ष्वपि। निष्कामो वा सकामो वा वैकुंठोपममन्दिरं।। पुण्यक्षेत्रे पुरा कृत्वा त्वया सह सुमध्यमे। अर्चारूपं पाञ्चरात्रविधिना सर्वकामदं।। मन्त्रमूर्तिं प्रतिष्ठाप्य मन्दिरान्तर्गतं हरिं। पूजयेद्यदि तद्बिंबं वेदवेदाङ्गपारगः। अहं तद्बिंबमाविश्य भक्तानामिष्टसाधकः।। त्वया सह भविष्यामि नात्र सन्देह अस्तु ते।। *[श्रीप्रश्ने 5-அத். 5-வது ஶ்லோகம் முதல்]* *[எதின் ஸேவையானது ஸகல சேதனர்களுக்கும் ஸர்வ ஸித்தியையும் கொடுக்கவல்லதோ, எதின் தரிசனத்தை இதுவரை ஞானிகளும் யோகிகளும் அறியார்களோ. அப்பேர்ப்பட்ட அர்ச்சாவதாரத்தை—சதுர்வித₄ புருஷார்த் த₂ங்களை. விரும்பியோ, விரும்பாமலோ, தேவர்களோ, மானிடர்களோ, யாவரொருவர் ஸ்ரீ வைகுண்டலோகத் திற்குச் சமமான திருக்கோயிலைப் புண்யக்ஷேத்ரங்களில் நிர்மாணித்து, லக்ஷ்மீநாராயணனை உன்னையும் என்னையும் வேதவேதாங்கங்கள் நன்கறிந்தவர்களால் மந்திரமூர்த்திக ளாக பிரதிஷ்டைசெய்து பூஜிப்பார்களானல், நான் அந்த அர்ச்சாபிம்பத்தில் உன்னேடுகூட ஆவிர்ப்பவித்து பக்தர் களுக்கு வேண்டுவார் வேண்டுவனவற்றை எல்லாம் கொடுத்துக்கொண்டுள்ளேன்] என்று கூறுவதாலும், இதை வேதமறிந்தவர்கள் செய்யவேணுமென்பதாலும், ஆசார் யர்கள் அர்ச்சாவதாரத்தைக் கற்பிக்கவில்லை என்பதும், பாஞ்சராத்ரம் வேதவிருத்தமல்ல என்பதும் தெளிவு. மேலும் அநிருத்₃த₄ஸம்ஹிதை 17-வது அத்யாயத்தில்.*

ज्ञानयोगं कर्मयोगं द्विविधं तदुपायकं। कर्मयोगाच्च भगवन् ज्ञानयोगं प्रजायते।। कर्मयोगो विशेषेण केशवाराधनं

परं। केशवाराधनं चैव राजराष्ट्रसुखावहं॥ सर्वदुःखोपशमनं सर्वज्ञानफलप्रदं। भगवद्ज्ञानफलदं विष्णुप्रीतिकरं शुभं॥ देवदेव-प्रसादेन सर्वदुःखक्षयावहं। तस्मात् सर्वप्रयत्नेन केशवाराधनं चरेत्॥ இத்யாதிகளாலே, 'ஞானயோகமென்றும், கர்மயோகமென்றும் யோகம் இருவிதம். கர்மயோகத்திலிருந்து ஞானயோகம் ஸித்திக்கும். கேசவாராதனமே கர்மயோகமாகும். அது அரசு, தேசம் இவைகளைச் செழிப்புறச் செய்யும். ஸகல துக்கங்களையும் போக்கி எல்லா ஞானத்தையும் அளிக்கும். விசேஷமாக பகவத் ஞானத்தைக் கொடுக்கும். இது பகவத் ப்ரீதிஜனகமானது. எல்லா துக்கங்களும் இதனுல் நிவர்த்தியாகும். ஆகவே பெருமுயற்சி கொண்டு விஷ்ணுவை ஆராதிக்கக் கடவன். என்று கூறியுள்ளதால் ஆசாரியர்கள் விஷ்ணு வழிபாட்டைக் கற்பித்தார்கள் என்பது சுத்த அபத்தம்.

பாரா 26-ல் "தமிழ்நாட்டு வைணவ ஸம்பிரதாயத்திற்கு ஆகமப்படி ஆலயத்தில் தனியிடம் கிடையாது" என்பதுபற்றி. இது ஸந்நிதிகளில் நடக்கும் தீர்த்த கோஷ்டி விநியோகம் இவைகளைக் குறிக்கலாம். இதுவும் ஆகமசம்பந்தமானதே. இதுபற்றி श्रीप्रश्नसंहिता (29 அத்) "पूजान्ते देवदेवस्य तीर्थं देवाभिषेचितं। पादांबु वा पिबेत्पूर्वं गंगातीर्थसमं शुचि। अन्येष्वपि च कालेषु क्षुत्राराधनकर्मणि। पीत्वा स्वयं चोद्धरिण्या पात्रेणान्येन वा गुरुः। सिद्धानां च महर्षीणां यतीनां ब्रह्मवादिनां। वैष्णवानां ब्राह्मणानां वेदवेदार्थसेविनां। क्षत्रियाणां च वैश्यानां भक्तानां पादजन्मनां। क्रमशो देवदेवस्य पादतीर्थं प्रदापयेत्।" इत्यादिना, परमपुरुषसंहितायां-"पूजान्ते स्थापकस्सम्यग्विज्ञायाथ जनार्दनं। स्नपनान्ते तथा विष्णोस्तीर्थं सेनापतेर्ददेत्। आचार्यायार्चको भूयः प्रदद्यात्तदनन्तरं। पश्चान्मद्वंशजायाथ पूजकाय प्रदापयेत्। ततस्स्यात्सेवकानां च यथा

वर्णाश्रमेषु च। तीर्थादिकमशेषं च प्रदद्देत्क्रमशस्तथा। अन्यथा विपरीतं चेत्कोपमिच्छति देवराट्। तीर्थं पिबति यो मर्त्यः सर्वपापैः प्रमुच्यते। चतुर्विधफलं प्राप्य मम लोके महीयते।" इत्यादिना च उक्तम्। *மேலும் இதுபற்றி* वराहसंहितायां—"अभिषेकावसाने च विष्वक्सेनस्य पूर्वतः। तीर्थं दद्यात्स गुरवे पीत्वा तीर्थं स्वयं गुरुः। सेवकानां ततो दद्यात् सर्वेषान्तु यथाक्रमं। यदि स्यादविवेकेन पूजकः कृतवान्पुनः। स्नानासने कृतं कर्म तत् सर्वं निष्फलं भवेत्।" *என்று ஸ்ரீபாஞ்சராத்ரஸம்ஹிதைகள். பெருமாள் திருவாராதனத்தின் கடைசியிலும், திருமஞ்சன காலங்களிலும், தீர்த்த விநியோக க்ரமாதிகளைச் சொல்லிற்றாகையால் தமிழ் நாட்டு வைணவம்தான் ஆகமப்படி உள்ளது.*

பாரா 27-ல் "வைகானஸ ஆகமம் வேதநெறியையே முக்யமாகக் கொண்டிருப்பதால் ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்கள் அதற்கு முக்யத்வம் கொடுக்கவில்லை" என்று கூறுகிறார். நிகமாந்த மஹாதேசிகனும் வைணவ ஆசாரியர்களில் ஒருவரே என்பதை இவர் மறந்துவிட்டார். அவர் தமது பாஞ்சராத்ரரக்ஷையில் பாஞ்சராத்ர ந்யாயபரிசுத்தியில். "वैखानसस्य पाञ्चरात्रस्य च तत्त्वविषये भेदो नास्तीति भेदा अत्यल्पा इति" *[வைகானஸத்திற்கும், பாஞ்சராத்ராகமத்திற்கும் தத்வவிஷயத்தில் பேதம் இல்லை; அப்படியே இருந்தாலும் மிகக்குறைவே] என்று கூறியுள்ளார். மேலும் அனேகவிதமான பாஞ்சராத்ர ப்ரமாணங்களால் வைகானஸமும் பாஞ்சராத்ரத்தின் ஒருபிரிவுதான் என்று விளங்குகிறது; கபிஞ்ஜலஸம்ஹிதை உபோத்காதத்தில் காணலாம்.* ईश्वरसंहितायां *(1-50ல்)* सात्वतपौष्करजयाख्य भेदा इति–*(1-53ல்)* प्रथमं सात्वतं शास्त्रं *(1-57ல்)* एतत्तु त्रिविधं विद्धि सात्त्विकादिप्रभेदतः। *இத்யாதிகளாலே பாஞ்சராத்ரத்தில் ஸாத்வத, பௌஷ்கர, ஜயாக்ய பேதங்களைக்கூறி — ஸாத்வத ஶாஸ்த்ரத்தை*

முதன்மையாகவும் கூறி, அவற்றில் ஸாத்விக, ராஜஸ, தாமஸ பேதங்களையும் சொல்லி (1-62ல்) "स्वविकल्पात् प्रणीतन्तु तत्सर्वं राजसं स्मृतं। तच्च द्वेधा पाञ्चरात्रवैखानसविभेदतः।" என்று "ஸ்வாபி₄ப்ராயமாகச் சொன்னவைகள் எல்லாம் ராஜஸம்" என்றும், "அவைகள் பாஞ்சராத்ரங்களிலும் வைகானஸங்களிலும் உள்ளன" என்றும் சொல்லுவதாலும், மேலும் பாஞ்சராத்ரம் 108ஸம்ஹிதைகள் சொல்லுமிடத்தில் சில வைகானஸத்தில் எண்ணப்பட்டிருப்பதாலும் ஸ்ரீ வைகானஸத்தில் ப்ருகு ப்ரோக்த க்ரியாகாண்டத்தில் வைகானஸர் இல்லாத நெருக்கடியில் ஸ்ரீ பாஞ்சராத்ராராதனம் செய்யலாமென்றிருப்பதாலும் இது தெளிவு. எந்த ஆகமத்தையும் பாராமல் வைகானஸத்தை வேதக் கொள்கையாவும், பாஞ்சராத்ரத்தை வேதவிருத்தமாகவும் மயங்கி ஏமாற்றம் அடைந்துள்ளார் இவ்வாசிரியர் என விளங்குகிறது.

பாரா 28–இப்பாராவில், பாஞ்சராத்ரம் ஆசார்யர்களான ஆளவந்தார், இராமாநுஜர் இவர்களால் சிறப்பான இடத்தை அடைந்துவிட்டதாகவும், வைகானஸம் மிகவும் புராதனமாக இருந்தும் ஆளவந்தாரோ இராமாநுஜரோ இதைப்பற்றிக் குறிப்பிடவே இல்லை, ஆனால் வேதாந்த தேசிகர் மட்டும் தம்முடைய நூலான பாஞ்சராத்ர ரக்ஷையில் இதைப்பற்றிக் குறிப்பிடுகிறார் என்றும் கூறுகிறார் இவ்வாசிரியர். முன்பாராவில் வைணவாசாரியர் வைகானஸத்தை முக்யமாகக் கொள்ளவில்லை என்றார். இப்பாராவில் வேதாந்ததேசிகன் உதாஹரித்துள்ளார் என்கிறார். ஆகவே இவர் வேதாந்ததேசிகனை வைணவராகவே ஒப்புக்கொள்ளவில்லை போலும்! வைகானஸத்தை ஆளவந்தார் உதாஹரிக்கவில்லை என்பது அடியோடு தவறு. திருமலை திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து வெளியான வைகானஸ ஆகமம், மரீசிஸம்ஹிதை விமானார்ச்சனகல்பம்,

உபோத்காதத்தில் 3-வது பாராவில் 5-வது வரியில் भागवतमत-प्रशंसायां श्रीयामुनाचार्यैरुच्यते–"इदमपि (वैखानसमपि) भागवतमतमिति संगृह्यते इति, वैखानसाः पाञ्चरात्राश्चेति द्विविधा भागवताः"– இத்யாதி₃களான ஆளவந்தார் ஸ்ரீஸூக்திகளைக் காட்டியிருப்பதால் ஆளவந்தார் வைகாநஸத்தை உதாஹரிக்கவில்லை என்பது முழுத்தவறு. அப்₄யுபக₃ம்யவாத₃ரீதியில் ஆளவந்தார், எம்பெருமானார் வைகானஸத்தை உதாஹரிக்கவில்லை என்றே கொண்டாலும், அவர்கள் காலத்தில் பாஞ்சராத்ரத்தைப்பற்றி ஆக்ஷேபம் கிளம்பியிருந்தது போல் வைகாநஸம்பற்றிக் கிளம்பவில்லை என்றுதான் தேறும்.

பாரா 31ல் "பரமைகாந்திகளுக்கு நாராயணன் ஒருவனே தெய்வம். அவர்கள் மறந்தும் புறந்தொழாமாந்தர். இவர்கள் கொள்கைக்கும் ஆலயவழிபாட்டுக் கொள்கைக்கும் வெகு தூரம். ஆகவே ஆலயவழிபாடும் பரமைகாந்தி தர்மமும் ஒன்றுபட இடமில்லை" என்கிறார். பரமபுருஷஸம்ஹிதை ஆசார்யலக்ஷணம் சொல்லுமிடத்தில் 2-வது அத்யாயத்தில் "परमैकान्तिनश्चैव पञ्चकालपरायणान्" என்று பகவதாராதனம் பண்ணும் அர்ச்சகரின் யோக்யதாம்ஸம் கூறியுள்ளபடியால் இது அடியோடு தவறு.

பாரா 32-ல் "பாகவததர்மம் வேறு, ஆலயவழிபாடு வேறு. இரண்டும் பிற்காலத்தில் ஒன்றுகூடியது" என்கிறார். ஆனால் ஸ்ரீ பாஞ்சராத்ரம் பலவிடங்களில் மஹாபாகவதன்தான் பெருமாளை அர்ச்சிக்கவேணுமென்று உறுதி கூறியுள்ளது. மேலும் அது பாகவத தர்மமும் கூறுகிறது. पाञ्चरात्रे पाद्मे चर्यापादे 2-வது அத்தியாயத்தில் "समयोऽग्रे सदाचारस्स्वाध्यायो द्रव्यसंग्रहः। शुद्धिर्यागस्मृतिर्ध्यान-मित्येवं सिद्धिरष्टधा। विधिनानेन यस्तिष्ठेत्स भागवत उच्यते।"

என்றும், சர்யாபாதம் 19-வது அத்யாயத்தில் ப₄ாக₃வத நிஷ்பத்தி கூறுமிடத்தில், "पञ्चकालं यथाशास्त्रं गृहे वा मन्दिरेऽपि वा। भगवत्पूजनं कार्यं अद्यप्रभृति नान्यथा। यूयं भागवतास्तेन जाता भगवदर्चनात्। भगवद्भक्तिकरणात् वंशजाता - श्चतुर्मुख। नाम्ना भागवतास्सन्तु" என்றும், ஸ்ரீபாஞ்சராத்ர விஷ்ணுதிலகஸம்ஹிதையில் "पञ्चसंस्कारदीक्षावान् महाभागवतः स्मृतः। महाभागवतेनैव पूज्या देवालयादिषु॥" என்றும் கூறப் பட்டிருப்பதால், பாகவததர்மமும், ஆகமதர்மமும் ஒன்றே யானபடியால் பாகவததர்மங்களை அநுஷ்டிக்கும் மஹா பாகவதன்தான் தேவாலயங்களில் திருவாராதனம் பண்ண லாம் என்று தெளிவாக விளங்குகிறது. அக்னிஹோத்ரம் சுவாமி 116-வது பாராவில் பஞ்சஸம்ஸ்கார தீக்ஷையை ஒப்புக்கொண்டு அதைச் செய்பவர்கள் விஷயத்தில்தான் பேதத்தைக் கூறுகிறார். ஆசாரியன் செய்யும் பஞ்சஸம் ஸ்காரமும், கோவில்களில் அர்ச்சகர் செய்யும் பஞ்சஸம் ஸ்காரமும் ஒன்றே எனத் தேறுவதால், இவர் சொற்படியே பாகவததர்மமும், ஆலயதர்மமும் ஒன்றுதான் என்றதாயிற்று.

பாரா 33ல் "பாமரர்களுக்குத்தான் ஆலயவழிபாடு" என்றும், "ஆகமங்கள் க்ரியை சம்பந்தம் வரையில் வேத விதிகளைச் சிறிது பின்பற்றினாலும் நாமமந்திரங்களையும் முத்திரைகளையும் சேர்க்கச்சொல்கின்றன" என்றும் கூறு கிறார். ஆலயவழிபாடு பாமரர்களுக்கு மட்டுமல்ல, வேத₃ வேதா₃ந்த பாரங்க₃தர்கள், பஞ்சகாலபராயணர்கள், ஏன் பரமைகாந்திகளுக்குங்கூட ஏற்பட்டது என்பது 31-வது பாராவின் பதிலிலேயே கூறப்பட்டுள்ளது. மேலும், पाद्मे–चर्यापादे, 2-வது அத். ப₄கவதா₃ராத₄னம் சொல்லுமிடத்தில், "यतो वै श्रुतिमन्त्रेण नित्यमाराधयन् हरिं। मन्त्रैर्यथोक्तैराराध्यः सूक्तेन पुरुषेण वा॥ अथवा द्वादशार्णाद्यैर्मन्त्रैर्बिंब-

मुखे हरिं।।” என்று “मन्त्रैर्यथोक्तैः” என்பதால் வேதமந்திரங்களுக்கே முதலிடமளித்து, மேலும் சதுர்வேதப்ரமாணமான புருஷஸூக்தத்திற்கு அடுத்து இடமளித்து, கடைசியாகத்தான் நாமமந்திரத்திற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் அடியேன் பகவதபசாரப்படவேண்டியிருப்பதால் அடியேனை எம்பெருமானே க்ஷமித்தருள வேணும். ஏனெனில், வேதமந்திரங்களைக் காட்டிலும், புருஷஸூக்தத்தைக் காட்டிலும், அஷ்டாக்ஷர த்₃வாத₃ஶாக்ஷர ஷட₃க்ஷரங்கள் குறைந்தவையல்ல. இவைகளின் கருத்துக்களையே, வேதங்கள் பத்திபத்தியாக ஓதுகின்றன. பாலில் நெய்போல் நாமத்ரயங்கள் வேதங்களனைத்திற்கும் வித்தாகும். வ்யாக்ருதி மந்திரங்கள் உருவத்தில் சிறிதாறலும் வேதரிக்குக்களால் ஏற்படும் தோஷங்களையும் போக்கவல்லது போலாகும் நாமத்ரயம் என்றபடி.

34-வது பாரா—“ भगवदाराधन-अर्चाविग्रहादिप्रतिपादकमन्त्राः वेदेषु उपलभ्यन्त एव। शौनकादिभिः तद्विनियोगक्रमः कथितः। एकायनशाखा भगवदर्चामूर्त्यादिप्रतिपादनपरा। एकायनशाखायाश्च वेदत्वं काश्मीरागमप्रामाण्यादिषु प्रपञ्चितं। इति (न्यायपरिशुद्धौ) छान्दोग्यभूमविद्यायां (7-1-2) “एकायनं वेदविद्यामित्यादिनोल्लिखितस्य वेदात् पार्थक्यं नाशंकनीयं। ब्रह्मविद्यापदविवक्षितोपनिषद्-भागस्यापि वेदबहिर्भावप्रसंगात्।।” இத்யாதிகளாலே ஏகாயன வேதம் காஷ்மீர ஆகமப்ராமண்யாதி₃களில் சொல்லப்பட்டிருக்கிறதென்றும் வேத₃பா₃ஹ்யமன்றென்றும் ஸ்ரீவேத₃ாந்த தே₃ஶிகரால் ந்யாயபரிசுத்தியிலும் கூறப்பட்டுள்ளது. ஆகவே ஏகாயனம் வேத₃பா₃ஹ்யமாகாது. மேலும் இவ்வாசிரியர் “ஏகாயநம் ஓரே கடவுள்கொள்கையைச் சொல்லுகிறது. ருக்வேதம் பல தெய்வகொள்கைகளைச் சொல்லுகிறது. ஆகவே மக்கள் வேதத்திற்கு மாறாக ஓரே தெய்வக்கொள்கையுடைய இதை ஆதரிக்கவில்லை”

என்கிறார். இவ்வாசிரியர் இப்பாராவில் பாஞ்சராத்ரத்தின் ஒரே தெய்வக்கொள்கையை எதிர்க்கிறார். இதே ஆசிரியர் 40-வது பாராவில், "பாஞ்சராத்ரம் நான்குவிதமாக பகவான் இருந்து வருகிறார் என்கிறது. உபநிஷத்தின் ஒரே தெய்வக்கொள்கைக்கு இது விரோதமானபடியால் பாஞ்சராத்ரம் வேதவிருத்தம்" என்கிறார். மறுபடி இதே ஆசிரியர் 60-வது பாராவில் வேதம் பல தெய்வக் கொள்கை தனக்கு இருக்கிறது என்று மக்கள் நினைத்து விடக்கூடாது என்று "கடவுள் ஒருவனே என்றும், பல பெயர்களில் குறிப்பிடப்படுகிறான் என்றும் வேதம் முடிவு சொல்லிவிட்டது" என்று ஆனந்திக்கிறார். இதே விஷயத் தைப் பாஞ்சராத்ரம் சொல்லும்போது துக்கிக்கிறார். ஆகையால் மொத்தத்தில் இவ்வாசிரியருக்குப் பாஞ்ச ராத்ரத்தின் பேரிலும், அதைச் சொன்ன நாராயணன் மேலும் த்வேஷம் இருப்பதாக நடுநிலையாளர் நினைக்க இடமளித்துள்ளார். "पाञ्चरात्रमिदं विप्र नारायणमुखोद्गतं। निन्देद्यदि तु संमोहात् नरकाय भवेद्ध्रुवम्॥" என்று அநிருத்$_3$த$_4$ஸம் ஹிதை உத்$_3$கே$_4$ாஷிக்கும். பாஞ்சராத்ரநிந்த$_3$ாப$_2$லமான நரகத்தில் நின்றும் இவரை எம்பெருமான் காப்பானாக.

பாரா 37-ல் சில ஆகமங்கள் இராமாநுஜர், சடகோபர், வேதாந்ததேசிகர் இவர்களைக் குறிப்பிடுவதால் அவைகள் இவர்கள் காலத்திற்குப் பிற்பட்டவை என்கிறார். இதே ந்யாயத்தைக்கொண்டு, விஶ்வாமித்ரர், பராசரர், வ்யாஸர் முதலானோரைக் குறிப்பிடும் வேதங்கள் அவர்களுக்குப் பிற்பட்டவை என்று இவர் ஒப்புக்கொள்கிறாரா என்று தெரியவேண்டும். மேலும் ஸ்ரீபாஞ்சராத்ரஸம்ஹிதைகளில் காணப்படும் ஸ்ரீராமாநுஜ, சடகோப, தேசிக விஷய ப்ரஸ்தாபங்கள் ப்ரக்ஷிப்தமாக இருக்கலாம் என்றும் நிர் வஹிக்கலாம். இதனால், அப்பாஞ்சராத்ரஸம்ஹிதைகள் அவர்களுக்குப் பிற்பட்டவை ஆகிவிடமாட்டா, पाद्मे-ज्ञानपादे

1-வது அத்யாயம் तन्त्राणां चैव सर्वेषां वक्ता नारायणः स्वयं। अनुग्रहार्थं भक्तानां श्रावयामास च स्वयं। श्रोतारो मूर्तिभेदाश्च मुनयश्च पितामहः। श्रुतिमूलमिदं तन्त्रं प्रमाणं कल्पसूत्रवत्। என்றபடி "பாஞ்சராத்ரம் அனைத்திற்கும் வக்தா நாராயணனே; ஶ்ரோதாக்களோ, வ்யூஹமூர்த்திகளும், ப்₃ரஹ்மாதி₃களும், முனிவர்களும்; இது வேதத்தையே மூலமாகவும், கல்ப ஸூத்ரத்தை ப்ரமாணமாகவும் கொண்டது" என்றெல்லாம் கூறி "वेदशास्त्रात् परं नास्ति न दैवं केशवात्परं। तस्मात् भजस्व देवेशं विधिनानेन वै मुने।" என்று வேதத்தின் சிறப்பையே கூறினார். இதிலிருந்து பாஞ்சராத்ரம் வேதத்தையே மூலமாகக்கொண்டது என விளங்குகிறது. இதைப்போய் வேதவிருத்தமென்கிறார் ஆசிரியர்.

38-வது பாரா— "ஈஶ்வரபாரமேஶ்வர ஸம்ஹிதைகள் ஆழ்வார்கள் பாடலை த்₃ராவிட₃ஶ்ருதி (தமிழ்வேதம்) என்று கூறி அவைகளை யாகசாலையில் ஓதச்சொல்வதால், ஆழ்வார்கள் காலத்திற்குப் பிற்பட்டவை" என்பது சரியல்ல. முன்பாராவிலேயே இதற்கு பதில் கூறியுள்ளேன். இவ்வீஶ்வரஸம்ஹிதையிலேயே மஹோத்ஸவத்தில், தேவதாஹ்வானம் சொல்லுமிடத்தில் (11-அத்.)"देवतावाहिनीं गाथां संस्कृतां प्राकृतां तु वा। द्रामिडीं वा यथेच्छातस्तदा संश्रावयेद्विभुं।" என்று "தேவதாஹ்வானம், ஸம்ஸ்க்ருத ஶ்லோகமாகவோ, தமிழ்ப் பாட்டாகவோ சொல்லி அழைக்கலாம்" என்றது. உத்ஸவத்திற்கு தேவதாஹ்வானத்தை எந்த ஆழ்வார்களும் தமிழில் பாடவில்லை. இங்கே த்ராமிடீம் என்ற வார்த்தையால் ஆழ்வார்கள் பாடலைக் குறிப்பிடவுமில்லை என்பது கவனிக்கத்தக்கது. ஆகவே ஸம்ஸ்க்ருதம்போன்று தமிழும் ப்ராசீனமாகையால் இதுகொண்டு ஆழ்வார்களுக்குப் பிற்பட்டது ஆகமம் என்னவுமிடமில்லை.

39-வது பாரா—ரத்னத்ரயங்களான. ஜயாக்ய. ஸாத்வத, பௌஷ்கர ஸம்ஹிதைகள் ஆலயபூஜையை ஸவிஸ்தாரமாகக் கூறவில்லை என்பது குற்றச்சாட்டு. இதுவும் சரியல்ல என்பதை ஆக₃மஸாம்யங்களாலே காண்க. जयाख्यसंहितायां प्रथमपटले — "सात्त्वतं पौष्करं चैव जयाख्यं तन्त्रमुत्तमं। रत्नत्रयमिति ख्यातं तद्विशेषमिहोच्यते। सारं सात्त्वतशास्त्रस्य रहस्यं प्राज्ञसंमतं। व्याख्योपबृंहणन्यायात् स्थापितानि तथा तथा॥ व्याख्यामूलेन येनैषां गौरवं संप्रतिष्ठितं। तन्त्रेष्वष्टोत्तरशते पारमेश्वरसंहिता॥ पौष्करस्य विवृत्यर्था व्याख्यारूपावतारिता। सात्वतस्य विवृत्यर्थं ईश्वरं तन्त्रमुत्तमं॥ जयाख्यस्यास्य तन्त्रस्य व्याख्यानं पाद्ममुच्यते॥" என்று கூறியிருப்பதால. ஸாத்வத சாஸ்த்ரமான ஸ்ரீபாஞ்சராத்ரத்தின் ரஹஸ்யமாயும், ப்ராஜ்ஞ ஸம்மதமாயுமுள்ளவைகளான ஸாரார்த்தங்கள், வ்யாக்₂யான. உபப்₃ரும்ஹண ந்யாயத்தாலே பல ஸம்ஹிதைகள் மூலம் அங்கங்கே கூறப்பட்டுள்ளன. இவைகளுக்கெல்லாம் மூல ஸம்ஹிதைகள் என்றும். வ்யாக்₂யான ஸம்ஹிதைகள் என்றும் கௌ₃ரவம் உள்ளது. இதில். ஜயாக்₂ய. பௌஷ்கர. ஸாத்வத ஸம்ஹிதைகள் மூலஸம்ஹிதைகள். இவைகளின் ரஹஸ்யப்பொருள்களையே. விரிவாக. முறையே. ஸாத்வதத்தின் விரிபொருளை ஈஸ்வரஸம்ஹிதையும், பௌஷ்கரத்தின் விரிபொருளை பாரமேஸ்வரஸம்ஹிதையும், ஜயாக்₂யத்தின் விரிபொருளைப் பாத்₃மஸம்ஹிதையும் கூறுகிறபடியால், மூலஸம்ஹிதைகளில் ஸவிஸ்தாரமாகக் கூறப்படவில்லை என்ற வாதம் சாஸ்த்ர விரோதமானதே. மேலும். "एकैकवक्त्रभेदेन सिद्धान्ता बहुधा स्मृताः। संग्रहो विस्तरश्चैव तन्त्राणां प्रकटीकृतः॥" என்று பாத்₃மஸம்ஹிதையில் கூறியது காண்க.

40 வது பாரா - கடவுள் ஒருவர் தான் என்ற உபநிஷத்தின் கொள்கைக்கு. பாஞ்சராத்ர ஆகமத்தின் தெய்வக்

கொள்கை. விரோதமென்கிறார். கடவுள் ஒருவரேதான் என்பதை உபநிஷத்தில்போன்று ஸ்ரீ பாஞ்சராத்ராகமமும் சொல்லுகிறது. "एक एव परो देवो नानाशक्तिसमन्वितः। करोति सर्गसंहारौ स च नारायणः स्मृतः।" [पाद्मे-ज्ञानपादे. पष्ठाऽध्याये] ஆகவே நாராயணன் ஒருவனே கடவுள். அவன் பல பெயர்களில் சொல்லப்படுகிறான். இது பாஞ்சராத்ர ஸித்தாந்தம்; உபநிஷத்தின் ஸித்தாந்தமும் இதுவே.

44-வது பாரா – பாஞ்சராத்ராகமம் வாஸுதேவாதி நால்வர்களை வழிபடச் சொல்வதால் பல தேவதைக் கொள்கையா, ஒரே தெய்வக்கொள்கையா, என்று சங்கிக்கிறார் ஆசிரியர். இதில் எள்ளளவும் சந்தேகிக்க இடமில்லை. ஸித்தாந்த பேதமாக மூர்த்தி ஆராதனம் சொல்லப்படுகிறபடியால் சங்கை தேவையில்லை. पाद्मे ज्ञानपादे "एकमूर्तिप्रधानं तु मन्त्रसिद्धान्तमुच्यते। चतुर्मूर्तिप्रधानन्तु यत्तदागमसंज्ञितं। नवमूर्तिप्रधानं च तन्त्रसिद्धान्तमुच्यते। चतुर्वक्त्रे त्रिवक्त्रे वा देवे यत्रार्चनाविधिः। तत्तन्त्रान्तरमिष्टं स्यात्तन्त्रमेतच्चतुर्विधं॥" என்று கூறுகிறபடியால் நான்கு மூர்த்திகளைத்தான் ஆராதிக்க வேணுமென்று முடிவுசெய்யவில்லை. ஒரே மூர்த்தியை ப்ரதானமாகக்கொண்டு வழிபடுவது மந்திர ஸித்தாந்தம். நான்கு மூர்த்திகளை ப்ரதானமாகக்கொண்ட வழிபாடு ஆகம ஸித்தாந்தம். நவமூர்த்திகளை ப்ரதானமாகக்கொண்ட வழிபாடு தந்திர ஸித்தாந்தம். நரஸிம்ஹ, ஹயக்ரீவர்கள் போன்று முகபேத மூர்த்திகளாகவோ, ஒன்றுக்கு மேற்பட்ட முகங்கள் உள்ள மூர்த்திகளாகவோ உள்ளவர்களை ப்ரதானமாகக்கொண்டு வழிபடுவது தந்த்ராந்தர ஸித்தாந்தம் — என்று கூறி, ஆதியில் பூகர்ஷணம் முதல், எது எவ்வழி செய்யப்பட்டதோ, அவ்வழியே செய்ய வேணும் என்றும், கலப்புக்கூடாதென்றும், நான்கு ஸித்தாந்தங்களில் வழிபடுபவர்களுக்கும், பலப்ராப்தி ஒன்று

தான் என்றும் கூறுகிறது. இது பல தெய்வக்கொள்கை அல்ல. ப்ரஹ்மருத்ரர்களையும் சரீரமாகக்கொண்டு தானே காரியம் செய்கிறேன் என்று பகவான் ஏகதேவ வாதம் செய்யும்போது, சதுர்மூர்த்தி, நவமூர்த்திகள், தனிப் பட்ட தெய்வங்கள் என்று எண்ணுவது ப்₄ரமம்.
पाद्मे ज्ञानपादे–"रजस्सत्त्वतमोमय्यस्तिस्रः संसारगोचराः। आनन्दाख्या चतुर्थी तु भुक्तिमुक्तिप्रदायिनी। रजोगुणेन भुवनं सृजामि सचराचरं। पालयामि च सत्त्वेन तमसा संहरामि च। आनन्दात्मानमास्थाय वासुदेवाह्वयस्स्वयं। विमोचयामि संसारात् ये मामेव भजन्ति तान्। सृजामि पामि हन्म्येतद्रूपैर्ब्रह्मादिभिः त्रिभिः। என்று ரஜோ குணத்தால் ப்₃ரஹ்மரூபங்கொண்டு ஸ்ருஷ்டியும், ஸத்வ குணத்தால் விஷ்ணுரூபங்கொண்டு பாலனமும், தமோ குணத்தால் ருத்ரரூபங்கொண்டு ஸம்ஹாரமும, ஆனந்த குணத்தால் வாஸுதேவரூபங்கொண்டு ஸம்சாரவிமோசன மும் நான் ஒருவனே செய்கிறேன் என்று கூறும் பகவான், ஏகமூர்த்தி, சதுர்மூர்த்தி, நவமூர்த்திகளில் தனி யாக இருக்கிறன் என்பதல்ல பொருள். வழிபாட்டின் முறை விஸ்தாரம்தான் அது. चातुरात्म्यं என்று குறிப்பிடும் இவர்களை வாஸுதேவாத்மிகராகவே நாரதீயஸம்ஹிதை கூறுகிறது चतस्रो मूर्तयस्त्वेताः वासुदेवात्मिका मताः। என்றது காண்க. ஆகவே பாஞ்சராத்ர தேவதாக்கொள்கை விஷயத் தில் பல தெய்வக்கொள்கையாக மயங்க நியாயமே இல்லை.

49-வது பாரா–"வாசுதேவன் கண்ணன். ஸங்கர்ஷணன் அவன் அண்ணன். ப்ரத்யும்னன் கண்ணன் பிள்ளை. அநி ருத்தன் பேரன்." என்று இவ்வாசிரியர் வாஸுதேவனுக்கு ஒரு பெரிய குடும்பமே தயார் செய்திருக்கிறார். வசுதேவன் மகன் வாஸுதேவன் என்பது லோகவாதம். वसतीति वासुदेवः- என்பது ஸித்தாந்தம். ஆகவே ஸ்ரீபாஞ்சராத்ராகமம்

வாசுதேவனைக் கண்ணன் என்றோ, கண்ணன் பிள்ளை ப்ரத்யும்நன் என்றோ ஸங்கர்ஷணனைக் கண்ணன் அண்ணன் என்றோ, அநிருத்தனின் தாத்தா கண்ணன் என்றோ ஒரு இடத்திலும் கூறவில்லை. இவர்களைப்பற்றி பாஞ்சராத்ர மஹோபநிஷத் நாரதீயஸம்ஹிதை கூறுவதைக் காண்க. 1-வது அத்யாயம். भगवान् एक एवासीत् वासुदेवस्सनातनः। स वासुदेवो भगवान् श्वेतवर्णश्चतुष्कलः। चतुर्बाहुः स्वयं भूत्वा संक्षिप्यात्मतनुं पुनः। आकृष्य तु स्वकाद्देहात् संकर्षणमजीजनत्। स संकृष्टशरीरत्वात् संकर्षण इति स्मृतः। पुरुषो रक्तवर्णश्च संकर्षाख्यश्चतुष्कलः॥ स च संकर्षणः श्रीमान् भूष्णुमूलतनुस्स्मृतः। तं वासुदेवमाश्रित्य तपस्तप्त्वातिभीषणं। प्रद्युम्नमसृजत्सोपि तद्ब्रह्मेति प्रकीर्तितं। तृतीया प्रद्युम्नमूर्तिः पुरुषस्स सनातनः। शंखचक्रगदा-पाणिः विश्वात्मा भुवनेश्वरः। तस्य प्रद्युम्ननाथस्य सृष्टं मूर्त्यन्तरं ततः। यतस्तदा महानासीत् तपसे निश्चितात्मनः। तपसोऽन्ते च देहार्धादनिरुद्धमथासृजत्। चतस्रो मूर्तयस्त्वेताः वासुदेवात्मिका मताः। ஆக இப்படி வாசுதேவன் தன் தேஹத்திலிருந்து ஸங்கர்ஷணனையும், ஸங்கர்ஷணன் கடுந்தபஸ்செய்து ப்ரத்யும்னனையும். ப்ரத்யும்னன் தன் தபஸின் முடிவில் தன் சரீரார்த்த₄பா₄க₃மாக அநிருத்தனையும் ஸ்ருஷ்டித்தார்கள். இதுதான் ஆகமப்ரமாணம். வாஸுதேவாதி மூர்த்திகள் குடும்பிகள் அல்ல. இவர்களின் பெயர்களைக் கண்ணன் முதலானோர் கொண்டிருக்கிறார்கள். இதுகொண்டு பாஞ்சராத்ரம் பிறப்பட்டதல்ல; இவர் இப்படிக் கூறுவது— வெங்கடாசலம் என்ற பெயருடைய ஒருவன், "திருப்பதி எம்பெருமானுக்கு என்பெயரைத்தான் வைத்திருக்கிறது" என்பது போலாகும்.

51-வது பாரா— सह पत्न्या विशालाक्ष्या नारायणमुपागमत्। என்ற வால்மீகி ராமாயண ஶ்லோகத்தை ஆசிரியர் மறந்துவிட்டார்.

54-வது பாரா—சுவாமி நம்மாழ்வார். ஆழ்வார் திருநகரி ஆதிநாதனைப்பற்றிப் பாடும்போது அங்குள்ள நவபேரர்களையும் பாடியுள்ளார்; பொலிந்துநின்றபிரான் உத்ஸவர்: மிக்கவாதிப்பிரான் யாகபேரர்—இத்யாதிகளைக் காணலாம்.

55-வது பாரா—ஸ்ரீ சடாரிவிஷயம். இதைப் பெருமாளை விட்டுப் பிரிக்கக் கூடாதென்றும், மற்ற மனிதர்கள் தலையில் வைப்பது அசுத்திக்குக் காரணம் என்றும் கூறியிருக்கிறார். பாஞ்சராத்ரம் ஸ்ரீ ப்ரஸ்நஸம்ஹிதையில் மஹோத்ஸவவிதியில் 35-வது அத்யாயத்தில் பெருமாள் வீதி எழுந்தருளும்பொழுது, பெருமாள் பக்கலில் ஆசாரியனோ, சாதகனோ, தீக்ஷிதனோ, ரத்னமயமான பாத்திரத்தில் ஸ்ரீ சடாரியை வைத்துக்கொண்டு எல்லோருக்கும் சாதித்துக்கொண்டு செல்லவேணுமென்று கூறுகிறார்—देवात्यन्तसमीपे तु आचार्यः साधकोऽपि वा। दीक्षितः पादुकायुक्तं रत्नपात्रं ददत् व्रजेत्। என்று இப்பாஞ்சராத்ரவிதியை, ஸ்ரீ வைகானஸ ஆகமம் விமானார்ச்சனகல்பமும் அங்கீகரித்துள்ளது. 25-வது படலம் ப்ரதிஷ்டைக்குப் பிறகு பாதுகாஸம்ஸ்காரம் சொல்லுமிடத்து. ततः प्रभृति विष्णोरुत्सवकाले शिरसा धारयन् अग्रतो गच्छेत्। என்று கூறுகிறபடியால் பெருமாளைவிட்டுப் பாதுகையைப் பிரிக்கக்கூடாது என்றது ஆகமஸம்மதமல்ல. இனி மற்றவர்கள் தலையில் வைக்கக் கூடாதென்றதையும் அதனால் அசுத்தி உண்டாம் என்றதையும் ஆராய்வோம். விஷ்ணுஸித்தாந்தம் ஸ்ரீபாஞ்சராத்ராகமத்தில், पादुकाधारणं कुर्यात् नानावर्णशिरोपरि। उत्तमाङ्गे च हृदये सव्यादिभुजमूलयोः। सर्वपापा विनश्यन्ति पुनर्मस्तकधारणात्। இத்யாதிகளாலே. "ஸ்ரீசடாரி எல்லா வர்ணத்தவர்களுக்கும், தலை, மார்பு, புஜமூலங்கள், மறுபடி தலை இவைகளில் சாதிக்கவேண்டும். இத்தால் ஸகல பாபங்களும் நசித்துப் போகின்றன" என்று கூறியுள்ளது. ஆகவே மக்கள் தலை

யில் ஸ்ரீ சடாரியை வைக்க ஆகமம் சம்மதித்துள்ளது. இனி அதனால் ஏற்படும் அசுத்தியைப் பார்ப்போம். இது பற்றி பாஞ்சராத்ரம் விஷ்வக்ஸேந ஸம்ஹிதை கூறியுள்ளது. अर्चकस्तु द्विजश्रेष्ठ विंबं वैष्वणवमानिते। वर्णानां शिरसा मध्ये शठकोपं विनिक्षिपेत्। मनः पूजां समारोप्य तत्र तिष्ठति वै हरिः। प्रायश्चितं किमित्युक्ते शठकोपस्य पद्मज। अर्चकस्य पवित्रस्य स्पर्शमात्रेण शुद्ध्यति। என்றபடி ஸ்ரீ சடகோபம் சாதிக்கவேண்டியதைச்சொல்லி, அசுத்தி ப்ராயச்சித்தமாக, பவித்ரமான அர்ச்சகஸ்பர்சத்தாலே சுத்தியாகிறது என்று கூறியுள்ளது. विभ्राणं भावयेत्साक्षादात्मानं परमेश्वरं। என்றபடி, தன்னை எம்பெருமானைப் பாவிப்பவனன்றோ அர்ச்சகன். ஆக இக்யாதிகளாலே சடகோபம் சாதிப்பதால் அசுத்தியில்லாமையையும் பாஞ்சராத்ரம் ஒப்புக்கொண்டுள்ளது.

62-வது பாரா—"ஆலயங்களைப் பொதுவாக எல்லா மக்களுக்கும் தேவை என்று ஆகமங்கள் குறிப்பிடவில்லை" என்கிறார். ஸ்ரீ பாஞ்சராத்ராகமத்தில், ஆலயம் கட்டுவதற்கு பூகர்ஷணம் செய்வதிலிருந்து பகவதாராதனம் செய்ய யோக்யதையான தீக்ஷைசெய்யும்வரை, வர்ணதர்மப்ரகராம் காரியங்கள் விதிக்கப்பட்டுள்ளதால் ஆலயங்கள் எல்லா மக்களுக்கும் தேவையே. ஸ்ரீப்ரஶ்நஸம்ஹிதை 4-வது அத். கோயில் கட்டுவதற்கு யஜமானனைச் சொல்லுமிடத்து संयुक्तो ब्राह्मणो वैश्यः क्षत्रियः शूद्र एव वा। अनुलोमो भवेद्वापि यजमानो भवेद्रमे। என்று நான்கு வர்ணத்தவர்களுக்கும் அநுலோமனுக்கும், ப்ரதிலோமனில் ஸூதனுக்கும் அதிகாரித்வம் அளித்துள்ளது. மேலும் கோயில்கட்ட பூமியை உழுவதற்கு வ்ருஷபலக்ஷணம் சொல்லுமிடத்து. பாத்மஸம்ஹிதை க்ரியாபாதம்—ब्राह्मणो यजमानस्यादनड्वान् गौरवर्णकः। क्षत्रियो लोहितो वैश्यः पीतश्शूद्रस्तु मेचकः॥ என்று சதுர்வர்ண தர்மப்ரகாரமும், காளைகளுக்கு வர்ணமும்கூடச் சொல்லப்

பட்டுள்ளது. மேலும், श्वभ्रा शिला ब्राह्मणस्य क्षत्रियस्य तु पाटला। वैश्यस्य पीता शूद्रस्य कृष्णा मुख्या यथोदिता॥ என்று அந்தந்த வர்ணத்தவர் குறைநுகுணமாக வழிபடும் எம்பெருமானின் சிலையின் வர்ணத்தைக்கூட விதித்துள்ளது. ஆக இதிலிருந்து உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வாசியற ஆலயம் எல்லோருக்கும் தேவையே என விளங்குகிறது.

72-வது பாரா—"ஆகமங்கள் இப்போதுள்ள வேதத்தைத் தங்களுக்கு மூலமாகச் சொல்லவில்லை" என்கிறார். ஸ்ரீ பாஞ்சராத்ர ஸம்ஹிதைகள் 108ம் வேதத்தையே தமக்கு மூலமாகச் சொல்லுகின்றன. पाद्मे—ततो वै श्रुतिमन्त्रेण नित्यमाराधनं हरिं। என்றும், त्रयीनिष्ठाय दातव्यं अध्येतव्यं च वेदवत्। என்றும், श्रुतिमूलमिदं तन्त्रं प्रमाणं कल्पसूत्रवत्, என்றும், ஈஶ்வரபாரமேஶ்வரங்கள் मूलवेदानुसारेण प्रोक्तानि हितकाम्यया। मूलवेदानुसारेण छन्दसानुष्टुभेन च। என்றும், नारदीयसंहिता—दिव्यमन्त्रक्रियोपेतं वेदगम्यं च शाश्वतं। विष्णुमेव यजेदेष योगी भागवतोऽनिशं॥ वेदोदितैस्तु संस्कारैः संस्कृतो चापि केवलैः। अत्र मन्त्रास्तु मे केचित् पाञ्चरात्रे प्रदर्शिताः॥ ते सर्वे वैदिकाः ज्ञेयाः रहस्यं वैदिकं त्विदं। पाञ्चरात्रमिति ख्यातं वेदाध्वप्रकटीकृतं॥ என்றும், अनिरुद्धसंहितायां—श्रुतिमूलमिदं तन्त्रं प्रमाणं कल्पसूत्रवत्। என்றும், विश्वामित्रसंहितायां—पुरा नारायणो देवः परमात्मा सनातनः। भूत्वा हंसवपुर्दैत्यान् हत्वा सर्वान् क्षणेन च। प्रत्याहृत्य चतुर्वेदान् तेभ्यो मह्यमदात् प्रभुः। ततो मुदं परां प्राप्य नत्वा देवं जगद्गुरुम्। व्यजिज्ञपमिदं वाक्यं कृत्वा शिरसि चाञ्जलिं। वेदास्त्वया मे चत्वारो दत्ता दैत्यहृताः प्रभो। एषामर्थं न जानामि संकीर्णत्वाच्च विस्तरात्। एषां निर्वाणफलदमत्यल्पासीन्न मे मतिः।

तस्मात् संक्षिप्य वेदानामर्थं निर्वाणहेतुकं। कथयस्व दयाम्भोधे भगवन् भक्तवत्सल। (श्रीभगवानुवाचः-) ब्रह्मन् निश्श्रेयसकरं ज्ञेयानां ज्ञेयमुत्तमं। वेदार्थसारसर्वस्वं मम प्रीतिकरं परं। पाञ्चरात्राख्यममृतं कथयामि शृणुष्व मे। என்றும், புருஷோத்தமஸம்ஹிதையில் महतो वेदवृक्षस्य मूलभूतो महानयं। ऋगाद्याः स्कन्धभूतास्ते शाखाभूताश्च योगिनः। जगन्मूलस्य वेदस्य वासुदेवस्य मुख्यतः। प्रतिपादकतासिद्धा मूलवेदाख्यता द्विजाः॥ என்றும்— ஆக, பாத்மம், ஈஶ்வரம், பாரமேஶ்வரம், நாரதீயம், அநிருத்தம், புருஷோத்தமம் இத்யாதி ஸம்ஹிதைகளாலே, வேதம்தான் பாஞ்சராத்திற்கு மூலம் என்பதை உணர்த்தி, விஸ்தாரமாக, விஶ்வாமித்ர ஸம்ஹிதையில் பிரமன் கூறும்பொழுது, "ஸநாதனனை பரமாத்மா நாராயணன் ஹம்ஸரூபம்கொண்டு வேதங்களை அபஹரித்த அசுரர்களை உடனே கொன்று, நான்கு வேதங்களையும் எனக்குத் தந்துபோக, நானும் பரமசந்தோஷமடைந்து சிரஸாஞ்ஜலிசெய்து துதித்து இவ்விதம் பிரார்த்தித்தேன்:— பகவானே! நான்கு வேதங்களையும் நீ எனக்கருளினாய்; இவை மற்ற புருஷார்த்தங்களையும் கலந்து சொல்லுவதாலும், மிக விரிவாயிருப்பதாலும் என் சிற்றறிவிற்கு இவற்றில் சுருங்கக் கூறப்பட்ட முக்தி தெரியவில்லை; ஆகையால் வேதத்தில் மோக்ஷபலத்தை யளிப்பது பற்றிய பகுதிகளைத் திரட்டிச் சுருக்கமாக அர்த்தங்களை அருளவேணும்" என்று பிரமன் கேட்க, பகவான் கூறுகிறார்:— "நான்முகனே! மோக்ஷமளிப்பதாயும், அறியவேண்டியதில் சிறந்ததாயும், எனக்குப் பரமப்ரீதிகரமாயும், ஸகல வேதங்களின் ஸாரமாயுமிருக்கும் பாஞ்சராத்ரம் என்ற அமிருதத்தைச் சொல்லுகிறேன் கேட்கக்கடவாய்" என்று, புருஷோத்தமஸம்ஹிதையில், வேதமாகிற ஒரே மரத்திற்கு மூலவேதத்தை வேராகவும், ருக் முதலிய நாலு வேதங்களை அடிமரமாகவும் கூறி

யிருப்பதால், "ஆகமங்கள் இப்போதுள்ள வேதங்களைக் கைவிட்டு மூலவேதத்தையே ப்ரமாணமாகக் கொண்டன" என்பது பரம அபத்தமாகும். ஆக, பாஞ்சராத்ரம் ருக்₃ாதி₃வேத₃ஸாரங்களையே சொல்லுகிறபடியால் வேத விருத்தமல்ல.

89-வது டாரா— "ஆலயங்களில் முக்₂யமான ஆண்பிம்பமும் பெண்பிம்பமும் ஒரே பீடத்தில் எழுந்தருளுவதை ஆகமங்கள் அனுமதிக்கவில்லை" என்றும், 'கர்ப்பக்ருஹத்தினுள்ளோ பக்கத்திலோ, இருபக்கங்களிலும் ஸ்ரீதேவி பூதேவி இருக்கும்போது, தனிக்கோயில் நாச்சியார் ஒவ்வோர் ஊருக்கும், தனித்தனிப் பெயருடன் இருக்க வேண்டிய தேவை நமக்குப் புலனாகவில்லை" என்றும், "நீளாவுக்கு ஆலயங்களில் தனிஉருவம் கற்பிக்கப்படவில்லை" என்றும் கூறுகிறார். பாஞ்சராத்ரமஹோபநிஷத் பாத்மஸம்ஹிதையில் வர்ணகலாப எம்பெருமானுக்கு பிம்ப கல்பனத்திற்காக ஆதாரசூலஸ்தாபனம் சொல்லுமிடத்து, க்ரியாபாதம் 13-வது அத். आचार्यो स्थापयेच्छूलं स्थानकं परमेष्ठिनः। இத்யாதிகளாலே ப்ரதிஷ்டாசாரியன் எம்பெருமானுக்கான சூலஸ்தாபனத்தைச் செய்யச்சொல்லி,பின் देवीस्थूलं तथा स्थाप्य रत्नन्यासोपरि क्रमात्। இத்யாதிகளாலே ஸ்ரீபூதேவிகளுக்கும் சூலஸ்தாபனம் கூறியுள்ளது. இதுபோல் மூலபேருக்கு வர்ணகலாபம் சொன்னவுடன், सुवर्णनिकषाभा श्रीः श्यामाभा भूरर्जुनच्छविः, என்று ஸ்ரீபூமிகளுக்கு வர்ணகலாபமும் கூறிற்று. மூர்த்திகளின் லக்ஷணம் சொல்லுமிடத்தில் பாத்மம் க்ரியாபாதம் 15-வது அத். "दिव्ये भागे स्थितं देवं शंखचक्रगदाधरं। श्रीभूमिसहितं युक्तं" என்று திவ்யபாகத்தில், நின்ற திருக்கோலமாக ஸ்ரீபூமியோடுகூட சங்கசக்ரகதாதரனை எம்பெருமானையும், வீற்றிருந்த பெருமாளைச் சொல்லுமிடத்திலும், "श्रीभूमिभ्यां सुखासीनं सिंहविष्टरमास्थितं"

என்று ஸ்ரீபூமிகளோடு ஸுகமாக ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருப்பவராகவும் கூறிற்று. மேலும், वामोत्संगे श्रियं देवीं समारोप्य चतुर्भुजः। वामहस्तेन चाश्लिष्य यद्वा भूमिं यथोदितं। என்றும், आसनं सह देवीभ्यां என்றும், சேஷாஸனம் சொல்லுமிடத்து, तत्र श्रीभूमिसहितो विष्टरे तु सुखासनः। என்றும், சயனமூர்த்தி சொல்லுமிடத்து, देव्योरुत्सङ्गयोः पादौ प्रसार्य सुखवाहनौ। என்றும், देव्यौ देवस्य वक्त्राब्जं वीक्षमाणे सुखासने। என்றும், श्रीमत्यौ मूर्ध्नि पार्श्वे तु बाहोर्मूलं समाश्रितं। என்றும், श्रीः पादपद्मयुगलौ कराभ्यां वाहयेत्सुखं। என்றும், யாநரூடமூர்த்தி நிலை சொல்லுமிடத்திலும், अर्चनापीठिकापार्श्वे श्रीभूम्यौ तु कृताञ्जली என்றும், श्रीर्दक्षिणे धरा वामे देव्यौ देवस्य कल्पयेत्। என்றும், "ஸ்ரீதேவி வலப்பக்கமும், பூதேவி இடப்பக்கமும் எம்பெருமானுக்கு இருக்கவேணும்" என்றும், एकस्मिन् विष्टरे स्यातां पृथग्वा वल्लभे उभे, என்று, "இவர்கள் ஒரே பீடத்திலேயோ, அல்லது தனித்தனியாகவோ இருக்கலாம்" என்றும், श्रियादीनां च देवीनां देवेन सह कल्पने। नोद्वाहकर्म कर्तव्यं, पृथक् चेत् स्थापनं तयोः। उद्वाहकर्म शास्त्रोक्तं कुर्यादंकुरपूर्वकं। என்று, "ஸ்ரீதேவி பூதேவிகள் பெருமாளோடு அமைக்கப் பட்டால் இவர்களுக்கு கல்யாணகாரியம் வேண்டாம்" என்றும், "இவர்கள் பிரதிஷ்டை தனிப்பட நடந்தால் சாஸ்த்ரோக்தமான விவாஹம் செய்யவேணும்" என்றும் கூறியுள்ளது. லக்ஷ்மிகளின் பிரிவுகளைக் கூறுமிடத்து, योगलक्ष्मीस्तु श्रीवत्सं, भोगलक्ष्मीः द्विपार्श्वयोः। वीर्यलक्ष्मीस्तु वैशेषं पृथग्भवनकल्पनं। என்று எம்பெருமானின் திருமார்பு லக்ஷ்மி யோகலக்ஷ்மி என்றும், பக்கம்நின்ற லக்ஷ்மிகள் போக லக்ஷ்மிகள் என்றும், தனிக்கோயில் நாச்சியாரை வீர்ய லக்ஷ்மி என்றும் கூறுகிறது. 'யோக போகலக்ஷ்மிகள்

பரதந்திரைகளாகையால் எம்பெருமானைவிட்டுத் தனி உத்ஸவாதிகள் கிடையாது. வீர்யலக்ஷ்மி ஸ்வதந்திரையாகையால் தனி உத்ஸவாதி₃கள் உண்டு. தனிக்கோயில் நாச்சியார் வழிபாடு செய்வதால் सर्वकल्याणजननं सर्वदुःखविनाशनं। आयुर्वृद्धिकरं नृणां अभिप्रेतार्थसाधकं। என்றபடி ஸர்வமங்களமும் உண்டாகும்; ஸகல துக்கங்களும் நசிக்கும்; மக்களுக்கு ஆயுள்விருத்தி அடைகிறது; அவர்கள் எண்ணிய எண்ணமெல்லாம் கைகூடுகிறது" என்கிறது பாத்ம ஸம்ஹிதை. ஆண்பெண் உருவங்களைப்பற்றி எல்லா ஆகமங்களுமே கூறியுள்ளபடியால், இனி வைகானஸ ஆகமத்தையும் காண்போம். வைகானஸ ஆகமம். மரீசிஸம்ஹிதை விமாநார்ச்சன கல்பம், ஸ்ரீதேவீ ப்ரமாணம் சொல்லுமிடத்தில், 15-வது படலம் (देव्यादिप्रमाणं) देवस्य बाह्वन्तं स्तनान्तं कर्णान्तं वा देव्योर्मानं। என்று எம்பெருமானுக்குக் குறைவாகவே தே₃வீபி₃ம்ப₃ம் இருக்கவேண்டுமென்று கூறி. சூலஸ்தாபனம் செய்யுமிடத்து, 18-வது படலத்தில் आलयं प्रदक्षिणीकृत्याऽभ्यन्तरं प्रविश्य विष्णुसूक्तं विष्णुगायत्रीं च जप्त्वा, ब्रह्मदण्डं स्थाप्य देव्यादीनां तत्तन्मन्त्रेण तत्तत्स्थाने स्थापयेत्। என்று எம்பெருமானுக்கான ப்ரஹ்மதண்டசூலம் ஸ்தாபித்தவுடன் ஸ்ரீதேவி பூதேவிகளுக்கும் சூலஸ்தாபனம் சொல்லியிருக்கிறது. யோக₃த்ரைவித்₄யம் உத்தமநிலை கூறும்போது देवेशं श्यामवर्णं चतुर्भुजं, என்று பெருமாளைக்கூறி. तथैव भूमिपुण्यौ वा, என்று தேவிகளையும், போ₄க₃த்ரைவித்₄யம் கூறுமிடத்து देवं चतुर्भुजं दिव्यं श्यामाभं என்று பெருமாளையும் दक्षिणे श्रियं देवीं रुक्माभां என்று ஸ்ரீதேவியையும், वामे हरिणीं श्यामाभां என்று பூதேவியையும். போ₄க₃ாஸநத்தின் உத்தமநிலை கூறுமிடத்து, देवं सिंहासने समासीनं श्यामाङ्गं चतुर्भुजम् என்று பெருமாள் ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருப்பதைச்

சொல்லி दक्षिणे श्रियं देवीं वामपादमाकुञ्चय दक्षिणं प्रसार्य, என்று வலப்பக்கம் ஸ்ரீதேவியானவள் இடதுகாலை மடக்கி வலதுகாலை நீட்டியும், वामे पार्श्वे महीं देवीं दक्षिणं पादमाकुञ्चय वामं प्रसार्य என்று இடப்பக்கம் பூதேவி வலதுகாலை மடக்கி. இடதுகாலை நீட்டியும் இருக்கவேணுமென்று வைகாநஸாகமம் விமாநார்ச்சநாகல்பம் 19-வது படலம் கூறுகிறது. நீளாதேவிக்குத் தனி உருவம் கோயில்களில் கற்பிக்கவில்லை' என்ற இவரின் கூற்று—ஆழ்வார் திரு நகரியில் ஸ்ரீபூமி நீளா ஸமேதனைகப்பொலிந்து நின்றபிரான் எழுந்தருளியிருப்பதையும், ப்ரபந்த சந்தான கூடஸ்தரான நம் பராங்குசனையும், இவர் ஸ்ரீவைஷ்ணவனாய்ப்பிறந்தும் ஸேவியாததனாலேயாகும். நீளாஸ்தாபனத்துக்கும் ஆகமங்களில் ப்ரமாணம் உண்டு. ஆகவே, வைகானஸ பாஞ்சராத்ராகமங்கள், கர்பக்ருஹத்தில் பெருமாளோடு, ஸ்ரீதேவி பூதேவிகளை எழுந்தருளப்பண்ணவேண்டுமென்று ஏககண்டமாக உத்கோஷித்துள்ளன.

93-வது பாரா— பாஞ்சராத்ரத்தில் ப்ரகாஶஸம்ஹிதை என்று ஒன்று இல்லை.

117-வது பாரா— "பாஞ்சராத்ரம் வாசுதேவன் என்ற சொல்லுக்குத்தான் ப்ராதா₄ன்யம் கொடுத்துள்ளது; ஆழ்வார்கள் நாராயணன் என்ற சொல்லுக்கு முக்யத்வம் கொடுத்துள்ளார்கள்; ஆகவே பாஞ்சராத்ராகமமும் வைணவ சப்பிரதாயமும் ஒத்துப் போகவில்லை" என்கிறார். இதுபற்றி ஆராயுமிடத்து ஸ்ரீபாஞ்சராத்ரம் வாஸுதேவ ஶப்₃த₃த்தைப் போலவே நாராயண ஶப்₃த₃த்தையும் குறிப்பிடுகிறது; இதை ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகளிலிருந்து, காண்க. पाद्मे ज्ञानपादे–पाञ्चरात्रोक्तमार्गेण वासुदेवं समाश्रितः। नारायणस्मृतध्याननिरस्ताशेषविप्लवः। (69-ஶ்லோ.) तन्त्राणां चैव सर्वेषां वक्ता नारायणः स्वयं। (88-ஶ்லோ.) (2-அத்.16-ஶ்லோ)- आत्मानं च द्विधा चक्रे पुनः केनापि हेतुना। तयोरेको वासुदेवश्शुद्ध-

स्फटिकसन्निभः। नारायणो द्वितीयस्तु नीलाम्बुदसमप्रभ:। என்றும். (6-அத்.) एक एव परो देवः नानाशक्तिसमन्वितः। करोति सर्गसंहारौ स च नारायणः स्मृतः என்றும். (12-அத்.) अण्डानि तानि सर्वाणि व्याप्य नारायणः स्थितः என்றும். (क्रियापादे 18-அத்) एकमूर्तिर्वासुदेवो यद्वा नारायण: पर:- என்றும். இத்யாதிகளாலே வாஸுதேவனையே நாராயணனாகக் கோஷிக்கப்படுகிறது. ஆக ஆகமத்திலுள்ள வாஸுதேவனை நாராயணனையே ஆழ்வார்களும் பாடினார்கள்.

ஆக, இத்தால் என்னதேறிற்றென்றால், நிகமாந்த மஹா தேசிகன் ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகளைக் கசடறக்கற்று, அவற்றை ரக்ஷிப்பதற்குப் பாஞ்சராத்ரரக்ஷை அருளி செய்தார் 'என்ன பங்கம் வந்துவிடுமோ' என்று. அவரை ஆசாரியனாகப் பின்பற்றின இவரோவென்னில், ஒரு ஸம்ஹிதையையும் சரியாகக்கல்லாமல், பாஞ்சராத்ர கமாசாரியனை ஆராவமுதனின் பணத்தைக்கொண்டே அவனையும் இல்லை செய்து, அவன்தன் பகவச்சாஸ்த்ரமான ஸ்ரீபாஞ்சராத்ரத்திலும் பல அபவாதங்களை ஏறிட்டுக்கூறி மகிழ்ந்து பூர்வாசாரியனின் பாஞ்சராத்ரரக்ஷைக்கு எதிராக ஸ்ரீபாஞ்சராத்ர தூஷணச் சுவடியை எழுதியுள்ளார். ஸர்வேஶ்வரனும் இவரின் தோஷத்தைப் போக்ககவல்லமையற்றவனாகையாலே, ஆசாரியன்பக்கல் அபசாரப்பட்ட இவரை ஸர்வதந்த்ர ஸ்வதந்திரரான தேசிகன்தான் க்ஷமித்தருளவேணும்.

இங்ஙனம்,

ஸ்ரீவைகுண்டம்,
நெல்லை ஜில்லா.

சரமாவதி ஸ்ரீவைஷ்ணவதாஸன்
பெரியதிருவடி பட்டாசாரியர்.

[ஸுதர்ஶனம் ஆசிரியரின் குறிப்பு:- அஹோவும், அவரது ஆசாரியரும் வருடந்தோறும் எதற்காக ஆகமஸதஸ்ஸுக்களை நடந்தி வந்தனர் என்பது இவ்வஹோ நூலிலிருந்து விளங்குகிறது. இனியாவது ஆகம வித்வான்கள் அந்த ஸதஸ்ஸுகளை பஹிஷ்கரிப்பார்கள் என்று நம்புகிறோம்.]

17. ஸ்ரீ. K. A. பார்த்தசாரதி, குரோம்பேட்டை சென்னை-44.

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம் 310—313 இதழ்கள் மூலமாக "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்ற நூலின் சுருக்கத்தையும் அதன்மேல் பல மகான்களுடைய கண்டனத்தையும் ஸேவிக்க நேர்ந்தது. சிறிய ஞானத்தையுடைய அடியேன் கண்டனம் ஏதும் எழுதக்கூடிய ஆற்றல் இல்லாதவன். ஆனால், "அஹோர" ஸ்ரீ வைஷ்ணவத்திற்கே ஒருவிதமான இழுக்கைத் தேடுகிறார் என்ற அளவுக்கு மனம் கலங்குகிறேன்.

"வேதகாலம்" என்று தொடங்குவதிலிருந்து வேதம் ஏற்படாத ஒரு சூன்யமான காலத்தையும் அவர் அறிந்திருக்கக்கூடும்! அவருடைய ஆராய்ச்சியின் தொடக்கமும் அதுவே போலும்!

ஆகமங்கள் முதல், ஆழ்வார்கள், ஆசார்யர்கள், அவர்களுடைய ஸ்ரீஸூக்திகள், மற்றும் பாமரமக்கள் சிறிதளவேனும் நடைமுறையில் கொண்டிருக்கும் "ஸ்ரீவிஷ்ணுசகஸ்ரநாமம்" வரை எல்லாவற்றையும் அஹோர நூலில் எடுத்துக் கழித்திருப்பதாகத் தெரிகிறது. ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் இவர் ஒப்புக்கொண்ட விஷயம் ஏதாவது உண்டா என்பதைப் பெரியோர்களின் ஆராய்ச்சிக்கு விஷயமாகவிட்டு, மேலும் சிலவரிகளை எழுதுகிறேன்.

யஜ்ஞமூர்த்தியோடு பதினேழு நாட்கள் வாதப்போர் நடத்தி வெற்றிகாணமுடியாத நிலையில் பேரருளாளரை சரணம்புக்கு, பிறகு பதினெட்டாம்நாள் வாதத்திற்கு எழுந்தருளும்போது யஜ்ஞமூர்த்தி தானாகவே சரணம் அடைந்தான் என்பது சரித்திரம். 'தர்க்கிக்கலாகாதோ!' என்று கேட்ட இளையாழ்வாரைப்பார்த்து "தேவரீருக்குப் பெரியபெருமாள் ப்ரத்யக்ஷமான பின்பு தேவரீரென்ன, பெரிய பெருமாள் என்ன பேதமில்லை என்று அறிந்தேன்; இனி அடியேன் தேவரீர் ஸந்நிதியில் வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்ல ப்ராப்தி இல்லை" என்ற நிலை வாதியான யஜ்ஞமூர்த்திக்கு ஏற்பட்டது. குரு பரம்பரை முதலான பூர்வாசார்ய கிரந்தங்கள் யாவும் இந்தக் காலத்தார் உள்ளத்துக்குச் சற்றும் ஏலாது என்று முடிவு கண்ட விதண்டாவாதிக்கு யஜ்ஞமூர்த்தியினுடைய (18-ம் நாள்) நிலை ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம் மூலமாக ஏற்படவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

பிரபந்நஜனகூடஸ்தரான நம்மாழ்வார் மற்றும் திருமங்கையாழ்வார் இருவரும் தங்களுடைய திவ்யப் பிரபந்தங்களின் முடிவில் திருக்குடந்தை எம்பெருமான் விஷயமாகவே தலைக்கட்டினார்கள் என்பது எல்லா ஸ்ரீ வைஷ்ணவர்களும் அறிந்த விஷயம். மேற்படி பிரபந்தங்களை பிரசாரம் செய்வதற்கு தேவஸ்தான அதிகாரிகள் பொருள் செலவு செய்தால் அது ஒரு கைங்கர்யமாக இருக்கும். ஆனால் நடைமுறையில் விபரீதமாகவே ஏற்பட்டிருப்பதின் சூக்ஷமம் விளங்கவில்லை. இதுவரை கலா பேதத்தைமட்டும் வளர்த்துவந்த ''தாதாசாரியர்கள்'' வம்சத்தவர் யாரும் வைஷ்ணவத்தை அடியோடு அழிக்க முயன்றதாகத் தெரியவில்லை. அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ''அஹோ'' வில்லிவலம் ஸ்ரீஉ.வே. நாராயணாசார்யர் ஸ்வாமி 31—10—73 கடிதத்தில் சாதித்தபடி ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் அனுஷ்டானத்திலுள்ள புண்ட்ரதாரணத்தையும் தாம் விலக்கிவிடுவது நலம் என்று தோன்றுகிறது.

பதினாறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ''ஸாத்விக விஜயம்'' விவாதத்திலிருந்து ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனத்தை அடியேன் ஸேவித்து வருகிறேன். ஒவ்வொரு விவாதத்திலும் தன்னுடைய பக்ஷத்தை ஸ்தாபிக்கும் விதம் ஒரு தனிப்பட்ட கவர்ச்சியைக் கொண்டது, வக்கீல் என்ற முறையில் வாதத்தைத் தர்க்கமுறை தவறாமல் நேர்மையோடு நன்றாக நடத்தி வெற்றிகொண்ட பெருமை போல், இந்த சந்தர்ப்பத்திலும் வெற்றிகாணவேணுமென்று பெரிய பெருமாளைப் பிரார்த்தித்துக்கொண்டு பூர்த்தி செய்கிறேன்.

8, ஹஸ்னுபுரம் மெயின்ரோடு,
புருஷோத்தமநகர், சென்னை-44.

ஸ்ரீ வைஷ்ணவ தாஸன்,
பார்த்தசாரதி தாஸன்.

பெரியோர்களின் பொன்மொழிகள்

ஆசாரியர்க ளனைவருமுன்னாசரித்த
ஆசாரந்தன்னை யறியாதார்—பேசுகின்ற
வார்த்தைகளைக்கேட்டு மருளாதே பூருவர்கள்
சீர்த்தநிலைதன்னை நெஞ்சே சேர்.

நாத்திகரும் நற்கலையின் நன்னெறிசேராத்திகரும்
ஆத்திகநாத்திகருமாமிவரை—ஓர்த்துநெஞ்சே
முன்னவரும்பின்னவரும் மூர்க்கரெனவிட்டு நடுச்
சொன்னவரை நாளும் தொடர்.

[உபதேசரத்தினமாலை 67, 68]

18. ஸ்ரீ. K. K. A. வேங்கடாசாரி, B. O. L.
சிரோமணி வித்வான், சாஹித்யரத்ன, திருவல்லிக்கேணி, சென்னை.

வைணவத்தின் தொன்மை

[நவீன ஆராய்ச்சியாளர்களின் நூல்களை நன்கு அறிந்தவரான இக்கட்டுரையாசிரியர் ஆராய்ச்சி முறையிலும் அஹோர நூல் அமையவில்லை என நன்கு நிருபிக்கிறார். அஹோர நூலில் இக்கட்டுரையாசிரியர் பெயரும், இவரது நூல்களும் ஆதாரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்பதும் குறிக்கொள்ளத் தக்கது—ஸுதர்சனம் ஆசிரியர்]

அண்மையில் அக்நிஹோத்திரம் ராமானுஜதாதாசாரியார் எழுதிய "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்ற நூலினைக்காண நேர்ந்தது. இதன்வாயிலாக வைணவக் கொள்கைகளைப்பற்றி ஆராய்வதாக அனைவரும் நினைக்கும்படி எழுதியுள்ளார். வரலாற்று ஆசிரியனது முதல் கடமை விருப்பு, வெறுப்பு எவையும் இல்லாமல் நடுநிலையுடன் ஆராயவேண்டும். தான் ஏற்கனவே கொண்டுள்ள கருத்துக்களையும் (Pre conceived notions) கொள்கைகளையும் அதில் திணிக்கக்கூடாது. அவ்வாறு பார்க்கும்பொழுது இவ்வாசிரியர் இந்த வகையில் சேரவில்லை, மாறாக தற்கால ஆராய்ச்சியாளர்களது கருத்துக்களை தனக்குச் சாதகமாயிருக்கும்பொழுது மட்டிலும் எடுத்துக்கொள்கிறார் என்பது தெரிகின்றது. வேதத்தில் நல்லறிவுபடைத்த இவர் "எல்லாமே வேதகாலத்திற்குப் பிற்பட்டது" என்ற தனது கொள்கையை நடுநிலையில் நில்லாமல் இந்நூலில் திணித்துள்ளார். இதனைத் தகுந்த ஆதாரங்கொண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இக்கால வரலாற்று ஆசிரியர்களின் கருத்துப்படி வேதகாலத்திற்கு முற்பட்டகாலத்தில் மிகவும் உயர்ந்த நாகரிகம் 'ஹரப்பா, மொஹஞ்சதாரோ'வில் இருந்தது என்று ஒப்புக்கொள்கின்றனர். இக்காலத்தில் விக்கிரஹ வழிபாடு மிகச்சிறந்த—உயர்ந்த முறையில் இருந்தது என்பது அனைவரும் அறிந்ததே. சமீபகாலம்வரை முத்திரைகளில் "பசுபதி" முத்திரையைக்காட்டி சிவ வழிபாடு நடந்துவந்தது என்று அனைவரும் கூறிவந்தனர். அண்மையில் "ஹரப்பன்" காலத்தில்

கிடைத்த முத்திரைகளை ''கம்ப்யூட்டர்'' உதவிகொண்டு நம் நாட்டிலும் மேல் நாட்டிலும் அறிஞர்கள் ஆராய ஆரம்பித்தனர், அவர்களில் திரு. ஆஸ்கோபர்போலா என்பவரும் திரு. ஐராவதம் மஹாதேவன் என்பவரும் சிறப்பாகக் குறிப்பிடத்தகுந்தவர்கள். இவர்கள் ஹரப்பன் முத்திரைகளில் காணப்படும் குறிகளையும்—எழுத்துக்களையும், அவை வரும் இடங்களையும் ஆராய்ந்தனர். திரு. ஐராவதம் மஹாதேவன் அவர்கள் இம்முத்திரைகளில் கிடைக்கும் இரண்டு குறிகளை எடுத்துக்காண்பித்து அவை சக்கரமும் சங்கும் என்பதைக் குறிப்பிடுகின்றார். இவையிரண்டும் பற்பல முத்திரைகளில் முதலில் வருகின்றன. உலகில் பல பகுதிகளில் சக்கரம் இருப்பினும் இதுபோல சங்கமும் சக்கரமும் ஒரே நிலையில் வருவது ஹரப்பன் முத்திரைகளுக்குள்ள ஒரு சிறப்பு. மேலும் சில ஆதாரங்களைக்காட்டி—பாஞ்சராத்திரத்தில் முக்கியமாகக் கருதப்படும் வாஸுதேவ கலாசாரமும் ஹரப்பன் காலத்திலிருந்திருக்கலாம் என்று கூறுகிறார். மேலும் இன்று வைணவத்தில் சங்கு சக்கரம் இரண்டுக்கும் உள்ள முக்கியத்வத்தையும் சுட்டிக்காட்டி, திருமால் வழிபாடு ஹரப்பன் காலத்திலிருந்திருக்கலாம் எனக் கூறுகிறார்.

எது எப்படியாயினும் விக்கிரஹ வழிபாட்டுமுறை ஹரப்பன் மொஹஞ்சதரோ காலத்தில் மிகவும் உயர்நிலையிலிருந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. வேதத்தில் விக்கிரஹ வழிபாடு அதன் முறை குறிக்கப்படவில்லை. ஆகவே வேதநெறியினின்றும் வேறாகிய விக்கிரஹ வழிபாட்டின் தோற்றம் வேதகாலத்திற்கு முற்பட்டது ; அது பண்டைய நாகரிகமும் ஆகும். அந்த வழிபாட்டு முறையினைக் கூறும் ஆகமங்களும் அப்பொழுதே தோன்றியிருக்கவேண்டும், ஆகமங்களில் காணப்படும் மொழி பிற்பட்டதாயினும் ஆகமநெறி மிகவும் தொன்மையானது என்றே ஒப்புக்கொள்ளவேண்டும். வேத நெறியினைக்கூறும் சூத்திரங்களும் அவைகளுக்கு விளக்கத்திற்காக வந்த பாஷ்யங்களும் வேதமொழியிலிருந்து வேறுபட்டு பிற்பட்ட ஸம்ஸ்கிருதமாகவிருப்பினும் கொள்கையில் வேதக்கொள்கைகளாகவே ஏற்றுக்கொள்கிறோம். ஆகம மொழி பிற்கால ஸம்ஸ்கிருதமாகவிருப்பினும் ஆகமநெறி மிகவும் பழமையானது. பாரதநாட்டில் வழங்கப்படும் ஆகமவழிபாட்டில் சைவமும் வைணவமும் மிகவும் தொன்மையானவை.

இப்படி மிகவும் தொன்மையான கலாசாரத்தை வைதிக நெறி முற்றிலும் அகற்றமுடியவில்லை. நாளடைவில் விஷ்ணுவிற்கும் சிவபிரானுக்கும் முக்கியத்துவம் கூறும் உபநிஷத் பகுதிகளும் வேத

பாகங்களாகவே கருதப்பட்டன. இவ்வாறு வைதிகநெறியும் ஆகம நெறியும் தனிச்சிறப்புடன் இருந்தவை இணைய ஆரம்பித்தன.

இவ்வாறு இணைந்த நிலையினையும் ஆழ்வார்களது பாக்களில் காண்கிறோம். ஆழ்வார்களில் முதல்வராகிய பொய்கையார் தனது முதல் திருவந்தாதியில்

'நல்லிதழ்த்—தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தால் ஏத்துதிரேல் நன்று''

என்று வேள்வியால் வழிபடும் முறையினைத் தனியாகக்கூறி, ஆகம வழிபாடாகிய தந்திரம் மந்திரம் ஆகியவை இரண்டினையும் தனியாகக் கூறி வழிபடுவோரது உளப்பாங்கினுக்குத்தக வழிபாட்டினைக்குறிப் பிட்டுள்ளார்.

ஆழ்வார்கள் காலத்திற்குப் பின்பு 9—10 (கி. பி.) நூற்றாண்டு களில் சங்கரரது அத்வைத வளர்ச்சிக்குப் பின்னர் ஆகமங்களை வைதிகர்கள் எதிர்க்கும் நிலை உருவாகியது. இது தமிழ் நாட்டில் மட்டிலுமல்லாமல் காஷ்மீர் வரையும் பரவியது. ஆகவேதான் காஷ் மீரில் தோன்றிய ஜயந்த பட்டர் என்பவர் தனது நியாய மஞ்ஜரி யில் ஆகமங்களின் பெருமையையும் அவையும் வேதம்போல ஆதார மானவை என்பதையும் விவரித்துக் கூறியுள்ளார். இவரது மற்றொரு நூலாகிய "ஆகமடம்பரம்" என்ற சிறிய நாடகத்தின் மூலமாகவும் இதனை நாம் அறியலாம். இவரது காலத்திற்குச் சற்றேறக்குறைய சமகாலத்தவராகிய ஆளவந்தாரும் (யாமுனரும்) தனது "ஆகமப் பிராமாண்யத்"தில் ஆகமங்களின் பெருமையையும், அவையும் வேதத் திற்குச்சமமானவை என்பதையும் நிலைநாட்டியுள்ளார். இதிலிருந்து ஆக மத்தை எதிர்க்கும் வைதிக அந்தணர்கள் என்றும் இருந்தனர் என்பது தெளிவு. இதிலிருந்து ஆகமங்களின் பழமையும், தனிச் சிறப்பும், வேதநெறியினின்றும் வேறானது என்பதும் நன்கு விளங்கும். உண்மை இவ்வாறிருக்க, இவ்வாசிரியர் விக்கிரஹ வழிபாடு அறிவிலி களுக்கு (அஞ்ஞானிகளுக்கு) ஏற்பட்டது என்று கூறுவது இவரது ஆராய்ச்சியின்மையையும் அறியாமையையும் விளக்குகின்றது. இது இவரது குறுகிய மனப்பான்மையைக் குறிக்கின்றது.

நானும் எனது நண்பர் டாக்டர் டானியல் ஸ்மித்தும் சேர்ந்து எழுதிய "பாஞ்சராத்திர நூல் விளக்கம்" என்ற நூலில் அறிமுகத் தில் நான் எழுதிய பகுதியிலிருந்து சில வரிகளை இவர் எடுத்துக்

காட்டியுள்ளார் அதில் நான் எழுதும் பொழுது ஆகமங்களில் இராமாநுஜர் சடகோபர் ஆகியவர்களது பெயர் காணப்படின் அவ்வாகமங்கள் பிற்காலத்தவையாக இருக்கலாம் என்று கூறியிருந்தேன். எனது கருத்து எல்லா ஆகமங்களும் பிற்காலத்தவை என்பதல்ல. ஆகமங்கள் முதலில் இருந்த வடிவில் இன்று கிடைப்பதில்லை. இடைச் செருகல்கள் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. அதன் பயனாக இப்பொழுது கிடைக்கும் வடிவில் அவை முன்னர் இருந்திருக்கமுடியாது என்பதே. இதனை உணராமல் ஆகமங்கள் பிற்பட்டவை என்று கூறும் பொழுது இதனை எடுத்துக் காட்டியிருப்பது ஆசிரியரின் நடுநிலையற்ற நிலையினை எடுத்துக் காட்டுகிறது.

ஆக இவ்வாசிரியர் தனது முடிவான கருத்தாகிய ''வைணவம் வேதகாலத்திற்குப்பிற்பட்டது'' என்ற முடிவினை உள்ளத்தே வைத்து அதற்குரிய, வேண்டிய ஆதாரங்களைச் சேகரிக்க முயன்றுள்ளார். ஆராய்ச்சியாளரும் வரலாற்றாசிரியரும் நடுநிலையிலிருக்க வேண்டியவர்கள். அதிலிருந்து தவறிவிட்டார் இவர். இத்தகையவர்கள் தங்களை ஆராய்ச்சியாளர் என்று அழைத்துக் கொள்ள எவ்வித உரிமையுமில்லை. அடுத்து இவ்வாசிரியர் இராமாநுசரே உபநிடதங்களில் கூறப்படும் நிர்குண பிரம்மத்தை சகுணமாக ஆக்கியுள்ளார் என்று கூறுகிறார். இராமாநுசர் காலத்திற்கு முற்பட்டவராகிய யாமுநரும் ஸித்தித்ரயத்தில் உபநிஷதவாக்கியங்களை எடுத்துக்காட்டி ஸகுணபிரம்மத்தை நிலைநாட்டியிருப்பதை இங்கு கவனிக்கவேண்டும். மேலும் ஆளவந்தாரது ஸ்தோத்திரரத்தினத்திலும் பகவானது குணங்களை வேதம் கூறுகின்றது; என்று கூறியிருப்பதையும் இவ்வாசிரியர் பார்க்கவில்லை போலும். இவருக்கும் முன்னிருந்த நம்மாழ்வாருடைய நூல்களிலும் ''உயர்வற உயர்நலம் உடையவன்'' ''ஈர்கின்ற குணங்களையுடையாய்'' என்பனபோன்ற பாடல்களில் பிரம்மம் ஸகுணமே என முழங்கும் பகுதிகள் பல காணக்கிடக்கின்றன. விசிஷ்டாத்வைதக் கருத்து இராமாநுசரால் உருவாக்கப்பட்டது என்ற தவறான எண்ணம் சிலரிடையே இருப்பதுபோல இந்நூலாசிரியரிடத்திலும் இருக்கிறது. வேதங்கண்ட ரிஷிகள் காலம், சங்ககாலம், ஆழ்வார்கள் காலம் முதல் நன்கு பரவிவந்தது விசிஷ்டாத்வைதம்—சரீர சரீரிபாவத்தை முக்கியமாகக் கொண்ட இந்த மதம் மிகவும் பழைமையானது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இராமாநுசர் தனது வாதத்தினால் மறுக்கவந்த எதிரிகளை வென்று வலுப்படுத்தினாரேயன்றி புதிதாக ஒன்றும் ஆக்கவில்லை என்பது நடுநிலையாளர்க்கு நன்கு தெரியும்.

அடுத்து இவ்வாசிரியர் ''உபநிடதங்களில் நிர்குண பிரம்மம் கூறப்படுகிறது. இதனை இராமாநுசர் ஸகுணமான விஷ்ணுவாக ஆக்கித்தந்துள்ளார்'' என்று கூறுவதைப் பார்ப்போம். இராமானுசரது காலத்திற்கு முற்பட்ட வைணவ ஆசாரியர் யாமுநர் தனது ஸித்தித்ரயத்திலும் ஸ்தோத்திரரத்தினத்திலும் விஷ்ணுவின் பரத்வத்தையும் சகல குணங்களுடன் கூடியிருப்பவன் அவனே என்பதையும் மிக நன்றாகக் கூறியுள்ளார். அவரது காலத்திற்கு முற்பட்ட ஆழ்வார்களது பாடல்களிலும், அவர்களுக்கு மூலமான உபனிஷத்துக்களிலும் நிர்குண பிரம்மமாகக் கூறப்படும் நாராயணனே குணங்களுடன் கூடியவனாகவும் கூறப்படுகிறான். ஆகவே இராமாநுசர் உபநிஷதங்களில் கூறப்படும் நிர்குண பிரம்மத்தை சகுணமாக ஆக்கவில்லை. கல்யாண குணங்களையுடைய சகுணப்ரம்மமே தாழ்ந்த குணங்களில்லாமையால், நிர்க்குணம் என்றும் கூறப்படுகிறது என விளக்கினார். சகுணம் நிர்குணம் என்ற இரண்டு கருத்துக்களும் உபனிஷத்துக்களில் இருப்பதை உணர்ந்து சகுணப் பிரம்மந்தான் உண்மையில் வேதத்தில்—உபநிடதங்களில் கூறப்படும் பிரம்மமாகும் என்ற பழைய கருத்தினை வேதவாக்கியங்களைக் கொண்டு நிலைநாட்டுகிறார். இதனை அறியாமல் இராமாநுசர் நிர்குண பிரம்மத்தை ஸகுணமாக ஆக்கிவிட்டார் என்று கூறுவது நடுநிலையிலிருக்கும் அறிஞர்கள் கூறுவதல்ல. இதே ரீதியில், இவரது நூலில் உள்ள பல கருத்துக்கள் நடுநிலைமை தவறியவையாகவும், ஆராய்ச்சியற்றவையாகவும், நடுநிலைநிற்கும் ஆராய்ச்சியாளர்களால் ஏற்கத்தகாதவையாகவும் உள்ளன என்பதை நடுநிலையாளர் காணலாம்.

[ஸுதர்ஶனம் ஆசிரியரின் குறிப்பு:—''அதோ யத்தரு ப்லவதே'' முதலான ருக்வேதமந்திரங்களிலேயே புருஷோத்தம வழிபாடு குறிக்கப்பட்டிருக்கையால், ஹரப்பன் மொஹஞ்சதரோ நாகரிகமும் வேதாகமநாகரிகமே. பொய்கையாழ்வார் பாசுரத்திலும் வேதாகம வழிபாடுகள் ஒன்றே என்றே காட்டுகிறார். வேதத்தைப் பொருளோடு கல்லாமையாலேயே ஆராய்ச்சியாளர்கள் வேதத்தில் விக்ரஹவழிபாடு கூறப்படவில்லை என மயங்கினர். அவ்வாராய்ச்சியாளர் வழியிலும் செல்லாமல் இவர் தன் மனம்போனபடி எழுதுகிறார் என்னுமளவில் இக்கட்டுரை ஏற்கத்தக்கதே.]

19. ந்யாயவேதாந்த வித்வான். திருநாங்கூர்

ப்ர. ப. ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரிய ஸ்வாமி

ஸ்ரீரங்கஜீமந்திர், விருந்தாவனம் U. P,

வரலாற்றில் பிறந்ததா ?

"வரலாற்றில் பிறந்த வைணவம்" என்னும் நூலின் முக்கியக்கொள்கைகளை ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்தின் வாயிலாக அறிந்தோம். உண்மையைத் திரித்துக்கூறுமியல் வுடையதிந்நூல் என்பதை எளிதில் உணர்ந்தோம். "தர்க்காப்ரதிஷ்டா₂நாத₃பி' என்னும் ப்₃ரஹ்மசூத்திரத்தில் குறிப்பிடும் தூஷணத்திற்கு இலக்கானதே இந்நூலும்.

வேதம் போலே, வைதிகமான வைணவமதமும் ஸநாதனமே. வரலாற்றில் வளர்ந்ததை வரலாற்றில் பிறந்ததாகத் திரித்துக்கூறுகிறது இந்நூல். "அக்₃நிரவமோ தே₃வாநாம் விஷ்ணு: பரம;" "ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்₃ரஹ்மா நேஸாநோ நேமே த்₃யாவாப்ருதி₂வீ" "தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:" என்று வேத வேதாந்தங்களில் பரதேவதையாக ஓதப்படுகிற திருநாராயணனைப் போற்றும் வைணவமதத்தில் நாராயண சப்தம் எப்போது எப்படிப்புகுந்தது என்று தெரியவில்லை என்று இந்நூலில் கூறியிருப்பது மருளாலேயாம்.

"வேதங்கள் உணர்த்தும் கர்மங்களுக்கு எதிராக ஜ்ஞான மார்க்கத்தை உபநிடதங்கள் கூறுகின்றன. வேதங்களில் நாநா தேவ வாதம். உபநிடதங்களில் ஏக தேவ வாதம்" என்றும், "உபநிடதங்களில் கூறப்படும் நிர்குணமாய் நிராகாரமான பரம்பொருளுக்கு நாமரூபாதிகளை ஸ்ரீராமாநுஜர் முதலான பிற்பட்ட வைணவாசார்யர்கள் கற்பித்துவிட்டனர்" என்றும் இப்படிக்கண்டவாறு இந்நூல் பிதற்றுவதை வைதிகப்பெரியார் ஒருபொழுதும் மதியார்.

வைணவ சமயாசாரங்களுக்கு வேர்ப்பற்றான பாஞ்சராத்ராகம நூல்களைப் பிற்பட்ட காலத்தில் வரலாற்றில்

பிறந்தனவாகக் கூறுமது, "வேதநூல்கள் வரலாற்றில் பிறந்தன. வேதங்கள் நாளடைவே உண்டானவை. வேத காலத்திற்குப் பிற்காலத்திலேயே உபநிடதங்கள் உருவானவை. இயற்கைகளையே உஷஸ், அக்நி, சூரியன், வருணன், இந்திரன் முதலான தேவர்களாக வேதத்தில் கற்பித்தனர் முதியோர். இயற்கையே தெய்வம்." என்றிப் புடைகளில் கூறும் நவீனவாராய்ச்சியாளர்களின் கூற்றோ டொக்கும்.

வேதவேதாந்தங்களில் சிறப்புடையதாகக் கூறும் சரணாகதியைப் பிற்பட்ட வைணவாசாரியர்களே கற்பித்த னர் என்று கூறுவது வைணவமதப் பெருமையைப் பொறுக்காதவர்களின் மனப்பான்மையையே எடுத்துக் காட்டுகிறது.

சரீர சரீரிபாவம் இராமானுஜருடைய நூல்களிலேயே உருவாகிறது என்று இந்நூலில் வரைந்திருப்பது விப்ரலிப்ஸா (பிறரை ஏமாற்றப்பண்ணும் விருப்பம்) மூலமேயாகும். யாரை வஞ்சிக்க எண்ணமோ? அந்தர்யாமி ப்ராஹ்மணம், ஸுபாலோபநிஷத்து முதலிய வேதாந்த பாகத்தில் ப்ரஸித்தமான சரீர சரீரிபாவத்தை முக்கியமாகக் கொண்டு வைதிகமான விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை இராமானுஜர் நிலைநாட்டினார். "இந்த ஸித்தாந்தத்தில் ப்ரத்வேஷமுடையார் சொல்லும் சொல்லை விசிஷ்டசிஷ்ட வைணவகுலத்தில் பிறந்து வைணவ ஸம்ஸ்காரமுள்ள வறிஞரான ஒருவரா சொல்லுகிறார் என்று வியப்பையடை கின்றனம்.

கியாதி லாப$_4$ பூஜாதி$_3$ மாயாஜாலத்தில் அகப்பட்டுத் திகைக்குமவர்களின் கதியை விளக்கும் கைவிளக்காக விளங்குகிறது இந்நூல்.

மரங்கள் கோடரிக்காம்பைப் பார்த்துச் சொன்ன பழமொழியே இந்நூலைக்கண்டதும் நினைவிற்கு வந்தது.

20. ஸ்ரீ உ. வே. தே. ந. ச. ஸ்ரீநிவாஸவரதாசாரிய ஸ்வாமி,
47. தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி

ப்ரமாண விருத்தச்சுவடி மறுப்பு.

'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்னும் சுவடி தமிழ் நாட்டில் வைணவத்தை எதிர்த்து எழுதப்பட்டுள்ளது. ''வைணவம் ஒரு காலத்தில் தோன்றி இன்றைய நிலைமை அடைந்துள்ளது'' என்கிருர். அது எந்தக்காலம் என்று நிர்ணயிக்கவில்லை.

1. பாரா-103ல் '' ஆலய பூஜைக்கும் வைணவ ஸம்ப்ரதாயத்துக்கும் தனியாக ஒரு இடம் கிடையாது. 400 வருடங்களாக ப்ராம்மணர்களிடையே வைணவம் உருவாகி வளர்ந்து விட்டது. நாட்டு அரசர்களின் அதிகாரம் மறைந்த பிறகு அதிகாரி யார் என்று புரியாமலிருந்த காலத்தில் வைணவம் கோயிலில் புகுந்து விட்டது'' என்று புலம்புகிருர். வைணவ ஸம்ப்ரதாயம் அநாதி. இமயமலையின் சாரலில் நைமிசாரண்யம் என்றொரு வனமுண்டு. இது திரிவிக்ரமன் அடியில் பிறந்த கங்காநதி தன்னுள்ளோடும் சிறப்பு வாய்ந்தது. இதில் ப்ரஹ்ம ஸ்ருஷ்டியிலிருந்தே வேதமோதிய பல ரிஷிகள் கூடி, பிரமனையும் படைத்த பரம்பொருளான நாராயணனைப் பற்றிப் பல புராணங்கள் பாடி வைஷ்ணவ தர்மங்களை வளர்த்தனர் என்று ஸாத்விக புராணங்கள் பல பறைசாற்றுகின்றன. ஆகையால் வைஷ்ணவம் ப்ரஹ்ம ஸ்ருஷ்டியிலிருந்தே இவ்வுலகில் உள்ளது என விளங்குகிறது.

2. '' விஷ்ணுவுக்குப் பத்நியில்லை. பிற்காலத்தவர் லக்ஷ்மி என்ற வடிவம் கொடுத்து பகவானோடு சேர்த்துவிட்டனர் என்பது ஆராய்ச்சியாளர் துணிவு'' என்று 212, 213, 214 பக்கங்களில் குறிக்கிருர். இதற்குச் சிறிதேனும், ஆதாரமில்லை. ஆதிகாலத்தில் பிரமனுக்கு தரிசனம் கொடுத்தபோது ஸ்ரீ மகாலக்ஷ்மியும் கூட இருந்து பிரமனை ஆசீர்வதித்தான் என்று இதிஹாஸ புராணங்கள் கூறியுள்ளன. இருவருமான சேர்த்தியிலேயாயிற்று பிரமன் முதலான எல்லா தேவர்களும் அநுக்ரஹம் பெற்றது. ஆகையால் இவர் கூற்று இதிஹாஸ புராண விருத்தம்.

3. பாரா (83)ல் ''ஆழ்வார்கள் த்வயத்தைப்பற்றிச் சொல்லவேயில்லை'' என்கிருர். திருவாய்மொழி முழுவதும் த்வய விவரணமாகையாலே 'திருவாய்மொழி தீர்க்க சரணுகதி' என்ருயிற்று நம் முதலிகள் நிருபித்திருப்பது. அதற்கு யாதொரு கண்ணழிவும் சொல்லவில்லை இவர். திருவாய்மொழி 6ம் பத்து 10வது தசகத்தில் 10ம் பாசுரத்தில்

''அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்மங்கை யுறைமார்பா!
நிகரில்புகழாய்! உலகம் மூன்றுடையாய்! என்னையாள்வானே
நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே
புகலொன்றில்லாஅடியேன் உன்னடிக்கீழ்அமர்ந்து புகுந்தேனே''

என்று நம்மாழ்வார் அருளியுள்ளார். இது த்வயத்திற்கு நேர் மொழி பெயர்ப்பு. இதில் ஆழ்வார் தம்முடைய ஆகிஞ்சநய பூர்வகமாகப் பெரிய பிராட்டியார் புருஷகாரமாக ஸர்வஸுலபனை திருவேங்கடமுடையான் திருவடிகளிலே விழுந்து சரணம் புகுகிறார். அர்ச்சையிலே திருமார்பில் அலர்மேல்மங்கை ஸேவை ஸாதிக்க அவளை முன்னிட்டு சரணாகதி செய்கிறார். இதிலிருந்து ''புருஷகாரம் என்று புதிதான கருத்தை ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்கள் உருவாக்கினார்கள்'' என்று 86வது பாராவில் சொல்லியதும் மிகவும் தவறு என்று விளங்குகிறது.

4. பாரா 51ல் ''புராணங்களின் அடிப்படைக்கொள்கையோடு விக்ரஹ வழிபாட்டிற்கு நேர் உறவு கிடையாது. ருக்மிணி கல்யாணத்திற்போல் சீதா கல்யாணத்தில் விக்ரஹ வழிபாட்டை நாம் பார்க்கமுடியவில்லை'' என்கிறார். ''ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்'' என்கிற ஸ்ரீராமாயண ஶ்லோகம் ஸ்ரீராமாயண காலத்திலேயே விக்ரஹ வழிபாடு உண்டு என முழங்குவது காண்க.

5. பாரா 98ல் ''ராமானுசர் ப்ரபத்தியை நேருக்கு நேராக உபாயமாகக் குறிப்பிடவில்லை'' என்கிறார். இது மிகத் தவறு. நம்மாழ்வார் திருவாய்மொழியால் சரணாகதி செய்தார், ஸ்ரீராமாநுஜர் கத்யத்தில் சரணாகதி பண்ணினார். பல பூர்வாசார்யர்கள் வ்யாக்யானமிட்ட கத்யத்தை இல்லைசெய்ய இவர்க்கு எவ்வித அதிகாரமுமில்லை.

6. இன்னும் அநேக தவறுகள் இவர் நூலில் இருக்கின்றன. அவையெல்லாவற்றையும் எடுத்துரைத்தால் மஹாபாரதமாம். இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்.

ஸ்ரீவைஷ்ணவதாஸன்,

தே. ந. ச. ஸ்ரீநிவாஸவரதன்.

47, தெளிசிங்கப்பெருமாள் கோயில் தெருவு, திருவல்லிக்கேணி.

21. ஸ்ரீ உ.வே.A.R.தேவராஜய்யங்கார், ஸ்ரீவில்லிபுத்தூர்.

தமிழ்நாட்டின் இரு பெரியார்கள்

தமிழன்னையின் மடியிலே இரண்டு பெரியார்கள் தவழ்ந்து விளையாடுகிறார்கள்.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்ற பொய்யாமொழியை நம் அன்னை பொய்யாக்கு வாளா? துஷ்டப்பிள்ளைகளைத் தூர எறிந்துவிடுவாளா? அவர்களையும் பாலூட்டி, தாலாட்டித் தன் மடியிலே வளர்க்கிறாள். பகுத்தறிவு, அறிவுடைமை, ஆராய்ச்சி என்ற சொற்களின் பேரால் பெற்ற அன்னையையே அவர்கள் இழிவுபடுத்துகிறார்கள்.

ஒரு பெரியார் தமிழன்னையைக 'காட்டுமிராண்டி மொழி' என்று திட்டுகிறார். 'தமிழ்நாட்டு வைணவம்' என்று தமிழ் அன்னையின் மதமாகிய வைணவத்தையும் அன்னையோடு சேர்த்துத் திட்டுகிறார் மற்றொரு பெரியார். ஒரு பெரியார் பெயர் இராமசாமி. மற்றொரு பெரியார் பெயர் இராமானுஜர் (இலக்குமணன்). இவ்விரு சகோதரர்களுடைய பெயரும் வைணவப் பெயர்கள்தான். இருவரும் வைணவ மதத்தினர்தான். இராமசாமி என்ற பெயரை வைத்துக்கொண்டு, இராமபெருமான் உருவச் சிலையை உடைக்கிறார் ஒருவர். இராமானுஜர் (இராமன்தம்பி) என்ற பெயரை வைத்துக்கொண்டு ஸ்ரீராமானுஜர் நிலை நிறுத்திய வைணவ மதத்தை உடைக்கிறார் மற்றவர். வடநாடு தென்னாடு என்று நாட்டையே பாதியாக வெட்டுகிறார் ஒருவர். வடநாட்டு வைணவம், தமிழ் நாட்டு வைணவம் என்று பிரிவினையில் அவரிலும் ஒருபடி மேலே சென்றுவிடுகிறார் மற்றவர். முன்னவர் தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ்நாடு கொண்ட திராவிட

நாடு என்று பிரிக்கிறார். பின்னவர் — வைணவத்தை, தமிழ்நாட்டு வைணவம் என்று தனித்துப்பிரித்து ஒவ்வொரு நாட்டுக்கும் தனித் தனி வைணவம் என்று தமிழர் மதத்தையே பிரித்துத் தள்ளுகிறார். வேதம் பொய் என்கிறார் ஒருவர். வேதம் மெய்தான், ஆனால் அதிலே கூறியிருக்கும் வைணவம்தான் பொய் என்கிறார் மற்றவர். சிவன் விஷ்ணு என்று கடவுள் ஒருவருமே கிடையாது என்கிறார் முன்னவர். பின்னவரோ, விஷ்ணு என்பது ஸூர்யனே. நாராயணன் கிடையாது என்கிறார். இது மட்டுமா? முன்னவரையே ஒரு தாக்குத் தாக்குகிறார். "உருவ வழிபாடு ஈஜிப்டில் தோன்றியதல்லவா? இந்தியாவில் ஏது? இங்கு அருவம்தானே உண்டு. 'அஹம் ப்ரம் மாஸ்மி' என்பதுதானே நம் 'பெரியவாள்' உபதேசம்? இது தெரியாமல் நம் பெரியார் செய்த உருவத்தையோ உருவத்தைச் செய்தோ உடைக்கிறாரே! இதனால் பயனென்ன? அதற்கு அடிப்படையான 'அர்ச்சாவதாரம்' என்ற சொல்லையல்லவா எழுத்தெழுத்தாக உடைத்தெறிய வேண்டும். அர்ச்சையாவது? அவதாரமாவது? நடப்பது நமது ஆட்சி! நமது ஆட்சி நடக்கும்போதே சட்டமியற்றியாவது 'அர்ச்சாவதாரம்' என்ற சொல்லை எடுத்துவிட வேண்டாமா? உருவ வழிபாட்டின் அடிப்படையை உடைத்தெறிந்தால்தானே உருவவழிபாட்டை உடைக்க முடியும்? நம் போன்றோர்க்கு உருவச்சிலை வைத்து, மலர் மாலை அணிவித்து, தூபம்போட்டு சூடம்காட்டி வழிபடுவதைவிட்டு கடவுளுக்குச் செய்யலாமா என்கிறார் தம்பிப் பெரியார். கடவுள் இல்லை! கடவுள் இல்லவே இல்லை!! இதுதான் பகுத்தறிவு வாதம் என்று சொல்லிக்கொண்டு பாமர மக்களை ஏமாற்றி கோடிக்கணக்கில் பணமும், புகழும் சம்பாதிக்கிறார் மூத்த பெரியார். கடவுள் உண்டு, வேதம் மெய், வேதத்திலே சொல்லப்படும் வைணவம்தான் பொய். ஆனால் நான் உண்மையான வைணவன்தான். உங்களுக்கு

சந்தேகமிருந்தால் நேரில் வந்து பாருங்கள், தினமும் நான் அக்நிஹோத்திரம் செய்கிறேன். நெற்றியில் திருமண் காப்பு அணிந்திருக்கிறேன். (விபூதி இல்லை). வேதத்தை நாள்தோறும் அத்யயனம் செய்கிறேன். தினமும் அர்ச்சாவதார எம்பெருமான்களை வணங்குகிறேன். என் சொந்த வாழ்க்கைக்கும் நான் எழுதுவதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. உதாரணம் வேண்டுமா? இதோ பாருங்கள் "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்ற நூலை. நான் முன்னுக்குப் பின் முரணைச் சொல்வதோ, எழுதுவதோ எல்லாம் உலகத்தை ஏமாற்றி நம் பெரியாரைப்போல் புகழும் பணமும் சம்பாதிப்பதற்கேயொழிய வேறில்லை—என்று கூறுகிறார் இளைய பெரியார். இப்படி இவர்களிடையே எத்தனையோ ஒற்றுமை உண்டு. இந்தப் பெரியார்களின் புராணத்தை எழுதிக்கொண்டே போனால் மற்றொரு பெரியபுராணம் உண்டாகிவிடும். ஆகவே— இவ்விரு பெரியாரில் கடவுள் இல்லை, மதம் இல்லை, ஜாதி இல்லை என்று முட்டக்குளித்தவர் மூத்தபெரியார், அவரைப் பற்றி நமக்குக் கவலையில்லை; கடவுள் உண்டு என்று சொல்லிக்கொண்டு நம் குலத்தைக் கெடுக்க வந்திருக்கிறாரே இளையவர், அவரைப்பற்றித்தான் நமக்குக் கவலை. அவர் எழுதிய அபத்தப் பஞ்சாங்கத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். முழுவதையும் ஆராய்வதானால் ஒரு பெரிய நூலே உருவாகிவிடும். விரிவுக்கஞ்சி ஒரு சில பாராக்களை மட்டும் ஆராய்வோம். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறுதானே பதம்'?

"வரலாற்றில் பிறந்த வைணவம்" என்ற பொய்யும் புரட்டும் கொண்ட சுவடி ஒன்றை (ஸ்ரீ. உ. வே. என்று போடுவதா? ப்ரம்மஸ்ரீ என்று போடுவதா? என்று தெரியவில்லை. இரண்டுங்கெட்டான் ஆசாமிக்கு இரண்டுமே போடவேண்டாம்) அக்நிஹோத்திரம் இராமானுஜ தாத்தாச்சாரியார் ஸ்வாமி எழுதிவிட்டு, ஒருபுறம்

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்திடமும், மற்றொருபுறம் ஸ்ரீராமாநுஜனிடமும் மாட்டிக்கொண்டு விழிக்கிறார்.

1. 'வரலாற்றிற் பிறந்த வைணவம்' என்பது நூலின் தலைப்பு. வைணவம் வரலாற்றிலா பிறந்தது? என்று முள்ளது—எப்பொழுதும் உள்ளதல்லவா வைணவம். வைணவர் ஒருவருக்கு இதுகூடத் தெரியவில்லையே!

2. வ. பி. வைணவம் பக்கம் 5:—"முத்தொழில் செய்யும் மும்மூர்த்திகளுள் காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவுக்கு முதலிடம் கொடுத்து" என்று எழுதுகிறார். முத்தொழில்களையும் செய்பவர் விஷ்ணுவேயன்றோ.

"ஆக்கு மாறய னாமுத லாக்கிய வுலகம்
காக்கு மாறுசெங் கண்ணிறை கருணையங் கடலாம்
வீக்கு மாறர னாமவை வீந்தநாண் மீளப்
பூக்கு மாமுத லெவனவன் பொன்னடி போற்றி"

என்று முத்தொழில்களையும் செய்யும் முதல்வன் முகுந்தனே என முழங்கும் வில்லிபுத்தூரார் பாடலையும். ஏன் முதலிடம் கொடுத்தார்கள் என்பதை,

"சிற்கு ணத்தர் தெரிவரு நன்னிலை
எற்கு ணர்த்தரி தெண்ணிய மூன்றனுள்
முற்கு ணத்தவ னேமுத லோனவன்
நற்கு ணக்கட லாடுத னன்றரோ." என்று விளக்கி,

சத்துவம், இராஜசு, தமசு என்ற மூன்று குணங்களில் முதலாவதும் மிகச் சிறந்ததுமான சத்துவகுணமூர்த்தியான விஷ்ணுவே முதலோன்" என்று பசுமரத்தாணிபோல் பதிய வைத்திருக்கும் கம்பர் பாடலையும் இளையபெரியார் பார்த்ததில்லை போலிருக்கிறது. இனியாவது காணட்டும்.

3. "இக்கொள்கைக்கு அடிப்படை வேதமே" என்று கூறிவிட்டு. "வைணவம் வேதகாலத்திற்குப் பிற்பட்டு ஒரு காலத்தில் உண்டாகி" என்று அதே பாராவில்

முன்னுக்குப் பின் முரணைக் கூறுகிருர். இல்லாத ஒன்றை வேதம் கூருது. உண்மையாக இருப்பதையே வேதம் உணர்த்தும். வேதம் உண்டாவதற்கு முன்பே வைணவம் இருந்ததினுல் வைணவத்தைப்பற்றி வேதம் சொல்லுகிறது. உண்மை இவ்வாறிருக்க, வைணவம் வேத காலத்திற்குப் பிற்பட்டு ஒரு காலத்தில் உண்டாகியது என்று கூறுவது 'என் தாய் மலடி' என்பதுபோலே எவ்வளவு அபத்தம்? 'ஹரி: ஓம்' என்று வேதம் தொடங்குகிறது. முடிக்கும் போது 'ஹரி: ஓம்' என்று முடிக்கிறது. உலகில் ஆதி யாவானும். அந்தமாவானும் ஹரியே என்று உணர்த்தவே ஆதியிலும் அந்தத்திலும் 'ஹரி: ஓம்' என்று கூறுகிறது. இதிலிருந்து விஷ்ணுவையே பரம்பொருளாகக் கொள்ளும் வைணவ மதத்தையே வேதம் கோஷிக்கிறது என விளங்குகிறது. இக்கருத்தையே கம்பரும்,

"ஆதி யந்த மரியென யாவையும்
ஓதி ஞரல கில்லன உள்ளன
வேத மென்பன மெய்ந்நெறி நன்மையன்
பாத மல்லது பற்றிலர் பற்றிலார்"

எனக் கூறுகிருரே? இதைக் கண்டாவது இளைய பெரியார் தெளிவாரா?

4. பக்கம் 15:— "தெய்வத்திற்குப் பலபல பெயரிட்டு....ஆராய்ச்சி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது" என்கிருர். விஷ்ணு என்ற சொல்லுக்கு எங்கும் வியாபித்திருப்பவன் என்று பொருள். பல பல பெயரிட்டுப் பல பல முறையில் வழிபாடு செய்யப்படும் தெய்வங்களிடத்திலும் விஷ்ணுவே வியாபித்திருப்பது புரியவில்லையா?

வேதமும் வேதம் விளம்புமெய்ப் பொருளு மப்பொருள்
விதங்களும் பஞ்ச
பூதமும் புலனும் புலன்களின் பயனு மப்பயன்
பொலிவுற நுகரும்

ஞாதமும் உலகம் படைத்தளித் தழித்து ஞானமாய்
அகிலமு நிறைவுற்(று)
ஆதியும் நடுவும் முடிவுமாய் நின்ற வாதியா
னடியிணை பணிவாம்''

என்ற வில்லிபுத்தூரார் வாக்கையாவது பார்க்கக் கூடாதா? ''சர்வம் விஷ்ணுமயம் ஜகத்'' என்று அறுதியிட்ட விஷயத்திற்கு முரணாக இளைய பெரியாரைத் தவிர யார் தொடர்ந்து ஆராய்ச்சி செய்கிறார்களோ தெரியவில்லை. ''கரந்தசி லிடந்தொறும் இடந்திகழ் பொருடொறும் கரந் தெங்கும் பரந்துளன் இவையுண்ட கரனே'' என்ற தமிழ் மறை இவருக்கு அறிவுக் கண்ணைத் திறக்கட்டும்.

அடுத்து; ''விஷ்ணு என்ற சொல்லின ...நாராயணன் என்ற பெயரையே சிறப்பாகக் குறிப்பிடுகிறது.'' என்கிறார்.

''அத₂ புருஷோ ஹ வை நாராயணோ
அகாமயத ப்ரஜாஸ் ஸ்ருஜேயேதி''

என்று ஆரம்பிக்கும் ருக்வேத சிரஸ்ஸையும்;

''அத₂ புருஷோ ஹ வை நாராயண:''

என்று ஆரம்பமாகும் யஜுர்வேத சிரஸ்ஸையும்,

'நாராயணாய வித்₃மஹே வாஸுதே₃வாய தீ₄மஹி
தந்நோ விஷ்ணு: ப்ரசோத₃யாத''

என்ற விஷ்ணு காயத்ரியையும்,

நாராயணபரம் ப்₃ரஹ்ம தத்வம் நாராயண: பர:
நாராயணபரோ ஜ்யோதி: ஆத்மா நாராயண: பர:
யச்ச கிஞ்சித் ஜக₃த்யஸ்மிந் த்₃ருஸ்யதே ஸ்ரூயதேபி வா
அந்தர்ப₃ஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:''

என்ற தைத்திரீய உபநிஷத்தையும். ''ப₄வாந் நாராயணோ தே₃வ:'' முதலான ரிஷி வாக்குகளையும்

"நாராயணவென்று நாமம் பல பரவி" [திருப்பல்லாண்டு]
"எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே"
[திருவாய்மொழி]
"நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணவென்னும் நாமம்" [பெரியதிருமொழி]

என்ற திவ்யப்பிரபந்த பாசுரங்களையும்,

"மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பா லாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராயணா வென்னா நாவென்ன நாவே"

என்ற சிலப்பதிகாரப் பாடலையும்,

"வாரா தொழியான் எனும்வண் மையினால்
ஓரா யிரக்கோடி இடர்க்கு உடைவேன்
தீரா வொருநாள் வலிசே வகனே
நாரா யணனே தனிநா யகனே"

என்ற கம்பர் பாடலையும்,

"நாராயணாயநமவென் றவனடியிற்
சேராரை வெந்துயரம் சேர்ந்தாற்போற்—பாராளும்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி" [நளவெண்பா]

என்ற புகழேந்தியின் பாடலையும் கண்டு அக்நிஹோத்திரம் செய்யும் பெரியார் இனியாவது அறிவாரோ அல்லது புகழேந்தியின் வாக்குப்படி வெந்துயரத்தால் வெந்துவிடுவாரோ? அந்த ஸ்ரீமந் நாராயணனுக்குத்தான் தெரியும்.

5. பக்கம் 5-ல், "முத்தொழில் செய்யும்........... விஷ்ணுவையே பரம்பொருளாகக் கொள்ளும் வைணவ மதமாகும்" என்று கூறிவிட்டு, தமிழ்நாட்டு

வைணவம், வடநாட்டு வைணவம் என்று வைணவத்தை பாகப்பிரிவினை செய்கிருரே? வைணவம் இரண்டு உண்டா? அப்படியானல் தமிழ்நாட்டு விஷ்ணு வடநாட்டு விஷ்ணு என்று ஏற்பட்டு விடுமே? எங்கும் வியாபித்திருக்கும் பரம்பொருள் மொழியில் இல்லை என்று சொல்லமுடியுமா? "நீ சொன்ன சொல்லினும் உளன்" என்ருர் கம்பரும். "புல்லாணித் தென்னன் தமிழை வடமொழியை" என்று இருமொழியையும் இணைத்து அம்மொழிகளின் வடிவாகப் பரம்பொருள் இருக்கிருர் என்று இக்காலத்தில் மொழி வெறி பிடித்தலையும் சிலருக்கு வாய்ப்பூட்டுப் போட்டிருக்கிருரே திருமங்கையாழ்வார். இப்படி எங்கும் நிறைந்த விஷ்ணுவைப் பரம்பொருளாகக் கொண்டதுதானே வைணவம்? ஆகவே விஷ்ணுவும் ஒருவர்தான், வைணவமும் ஒன்றே ஒன்றுதான் என்று இளையபெரியார் உணர்வாராக.

வடமொழியைப்போல் தமிழ்மொழி மிகப் புராதனமானது தானே? ஒருவரால் உண்டாக்கப்பட்டதா தமிழ்? தெய்வீகமானதல்லவா? புனிதமான மொழிபேசும் நாடு என்பதாலேயே ஆழ்வார்கள் தமிழ்நாட்டில் அவதரித்தார்கள்.

முன்னொரு காலத்தில் இருடியர் எல்லோரும் காசியில் கூடினர். வடமொழியை வளர்க்கச் சங்கமொன்று நிறுவினர். அவர்களில் அகத்திய முனிவரும் ஒருவர். அச்சங்கத்தில் அகத்தியருக்கும் மற்றவர்களுக்கும் மொழி விஷயமாகத் தருக்கம் ஏற்பட்டது. அவர்களோடு மாறுகொண்ட அகத்தியர் அவர்களுடைய இறுமாப்பை அடக்கும் பொருட்டு, பரமசிவனிடம் சென்று தன் கருத்தைத் தெரிவித்தார். அப்பொழுது அவர் நின்ற மண்டபம் முழுவதும் திவ்யமான பரிமளம் வீசியது. பரமசிவனை நோக்கி, "ஸ்வாமீ! இவ்வாசனை ஏது?" என்று

கேட்டார். பரமசிவனும் அம்முனிவனை அம்மண்டபத்தின் ஒரு மூலைக்கு அழைத்துக்கொண்டு போனார். அங்கு குவியலாகப் போட்டிருந்த ஏட்டுச் சுவடிகளைக் காட்டினார். அகத்தியர் அவற்றைக் கண்ட மாத்திரத்திலே மதுரமென்று பொருளுள்ள தமிழ் என்ற பெயரைப் பலமுறை சொன்னார். (அநாதிகாலமாக அந்தச் சுவடிகள் அங்கே கிடந்திருக்கின்றன.) பரமசிவன் 'அம்மொழிக்கு அடிப்படைவிதிகள் இவ்வேடுகளில் உள்ளன' என்று அவற்றை எடுத்துக் கொடுத்து அகத்தியருக்கு உபதேசித்தார். உடனே அம்முனிவன் தென்திசைக்குவந்து பொதியமலையில் தங்கி, அவ்விதிகளைக்கொண்டு 'பேரகத்தியம் சிற்றகத்தியம்' என்னும் இலக்கண நூல்களைச் செய்தார். அவற்றைத் தன் மாணுக்கராகிய தொல்காப்பியர் முதலிய பன்னிருவர்களுக்கும் கற்பித்துத் தமிழ் மொழியைத் தழைத்தோங்கச் செய்தார். இவ்வாறு அநாதிகாலமாக மறைந்து கிடந்த—தெய்வமணம் கமழும் தமிழ்மொழியைப் பரமசிவனிடம் அகத்தியர் கற்று வந்து விரித்தருளினார். ஆகவே வடமொழியைப் போன்று தமிழ்மொழியும் அநாதியானது என்பது பெறப்பட்டது. பேரகத்தியம் சிற்றகத்தியம் என்ற நூல்களை முதனூலாகக் கொண்டு தொல்காப்பியர் 'தொல்காப்பியம் என்ற இலக்கண நூலை இயற்றினார். இவ்வளவு பழைமையான தொல்காப்பியத்திலேயும், அதற்குப்பின் வந்த சங்க நூல்களிலேயும் வைணவக் கருத்துக்களே இருப்பதில் ஆச்சரியமென்ன?. அவற்றில் உள்ள வைணவக் கருத்துக்களை அத்வைத மோகம் தலைக்கேறிய அக்நிஹோத்திரிக்காக அடியில் குறிப்பிடுவோம்.

"நூலே கரகம் முக்கோல் மணையே ஆயுங்காலை
அந்தணர்க்குரிய"

[நூல் — யஜ்ஞோபவீதம். முக்கோல் — த்ரிதண்டம்.] என்று வைணவ சின்னங்களையே துறவிகளுக்குரியதாகக் கொள்கிறார் தொல்காப்பியர்.

"எறித்தரு கதிர்தாங்கி யேந்திய குடைநீழ
லுறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்"

என்று இதே கருத்தைப் பின் வந்த கலித்தொகையும் கூறுகிறது. இவ்விலக்கணத்தைப் பின்பற்றிய கம்பரும் இராவண சந்நியாசியைக் கூறுமிடத்து,

'முப்புரிவரித் தண்டொடு மூன்று முப்பகை
தப்பயரி தவத்தவர் வடிவுந் தாங்கினன்" என்றும்,

"தாமரைக் கண்ணனேடேர் தவத்தின் மாலையான்
....
நாமநூன் மார்பினன்'

(ருத்திராக்ஷமாலையல்ல, தாமரை மணிமாலை) என்றும் கூறுகிறார்.

"த்ரிதண்ட$_3$ முபவீதஞ்ச ஶிக்யங் காஷாய மம்ப$_3$ரம்
கமண்ட$_3$லுர் பை$_4$க்ஷ்யசர்யா யதீநாந்து விதீ$_4$யதே"

என்ற பராசரர் வாக்கோடு இவைகளை ஒப்புநோக்குக.

'வீடு' என்பது ஒரு தனி உலகம் (வைகுண்ட உலகம், பரமபதம்) என வைணவ சமயம் கூறுகின்றது. இதுவும் தமிழ் நாட்டின் பழங்கொள்கையே ஆகும்;

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"

என்ற திருக்குறளில் வீட்டை (மோக்ஷம்) நிலம் என்றார். அதனால் வீடு ஒருலகு என்பது வள்ளுவர் கருத்து என்பது தெளிவு. இக்கருத்தை மேலும்

"உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து"

"யான்எனதென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் பெறும்"

"தாம் வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு"

என்ற பாடல்களிலும் மற்றும் எத்தனையோ பாடல்களிலும் வெளியிட்டுள்ளார்.

"நாறிணர்த் துழாயோன் நல்கி னல்லதை
ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்"

என்று திருக்குறளுக்கும் முற்பட்ட பரிபாடலும் கூறுகிறது. விரிவிற்கஞ்சி விடுத்தனம். ஆகவே; தமிழ்மொழி என்று தோன்றியதோ அன்று முதல் வைணவக் கருத்தையே தன்னுட்கொண்டது என்னுமிது இளைய பெரியாரின் குருட்டுக் கண்களுக்கு எப்படித் தெரியப் போகிறது?.

6. பக்கம் 24:— "உபநிடதங்கள் .... அமைதியுறுகிறார்கள்" "நிர்க்குணப் பிரம்மமாகக் கூறும் கடவுளை" என்று கூறுகிற இவர். பக்கம் 202 இல் "அளவற்ற உயர்ந்த குணங்கள் உள்ள விஷ்ணுவுக்கு" என்று குணங்களை ஒப்புக் கொள்கிறாரே?. இதில் எது உண்மை?. "புராணங்களும் இதிகாசங்களும் அவதார புருஷனைக் காட்ட" புராணங்களும் இதிகாசங்களும் மட்டுமா காட்டுகிறது? ருக்வேதம் முதலிய பல வேதவாக்யங்களும், உபநிஷத்துக்களும் "பிதரம் மாதரம்........லோக விக்ராந்த சரணௌ ஶரணம் தேவ்ரஜம் விபோ' முதலிய ஆகம வசனங்களும் அவனது உலகளந்த விருத்தாந்தத்தைக் கூறுகின்றனவே?. இதுமட்டுமா?. உலகளந்த அவதாரத்தை—

1. "கீழ்ஏழ் உலகமும் உற்ற அடியினை" [பரிபாடல்]
2. "கோள்வாய் மதியம் நெடியோன் விடுத்தாங்கு" [சிந்தாமணி]
3. "ஞாலம் மூன்றடித் தாய முதல்வற்கு" [கலித்தொகை]
4. மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்" [அகம்]

5. 'ஏமம் ஆகிய நீர்கெழு விழவின் நெடியோன்
அன்ன நல் இசை'' [பதிற்றுப்பத்து]

6. ''இருநிலங் கடந்த திருமறு மார்பின்''
[பெரும் பாணாற்றுப்படை]

7. ''மடியிலா மன்னவன் எய்தும்; அடியளந்தான்
தாஅயது எல்லாம் ஒருங்கு'' [திருக்குறள்]

8. 'வாணன் பேரூர் மருகிடை நடந்து
நீணில மளந்தோன் ஆடிய குடமும்'' [சிலப்பதிகாரம்]

9. ''நெடியோன் குறளுருவாகி நிமிர்ந்து தன்
அடியிற் படியை அடக்கிய அந்நாள்'' [மணிமேகலை]

10. ''மாலும் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞாலம் முழுதும் நயந்தளந்தான்'' [பரணர்]

11. ''கானின்ற தொங்கலாய்! காசிபனூர் தந்தது முன்
கூறின் றளந்த குறளென்ப'' [பொன்முடியார்]

12. 'உலகெலா முள்ளடி யடக்கி........'' [கம்பராமாயணம்]

13. ''மிக்குகான் உலகளந்த மெய்யடியே சார்பாக''
[புகழேந்தி]

என்று தமிழ் நூல்களும், இன்னும் ஆழ்வார்கள் அருளிச் செயல்களும் முழங்குகின்றனவே. இது போதாதா அக்நி ஹோத்திரியின் ஆணவத்தை அடக்க?.

7. பக்கம் 260:— ''வைணவத்தைப் போல் சைவம் வளரவே இல்லை'' என வருந்துகிறார் வைணவராகப் பிறந்த இளையபெரியார். இவர் வைணவத்தைவிட்டு சைவராகி நெற்றியில் சாம்பலைப் பூசிக்கொண்டு போய் விடலாமே? இவரை யார் வைணவத்தில் இருக்கச் சொன்னது?.

8. பக்கம் 313:— ''வைணவ தீக்ஷயில்........என்பது தெரிகிறது.'' என்று எழுதுகிறார்.

ஸ்நாத்வா ஶுபே₄ஹ்நி பூர்வாஹ்ணே ஸம்யக₃ப்₄யர்ச்ய கேஶவம் ।
ஸ்நாதம் சிஷ்யம் ஸமாஹூய க்ருத கௌதுக மங்க₃ளம் ॥
ஆசார்யோ விதி₄வத் குர்யாத் சக்ரபுண்ட்₃ராதி₃ ஸத்க்ரியாம் ।
[பராசர விஶிஷ்ட பரம தர்ம சாஸ்த்ரம்]

என்ற பராசரர் வாக்கை வைணவப் போர்வை போர்த்திய இளைய பெரியார் கண்டு தெளியட்டும். புளுகும் புரட்டும் நிறைந்த பொய் வரலாறு எழுதுவதில் சிறந்தவராகிய இளைய பெரியார் நாம் எவ்வளவு எழுதினாலும் உணரப் போகிறாரா? "கோழிக்கிரை போட்டாலும் அது குப்பையைக் கிண்டுதலை விடாது. அதுபோல் கீழான புத்தியுள்ளவருக்கு மேன்மை பொருந்திய தரும நூலைச் சொன்னாலும் தன் மனம் போன வழியே போவார்" என்னும் நாலடியார் செய்யுளைக் காட்டி இக்கட்டுரையை முடிக்கிறேன்.

"கப்பிகடவதாக் காலைத் தன்வாய்ப் பெயினுங்
குப்பை கிளைப்போவாக் கோழிபோல்—மிக்க
கனம் பொதிந்த நூல்விரித்துக் காட்டினும் கீழ்தன்
மனம் புரிந்த வாறே மிகும்"

[ஸுதர்சனம் ஆசிரியரின் குறிப்பு:— இக்கட்டுரை அச்சிடப் படுகையில் மூத்த பெரியார் காலமான செய்தி வந்தது. 'இளையவர் பிரபலமாகத் தொடங்கிய பின் ஈரரசு வேண்டாம்; இனி நமக்கு இங்கு வேலையில்லை' என்று எண்ணி வழிவிட்டுச் சென்றார் போலும்! காலமாம்போது ஸுத₃ர் ஶநாங்கிதராய்ச் செல்லும் பெருமையை இளையவர் மூத்தவருக்கு அளித்தமையால், அவருக்கும் எம்பெருமான் ஜந்மாந்தரத்தில் நற்கதி அளிப்பான் என்று நம்புகிறோம். இவர் இப்பிறப்பிலேயே திருந்த வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.]

22. ஸ்ரீ. நாமகிரி ராகவன், 3 சக்ரபாணி கீழ ஸந்நிதி, கும்பகோணம்.

ஆக்க சக்திகள் வளர்க.

"சுதர்சனம்" பிரமாதீச வருட புரட்டாசி ஐப்பசி இதழ் பார்த்தேன். "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்னும் நூலைப்பற்றிய குறிப்புகள் கண்டேன். சிறப்பான சாஸ்த்ர ஞானம் இல்லாத என் போன்றவர்களும் இந்த நூலில் எழுதியிருப்பவை 'அசம்பாவிதம்' என்று எளிதில் அறிகிருர்கள். இதற்கு எந்தக் கண்டனமும் தேவையில்லை. பெருமை பெற்ற நம் முன்னேர்கள் 'வேத உபநிஷத்' சாரங்களை ஒன்ருகப் பிழிந்து அதில் கிடைத்துள்ள சாரதமமான உயர்ந்த விஷயங்களை நாம் உஜ்ஜீவிக்க ஸ்ரீவைஷ்ணவ தர்சனமாக நமக்கு அருளியிருக்கிருர்கள். பரம்பரையாக வந்த முன்னேர்களின் மதத்தைப் பின்வருபவர்கள் காத்துப் போற்றுவதல்லாது பழிப்பது என்பது பாரதத்தின் பண்பு அன்று. பிற மதங்கள் நம்மை அசைக்க வொண்ணுது என்று அயல் மதங்களையும் தன்போக்கில் விட்ட பண்பு நம்மைச் சாரும். ஆனுல் கலியின் கூத்திற்கு இசைந்தவாறு சிறந்த அறிவாளி, மதவாதி, பக்திமான் என்று போற்றப்படும் ஒருவர் "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்னும் நூலை எழுதியிருக்கிருர். ஸ்ரீ வைஷ்ணவ சதாசார பரம்பரையின் வழிவந்த இவர், தன் ஸ்வதர்மத்தைப் பழிப்பது போலும் நூல் எழுதியது—தான் வசிக்கும் வீட்டைத் தானே இடிப்பது போலாகும்.

1. பாரா 35. "வேதமந்திரங்கள் பல பெயருள்ள தெய்வங்களை......விஷ்ணுவைத்தான் முழுமுதற்கடவுள் என்று கூற இடமில்லை" என்கிருர்.

வேதங்களை பிரம்மாவுக்கு உபதேசித்தவனே விஷ்ணு என்பது வேதவாக்கு. வேதங்களில் பல தெய்வங்கள் வருகின்றன. இவைகளின் தாத்பர்யம்—"திசையும் திசையுறு தெய்வமும் தெய்வத் திசையும் கருமங்களெல்லாம்—அசைவில் சீர்க் கண்ணன் நெடுமால் கடல் கடைந்த காரோத வண்ணன் படைத்த மயக்கு" என்ற முதலாம் திருவந்தாதிப் பாசுரத்தின் வ்யாக்யானத்தைப் பார்த்தால் விளங்கும். மேலும், மற்ற தெய்வங்களில் முக்கியமானவரான முதல் மூவரில் ஸ்ரீமந் நாராயணனே மூலப் பொருள் என்பதை

'முதலாவார் மூவர் அம்மூவருள்ளும்
முதலாவான் மூரிநீர் வண்ணன்—முதலாய
நல்லானருளல்லால் நாமநீர் வையகத்துப்
பல்லாரருளும் பழுது.' என்ற பாசுரமும் விளக்குகிறது.

2. விக்கிரக வழிபாடு பற்றிய 22வது பாராவில்,

''ஈஜிப்ட் முதலிய நாடுகளில் அறிவு வளர வளர உருவ வழி பாட்டை விட்டு விட்டனர். ஆனால் நம் நாட்டில் அறிவு வளர வளர விக்ரக வழிபாடு வளர்ந்து கொண்டிருக்கிறது.'' என்று கூறிய வர் இந்த இரண்டு அறிவுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்று கூறவில்லை. ஒருவேளை,

'' கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் ''

என்ற குறள் பாவில் எந்த அறிவு உயர்வு என்று வள்ளுவர் கூறி யதைப் பார்க்கவில்லை போலும். வாலறிவன் நற்றாள் தொழார் என்ற சொற்களில் சகுணபிரம்மத்தைக் கூறி அதிலும் திருவடிகளை உயர்வாகக் காட்டியிருப்பதும், அறிவுபெற்றதன் பயன் தெய்வத் தைத் தொழுவதே! என்ற கருத்தும், உருவ வழிபாடு, அறிவின்பயன், இரண்டையும் ஒரே இடத்தில் கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது. மேலும் திருவடிகளைத் தொழுவது எதற்காக என்ற கேள்வி எழுந்தால்,

'' பற்றுக பற்று அற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''என்ற மற்றொரு குறள் அதை விளக்குகிறது.

மேலை நாடுகளில் நாகரிகம் விஞ்ஞானம் இவைகள் மிகவும் வளர்ச்சியுற்றதாகக் கருதப்படும் இந்த நாளில் மக்கள் மன நிறைவோ அமைதியோ இல்லாமல் வாழ்கிறார்கள் என்பது நாம் கண்டுள்ள உண்மை. அடிப்படையான சதாசாரம் மத நம்பிக்கை இவைகள் இல்லாமையாலே உள்ள விளைவு இது என்று நாம் கூற வேண்டிய தில்லை. ஆகையால் இந்த நிலையில் உள்ள அந்த மக்களின் அறிவைப் புகழத் தேவையில்லை. சதாசாரம் மதக் கோட்பாடுகளுக்கு உட்பட்ட நம் அறிவு உருவ வழிபாட்டின் மூலம் மன அமைதியையும் பிறவிப் பயனையும் எய்த வழிகாட்டுகிறது—என்பதைச் சரித்திரம் கூறுகிறது.

3. பாரா 17ல் '' இராமாநுஜர் காலம்வரை ஆகமக்கொள்கைக ளும் ஆழ்வாராதிகள் பாசுரங்களும் தமிழ்நாட்டு வைணவத்தில் கலக்க வில்லை'' என்கிறார். வைணவத்தில் தமிழ்நாட்டு வைணவம் வட நாட்டு வைணவம் என்று இரண்டு இருப்பதாகக் கருதுகிறார்போலும். இன்று நாம் பேசும் தமிழ்மொழி தேவபாஷையான ஸம்ஸ்கிருதத் திற்கு நிகரான தொன்மொழி. ஆழ்வார்கள் உவந்து தித்திக்கும் தேன்மொழியில் பகவானை ஏத்தித் துதித்தமொழி. நான்கு வர்ணத் தாரும் வேத சாஸ்த்ர ஆகமங்களைத் தெளிந்து தெரியத் தமிழ்மொழியை ஆழ்வார்களும், அவர்களை அடியொற்றிய நாதமுனிகள், ஸ்ரீராமாநுஜர் முதலிய பூர்வாசாரியர்களும் கையாண்டனர். ஆகையால்

தமிழ்நாட்டு வைணவம் எனப் பிரிப்பது தவறு. ஆழ்வார்களில் காலத்தால் முற்பட்ட முதலாழ்வார் ஆகமக் கொள்கைகளின்படி விக்ரஹ வழிபாடுகளோ வேறுவித வழிபாடுகளோ பாமரர்கூடச் செய்து கொண்டிருந்தார்கள் என்று—

அவரவர் தாம் தாம் அறிந்தவாறேத்தி
இவரிவரெம்பெருமானென்று—சுவர்மிசைச்
சார்த்தியும் வைத்தும் தொழுவர் உலகளந்த
மூர்த்தியுருவே முதல்.

என்ற முதற்றிருவந்தாதிப் பாசுரத்தால் காட்டுகிறார்.

4. ஸமஸ்த கல்யாணகுண பூர்ணனை ஸ்ரீ விஷ்ணுவுக்குக் கோபம் என்ற மாசு கலந்திருக்கிறது என்று ஓரிடத்தில் கூறுகிறார். இந்த இடத்தில் முதல் திருவந்தாதியிலுள்ள

பாரளவும் ஓரடிவைத்து ஓரடியும் பாருடுத்த
நீரளவும் செல்ல நிமிர்ந்ததே—சூருருவின்
பேயளவு கண்ட பெருமான்! அறிகிலேன்
நீயளவு கண்ட நெறி.—என்ற பாசுரம் அநுஸந்திக்கத்தக்கது.

அவன் செய்யும் எந்த நிக்ரஹமும் அனுக்ரஹமாகிறது என்பதைச் சேதனன் என்றுமே அறியவொண்ணான். "அறிகிலேன் நீயளவு கண்ட நெறி" என்றபடி மகான்களும் அவன் கோபத்திலே கருணை பிறக்கிறது என்று கொண்டாடியிருக்கிறார்கள். இந்தக் கோபத்தை மாசாகக் கொள்வது நமது குறைபாடு தானே.

5. "வைணவம் வேத காலத்திற்குப் பிற்பட்டு...தன் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது" என்கிறார். வேதத்தை பகவானே என்று பிரம்மாவிற்கு உபதேசித்தானே அன்றுமுதல் அதாவது ஸ்ருஷ்டி ஆரம்பத்திலிருந்து வைணவம் பிறந்திருக்கிறது. வேதத்தை உபதேசித்தவன் விஷ்ணு, அவனைத் துதித்தவன் பிரம்மா. விஷ்ணுவைத் தவிர வேறு தெய்வமில்லை என்ற கொள்கை வைணவம். இந்த நிலை தெள்ளத் தெளிவாக இருக்க, பல படியாக பல துறைகளில் வளர்ச்சியடைந்தது என்று கூறியவர் இந்த வார்த்தைகளுக்குத் தகுந்த விளக்கம் தரவில்லை.

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாதயாமுன மத்யமாம் ।
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥

என்ற தனியனும் பரமாத்மாவான நாராயணன் தொடக்கமாக பாமர மக்களாகிற நம்மளவும் ஆசார்யபரம்பரை நீடிப்பதாகக் கூறுகிறது. இதில் முற்றுப்புள்ளி ஏது?

''வைணவம் தன் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது'' என்பது எப்படி ஆசிரியருக்குத் தோன்றியதோ? நம்மாழ்வார் முதற் கொண்டு இன்றுவரை உள்ள ஆசார்ய பரம்பரை ப்ரத்யக்ஷ ப்ரமாண மாக வளர்ச்சியைத்தானே காண்பிக்கிறது. இன்றும் கூட அத்வைதி களான ஸ்மார்த்தர்களும், த்வைதிகளும் தங்கள் தங்கள் ஆசார்ய பரம்பரையை வளர்த்துக் கொண்டுதானே வருகிறார்கள். அவர்கள் மதத்திற்கு முற்றுப்புள்ளி உண்டா இல்லையா? ஆதிசங்கரரும் தமது நூல்களில் வைணவராகவே காட்சியளிக்கிறார். மாத்வர்களும் வைண வர்களே. இந்த உண்மைகளைச் சரித்திரமே காண்பிக்கும் போது ''வரலாற்றில் பிறந்த வைணவம்'' எந்த விதத்திலும் அறிவுடையோர் மனத்தைத் தளர விடாது; ஆஸ்திகர்களைச் சிறிது க்லேசத்திற்கு உள்ளாக்குமே தவிர வேறு பயன் காணாது.

இந்த நூலை எழுதிய பெரியார் இந்நூலில் உள்ளவை தமது கருத்து அல்ல என்றும் பல்வேறு ஆராய்ச்சியாளரின் தொகுப்புரை என்றும் கூறுவதாகத் தெரிகிறது. அவர் சொல்வதை ஒப்புக்கொண் டாலும் நம்முடைய மதத்தைக் குறை கூறும் விதத்தில் அமைந்தவை களைத் தொகுத்துப் புத்தமாக வெளியிடுவது ஒரு வைஷ்ணவர் செய்யக் கூடியது அல்ல. நமது தர்மத்துக்கு விரோதமாக உள்ளவைகளை ஒதுக்க வேண்டும். அல்லது கண்டனம் செய்ய வேண்டும். ஆலயப் பணத்தைச் செலவிட்டு அதை அச்சுப்போடலாமா? இவர் என்ன செய்தாலும், ப்ரபன்ன ஜன கூடஸ்தரான நம்மாழ்வார் ''இடங்கொள் சமயத்தையெல்லாம் எடுத்துக் களைவன போலே, தடங்கடல் பள்ளிப் பெருமான் தன்னுடைப் பூதங்களேயாய், கிடந்தும் இருந்தும் எழுந்தும் கீதம் பல பல பாடி, நடந்தும் பறந்தும் குனித்தும் நாடகம் செய் கின்றனவே'' என்று அருளியபடி என்றுமே பாகவதோத்தமர்கள் நம்மைக் கட்டிக் காத்துவருவார்கள்.

நம் பிற்கால சந்ததிகள் இன்றைய சமுதாய சூழ்நிலையில் சதா சாரத்தைக் கொள்ள வேண்டிய முக்கியமான பணியை மேற்கொள்ள வேண்டியிருக்க, அவர்களைத் திசை மாறித் தடுமாறச் செய்யும் இந்த வகை நூலை நம்மில் ஒருவரே எழுதியிருப்பது நமது துரதிர்ஷ்டமே. இந்த நூலின் விளைவாக, நமது ஒற்றுமையும், ஆக்க சக்திகளும் பூர்வாசாரியர்கள் அனுக்ரஹத்தாலும் பகவதனுக்ரஹத்தாலும் இரட்டிப்பாக வேண்டும் என்பதே எனது அபிலாஷை.

இங்ஙனம்,

நாமகிரி ராகவன்.

3, சக்ரபாணி கீழ ஸன்னதி, கும்பகோணம்.

23. திருக்குறுங்குடிமடம் ஆஸ்தான வித்வான்

ஸ்ரீ உ. வே. பெரியநம்பி வேங்கடாசார்ய ஸ்வாமி,

திருக்குறுங்குடி.

பொய்யுரைக்கு முற்றுப்புள்ளி

[திருக்குறுங்குடி ஸ்ரீ வைஷ்ணவர்களின் அபிப்ராயத்தை அடியொற்றி அவர்களின் நியமனத்தின்பேரில் எழுதப்பட்டது.]

" கலையறக்கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோ தான் " என்று தொண்டரடிப்பொடியாழ்வாரால் திருமாலையில் அருளிச்செய்யப்பட்ட பாசுரப்படி போலி வைணவரான பிரம்மஸ்ரீயின் பொய்யுரையை நிலத்தேவர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஒரு பொருட்டாக எண்ணவேமாட்டார்கள்.

அதிலும் காஞ்சீ மஹாவித்வான் ஸ்வாமி ஸ்ரீ ராமாநுஜன் பத்திரிகையிலும், ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம் ப்ரமாதீச கார்த்திகை மார்கழி பத்திரிகையில் அநேக வித்வான்களும் எழுதியிருக்கும் கண்டனங்களைப் பார்த்தாலே போலி வைணவரின்பொய்யுரை மாய்ந்தே போய்விட்டது என்பதுடன், இராவணனுக்கும், அங்கதனுக்கும் நடந்ததாகச் சொல்லப்பட்ட ஸம்வாதம்தான் ஞாபகத்துக்கு வருகிறது. " கஸ்த்வம் வாநர ராமராஜபவநே ...... வநம்ருக₃: குத்ரேதி ந ஜ்ஞாயதே " என்ற ச்லோகம் காண்க.

நம் த₃ர்ஶந ஸ்த₂ாபகரான ஸ்ரீ ஸ்வாமி எம்பெருமானாரால் சாதித்து வரப்பட்ட காலக்ஷேபத்துக்குத் தவறாமலும் சமயம் தப்பாமலும் எழுந்தருளிக்கொண்டிருந்த கூரத்தாழ்வான் ஒருநாள் தாமதமாக எழுந்தருளினதைக் கண்டு ஸ்வாமி 'ஏன் தாமதம்' என்று கேட்டதில், " வீதியில் ஏதோ பிரஸங்கம் செய்துகொண்டிருந்ததைக் கேட்டதால் தாமதம் " என்று ஆழ்வான் பதில் சொன்னதாகவும், அதற்கு ஸ்வாமி " கலையறக்கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோ தான் " என்று சொல்லி க்ஷுத்₃ரவிஷயத்தைக் கேட்டு வந்ததால் காவிரியில் தீர்த்தமாடிவிட்டு வரச்சொன்னதாகவும் ஓர் ஐதிஹ்யம் உண்டு.

அதுபோலே போலி வைணவரின் பொய்யுரையைப் பார்த்தாலும் கேட்டாலும் தீர்த்தமாடி, அல்லது தீர்த்தன் உலகளந்த சேவடியை நினைத்து, அசுத்தியைப் போக்கிக்கொள்ளவேண்டுமத்தனை.

வேதம், இதிஹாஸம், புராணங்கள், அருளிச்செயல், ஆசாரியர்களின் ஸ்ரீஸூக்திகள், எம்பெருமான் அர்ச்சாவதார திருமேனியோடு கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கிற ஸன்னிதிகள் (திவ்யதேசங்கள்) ஆகிய இத்தனையும் இருக்கும்போது, விசிஷ்டாத்வைதமான ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தை யாராலும் எக்காலத்திலும் அழித்து விட முடியாது என்பது திண்ணம்.

அதிலும் அநாதியாக உள்ள ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தை இந்தப் போலி வைணவரின் பொய்யுரையான புழுவாலேயா அழிக்க முடியும்?

அரசியலில் பங்குகொண்டு, தங்களைப் பெருந்தலைவர்களாக எண்ணிக்கொண்டுள்ள நாஸ்திகர்கள் நம் மதத்தையும், மதக்கோட்பாடுகளையும் அழிக்க எவ்வளவோ பாடுபட்டு, பிரசாரம் செய்து, இந்தப் பொய்யுரை போலுள்ள சுவடிகள் எழுதிப் பிரசுரம் செய்திருந்த போதிலும், வைணவ மதக்கோட்பாடுகள் அழியாமல் உறுதியடைந்து, நாளுக்கு நாள் வைணவர்கள் அதிகமாய் வளர்ந்து கொண்டே வருகிறார்கள் என்பது கண்கூடு.

ஆழ்வார்களின் அருளிச்செயலான திராவிடவேதம் ஒன்று அநாதி காலமாய் இருக்கிறது என்று உலகுக்குக் காட்டிக்கொடுத்த திருக்குடந்தை ஸன்னிதியின் பொருட்செலவில் இந்தப் போலிவைணவரின் பொய்யுரையை அச்சடித்துப் பிரசுரம் செய்திருப்பது — அந்த ஸன்னிதியின் நிர்வாகத்திலும் கிருமிகண்ட சோழன்கள் தோன்றியிருப்பதாகவே எண்ண இடமளிக்கிறது.

இவ்விதம் அபத்தக் களஞ்சியமான சுவடியை ஸ்ரீவைஷ்ணவர்களோ அதன் அபிமானிகளோ ஒரு பொருட்டாக எண்ணி மயங்காமல் "எப்பொழுதும் நீயவர்பால் சென்றணுகக் கூசித்திரி" என்ற மாமுனிகளின் திருவாக்குப்படி நிற்பார்களாக.

இங்ஙனம்,

திருக்குறுங்குடி
1—12—73

பெரியநம்பி வெங்கடாசார்யர்,
பெரியநம்பி திருமாளிகை.

24. ஸ்ரீ. ஆ. சிந்தனைக்கினியான். மாறன்பட்டி.

வரலாற்றில் மாய்ந்தொழிந்த அபத்தச் சுவடி மறுப்பு

முன்னுரை

மாறன்பரகாலன் மழிசையர்கோன் கேட்டுகக்கும்
ஆராவமுதமாம் திருக்குடந்தை சார்ங்கபாணி சந்நிதி
நிதியைக்கொண்டே மாயாவாதிகள்செய் அபத்தச்சுவடிதனை
மாய்க்கத்திருமால் தொண்டர்படைகொண்டு
ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் தகர்த்தொழித்தபடியிது காணீர்!

பக்கம் 1. அழியாத பரம்பொருளான விஷ்ணுவின் கொள்கை என்றும் உள்ளதே. தோன்றுவதும் அழிவதும் கிடையாது,

பக்கம் 2. வேதம் ஒருவராலாக்கப்படாததால் வேதகாலம் என்று சொல்வது இவருடைய கெட்டகாலமே.

பக்கம் 5. நாட்டைப்பண்ணி அயன் முதலாத்தந்த நளிர்மா மலருந்தி வீட்டைப்பண்ணி விளையாடும் விமலனுக்குக் காத்தல் தொழிலொன்றே கற்பித்து வேதமே தேடும் விமலனைச்சொல்லும் வேதத்திற்குக் காலம் கற்பித்து வைஷ்ணவத்திற்கு முற்றுப்புள்ளிவைக்கும் இவருடைய சிந்தனைக்கு இவரே முற்றுப்புள்ளி வைத்துக்கொண்டாரித்தனை.

பக்கம் 8. சரணாகதியென்னும் நிலையை இன்னதென்றே அறியாத இவர் பிதற்றல்கள் சான்றோரிடம் தலை எடுக்காது.

பக்கம் 9. வர்ணதருமத்தை நிர்ணயிக்க இவருடைய வரலாறு தகுதியற்றது. அருள்பெற்ற ஞானிகளின் வார்த்தைகளை அறியும் திறமை இவருக்கில்லை.

பக்கம் 14. தென்னாட்டு வைணவமென்ற இவர் எந்நாட்டில் பிறந்தவரோ? வரலாற்றுணர்ச்சியற்று வாய்வெருவும் பேயலகை!

பக்கம் 15. இராமாநுஜரும் ஆழ்வாரும் கொண்டுள்ள அநுபவத்தைத் தாழ்வானதாய் சொல்லும் தகுதியற்ற தன்மையரந்தோ! ''நாராயண கதாமிமாம்'' என்று தொடங்கி பாரதம் பாடிய வேத வ்யாசர் நாராயணனே பரம்பொருளென சத்தியம் செய்ததை இவருணரவில்லையந்தோ!

பக்கம் 17. 'தமிழ்நாட்டு வைணவ'மென்னும் இவருக்கு உபய வேத வாக்குகளின் உண்மை தெரியாது. வைணவத்தை வேத ஆகம இதிஹாஸ புராண ஆலயங்கள் பின்பற்றுவதை மாற்றியமைத்து மாய்ந்தொழிந்தார்.

பக்கம் 17, 8. வேத புராணங்கள் பரப்ரஹ்மஸ்வரூபத்தின் குணங்களை விளக்குவதை உணராமல் இவரன்றோ குணமற்று ஒழிந்தார். நாதமுனிகள் பிரசாரத்தின் நடைதெரியாதவர் பாவம்!

பக்கம் 18, 19. இராமாநுசரை திருவனந்தாழ்வான் அவதாரமென்று உணராத தீயமனம் படைத்தவர்!

பக்கம் 19, 20. பகவான் தன் கொள்கைகளைப் பெரியோர்கள் மூலம் தானே வளர்க்கின்றதை இனியாகிலும் புரிந்துகொள்ளட்டும்.

பக்கம் 20. வேதத்திலேயே சரீரசரீரிபாவம் உள்ளதை உணர அசக்தரான இவர் பகவானையும் இலக்குமியையும் பரிவாரங்களையும் சரணாகதியையும் இழிவுபடுத்தும் இழிநிலைக்கு இறங்கிவிட்டாரே.

பக்கம் 21. ஆழ்வார் எம்பெருமானார் என்னும் சொற்கள் சிவனுக்கும் சேர்த்தி என்று சகவாசதோஷத்தினால் கற்பிக்கிறார் என்றே விளக்கமாகிறது. திவ்யதேசங்கள் மேன்மையடைவதைப் பொறுக்காமல் மனம்போனபடி எழுதுகிறார்.

பக்கம் 24. குணக்கடலான பரப்ரஹ்மத்தை குணமற்றதாக்கிக் கொள்ளும் கற்பனை இவரதேயாகும்.

பக்கம் 46, 47. ஆழ்வார்கள் அருளிச்செயலை ஆராய்ந்து உண்மையுணர இவர் பிறக்கவில்லை.

பக்கம் 75. திருவரங்கம் இராமாநுஜர் சம்பந்தம் அற்றது என்று சொல்லும் இவர்க்கு மனஸ்ஸாக்ஷி ஒன்று உண்டோ?

பக்கம் 97. 'தமிழ்நாட்டு வைணவம்' என்று அடிக்கடி சொல்லும் இவர் உபயவேதமும் திவ்யதேசமும் இன்னதென்றே அறியாதவர் என்பது கல்வெட்டு.

பக்கம் 101. வேத ஆகமக் கருத்துணராத வீண் குதர்க்கம் என்றுணர்க.

பக்கம் 103, 104. விக்ரஹ வழிபாடு ஆலய வழிபாடுபற்றி எதுவும் நிரூபிக்க அசக்தரிவர் எனக் காட்டிக்கொள்கிறார்.

பக்கம் 104. பரமைகாந்திகளுக்கு ஆலய வழிபாடு கூடாதென்று மாயாவாதம் செய்கிறார். பாகவததர்மத்திலும் ஆலய வழிபாட்டிலும் துவேஷமுடைய இவருக்கு இவைபற்றி வாய்திறக்கவும் தகுதியில்லை.

பக்கம் 113. பல பெயருள்ள பல தெய்வங்களுக்கும் பெருந்தெய்வமாயிருப்பவன் பரந்தாமனே என்று அவ்வேதங்களே பறைசாற்றுவதை அறியாத அறிவிலியாய்விட்டாரே.

முடிவுரை

அக்னிஹோத்திரியின் அபத்தச்சுவடியைக் கண்டிப்பதற்குத் திருக்குடந்தை சாரங்கபாணி தன்னுடைய ஸ்ரீஸுதர்சனாழ்வானின் அவதாரமான பத்திரிகையின் சோதி ஒளியுருக்கொண்டு அதை அறுத்தொழித்தார்.

இங்ஙனம்,

ஸ்ரீகாஞ்சி ப்ர. ப. அ. ஸ்வாமிகளின் அபிமானதுங்கன்,
ஸ்ரீ. ஆ. சிந்தனைக்கினியான் என்கிற
முகுந்த ராமானுஜதாஸன்.
இங்குள்ள ஸ்ரீவைஷ்ணவ கோட்டிகளின்தலைவர்,
9—12—73.

மாறன்பட்டி,
ஊத்தங்கரை (வழி)
தர்மபுரி மாவட்டம்.

25. ஸ்ரீ C. ஆராவமுதன், L. I. C., கும்பகோணம்.

நல்ல புத்தியைக் கொடு

வேத வேதாந்தங்களை—ப்ருகு, பாரத்வாஜ மஹரிஷிகள் பல வருடங்கள் அத்யயனமும் ஆராய்ச்சியும் செய்து முடிவு அறியாததை—எட்டேவருட அத்யயனத்தினால் கரைத்துக்குடித்து ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்த சில புரட்சிகரமான கருத்துக்களை வெளியிட வ. பி. வைணவம் ஓர் போக்குவீடாக அமைக்கப்பட்டதாகவே தோன்றுகிறது.

''ஸ்ரீ ராமானுஜர் பிரபத்தியைப்பற்றிச் சொல்லவில்லை. சரணாகதி கத்யம் அவர் இயற்றவில்லை; ஆழ்வார்களுக்கு த்வயமே தெரியாது; அவர்கள் சரணாகதியில் ஈடுபடவில்லை. எல்லோரும் உபநிடதம் கூறும் பக்தியில் வந்தவர்கள்தாம். ஆறு அங்கம் கொண்ட சரணாகதி உபாயமும் பலனும் ஆகமங்கள் அருளியது. அவைகளை பிரமாணம் என்று ஸ்ரீ ஆளவந்தார் சித்தாந்தம் செய்தபிறகே தமிழ்நாட்டிலும் கோயில்களிலும் இடம் பெற்றன. அதற்குமுன் கோயில் பூஜை என்பது எளிய முறையில் பூவைப்போடுவதோடு நின்றது. ப்ரபந்தங்கள் படிப்பது கோஷ்டி அமைப்பு, மரியாதை, பரம்பரை பாத்யங்கள் விழாக்கள் எல்லாம் பிற்பட்டு சேர்க்கப்பட்டன. உருவமில்லாத கடவுள் தத்துவத்திற்கு, உருவும், குணமும், ஆயுத அலங்கார பத்நீ பரிஜநாதிகளும் கல்பித்து வேதநெறியிலிருந்து விலகிய பாகவத தர்மவழிபாடுகளை பின்னால் வந்தவர்கள் புகுத்திவிட்டார்கள்'' என்று துணிந்து கூறுகிறார்.

கல்வெட்டு ஆதாரங்கள் 50 பக்கங்களை நிரப்புகின்றன. ஆனால் அவைகளால் என்ன விளக்கப்படுகிறது என்று புரியவில்லை. ஏதோ ஆகமங்கள் புகுமுன் இருந்த ஆலய வழிபாட்டை அவைகள் மூலம் காட்டப்போகிறார் என்று ஆவலுடன் இக்கந்தையைப் படிப்பவர்களுக்கு ஏமாற்றம்தான் கிடைக்கிறது. உண்மை என்னவென்றால் ஆலயங்கள் இன்றுபோல் என்றும் இருந்தன என்பதுதான். ஆலயவழிபாட்டு முறைகள் ஒன்றும் புதிதாகப் புகுத்த முடியாதென்றும், இருப்பதைக் காலத்துக்கு ஒட்டிச் சிறு சிறு திருத்தங்கள் செய்து நடத்திவந்தார்கள் என்பதும் தான் புலனாகும். வேதகாலம் என்றும் ஆகமகாலம் என்றும் உபயவேதாந்தி சர்ச்சைசெய்வது பொருத்தமாக இல்லையே!

ஸாத்வதர்கள் தங்கள் குடும்ப வீரர்களான வாஸுதேவ ஸங்கர்ஷணர்களுக்கு பிம்பம் செய்து வழிபட்டு வந்ததே தமிழ்நாட்டிலும் கோயில்கள் வழிபாடாக ஆகிவிட்டதாம்! ஆழ்வார்கள் ''ஆராவமுதே'' என்றோ ''பொன்னப்பன், மணியப்பன், முத்தப்பன், என்னப்பன்'' என்றோ குறிப்பிட்ட திருநாமங்கள் அந்தந்த பிம்பங்களுக்குப்பெயரல்லவாம்! ''இறந்த பெரியோர்களுக்காக அரசர்கள் எடுத்த பள்ளியே கோயிலாயிற்று'' என்று கூறுதுவிட்டதற்கு அக்னிஹோத்திரிக்கு நன்றி கூறவேண்டும். 'நல்லபுத்தியை எல்லோருக்கும் கொடு' என்று ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை வேண்டுவோம்.

44, விஜயேந்திர சுவாமி மடத்துத்தெரு, இங்ஙனம்,
கும்பகோணம். 30—11—73. பகல்வத்தி ஆராவமுத தாஸ:

26. ஸ்ரீ உ. வே. V. K. ஸ்ரீநிவாஸய்யங்கார்,

இராமநாதபுரம் தமிழ் வித்வான், லக்ஷ்மி நியூ ஹவுஸ்,
E. S. I. ஆஸ்பத்திரிரோடு, சங்கர்நகர், நெல்லை.

வெண்பாமாலை

1. பார்புகழும் வைணவத்தின் பாங்கறியாத் தாதாச்சார்,
பேர்திகழும் அந்தணர் தாம் பேசு புகழ்க்—கார்வண்ணன்
தன்னடியார் சிந்தை தனைநோவச் செய்தொருநூல்
தன்னை எழுதிவிட்டார் தான்.

2. கண்டபெரி யோர்கள் கருத்து மிகவாடி,
மண்டலத்தோர் எல்லாம் மலைக்கவே—விண்டவரின்
புத்தகத்தில் உள்ள புலம்பல் தனையெடுத்து
இத்தனையும் தீதென்றுரே.

3. நாடுபுகழ் வேதம் நவிலுமெழில் நாரணன் சீர்
பாடுமிசை ஆழ்வார்கள் பண்புடனே—நீடுலகில்
தந்தருளும் வைணவந்தான் தக்கமதம் என்றின்று
சந்தமுறச் சொன்னரே தான்.

4. என்று சுதரிசனம் இவ்வுலகோர் தானுணர
இன்றந்நூல் தன்னுள் இருந்துவருங்—குன்றனைய
குற்றமெலாங் காட்டிக் குறைவில்லா வைணவத்தின்
நற்றமதை நாட்டியதே நன்கு.

5. அதிராசர் பாதம் அனுதினமும் போற்றும்
எதிராச வள்ளலை என்றும்—துதிசெய்யும்
சீர்த்தியணி கிர்ஷ்ணசாமிச் செல்வரின்று இப்பணியை
நேர்த்தியுடன் செய்கின்றார் நேர்ந்து.

[அதிராசர்—ராஜாதிராஜனை திருவரங்கராஜன். எதிராசர்—எம்பெருமானார்.]

சுபம்.

27. முது பெரும்புலவர் வித்வான்
கி. வேங்கடசாமி ரெட்டியார், வி.பூதூர், தெ.ஆ.மாவட்டம்
'வரலாற்றில் பிறந்த வைணவ' மறுப்பு

செய்யுள்நடை

அறுசீர்க்கழிநெடில்

கண்டோம் கண்டோம்நம் நெஞ்சம் கவன்று வெறுத்திடக்கண்
பண்டான தென்றுரை வேத பரம்பரை சார்அக்னி ஹோத்ரர்[டோம்
மண்டாவும் சீரார் குடந்தை மன்னர் உரைத்தது கண்டோம்
தொண்டீஇர் எல்லீரும் வாரீர் துணிந்திங் கிதைஒழிப் போமே. 1.

வேதக் கடலைக் குடித்த வித்தகர் என்றியாரும் சொல்வார்
ஏதமில் லாஎரி ஓம்பும் இராமா நுஜதாதா சார்யர்
போத மிகுந்த குணத்தான் பொன்னெனும் புந்தியின் மிக்கார்
யாதுக்கும் அஞ்சாத வீரர் என்னென் றிவரைமேற் சொல்வேம். 2.

ஆகா! 'வரலாற்றில் வந்த வைணவம்' நூலை யளித்தார்
மோகாந்தர்எல்லோரும்ஏத்தி மொய்த்து மகிழ்ந்திடும்வண்ணம்
ஏகான்ம வாதிகள்போலே எல்லாம்பொய்பொய் என்றுரைத்தார்
மாகாந்த நாரணன் நாமம் வயங்கும் திருநெற்றி பெற்றார். 3.

(பக். 5)

ஆசார்யன் என்றெருப்புக் கொண்ட அன்று முதற்சிந்தனைக்கு
மாசாக வேமுற்றுப் புள்ளி வைக்கத் தொடங்கினர்அன்றே!
தேசாரும்தம்வளர்ச்சிக்கும் சிறந்தமுற் றுப்புள்ளியிட்டார்
பேசாநிலையினில்என்றே பேதுற்றுரைத்தாரே தாதர். 4.

(பக். 9)

ஐயனும் கற்பனை;அந்த அவதார மும்கற் பனையே
மெய்யெனக் கற்பனை வெள்ளத்தின் வீழ்ந்திடும் திவ்ய கவிகள்
நொய்தின் பிரிந்தும் சேர்ந்தும் நோவும் மகிழ்வும்கொண்டாரால்
வையத்திர் இந்நிலை காணீர் வந்தென் றுரைத்தாரே தாதர். 5.

(பக். 10, 162, 163, 164)

விண்டுவைக் கண்டவர் யாரே! வெய்யவ னேவிண்டு என்பார்
பண்டைய வேதம் எடுத்துப் பகர்ந்திடும்விண்டுதான் வேறு
மிண்டியவைணவம்கூறும் விண்டுவும் வேறெனச்சொல்லி
உண்ட துரைப்பவர் போலே உன்மத்த ராஞரே தாதர். 6.

(பக். 313)

சீரிய பல்லாண்டு காட்டும் திகழ் திருச்சக்கரக் கோயிற்(கு)
ஒருரை தாம்புதிதாக உரைத்தனர்; உண்மையீதென்று
பேரியல் நெஞ்சுதுணிந்து பிதற்றினர் இங்ஙனம் தாதர்
ஆரிவர் போலே உரைப்பார் அவனியிற்கண்டிலம் அந்தோ ! 7.

(பக். 75)

திருவரங் கத்தே கிடந்த செல்வத்தை இவ்விம் முறையில்
மருவி வளர்த்திடு கென்றோர் மரபினை எம்பெருமானார்
உருகு மனத்தினிற் கண்டார் உலகம் அறியும் இவ் உண்மை
பரிவினில் ஈதுபொய் என்று பாரித்திட்டாரே நம் தாதர் 8.

(பக். 108)

வளர் பஞ்ச ராத்திரம்கூறும் மாமறை. வேதத்தின் வேறு
ஒளிர்கின்ற ஏகா யனம் என் றுரைத்தனர் இம்மா மறையை
கிளர்கின்ற ஏகா யனத்தைக் கேட்டிலர் பின்னவர் என்றார்
தளர்கின்ற அன்பு மிக் கோராய்த் தானேதானகிய தாதர். 9.

(பக். 123. 126)

ஓதிய வேதங்கள் தாமும் உபநிடமும் ஒன்றுக் கொன்று
மாதவன் றன் அவ தார மாண்பினை மாறுபட் டோதும்.
தீதறு வேதங்கள் ஒப்பும்; உபநிடம் தேர்ந்து மறுக்கும்
மேதினி யீர் காண்மின் என்று விளம்பரம் செய்கின்றார் தாதர். 10.

(பக். 141)

கற்பனை வெள்ளத்தில் ஆழ்ந்து கவின்சடகோபத்தை வைத்தல்
முற்படு பத்தியிற் கொண்ட முதுவழி என்றே உரைத்துப்
பிற்படு மக்களுக் கூக்கம் பெறச்செய்த(து) ஆகமம் தன்னில்
அற்பமும் இல்லை காண் என்றார் ஆன்றோர் போல் நின்றநம் தாதர் 11.

(பக். 156, 157)

ஆலயத் தாலே அறிஞர்க் காவன ஒன்றுமே யில்லை.
ஆலயம், இங்கறி யாதார்க் காக அமைந்தது கண்டீர்
ஆலயத் தைப்பற்றி ஒன்றும் ஆகமம் ஓதிய தில்லை
சாலவும் கண்டிலைதுரைத்தார் தன்னைத்தானே நிகர் தாதர். 12.

(பக். 174, 175)

பண்டுபண் டேயுள்ள ஒன்றைப் பாரித்துத் தம்விருப் பம்போல்
கொண்டு விளம்பல் கூடாது குவலயத் தீர் என்னும் ஈது
புண்படப் பேசுமிவர்க்குப் பொருந்தாதென் றேஎண்ணம் போலும்
மண்டிணி ஞாலமுவப்ப வாழ்ந்திடும் வேதாந்த தாதர். 13.

(பக். 20, 201, 202)

திருவைப் புதிதாகக் கண்டார் திருமாலி னோடதைச் சேர்த்தார்
புருட காரர் என்றோர் செய்கை பொருத்தித் திருவுக் களித்தார்
மருவும் இக் கொள்கைகள் யாவும் வந்தன பின்னாலே என்றார்
அரியன இன்னவை யாவும் அறிமின் என் றாரே நம் தாதர். 14.

(பக். 260)

அவனியை ஆளும் அரசர் அதிகாரம் போன பின் அந்தோ
கவலை இல் லாது காப் பாற்றும் காவலன் யாரென் றுணரா
அவல நிலையினில் கோயில் அதில் வைணவம் புகுந் திட்ட(து)
இவை உணர் மின் என்றார் தாதர் ஈன்றதாய்வெள்கிடுமாறே. 15.

(பக். 142, 275)

பரமத பங்கந்தான் இங்குப் பரம பதபங்கமாச்சு
xஉருவம் குணமாய்க் குணமும் உற்ற இயற்கையதாச்சு
சிரமம் ஏ தொன்றுமே இன்றிச் சிந்தையில் வந்தன யாவும்.
மருமமுணர்ந்தவர் போலே வழங்கின ரேஇந்தத் தாதர் 16.

x"குணம் என்பது பகவானுடைய இயற்கையைக் குறிக்கும்; ருபம் என்பது நல்ல குணங்களைக்குறிக்கும்." என 275-ஆம் பக்கத்துள்ளது.

(பக். 298, 299, 300)

வேத காலத்திற்குப் பின்னர் வெவ்வேறு தெய்வங்கள் காட்டி
ஓதி வருணித்துப் பாடும் ஒரு நூல் பரிபாடலாகும்
பாதக மின்றி ஆழ்வார்கள் பாட வழிகாட்டிற் றிந்நூல்
வாதனை வேறில்லை என்றார் வையம் புகழ்ந்திடும் தாதர். 17.

(பக். 17, 21)

எம்பெரு மானார் தம் கொள்கை என்பதும் வேறு; நம் மாழ்வார்
தம் பெருங் கொள்கையும் வேறு; தரணியில் பின்னாக வந்த
நம்பும் ஆசார்யர்கள் கண்டு நாட்டிய கொள்கையும் வேறே
அம்பிக ளே கேண்மின் என்றிங் கானந்த முற்றாரே தாதர். 18.

உலகத்தார் உண்டென்ப தில் என்றுரைப்பவன் றன்னை இவ்வையம்
அலகைக் கொப் பென்றே உரைக்கும் அதற்கோரெடுத்துக்காட்டாக
இலகுற்றெறி யோப்பு தாதர் என்றும் அலகையாய் நின்றே
பலகற்றும் உண்மை யுணராப் பண்பினை என்னென்போம் யாமே. 19.

தேரான் தெளிவும் உணர்ந்து தெளிந்தான்கண் ஐயுறவும் தாம்
தீரா இடும்பையாம் என்ற திருக் குறளுக்கோ ரிலக்காய்
வாராது வந்ததோர் பொல்லா மாமணி தன்னிலே கண்டோம்
ஆரா அமுதே இதனை அகத்தினிற் கொண்டருள் வாயே! 20.

ப்ரியாவுக்கு அஹோவின் ஸமாதானம்

[ஸுதர்ஶனம் ஆசிரியரின் விமர்சம்]

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் ப்ரமாதி தை இதழில் அஹோவை 7—1—74ல் ப்ரியா ஸம்பாதகர் சந்தித்துச் சில கேள்விகள் கேட்டதாகவும், அதற்கு அஹோ சில பதில்கள் உரைத்ததாகவும் கூறி, அக்கேள்விகளும்,பதில்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அஹோ எழுதிய கடிதம் ஒன்றும் பிரசுரிக்கப் பட்டுள்ளது. இவைபற்றி நடுநிலைநின்று விமர்சிப்போம்.

முதல்கேள்வி:- பாஷ்யகாரர்தான் பக்தி மார்க்கத்தை வெளியிட்டுள்ளார் என்று தேவரீர் எழுதியுள்ளீரே. ஆளவந்தார் நூல்களில் அதுபற்றிக் கூறவில்லையா ?

அஹோவின் பதில்:- ராமாநுஜர் காலத்துக்கு முன்பே நம் ஆசார்யர்கள் பக்திமார்க்கத்தைப் பின்பற்றியுள்ளார்கள். நான் எழுதும்போது நம் ஆசாரியர்களைப் பற்றியே அங்குச் சிந்திக்கவில்லை. ஸூத்ர பாஷ்யம் இயற்றியவர்களில் ராமாநுஜருக்கு முன்பிருந்த பர்த்ருப்ரபஞ்சன், ஸ்ரீசங்கரர் முதலியவர்கள் பக்தியைச் சொல்லவில்லை என்பதற்கே எழுதினேன். இதன் விவரமாகவே 194-ஆம் பக்கத்தில் ‘ஞானமும் பக்தியும்’என்று எழுதியுள்ளேன்.

ஸுதர்சனம் ஆசிரியரின் விமர்சம்

ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தத்தில் சொன்ன பக்தி வேறு. எம்பெருமானார் ஸ்ரீ பாஷ்யத்தில் சொன்ன பக்தி வேறு என்று அஹோ தமது நூலில் பலவிடங்களில் தெளிவாக எழுதியுள்ளார். பிள்ளான் முதலான ஆசாரியர்கள் ஸ்ரீபாஷ்யத்திற்சொன்ன ஸாதநபக்தியையே ஆழ்வார் பலவிடங்களில் வெளியிடுவதாக எழுதியிருப்பதற்கு இது நேரே கண்டநம். இதற்கு அஹோ எந்த ஸமாதாநமும் கூறவில்லை. ஆழ்வார்களுக்கும், எம்பெருமானார்க்கும், பிற்பட்ட ஆசார்யர்களுக்கும், சரணாகதி, புருஷகாரம் முதலான மற்றும் பல விஷயங்களில் கருத்துவேற்றுமையுண்டு என்று எழுதியதற்கும் சமாதானம் கூறவில்லை.

இரண்டாம் கேள்வி:- குணமில்லாத ப்ரஹ்மத்தை ஆசார்யர்கள்தாம் குணமுள்ளதாகச் செய்தார்கள் என்று உள்ளதே. அத்வைதிகள் சொல்வதைப்போல் நிர்க்குணமாக ப்ரஹ்மத்தைச் சொல்லலாமா? 'வசித்வாதிகள் நிரூபித ஸ்வரூப விசேஷணங்கள்' என்று சொல்லவில்லையா?

அஹோவின் பதில்:- 'பகவானுக்குக் குணமில்லை, அவன் நிர்க்குணன்' என்று சொல்லவில்லை. வசித்வாதிகள் இருக்கச் செய்தேயும், இந்தக் குணங்களை நிரூபணம் பண்ணும்போது புராணங்களையே பிரமாணமாக எடுத்துள்ளார்கள் என்பதற்காக அவ்விதம் எழுதினேன். 'ந தே ரூபம் ந சாகார:' என்னும் 'ஜிதந்தே' ஸ்தோத்திரத்தைக் கொண்டு, 'ரூபமில்லை' என்று எழுதப்பட்டது.

ஸுதர்சனம் ஆசிரியரின் விமர்சம்

'பகவானுக்கு குணமில்லை' என்று தாம் சொல்லவில்லை என்று அஹோ கூறியிருப்பதும், குணங்களை நிரூபணம் பண்ணும்போது ஸ்ரீபாஷ்யகாரர் முதலான பூர்வாசார்யர்கள் புராணங்களையே ப்ரமாணங்களாக எடுத்துள்ளார்கள் என்றதும் அப்பட்டமான பொய். தம் நூலில் பல விடங்களில் 'ப்ரஹ்மம் நிர்க்குணம்' என்று புலம்பியுள்ளார் அஹோ. நூற்றுக்கணக்கானவிடங்களில் உபநிஷத் வாக்யங்களையே ஸ்ரீ பாஷ்யகாரர் முதலானோர் எடுத்துக்காட்டி குணங்களை நிரூபணம் செய்துள்ளனர். புராணங்களை அவ்வுபநிஷத் வாக்யங்களை உபப்₃ரும்ஹணம் செய்வனவாகவே எடுத்துள்ளனர். 'ந தே ரூபம் ந சாகார:' என்றவிடத்தில் ரூபசப்தம் ஸ்வரூபத்தையும், ஆகாரசப்தம் விக்₃ரஹத்தையும் குறிக்கிறது. இதுகொண்டு 'ரூபமில்லை' என்று எழுதலாமானல் ப்₃ரஹ்மத்திற்கு ஸ்வரூபமில்லை என்றும் எழுதலாம். 'உன்னுடைய ஸ்வரூபரூபாதிகள் உனக்காக ஏற்பட்டனவயல்ல; பக்தர்களுக்காகவே' என்பதே இந்த ஶ்லோகத்தின் கருத்து என்று ஆழ்வான் முதலான பூர்வாசார்யர்கள் விளக்கியுள்ளதை அஹோ புரிந்துகொள்ளவேயில்லை. ப்ரியா ஸம்பாதகர் அபிமானத்தாலே இத்தகைய

பதில்களில் திருப்தியடைந்து விடலாம். அஹோ தம் நூலில் பக்கம் 162ல் "உபநிஷத்துக்கள் ஒரே தெய்வம் என்ற கொள்கையைச் சொல்லும் காலத்தில் அந்தத் தெய் வத்தைப் பிரம்மம் என்றே சொல்லுகின்றது....ராமானுஜர் அந்த பிரம்மத்திற்குக் குணம் உண்டு, உருவம் உண்டு என்று விளக்கம் கூறினர். யார் எந்த விளக்கம் கூறினு லும் பிரம்மம் என்பது பிரம்மம்தான்; அதற்குத் தனி யான பெயரில்லை." என்று அடித்துக்கூறி எம்பெருமானுரை இழிவுபடுத்தியிருப்பதற்கு மன்னிப்புக்கேட்டாலொழிய அஹோவை ஸ்ரீ வைஷ்ணவவுலகம் மன்னிக்காது என்பதை ப்ரியா ஸம்பாதகர் உணர்வாராக.

மூன்ரும் கேள்வி:- 'ஸ்வாமி தேசிகன், கத்யத்ரயம் பாஷ்ய காரர் அருளிச்செய்ததாகச் சொல்லுகிருர்; அதற்கு வியாக்கி யானமும் செய்துள்ளார்' என்று எழுதிவிட்டு, 'பாஷ்யகாரர் கத்யத்ரயம் அருளிச்செய்ததாகத் தெரியவில்லை' என்று எழுதி யிருப்பது எந்தப் பிரமாணத்தைக் கொண்டு? ஸ்வாமி 'மடைப் பள்ளி வந்த மணம்' என்று ஸ்ரீ பாஷ்யகாரரிடம் அந்தரங்க கைங்கரியம் பண்ணி ஶாஸ்த்ரங்களை அறிந்த கிடாம்பியாச்சான் மூலமாகத் தாம் ஶாஸ்த்ர ஜ்ஞானத்தைப் பெற்றதாக அருளிச செய்துள்ளபோது, கத்யத்ரயத்தைப் பாஷ்யகாரர் அருளிச் செய்யாமல் இருந்தால் அதற்கு வியாக்யானம் செய் தருளுவாரா?

அஹோவின் பதில்:- கத்யத்ரய விஷயமாகப் பல வருஷங் களாகவே ஸந்தேஹப்பட்டுப் பல வித்வான்களைக் கேட்டு வந்தி ருக்கிறேன். இந்தப் புத்தகத்தில் புதிதாக ஒன்றும் எழுதவில்லை.

ஸுதர்சனம் ஆசிரியரின் விமர்சம்

கத்யத்ரயத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளையும், ஶரணு கதி கத்யத்திற்கு ஶ்ருத ப்ரகாசிகாசார்யரும் வ்யாக்யானம் செய்தருளியுள்ளனர். தேசிகன் தாம் க$_3$த்$_3$ய பா$_4$ஷ்யமிட்ட ருளியதோடு, எம்பெருமானருடைய ஸாக்ஷாத் சிஷ்யரும், 74-ஸிம்ஹாஸநாதிபதிகளில் ஒருவரும், ஸ்ரீ விஷ்ணுபுராண

வ்யாக்யாதாவுமான ஸ்ரீ விஷ்ணுசித்தர் என்னும் எங்களாழ்வான் கத்ய வ்யாக்யானமிட்டிருப்பதாகவும் எடுத்து, அதிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார். "இவர்கள் அனைவரும் பொய்யர்கள்; எம்பெருமானார் அருளாத நூலை அவர் தலையில் சுமத்தி உரையிட்டனர்'' என்று பொருள்பட எழுத அஹோவிற்கு அதிகாரம் ஏது? இந்தப்புத்தகத்தில் புதிதாக ஒன்றும் எழுதவில்லை என்பது ஸமாதானமாகுமா என்பதைக் கூட ப்ரியா ஸம்பாதகர் விமர்சிக்காதது வியப்பையே அளிக்கிறது. இதுதான் தேசிக பக்திபோலும்!

ப்ரியாவுக்கு அஹோவின் பதில் கடிதம்

ஸ்ரீ. உ. வே. ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸம்பாதக ஸ்வாமி ஸந்நிதிக்கு—தேவரீர் அனுப்பிய ஸ்ரீமுகம் கிடைத்தது. 'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்ற நூல், வரலாற்று அடிப்படையில் வைணவத்தைத் தெரிந்துகொள்ள நினைப்பவர்களுக்காகவே எழுதப்பட்டது. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயக் கருத்துக்களில் ஸாத்வஸாதுவிவேசநம் இங்குப் பண்ணப்படவில்லை. இன்றுள்ள இரு ஸம்பிரதாயக் கருத்துக்களை அப்படியே அங்கீகரித்துத்தான் பல இடங்களில் பேசப்படுகிறது. 'கொள்கைகள் அநாதி' என்பதை யாரும் ஆக்ஷேபிக்க முடியாது. ஆனால், எந்த எந்தக் கருத்துக்கள் எந்த எந்த ஆசார்யர்களின் எந்த எந்தக் கிரந்தங்களின் மூலம் வெளிவந்துள்ளன என்பதையே இந்த நூல் விளக்குகிறது. மதக் கொள்கைகளை விஞ்ஞான ரீதியில் விளக்குவது என்பது நவீனர்களின் முறை. இந்த முறையே இங்குப் பின்பற்றப்படுகிறது. வரலாற்று ரீதியில் கவனிப்பதும் ஒரு நவீனமுறை.

—அக்நிஹோத்ரம் ராமாநுஜதாதாசார்யர்.

ஸுதர்சனம் ஆசிரியரின் விமர்சம்

இந்த பதிலையும், இதைக்கண்டு ப்ரியா ஸம்பாதகர் ஸமாதானமடைந்ததையும் பார்க்கும் போது ஓர் கதை நினைவுக்கு வருகிறது. ஓர் துஷ்டப்பிள்ளை பரம பதிவ்ரதையான தன் தாயை வ்யபிசாரியென்றும், பரமஸாத்விகனான

தகப்பனைத் தன் தகப்பனல்லன் என்றும் தூஷித்துவந்தானும். ஓர் மஹாஶாஸ்த்ரஜ்ஞர் 'ஏனப்பா தாய் தகப்பனை இப்படித் திட்டுகிறாய்?' என்று கேட்டாராம். 'நான் வரலாற்று அடிப்படையில் விஞ்ஞான ரீதியில் தாய்தந்தையர் பற்றி விளக்கினேன். இது ஒரு நவீனமுறை' என்று பதில் உரைத்தானும் அந்த துஷ்டன்! அந்த மஹாஶாஸ்த்ரஜ்ஞரும் ஸமாதானம் அடைந்து விட்டாராம்!! அதுபோல், "லக்ஷ்மிக்கு இந்திரனோடும், குபேரனோடும், கந்தனோடும் தொடர்பு உண்டு" என்றும், "வேதத்தில் சொல்லப்பட்ட விஷ்ணு ஸூர்யனே யொழிய நாராயணனல்லன்" என்றும் அஹோ எழுதியதைப் பார்த்தும், அவரது இந்த பதிலில் ப்ரியா ஸம்பாதகர் ஸமாதானமடைந்துவிட்டார்! அஹோ நூலைக்கண்டு கொதிப்படைந்து, அதைக்கண்டித்து வியாஸம் எழுதிய மஹனீயர்களின் கட்டுரைகளைப் பிரசுரிக்க மறுத்துவிட்டார்!! இனி ப்ரியாவுக்கு எக்குறையுமில்லை; அஹோவால் எத்தீங்கும் நேரிடாது. சந்தாதாரர்கள் குறைய மாட்டார்கள். ஏராளமாக வளருவார்கள். 'ப்ரியா' இந்த ரீதியிலேயே அஹோவின் நவீன வரலாற்று விஞ்ஞானமுறை ஆராய்ச்சிகளை வெளியிட்டு 'ஸம்ப்ரதாயத்தொண்டு' செய்யட்டும்! ப்ரியாவின் 'நேர்மை' வாழ்க! வளர்க!!

பெரியோர்களின் பொன்மொழிகள்

ஏகோऽஹமஸ்மீதி ச மந்யஸே த்வம்
ந ஹ்ருச்சயம் வேத்ஸி முநிம் புராணம் ।
யோ வேதிதா கர்மண: பாபகஸ்ய
தஸ்யாந்திகே த்வம் வ்ருஜிநம் கரோஷி ॥

[மஹாபாரதம் சகுந்தலை வாக்கு]

[அரசனே! (நாம் காந்தர்வ விவாஹம் செய்துகொண்ட போது) நீ ஒருவனே இருந்ததாக எண்ணுகிறாய். ஹ்ருதயத்தில் புராண புருஷனும் ஸாக்ஷியாயிருந்ததை அறிகிறிலை. பாபத்தை அவன் பார்த்துக்கொண்டேயிருக்கிறான். அவனுக்கு அருகிலிருந்துகொண்டே நீ பாபம் செய்கிறாய்.]

28. ஸ்ரீ உ. வே. T. K. ஜகந்நாதாசார்ய ஸ்வாமீ,

ஆசிரியர், தார்மிக ஹிந்து. சென்னை-15.

"ஶ்ரேயாந் ஸ்வத$_4$ர்ம:" (கீ$_3$தா) "ந பு$_3$த்$_3$தி$_4$பே$_4$த$_3$ம் ஜநயேத்" (கீ$_3$தா)

ஸ்ரீ : ||

ப்ரசுரம்-1
4—2—1974

தார்மிக ஹிந்து மிஷன்
சென்னை-15

"வரலாற்றில் பிறந்த வைணவம்"

அக்நிஹோத்ரம் ஸ்ரீ. உப. வே. ராமாநுஜதாதாசார்யரின் அனுவசிய வம்புவேலை

கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி தேவஸ்தானத்தின் தற்கால நிர்வாஹிகளின் உரிமையற்ற விபரீதக் கார்யம்

இப் பெயரையுடைய ஒரு நூல், *திருக்குடந்தை* எனப்படும் **கும்பகோணம்** அய்யங்கார் தெருவிலுள்ள அக்னிஹோத்ரம் ஸ்ரீ. உப. வே. *ஸ்ரீ ராமாநுஜதாதாசார்யர்* ஸ்வாமியினால் எழுதப் பட்டு, அவ்வூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் *ஸ்ரீ கோமளவல்லீ ஸமேதனான பகவான் ஸ்ரீ சாரங்கபாணி* யினுடைய தேவஸ்தானப் பணச் செலவில் அச்சிடப்பட்டு அதன் ஆதரவிலேயே வெளியிடப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இது அத்திவ்ய தம்பதிகளின் பெருமையை விளக்கும் நோக்கம் கொண்டதல்ல. அர்ச்சாரூபிகளாக எழுந்தருளியிருக்கும் மிகப் புராதனப் பிரஸித்தமான அத்தெய்வங்களின் அடிப்படைத் தத்வங்களும், அவர்களிடம் வழிபட்டுவரும் ***ஸ்ரீ பகவத் ராமாநுஜீய வைதிக ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்களின்*** ஈடுபாடுகளும் அர்த்தமற்றவைகள் என நினைக்கும்படி, *மிகச் சாதாரண* மக்களுடைய நல்ல எண்ணங்களைக் குழப்பிக் கெடுக்கும் நிலைமை யிலுள்ள ஒரு பெரும் விஷம நூல் இது.

பிறரைக் கலக்க முனைந்திருக்கும் இதன் நெற்றியிலேயே, இதன் அடிப்படைக் குழப்பம், கருப்புத் திருமேனியில் வெள்ளைத் திருமண் புண்ட்ரம் சாற்றப்பட்டிருப்பதுபோல், மிகப் பிரகாச மாகவே விளம்பரப்படுத்தப்பட்டிருப்பது இதற்குத் தெரியவில்லை. '**வைணவம்**' என்ற சுத்தத் தமிழ்ப்பதம் '**மூங்கில் சம்பந்த** மானது,' என்ற கருத்தைக் கூட மனத்தில் படியவைத்துக் குளறுபடி பண்ணக் கூடியது என்பதை உணர்ந்த தமிழ் அகராதியினர், இப்பதத்துடன் கூடவே "**வைஷ்ணவம்**" என்ற

ஸம்ஸ்க்ருதம் கலந்த சொல்லையும் இணைத்து. ஒரே வளவிற்குள் இறுத்தி, அதன் உரைப்பகுதியில் "**ஓர் சமயம், பதினெண் புராணத்தொன்று, மூங்கிலரிசி, வேய்ங்குழல்**" என்றும் வரைந்திருக்கின்றனர். அதற்கடுத்தாற்போல், '**வைணவர்—நாராயண சமயத்தோர்**' என்று பதவிளக்கத்தையும் அவர்கள் கொடுத்திருக்கின்றனர். இவ்விவரம் '**யாழ்ப்பாணத்து விரிவகராதி**' முதலியவற்றிலுள்ள சொற்களோடு வடசொற்களையும் சேர்த்துக்கொடுக்க, **காணியம் பாக்கம் திரு** பொன்னையா **முதலியார் குமாரர் திருமுருகேச முதலியாரால்** பார்த்திப ஹு மார்கழி மீ (1886-ல்) பா. சோமையரவர்களது **ஆதிகலாநிதி** அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பட்டுப் (பதிப்பிக்கப்பட்டு) பிரசுரமாகியிருக்கிற' **தமிழ் அகராதி**யிலிருந்து எடுத்து எழுதப்பட்டிருக்கிறது. இதைப் பின்பற்றியே இப்பத விளக்கம், 1928ல் பிரசுரிக்கப்பட்டிருக்கும் '**காரனேஷன் (Coronation) தமிழ் அகராதி**' யென திரு. P. V. **நமச்சிவாய முதலியார்** அவர்களால் பிரசுரிக்கப்பட்டிருக்கும் **தமிழ் அகராதி**யிலும் கூடக் காணப்படுகிறது. ஸ்ரீஅஹோபில மடவிஷயவிளக்கப் பத்திரிகையாகிய '**ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா**' ஆசிரியரால், "**வேதவேதாந்தபாரங்கதர்**" '**பாஷாந்தரத்திலும் நல்ல பாண்டித்யம் உடையவர்**' என்றெல்லாம் போற்றப்பட்டிருக்கும் இந்த **விவகார** நூலின் ஆசிரிய நிபுணரான **அக்னி**ஹோத்ரம் ஸ்ரீ **தாதாசார்யர்** ஸ்வாமிக்கு இவ்விஷயம் ஏன் புலப்படவில்லையோ தெரியவில்லை. **ஸம்ஸ்க்ருதச்** சொல்லை உபயோகப்படுத்தி **பழையகால மனிதர்** என்ற கெட்ட பெயரை வாங்கப் பிரியப்படாமல் தமிழ் அரசின் விசுவாஸத்தையும் தற்காலிக நவீனர்களுடைய மதிப்பையும் பெற, இந்த சுத்தக் கருந்தமிழ்ச் சொல்லை இவர் கையாண்டிருக்கலாமோவென நாம் ஊஹிக்கிறோம், சந்தேகமும் படுகின்றோம்.

"**ஸ்ரீந்ருஸிம்ஹப்பிரியா**"வின் நிபுண ஆசிரியருக்கு இந்நூலாசிரியர் எழுதிய கடிதத்தில் "எந்த எந்தக் கருத்துக்கள் எந்த எந்த ஆசார்யர்களின் எந்த கிரந்தங்களின் மூலம் வெளிவந்துள்ளன என்பதையே இந்த (தம்) நூல் விளக்குகிற"தென்றும், "மதக்கொள்கைகளை விஞ்ஞான ரீதியில் விளக்குவது என்பது நவீனர்களின் முறை; இந்த முறையே இங்குப் பின்பற்றப்படுகிறது; வரலாற்று ரீதியில் கவனிப்பதும் ஒரு நவீன முறை" என்றும் தமக்கு அவர் அறிவித்திருப்பதாகவும், அதை இந்த ஆசிரியர் ஒப்புக்கொண்டு "மேற்கொண்டு சர்ச்சை

செய்யத் தாம் விரும்பவில்லை" என்றும், 'மேற்கொண்டு தமக்கு வியாஸம் எழுதியனுப்பிய மகனீயர்களுடைய வியாஸங்களைப் பிரசுரித்து விவாதத்தை வளர்க்கத் தாம் விரும்பவில்லை" என்றும் எழுதியிருப்பவைகளைக் கவனித்தால். இந்த 'வரலாற்று நூலை' எழுதயவரும், அவருடைய கருத்துக்களை உணர்ந்து தகுந்த பதிலை எழுதாத, எழுதமுடியாத இந்த வைஷ்ணவப் பத்திரிகை ஆசிரியரும் எவ்வளவு தூரம் நியாய ஆராய்ச்சி முறையில் மதர்ந்தவர்கள் என்பதும், நேர்மையான மனப் பான்மையுள்ளவர்கள் என்பதும் விஷய ஆராய்ச்சியில் தேர்ந்த சாஸ்த்ரஜ்ஞர்களான நிபுணர்களுக்கு நன்கு விளங்கக்கூடிய விஷயமேயாகும் என்பது நம் நம்பிக்கை. இந்தப் பத்திரிகையின் ஆசிரியரைப் போல், நிரம்ப பிருதுகளைத் தங்களுடைய ப்ரசுரங்களில் தவருமல் பிரசுரித்துக் கொண்டு, ஆசார்ய ஸ்தானங்களில் கூட நிரம்ப மதிப்பை எதிர்பார்த்துக்கொண்டும் பெற்றும் வளர்ந்துவரும் சில ப்ரபல பண்டிதர்கள் கூட, இந்த ஸ்ரீ தாத்தாசார்யரின் வம்பு நூலுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி, வாயைவிட்டு வெளிப்படையாகவே அதைக் கூறவும் துணிந்திருக்கின்றனர் என்ருல், ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தின் தற்கால நிலைமையைப்பற்றி என்ன நினைப்பது என்பது நமக்குப் புரியாமலேயே இருக்கிறது.

வரலாற்று முறையிலும், விஜ்ஞான ரீதியாகவும் விமர்சங்களைச் செய்கிறவர்கள், உண்மையாகவும், எவ்விதத் தவறுகளில்லாமாலும், நேர்மையான தன்மையுடனும், சாஸ்த்ரவசியமான அடக்கமான மனப்பான்மையைக் கொண்டும், மிகச் சாதாரண மக்களைக் கலங்கும் நிலைமையில் வைக்காமலும் இருக்க வேண்டும் என்ற ஒழுங்கானமுறை இந்த ஸ்ரீதாத்தாசார்யர் ஸ்வாமிக்குத் தெரியாமலிருக்க முடியாது. இதை ஏன் அவர் மறந்துவிட்டார் என்பது நமக்குப் புரியவில்லை.

"ஸ்ரீந்ருஸிம்ஹப்பிரியா" பத்திரிகை ஆசிரியருக்கு இந்த 'வரலாற்று'க் கட்டுரையாளர் கடிதம் மூலமும், நேரிலும் கூறியிருக்கும் சில அபிப்ராயங்களைப்பற்றி இச்சந்தர்ப்பத்தில் தனியே விவாதிக்க முடியாமலிருக்கிறது. ஆனுல், அவைகளின் போக்கைத் தழுவிய பல கருத்துக்கள் இவருடைய நூலிலேயும் கலந்திருக்கக் கூடுமாகையால் அவைகளைக் கவனிக்கும் பொழுது இவைகளையும் சேர்த்துக் குறிப்பிட்டு விமர்சித்து விடலாமென்ற எண்ணத்துடனும் இருந்து வருகின்ருேம்.

முதல் முதலாக, இவருடைய நூலில் இவர் வாதித்து வரும் சில பொதுவான தவறுகளைச் சுட்டிக் காண்பிக்க வேண்டியிருக்கிறது. **வேதகாலம்** என்ற ஒரு காலக்கணக்கு அடிப்படையில் மேல் நாட்டினர்களைப் போலவே இந்த 'வேத, வேதாந்த பாரங்கதர்' தமது வாதங்களில் புகுத்திக் கொண்டு, விஞ்ஞான ரீதியில் முன்னேற்ற மடைந்த, தாற்காலிக, மிகுந்த நாகரிக முறையில் தாம் தமது கக்ஷிகளைப் பேசி வருவதாக இவர் நினைக்கிறார். இதனால் இவர் தாம் அத்யயனம் செய்திருக்கும் வேத ஸ்வரூபத்தை அடியோடு, சிறிது கூடத் தெரியாத நிலைமையிலிருந்து வருவதாகவே நாம் நினைக்கவேண்டியிருக்கிறது.

"*விஞ்ஞான ரீதி*" என்றால் பௌதிக உலகில் ப்ரத்யக்ஷமாகப் புலப்படக்கூடிய கார்யங்களில் தகுந்த புத்தி சாமர்த்யத்தைக் கொண்டு நிரூபிக்கப்படக் கூடிய விஷயங்களைப் பற்றிநினைக்கிறாரா, அல்லது **கடோபநிஷத்தில்** குறிப்பிட்டிருக்கும் (***யஸ்து விஜ்ஞானவாந்ப₄வதி ஸமநஸ்க: ஸத₃ா ஶுசி:***) விஜ்ஞான நிலையை மனத்தில் நினைத்துப் பேசுகிறாரா என்பது நமக்கு அறிய முடியாமலிருக்கிறது. முதலில் கூறப்பட்டிருக்கும் பௌதிகதத்வ ஆராய்ச்சி சாமர்த்யவான்களுக்குக்கூடப் புலப்படாத அதீந்த்ரிய விஷய தத்வங்களை வேதங்கள் கூறுவதாக மனுவும், ஸ்ரீவால்மீகி போன்ற மஹரிஷிகளும் அறிவித்திருக்கின்றனர். **(ப்ரத்யக்ஷேணாநுமாநேந யஸ்தூபாயோ ந பு₃த்₄யதே । ஏநம் வித₃ந்தி வேதே₃ந தஸ்மாத் வேத₃ஸ்ய வேத₃தா ॥ –மனு. ந ஶக்தஸ்த்வம் ப₃லாத்த₃ர்த்தும் வைதே₃ஹீம் மம பஶ்யத: । ஹேதுபி₄ர் ந்யாயஸம்ஸித்₃தை₄: த்₄ருவாம் வேத₃ ஶ்ருதீமிவ॥ –ஸ்ரீவால்மீகி(தமது ராமாயணத்தில் ராவணனைப் பார்த்து ஜடாயுஸ் சொன்னது)**

உதாரணமாக, ஒன்றைக் குறிப்பிடுகின்றோம். சரீரத்திற்குள் **ஆத்மா** இருக்கிறவிஷயம், அந்த ஆத்மாக்கள் பல்வேறு குணங்களுடனும், அத்ருஷ்ட, துரத்ருஷ்ட நிலைமைகளுடனும், புத்திசக்திகளின் ஏற்றத் தாழ்வுகளுடனும், கைரேகைகளின் வித்யாஸங்களோடேயும் இருக்கும் விஷயங்களை நிரூபிக்க எவ்வித புத்தி சக்தி இந்த பௌதிக உலகில் உதவி வருகிறது? மிகக் குளிர்ந்த தோற்றத்துடன் காணப்படும் **சந்த்ரமண்டலம்** கற்கள் மயமாக இருப்பதாய் ராக்கட் ஸஞ்சார மூலம் கூறப்படும் கருத்துக்களின் அந்தஸ்து எத்தன்மை கொண்டது

என்று அளவிடுவது? ஆரோக்யமுள்ள மனிதர்கள் திடீரென்று மரணமடைவதற்கும் பலஹீனமாகவும், பலவியாதிகளின் சிக்கல்களோடும் இருப்பவர்கள் உயிரோடு நெடுங்காலம் வாழ்ந்து வருவதற்கும் பௌதிக யுக்தி எவ்வளவு தூரம் பயன் படக்கூடியது? இவ்விஷயங்களை யெல்லாம் ஸ்ரீ **தாதாசார்யர் ஸ்வாமி** பௌதிகரீதியில் விளக்கமுடியுமென்று நினைக்கிறாரா என்பதையும் நம்மால் ஊஹிக்கமுடியவில்லை. மேல் நாட்டினர் வேத காலங்களைப்பற்றியெல்லாம் கூறியிருக்கிற முடிவுகளை மறுத்து அவைகளை ஆதாரமாகக் கொள்ளுவது தவறு என்று காலஞ் சென்ற, மிக உயர்ந்த புத்தித் திறமையும் நேர்மையும் நிரம்பிய, அரசியல் நிபுணப் பழைய பெரும் தலைவர் **ஸ்ரீலோக மான்ய பால கங்காதர திலகர்** வெளியிட்டிருக்கும் **'ஆர்டிக்ஹோம் ஆப் தி வேதாஸ்'** **(Arctic Home of the Vedas)** என்ற நூலின் விஷயங்களையும் சேர்த்துக் கவனியாமல் சில மேல்நாட்டினர் கூறுபவைகளை மட்டும் தனது ஆலோசனைக்கும் ஆதாரத்திற்கும் இந்த **அக்னிஹோத்ரம் ஸ்வாமி** எடுத்துக் கொண்டது இவருடைய ஆராய்ச்சியின் பூர்த்தியை அறிவித்து விட்டதாக ஆகிவிடுமா?

மேலும், இவருடைய ஆராய்ச்சிக் குழுவில் வேறு நிபுண ஸ்ரீ வைஷ்ணவப் பண்டிதர்கள் எவரும் சேர்க்கப்படாமல் இருந்திருப்பது இவருடைய தனி ஆலோசனையினாலா? அல்லது, தி. மு. க. அரசாங்க கோஷ்டியினரால் அதிகார ஸ்தானங்களில் அமர்த்தப்பட்டிருக்கிற, செயல் அலுவலராகவும், இறைபணியாளராகவும் இருக்கும் **திரு. மு. செல்லப்பெருமாள் B. Com., F. S. A. A.** அவர்கள், தஞ்சை சரஸ்வதிமஹால் செயலாளர் **திரு. நீ. கந்தசாமிபிள்ளை அவர்கள்,** அவர்கள் அடங்கிய பதிப்புக் குழுவில் உள்ள மற்ற நிபுணர்கள், இந்நூல் வெளிவர வித்திட்டவரும், அதன் வளர்ச்சியில் இடையறாது (தங்களுக்கு) அவர்களுக்கு ஊக்கமளித்தவருமான **குடந்தை இந்து சமய அற நிலைய ஆட்சித்துறை உதவி ஆணையாளர், சைவத் திரு. அருச்சுனன் B. A.** அவர்கள், இவ்வாக்கப்பணிக்கு உறுதுணையாய் இருந்த இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் உயர் **திரு. வி. எஸ். கோ. தண்டபாணி அவர்கள்,** ஆணையாளர் உயர் **திரு. K. S. நரசிம்மன் B.A. B.L., I. A. S.** அவர்கள், திருவையாறு தமிழ்க்கல்லூரி வித்வான் (திரு. பதம் சேர்க்கப்படாத ப்ராம்மணராகக் கணக்கிடப்பட்டிருக்கும்) **கோபால அய்யர்** அவர்கள் முதலியோர், இந்த (ஸ்ரீயோ

திருவோ சேர்க்கப்படாத நிலைமையில் வைக்கப்பட்டிருக்கும் இந்த வெறும்) உ. வே. அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாத்தாச்சாரியர் அவர்களுக்கு ஆலோசனை கூறி, அதன்படி அவர்கள் ஒதுக்கப்பட்டனரா என்ற விஷயங்கள் பொது மக்கள் கவனத்திற்கு ஆவசியம் வரவேண்டிய நிலைமையிலுள்ளவைகள். இம் மாதிரியான சூழ்நிலை இந்த தேவஸ்தானத்திற்கு மட்டும் ஏற்பட்டுள்ளதா, மற்ற தமிழ்நாட்டிலுள்ள கணக்கற்ற பல சமய ஆலயங்களுக்கும் இதே தலையெழுத்துத்தான் வேலை செய்கிறதா என்ற விஷயம்கூட நன்கு கவனித்து ஆராயப்படவேண்டியது அவசியம் என்பதை வற்புறுத்தும் நிலைமை, பல மதக் கொள்கைகள், வெவ்வேறு ஸம்ப்ரதாய அனுஷ்டானங்கள் நிரம்பிய இந்நாட்டிலுள்ள பொதுமக்களுக்கு இருக்கிறதெனவே நாம் நினைக்கின்றோம். அவ்விஷயங்களனைத்தையும் அவசியம் கவனிக்குமாறு நாமும் அவர்களை வற்புறுத்தி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

உலகில் ஊன்றியிருக்கும் பல நற்காரியங்களை வலுப்படுத்த, பழைய பெரும் ஆராய்ச்சியாளர்கள், வரலாற்று விசார நிபுணர்கள், விஜ்ஞான வித்பன்னர்கள் உதவுவதென்பது மிகப் பழைய ஸம்ப்ரதாயமுறை. ஸ்ரீமத் பகவத் கீதையில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணனும், (ந பு₃த்₃தி₄பே₄த₃ம் ஜநயேத்|) எந்த எந்த நிலையிலிருந்து எவரெவர் எவ்வித நற்காரியங்களில் ஈடுபட்டு அவைகளை அனுஷ்டான மூலம் அநுபவித்து மனச் சாந்தியின் வளர்ச்சியைப் பாதுகாத்து வருகின்றனரோ, அவர்களுக்கும் அவர்கள் பின்பற்றிவரும் செய்கைகளுக்கும் இடைஞ்சல்களைச் செய்து அவர்களுடைய புத்திப்போக்கைக் குழப்புவது சரியல்லவென்றும், அது தமக்குப் பிடிக்காத பெரும் பாவகார்யமெனவும் அபிப்ராயப்பட்டிருக்கிறார். நெடுங்காலமாக எவர்க்கும் எவ்வித இடைஞ்சல்களையும் செய்யாமல் தங்களுடைய பெரியோர்கள் வகுத்து வந்திருக்கும் வழிகளைப் பின்பற்றிக்கொண்டு அமைதியாகவும், ஒழுங்காகவும் வாழ்ந்து வரும் ஸ்வஸம்ப்ரதாயஸ்தர்களைக் கலக்கிக் கவலைப்படும் நிலைமைக்கு இந்த அக்னிஹோத்ரம் ஸ்ரீ. உப. வே. ராமாநுஜ தாதாசார்யஸ்வாமி தமது விஜ்ஞான விசார ஆராய்ச்சி யோக்கியதையைப் பயன்படுத்த முயன்றது, எவ்வளவு தூரம் உலக வாழ்க்கைக்குத் தற்காலிகமாக இவருக்குப் பயன்படக் கூடியதாக இருந்தபோதிலும், இவருடைய உயர்ந்த குலத்

திற்கும், இவருடைய தார்மிக ஸந்ததியார்களுக்கும், இவ்வுலகில் புகழையோ, புண்ணியப் பயன்களையோ, வேறு விதங்களான மறுமைக்குரிய க்ஷேம வழிகளையோ தேடி வகுத்து வைத்து விட்டதாக நினைத்து, இவர் சந்தோஷப்படவோ, சமாதானப்படவோ வழியில்லை என்பது நம் அபிப்ராயம்.

ரிஜிஸ்தர் செய்த தபால் மூலம் இந்த தேவஸ்தானத் தலைமை நிர்வாஹிக்கு, நாம் பல சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள அனுப்பிய கடிதத்திற்கு, எவ்வித பதிலையும் எழுதாமல் இவர் மௌனமாய் இதுவரை இருந்து வந்திருப்பது இவருடைய மிகப் பொறுப்பான அதிகாரப்பதவிக்கு நன்மையையோ, பெருமையையோ தேடி வைத்ததாக ஆகிவிடாது என்பதை இவர் உணர முடியாத நிலைமையில் இருப்பதாகவே நாம் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

இந்தப்பெரும் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீ சாரங்கபாணி க்ஷேத்திரத் திற்கு வெகு அக்கரையுடன் தொண்டு செய்திருக்கும் அற நிலையக் காப்பாளர்களான அரசாங்க அதிகாரிகளும், இவர்கள் ஊக்குவித்துவரும் ஆராய்ச்சிச் சைவத்திருக்கூட்டக் குழுவினரும், கும்பகோணம் பெரும் ஈசுவரன், கும்பேசுவரஸ்வாமியினுடைய தேவஸ்தானத்திற்கும் சம்பந்தப்பட்டவர்களாக இருக்கிறபடியால், **வரலாற்றில் (வந்த) சிறந்த சைவப்** பெரும் ஸம்ப்ரதாயத்திற்கும் **அக்னிஹோத்ரம் ஸ்ரீ. உப. வே. தாத்தாசார்யரைப்** போன்ற '**வேதவேதாங்க பாரங்கத நிபுணரும், சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சிப்** புகழ்பெற்றவருமான' ஒருவரையும் ஊக்குவித்து 'தமிழ்நாட்டுத் தெய்வங்கள் வழிபாட்டி'ற்குச் சிறந்த தொண்டைச் செய்யவும் தாமதிக்காமல் முனைவார்கள் என்று நாம் நம்புகின்றோம்.

இந்த விஞ்ஞான, வரலாற்று ஆசிரிய நிபுணரான 'வேத வேதாந்த - பாரங்கத' 'பாஷாந்தரத்திலும் நல்ல பாண்டித்ய முடைய' இந்த **அக்னிஹோத்ரம்** ஸ்ரீ. உப. வே. **தாதாசார்யர் ஸ்வாமி** இவருடைய '**வரலாற்றில் பிறந்த வைணவம்**' தமிழ் நாட்டில் மட்டும் பிறந்து வளர்ந்து வந்திருப்பதாக நினைத்து மற்ற ப்ரதேசங்களின் '**வைணவ**' விஷயங்களை ஒதுக்கி விட்டாரா, அல்லது இந்த கும்பகோணம் க்ஷேத்திர நூலில் அதை கவனிக்கவேண்டிய அவசியமில்லையென்று விட்டு விட்டாரா என்பது நமக்குப் புரியவில்லை. ஆனால், தமிழ் நாட்டில் கும்பகோணத்திலேயே சிறந்து விளங்கும் ஸ்ரீமாத்வ

'*வைணவ*' *ஸம்ப்ரதாயத்தைப்* பற்றியும், அந்த ஸமூகத்தினரின் நிலைமையைப் பற்றியும் ஒரு வார்த்தைகூட வரையாமல் ஏன் இவருடைய வரலாற்றின் விஞ்ஞான, விசார ஆராய்ச்சியிலிருந்து அவர்களை இவர் அலக்ஷ்யம் செய்து அகற்றிவிட்டார் என்பதை அவர் விளக்கிக் கூறவேண்டிய அவசியமிருக்கிறது. அவர்களை இவர் '*வைணவர்களாக*' நினைக்கவில்லையா?

மேலும் ஸ்ரீராமானுஜீய '*வைணவர்*'களைப் பற்றிய மிக முக்கிய விஷயமொன்று இவரால் மறக்கப்பட்டிருக்கிறது. இவரைத் தாங்கி இவருடன் கலந்து உழைத்த சைவத்திரு ஆராய்ச்சிக் குழுவினர்களாலும் இவருக்கு அது நினைப்பூட்டப்படவில்லை. "*திருமண்*" விஷயம் மிக முக்கியமானது. இதைத் தரிக்கும் **ஸம்ப்ரதாயம்** எப்பொழுது ஆரம்பமாயிற்று? அதன் அர்த்தமென்ன? வேதகாலத்திற்கு முன் அம்முறை இருந்ததா? அல்லது நவீனமாகப் பின் வந்த எந்த ஆசார்யர் மூலமாக வாவது இது திணிக்கப்பட்டதா? ஆரம்பத்தில் நெற்றியில் மட்டும் ஒரே *திருமண்* இருந்ததா? அல்லது அப்பொழுது முதலேயே ***12 திருமண்கள்*** (பன்னிருநாமங்கள்) தாரணமும் கலந்து வந்துள்ளதா? ***திருமண் தாரணம்*** பகவானுடைய திருவடிகளாக நினைத்துச் செய்யப்படுகிறதாகச் சொல்லப்படுகிறதே. அப்படியானால் அந்த பகவானுடைய நெற்றியில் அவருடைய திருவடிகளையே சாற்றுவதின் கருத்தென்ன?

இவைகளையெல்லாம் இவர் மறந்து எதையும் எழுதாமல் விட்டுவிட்டதன் மர்மம் யாது? இப்பொழுது வெளிவந்துள்ள முதற் பதிப்பில் இது வெளிவராமல் விட்டுவிடப்பட்ட போதிலும் இதன் மறு பதிப்பிலோ, அல்லது இத்தேவஸ்தானச் சார்பில் வெளிவரக் கூடியதாயுள்ள மறு பதிப்பிலோ இதன் வரலாற்றுத் தத்வங்கள் இவரால் சேர்க்கப்பட்டுவிடுமென நாம் நம்புகின்றோம். இவர் ஸ்வயமாகச் சேர்க்க விரும்பாவிட்டாலும் இவருடன் கூட உழைத்துவந்த சைவத்திருக் குழுவினராவது அதைச் சேர்க்குமாறு வற்புறுத்தட்டும்.

குறிப்பு: இந்நூலில் வெளிவந்துள்ள விஷயங்கள் எல்லாவற்றையும் பற்றி தனிப் பிரசுரங்கள் மூலம் அடுத்தடுத்து விசாரிக்கப்பட்டு வரும்.

4, வி. எஸ். முதலிதெரு,
சைதாப்பேட்டை, சென்னை–15.

தார்மிக ஹிந்து மிஷன்
சென்னை-15.

30. ஸ்ரீராமாநுஜ த₄ர்ம ப்ரசாரிணீ ஸபா
(Regd. S. No. 120 of 1964, Act XXI of 1860)

70, G. S. T. ரோட்,
குரோம்பேட்டை, சென்னை-44.

தே₃ஶிக ஸம்ப்ரதா₃யஸ்த₂ ப்ரமுக₂ வித்₃வந்மணிகளின் கண்டனத் தீர்மானம்

[சபைக்காரியதரிசி ஸ்ரீ உ. வே. T. S. ஸு₃ந்தரமய்யங்கார் ஸ்வாமி ஆங்கிலத்தில் அனுப்பிய செய்தியின் ஸாரம்]

மேற்படி சபையின் சார்பில் 1974ம் ௵ பிப்ரவரி ௴ 9, 10 தேதிகளில் காலை 11 மணி முதல் 'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்னும் நூலை ஆராய்வதற்கு ஓர் வித்₃வத்ஸத₃ஸ் நடைபெற்றது. முதல்நாள் அபி₄நவ தே₃ஶிக ஸ்ரீ உ. வே. உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமியும். இரண்டாம்நாள் ஸ்ரீ உ. வே. திருக்கள்ளம் நரஸிம்ஹராகவாசார்ய ஸ்வாமியும் தலைமை வகித்தனர். முன்னாள் பீஹார் கவர்னரும். முன்னாள் பாராளுமன்ற சபாநாயகருமான ஸ்ரீ உ. வே. M அநந்தசயனமய்யங்கார் ஸ்வாமி முதலான ப்ரமுகர்களும். ஸம்ஸ்க்ருதப் பேராசிரியர் ஸ்ரீ உ. வே. V. S. வேங்கடராகவாசார்ய ஸ்வாமி (சென்னை). வித்₃யாவிஶாரத₃ ஸ்ரீ உ. வே. ஸ்ரீராமதே₃ஶிகாசார்ய ஸ்வாமி (உப்பிலியப்பன் ஸந்நிதி). வடுவூர் ஸ்ரீ உ. வே. ரங்கநாதாசார்ய ஸ்வாமி. ஸ்ரீ உ. வே. ஸ்ரீதரதாதாசாரியர் ஸ்வாமி, ஸ்ரீ உ. வே. ஸ்ரீவத்ஸாங்காசார்யர் ஸ்வாமி. (அழிசூர்) ஸ்ரீ உ. வே. விஜயராகவாசார்யர் ஸ்வாமி, 'த₄ார்மிக ஹிந்து' ஆசிரியர் ஸ்ரீ உ. வே. ஜகந்நாதாசார்ய ஸ்வாமி ஸ்ரீ உ. வே. ரங்கநாத அய்யங்கார் ஸ்வாமி முதலான வித்₃வந்மணிகளும் ஸத₃ஸ்ஸின் விவாதங்களில் பங்குபெற்றனர். சுமார் இருபது சிரோமணிகளும். மற்ற

வித்₃வான்கள் முப்பதுபேரும் ஸத₃ஸ்ஸில் கலந்து கொண்டனர். "வ. பி. வைணவம்" நூலாசிரியருக்கும் ஸத₃ஸ்ஸில் கலந்துகொள்ள அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. அவர் கலந்துகொள்ளவில்லை. ஸத₃ஸ் முடிந்த பிறகு தன்னால் வரமுடியவில்லையென்றும், பிறிதொரு சமயம் வைத்துக்கொண்டால் கலந்து கொள்வதாகவும் அவர் பெயரில் ஓர் தந்தி வந்தது. ஸத₃ஸ்ஸில் கலந்து கொண்டவர்கள் அத்தனைபேரும், ஒருமுகமாக வ. பி. வைணவம் நூலில் உள்ள பல பொருந்தாமைகளையும், முரண்பாடுகளையும் கண்டித்துப் பேசினர். (முன்னாள்) பாராளுமன்ற சபாநாயகரும், (முன்னாள்) பீஹார் கவர்னருமான ஸ்ரீ உ. வே. M. அநந்தசயனமய்யங்கார் ஸ்வாமி ரிக்வேதத்திலிருந்து பல மந்திரங்களை மேற்கோள் காட்டி, வைஷ்ணவமே அநாதி₃யான வைதி₃கமதம் என்று நிரூபித்தார். பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது.

தீர்மானம்

கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி தேவஸ்தான அதிகாரிகளால் வெளியிடப்பெற்ற "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்னும் நூல் பற்பல முரண்பாடுகளை உடையதாயிருக்கிறது. பொதுவாக இந்து மதத்தினுடையவும், குறிப்பாக வைணவ மதத்தினுடையவும் உயிர்நாடியான கொள்கைகளைத் திரித்துக் கூறுவதாகவும், ஆஸ்திகர்களுடைய மனத்தைப் புண்படுத்துவதாகவும், பக்தியுடன் ஆலயவழிபாடு செய்பவர்களை இழிவுபடுத்துவதாகவும் இருக்கிறது. ஆகையால் இந்து அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள் இந்நூலை முழுவதும் தடைசெய்ய வேண்டுமென்றும், இனி, இந்நூலைப் பிரசாரம் செய்வதைத் தடுக்கவேண்டுமென்றும் இந்த சபை கேட்டுக் கொள்ளுகிறது.

31. ஸ்ரீ உ. வே. M. அநந்தசயனமய்யங்கார் ஸ்வாமி

(முன்னாள்) பீஹார் கவர்னர், (முன்னாள்) பாராளுமன்ற சபாநாயகர், திருப்பதி கேந்த்ரீய ஸம்ஸ்க்ருத வித்₃யாபீடத்தின் தலைவர், திருப்பதி.

[ஸுத₃ர்ஶனம் ஆசிரியரின் குறிப்பு:— 'வ. பி. வை.' நூலின் அபத்தங்களில் தலையானது 'வேதத்தில் ஸூர்யனைத் தவிர வேறு விஷ்ணு கிடையாது' என்று கூறியிருப்பது. (சென்னை-44) ஸ்ரீராமாநுஜ த₃ர்ஶந ப்ரசாரிணி ஸபையின் ஸதஸ்ஸில் கலந்துகொண்ட முன்னாள் சபாநாயகர் ருக்வேதத்திலிருந்து பல மேற்கோள்களைக் காட்டி இவ்விஷயத்தைக் கண்டித்து, வைணவத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளபடியே வேதத்தில் விஷ்ணு ஸ்வரூபம் கூறப்பட்டுள்ளது என நிரூபித்தார். இவ்விஷயத்தை ஆங்கிலத்தில் ஓர் கட்டுரையாகவும் எழுதி ஸுதர்ஶனத்தில் பிரசுரம் செய்ய அனுப்பியுள்ளார். ஸ்வாமி எடுத்துக்காட்டியுள்ள விஷ்ணுஸூக்த ருக்வேத மந்திரங்களும், மற்றும் நூற்றுக்கணக்கான வைஷ்ணவ வேதமந்திரங்களும் நமது விஷ்ணுசித்தவிஜயத்தில் விரிவான வியாக்கியானத்தோடு தமிழில் வெளியிடப்பட்டுள்ளன.' வ.பி.வை." நூலில் ஆதாரமாக எடுக்கப்பட்ட மேல்நாட்டு ஆராய்ச்சியாளர் விஷ்ணுவைப்பற்றி எழுதியிருப்பது அறியாமையாலானது என நிரூபிக்கும் அநந்தசயனம் அய்யங்கார் ஸ்வாமியின் ஆங்கிலக் கட்டுரையை இனி அளிக்கிறோம்.]

SRIVAISHNAVISM IN THE VEDAS

Srivaishnavism is the earliest and oldest of the religions prevailing in India today and is the only Vedic religion.

The principal tenets of Sri Vaishnavism as is practised today are the following:

That Sri Mahavishnu is the supreme being, the supreme creator, sustainer and destroyer of the world, that he is both immanent in the material universe as Antharyamin and transcendent in heaven, in Paramapadam, that the means of attaining him is Bhakti or Prapatti and that Sri Mahalakshmi, as Lord's Consort acts as intercessor to the individual souls to attain salvation.

Some western scholars in their translations and commentaries on the Rigveda have said that the Aryans during that period were worshiping a plurality of Gods and that Vishnu was only a minor deity then and later on in about 400 BC the Bhagavath school was started and associated with Vishnu. Some Indian scholars have also followed this view. The Semitic religions of Judaism, Christianity and Islam speak of only one God - the Father who is in heaven and who is the creator of the world. To them he is not immanent in the universe but is only transcendent in heaven. But from the earliest times, the Hindu conception has been that God is both transcendent in heaven and immanent in the world of creation also as its Antharyamin. He is also both the material cause and instrumental cause of creation. Like a spider which weaves its web by projecting it from its own body, God creates the world by projecting it from his body of prakriti and individual souls which are in him during Pralaya or destruction and which he projects and transforms into beings during creation. It is true that apparently a number of independent deities are invoked in the Rigveda during the sacrifices, and boons are asked of them by the votaries. The first, 12th and 13th sukthas of Rigveda relate to Agni or fire,

the 2nd to Vayu or air, from the 4th to 11th and 16th, 17th and 21st to Indra, the 3rd to Aswins or the heavenly stars who were supposed to be the heavenly doctors, the 14th hymn to all other Gods (Visvedevas) the 15th to seasons and in hymn 22, verse 15 they pray to mother earth to grant them land free from thorns for their dwelling and from verse 16th to 21st in the same hymn they praise Vishnu who strode through the seven worlds and created the world.

The Rishis who sang these hymns seem to have been poets. They were in ecstasy over the beauties of creation and began to sing on various aspects of nature, describihg every one of them, offering oblations to them and praying for their help for a better and happier life full of prosperity. To them everything in the universe was permeated by God and was his manifestation and divine in nature. In the first mandala, hymn 164, verse 46 they refer to all these Gods-Agni Indra etc. as manifestations of one substance or being, which the learned call by various names. एकं सत् विप्राः वहुधा वदन्ति "Ekam sat Vipra Bahudha Vadanthi". To them, therefore, there were no separate Gods or a plurality thereof, but a single God was manifesting himself in various forms and shapes. This faith, some of the western scholars call Pantheism and Max-Mullar called it Henotheism. By whatever name it might be called the central theme in Hindu philosophy and religion from the earliest times, has been that there is only one supreme being or God the creator. He is both its material and instrumental cause and that he is immanent in the universe as he is in heaven also.

That he is the material cause is clear in the above stanza "Ekam sat Vipra Bahudha Vadanthi". That he is the instrumental cause or creator is given in stanzas 16 to 21 relating to Vishnu in hymn No. 22 of the first mandala itself.

After stating in verse 16 that Vishnu strode through the seven worlds, in stanza 17 they refer to his striding through the whole world placing his foot thrice and describing that the whole world was gathered in his foot steps' dust.

Of the three steps, one was placed on the earth, the second covered the region above the earth including the entire stellar region and the third was placed in heaven. That place is Paramapadam, Vishnu's supreme abode, which is like an eye set in heaven over-looking in an unobstructed manner, the whole universe of creation. Sages perceive it constantly. It is a pity that Mr. Griffith in his translation of the Rigveda in stanza 20 translated the words "Suris" as the princes or the wealthy patrons of sacrifice:

तद्विष्णोः परमं पदं सदा पश्यन्ति सूरयः।
दिवीव चक्षुराततम्।

In the next Rik-21, it is described that the supreme abode of Vishnu is lighted constantly by ever vigilant and wise sages by their songs of praise. The author of the hymn is so struck with the magnificence and might of Vishnu that he invokes the help of lesser Gods to protect him against sins committed by mortals on earth.

Earlier in the same sukta he describes Vishnu as the protector from their enemies and who was also the maker of law or Dharma and its sustainer.

त्रीणि पदा वि चक्रमे विष्णुर्गोपा अदाभ्यः।
अतो धर्माणि धारयन्।

In the same sukta-verse-19 the Rishi calls upon all his fellow men to come and have a look at the grand works that Vishnu had done. This is sufficient to prove that even in the Rigveda hymns, Vishnu was described both as an all perveding and encompassing God, as the creator of the universe and as also the instrumntal cause thereof. He is also their protector and guardian and has a fixed abode in heaven which sages only see and praise. It also indicates that the ordinary mortals are struck with the magnificence of this creation. Later in sukta 154 of the first mandala Vishnu's works and valour are extolled, that he created the worlds from earthly dust meaning "Prakriti" and that he is Urugaya—a person who was being sung or praised enormously:

विष्णोर्नु कं वीर्याणि प्रवोचं यः पार्थिवानि विममे रजांसि।
यो अस्कभायदुत्तरं सधस्थं विचक्रमाणस्त्रेधोरुगायः॥

In stanza 2 of that suktha it is said that Vishnu is praised for his valour by all, as he is like a lion sitting on the top of the mountain and is a terror to all enemies of mankind. It is also stated therein that all the worlds (beings) are covered in his three steps. That he is the supreme being seated above, who is greatly praised and is the sole creator of the universe and giver of boons, is laid down in stanza three of that suktha as follows :

प्र विष्णवे शूषमेतु मन्म गिरिक्षित उरुगायाय वृष्णे ।
य इदं दीर्घं प्रयतं सधस्थमेको विममे त्रिभिरित्पदेभिः ॥

and they offer to such a creator all their strength and their praise. In the next stanza 4, all his three steps are described as being full of honey, never drying up and which feed and make all his creatures feel maddened. As he is the protector, so he is the sustainer also who gives food perpetually to the beings in his creation and in the next line, it is said that he, not only maintains his creatures with food but he also supports singly both the earth and the heaven and all the worlds and their living creatures. In the next two stanzas 5 & 6 His abode in heaven is described as one where honey flows, who is the true friend of all, where a devotee enjoys ecstasy, which is eternally lit and is brilliant and the Rishi the poet, exhorts all men to attain and enjoy that dear abode of the great strider

यो जातमस्य महतो महि ब्रवत्सेदु श्रवोभिर्युज्यं
चिदभ्यसत् ॥ सू. 156 २ ॥

तमु स्तोतारः पूर्व्यं यथा विद ऋतस्य गर्भं जनुषा पिपर्तन
आस्य जानन्तो नाम चिद्विवक्तन महस्ते विष्णो सुमतिं भजामहे ॥ ३ ॥

In the next suktha 156, the singer advises his men to praise aloud in song their draught of juice to Vishnu. As Indra and Vishnu will turn far aside all evil directed against mortal men, as Sri Vishnu will bring both the parents down to share the genial flow Somajuice, he lauds this manly power of the mighty one preserver, inoffensive, bounteous and benign and he who strode over the realm of earth for freedom and for life.

He says further that a mortal man when he beholds two steps of him, he, who looks upon the light becomes restless with amaze. But his 3rd step doth no one venture to approach, no, nor the feathered birds of air who flow with wings It clearly shows that, that abode or Paramapadam is not reachable by ordinary mortals but by only very pious men. Lastly in that sukta the rishi says that Vishnu who developed vast in form was a youth no more a child and he cometh to our call. This clearly shows, how useful is Lord Vishnu and easily accessible and helpful to his devotees.

In the next hymn 156, the Rishi requests Vishnu to be helpful like Mitra the Sun to him. He further says to Vishnu that even the wise should swell the song of praise to him and he who hath oblations pay the solemn rites. यः पूर्व्याय वेधसे नवीयसे सुमज्जानये विष्णवे ददाशति। In stanza two, reference is made to Vishnu's spouse as 'Sumajjanaye' explained by Sayana to mean Self born. The stanza declares that he who brings gifts to him the ancient and the last, to Vishnu who ordains together with his spouse, who tells the lofty birth of him, the Lofty one which shall very well surpass in glory even his peer. In the next verse he is also described as the primeval germ of order even from his birth and the Rishi asks his men if they have satisfied Him with their songs and having known his name Vishnu have repeated it and at the end of that stanza they ask Vishnu "May we Vishnu! enjoy the grace of thee Mighty one". Here it is clearly said that both by songs in his praise and by the repetition of

the name of Vishnu one can obtain the grace of the Mighty Lord. Thus Vishnu's worship consisted then of his praise and prayer in song, the repetition of his name and in offering oblations to him. That he is the supreme being and the ovelord of all the Devas is mentioned in the next stanza as follows: The Soverign Varuna and both Aswins wait on this will of Him who guides the Maruth host. Vishnu had power and might that finds the day and that his friend (meaning Indra) unhorsed the stable of the kine. The last stanza refers to Vishnu's having gone to Indra to assist him and is described as Godlier than Gods that is than even Indra the Lord of the Gods.

Lastly in the same stanza Vishnu is described as maker throned in three worlds, helps the Aryan men and gives the worshipper his share of Holy Law.

Thus in these sukthas 22, 154, 155 and 156 of first Mandala of Rigveda Vishnu is described as the creator of the seven worlds and the universe, of all its beings, that he is their protector, sustainer and maintainer with food; that after his two steps covering the entire manifested universe his third step is in heaven called Paramapadam which Sages see and is difficult to reach, but at the Same time is full of sweetness and honey and immortality. That Vishnu is the real friend of all and Rishis exhort their men to offer oblations to him, to praise him with their songs and to repeat his name as Vishnu, so that they may win His Grace. He is gracious along with his wife. He is the overlord of even Varuna, the King and his help is sought even by Indra. Vishnu means an all pervading and all

embracing person and he had shown by his action, his valour. He is, therefore, not formless nor nirguna. That he is the material cause also is laid down in sukta 164 stanza 46. He is therein described as Sat which is the one being or substance which is however called by several names which denoted after creation different Gods like Agni, Indra, Varuna and Maruth etc. created by him.

This is also the description of the creator in the Chandogya Upanishad. There the following passage occurs "Sadeva Soumya Idam Agre Aseeth Ekameva Advitiyam". The Same expression 'Sat' is used in this upanished to denote the creator as in the Rigveda Suktha No. 164. It is further said that Sath willed to become many and created light, water and earth and by their permutation and combination created beings. The only difference is that Sat is used as the material of the universe in Rigvedic suktha and the creator as Vishnu is described in another sukta. In the Rigvedic reference to only sat as existing in the beginning corresponds to Ekameva Advitiyam in the Upanishad.

And this Upanishadic portion is the basis for the Brahmasutras on which all schools of philosophy and religion prevailling in Hinduism, Sankara's, Ramanuja's and Madhva's etc. are based.

In the Brahmasutras, however, the creator is called Brahman in the place of Sath **अथातो ब्रह्मजिज्ञासा** in the first sutra and Brahman is described in the next sutra as "Janmadi Asya yataha" meaning "that from (by) which this world is created, protected and destroyed" Brahman means

the vast expansive, all pervading and embracing one. The expression Vishnu also means the same Sath, Vishnu and Brahman are all synonyms denoting the All-Mighty. The upanishads denote this Almighty by the words Sat, Brhman, Atman, Indra, Siva, Hiranyagarbha which are more and more definite and finally denote him by the word Narayana and thus fix the identity of the supreme being denoted as Sat and Vishnu in Rigveda. Thus, the descriptions of the creator in the Brahmasutras and the upanishads and the Rigveda are one and the same. He is the substance by which the world was made and he is also its maker.

In Sri Ramanuja's system of philosophy and religion Sri Vishnu is the supreme being and creator. His abode is in heaven, that those who reach him are pious men, that that place is full of bliss and when one goes there he does not return. He has his spouse who assists him in showing grace to mankind. These are all the main tenets of Srivaishnavism, as practised today. Oblations, prayer and praise and repetition of His name are the modes in which Bhakti or devotion is expressed. In fact Bhakti or devotion has to be practised by meditation in mind, by songs of praise and repetition of the Holy name by word of mouth and by oblations and other services by the body. These constitute Bhakti and these are the means which have been laid down for attainment of the moksha in the Rigveda and they are the same means for salvation prescribed by upanishads and followed by Ramanuja.

A word about the western scholars: They did good exploratory work on Indology, but some of them

had ulterior motives and evil designs as Horace Hemen Wilson, speaking before the University of Oxford in 1840 said that he desired to study the Hindu religion in order to prove its errors and to persuade the Hindu intelligentsia to adopt the Christian faith. But there are other western scholars who tried to enter into the spirit of the Vedas with a sympathetic approach. In Volume 31 of the Horward Oriental series page 109 by Borrodiel Kieth describing Vishnu, it is said as follows: It would be impossible to deny to Vishnu, the position of a great God in the period of the Rigveda, for that would be to forget that the comparative prominence of the Gods is not necessarily brought out fully. They were then mainly concerned with the Soma sacrifice and did not therefore take great account of those deities who were not of much consequence in that sacrifice.

In the Itharaya Brahmana Vishnu is declered to be the highest of the Gods And Agni the lowest. Dr. Kieth in the 32nd volume says at page 433 in the chapter relating to the beginning of Vedic philosophy as follows: "The earliest poetry of India already contains many traces of the essential character of the philosophy of India. In nothing indeed does the continuance of Indian life show itself more strikingly than this. The Gods of India changed but the alteration of the higher thought was far less marked".

It is common knowledge that even in these advanced days people are more after earthly benefits for which they worship Vishnu the Lord and there are only a few who pray to him for salvation, liberation and bliss.

Besides the supreme God Vishnu, there are now as many Gods worshipped as in the Rigvedic period, but only of different denominations. This will be the state till eternity, for a humnn being wants immediate benefits and is prepared often to leave his future after death to take care of itself. Further, during the vedic period there was no other religion than Vaishnavism. I am sure there was no need then for anybody to call himself specifically as a Vaishnava. Other religions have since sprung up. The age long Vaishnava religion has there fore to be specially called Vaishnavism to differentiate it from saivism and Sakthaism. Otherwise even today it would not be called by any special name. There was no need to call oneself a Vaishnava in the vedic period as no other supreme being was worshipped then as the creator. Rudra was the father of the Maruths and had control over the winds as Indra had over the clouds. Rudra was treated as one of the several deities of nature worshipped then and was not declared as the supreme being or the creator in the Rigveda.

The fallic form of worship was not practised by the Aryans then, but only by non-aryans. It is thus clear that of all the religions practised in India today Srivaishnavism is the earliest and oldest and was prevalent during the Rigvedic period and practised with all the details as are being practised today. In fact that is the only Vedic religion of India even to this day and there is none other. The Advaita school of Sankara no doubt refers to Brahman as the Bramhasutras do, but not as the supreme being or the creator as it recognises the existence of no other being nor a created

world or its creatures as real. According to that school there is no separate God other than oneself. It is only a system of philosophy and not of religion. Their description of Bramhan is one without form and without qualities and one who created no world because the existing world is a myth. The only existence is oneself and not even other beings and that by constant auto-suggestion one realises his real nature as Brahman himself. As a worm becomes a wasp by constantly thinking of the wasp, even if it be, on account of fear, so one becomes Brahman by knowledge and suggestion. No prayer is necessary to obtain the Grace of God to attain the Brahman-hood but one has only to realise it by knowledge. There is really no relationship between oneself and the supreme being other than one of identity. In the Oxford dictionary Theism is defined as a belief in the existence of a God supernaturally revealed to man and sustaining a personal relation to his creatures and Monotheism is defined therein as a belief in a doctrine that there is only one such God. Srivishnavism is both a philosophy and a religion based on philosophy. Religion is defined in the same dictionary as one of the prevalent systems of faith and worship and a human recognition of a super human controlling power and especially God entitled to obedience, effect of such recognition on conduct and mental attitude.

Tirupati.
Dated: 5—2—74. } M. Ananthasayanam Iyyangar.

[Hundreds of Vedic Mantras are explained in Tamil and the supremacy of vishnu is established in the following book published by us:- VISHNUCHITTA VIJAYAM (2 Parts) Price Rs. 12. — Editor.]

32. ஸ்ரீ உ. வே. A. ராமஸ்வாமி அய்யங்கார்,

கோயில் வேதபாராயணம், ஸ்ரீரங்கம், திருச்சி-6.

கலங்கிய சிந்தையில் பிறந்த நூல்

வரலாற்றில் பிறந்த வைணவம் என்னும் நூலைக் காண நேர்ந்தது. அதை ஆக்கியோன் யார் என்று பார்த்ததில் மிகவும் வருத்தமே உண்டாயிற்று. ஏனென்றால் ஸ்ரீமந்நாதமுனிகள் திருவம்சத்தில் பிறந்ததாகக் கூறப்படும் ஓர் (அத்₃விதீயமான) ஸ்வாமி இதை ஆராய்ச்சி என்னும் பெயரிட்டு வெளியிட்டிருப்பதனுலேயே. இங்கு, ராமாநுஜநூற்றந்தாதியில் ஒரு பாசுரம் ஞாபகத்திற்கு வருகிறது.

"பொய்யைச் சுரக்கும் பொருளைத்துரந்துஇந்தப் பூதலத்தே
மெய்யைப்புரக்குமிராமாநுசன் நிற்க வேறு நம்மை
உய்யக்கொள்ளவல்ல தெய்வமிங்கியாதென்றுலர்ந்து அவமே
ஐயப்படாநிற்பர் வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே"

என்ற பாசுரமே அது. அறிவிழந்தால் மீண்டும் அறிவுபெறலாம். நல்லறிவிழந்தால் அதை மீண்டும் பெறுவது கடினம்.

இந்த ஸ்வாமி வேதகாலம் என்று கூறுகிறார். வேதம் உண்டான காலமும் முறையும் இவர் உணர்ந்ததவே இல்லை. அத்துடன் ஸமக்₃ரமான வேதத்தை இவர் கூறுபோடுகிறார். சில பாகத்தைக் கழிப்பதற்காக அதாவது உபநிடதங்களில் வருமவற்றைப் பிற்பட்டது போலக்காட்டவும், கர்மபாகத்தில் வருமவற்றை முற்பட்டதுபோல் காட்டுவதற்காகவும் இப்படி பேசுகிறார். வேதத்திற்கு நான்கு பாகங்கள் உண்டு — மந்த்ரம் ப்ராம்ஹணம் ஆரண்யகம் உபநிடதம் என்று. ஆகிலும் எல்லாம் சேர்ந்துதான் ஒரு வேதம் என்று சொல்லப்படுகிறது. இவை எல்லாம் தெரிந்திருந்தும் அப்பாவிகளை ஏமாற்றுவதற்காக இந்த நூலை வெளியிட்டிருக்கிறார். ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆராய்ச்சிக்கு உறுதுணையாக இந்த இந்த நூல்களை ஆதாரமாகக்கொண்டு இது எழுதப்படுகிறது என்று கூறுவார்கள். இவர்க்கு அவை எல்லாம் கிடையாது. இவர் மனம்போனபடி எழுதியிருக்கிறார்.

இரண்டொரு இடங்களில் சிலர் பெயரைச் சொல்லியிருக்கிறார். அவர்கள் சொன்னதைத் திரித்துக் கூறியதாக அவர்களே தெரிவித் திருக்கிறார்கள். "விஷ்ணு சூர்யன்தான் என்று யாஸ்கர் கூறி விட்டார்" என்று முற்றுப்புள்ளி வைக்கிறார். "ராமாநுஜர் ப்ரம்மத்திற்கு ரூபம் குணம் இவைகள் உண்டு என்று விளக்கம் கூறினார். யார் எந்த விளக்கம் கூறினாலும் ப்ரம்மம் என்பது ப்ரம்மம்தான். அதற்குத் தனியான பெயரில்லை" என்று மறுமுறை எம்பெருமானார் திருநாமத்தைச் சொல்லவே மனமில்லாமல் "யார் என்ன விளக்கம் கூறினாலும்" என்று அநாதரம் தோன்ற எழுதுகிறார். இந்நூலில் பக்கம் பக்கமாக மறுப்பு எழுதப்புக்கால் சுமார் 1000 பக்கங்கள் எழுதவேண்டிவரும். ஆகையால் ஒன்றை மட்டும் காட்டிவிட்டு நிறுத்திக்கொள்கிறேன்.

பக்கம் 318-319ல் "நாராயணன் என்ற சொல் திடீரென்று எப்படி முக்கியத்வத்தைப் பெற்றது என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம்" என்று எழுதுகிறார். என்னே இவரது ஆராய்ச்சி! தைத்திரீய ஆரண்யகம் 3-வது ப்ரச்னம் 12-வது அநுவாகமான புருஷஸூக்தத்திற்கு உரை எழுதும் வித்யாரண்யர் "நாராயணன் என்னும் ரிஷியினால் அறியப்பட்டதாலும் நாராயணனை ப்ரதிபாதிப் பதாலும் இது நாராயணாநுவாகம் என்று பெயர் பெற்றது" என்று எழுதுகிறார். இதற்கும் மேல் காண்வ—மாத்யந்தின சாகை களில் எத்தனை பர்யாயம் அந்தர்யாமி ப்ராம்மணத்தில் நாராயண நாமம் ஓதப்பட்டிருக்கிறது என்று கணக்கிட்டாலே, இந்தத் திருநாமத்தின் ப்ரஸித்தியும் விளங்கும். விஷயம் இப்படி இருக்க இந்த ஸ்வாமி "திடீரென்று நாராயணபதம் ப்ரஸித்தி பெற்றது ஆராய்ச்சிக்குரிய விஷயம்" என்று எழுதுவது யாரை ஏமாற்றவோ தெரியவில்லை. முடிவாக இந்நூலை ஆராய்ச்சி என்னும் பெயரில் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் — அதிலும் ஸாமாந்யரன்று, ஒரு வேதம் ஸலக்ஷணம் மூன்று வேதபாஷ்யம் நன்றாகப்பார்த்துக் கற்று அறிந்தவர், ஸ்ரீமந் நாத₂முநிகள் திருவம்சத்தில் பிறந்தவர் என்று சொல்லப்படும் ஒரு ஸ்வாமி—எழுதினார் என்று நினைக்கும்பொழுது நம்முடைய தெ₃ளர்ப்ப₄ாக்₃யத்தையே நொந்துகொள்ளவேண்டி யிருக்கிறது. எம்பெருமான்தான் இவரைப் பொறுத்தருளல் வேண்டும்.

33. ப்ரியாவின் மநஸ்ஸாக்ஷி விழித்துக்கொண்டது.

ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவுக்கு அஹோ உரைத்த நொண்டிச் சமாதானங்களை ப்ரியா ப்ரமாதி₃ தை இதழில் அச்சிட்டு, "விவாதத்தை வளர்க்க விரும்பவில்லையாகையால் வ. பி. வைணவம் நூலைக்கண்டித்துப் பல மஹநீயர்கள் எழுதிய கட்டுரைகளை வெளியிடவில்லை" என்று முடித்துவிட்டார் ப்ரியா ஸம்பாத₃கர். இப்படி மாநஸ்ஸாக்ஷியை மறைத்துக் கொண்டு எழுதியதைக்கண்டு வெகுண்டெழுந்து, 'ஏகோऽஹமஸ்மீதி" என்னும் ச்லோகத்தில்ஶகுந்தலை து₃ஷ்யந்தனுடைய மாநஸ்ஸாக்ஷியைத் தட்டியெழுப்பியதுபோலே ஸுத₃ர்ஶனம் ப்ரியாவின் மாநஸ்ஸாக்ஷியைத் தட்டியெழுப்பிற்று. இதனால் விழித்துக்கொண்ட ப்ரியா—மாசியிதழில் "கேள்வி பதில்" என்னும் தலைப்பில். அஹோவின் அபச₃ச₄ வாத₃ங்களைக் கண்டிக்கத் தொடங்கியுள்ளது. 'வ. பி. வைணவம நூலி லுள்ள சில விஷயங்களைக் கேள்விகளாகக்கேட்டு. பதில் உரைக்கத்தொடங்கியுள்ளது. காலந்தாழ்த்தியாவது ப்ரியாவின் மநஸ்ஸாக்ஷி விழித்துக்கொண்டதைப் பாராட்டுகிறோம். —ஸுத₃ர்ஶனம் ஆசிரியர்.

பெரியோர்களின் பொன்மொழிகள்

புலையற மாகிநின்ற புத்தொடு சமண மெல்லாம்
கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதாம்
தலையறுப் புண்டும் சாகேன் சத்தியங் காண்மின்ஐயா
சிலையினு லிலங்கைசெற்ற தேவனே தேவனுவான்.

[திருமாலை 7]

வெறுப்பொடு சமணர்முண்டர் விதியில் சாக்கியர்கள் [நின்பால்
பொறுப்பரி யனகள்பேசிற் போவதே நோயதாகிக்
குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமங்கண்டா யரங்கமா நகருளானே.

[திருமாலை 8]

34. ப்₃ரஹ்மஸ்ரீ M. E. சங்கரநாராயண சர்மா,

அனைத்திந்திய ஸ்ரீபகவத்பாதசிஷ்யர்கள் சபை,
49, லக்ஷ்மீநாராயணபுர அக்ரஹாரம், மதுரை-1

தங்கள் பத்திரிகையைப் பார்த்தபின்புதான் அக்னிஹோத்ரம் ராமாநுஜதாதாசார்யர் இப்படி ஒரு புஸ்தகம் எழுதியிருப்பதை அறிந்தேன். வேதத்தில் விஷ்ணு இல்லை என்கிறார். எவரும் அத்யயநம்செய்யாத வேதத்தில் அப்படி இருக்கும்போலும்! நான் அத்யயனம் செய்த க்ருஷ்ணயஜுர்வேதத்தில் ஸூர்யனைக் காட்டிலும் வேறுபட்ட ஸ்ரீ விஷ்ணுவை அடிக்கடி சொல்லுகிறது. "தத்₃ விஷ்ணோ: பரமம் பத₃ம்" "யஜ்ஞோ வை விஷ்ணு:" "அக்₃நிரவமோ தே₃வதாநாம் விஷ்ணு: பரம:" என்று விஷ்ணுவை பரமபத₃த்திலிருப்பவனாகவும், யஜ்ஞபுருஷனாகவும், தேவர்களில் தலைசிறந்தவனாகவும் படிக்கிறது. தேவேந்திரனுக்கு அடங்கியிருக்கும் ஸூர்யன் இப்பெருமைகளை உடையவனாகமுடியாதே! ஆயிரக்கணக்கான வேதவாக்யங்கள் ஸூர்யனையும் விஷ்ணுவையும் வேறாகவே படிக்கின்றன. விஷ்ணு இல்லாமல் வேதம் என்றால் அது வேதமாகுமா? வேதத்தில் விஷ்ணு இல்லை என்னும் இவரைச் சொல்லிக்குற்றமில்லை. இவரும், இவரைப்போன்ற மற்றும் பல பண்டிதர்களும் வெறும் பொம்மைகளே. பொம்மை தானாக இயங்காது. முற்காலத்தில் சூத்திரமும், இக்காலத்தில் சாவியும் (KEY) இழுக்கும் பிரகாரம் பொம்மை ஆடும். அதுபோல் கும்பகோணம் ஸ்வாமிகளின் ஆற்றலுக்கும், தொடாவிற்கும், பணத்திற்கும், சால்வைகளுக்கும், செல்வாக்கிற்கும் வசப்பட்டு, மனிதன்பேச ஒலிபெருக்கி அலறுவதுபோல், விஷயங்கள் நடக்கின்றன. 'மாவின் மணம்போலிருக்கிறது கூழின் குணம்' என்பார்கள். அதுபோல் இவர்களின் ஸூத்ரதா₄ரியாகிய கும்பகோணம் பெரியாரின் குணமே இவர்களுக்கும் இருக்கிறது.

உதாரணமாக (1) மார்க்கண்டேய ஸம்ஹிதையில் ஐந்து லிங்கக்கதை இருக்கிறது என்கிறார்கள். அப்பெயருடைய கிரந்தமே கிடையாது. மற்றோருக்குக்காணவில்லை. அவர்களுக்கு மட்டிலும் வந்த்₄யாபுத்ரன்போல் தென்படுகிறது. (2) சிவ ரஹஸ்யத்தில் மற்றவர் எல்லோருக்கும் ஸ்ரீசங்கரர்

கேதாரநாத் கைவல்யதா$_4$மாவில் திரோதா$_4$னம். ஆனால், கும்ப$_4$கோணம் பெரியாருக்குக் காஞ்சியில் ஸ்ரீ சங்கரர் ஸித்$_3$தி$_4$. (3) எந்த க்ரந்தத்திலும் "ஓம் தத் ஸத்" என்பதை மஹாவாக்யமாக எடுக்கவில்லை. ஆனால் கும்ப$_4$கோணம் பெரியாருக்கு அதுதான் உத்க்ருஷ்டமான மஹாவாக்யம். (4) மற்ற எல்லோருக்கும் நான்கு திக்கு, நான்கு வேதம்; கும்பகோணம் பெரியாருக்கு மட்டிலும் ஐந்து திக்குகள், ஐந்து வேதம். இவர்களுக்கு ருக்வேதம் என்கிறார்கள். எந்த வேதத்திலுமில்லாத 'ஓம் தத் ஸத்' மஹாவாக்யம் என்கிறார்கள். இதுபோல் பல ஆயிரக்கணக்கான தவறுகள் செய்கிறார்கள். 'ஸத$_3$ஸ் கூட்டுங்கள். வாத$_3$மகாநாட்டுக்கு வாருங்கள்' என்றால் மௌனம் சாதிக்கிறார்கள். அவர்களுக்கு செல்வாக்கும், மனிதர்களும் கணக்கற்றவை. மிகவும் த்$_3$ருட$_4$மான மூட$_4$ப$_4$க்தியுள்ள சிஷ்யர்கள் உலகம் முழுவதிலும் இருப்பதாலும், தினசரி, வார, மாதாந்தர பத்திரிகைகள் அவர் எதுசொன்னாலும் வெளியிட ஸித்$_3$த$_4$மாயிருப்பதாலும், அவர்கள் எதைச் சொன்னாலும் நம்புவதற்குக் கோடிக்கணக்கான பாமரஜனங்கள் இருப்பதாலும் விளைந்த விபரீதமே இது. நிற்க.

ஸத்கார்யங்களுக்கு வருபவர்களும், ஸத்$_3$விஷயங்களில் ஈடுபடுபவர்களும் ஸ்வல்பமே. மாறுபட்டிருப்பவர்கள் கோடிக்கணக்கில் இருப்பார்கள். "கோடிக்கணக்கில் அவர்கள் இருக்கிறார்களே" என்று பயப்படாமல், கீதையில் உபதேசித்தபடி நாம் நம் கடமையைச் செய்யவேண்டும். நாம் நந்தவனத்திலிருந்து புஷ்பம் எடுத்துப் பூஜை செய்யாவிட்டாலும், நந்தவனம் பாழாகாமல் பாதுகாக்கவேண்டும்—பூஜை செய்பவர் புஷ்பம் எடுத்துக் கொள்வதற்காக. அக்னி இல்லாமல் ஹோமம் இல்லை. அதுபோல் விஷ்ணு இல்லாமல் வேதம் இல்லை. அக்னி இல்லாமல் ஹோமம் செய்வதுபோல் ஸத்யமில்லாமல் ஆஸ்திகத்தை வளர்ப்பதாகக் கூறிக்கொள்ளுகிறார்கள். இதனால் விபரீதமே ஏற்படும். உலகில் மக்கள் படும் அவஸ்தைக்கு இதுதான் காரணம். இதை நல்லவர்கள் அவஶ்யம் கண்டிக்கவேண்டும். இக்காரணத்தால் 'அக்நிஹோத்ரியும் வைணவமும்' என்ற தங்கள் நூல் வைதி$_3$கர்கள் அனைவராலும் வரவேற்கத்தக்கது.

35. ஸாத₃ர்சனம் ஆசிரியரின் மறுப்புரை

முன்னுரை

இந்நூல் தனிப்பட்ட ஓர் மனிதரின் கருத்துக்கள் அடங்கியது. இதை அவர் தமது சொந்தப் பணத்தைக் கொண்டு வெளியிட்டிருந்தால், நூற்றுக்கணக்கான சொற் பொருட்குற்றங்கள் நிறையப்பெற்று, ஆதாரமற்ற கருத்துக் களைக் கூறும். தரமில்லாத இந்நூல் சான்றோர்களாலே மதிக்கப் பெற்றிராது. இவ்வளவு எதிர்ப்பும் கிளம்பியிராது. அப்படி வெளியிடாமல், ஆலய ஆகம வழிபாட்டின் பெரு மையை, அதிலும் பாஞ்சராத்ர ஆகமத்தின் பெருமையைக் குறைப்பதற்கென்றே எழுதப்பட்ட இந்நூல் பாஞ்சராத்ர ஆக₃மத்தின்படி வழிபாடு நடக்கும் ஓர் ஆலயத்தின் பணத்தைக்கொண்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலும், "வேதத்தில் விஷ்ணு என்னும் தெய்வம் சூரியனைத் தான் குறிக்கிறது. இப்போது காண்பதுபோல் ஸ்ரீபூமி நாயக னை நாராயணனைக் குறிப்பதல்ல" என முழங்கும் இந்நூல், ஸ்ரீபூமி நாயகனுகக் காட்சிதரும் 'அருள் திரு' சாரங்கபாணி ஸ்வாமி தேவஸ்தானப் பணத்தைக் கொண்டே வெளியிடப் பட்டிருக்கிறது. ஸ்ரீமந் நாராயணன் அப்படிக் காட்சிதரும் மற்றும் பல விஷ்ணு கோயில்களின் புத்தகாலயங்களிலும் வைக்கப்பட்டுவிட்டது. ஸ்ரீதேவி, லக்ஷ்மீதேவி, விஷ்ணு பத்னி, ஜகன்மாதா, திருமகள், அலர்மகள், அல்லிமலர்மகள், தாமரையாள், வேரிமாறுத பூமேலிருப்பாள், அலைமகள், உலகின் தாய் என்று வடமொழி வேதங்களிலும், இதிஹாஸ புராணங்களிலும், தமிழ் மறைகளிலும், தமிழிலக்கியங்களி லும் முழங்கப்படும் தாய் குடந்தைத் திருமாலுக்கினிய கோமளவல்லி நாச்சியாராகத் திருவுருவம் கொண்டு எழுந் தருளியிருக்கும் கோயிலின் பணத்தைக் கொண்டு வெளி யிடப்பட்டிருக்கும் இந்நூலில், அத்தாயை இந்திரனேடும், குபேரனேடும், கந்தனேடும் மற்றவர்களோடும் தொடர் புள்ளவள் என்று (பக்கம் 221, 222ல்) தூற்றியிருப்பதனுல்

இந்நூல் உடனடியாகத் தடைசெய்யப்படவேண்டிய தொன்று என்று வைணவவுலகம் கருதுகிறது. அனுவிரத இயக்கத்தலைவர் ஆசார்யதுளஸியின் நூலைக் காட்டிலும், இந்நூல் பிராட்டியைக் கடுமையாகத் தாக்குகிறது என்பது குறிக்கொள்ளத்தக்கது. இவ்வண்ணமாக இந்நூல் பல தவறான கருத்துக்களைத் தன்னுட்கொண்டிருக்கிறது என்பதை ஸ்ரீகாஞ்சீ மஹாவித்வான் மஹாமஹோபாத்₄யாய ப்ரதிவாதி₃ ப₄யங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியவர்கள் தமது ஸ்ரீராமாநுஜன் பத்திரிகையிலும், கலைமகளுக்கு அளித்த பேட்டியிலும் விளக்கியுள்ளார். ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் பத்திரிகையில் ஆறுமாதமாக வெளிவரும் இம்மறுப்பு நூலில் இருகலையையும் சேர்ந்த பற்பல ஸ்ரீவைஷ்ணவச் சான்றோர்கள் இந்நூலில் காணப்படும் கருத்துக்கள்-தென்மொழி வடமொழி மறைகளுக்கும், மதநூல்களுக்கும், இலக்கியங்களுக்கும் அவைகளுக்குச் சான்றோர்கள் வழங்கிய விரிவுரைகளுக்கும், ஆராய்ச்சி நூல்களுக்கும் மற்ற ப்ரமாணயுக்திகளுக்கும் முரண்பட்டுள்ளன என்று சுமார் 250 பக்கங்கள்கொண்ட பல கட்டுரைகளின் மூலம் தக்க ஆதாரங்களைக் காட்டி மறுத்துள்ளனர். அஹோபில மடத்தின் பத்திரிகையான ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவும் தான் இந்நூலை மறுப்பதோடன்றியில் பல சான்றோர்கள் இதுபற்றி மறுப்பு எழுதியுள்ளதாகவும் வெளியிட்டிருக்கிறது. இனி இந்நூலில் உள்ள மறுக்கத்தக்க கருத்துக்களைச் சிறிய எழுத்தில் பக்கலக்கத்துடன் கொடுத்து, உடனுக்குடன் பெரிய எழுத்துக்களில் அவற்றுக்கு பதில் கொடுக்கிறோம்.

இந்நூலில் உள்ள மறுக்கத்தக்க கருத்துக்கள் பின்வரும் தலைப்புகளில் காட்டப்பட்டு பதிலளிக்கப்படுகின்றன:— (1) உருவவழிபாட்டை இகழ்தல். (2) ஆலய ஆகம வழிபாட்டு முறைகளை இகழ்தல். (3) உபனிஷத்துக்களில் நிர்க்குண ப்₃ரஹ்மமே உண்டு என்னல். (4) விஷ்ணு

வையும், வைணவத்தையும் இகழ்தல். (5) பிராட்டியை இகழ்தல். (6) ஆழ்வார்களை இகழ்தல். (7) ஆசாரியர்களை இகழ்தல். (8) மற்றும் பல தவறான கருத்துக்கள். மறுக்கப்படும் வாக்கியங்களின் தொடக்கத்தில் அவை இந் நூலில்காணப்படும் பக்கங்கள் ( ) அடைப்புக்குறியினுள் தரபபடுகின்றன.

(1) உருவவழிபாட்டை இகழ்தல்

(16) வேதத்தில் யாகங்களே சொல்லப்பட்டுள்ளன. வேதத்தில் உருவவழிபாடு சொல்லப்படவில்லை. (21) ஈஜிப்ட் முதலிய நாடுகளில் ஒரு காலத்தில் விரிவாக இருந்த உருவவழிபாடு அறிவு வளர வளரக் குறைந்து அழிந்து போகவும், தமிழ்நாட்டில் அறிவு வளர வளர விக்கிரக வழிபாட்டுமுறை ஆரயிக்கணக்கான ஆண்டுக ளாக வளர்ந்துகொண்டே இருக்கிறது. (104) இங்கு விக்கிரஹ வழி பாடு ஆலயவழிபாடு இவைகளைப் பற்றின குறிப்புக்கள் காணப் படாததனுல் பிறகுதான் இவை சேர்ந்திருக்கின்றன என்று முடிவு செய்ய இடமேற்படுகிறது. (105) சில ஸம்ஹிதைகளில் மிகுந்த தெளிவுள்ளவர்களுக்கு ஞானமார்க்கம் யோகமார்க்கம் இவைகள் சொல்லப்படுகின்றன. இவற்றைப் பின்பற்றும் ஆற்றல் இல்லாத பாமர மக்களுக்கு விக்ரஹ வழிபாடு, ஆலய வழிபாடு இவை ஏற் பட்டன என்றும் கூறப்படுகின்றன. (134, 135) வேதத்தில் காணப் படும் பண்பாட்டில் விக்ரஹ வழிபாடு கலக்கவேயில்லை. கலந்திருந்தால் வேதகர்மாக்களுக்கு பிரயோகம் எழுதிய கல்பசூத்திரக்காரர்கள் இதை விட்டிருக்கமாட்டார்கள். சுத்தமாகச் செய்யும் ச்ரௌதகர்மாவில் அக்னிமூலம் வழிபாடு காணப்படுகிறதேயன்றி விக்ரஹ வழிபாடு காணப்படவில்லை. ரிக்வேதத்தில் மரப்பதுமைகள் எடுத்துக்காட்டாக சொல்லப்பட்டுள்ளன. தெய்வத்திற்கு விக்ரஹங்கள் சொல்லப்பட வில்லை. (164) உருவம் இல்லாத கடவுளுக்கு நிலையான உருவத்தைக் கொடுக்கவேண்டும், இருப்பிடத்தைக் கொடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கருத்தில் தோன்றிய கருத்துக்களைச் சமாதானத்திற்காகவே சான்றோர்கள் ஒப்புக்கொண்டனர் என்று தெரிகிறது. அதனுலே வேதாந்திகள் பிரம்மத்திற்குச் சரீரத்தையே ஒப்புக்கொள்ளவில்லை. ஆனுல் காலத்தை ஒட்டிப் பிரம்மத்திற்கு உருவத்தை ஒப்புக்கொண்டவர்களை வேதாந்திகள் ஒப்புக்கொண்ட பிறகு தங்கள் கருத்துக்கு இணங்கச் சரீரம், ஆயுதம் இவைகளுக்குப் பொருள்கூற ஆரம்பித்துவிட்டார்கள்.

ஸுத3ர்ஶனம் ஆசிரியரின் மறுப்பு

அர்ச்சாவதாரத்தைப்பற்றி வேதம் எவ்விடத்திலும் சொல்லவில்லை என்று கூறுவது தவறு. மறையாகையாலே பரமரஹஸ்யமான இவ்வவதாரத்தை அதிகமாகப் படிக்கவில்லையானாலும், அர்ச்சாவதாரத்தை வேதம் அடியோடு புறக்கணிக்கவில்லை. "ஸர்வம் பூர்ணம் ஸஹோம்" என்னும் வேதவாக்கியம், ஸௌலப்4யஸௌசீல்யாதி3 ஸகல கு3ணங்களும் பரிபூர்ணமாகப் பெற்ற அர்ச்சையைக் கூறுவதாக ஆசார்யர்கள் விவரித்துள்ளனர். ஆனால், இதை அத்வைதிகள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அவர்களும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்படியான அர்ச்சாவதாரபரமான ருக்வேத மந்திரமொன்றைக் காட்டுவோம்.

அதோ3 யத்3 தா3ரு ப்லவதே ஸிந்தோ4: பாரே அபூருஷம்
ததா3ரப4ஸ்வ து3ர்ஹணோ தேந க3ச்ச2 பரஸ்தரம் ||

[ருக்-மண் 10-12-155]

[வெகுதூரத்தில் (ஸ்ரீஜகந்நாதத்தில்) கடற்கரையிலே ஒரு புருஷனால் நிர்மாணம் செய்யப்படாத யாதொரு மரவுருவான புருஷோத்தமசரீரம் மிதக்கிறதோ, அதை உபாஸிப்பாயாக. ஒருவராலும் வெல்லமுடியாதவனே! அதைக்கொண்டு அக்கரையிலிருக்கும் பரமபதத்தை அடைவாயாக] என்பது ருக்வேதத்தில் உள்ளதொரு மந்திரமும், அதற்கு அத்வைதியும், சிவபக்தரும் வேத3பா4ஷ்யகாரருமான ஸாயணாசார்யர் எழுதியிருக்கும் பாஷ்யத்தின் தமிழ்ப் பொழிப்புரையுமாகும். ஸ்ரீஜகந்நாதத்தில் பன்னிரண்டு வருஷங்களுக்கொருமுறை கடலில் ஒருவராலும் நிருமிக்கப்படாத மரங்கள் மிதந்து வருவதும், அதையெடுத்துச் சில பரிஷ்காரங்களைச் செய்து ஜகந்நாதர் ப3லதே3வர் முதலான விக்ரஹங்களாக ஜகந்நாதம் கோயிலில் ப்ரதிஷ்டை செய்வதும் இன்றளவும் நடந்துவரும் நிகழ்ச்சியாகும். இதையே இந்த ருக்வேதமந்திரம் காட்டுகிறதென்பது வெளிப்படை. அர்ச்சாரூபியை உபாஸிப்பதால், இவ்வுலகில் எவராலும்

வெல்லப்படாதவனுகி, பரமபதமும் அடையலாம் என்று வேதம் காட்டுகிறது. இதை சிவபக்தரும் அத்வைத மதஸ்த$_2$ருமான ஸாயணர் ஒப்புக்கொண்டு பாஷ்யமிட்டிருப்ப தற்குக் காரணம். ஸ்காந்தபுராணாந்தர்க்க$_3$தமான ஸ்ரீஜகந்நாத க்ஷேத்ர மாஹாத்மியத்தில் இந்த மந்திரம் உபப்$_3$ரும்ஹணம் செய்யப்பட்டிருப்பதேயாகும். அதாவது:—

ஜைமிநிருவாச:—

''இதி ப்$_3$ருவாணம் ராஜர்ஷி: கஶ்சித் ருக்$_3$வேத$_3$ பாரக$_3$: |
வேத$_3$ாந்த விஜ்ஞாநஶீலோ த்$_3$விஜோ வாக்யம் முத$_3$ா ஜகெ$_3$ள ||
அஹோ தவாயம் க$_2$லு ப$_4$ாக்$_3$யராஶிர்
யேநாவிராஸீத் பு$_4$வி தா$_3$ாருமூர்த்தி: ||
யஸ்யாத்யுபாஸ்திம் ஶ்ருதிராஹ முக்தி-
ப்ரத$_3$ாமநாத்மஜ்ஞவிமோஹிதாநாம் ||
ய ஏஷ ப்லவதே த$_3$ாரு: ஸிந்தே$_4$ா: பாரே ஹ்யபௌருஷம் |
தமுபாஸ்ய து$_3$ராராத்$_4$யம் முக்திம் யாந்தி ஸுது$_3$ர்லப$_4$ாம் ||
ப்$_3$ரஹ்ம ஜ்ஞாநநிதி$_4$: ஸாக்ஷாந் நாரத$_3$: ப்ரத்யுவாச யத் |
நஹி வேத$_3$ாந்த வசஸோऽபரஸ்மாத் ஜ்ஞாநமஸ்ய வை ||
நஹி ப்ரவ்ருத்திர் விஷ்ணோஸ் து விநா வேத$_3$ம் ப்ரவர்த்ததே |
பரேஷாம் ஸ்வஸ்ய வா ஸ்ருஷ்டௌ ஶ்ருதிப்ராமாண்யவாந்
ப்ரபு$_4$: ||
விநா ஶ்ருதிம் ப்ரவர்த்தேச்சேத் கஸ் தத் ப்ராமாண்யம் ருச்ச$_2$தி|
தஸ்மாச் ச்$_2$ருதி ப்ரஸித்$_3$தே$_4$ாऽயமவதாரோऽத்ர பூ$_4$பதே ||
வேத$_3$ாந்த வேத்$_3$யம் புருஷம் கீ$_3$தம் தம் ஸாமகீ$_3$திஷு |
ப்ரதிமாம் ந து ஜாநீஹி நி:ஶ்ரேயஸகரம் ந்ருணாம் ||
த$_3$ர்ஶநாதே$_3$வ ந: ஶாந்தம் ஸுத்$_3$ருட$_4$ம் தம உத்தமம் |
ஸந்த்யேவ ஶ்ருதய: பூர்வம் ஏதத$_3$ர்ச்சாப்ரகாஶிகா: ||''

[ஜைமினி சொன்னர்:—இப்படிச் சொல்லிக்கொண்டிருக்குமவனிடம், ருக்வேதத்தைக் கரைகண்டவனும், ராஜரிஷியும், வேதாந்த அறிவு பெற்றவனுமான ஓர் இருபிறப்பாளன் உகப்புடன் ஒரு வார்த்தை சொன்னன். 'உன்

னுடைய பாக்கியத்தை என்னென்று கொண்டாடுவேன்? இவ்வுலகில் மரவுருவான புருஷோத்தமமூர்த்தி அதனாலேயே தோன்றியதன்றோ. ஆத்மஜ்ஞானமில்லாமல் மயங்குமவர்கள் அந்த அர்ச்சாமூர்த்தியை உபாஸித்தால் முக்தியுண்டாகு மென்று சுருதியே சொல்லிற்றன்றோ. புருஷனால் நிருமிக்கப் படாத யாதொரு மரம் கடற்கரையிலே மிதக்கிறதோ, ஆராதிக்க அரியவனை அப்பரமபுருஷனை உபாஸித்து அடையவரிய முக்தியை அடைகிறார்கள். ப்ரஹ்மஜ்ஞாநநிதி$_4$ யான நாரதமஹரிஷி இதைச் சொன்னார். பரமபுருஷனை வேதாந்த வாக்கியத்தாலல்லாமல் மற்றொன்றால் அறிய முடியாதன்றோ. வேதத்தைப் பின்பற்றாமல் விஷ்ணுவான வர் செயல்புரியமாட்டார். பிறரை ஸ்ருஷ்டி செய்யும் போதும் தான் அவதரிக்கும்போதும் வேதத்தையே பரம புருஷன் பிரமாணமாகக் கொள்கின்றான். வேதத்தைப் பின்பற்றாமல் தொழில் புரிந்தானாகில் அதனுடைய ப்ராமாண் யத்தை யார் அறியமுடியும்? ஆகையால் இந்த அவதாரம் சுருதியில் பிரஸித்தமாயிருப்பது. ஸாமவேத கீதங்களிலே பாடப்பட்டவனும். வேதாந்தங்களிற் சொல்லப்பட்டவ னும். மனிதர்களுக்கு நன்மையளிப்பவனுமான அந்தப் புருஷனை பிரதிமை என்று நினைக்காதே. மிகவுறுதியா யிருக்கும் அதி$_4$கமான தமோகுணமனைத்தும் இந்த மூர்த்தி யைக் காண்பதாலேயே நமக்கு நீங்கும். இந்த அர்ச்சை யைச் சொல்லும் வேதவாக்கியங்கள் பல முற்காலத்தில் வழங்கிவந்தன.] என்று கந்தபுராணத்தைச் சேர்ந்த புருஷோத்தம மாஹாத்மியத்தில் இருபத்தோராவது அத்தி யாயத்தில் இந்த ருக்வேதமந்திரம் மிகத்தெளிவாக உப ப்$_3$ரும்ஹணம் (விவரணம்) செய்யப்பட்டது. நிற்க. "அதோ$_3$ யத்$_3$தா$_3$ரு ப்லவதே" என்னும் இந்த மந்திரத்திற்கு முந்திய மந்திரத்திற்கும் முந்திய மந்திரம் "अरायि काणे विकटे गिरिं गच्छ" (அராயி காணே விகடே கி$_3$ரிம் க$_3$ச்ச$_2$) [த$_4$னமிழந்தவளே! கண்ணிழந்தவளே! விதவிதமான பாபங்களைச் செய்தவளே! (வேங்கட) மலையை அடைவா

யாக.] என்று தொடங்குகிறது. இந்த வாக்கியம் வேங்கட மலையைக் குறிப்பதே என்பது

.'அராயி காணே விகடே கி₃ரிம் க₃ச்சே₂தி தம் விது₃:।
ஏவம் வேத₃மய: ஸாக்ஷாத் கி₃ரீந்த்₃ர: பந்நக₃ாசல: ||"

[பவிஷ்ய-அத்யாயம் 4-21]

["அராயி காணே விகடே கி₃ரிம் க₃ச்ச₂" என்னும் வேத மந்திரத்தால் திருவேங்கடமலையை அறிகின்றனர். மலைகளில் சிறந்த சேஷகிரி இவ்வண்ணமாக வேதமயமாயிருக்கிறது.] என்று ப₄விஷ்யபுராணத்தில் பேசப்பட்டது. இன்றளவும் த₄னத்தை இழந்தவர்களும் விரும்புமவர்களும். கண் காது முதலான அங்கங்களை இழந்தவர்களும், திருவேங்கட யாத்திரையால் அவற்றைப் பெற்றுப் பயனடைவதைக் காண்கிறோம். வேத₃விதி₄யினால் ஏற்பட்ட பெருமை என்றும் அழியாதன்றோ. 'விகடே' என்று கடமெனப்படும் பாபத்தை விசேஷமாகவுடையவளே! என்று கூப்பிட்டு, 'கி₃ரிம் க₃ச்ச₂' என்கையாலே பாபத்தையழிக்கும் வேங்கடமலையே குறிக்கப்படுகிறது. மறை மறைத்துப்பேசுகிறது. அதைப் புராணம் விளங்கவைக்கிறது. இதுவே இதிஹாஸபுராணங்கள் செய்யும் உபப்ரும்ஹணகாரியமாகும்.

"இதிஹாஸ புராணாப்₄யாம் வேத₃ம் ஸமுபப்₃ரும்ஹயேத்।
பி₃பே₄த்யல்பஶ்ருதாத்₃ வேதோ₃ மாமயம் ப்ரதரிஷ்யதி ||"

[இதிஹாஸபுராணங்களைக் கொண்டு வேத₃த்தை விளங்கவைக்கவேண்டும். இதிஹாஸபுராணமறியாத புல்லறிவாளனைக்கண்டு வேத₃ம் 'இவன் என்னைக் கலக்கிவிடுவானோ' என்று பயப்படுகிறது.] என்று மஹாபா₄ரதத்தில் கூறப்பட்ட அல்பஶ்ருதர் (புல்லறிவாளர்)களில் சேர்ந்தவரான இவருக்கு இவ்வேத₃வாக்யங்களின் பொருள் விளங்காததில் வியப்பில்லை. பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் இவர்க்கு அடியோடு ஞானமில்லை என்பதைப் பாஞ்சராத்ர

ஆக₃ம வித்₃வான் ஸ்ரீ உ. வே. பெரிய திருவடி பட்டாசார்யர் ஸ்வாமி விளக்கியிருக்கிறாராகையால், நாம் விவரிக்க வேண்டிய அவஸ்யமில்லை. "ஆதி₃த்யவர்ணம்" "நீலதோய த₃மத்₄யஸ்தா₂ வித்₃யுல்லேகே₂வ பா₄ஸ்வரா" "ஹிரண்மய: புருஷோ த்₃ருஸ்யதே" 'வித்₃யுத: புருஷாத₃தி₄' முதலான உபநிஷத்வாக்யங்களில் பரம்பொருளுக்கு அற்புதமான உருவம் கூறப்பட்டுள்ளது. பூர்வபா₄க₃த்தில் இந்திரன் முதலான தேவர்களுக்கும் உருவம் கூறப்பட்டுள்ளது. ஆகையால் பக்கம் 164ல் அஹோ எழுதியிருப்பது வேத₃ விருத்₃த₄மான பிதற்றலேயாகும். ஆக, உருவவழிபாட்டை இகழ்ந்தது ஸ்ருதி முதலிய ப்ரமாணங்களுக்கு முரண் பட்டதுஎன்று நிரூபிக்கப்பட்டதாயிற்று.

(2) ஆலயங்களையும் ஆகமங்களையும் அவற்றின் வழிபாட்டு முறைகளையும் இகழ்தல்

(17)சிறிய அளவில் விக்கிரக ஆராதனையைத் தொடங்கிய ஆகமங்கள், பிறகு தனியான வேதாந்தக் கொள்கைகள், மதக் கொள்கைகள் இவற்றோடு வளர்ந்து முடிவில் வைதிக மதத்தோடு உறவு கொண்டாடி, அக்நியில் ஹோமம் செய்வது முதலியவற்றை உட்கொண்டு மிகப்பெரிய அளவில் ஆலயபூஜைகளை வளர்த்துப் பலவிதத் திருவிழாக்களுக்கும் பூஜைகளுக்கும் வழி வகுத்துவிட்டன. (18) வைதிக மதத்திலிருந்து பாஞ்சராத்ர ஆகம மதம் வேறுபட்டது என்று புறக்கணித்தல் கூடாது எனவும். அதனையும் வைதிக மதக் கொள்கையை ஒத்த வேறொரு சிறந்த கொள்கையாகவே பாவிக்கவேண்டும் எனவும் நாத முனிகள் பிரசாரம் செய்துவந்தார். (18) முன் இருந்த பிரும்ம சூத்திர உரையாசிரியர்கள் பாஞ்சராத்திர ஆகமத்தில் வேதத்துக்கு எதிரான கொள்கைகள் இருப்பதைச் சுட்டியுள்ளனர். ஆதலின், இராமாநுஜர் காலம்வரை ஆகமக் கொள்கைகளும் ஆழ்வாராதிகள் பாசுரங்களும் தமிழ்நாட்டு வைணவத்தில் கலக்கவில்லை என்று தெரிகிறது. (21) 'ஆலயங்களில் உள்ள அர்ச்சைகளும் கடவுளுடைய அவதாரமே. அங்குச் செய்யும் பணிதான் உண்மையான தெய்வத் தொண்டு' என்று கூறி ஆலயவழிபாட்டை வைணவத்தின் உயிர் நாடியாக்கிவிட்ட பிற்பட்ட ஆசாரியர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடத் தனிப்பட்ட சொற்களைப் பயன்படுத்தத் தொடங்கி

ஞர். (46, 47) இதிகாச புராணங்களின் கருத்துக்களைப் பலபடியாகப் பாடும் ஆழ்வாராதிகள் தலபுராணக் கதைகளை விட்டுவிட்டதன் அடிப்படை ஆராய்ச்சிக்குரியது. தலபுராணங்கள் வளர்ந்தபிறகு தோன்றிய வேதாந்ததேசிகன் திருவரங்கக்கோயிலை 'அம்புயத்தோன் அயோத்தி மன்னருக்கு அளித்த கோயில்' என்று குறிப்பிடுகிறார். தொண்டரடிப்பொடித் தவிர மற்ற ஆழ்வார்கள் இக்கதைக்கு முக்யத்வம் ஏன் கொடுக்கவில்லை என்று புரியவில்லை. (101) இன்று தமிழ் நாட்டில் ஆலய வழிபாட்டுக்கு வைஷ்ணவ சம்பிர தாயத்தில் இருவகை நூல்கள் அடிப்படையாக அமைந்திருக்கின்றன. ஒருவகை நூல்களுக்கு பாஞ்சராத்ரம் என்றும், மற்றொரு வகை நூல்களுக்கு வைகாநசம் என்றும் பெயர். இவைகளில், ஆலயங் களில் பெரும்பாலானவை வைகாநச ஆகமத்தைப் பின்பற்றுபவை என்று தெரிகிறது. ஆனால் வைகாநச ஆகமத்தின் கொள்கைகள் வேத நெறியையே அடிப்படையாகக் கொண்டிருப்பதால் ஸ்ரீவைஷ் ணவ ஆச்சாரியர்கள் இதற்குத் தனியான முக்கியத்துவத்தைக் கொடுக்கவில்லை. (101,102)ஆனால், பாஞ்சராத்திரம் என்ற மற்ற வகை நூல் தமிழ்நாட்டில் மிகவும் சிறப்பான இடத்தை பெற்றுவிட்டது. இதற்குக் காரணம் தமிழ்நாட்டு வைணவ ஆசாரியர்கள் தங்களுடைய அடிப்படையான கொள்கைகளுக்கு இதையே நம்பியிருப்பதாகும். வைகாநச ஆகமம் மிகவும் புராதனமானதாக இருந்தும், ஆகமங் களைப்பற்றி நூல் எழுதிய ஆளவந்தாரோ, அல்லது பாஞ்சராத்ர ஆகமங்களை ஆதரித்துப் பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதிய இராமாநுஜரோ, இதைப்பற்றி குறிப்பிடவே இல்லை. (102) பாஞ்ச ராத்ர ஆகமம் பல ஸம்ஹிதைகள் உருவத்தில் பல பெயர்க ளோடு காணப்படுகிறது. பகவானே ஆகமங்களை உபதேசித்தான் என்ற கொள்கை பொதுவானது. இதனால் இன்று காணப்படும் எல்லா ஸம்ஹிதைகளுமே பகவான் நேருக்கு நேராக உபதேசித்தான் என்று கொள்ளமுடியாது. (103) ஆகவே ஒரு மதத்திற்கு வேண்டிய எல்லாக் கொள்கைகளுடன் நாராயண வழிபாட்டை முக்கியமாகக் கொண்ட மதம் பகவத் சாஸ்திரம் என்ற பெயரில் கலியுக ஆரம்பத் தில் உதயமாகிறது என்று தெரிகிறது. (105) சில ஸம்ஹிதைகளில் மிகுந்த தெளிவுள்ளவர்களுக்கு ஞானமார்க்கம் யோகமார்க்கம் இவை கள் சொல்லப்படுகின்றன. இவற்றைப் பின்பற்றும் ஆற்றல் இல் லாத பாமர மக்களுக்கு விக்ரஹ வழிபாடு, ஆலய வழிபாடு இவை ஏற்பட்டன என்றும் கூறப்படுகின்றன. (108) பாஞ்சராத்திர ஆகமம் தனியான வேதாந்த கருத்துக்களையும் தெய்வக் கொள்கை

களையும் சொல்லித் தனக்கு மூலமாக ஒரு தனி வேதம் இருந்து வருகின்றது என்றும் சொல்கிறது. அந்த வேதத்திற்கு ஏகாயனம் என்று பெயர். அந்த வேதம் மற்றவர்களால் ஒப்புக்கொள்ளப் பட்டுள்ள வேதம்போல் இல்லாததாலும் எல்லா மக்களிடையேயும் பிரசாரத்தை அடையாததினாலும் அதை அடிப்படையாக கொண்டுள்ள பாஞ்சராத்ர ஆகமத்தை ஒப்புக்கொள்ள முடியாதென்று சிலர் சொல் கிறார்கள். (117) சம்ஹிதைகள் பிற்காலத்தில் வளர்ந்துள்ளதற்கு உரிய அடையாளத்தை நாம் கண்கூடாக பார்க்கிறோம். (117) மேலும், தென்னாட்டுக்கு வந்த இந்த சம்ஹிதைகள் அந்தந்த க்ஷேத்திரத்தோடு ஐக்கியமாகிவிட்டதும் தெரிகிறது. தோத்தாத்திரி அல்லது வானமாமலை, மேல் கோட்டை, ஸ்ரீரங்கம் முதலிய ஊர் களைக் குறிப்பிடும் ஆகமங்கள் மிகமிகப் புராதனமானவை என்று ஒப்புக்கொள்ள முடியாது. (118) மேலும் தனிப்பட்ட மனிதனின் ஒழுக்கத்தைச் சொல்லும் காலத்தில் நெற்றியில் போடவேண்டிய பல குறிகளைச் சொல்லுகின்றன. இவைகள் புராதனமானவை ஆகா என்பதும் தேற்றம். (119) நான்கு விதமாக பகவான் இருந்து வருகிறார் என்ற அடிப்படையில் உபாசனம் செய்வது என்ற முறையை சாதுராத்ம்ய உபாசனம் என்று ஆகமங்கள் பரக்கப்பேசு கின்றன. கடவுள் ஒருவர்தான் என்ற உபநிஷத்தின் கொள்கைக்கும் நாலுவிதமாக இருந்து வருகிறான் என்ற கொள்கைக்கும் உறவே கிடையாது. அதனாலேயே பாஞ்சராத்ர ஆகமத்தின் தெய்வக்கொள்கை உபநிஷத்தின் கொள்கையிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. (120) எளிய நடையிலிருந்த பஞ்சவீரபூஜை வேதாந்திகளின் கைக்கு போய் கடவுள் இலக்கணத்தை உட்கொண்டு வேதாந்தக் கொள்கையாக மாறி, உபாசனமாகவும் மாறிவிட்டது. பலவித உருவங்களை உட் கொண்டு பல மந்திரங்களை உருவாக்கி, பல உபாசனங்களையும் வகுத்துவிட்டார்கள். வ்யூகக்கொள்கையில் வரும் பெயர்கள் கிருஷ்ணா வதாரத்தோடு சம்பந்தப் படுவது வரலாற்று உண்மை. வாசுதேவர் கிருஷ்ணனே. சங்கர்ஷணன் அவருடைய அண்ணன், ப்ரத்யும்னன் பிள்ளை, அநிருத்தன் பேரன். (133) பாஞ்சராத்ர கருத்துக்களுக்கு 'சாத்வத விதி' என்ற பெயர் இருப்பதால், விக்ரஹ வழிபாடு சாத் வதர்களிடமிருந்துதான் ஆரம்பமாகிறது என்று எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. (133) கிருஷ்ணாவதார காலத்திற்கு பிறகுதான் இவர்களை வழிபடும் கொள்கை உருவாகியுள்ளது என்று நினைக்க வேண்டிவருகிறது. (135) குறிப்பிட்ட தர்மத்தை விளக்கவந்துள்ள இதிகாச புராணங்களும் ஆலயவழிபாடு விக்ரஹ வழிபாடு இவைகளை

தங்கள் கொள்கையில் சேர்த்துக் கொள்ளவில்லை. சில இடங்களில் புராணங்களில் ஆலய வழிபாடு விக்ரஹ வழிபாடு இவை குறிப்பிடப்படுவது அந்தந்த காலத்தின் நிலைமையைத்தான் விளக்கும். புராணங்களின் அடிப்படைக் கொள்கையோடு விக்ரஹ வழிபாட்டிற்கு நேர் உறவு கிடையாது. உதாரணமாக ருக்மணி கல்யாண காலத்தில் ருக்மணி துர்க்கையை பூஜித்ததாக பாகவதம் தெரிவிக்கிறது. ஆனால் சீதா கல்யாணத்தில் இவ்வித வரலாற்றை நாம் பார்க்க முடியவில்லை. ஆகவே ஆலய வழிபாடு விக்ரஹ வழிபாடு இவை வேதம் ஸ்மிருதிகள் இதிகாச புராணங்கள் இவைகளுக்குப் பிறகு தெய்வ வழிபாட்டில் வந்து கலக்கின்றன என்று தெரிகிறது. (136, 137) காலக்கிரமத்தில் நான்கு வ்யூஹங்களில் ப்ரத்யும்னன், அநிருத்தன் இவர்களுடைய வழிபாடு சிறிது சிறிதாக மறைந்து வாசுதேவ சங்கர்ஷணன் இவர்கள் வழிபாட்டில் போட்டி ஏற்பட்டு பாமர மக்கள் சங்கர்ஷண வழிபாட்டை கைக்கொண்டு விட்டார்கள். வாசுதேவ வழிபாடு நாராயண வழிபாட்டோடு ஒன்றுக ஆகி பலவித தெய்வக் கொள்கைகளுக்கு இருப்பிடமாக ஆகிவிட்டது. (138) பல மூர்த்தங்களை வைத்து பூஜிப்பது என்ற கொள்கை காலக்கிரமத்தில் ஒரு மூலமூர்த்தியில் வந்து நின்றுவிட்டது. இதற்குப் பிறகு மூர்த்தியை வெளியில் கொண்டுவந்து வீதிதோறும் எழுந்தருளப் பண்ணி, எல்லா மக்களும் தரிசனம் செய்ய வகை செய்யவேண்டும் என்ற நோக்கம் உண்டான காலத்தில் மூலமூர்த்தியை அசையா மூர்த்தியாகச்செய்து வெளியில் உத்சவங்களுக்கு போய்வர தனியான மூர்த்தியை வைக்க ஆரம்பிக்கிருர்கள். இதற்கு உத்சவமூர்த்தி என்று பெயர். (139) ஆழ்வார்கள் பாடல்கள் எல்லாம் மூலமூர்த்தியை மட்டும் பற்றியவை என்று தெரிந்ததே. (141) சடகோபத்தையும் நம்மாழ்வாரையும் ஒன்றுபடுத்தி பேசுவது கவி கற்பனையை அடிப்படையாகக் கொண்ட பக்தியின் வெளி அடையாளம்தான். தெய்வத்தை விட்டுப்பிரியாத பாதுகையை தலையில் வைப்பதும், மக்களை திருப்தி பண்ணவே ஏற்பட்டது. ஆகமங்கள் இதற்கு இடங்கொடுக்கா. ப்ரதிஷ்டையான சடாரியை மற்ற மனிதர்களுடன் ஸம்பந்தப்படுத்துவது அசுத்திக்குக் காரணமாகும். இன்றும் மைசூர் பரகால மடத்தில் சடாரியை மனிதன் தலையோடு சம்பந்தப்படுத்துவது இல்லை. (145) நான்கு வ்யூகங்கள் என்ற கொள்கை ஒரு பக்கத்தில் வளர்ந்து வரும் காலத்தில் பன்னிரண்டு வ்யூகங்கள் என்ற ஒரு கொள்கை வேறிடத்திலிருந்து வந்து சேருகிறது. (147) இங்கு ஒரு முக்கியமான விஷயத்தை நாம் கவனிக்கவேண்டும்.

பன்னிரண்டு வ்யூகக் கொள்கையில் யார் முக்கியமானவர்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. பிற்காலத்தில் பிரபலமாக ஆகிய விஷ்ணு, நாராயணன் என்ற இருவர்களும் இங்கு மற்றவர்களோடு சேர்ந்திருக்கின்றார்களே தவிர தனியான இடத்தைப் பெறவில்லை. ஏதோ ஒரு காரணத்தைக் கொண்டு நாராயணன் என்ற பெயர் முக்கியத்துவத்தை பெற்ற பிறகு நான்கு வ்யூகக் கொள்கையில் முக்கியமாக நிற்கும் வாசுதேவனும் இவனும் ஒத்துபோகவேண்டிய அவசியம் வந்துவிட்டது. வாசுதேவன்தான் நாராயணன். நாராயணன்தான் வாசுதேவன் என்று பரிமாற்றம் ஏற்பட்டுவிட்டது. இந்த வரலாற்று உண்மையை ஆலயங்களில் இன்று நாம் பார்க்கிறோம். (156, 157) ஆனால் தொடக்கத்தில் வீட்டில் சாதாரணமாக ஏற்பட்ட பிம்பவழிபாடு கோயில்களுக்கு வந்ததும் மந்திரம் மூலமும், ஆகமம் விதிக்கும் கர்மாக்கள் மூலமும்தான் பிம்பங்களுக்குச் சாந்நித்யம் வரும் என்ற நிலைக்கு வந்துவிட்டது......ஆலயங்களைப் பொதுவாக எல்லா மக்களுக்கும் தேவையானவை என்று ஆகமங்கள் குறிப்பிடவில்லை. (171, 172) ஆகமங்கள் தங்களுக்கு மூலமாக இப்போதுள்ள வேதங்களைச் சொல்லுவதில்லை. அதற்குப் பதிலாக தங்களுடைய ஆகமங்கள், தங்களுடைய தெய்வத்தின் வாயிலிருந்து நேரே பிறந்ததாகச் சொல்ல ஆரம்பிக்கின்றன......தமிழ்நாட்டு வைணவத்தில் ஆகமம் உட்புகுந்து விட்டதால் வைணவம் இரண்டு விதமாகப் பிரிந்தது. ஒரு சிலர் ஆகமங்களைப் பின்பற்றி வேதத்தின் கொள்கைகளைக் கைவிட்டார்கள். மற்றும் சிலர் வேதத்தைப் பின்பற்றி ஆகமங்களைக் கைவிட்டார்கள். இந்த நிலையெல்லாம் வேதம் ஆகமம் இவைகளுக்குப் பிறகுவந்த ஆசாரியர்களிடம் காணப்படும் செய்தியாகும். (205, 206) ஆலயங்களில் முக்கியமான ஆண் பிம்பமும் பெண் பிம்பமும் ஒரே பீடத்தில் எழுந்தருளுவதை ஆகமங்கள் அனுமதிக்கவில்லை. கர்ப்பக்கிருகத்தினுள்ளோ பக்கத்திலோ இருப்பதையும் அனுமதிக்கவில்லை. இருபக்கங்களிலும் அனுமதிக்கவில்லை. இரு பக்கங்களிலும் ஸ்ரீதேவி, பூதேவி இருக்கும்போது தனிக்கோயில் நாச்சியார் ஒவ்வோர் ஊருக்கும் தனித்தனிப் பெயருடன் இருக்க வேண்டிய தேவை நமக்குப் புலனாகவில்லை. (215) இவ்வாறு பேசும் ஆகமங்களில் பிற்பட்டுத் தோன்றியவை 'ஸ்ரீவைகுந்தத்தில் பகவான் ஆண் உருவத்தில் இருப்பதுபோல சக்தியும் பெண் உருவத்தில் உள்ளார். பக்தர்கள் அவ்விருவரையும் அனுபவிக்கிறார்கள். பரிவார தேவதைகள் என்ற பெயரில் பெண் உருவத்தில் உள்ள பல சிறு தேவதைகளும் அங்கு இருக்கின்றனர். புஷ்டி என்ற பூதத்துவமும்

நீளாதத்துவமும் ஆழ்வார்கள் காலத்துக்குப் பிற்பட்ட பாஞ்சராத்ர சம்ஹிதைகளில இடம் பெற்றுள்ளன. (318, 319) பாஞ்சராத்ர ஆகமம் வாசுதேவன் என்ற சொல்லே அடிப்படையாகக் கொண்ட துவாதசாக்ஷரத்தை வேதத்திற்கு போட்டியாக ஒப்புக்கொள்ளுகிறது. (துவாதசாக்ஷர வித்யைவ தேஷாம் வித்யா ந ச த்ரயீ) ஆலயங்களில் இந்த வழக்கமே பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆனால் வைணவ ஆசாரியர்கள் வாசுதேவன் என்ற சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுக்காதது மட்டுமில்லை. அந்த மந்திரத்தையும் தங்களுக்கு வேண்டாம் என்று ஒதுக்கி விட்டார்கள். இதனால் பாஞ்சராத்ர ஆகமமும் வைணவ சம்பிரதாயமும் ஒத்துப்போக இடமில்லை என்று தெளிவாகிறது. ஆழ்வார்களும் ஆங்காங்கு நாராயணன் என்ற சொல்லுக்கே முக்கியத்துவம் கொடுத்து எட்டெழுத்து என்று அதன் மந்த்ரத்தையும் குறிப்பிடுகிறார்கள். நாராயணன் என்ற சொல் திடீரென்று எப்படி முக்யத்துவத்தை பெற்றது என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம்.

ஸுதர்ஶனம் ஆசிரியரின் மறுப்பு

*(*17, 18) தனியான வேத₂ாந்தக்கொள்கைகள், மதக் கொள்கைகளோடு பாஞ்சராத்ர ஆக₃மங்கள் வளர்ந்தன என்று கூறுவது அப₃த்₃த₄ம். ஆளவந்தார், எம்பெருமானார், தே₃ஶிகன் முதலான மஹாசார்யர்கள் வேத₃வேதா₃ந்தக் கொள்கைகளையே இவ்வாக₃மங்கள் விவரித்துள்ளன என நிலைநாட்டியுள்ளனர். அதை இவ்வஹோ மறுக்கவுமில்லை; மறுக்கவும் இயலாது. சிறிய அளவில் விக்ரஹ ஆராதனையைத் தொடங்கி மிகப்பெரிய அளவில் வளர்ந்ததாக எழுதுவது இவர் கற்பனையே. மாயாவாதி₃யாக மாறிவிட்ட இவரது வயிற்றெரிச்சலையே இது காட்டுகிறது. நமது ஆசார்யர்கள் அனைவரும் வைதி₃கமதத்தையே பாஞ்சராத்ரம் விவரிக்கிறது என ப்ரமாணங்காட்டி நிலைநாட்டி*

**அஹோ நூலிலிருந்து சிறிய எழுத்தில் மேலே அச்சிடப்பட்ட கூற்றுக்கள் உள்ள பக்கலக்கங்கள் ( ) குறியினுள் கொடுக்கப்பட்டு, அவற்றுக்கு பதில் அளிக்கப்படுகிறது.*

னர். ஒரு ப்ரமாணமும் காட்டாமல் 'வைதிகமதக்கொள் கையை ஒத்த வேறொரு சிறந்த கொள்கையாக பாவிக்க வேண்டும்' என்று நாதமுனிகள் பிரசாரம் செய்து வந்த தாக எழுதுவது அப்பட்டமான பொய். சங்கரர் முதலா னோர் வேதத்திற்கு முரணாக ஜீவோத்பத்தி முதலானவை பாஞ்சராத்ரத்தில் சொல்லப்பட்டுள்ளதாகக் கூறியது அடி யோடு தவறு என்று நமது ஆசார்யர்கள் நிலைநாட்டியுள்ள னர். வேத₃வ்யாஸரே மஹாப₄ாரதத்தில் பாஞ்சராத்ரத்தை வேத₃ஸாரமாகப் போற்றியுள்ளதை அறியாமல் எழுதுவது அப₃த்₃த₄ம். ஆளவந்தார் ஆக₃மப்ராமாண்யத்தில் பாஞ் சராத்ர ப்ராமாண்யத்தை நிலைநாட்டியுள்ளார். ஸ்தோத்ரரத் னத்தில் ஆழ்வாரைத்துதித்து, பல பாசுரங்களின் பொருளை அடியொற்றியுள்ளார். இப்படியிருக்க, "இராமானுஜர் காலம் வரை....கலக்கவில்லை" என அஹோ எழுதுவது சிறுவர்களா லும் பரிஹஸிக்கத்தக்கதேயாகும். (21) ஶ்ருதிஸ்ம்ருதீதி ஹாஸ புராணங்களெல்லாம் பலவிடங்களில் அர்ச்சையைப் புகழ்ந்திருப்பதால் பிற்பட்ட ஆசார்யர்கள் ஆலயவழி பாட்டை வைணவத்தின் உயிர்நாடியாக்கிவிட்டதாகப் புலம் புவது பரம அபத்தம். (46,47) அஹோ புகழும் சைவத்தைப் போல் வைணவம் தலபுராணக்கதைகளையே பற்றி நிற்க வில்லையாகையால், அவற்றை ஆழ்வார்கள் விசேஷமாகப் பாடவில்லை. ஓவ்வோரிடங்களில் காட்டியுள்ளனர். "அரங்க மென்பர் நான்முகத்தயன் பணிந்த கோயிலே" [திருச்சந்த விருத்தம் 51] என்ற திருமழிசைப்பிரானின் பாசுரத்தை அஹோ அறியவில்லையந்தோ! (101, 102) வேதவ்யாஸரும், போ₃த₄ாயனர் முதலான முற்பட்ட உரையாசிரியர்களும் வைதி₃கமாகப் புகழ்ந்த பாஞ்சராத்ரத்தைப் பிற்பட்ட சிலர் தூ₃ஷிக்கத் தொடங்கியதால், ஆளவந்தார் முதலானோர் அதை வைதி₃கமாக நிலைநாட்டினர். வைக₂ாநஸத்திற்கு இவ்வித மறுப்புஏற்படாததால், அதை வைதி₃கமென நிலைநாட்ட வேண்டிய அவஶ்யமில்லை. அதனாலேயே வைகாநஸத்தைக் காட்டிலும் பாஞ்சராத்ரம் அதிகமாகக் கையாளப்பட்டது.

ஆளவந்தார் ஆகமப்ராமாண்யத்தில் வைகாநஸத்தையும் எடுத்துள்ளார். விசிஷ்டாத்₃வைத மதக்கொள்கைகள் ஶ்ருதிஸ்மருதீதிஹாஸபுராணங்கள் அனைத்திலும் முழங்கப்பட்டிருக்கின்றன என்று ஆசார்யர்கள் பல நூல்களில் நிலைநாட்டியிருக்கையில், அவர்கள் பாஞ்சராத்ரத்தையே நம்பியிருப்பதாகப் புலம்புவது வயிற்றெரிச்சலையே காட்டுகிறது. "பாஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்நஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம்" [பாஞ்சராத்ரம் முழுவதும் நாராயணனாலேயே உபதே₃சிக்கப்பட்டது] என்னும் மஹாப₄ாரத வசனத்துக்கு முரணாக அஹோ புலம்புவது ப்ராமாணிகர்களால் அநாத₃ரிக்கத்தக்கதேயாகும். (103 105) பகவச்சா₂ஸ்த்ரம் கலியுக ஆரம்பத்திலேயே உருவானது என்பதற்கு எவ்வித ப்ரமாணமுமில்லை. மஹாபாரதத்திலேயே புகழப்பட்டதாலும் ப்₃ரஹ்மஸூத்ரத்தில் வியாஸர் பாஞ்சராத்ராதி₄கரணம் அமைத்திருப்பதாலும் இவ்வாக₃மம் கலியுக₃த்திற்கும் முற்பட்டது என்பது சிறுவர்க்கும் விளங்கும். 'சில ஸம்ஹிதைகளில்' என்று தொடங்கி அடிக்கடி எழுதுமிவர் அத்தகைய வசனம் ஒன்றையாவது எடுக்கவில்லை. ஆகையால் இது அப₃த்₃த₄ம். விரிவு பெரியதிருவடி பட்டாசாரியர்ஸ்வாமியின் கட்டுரையில் காணலாம். (108) ஏகாயநவேத₃த்தின் பெருமையை ஸ்ரீதே₃ஶிகன் முதலான பூர்வாசார்யர்கள் நிலைநாட்டியுள்ளனர். அதற்கு முரணாக எழுதுவது அஹோவின் அறியாமையே. சிலர் சொல்லுவது ப்ரமாணமா? பலர் ஆதரிப்பது ப்ரமாணமா என்பதைக்கூட அஹோ அறியவில்லையந்தோ! (117) சம்ஹிதைகள் பிற்காலத்தில் வளர்ந்துள்ளதாகக் கூறுவதற்கு ஒரு ப்ரமாணத்தையும் காட்டவில்லை அஹோ! வானமாமலை (தோதாத்₃ரி), மேல்கோட்டை (யாத₃வாத்₃ரி), ஸ்ரீரங்கம் முதலான தி₃வ்யதே₃ஶங்கள் இதிஹாஸபுராணங்களிலேயே புகழப்படுபவை. அவற்றின் காலங்களுக்கு முன்பே ஏற்பட்டவை. ஆகையால் அவையும், அவற்றைக் கூறும் ஆகமங்களும் மிக மிகப் புராதனமானவையே. (118) நெற்றியில் போடவேண்டியகுறிகளைச் சொல்லு

இன்றன என்னும் காரணத்தால் புராதனமாகா என்பது எப்படித்தேறும்? ஸ்ரீ வேதா₃ந்த தே₃சிகர் எடுத்த மஹோப நிஷத்₃வாக்யத்திலேயே "த்₄ருதோர்த்₄வ புண்ட்₃ர:" என்று ஊர்த்₄வபுண்ட்₃ரம் கூறப்பட்டுள்ளதே. மற்றும் பல ஶ்ருதி ப்ரமாணங்களிலும் ஊர்த்₄வபுண்ட்₃ரம் கூறப்பட்டுள்ளதாக வேதா₃ந்த தே₃சிகர் காட்டியுள்ளாரே! அவர் பொய்யரா? (119) "ப₃ஹுதா₄ விஜாயதே" "ஸ வா ஏஷ புருஷ: பஞ்சதா₄ பஞ்சாத்மா" முதலான வேத₃வேதா₃ந்த வாக்யங்கள் ஒரே கடவுள் பல படியாக அவதரிப்பதாகக் கூறியிருப்பதையே பாஞ்சராத்ரம் விவரித்தது. இதை அறியாமல் 'உபநிஷத்தின் கொள்கைக்கும், ஆகமக்கொள் கைக்கும் உறவேகிடையாது' என்று பிதற்றுவது எந்த ப்ரமாணத்தோடும் இவருக்கு உறவே கிடையாது என் பதையே நிலைநாட்டும். (120, 133) மஹாபா₄ரதத்திற்கும் மிக முற்பட்டகாலத்தில் ஏற்பட்ட பாஞ்சராத்ர ஆக₃மங் களில் வாஸுதே₃வன், ஸங்கர்ஷணன், ப்ரத்₃யும்நன், அநிருத்₃த₄ன் என்னும் நான்கு வ்யூஹங்கள் கூறப்பட் டுள்ளன. அப்பாஞ்சராத்ரத்தின் ப்ராமாண்யத்தை உல கிற்கு அறிவிப்பதற்காக அப்பெயர்களைக் கண்ணன் (வாஸு தே₃வன்) தனக்கும் தன் குடும்பத்தினருக்கும் அமைத்துக் கொண்டான். ஸாத்வதர் அநுஷ்டித்ததால் ஸாத்வதவிதி₄ என்று பெயரும் ஏற்பட்டது. இப்படியிருக்க, கண்ணன் குடும்பப் பெயரிலிருந்தே பாஞ்சராத்ரம் தோன்றிற்று என எழுதுவது, 'என் பெயரையே எங்கள் தாத்தா வைத்துக்கொண்டார்' என்று பேரன் சொல்லுவதுபோல் இருக்கிறது! (135) புராணங்கள் விக்ரஹ வழிபாட்டைச் சேர்த்துக்கொள்ளவில்லை என்று எழுதிவிட்டு, உடனே சிலவிடங்களில் குறிப்பிடுவதாக எழுதியது முன்னுக்குப் பின் முரண். 'அந்தந்தக் காலத்தின் நிலைமை' என அடிக்கடி எழுதுவது இவர் கற்பனையேயொழிய ப்ராமாணிக மன்று. "ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாக₃மத்" என்று ஸ்ரீராமாயணத்திலேயே விக்₃ரஹவழிபாடு சொல்லி

யிருப்பதை அறியாமல் அஹோ எழுதுவது அவர் ஸ்ரீராமாயணத்தைக்கூட சரியாக ஸேவித்தவரல்லர் என்பதையே நிலைநாட்டுகிறது. வேதத்திலேயே முழங்கப்பட்டிருக்கும் அர்ச்சாவதாரம் பிற்காலத்தில் வந்து கலப்பதாகப் பிதற்றுவது மயக்கத்தாலானது. *(136, 137)* வாஸுதே3வன், சங்கர்ஷணன் இவர்கள் வழிபாட்டில் போட்டி ஏற்பட்டது என்று தொடங்கி எழுதுவதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. வாஸுதே3வனை வழிபடுவோர், ஸங்கர்ஷணனை வழிபடுவோர் என்று எக்காலத்திலும் நம்நாட்டில் பிரிவு இருந்ததேயில்லை. வைஷ்ணவத்தின் பெருமையைப் பொறாத சிவப4க்தர்கள் சைவத்தைப் போட்டியினால் வளர்த்து, அதுவே ஶாக்தம், கா3ணபத்யம், கௌமாரம் என்று பலபடியாகப் பிற்காலத்தில் பிளவுபட்டது என்பதே வரலாறு காட்டும் உண்மை நிலை. *(138 139 141)* ஆக3மவித்3வான் பெரிய திருவடி பட்டாசார்ய ஸ்வாமியால் இக்கூற்றுகள் ப்ரமாணங் காட்டி மறுக்கப்பட்டுவிட்டன. *(145, 147)* நான்கு வ்யூஹங்களிலிருந்து தோன்றியவை பனிரண்டு வ்யூஹாந்தரங்கள் என்று பாஞ்சராத்ரம் தெளிவாகக் காட்டியிருக்கையால் இக்கூற்றுகள் அஹோவின் கற்பனையின் ஆகாச தாண்டவத்தையே காட்டுகின்றன. ஶுக்லயஜுர்வேத3த்தைச்சேர்ந்த மாத்4யந்தி3ந சதபத2ப்3ராஹ்மணத்தின் பதின்மூன்றாம் காண்டம் ஆறாவது அத்தியாயம் (அல்லது நாலாம் ப்ரபாடகம்) முதல் ப்3ராஹ்மணத்தின் தொடக்கத்தில், "புருஷோ ஹ நாராயணோऽகாமயத" என்று தொடங்கும் ஜக3த்காரண வஸ்துவைச் சொல்லும் வாக்யத்தில் பரம் பொருளுக்கு நாராயணபத3ம் பெயராகப் படிக்கப்பட்டுள்ளது. "நாராயண பரம்ப்3ரஹ்ம" "தி3வ்யோ தே3வ ஏகோ நாராயண:" "ஏகோ ஹவை நாராயண ஆஸீத்" முதலான உபநிஷத்3 வாக்யங்களிலும் இந்நாமம் முழங்கப்பட்டுள்ளது. "நாராயணாய வித்3மஹே வாஸுதே3வாய தீ4மஹி தந்நோ விஷ்ணு: ப்ரசோத3யாத்" இத்யாதி3களில் விஷ்ணு வாஸுதே3வ ஶப்3த3ங்களும் அப்

படியே பரம்பொருளுக்குப் பெயராக வேதாந்தங்களில் படிக்கப்பட்டுள்ளன. இப்படியிருக்க, இத்திருநாமங்கள் வெவ்வேறு வ்யக்திகளைக் குறிப்பதுபோலவும், பிற்காலத்தில் ஒன்றானதாகவும் பிதற்றுவது, 'மலடிமகன் ஆகாயத் தாமரையைச் சூடிக்கொண்டு ஆகாசதாண்டவமாடுகிறான்' என்பதுபோல் உள்ளது. (156. 157) "ஆகமங்களில் கூறப்பட்ட விக்ரஹ வழிபாடு வீட்டிலும் பின்பற்றப் பட்டது' என்னும் உண்மையைத் திரித்துக் கூறுகிறார் அஹோ! மற்றவிடங்களிற்போலே இக்கூற்றுக்கும் எவ்வித ஆதாரமும் காட்டவில்லை. (171. 172) பாஞ்சராத்ரம் முழுவதும் நாராயணனாலேயே உபதேசிக்கப்பட்டது என்று ஆகமங்கள் மாத்திரம் சொல்லவில்லை. மஹாபாரதத்தில் வியாஸரே கூறியிருக்கிறார் என்பதை முன்னமே காட்டினோம். ஆகமங்கள் மூலவேதத்தை மட்டுமல்லாமல் ருக் முதலான நான்கு வேதங்களையும் ப்ரமாணமாகக் காட்டுகின்றன. அத்யயனம் செய்யும்படி விதிக்கின்றன என்பதைக் கண்ணிருந்தும் காணமல் விபரீதமாக எழுதுகிறார் அஹோ! ஸ்ரீபாத்மஸம்ஹிதை. சர்யாபாதம் 21-வது அத்யாயம் 13. 16ம் ஶ்லோகங்களில் "பஞ்சகாலம் யதாஶாஸ்த்ரம் க்ருஹே வா மந்திரேऽபி வா। பகவத்பூஜநம் கார்யம் அத்ய ப்ரப்ருதி நாந்யதா ॥ ஶாகாந்தரேஷு யே மந்த்ரா: பாவநா: பரமர்ஷய:। தாநப்யதீத்வம் தைர்மந்த்ரை: அர்ச்சயதவமதோக்ஷஜம் ॥" [பரமரிஷிகளே! இந்த ஶாஸ்த்ரத்தில் சொல்லியபடி வீட்டிலோ, கோயிலிலோ ஐந்து காலங்கள் இன்று முதல் அவஶ்யம் பகவானை ஆராதிக்கவேண்டும். மற்ற ஶாகைகளில் உள்ள பாவனமான மந்திரங்களையும் அத்யயனம் செய்யுங்கள் அம்மந்திரங்களாலும்; எம்பெருமானை ஆராதனம் செய்யுங்கள்.] என்று முழங்கப்படுவதைக் காணலாம். ஸ்ரீபாத்மம் சர்யாபாதத்தில் 3-ம் அத்தியாயத்தில் பகவதாராதனம் சொல்லுமிடத்து 187 ஶ்லோகங்கள் வேதமந்திரங்களாலே ஆராதனம் செய்யவேண்டுமென்று கூறி, கடைசியில்—

மந்த்ரைர் யதோ₂க்தை: ஆராத்₄ய: ஸூக்தேந புருஷேண வா|
அத₂வா த்₃வாத₃ஶார்ணத்₃யைர் மந்த்ரைர் பி₃ம்ப₃முகே₂ ஹரிம்||
ப்ரபத்₃யதே பரம் ஶ்ரேயோ நிஷ்காமோ யதி₃ பூஜக: ||

[முற்கூறிய வேத₂மந்திரங்களாலே எம்பெருமானை ஆராதி₄க்க வேண்டும்; (அதில் சக்தியற்றவர்கள்) புருஷ ஸூக்தத்தாலே ஆராதி₄க்கவேண்டும்; (அதிலும் சக்தியற்றவர்கள்) த்₃வாத₃ஶாக்ஷரம் முதலிய மந்திரங்களைக்கொண்டு ஆராதி₄க்கவேண்டும். ஆராதி₄ப்பவன் க்ஷுத்₃ரப₂லன்களில் விருப்பமற்றவனாய் இவ்வண்ணமாகப் பூஜித்தால், மேலான பலனை (மோக்ஷத்தை) அடைவான்.] என்று கூறியிருப்பதையும் காணலாம். எந்த ஆசார்யரும் வேதத்தையும் விடவில்லை; ஆகமத்தையும் விடவில்லை; அனைவரும் அனைத்தையுமே ப்ரமாணமாகக் கொண்டனர். விபரீதமாக அஹோ எழுதுவது அவருடைய வைஷ்ணவாசார்யவித்₃வேஷத்தையே காட்டுகிறது. (205 206, 215) பல ப்ரமாணங்களைக் காட்டி ஆக₃மவித்₃வான் ஸ்வாமி இக்கூற்றுகளை மறுத்துள்ளார். (318 319) பாஞ்சராத்ரத்தில் எங்குமே எவ்விதமான போட்டியோ, பொறுமையோ இல்லை. போட்டியாலும், பொறுமையாலும் தங்கள் மதத்தை வளர்த்துவரும் ஶைவஶாக்தர்களோடு ஸஹவாஸத்தாலே துர்யோதனனைப்போலே இவர் எங்கும் போட்டியையும் பொறுமையையும் காண்கிறார். "த்₃வாத₃ஶாக்ஷர வித்₃யைவ" என்று தொடங்கும் அர்த்த₄ஶ்லோகத்தை, அது எப்ரகரணத்தில் வருகிறது, அதன் பொருள் என்ன என்று புரிந்துகொள்ளாமலே இங்கு ப்ரமாணமாக எடுக்கிறார் அஹோ. இந்த ஶ்லோகம் கர்மஸந்யாஸ ஸ்வரூபலக்ஷணம் சொல்லுமிடத்தில் பாத்₃மஸம்ஹிதையில் சர்யாபாத₃த்தில் 21-வது அத்தியாயத்தில் 34-வது ஶ்லோகத்திலிருந்து தொடங்கும் ப்ரகரணத்தில் உள்ளது. அப்ரகரணம் பின்வருமாறு:— "கர்த்தவ்யத்வேந ப₄வநே ப்ராஸாதே₃ வா சதுர்முக₂| கால்யே மத்₄யந்தி₃நே ஸச்சி₂த்₃ர பஞ்சகால பராயணை:|| நிராஶை: கர்மஸந்யாஸகாரிபி₄ர்

தே3வபூஜநம்| ப3லாதி3 மந்த்ரைரச்சி2த்3ரபஞ்சகால பராயணை: ||" ஏகாத்4வநா நிஷேகாதி3ஸம்ஸ்காராஸ்ச ப3லாதி3பி4: |
சதுர்ணாம் ப்3ராஹ்மணாதீ3நாம் விஹிதம் நய கர்ம ச ||
த்3வாத3ஸாக்ஷரவித்3யைவ தேஷாம் வித்3யா ந ச த்ரயீ |
ந ஸாவித்ரீ ந மந்த்ரோऽந்ய: ஸ்வாத்4யாய ஜபகர்மணோ: ||

[நான்முகனே! இடைவிடாமல் பஞ்சகால பராயணர்களாயிருப்பவர்களாய், க்ஷுத்3ரப2லன்களில் ஆசையற்றவர்களான கர்மஸந்யாஸிகளுக்கு காலையிலும் நடுப்பகலிலும் வீட்டிலும் கோயிலிலும் ப4க3வதா3ராத4நம் ப3லாதி3மந்த்ரங்களாலேயே விதி4க்கப்பட்டுள்ளது. ப்3ராஹ்மணர் முதலான நான்கு வர்ணங்களிலுமிருந்துகொண்டு இடைவிடாமல் பஞ்சகால பராயணராயிருப்பவர்களுக்கு நிஷேகம் (க3ர்ப்பா4தா4நம்) முதலிய ஸம்ஸ்காரங்களும், உபநயனகர்மமும் ஒருபடியாக ப3லாதி3மந்த்ரங்களாலேயே விதிக்கப்பட்டுள்ளது. த்3வாத3ஸாக்ஷர வித்3யையே அவர்களுக்கு வித்3யை. வேத3மல்ல. அவர்களுக்கு அத்4யயநம் ஜபம் முதலியவை செய்வதற்கு கா3யத்ரீ மந்த்ரமோ, வேறு வேத3மந்திரமோ கிடையாது.] என்பது அப்ரகரணம். கீதையில் கர்மஸந்யாஸி எனப்படும் ஜ்ஞாநயோக3நிஷ்ட2னுக்குக் கர்மங்களை விடுவதை விதி4க்திருப்பதுபோல், ஏகாயநவேதத்தைச் சேர்ந்த கர்மஸந்யாஸிகளுக்கு வைதி3க கர்மங்களுக்கு பதிலாக ஏகாயந வேத3விஹித கர்மங்களை இங்கு விதி4க்கிறது. இது அனைவர்களுக்குமல்ல. ஆகையால் இங்கு போட்டிக்கோ, பெருமைக்கோ இடமில்லை. இது போட்டியென்றால் கீ3தையிலும் போட்டியைச் சொல்லவேணும். "நாராயணன்" என்ற சொல் வேத3வேதா3ந்தங்களிலேயே பரம்பொருளின் மற்ற திருநாமங்களைக் காட்டிலும் விஶேஷமாக ஓதப்பட்டிருப்பதை முன்னமே காட்டினோம். அதனாலேயே ஆழ்வார்களும் அதையே விசேஷித்து ஆதரித்தனர். இதற்குக் காரணம்—வேறு எந்த தெய்வத்திற்கும் பொருந்த முடியாத ஸம்ஜ்ஞாவாசகமாக இது இருப்பதே என்று ஆசார்யர்கள் நிலைநாட்டினர். ஆகையால் நாராயணநாமம்

திடீரென்று முக்யத்துவத்தைப் பெற்றதாக எழுதுவது பரம அபத்தமாகும்.

ஆக, ஆலயங்களையும், ஆகமங்களையும், அவற்றின் வழி பாட்டு முறைகளையும் இகழ்ந்ததும் அப்ராமாணிகம் என்று நிலைநாட்டப்பட்டது.

(3) உபனிஷத்தில் நிர்க்குண ப்ரம்மமே உண்டு என்னல்

(17,18) வைணவ சம்பிரதாய ஆசாரியர்கள் விஷ்ணு புராணத்தை அடிப்படையாகக் கொண்டு வைணவ மதத்தைத் தொடக்கத்தில் வளர்த்தனர். உபநிஷத்துக்களில் கூறப்படும் உருவம் இல்லாத பிரும்மத்தை உருவமுடைய விஷ்ணுவாக ஆக்கி, குணம் இல்லாத பிரும்மத்தைக் குணமுடையதாக விளக்கிய பெருமை விஷ்ணு புரா ணத்தைச் சாரும். (20) ஆழ்ந்து கவனித்தால் சரீர சரீரி பாவம் ராமாநுஜரின் நூல்களிலேயே உருவாகிறதென்று தெரிகிறது. அத னோடு உருவம் இல்லாத பிரும்மத்துக்கு அழகான ஆண் உருவம் கொடுத்து, ஆடையுடுக்க செய்து, அவனோடு பெண் உருவில் உள்ள மகாலக்ஷ்மியையும் சேர்த்து, பரிவாரங்கள், இருப்பிடங்கள் இவற்றை விரிவாக வருணித்து, வைணவத்தை உருவாக்குகிறார். (23,24)உபநிட தங்கள் நிர்க்குணப் பிரும்மமாகக் கூறும் கடவுளைப் புராணங்களும் இதிகாசங்களும் அவதார புருஷனைக் காட்ட, அவனை யோகியர் தங்கள் உள்ளத்திலும், பக்தர்கள் தங்கள் பஜனையிலும் கொண்டு மகிழும் நிறைவைப் பொதுமக்கள் ஆலய வழிபாட்டின்மூலம் எளிதில் பெற்று அமைதியுறுகிறார்கள். (162) உபநிஷத்துக்கள் ஒரே தெய்வம் என்ற கொள்கையைச் சொல்லும் காலத்தில் அந்தத் தெய்வத்தைப் பிரம்மம் என்றே சொல்லுகின்றது......ராமானுஜர் அந்த பிரம்மத் திற்குக் குணம் உண்டு, உருவம் உண்டு என்று விளக்கம் கூறினார். யார் எந்த விளக்கம் கூறினாலும் பிரம்மம் என்பது பிரம்மம்தான்; அதற்குத் தனியான பெயரில்லை, (169, 170) வேதாந்திகளுள் சிலர் பிரும்மம் ஒன்றுதான் சத்யம். மற்றது எல்லாம் கல்பிதமென்று சொல்லிவிட்டார்கள். இவர்களுக்குச் சிக்கல்கள் மிகக் குறைவு. ஆனால் அந்தப் பிரும்மத்தைக் கடவுளாகக் கொண்டு உருக்கொடுத்து, உல கோடும். வாழ்க்கையோடும் சம்பந்தப்படுத்தும்போது பல பிரச்சனைகள் தாமாகவே உண்டாகின்றன.

ஸுத₃ர்ஶனம் ஆசிரியரின் மறுப்பு

இப்பிதற்றல்கள் எல்லாம் காமகோடி பீடாதி₄பதியிடம் நீண்டநாளாகச் சம்பளம் வாங்கி வயிறு வளர்ப்பதால் அஹோவிற்கு ஏற்பட்ட வினையாகும். ஆதி₃ஶங்கரர் முதலான த்ரிமதஸ்த₂ர்களான ஆசார்யர்களாலும், மற்றும் ப₄ாரததே₃ஶத்தில் உள்ள சான்றோர்கள் அனைவராலும் ஒருமுகமாகக் கொண்டாடப்பட்டு ப்ரமாணமாக எடுக்கப் படும் விஷ்ணுபுராணத்தை இகழ்வதன்மூலம் ஆதி₃ஶங்கரர் முதலான அனைவரையுமே இகழ்ந்தவராகிறார் அஹோ. இவரது ஆசார்யரான காமகோடி பீடாதி₄பதி—புராணரதநமென்று அனைவராலும் புகழப்படும் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தை இகழ்ந்துரைக்கும் இக்கூற்றுக்களை ஆதரிக்கிறாரா அல்லது கண்டிக்கிறாரா என்று உலகிற்குத் தெரியவேணும். (காஞ்சீபுரம்-3) தேனம்பாக்கம் சிவாஸ்தானத்திலிருக்கும் அப்பீடாதி₄பதி அஹோவைக் கண்டிக்கும் நமது ஸுத₃ர்ஶனம் முதலிரண்டு இதழ்களைக் கோரிப்பெற்றார். மற்ற இதழ்களையும் அவருக்கு அனுப்பி வருகிறோம். அஹோவின் இத்தகைய நாஸ்திக வாத₃ங்களை அவர் க₂ண்டி₃க்காவிடில், "அப்ரதிஷித்₃த₄மநுமதம் ப₄வதி" என்கிற ரீதியில் அவரும் இதை ஆதரித்ததாகவும், தூண்டிவிட்டதாகவுமே ஆகுமாகையால், அவரும் இவரைப்போன்ற ஆஸ்திகவேஷங்கொண்ட நாஸ்திகரே என்று நடுநிலைநிற்கும் நல்லோர்கள் முடிவுகட்டுவார்கள். நிற்க.

உபனிஷத்துக்களில் உருவமில்லாத ப்₃ரஹ்மம்கூறப்படுவதாக அடிக்கடி புலம்புகிறார் அஹோ. அனைவரும் ஓதிவரும் தைத்திரீய நாராயணவல்லியில் "நாராயண பரம் ப்₃ரஹ்ம" என்று தொடங்கி, நாராயணனைப் பரப்₃ரஹ்மமாகவும் பரதத்வமாகவும் பரஞ்சோதியாகவும், பரமாத்மாவாகவும் உத்₃கோ₄ஷித்து, "நீலதோயத₃ மத்₄யஸ்த₂ா வித்₃யுல்லேகே₂வ ப₄ாஸ்வரா" என்று அந்தப் பரப்₃ரஹ்மத்தின் உருவத்திற்கு மின்னலோடு கூடிய மேகத்தை த்₃ருஷ்டாந்த

மாக எடுக்கது உபனிஷத். சா₂ந்தோ₃க்₃ய உபனிஷத் ஆதி₃த்ய மண்ட₃லத்தின் நடுவிலுள்ள ப்₃ரஹ்மத்தைப் படிக்கும்போது அவனுக்கு அற்புதமான உருவத்தைக்கூறிச் செந்தாமரைக் கண்கள் இரண்டையும் ஓதிற்று. எலலா வேத₃ங்களிலும் படிக்கப்படுவதாய். "வேதே₃ஷு பௌருஷம் ஸூக்தம்" என்று வேதத்திலேயே தலைசிறந்த பா₄க₃மாகக் கொண்டாடப்படுவதான புருஷஸூக்தம் "ஆதி₃த்ய வர்ணம்" என்று பரம்பொருளுக்கு உருவத்தைக்கூறி, "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்று அவனுக்கு ஸ்ரீ பூ₄மிதே₃விகளைப் பத்னிகளாகவும் படித்தது. இப்படியிருக்கும்போது, "உபனிஷத்தில் ப்ரஹ்மம் நிர்க்குணமாகவும் உருவமற்றதாகவுமே சொல்லப்பட்டது. பராசரரும், ராமாநுஜரும் அதை குணமுடையதாகவும், உருவமுடையதாகவும், பத்னீவிஶிஷ்டமாகவும் ஆக்கிவிட்டார்கள்" என்று அஹோ பிதற்றுவதால் நல்லோர்கள் எவரும் நிலைகலங்க மாட்டார்கள். மாயாவாதி₃களின் ஸஹவாஸதோ₃ஷத்தால் இவர் ஆஸ்திகநாஸ்திகராகிவிட்டாரே என்று பரிதாபப் படுவதையே செய்வார்கள். சில உபனிஷத்₃ வாக்யங்கள் ப்₃ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை ரூபமற்றதாகவும், ஸத்வம் முதலான ப்ராக்ருத கு₃ணங்களற்றதாகவும் படித்தன. அந்த ப்₃ரஹ்மத்திற்கே தி₃வ்யமங்க₃ள விக்₃ரஹமும், கல்யாண கு₃ணங்களும், ஸ்ரீ பூ₄மிநீளாதே₃விகளும் உண்டென்று பல வேதவாக்யங்கள் படிக்கின்றன. இவை இரண்டுக்குமிடையே விரோத₄மே இல்லையே. ஜ்ஞாநாநந்த₃மயமான ப்₃ரஹ்மஸ்வரூபத்திற்கு ரூபமில்லாவிடினும், அடியார்களை உகப்பிப்பதற்காக அப்பரம்பொருள் ரூபமுடைய சோதியுருவை எடுத்துக்கொள்கிறது; தாழ்ந்த குணங்கள் அதனிடமில்லாவிடினும், கல்யாண கு₃ணங்கள் உள்ளன. ப்ராக்ருதமான பத்னியில்லாவிடினும், சேதனனையும், பரம்பொருளையும் சேரவிடும் ஜக₃ந்மாதாக்களான தே₃விகள் அவனுக்கு உண்டு என்று நம் ஆசார்யர்கள் எல்லா உபனிஷத்₃ வாக்யங்களையும் பொருந்தவிட்டிருக்கிறார்கள்.

இதற்கு அஹோவால் என்ன குறை சொல்லமுடியும்? "யஸ்யாத்மா ஶரீரம் யஸ்ய ப்ருதி$_{2}$வீ ஶரீரம்" என்று உபனிஷத்துக்களில் பலவிடங்களில் எல்லா உலகையும் பரம புருஷனுக்கு சரீரமாக கோ$_{4}$ஷித்திருக்கிறது. "தாநி ஸர்வாணி தத்$_{3}$வபு:" [வி. பு.] "தத் ஸர்வம் வை ஹரேஸ்தநு:" [வி. பு.] "ஜக$_{3}$த் ஸர்வம் ஶரீரம் தே" [ஸ்ரீராமாயணம்] என்று இதிஹாஸ புராணங்களிலும் இவ்வர்த்த$_{2}$ம் ஆதரிக்கப்பட்டது. அப்படியிருக்கும்போது 'சரீரசரீரிபா$_{4}$வம் ராமானுஜரின் நூல்களிலேயே உருவாகிறது' என்று அஹோ எழுதுவது எத்தனை பெரிய பொய்! 'பிரம்மம் ஒன்றுதான் உண்மை. மற்றவையனைத்தும் பொய் என்று கூறுகிறவர்களுக்கு சிக்கல்கள் குறைவு; மற்றவர்களுக்கு சிக்கல்கள் அதிகம்' என்று கூறுவதன் மூலம் மாயாவாதி$_{3}$களிடம் தமக்குள்ள அபி$_{4}$மானத்தையும். வைஷ்ணவர்களிடமுள்ள வித்$_{3}$வேஷத்தையும் காட்டிக்கொள்வதுதவிர. இவ்விஷயங்களை மூதலிக்க ஒரு ப்ரமாணம் உண்டோ? ஸ்ரீபா$_{4}$ஷ்யாதி$_{3}$க்$_{3}$ரந்த$_{2}$ங்களில் மாயாவாத$_{3}$மதத்தில் உள்ள அவிழ்க்கவொண்ணாத பல்லாயிரக்கணக்கான சிக்கல்கள் காட்டப்பட்டிருப்பதைப் படிக்காமல். அவற்றைப் புரிந்துகொள்ளவும் சக்தியில்லாமல் இப்படி மனம்போனபடி எழுதுவதா மனிதத்தன்மை? ஒரு ப்ரமாணத்தையும் காட்டாமல், ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள் காட்டியிருக்கும் பல்லாயிரக்கணக்கான ப்ரமாணங்களையும் காணமனமில்லாமல். "ராமானுஜர் அந்த பிரம்மத்திற்கு குணம் உண்டு. உருவம் உண்டு என்று விளக்கம் கூறினார். யார் எந்த விளக்கம் கூறினாலும் பிரம்மம் என்பது பிரம்மம் தான். அதற்குத் தனியான பெயரில்லை" என்று அடித்துக்கூறுவதன் மூலம் ஸ்ரீபா$_{4}$ஷ்யாதி$_{3}$க்$_{3}$ரந்த$_{2}$ங்களைக் கண்டித்துவிட்டதாக மனப்பால் குடிக்கும் இவரது பேதமையை என்னென்று சொல்லுவது! ஆக, உபனிஷத்தில் நிர்க்குண ப்ரம்மமே உண்டு என்றது அறிவின்மையால் பிதற்றியது என்று நிலைநாட்டப்பட்டது.

(4) விஷ்ணுவையும், வைணவத்தையும் இகழ்தல்.

(5) முத்தொழில் செய்யும் மும்மூர்த்திகளுள் காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவுக்கு முதலிடம் கொடுத்துத் தோன்றிய மதம் விஷ்ணுவையே பரம்பொருளாகக்கொள்ளும் வைணவ மதமாகும். வைணவம் வேதகாலத்திற்குப் பிற்பட்டு ஒரு காலத்தில் உண்டாகிப் படிப்படியாகப் பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து ஓர் ஆசார்யனை ஒப்புக்கொண்டு சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தொடங்கியதும். தன் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது என்பது புலனுகின்றது. (10) வைணவம் என்ற சொல் வேதத்திலேயே காணப்படும் சொல். (யஜுர் வேதம்-முதல் காண்டம்-இரண்டாவது-பிரஸ்னம்-இரண்டாவது அநுவாகம்) எனினும் அஃது வேருெரு கருத்தில் பயன்படுத்தப்பட்ட சொல்லாகும். விஷ்ணுவை மட்டும் வழிபடுவது என்பதும் விஷ்ணுவே பரதெய்வம் என்பதும் பின்னர் வந்த கொள்கைகளாம். (15) விஷ்ணு என்ற சொல்லினை அடிப்படையாகக் கொண்டு அமைந்த வைணவம். பரம்பொருளின், பெயராக விஷ்ணு என்பதனை முக்கியமாகக் கொள்ளாமல், நாராயணன் என்ற பெயரையே சிறப்பாகக் குறிப்பிடுகிறது. (17) அக்நியில் ஹோமம் செய்து தெய்வங்களை வழிபடும் கொள்கைக்கு வைணவம் வேதத்தைப் பின்பற்றுகிறது. 'விக்கிரக வழிபாடு' 'ஆலய வழிபாடு' என்பனவற்றிற்கு வைணவம் ஆகமத்தைப் பின்பற்றுகிறது. (19) நாதமுனிகளே தத்வத்ரயம் என்று கூறப்படும் ஜீவாத்மா, இயற்கை, கடவுள் என்ற முப்பொருள்களை முதலான உண்மைகளாகக் கண்டுபிடித்தார். 'கடவுள் நாராயணனே' என்பது நாதமுனிகள் கண்ட முடிவு. (20) ஆழ்ந்து கவனித்தால் சரீரசரீரி பாவம் ராமாநுஜரின் நூல்களிலேயே உருவாகிறதென்று தெரிகிறது. ...பக்தியால் வீடுபேறடையலாம் என்று கூறிய முதல் ஆசாரியர் இராமாநுஜரே. சரணுகதியை இராமாநுஜர் ஒருவாறு ஒப்புக்கொண்ட போதிலும், அதை மோட்ச சாதநமாகக் குறிப்பிடவில்லை. (97) ஆசாரியர்களுடைய கருத்தில் உருவாகி உபதேச பரம்பரையிலேயே தனியாக வளர்ந்துவந்த தமிழ்நாட்டு வைணவத்திற்கும், ஆகமங்களையும் ஆகம சப்பிரதாயங்களையும் நேராகப் பின்பற்றி வந்த ஆலயங்களுக்கும் நேரான தொடர்பு கிடையாது. இந்தச் சம்பிரதாயத்திற்கு விஷ்ணு ஆலயத்தில் ஆகமப்படித் தனி இடம் கிடையாது. (104) பரமைகாந்தி தர்மமும் ஆலய வழிபாடும் ஒன்றுபட இடமில்லை, (104) பாகவத தர்மம் வேறு, ஆலயவழிபாட்டை வகுக்கும் ஆகமங்களின் தர்மம் வேறு. தனியாகத் தோன்றிய இரண்டும் பிற்காலத்தில்

ஒன்ருகக் கலந்துள்ளன. (113) வேத மந்திரங்கள் பல பெயருள்ள தெய்வங்களைச் சொல்வதால் இங்கு விஷ்ணுதான் முழுமுதற் கடவுள் என்ற கொள்கைக்கு இடமில்லாமல் போகிறது. (115, 116) வேதத்திலுள்ள விஷ்ணு என்ற சொல்லை வாசுதேவனேடு சேர்த்து காலக்கிரமத்தில் விஷ்ணு என்ற சொல்லை முக்கியமானதாக ஆக்கி பேசுவதால் வைணவ தர்மம் என்ற பெயரும் ஏற்பட்டுள்ளது. அவ்விதமே வேதத்திலுள்ள பகவான் என்ற சொல்லை எடுத்துக்கொண்டு அதை அடிப்படையாகக்கொண்டு உருவம் குணங்கள் இவைகளை விளக்கி, தனியான தெய்வமாக ஆக்கி பேசும் பண்பாட்டின்மூலம் பகவான் என்ற சொல்லும் விஷ்ணுவையே குறிப்பிடுவதாக ஆகிவிடுகிறது. அதனுல் பகவானைச் சேர்ந்த தர்மம் என்ற முறையில் பாகவத தர்மம் என்ற பெயருள்ளதாகவும் ஆகிவிடுகிறது. (121) பல தேவதைக்கொள்கையில் அலுத்துப்போன பிறகு, யாராவது ஒருவரை தலைவராகக் கொண்டு மற்றவர்களைஅவனுக்கு கட்டுப்பட்டவர்களாகச் செய்யவேண்டும் என்ற எண்ணம் உதயமாகிறது. (123) பிறக்கும் இயல்பில்லாமல் உயர்நிலையிலிருந்த தெய்வம் தாழ்ந்துள்ள நிலையை அடைந்து பிறப்பை எடுப்பதும் அவதாரக் கொள்கையைச் சார்ந்தது. இந்தக் கொள்கையும் உபநிடதக் கருத்தோடு ஒத்துப்போகக் கூடியதில்லை. (126, தெய்வக்கொள்கைவேறு. வேதாந்தக் கொள்கை வேறு. உபநிஷத்தின் வேதாந்தக்கொள்கைப்படி அவதாரம் கிடையாது, வேதத்தில் காணப்படும் தெய்வக் கொள்கைப்படி கடவுளுக்கும் பிறப்பு உண்டு என்று ஏற்படுகிறது.(145,146) சூரியனுக்கும் மாதங்களுக்கும் சம்பந்தம் உண்டு.சூரியனைத்தான் விஷ்ணு என்று வேதம் கூறுகிறது. (161) வேதத்தில் காணப்படும் விஷ்ணு தனியான தேவதையா? அல்லது பரந்தகடவுள் தத்துவத்தில் ஒரு அம்சமா? என்பது நாம் முடிவு பண்ண வேண்டிய விஷயம்......ஆனுல் நம்முடைய இதிகாசப் புராணங்கள் வேதங்களில் பல தேவதைகள் புகழப்பட்டிருப்பதாகவே கூறுகின்றன. அவ்விதத் தேவதைகளில் விஷ்ணுவும் ஒருவர். ஆனுல், இந்த விஷ்ணு வேறு யாருமில்லை; சூரியன் தான் என்பது வேத மந்திரங்களிலிருந்து வெளியாகிறது. அந்த விஷ்ணுவும் மற்ற தேவதைகளோடு சமமான நிலையில் இருந்து வருகிருரே தவிரத் தனியான பெருமையுடன் இருப்பதாகத் தெரியவில்லை. வேத உரை ஆசிரியரான யாஸ்கர் சூரியன் தான் விஷ்ணு என்று கூறிவிட்டார். (162) பிறகு வந்த புராணங்கள் பிரம்மம் என்று குறிப்பதைவிட்டு வேத நூலிலே காணப்படும் விஷ்ணு என்று பெயரை முக்கியமாக வைத்துப் பேச ஆரம்பித்தன. பெரும்பான்மையான புராணங்கள்

விஷ்ணுவை தங்களுடைய முக்கிய தெய்வமாகக் கொண்டுள்ளன. உபநிஷத்தில் சொல்லப்படும் பிரம்மம் விஷ்ணுதான் என்று வேத வியாசரின் தகப்பனாரான பராசரர் விஷ்ணுபுராணத்தில் கூறினார். இதனால் விஷ்ணு என்ற பெயரோடு ஒரு கொள்கை உருவாக ஆரம்பித்துவிட்டது. (163, 164) எப்படி விஷ்ணு வேதகாலத்திற்குப் பிறகு முதல் தெய்வம் ஆனார் என்பது பெரியபிரச்சினை. ஒரு தனித் தெய்வம் வேண்டும் என்ற கொள்கை வேதகாலத்திற்குப் பிறகு உண்டாயிற்று என்பது திண்ணம். மக்கள் தங்களிஷ்டப்படி வேதத்தில் காணப்படும் விஷ்ணுவைக் கற்பித்துத் தங்களிஷ்டப்படி ஓர் உருவையும், பெயரையும் அவருக்குக் கொடுத்து வணங்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் வரலாற்றின் ரீதியில் என்ன நடந்திருக்கின்றது என்பது புரியவில்லை. மற்ற தேவதைகள் எல்லோருக்கும் விஷ்ணுதான் தெய்வம் என்று கூறிவிட்டார்கள். (165, 166) புராணங்கள் கதைகளை விளக்க வந்தாலும் அவைகளால் யார் உயர்ந்த தெய்வம் என்று முடிவுபண்ணமுடியவில்லை. அவ்விதமே உபநிடத்தில் உருவமில்லாத பிரும்மமும் உருவுள்ள விஷ்ணுவும் ஒன்றாகி விட்டன. ஆனால் படைப்பது, காப்பது, அழிப்பது என்பது ஒரே கடவுள் செய்ய முடியாததனால் மும்மூர்த்திகளைக் கற்பித்துக்கொண்டு ப்ரும்மா படைப்பிற்காகவும், விஷ்ணு பாதுகாப்பிற்காகவும், சிவன் அழிப்பதற்காகவும் ஏற்பட்ட கடவுள் என்று சொல்லி மும்மூர்த்திகளும் கடவுள்தான் என்ற கொள்கை உருவாகிறது. மும்மூர்த்திகளில் ஒருவரான விஷ்ணுவே மும்மூர்த்திகளுக்கும் மூலம். அவர் மூலக்கடவுளாக இருப்பதுமட்டுமில்லாமல் மும்மூர்த்திகளில் ஒருவராகவும் அவதாரம் செய்திருக்கிறார் என்றும் ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஸ்தோத்ரத்தில் வெளியிடுகிறார். (167) வேதத்தில் பல தேவதைகள் கொள்கை இருக்கிறது என்று மக்கள் நினைத்துவிடப் போகிறார்களே என்று சந்தேகப்பட்டு, வேதமே, வேதத்தில் பல தெய்வக் கொள்கைகள் கிடையாது; கடவுள் ஒருவனே; அவன் ஒருவனே பல பெயர்களில் குறிப்பிடப்படுகிறான் என்று முடிவு சொல்லிவிட்டது. இந்த அடிப்படையிலேயே ஹிந்துமதம் இயங்கி வந்தால் இதற்கு ஆபத்தே கிடையாது. இதன்கண் சிக்கல்களையும் காணமுடியாது. (168) வேதாந்திகள் பிரும்மம் கடவுளாக ஆக முடியாது என்று நினைத்துக் கடவுள் தத்துவமே சிந்தனையின் கற்பனை என்று கூறிவிடுகிறார்கள். ஆனால் கடவுள் கொள்கைக்காரர்கள் பிரும்மக் கொள்கையோடு சேர்ந்து, எங்களுடைய கடவுள்தான் அந்தப் பிரும்மம் என்று கூறுகிறார்கள். (169, 170) வேதாந்திகளுள் சிலர்

பிரும்மம் ஒன்றுதான் சத்யம். மற்றது எல்லாம் கல்பிதமென்று சொல்லிவிட்டார்கள். இவர்களுக்குச் சிக்கல்கள் மிகக் குறைவு. ஆனால் அந்தப் பிரும்மத்தைக் கடவுளாகக் கொண்டு உருக்கொடுத்து, உலகோடும், வாழ்க்கையோடும் சம்பந்தப்படுத்தும்போது பல பிரச்சனைகள் தாமாகவே உண்டாகின்றன. வேதத்திலுள்ள கருத்துக்களுக்குத் தானே விளக்கம் கூறுகிறேன் என்றால் இது தன்னுடைய கருத்தை ஸ்தாபித்துக் கொள்ளச் செய்யும் முயற்சியாகுமேயன்றி, உண்மையான கருத்தாகாது. இந்த நிலையிலேயே வேதத்திற்குப் பின் வந்த சிந்தனையாளர்கள் தம் கருத்தை ஒட்டியே வேதத்திற்குப் பொருள் கூறுகிறார்கள். சைவ சிந்தனையாளர்கள் சிவன்தான் வேதத்தில் சொல்லப்படுகிறான் என்கிறார்கள். விஷ்ணு சிந்தனையாளர்கள் விஷ்ணுதான் வேதத்தில் சொல்லப்படுகிறான் என்கிறார்கள். வேதம் சிவன், விஷ்ணு என்ற இரண்டு பெயர்களைக் கொடுத்துவிட்டதால் இவர்களுக்கு இந்த வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. ஆனால் இவர்கள் சிவன், விஷ்ணு என்ற கருத்துக்களுக்கு முழுவதும் வேதத்தை எதிர்பார்க்கவில்லை. (174, 175) தமிழ்நாட்டு வைணவம் ஆகமம்போல் தனது கொள்கையைத் தனியாக உருவாக்கியிருந்தால் தமிழ் நாட்டின் வரலாறு வேறுவிதமாக இருந்திருக்கும். ஆனால் அப்படியில்லை. கர்மாக்களுக்கு வேதங்களிடம் போகச் சொல்லுகிறார்கள். வர்ணாச்சிரம தர்மத்திற்கு ஸ்மிருதிகளிடம் போகச் சொல்லுகிறார்கள். அடிப்படையான வேதாந்தக் கொள்கைகளுக்கு உபநிடதங்களிடம் போகச் சொல்லுகிறார்கள். கதைகளுக்கு இதிகாசப் புராணங்களிடம் போகச் சொல்லுகிறார்கள்...இந்து மதத்தில் ஆசாரியன் என்ற கருத்துகுறுகிய பொருளில் இருந்து வருகிறது. பழையதை கண்டித்து புதிதான ஒன்றை தங்களிஷ்டப்படி இவர்கள் கூறமுடியாது. (175) தமிழ்நாட்டு வைணவம் முழுவதும் வேதம் காட்டியுள்ள வழியிலேயே போகவில்லை. முழுவதும் ஆகமம் காட்டியுள்ள வழியிலேயும் போகவில்லை. முழுவதும் புராணங்கள் காட்டியுள்ள வழியிலேயும் போகவில்லை. வைணவ ஆசாரியர்கள் தங்களுடைய கருத்துக்கிணங்கக் கூடிய மேற்கோள்களை வேதம், ஆகமம், இதிகாசங்கள் இவைகளிலிருந்து ஆங்காங்கு எடுக்கிறார்கள். (178) நூல்களில் உள்ள கடவுளை நிர்ணயம் பண்ண இவர்களால் முடியவில்லை. யுக்தியைக் கொண்டு நூல்களுக்குப் பொருள் விளக்கிக் கொள்ளவும் சக்தியில்லை. நேரில் தெய்வத்தையும் பார்க்க முடியவில்லை. ஆசாரியன்தான் நேரில் காணப்படும் தெய்வம். அவனருள் இருந்தால் போதும் என்ற கொள்கை தமிழ்நாட்டு வைணவத்தின் தனிச்சிறப்பு வாய்ந்த கொள்கையாக ஆகிறது. (185) சங்கிலியால்

மனிதனைக் கட்டிப்போட்டு 'நீ நட' என்று எந்த அறிவாளியும் சொல்லமாட்டான். ஜீவாத்மா அறிவில்லாதவன், சக்தியில்லாதவன், புண்ணிய பாபங்களால் கட்டுண்டவன். இந்த உண்மையை உணர்ந்த ஆசாரியர்கள் பகவானை மகிழ்விக்க நீ ஒன்றையும் செய்யவேண்டாம். கருணாமூர்த்தியான அவன் தன்பேராகவே தானுகவே உன்னைக் காப்பாற்றுவான் என்று கூறிவிட்டார்கள். ஆன்மாவின் நிலையை உணர்ந்த தெய்வமும் ஜீவாத்மாவைப் பார்த்து, நீ அதைச் செய்தால்தான் மோட்சம் கொடுப்பேன் என்றோ, ஒரு பயனைக் கொடுப்பேன் என்றோ சொல்லக்கூடாது. இப்படிச் சொன்னுல் அந்தத் தெய்வம் உண்மையை உணராத தெய்வமாக ஆகிவிடும். (188, 189) நாம் செய்யும் கர்மாக்களுக்கு பலன் ஏற்படுகிறதா ? அல்லது கடவுளின் கருணை காரணமாகப் பலன் கிடைக்கிறதா? என்ற கேள்வி பிறக்கும்போது நம்முடைய கர்மா இருக்கும் இடம் தெரியாமல் போகவே அவன் கருணைதான் முன் நிற்கிறது. கருணை என்பது பகவானுடைய இயற்கையான குணம். அதனுல் பகவானுடைய ஆதரவைப் பெறுவதற்காக நாம் ஒன்றும் செய்ய வேண்டா. பகவானே தானுகவே நமக்கு வேண்டியவற்றைக் கொடுக்கிருன் என்ற முடிவை ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்கள் தைரியமாக ஒப்புக்கொண்டுள்ளனர். பகவானுடைய ப்ரீதிக்காகச் செய்யவேண்டியது ஒன்றுமேயில்லை என்றும், நாம் செய்யும் கர்மா அறிவில்லாததனுல் அது பயனைக் கொடுக்காது. அறிவுள்ள ஈசுவரன் கருணைக் கடலாக இருப்பதனுல் அவன் ஒருவனே நாம் விரும்பியதை அடையப் போதும் என்றும் ''சித்தோ பாயம்'' என்ற ஆசார்யர்களின் கொள்கை தெரிவிக்கிறது. எம்பெருமானை உபாயமாகப் பற்றிய பிறகு நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும் அது கடவுளுடைய பெருமைக்கு மாசை உண்டுபண்ணும் ஆதலினுல் உபாயங்களைப் பற்றிச் சிந்திக்கவே வேண்டாம் என்றும், சிந்தித்தால் பாபம் உண்டு என்றும் பெரியோர்கள் கூறிவிட்டார்கள். (191) தெய்வம் உண்டு என்ற அடிப்படையில் யுக்தியை வளர்த்து இந்த யுக்தி கொண்டுவிடும் இடத்திற்குப் போக ஆசாரியர்கள் தயாராகி விட்டார்கள். அதன் காரணமாகவே முடிவான பல கொள்கைகள் தமிழ்நாடு வைணவத்தில் சேர்ந்துவிட்டன. (239, 242, 243, 244) ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயம் என்ற பெயரால் சில கருத்துக்களை நாதமுனிகள் தொகுக்க ஆரம்பிக்க, மணவாள மாமுனிகள் வரையில் உள்ள ஆசாரியர்களால் அது உருவாக்கப் பட்டுள்ளது. வேதாந்த தேசிகரோ லோகாசாரியரோ சொல்லும் கொள்கை அப்படியே ஆதிகாலத்தில் இருந்தது என்று ஒப்புக்கொள்ள

நூல்கள் இடம் தரவில்லை. ராமானுஜர் காலத்திலிருந்த வைஷ்ணவக் கொள்கைகள் வேறு. ராமாநுஜர் காலத்துக்குப் பிறகு வந்த ஆச்சாரி யர்கள் வளர்த்த கொள்கை உருவத்தில் வேறாக நிற்பதை நாம் பார்க்கிறோம். (260) ஆலயங்களில் நேருக்கு நேராக சம்பந்தப்பட் டுள்ள காரியங்களில் வைணவ சம்பிரதாயத்திற்குத் தனியாக ஒரு இடமும் கிடையாது. வைணவ சம்பிரதாயத்தோடு கலந்த பாராயணம் சாத்துமுறை, கோஷ்டி என்பவை பூஜையோடு சம்பந்தப்பட்டவை யல்ல...பாராயணம் முதலியவை வெளியார் செய்யும் அவர்களின் தொழில். பூஜகர்களுக்கும், பூஜைக்கும் இங்கு ஸம்பந்தமே கிடையாது. வைணவக் கருத்து ஒரு கட்டுப்பாடான நிலையில் படித்த பிராம்மணர்க ளிடையே நானூறு வருடங்களாக உருவாகி வளர்ந்துவிட்டது. அது போல் சைவம் வளரவே இல்லை நாட்டு அரசர்களின் அதிகாரம் மறைந்த பிறகு அதிகாரி யார் என்று புரியாமல் இருந்த காலத்தில் வைணவம் கோவிலில் புகுந்துவிட்டது. (293) மனிதப் பண்பாட்டைப் பின்பற்றி ஸ்ரீவைகுண்ட வாழ்க்கை அமைந்திருப்பதால் பகவதநுபவத் தில் போட்டியிட்டு பிணங்கிப் பேசுவது பகவானுக்கு எப்பொழுது என்ன ஆபத்து வந்து விடுமோ என்று காரணமில்லாமல் பயப்படு கிறது போன்றவைகளும் கற்பிக்கப்படுகின்றன. உண்மையில், இது மிகைப்படுத்திப் பேசுவதே. ஸ்ரீ வைகுண்டத்தில் அவனிடம் கோபம், பயம் இவைகளுக்கு இடமேது? (307, 308, 309, 310, 311) (தென் கலை வடகலை நாமங்கள்) இந்தக்குறி சம்பந்தமாக கல்வெட்டு சான்று கள் கிடைக்காது போனாலும் சமீபத்தில் ஸ்ரீரங்கம் ரங்கநாதன் மூல பிம்பத்திற்கு ஏற்பட்ட விபத்தின்போது பிம்பத்தின் நிஜ உருவைப் பரிக்ஷிக்கும் காலத்தில் ஓர் உண்மை வெளியாயிற்று. ரங்கநாத பிம்பத் தின் முகத்தில் 'தீபசிகை' விளக்கின் ஒளியின் உரு போன்ற அடை யாளம் நெற்றியில் பதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவரலாயிற்று. இந்தத்தகவலை அப்போது நிர்வாக அதிகாரியாக இருந்த கே.கே.மேனன் அவர்களே வெளியிட்டார். இப்பொழுது பார்க்கப்பட்டுள்ள அடை யாளத்துடனேயே எழுநூறு வருடங்களுக்கு முன்பும் ரங்கநாதன் இருந்திருக்கலாம் என்று எண்ண இடம் இல்லை என்று ஏற்படுகிறது. (323) கீதையில் பகவான், யார் எந்தப்பெயருள்ள தெய்வத்தை உபா சித்தாலும் தான் எங்குமிருப்பதால் தன்னையேதான் அவர்கள் உபா சிப்பதாக் கொள்ளுகிறேன் என்று கூறுகிறார். இதுவும் ஒருவழியில் ஒரே தெய்வம் என்ற கொள்கையுடன் நெருங்கி நிற்கிறது. ஆனால் இங்கு பகவான் தன்னுடைய பெயரை குறிப்பிடாமல் இருப்பது கவனிக்கத்தக்கது.

ஸுத₃ர்ஶனம் ஆசிரியரின் மறுப்பு

(5) க்ருஷ்ணயஜுர்வேதி₃கள் அனைவரும் ஓதும் தைத்திரீயத்தில் நாராயணவல்லியில், நாராயணஸூக்தத்தில் நாராயணனையே பரம்பொருளாகப் பலகால் ஓதி, அவ்வனுவாகத்தின் இறுதியில் "ஸ ப்₃ரஹ்மா ஸ ஶிவ: ஸேந்த்₃ர:" என்று பிரமன், உருத்திரன், இந்திரன் ஆகிய மூவரும் நாராயணனுடைய விபூ₄தியாயிருப்பவர் என்று ஓதப்பட்டது. மஹோபனிஷத் "ஏகோ ஹவை நாராயண ஆஸீத்| ந ப்₃ரஹ்மா நேஶாந:" என்று நாராயணனை ப்ரளயத்தில், எஞ்சியிருந்த ஜக₃த்காரணனாக ஓதி, பிரமனும் உருத்திரனும் காரணரல்லர் என்று கழித்து, அவர்கள் நாராயணனிடமிருந்து ஸ்ருஷ்டிக்கப்படுவதையும் ஓதிற்று. நாராயணோபனிஷத்திலும் ஸுபா₃லோபனிஷத்திலும் ப்₃ரஹ்மருத்₃ரர்களின் ஸ்ருஷ்டி ஓதப்பெற்றது; அவ்விருவரும் நாராயணனின் விபூ₄தியாயிருப்பவரே என்றும் கோ₄ஷிக்கப்பட்டது. 'இவையெல்லாம் பின்னால் ஏற்பட்ட உபனிஷத்துக்கள் தானே' என்று கூறக்கூடிய இவர்வாய் மாளும்படி, வேத₃த்தின் பூர்வபா₄க₃த்தைச்சேர்ந்த ஶதபத₂ ப்₃ராஹ்மணம் [13-6-1] "புருஷோ ஹ நாராயணோऽகாமயத" என்று தொடங்கி நாராயணனை ஜக₃த்காரணவஸ்துவாக ஓதிற்று. நாராயண ஶப்₃த₃மும் "பூர்வபதா₃த் ஸம்ஜ்ஞாயாமக₃:" என்னும் பாணினிஸூத்ரத்தின்படி பிரமன், உருத்திரன் முதலான வேறு எந்த தேவதையையும் குறிக்கமுடியாது என்பதையும் எவரும் மறுக்க இயலாது. ஹிரண்யக₃ர்ப்ப₄ ஶிவாதி₃ஶப்₃த₃ங்களுக்கு இப்பெருமை கிடையாது. வேத₃ வேதா₃ந்தங்களில் மட்டுமல்லாமல் நமது நாட்டிலுள்ள வடமொழி இலக்கியங்களுக்குள் அதிப்ராசீனமான ஸ்ரீராமாயணத்திலும், மஹாபா₄ரதத்திலும் பிரமருத்திரர்களுக்கும் காரணபூ₄தன் நாராயணனே என்று பல விடங்களில் முழங்கப்பட்டது. மனுமுதலான ப்ராசீனஸ்ம்ருதிகளும் நாராயணபரத்வத்தை நிலைநாட்டின. புராணங்களில் ஶிஷ்டபரிக்₃ரஹாதிஶயமுள்ள விஷ்ணுபுராணமும் இதை அறுதியிட்டது.

தமிழ்நாட்டில் பண்டைச் சங்க இலக்கியங்களான பரிபாடல் முதலானவையும் திருமால் ஒருவனுக்கே பரத்துவத்தை முழங்கி, பிரமன், உருத்திரன் முதலான அனைவரையும் அவனால் படைத்து அளித்து அழிக்கப்படுபவர்கள் என்று முழங்குகின்றன. அநாதி3ஸித்3த4மான வைதி3கமதம் வைஷ்ணவமே என்பது இவ்வளவு தெளிவாயிருக்கையில், இன்றளவும் வைணவம் இவரைப்போன்ற ப்ரதிவாதி3களை வென்று வெற்றிக்கொடி நாட்டிக்கொண்டிருக்கையில், வைணவம் ஒரு காலத்தில் தோன்றியதாகவும், தன் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துக்கொண்டு விட்டதாகவும் எழுதும் இவரது மடமையை என்னென்று கூறுவது!

(10) வைஷ்ணவம் என்பது விஷ்ணுஸம்ப3ந்த4முள்ளது என்னும் பொருளில் வேதத்தில் ஓரிடத்தில் ஓதப்பட்டுள்ளது. அது யாக3 பசுவைக் குறிப்பது என்பது ஒருபுறமிருக்கட்டும். நாராயண ஶப்3த3வாச்யனான விஷ்ணுவே ஜக3த்காரணவஸ்துவென்று ஶதபத2ப்3ராஹ்மணம் முதலான பூர்வபா4க3ங்களிலும் பல உபனிஷத்3 வாக்யங்களிலும் படிக்கப்பட்டதை முன்னமே காட்டினோம். “ந தே விஷ்ணோ ஜாயமானோ ந ஜாதோ தே3வ மஹிம்ந: பரமந்தமாப” [ருக் அஷ்டகம் 5-6-24-2] [தே3வனான விஷ்ணுவே! பிறக்கின்றவனும், (இதுவரை) பிறந்தவன் எவனும் உன் பெருமையின் மேல் எல்லையை அறியவில்லை] என்று ருக்3வேத3மும் விஷ்ணுவை எவராலும் அறிய முடியாத பெருமையை உடையவனாக ஓதிற்று. க்ருஷ்ண யஜுர்வேத3மும் (ஸம்ஹிதை 5-5) “அக்3நிரவமோ தே3வதானாம் விஷ்ணு: பரம:” [தே3வதைகளுள் அக்3நியானவன் மிகத் தாழ்ந்தவன்; விஷ்ணுவானவர் மிகவுயர்ந்தவர்] என்று மிகத்தெளிவாக விஷ்ணுவே பரதெய்வம் என்று காட்டிற்று. இப்படியிருக்கும்போது “விஷ்ணுவே பரதெய்வம் என்பது பின்னர்வந்த கொள்கை” என்று எழுதும் இவர் வைதி3கர் ஆகமுடியுமா என்பதை நடுநிலைநிற்கும் நல்லோர்கள் நிர்ணயிக்கட்டும். இனி “விஷ்ணுவை மட்டும்

வழிபடுவது என்பதும் பின்னர்வந்த கொள்கை" என்று எழுதுவதும் வேத₃விருத்₃த₄ம் என்பதைக் காட்டுவோம். 'யோ வை ஸ்வாம் தே₃வதாமதி யஜதே. ப்ர ஸ்வாயை தே₃வதாயை ச்யவதே. ந பராம் ப்ராப்நோதி, பாபீயாந் ப₄வதி" [யஜுஸ் ஸம்ஹிதை 2-5-4] [எவனொருவன் தன் தே₃வதையை விட்டு வெறொரு தே₃வதையை ஆராதி₄க்கிறானோ, அவன் தன் தே₃வதையிடமிருந்து நழுவுகிறான்; வேறொரு தே₃வதையையும் அடைவதில்லை. பெரும்பாவியாகிறான்.] என்பது ஸுப்ரஸித்₃த₄வேத₃வாக்யம். "அதியஜேத நிஜாம் யதி₃ தே₃வதாம்" [யாத₃வாப்₄யுத₃யம் 6-4] என்று தொடங்கும் ஶ்லோகத்தில் ஸ்ரீவேதா₃ந்ததே₃ஶிகரும் இந்த ஶ்ருதியை எடுத்தார். அதன் வியாக்கியானத்தில் அப்பயதீக்ஷிதரும் இதை எடுத்து இப்படியே பொருள் உரைத்தார். ஒவ்வொரு பலனுக்காக ஒவ்வொரு தே₃வதையை உபாஸிப்பவர்கள் அந்த தே₃வதையையே பற்றிநிற்கவேண்டுமென்றும், அதைவிட்டு வேறொரு தே₃வதையிடம் செல்லக்கூடாது என்றும் வேத₃மே விதி₄க்கிறது. 'உதாம்ருதத்வஸ்யேஶாந:" [மோக்ஷத்திற்குப் பரமபுருஷனே ப்ரபு₄வாவான்] என்று புருஷஸூக்தாதி₃களில் மோக்ஷப்ரத₃னாக முழங்கப்படும் விஷ்ணுவை மோக்ஷத்திற்காக உபாஸிப்பவர்களுக்கும் இவ்விதி₄ மிகப்பொருந்தும். ஆக, இக்கூற்றும் ஶ்ருதிவிருத்₃த₄ம் என்பது தெளிவு. (15) நாராயணன் என்ற பெயரைச் சிறப்பாகக் குறிப்பிடுவதற்குக் காரணம் அது வேறு எந்த தெய்வத்தையும் குறிக்கமாட்டாத தனிப்பெரும் பெயராயிருப்பதே என்பதை முன்னமே காட்டினோம். (17) "சதுர் ஹோதாரோ யத்ர ஸம்பத₃ம் க₃ச்ச₂ந்தி தே₃வை:" முதலான வேத₃வாக்யங்கள் அக்னியில் ஹோமம் செய்வதால் உண்மையில் அந்தந்த தெய்வங்களுக்கு அந்தர்யாமியான விஷ்ணுவே ஆராதி₄க்கப்படுகிறான் என்று முழங்கின. அதை அறியாமல் "தெய்வங்களை வழிபடும் கொள்கைக்கு வைணவம் வேதத்தைப் பின்பற்றுகிறது" என்று எழுதியது பரம அப₃த்₃த₄ம். ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களும், பாஞ்ச

ராத்ராதி₃ ஆக₃மங்களும்—கர்மங்கள். ப₄க்திப்ரபத்திகள், விக்₃ரஹவழிபாடு முதலான எல்லாவற்றிலும் வேதத்தையே பின்பற்றுகின்றன. ஆகையால் வைணவமும் இவையனைத்திலும் வேதத்தையே பின்பற்றுகிறது. ஸ்ம்ருதிகள் வேதத்தின் கர்ம பா₄க₃த்தையும். இதிஹாஸபுராணங்கள் உபனிஷத்துக்களையும், ஆகமங்கள் வேதத்தில் சொல்லப்பட்ட ஆலய விக்ரஹ வழிபாட்டு முறைகளையும் விசேஷித்து விவரிக்கின்றனவாகையால் வைணவம் இவையனைத்தையுமே ப்ரமாணமாகக் கொள்கிறது. வேதமே அனைத்துக்கும் மூலப்ரமாணம் என்பதை மறந்துபேசுகிறார் அஹோ. (19) "போ₄க்தா போ₄க்₄யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா" [ஶ்வே] முதலான உபநிஷத்துக்களே சித்து அசித்து. ஈஶ்வரன் ஆகிய தத்வத்ரயங்களையும் கோ₄ஷித்திருக்கும்போது நாத முனிகளே இவற்றை முதலான உண்மைகளாகக் கண்டு பிடித்தார் என்று எழுதுவது பரிஹஸிக்கத்தக்கதாயிருக்கிறது. "நாராயண பரம்ப்₃ரஹ்ம" என்ற உபனிஷத்தின் முடிவே நாத₂முனிகளின் முடிவு என்பதை அறிவாராக. (20) "யஸ்ய ப்ருதி₂வீ ஶரீரம் யஸ்யாத்மா ஶரீரம்" என்று ஶரீரஶரீரிபா₄வமும். "காரணம் து த்₄யேய:" "தது₃பாஸிதவ்யம்" "நிதி₃த்₄யாஸிதவ்ய:" "முமுக்ஷுர் வை ஶரணமஹம் ப்ரபத்₃யே" என்று மோக்ஷஸாத₄னமாக ப₄க்திப்ரபத்திகளும் உபனிஷத்திலேயே உத்₃கோ₄ஷிக்கப்பட்டன. "மயி ஸர்வமிதம்₃ ப்ரோதம் ஸூத்ரே மணிக₃ணா இவ" [நூலில் மணிகள் கோர்க்கப்பட்டிருப்பதுபோல் என்னிடம் அனைத்தும் கோர்க்கப்பட்டிருக்கின்றன.] "அஹமாத்மா கு₃டா₃கேஶ" [அர்ஜுனா! நானே அனைத்துக்கும் ஆத்மா] "ஸர்வம் ஸமாப்நோஷி" [நீ அனைத்தையும் வியாபித்திருக்கிறாய்] என்று ஶரீரஶரீரிபா₄வமும். "ப₄க்த்யா த்வநந்யயா ஶக்ய:" "ப₄க்த்யா லப்₄யஸ் த்வநந்யயா" என்று மோக்ஷஸாத₄னமாக ப₄க்தியும். "மாமேகம் ஶரணம் வ்ரஜ அஹம் த்வா ஸர்வ பாபேப்₄யோ மோக்ஷயிஷ்யாமி" என்று மோக்ஷஸாத₄னமான ப்ரபத்தியும் கீ₃தை முதலானவற்றில் காட்டப்பட்

டன. இவற்றையே எம்பெருமானர் பின்பற்றினரேயொழிய 'அவரது நூல்களிலேயே இவை உருவாகிறது' என்பது தவறு. கத்யத்ரயத்தில் எம்பெருமானர் ப்ரபத்தியை மோக்ஷ ஸாதனமாகத் தெளிவாக முழங்கியிருக்கையில், அதை மறுப்பதும், எம்பெருமானரது சிஷ்யரான எங்களாழ்வானும், பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளையாலும், ஸர்வஜ்ஞரான ஸுதர்ஶன பட்டராலும், வேதாந்தாசார்யரான தேசிகனாலும் உரையிடப்பெற்ற கத்யத்தை எம்பெருமானர் க்ருதியன்று என்று நிராதாரமாக எழுதுவதும் அஹோர எதையும் எழுதத் துணிந்தவர் என்பதையே காட்டுகிறது. (97) ஆழ்வார்கள் பாடியதாலேயே ஆலயங்கள் அந்நாள் தொடங்கி இந்நாள்வரை திவ்யதேசங்களாகத் திகழ்கின்றன. ஆசாரியர்கள் அவ்வாலயங்களைக் கட்டிக் காத்துவந்தனர் என்பது அவர்களது நூற்றுக்கணக்கான நூல்களில் பொறித்துவைக்கப் பெற்றுள்ளது. இவ்வாருக,— அன்றுமுதல் இன்றுவரை ஆலயங்களையும், அர்ச்சாவதாரத்தையுமே அடிப்படையாகக்கொண்டு ஆழ்வார்களும், ஆசாரியர்களும் வைஷ்ணவத்தைப் பேணிப்பாதுகாத்திருக்கும்போது, ஆகமங்களிலும் வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு விஶேஷமாக இடமளிக்கப்பட்டிருக்கும் போது அஹோர இப்படி எழுதுவது—பல பிள்ளைகளைப் பெற்ற ஒருத்தியை, அவளது துஷ்டப்பிள்ளையொருவன், 'என் தாய் மலடி' என்று எழுதுவதை ஒக்கும். (104) "ஆகமாக்யம் ஹி ஸித்தாந்தம் ஸந்மோக்ஷைக பலப்ரதம்। மந்த்ர ஸம்ஜ்ஞம் ஹி ஸித்தாந்தம் ஸித்தி மோக்ஷப்ரதம் ந்ருணாம் ॥ தந்த்ர ஸம்ஜ்ஞம் ஹி ஸித்தாந்தம் சதுர்வர்க்கபலப்ரதம் । தந்த்ராந்தரம் ஹி ஸித்தாந்தம் வாஞ்சிதார்த்தபலப்ரதம் ॥" [ஆகம ஸித்தாந்தம் மோக்ஷம் ஒன்றையே பலனாக அளிப்பது. மந்த்ர ஸித்தாந்தம் ஸித்திகளையும் மோக்ஷத்தையும் அளிப்பது; தந்த்ர ஸித்தாந்தம் தர்மார்த்தகாமமோக்ஷங்களை அளிப்பது. தந்த்ராந்தர ஸித்தாந்தம் விரும்பும் எல்லாப் பலன்களையும் அளிப்பது.] என்று ஹயக்ரீவஸம்

ஹிதை—பாஞ்சராத்ரத்தில் கூறப்பட்ட நாலுவகை ஆராத₄னங்களுக்கும் மோக்ஷத்தைப் பலனாகக் கூறுகையாலே, பாஞ்சராத்ர ஆக₃மம் ஆலயவழிபாட்டின் அடிப்படையில் பரமைகாந்தி த₄ர்மத்தைக் கூறுகிறது என்பது தெளிவு. இதற்கு முரணாக அஹோ எழுதுவது அனைத்தும் அப₃த்₃த₄ம். (113) வேதமந்திரங்கள் பல தெய்வங்களைச் சொல்லி, விஷ்ணுவே மற்ற எல்லா தெய்வங்களையும் படைத்து அளித்து அழிப்பதாகக் கூறுவதாலும், மற்ற எல்லா தெய்வங்களுக்கும் மேலான தெய்வமாகவும் அந்தர்யாமியாகவும், கூறுவதாலும் விஷ்ணுதான் முழு முதற்கடவுள் என்பது வேதங்களிலேயே குன்றிலிட்ட விளக்காகப் பிரகாசிக்கிறது. "வேதை₃ஶ்ச ஸர்வை ரஹமேவ வேத்₃ய:" என்றான் கீதையில் கண்ணன். ஆகையால் அஹோ விபரீதமாக எழுதுவது விஷ்ணுத்₃வேஷத்தால் ஏற்பட்டது. (115, 116) "நாராயணாய வித்₃மஹே வாஸுதே₃வாய தீ₄மஹி தந்நோ விஷ்ணு: ப்ரசோத₃யாத்" என்று நாராயணவல்லீ படி₂தமான விஷ்ணுகா₃யத்ரி நாராயண வாஸுதே₃வ விஷ்ணுநாமங்களைப் பரம்பொருளின் திருநாமமாகப் படித்திருக்கும்போது அதற்கு முரணாக அஹோ பிதற்றுவதை வைதி₃கர்கள் செவியேற்கவும் மாட்டார்கள். இவையும் ப₄க₃வச்ச₂ப்₃த₃மும் என்றுமே விஷ்ணுவையே முக்₂யமாகக் குறிப்பவை. ஓரு காலத்தில் விஷ்ணுவைக் குறிப்பவையாக ஆனதாக எழுதுவது ஆதாரமற்றது. "ப₄க₃வாநிதி ஶப்₃தோ₃ऽயம்" என்று தொடங்கும் புராணரத்ந ஶ்லோகம் காண்க. (121) "விஷ்ணு: பரம:" "நாராயணபரம்ப₃ரஹ்ம" "ஸ ஆத்மா அங்கா₃ந்யந்யா தே₃வதா:" "தம் தே₃வதாநாம் பரமஞ்ச தை₃வதம்" என்று வேத₃வேதா₃ந்தங்களில் முழங்கப் பட்டிருப்பதற்கு முரணாக அஹோ இப்படிப் பிதற்றுவது வைதி₃கர்களால் அநாத₃ரிக்கத்தக்கது. (123, 126) "ஸ வா ஏஷ புருஷ: பஞ்சத₄ா" "அம்ப₄ஸ்யபாரே" "க்ருஷ்ணாய தே₃வகீ புத்ராய" "விஷ்ணுக்ராந்தே வஸுந்த₄ரே" "உத்₃த்₄ருதாஸி வராஹேண" "ந்ருஸிம்ஹம் பீ₄ஷணம் ப₄த்₃ரம்"

என்று உபனிஷத்துக்கள் அவதாரங்களை உத்₃கோ₄ஷித்திருக்கையில் அவதாரம் வேதத்திலேயே உண்டு. உபனிஷத்தில் கிடையாது என்று அஹோ பிதற்றுவது அத்யாஸ்சர்யம். (145. 146. 161) ருக்₃வேத₃ம் ஐந்தாமஷ்டகம். ஆறுமத்தியாயம், இருபத்துநாலாவது வர்க்கம்—(இதற்கு சரியான ஏழாம் மண்டலம். ஆறுமத்தியாயம்) தொண்ணூற்றொன்பதாவது ஸூக்தமான விஷ்ணுஸூக்தத்தில் 4-வது மந்திரம். "உரும் யஜ்ஞாய சக்ரது₂ரு லோகம் ஜநயந்தா ஸூர்யம் உஷாஸம் அக்₃நிம்" [(இந்திர விஷ்ணுக்களே!) யஜமானனின் பொருட்டு. பெரியதான சுவர்க்கலோகத்தை ஸ்ருஷ்டித்தீர்களன்றோ; ஸூர்யனையும். உஷ:காலத்தையும், அக்₃னியையும் நீங்கள் உண்டாக்கினீர்கள்] என்று இந்திரவிஷ்ணுக்கள் ஸூர்யனை உண்டாக்கினதாக உத்₃கோ₄ஷிக்கிறது. ஆகையால் படைக்கப்பட்ட ஸூர்யனைக் காட்டிலும், படைத்தவனை விஷ்ணு வேறுபட்டவனே என்று தெளிவாக விளங்குகிறது. 'ஸூர்யனே விஷ்ணு' என்னும் மேல்நாட்டு அரைகுறை ஆராய்ச்சியாளர்களின் கொள்கை இவ்வண்ணமாக வேத₃விருத்₃த₄மாயிருக்கையால் அபூ₃த்₃த₄மேயாகும். ஸ்ருதிவிருத்₃த₄மாயிருக்கையால். யாஸ்கர் அப்படி எழுதியிருக்கமாட்டார். எழுதியிருந்தாலும் வைதி₃கர்களால் அநாத₃ரிக்கத்தக்கதேயாகும். "யதோ விஷ்ணுர் விசக்ரமே" "இத₃ம் விஷ்ணுர் விசக்ரமே" "த்ரீணி பதா₃ விசக்ரமே" "ய: பார்த்தி₂வாநி விமமே ரஜாம்ஸி — விசக்ரமாண:" "ம்ருகோ₃ ந பீ₄ம: குசரோ கி₃ரிஷ்டா₂: யஸ்யோருஷு த்ரிஷு விக்ரமணேஷு" "ஏகோ விமமே த்ரிபி₄ரித் பதே₃பி₄:" "த்ரிபி₄ரித்₃ விகா₃மபி₄ருருக்ரமிஷ்ட" "த்₃வே இத₃ஸ்ய க்ரமணே.... த்ருதீயமஸ்ய நகிரா த₃த₄ர்ஷதி" "பரோ மாத்ரயா தந்வா வ்ருத₄ாந" "ப்₃ருஹந்தா உருக்ரமா" "த்ரிர் தே₃வ: ப்ருதி₂வீமேஷ ஏதாம் விசக்ரமே" "விசக்ரமே ப்ருதி₂வீமேஷ ஏதாம்" முதலானவிடங்களில் விஷ்ணுஸூக்தங்களில்

விஷ்ணுவின் த்ரிவிக்ரமாவதாரம் மிகத்தெளிவாகப் பாடப் படுவதாலும், "தத்₃ விஷ்ணோ: பரமம் பத₃ம்" "விஷ்ணோ: பதே₃ பரமே" முதலானவிடங்களில் விஷ்ணுவைப் பரம பதத்திலிருப்பவனாகக் கூறுகையாலும், மற்றும் ஜக₃த் காரணத்வம், மோக்ஷப்ரத₃த்வம், ஸ்ரிய:பதித்வம் முதலான பெருமைகளை விஷ்ணுவுக்குக் கூறுகையாலும். விஷ்ணு ஸூர்யனாயிருக்க ப்ரஸக்தியேயில்லை என்பது நடுநிலை யாளர்க்கு நன்கு விளங்கும். நமது விஷ்ணுஸூக்த வ்யாக்₂யானம் காண்க. "தே₃வதாநாம் விஷ்ணு: பரம:" முதலான வேத₃வாக்யங்களைக் கண்ணிருந்தும் காணாதவ ராய், "விஷ்ணு மற்ற தே₃வதைகளோடு சமமான நிலை யில் இருந்து வருகிறாரே தவிரத் தனியான பெருமையுடன் இருப்பதாகத் தெரியவில்லை" என்று அஹோ எழுதுவது விஷ்ணுத்₃வேஷத்தாலேயே. (162) முற்கூறிய காரணங்க ளால் விஷ்ணு ஸூர்யனைக்காட்டிலும் வேறுபட்டவனாய், தேவர்தலைவனாய், பரமபத₃நிலயனாய், பல அவதாரங்களைச் செய்தவனாய், ஸ்ரிய:பதியான பரப்₃ரஹ்மமே என்று ருக்₃ வேத₃ விஷ்ணுஸூக்தங்களிலிருந்தே விளங்குகையால், விஷ்ணுவையே ப்₃ரஹ்மமாக விஷ்ணுபுராணம் முதலானவை விளக்கின. விஷ்ணுபுராணத்திற்கு முன்னமே வேதத்தின் அவதாரமான ஸ்ரீ வால்மீகி ராமாயணத்தில் வேத₃க் கொள்கையான விஷ்ணுபாரம்யம் உத்₃கோ₄ஷிக்கப்பட் டிருக்கையால், 'விஷ்ணு புராணத்திற்குப் பின்பே விஷ்ணு என்ற பெயரோடு ஒரு கொள்கை உருவாக ஆரம்பித்து விட்டது' என்று பிதற்றுவது சிரிக்கத்தக்கதாயிருக்கிறது. (163. 164) "தே₃வதாநாம் விஷ்ணு: பரம:" என்று வேத₃மே கூறியிருக்கையில், வேதத்திற்குப்பின் வேறு யாரோ மற்ற தேவதைகள் எல்லோருக்கும் விஷ்ணுதான் தெய்வம் என்று கூறிவிட்டதாக எழுதுவது அறிவின்மையே யாகும். "என்ன நடந்திருக்கிறது என்று புரியவில்லை" என்று எழுதுமிவர் புரியாத விஷயத்தைப்பற்றி ஏன்

எழுதினர் என்பது நமக்குப் புரிந்தேயிருக்கிறது. அதாவது—க்₂யாதிலாப₄பூஜாபேக்ஷையாலேயே எழுதினர் என்பதே. (165, 166) "யதோ வா இமாநி பூ₄தாநி ஜாயந்தே...தத்₃ ப்₃ரஹ்ம" "நாராயண பரம் ப₃ரஹ்ம" என்று படைத்தல் முதலான முத்தொழில்களையும் செய்யும் பரப்₃ரஹ்மம் நாராயணனே என்று உபனிஷத்துக்கள் முழங்குகையில். 'முத்தொழில்களையும் ஒரே கடவுள் செய்ய முடியாததனால் மும்மூர்த்திகளையும் புராணங்கள் கற்பித்துவிட்டன' என்றும். 'உபநிடத்தில் உருவமில்லாத பிரும்மமும், உருவுள்ள விஷ்ணுவும் ஒன்ருகிவிட்டன' என்றும் மனம் போனபடி எழுதுவது ஆகாச நடனமே. "ஸ ப்₃ரஹ்மா ஸ ஶிவ:" "ந ப்₃ரஹ்மா நேஶாந:" முதலான உபநிஷத்₃ வாக்யங்கள் விஷ்ணுவே ப்₃ரஹ்மருத்₃ரர்களுக்கு மூலம் என்று கோ₄ஷிக்கின்றன. படைக்கும் கடவுளாகக் கூறப்படும் பிரமனையும் படைத்தவன் விஷ்ணுவே என்று உபனிஷத்துக்கள் தொடங்கிப் பாமரஜனங்களீருக அனைவரும் கூறுகின்றனர். அழிக்கும் கடவுளான உருத்திரனை உள்ளிட்ட அனைவரையும் வயிற்றிலிட்டு அழித்த உலகமுண்ட பெருவாயன் விஷ்ணுவே என்று அனைவரும் முழங்குகின்றனர். அப்படியிருக்கும்போது 'முத்தொழில்களையும் ஒரே கடவுள் செய்யமுடியாது' என்றெழுதுவதும். வேதா₃ந்த தேசிகர் தான் இதை வெளியிடுவதுபோல் எழுதுவதும் தான்தோன்றித்தனமாகும். சிவப₄க்தர்களான காளித₃ாஸாதி₃கவிகள் அனைவருங்கூட மறுக்கமுடியாமல் வெளிப்படுத்திய உண்மையன்ரே இது. (167) வேத₃த்தில் பல தெய்வங்களையும். அவர்களுடைய தலைவனுக விஷ்ணுவையும் ஓதியிருக்கிறது என்பதைக் கண்ணிருந்தும் காணுத குருட்டுத்தனத்தினுல் ஏற்பட்ட பிதற்றல்களே 167-ம் பக்கத்திலுள்ள வாக்யங்கள். (168, 169, 170) 'அத்₃வைதிகள்' என்று எழுத வேண்டிய ஸ்த₂ானத்தில 'வேதா₃ந்திகள்' என்று எழுதுவதன் மூலம் தம்மை ஓர் மாயாவாதி₃யாகவே காட்டிக்கொள்கிருர் அஹோ. சிக்கல்கள் மிக அதி₄கமுள்ள மாயாவாத₃மதத்தில்

சிக்கல்கள் குறைவு என்று எழுதுவதன் மூலமும், ஒரு சிக்கலு மில்லாத விசிஷ்டாத்$_3$வைதமதத்தில் பிரச்னைகள் உண்டாவதாக எழுதுவதன் மூலமும் இவருக்கு மநஸ்ஸாக்ஷியே கிடையாதென்று விளங்குகிறது. ஆயிரக்கணக்கான வேதவாக்யங்கள் பொய்யைச் சொல்லுகின்றன என்று தள்ளி, வேத வாக்யத்திற்கு மனம்போனபடி பொருளுரைக்கும் மாயா வாத$_3$த்தை ஆதரிக்குமிவர், மற்றவர்கள் 'வேத$_3$த்திலுள்ள கருத்துக்களுக்குத் தானே விளக்கம் கூறுகிறேன' என்று சொல்லுவதாகக் கூறுவது து$_3$ர்யோத$_4$ன ஸ்வப$_4$ாவத்தை யுடையவரிவர் என்று காட்டித்தருகிறது. சைவர்களும், வைஷ்ணவர்களும் சிவபரத்வமும், விஷ்ணு பரத்வமும் கூற வேதம் வாய்ப்பளித்துவிட்டது என்று புலம்புமிவர், மாயாவாதி$_3$கள் 'உலகம் பொய்' என்றும் 'நிர்விஶேஷ சிந்மாத்ர ப்$_3$ரஹ்மமே மெய்' என்றும் கூறியிருப்பதற்கு வேத$_3$ வேதா$_3$ந்தங்களில் இடமேயில்லை என்பதை உணரவில்லை யந்தோ! (174, 175) ஆகமங்கள் வேத$_3$வேதா$_3$ந்தங்களைப் பின்பற்றினவேயொழியத் தனியாக எக்கொள்கையையும் உருவாக்கவில்லை என்று நமது பூர்வாசார்யர்கள் நிலைநாட்டியிருப்பதைக் கண்ணிருந்தும் காணாத குருடராகிவிட்டார். எல்லா ப்ரமாணங்களிலும் எல்லா விஷயங்களும் இருந்த போதிலும், ஒவ்வொன்றில் ஒவ்வொன்று விஶேஷமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அதை மறந்து வைஷ்ணவர்கள் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு ப்ரமாணத்திடம் போகச் சொல்லுவதாகவும், முழுவதும் ஒன்று காட்டும் வழியில் போகவில்லை என்றும் மனம்போனபடி எழுதுவது பிதற்றலேயாகும். ஆசார்யனை ஒப்புக்கொள்ளாத மதமே யில்லாமலிருக்க, வைஷ்ணவமதம் மாத்திரம் ஆசார்யனை ஒப்புக்கொண்டதால் வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளிவைத்து விட்டதாக எழுதுவது வைஷ்ணவ வித்$_3$வேஷத்தாலேயே. 'அத்$_3$வைதத்தில் ஆசார்யனைக் கண்டித்து சிஷ்யன் புதிதாக ஒன்றைத் தன் இஷ்டப்படி கூறமுடியுமா' என்று

தன் ஆசார்யனை காமகோடிபீடாதி₄பதியைக் கேட்டு வெளியிடட்டும். இப்படி எழுதுவதன்மூலம் தனது தான்தோன்றித்தனத்தையே வெளியிட்டுக் கொண்டவராகிறார் அ3ஹோ. (178) இப்பக்கத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரியர்களைப் புகழ்வதுபோல் தலைப்பையிட்டுக்கொண்டு இவ்வளவு கடுமையாக இகழ்ந்துரைத்திருக்கும் இவர் வைஷ்ணவ வேஷம்பூண்டு உலவுவதும். வைஷ்ணவர்களிடம் தன்னை ஓர் வைஷ்ணவனைக் கூறிக்கொள்வதும் இவர்க்கு மநஸ்ஸாக்ஷியே கிடையாது எனக் காட்டுகிறது. "நூல்களில் உள்ள....பார்க்கமுடியவில்லை" என்னும் வாக்யம் இவர்க்கும். இவரால் ஆத₃ரிக்கப்படும் ஶைவஶாக்த அத்₃வைதிகளுக்கும் மிகப் பொருத்தமான வாக்யங்கள். து₃ர்யோத₄ந ஸ்வபா₄வத்தாலே — ஸர்வஜ்ஞஸார்வபௌ₄ளமர்களாய், எம்பெருமானை நேரே கண்டு அவனோடு வார்த்தை சொல்லிக்கொண்டிருந்தவர்களான மஹாசார்யர்களைக் குறித்து இக்தியமொழிகளைக் கக்குகிறார். அவ்வாசார்யர்கள் இவரை மன்னிப்பார்களாக. (185. 188. 189 191) ப₄க₃வானுடைய நிர்ஹேதுக க்ருபையைப்பற்றிய தென்னாசார்யர்களின் கொள்கையைப் புரிந்துகொள்ளாமல், அவர்களைத் துதிப்பதுபோல் நிந்தி₃க்கும் இவ்வாக்யங்களை எழுதியிருக்கிறார் அஹோ. "நாம் செய்யும் கர்மாக்களுக்குப் பலன் ஏற்படுகிறதா? அல்லது கடவுளின் கருணை காரணமாகப் பலன் கிடைக்கிறதா? என்ற கேள்வி பிறக்கும் போது நம்முடைய கர்மா இருக்குமிடம் தெரியாமல் போகவே அவன் கருணைதான் முன்நிற்கிறது" என்று தொடங்கி எழுதியிருப்பது தென்னாசார்ய ஸம்ப்ரதா₃யத்தை அரைகுறையாகப் புரிந்துகொண்டு எழுதியதாகும். தென்னாசார்யர்கள் கர்மாநுஸாரமாகப் பலன் ஏற்படுகிறது என்பதை மறுப்பதுபோலே எழுதியிருப்பது தவறு. "தன் ஆனந்தத்துக்காக என்றெண்ணிச் சேதனன் செய்யும் புண்ய பாபகர்மங்களுக்கு எம்பெருமான் அக்கர்மாநுகு₃ணமாகப்

பலன் கொடுத்தே தீருவான். அப்பலன் அப்ராப்தமாகவே யிருக்கும்; தலைசிறந்ததாயிராது. ஆயினும் இவனைப் படிப்படியாக முன்னேற்றுவதற்காக. பிள்ளை விரும்பும் பரிசைக் காட்டிப் பிள்ளையைப் பள்ளியில் படிக்கவைக்கும் தந்தையைப்போலே அப்பலன்களைப்பெற இவனுக்குக் கடுமையான ஸாதனங்களை விதிக்கிறான் எம்பெருமான். ஆகையால் மோக்ஷத்திற்கூடத் தன் ஆனந்தத்தைப் பலனாக விரும்பி அதற்கு ஸாதனமாக எண்ணி பக்திப்ரபத்திகளை அனுஷ்டிக்கக்கூடாது. மோக்ஷத்திலும் அவனுடைய முக மலர்த்தியும் அதற்கு உறுப்பாகச் செய்யப்படும் பரார்த்த கைங்கர்யமுமே தலைசிறந்த பலனாகையாலே, அதற்கு ஸாதனமாகத் தன்னிடமுள்ள பக்திப்ரபத்திகளைக்கூட எண்ணலாகாது. ப்ராப்தாவும் (அடைபவனும்) ப்ராபகனும் (அடைவிப்பவனும்), ப்ராப்திக்கு உகப்பானும் அவனேயாகையாலே, தலைசிறந்த புருஷார்த்தமான பரார்த்தகைங்கர்யத்தை மோக்ஷத்தில் பெறவிரும்புகிறவன் தன்னிடம் உள்ளது எதையும் உபாயமாக எண்ணாமல், அவனுடைய நிர்ஹேதுக க்ருபையையே உபாயமாக எண்ணி சாதகம்போல் அவனருளையே பார்த்திருக்கவேண்டும். இவர்களே பரகதஸ்வீகார நிஷ்டர்கள் எனப்படும் தலைசிறந்த ப்ரபந்நர்கள். இவர்களுக்கே எம்பெருமான் தலைசிறந்த புருஷார்த்தமான பரார்த்தகைங்கர்யத்தை நிர்ஹேதுகமாக அருளுகிறான். மோக்ஷத்திலும் தங்கள் ஆனந்தத்தை உத்தேஶ்யமாக நினைத்து அதற்கு ஸாதனமாக பக்தியையோ ப்ரபத்தியையோ அனுஷ்டிப்பவர்களுக்கு, அந்த ஸாதனங்களுக்குப் பலனாக அவர்கள் விருப்பப்படி முறையே ஸ்வார்த்தாநுபவத்தையோ, ஸ்வார்த்தகைங்கர்யத்தையோ அருளுகிறான். தன் ஆத்மாவை அநுபவிக்க விரும்பிக்கர்ம ஜ்ஞானயோகங்களை அனுஷ்டிப்பவர்களுக்கு அந்த ஸாதனங்களுக்குப் பலனாக அவர்கள் விருப்பப்படி நித்யமான கைவல்ய மோக்ஷத்தைக் கொடுக்கிறான். ஆகையால் தலை

சிறந்த புருஷார்த்தமான பரார்த்தகைங்கர்யத்தைப் பெற விரும்புகிறவன் தன்னிடமுள்ள கர்மஜ்ஞானபக்திப்ரபத்திகளை உபாயமாக நினையாமல், எம்பெருமானுடைய நிர்ஹேதுக கிருபையையே உபாயமாக எண்ணியிருந்தால் அப்பரம புருஷார்த்தத்தை எம்பெருமான் அவர்களுக்கு நிர்ஹேதுகமாகவே அருளுகிறான்'' என்பது தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தின் ஸாரம். இதை அறியாமல் ஏதேதோ எழுதுமிவரைக் கண்டு அறிவாளிகள் 'ஐயோ பாவம்!' என்று பரிதாபமே படுவார்கள். (239, 242, 243, 244) தான் தோன்றித்தனமாக எழுதுமிவர் தன் தன்மையைப் பூர்வாசார்யர்கள்மேல் ஏற்றிட்டு அவர்களைப் பழிக்கிறாரந்தோ! 'வேதாந்ததேசிகரோ லோகாசார்யரோ சொல்லும் கொள்கை அப்படியே ஆதிகாலத்தில் இருந்தது என்று ஒப்புக்கொள்ள நூல்கள் இடம் தரவில்லை என்று எழுதுவதன்மூலம் தான் தென்கலையோடு வடகலையோடு வாசியற்ற ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயம் முழுவதற்குமே விரோதி என்று பறைசாற்றிக்கொள்கிறார். எம்பெருமானார் காலம் வரையில் ரஹஸ்யங்கள் க்ரந்தஸ்தமாக்கப்படவில்லை; அதற்குப்பின் படிப்படியாக க்ரந்தங்களில் வெளியிடப்பெற்றன. இவ்வேறுபாட்டைக் கொள்கை வேறுபாடாக மயங்குகிறார் அஹோ! (260) இக்கூற்றுகள் வைஷ்ணவவித்வேஷமே வடிவெடுத்தவரிவர் என்று காட்டுகின்றன. இதுபற்றியெழுதும்போது ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமி சிஷ்யராய் முதுபெரும்புலவரான விஜூதூர் ரெட்டியாரவர்கள் 'ஈன்ற தாய் வெள்கிடுமாறே'' என்று எழுதினார். உண்மையில் அஹோவின் இக்கூற்றுக்களை அவரைப் பெற்ற தாய் கேட்டால்கூட 'ஐயோ! இவனையா நாம் மகனாகப் பெற்றோம்!' என்று லஜ்ஜிக்கவும் வருந்தவுமே செய்வாள். ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மண த்வேஷிகளிடம் பரிசுகளும் பதவிகளும் பெறவே ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மண குலத்தில் பிறந்த இவர் இப்படிப் பெரும் பொய்யை ஓர் ஆதாரமும் காட்டாமல்

ஆழ்வார்கள் ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள் அனைத்துக்கும் முரணாக எழுதுகிறார் என்பது வெளிப்படை. (293) அரஸிக சிக2ாமணியாய் ப4க3வத்3கு3ணங்களின் பெருமை அறியாத நிர்கு3ணவாதி3யான இவர்க்கு—"பிணங்கி அமரர் பிதற்றும் குணம்" (திருவாய் 1-6-4) என்று ஆழ்வார்கள் அருளிச்செய்த ப4க3வத்3கு3ணங்கள் நித்யஸூரிகளையும் பிணங்கச்செய்யும் என்பதையும். "ஆங்காரவாரமது கேட்டு அழலுமிழும் பூங்கார் அரவணையான்" [நான்-திருவ 10] என்று ஆழ்வார்கள் நித்யவிபூ4தியிலும் நித்யர்க்கு அஸ்த2ானே ப4யஶங்கையுண்டு என்று அருளியதையும் புரிந்துகொள்ளும் சக்தி இல்லை என்பதில் வியப்பில்லை. "தத் விஷ்ணோ: பரமம் பத3ம்... ஜாக்3ருவாம்ஸஸ் ஸமிந்த4தே" என்று ருக்3வேத3 விஷ்ணுஸூக்தமும் இவ்வஸ்த2ானே ப4யஶங்கையைப் படித்திருக்கிறது என்று நாம் எடுத்துக் காட்டினாலும் உணர இட்டுப்பிறக்காதவரிவர். (307.... 311) ஸ்ரீரங்கநாதன் அக்3நிப்ரவேஶத்தின் போது நிர்வாஹ அதி4காரி கே. கே. மேனன், மற்ற தர்மகர்த்தாக்கள் ஆகிய அனைவரும் "மூலமூர்த்தியின் திருநெற்றியில் எவ்விதமான புண்ட்3ரமும் இல்லை" என்றே ரிகார்டு செய்திருக்கிறார்கள். அதற்கு விபரீதமாக அஹோ எழுதுகிறார். எங்குமே மூலமூர்த்தியின் திருநெற்றியில் திருமண்காப்பு சாத்தப்படுகிறதேயொழிய பிம்பத்திலேயே சேர்ந்திருப்பதில்லை. "உத்3த4ரத்யுபரி ப4க்தஜநாநித்யூர்த்4வதாஶ்ரயண ஸூசித ஶக்திம் । ஊர்த்4வபுண்ட்3ரதிலகம் ப3ஹுமாநாத் கிம் பி3ப4ர்ஷி வரத3 ஸ்வலலாடே ॥" [வரத3ராஜஸ்தவம் 26] [வரத3னே! ஊர்த்4வமுக2மாயிருப்பதன் மூலம் உயர் க3திக்கு அழைத்துச்செல்லும் சக்தி உண்டென்று காட்டுகிற ஊர்த்4வபுண்ட்3ரதிலகத்தை—உன்னடியார்களை இது உயர் க3திக்கு அழைத்துச்செல்லுகின்றது என்னும் காரணத்தினால் உன் நெற்றியிலும் த4ரித்திருக்கிறாயா என்ன?] என்று கூரத்தாழ்வானும் வரத3ராஜப்பெருமாள் தன் ப4க்தர்கள்

த₄ரிக்கும் ரீதியில் ஊர்த்₄வபுண்ட்₃ரத்தை த₄ரித்திருந்ததாகக் காட்டுகிறார். இது பெரியபெருமாளுக்கும் ஒக்கும். ஸ்ரீரங்க₃ ராஜஸ்தவத்தில் (1-14) ஸ்ரீபராசரப₄ட்டரும் "முக₂புண்ட₃ரீக முபரி த்ரிகண்டகம் திலகாம்ச கேஸர ஸமா: ஸமௌக்திகா:" என்று. பெரியபெருமாள் திருநெற்றியில் திருமண்காப்பின் அடியில் தாமரைபோன்று பீட₂மிருப்பதாகவும், அதன் மேல் முத்துக்களை நுனியில்கொண்ட மூன்று ரேகை₂கள் அத்தாமரையின் கேஸரங்கள் போன்று மிளிர்வதாகவும் அருளினார். இதிலிருந்து இப்போது சாத்தியிருப்பது போன்ற திருமண்காப்பே அக்காலத்திலும் பெரியபெருமா ளுக்குச் சாத்தப்பட்டிருந்ததென்றும், மூன்று ரேகைகளின் நுனியில் முத்துக்களும் பதிக்கப்பெற்றிருந்தன என்றும் தெளிவாகிறது. ஆகையால், "இப்போது பார்க்கப்பட்டுள்ள அடையாளத்துடனேயே எழுநூறு வருடங்களுக்கு முன்பும் ரங்கநாதன் இருந்திருக்கலாம் என்று எண்ண இடமில்லை" என்று அஹோ எழுதுவது ஊர்த்₄வபுண்ட்₃ர வித்₃வேஷத் தினாலேயே என விளங்குகிறது. வடகலைக்கோவில்கள் எதையும் எடுக்காமல், ரங்க₃நாத₂னை மட்டும் குறிப்பிடுவ தால் தென்கலைத் திருமண்காப்பில் இவர்க்குள்ள த்வேஷ மும் வெளிப்படுகிறது. இப்படி எழுதுகிறவருக்குக் கருத்து 'ரங்கநாத மூலமூர்த்தியின் நெற்றியிலுள்ள தென்கலைத் திருமண்காப்பை எடுத்துவிடவேண்டும்' என்பதேயன்றோ. நடுநிலைமையும், நேர்மையும் சிறிதாவதிருந்தால், இவ்வஹோ இவ்வைஷ்ணவ வித்₃வேஷ நூலை வெளியிட்டிருக்கும் திருக் குடந்தை தேவஸ்தான நிர்வாகிகளிடமும், அறநிலைய அதி₄ காரிகளிடமும் தனக்குள்ள செல்வாக்கைக்கொண்டு திருக் குடந்தை ஆராவமுதனின் மூலமூர்த்தியின் நெற்றியிலுள்ள திருமண்காப்பை அகற்ற முயற்சி எடுத்துக்கொள்வாரா? அப்படி முயற்சி எடுத்துக்கொண்டால் இவரை ஆதரிக்கும் வைஷ்ணவர்களும் எதிர்ப்பதை உலகம் காணும். (323) "கீதையில் பகவான்....கூறுகிறார்" என்று எழுதுவது

க்ருத்ரிமமானது. யேऽப்யந்ய தே₃வதாப₄க்தா: யஜந்தே ஶ்ரத்₃த₄யாऽந்விதா:| தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதி₄ பூர்வகம் ||” என்ற ஶ்லோகத்தில் ‘அவிதி₄பூர்வகம்’ என்னும் பத₃த்தால் மற்ற தெய்வங்களை உபாஸிப்பது முறையற்றது என்று கூறியிருப்பதை மறைத்துவிட்டார் ஆஹோ! ‘பகவான் கீதையில் தன் பெயரைக் குறிப்பிடாததால் கீ₃தாசார்யன் கண்ணனேயல்ல என்று பொருள்பட எழுதியுள்ளார் அஹோ! கீதையில் அர்ஜுனன் கண்ணனைப் பெயரிட்டுப் பலமுறை அழைத்திருப்பதை மறைத்து இப்படி எழுதுவது இவருடைய விஷ்ணுத்₃வேஷத்தையே விளக்குகிறது. நண்பர் இருவர் பேசும்போது. பேசுகிறவர் தன் பெயரைக்குறிப்பது வழக்கமில்லை; எதிரிலிருக்கிறவரின் பெயரைக்குறிப்பிட்டுப் பேசுவதே வழக்கம். அவ்வழக்கப்படி கண்ணன் அர்ஜுனனின் பெயரையும், அர்ஜுனன் கண்ணனின் பெயரையும் கீதையில் பலமுறை குறித்திருக்கிறார்கள். ஆக, விஷ்ணுவையும் வைணவத்தையும் இகழ்ந்தது அப்ராமாணிகம் என்று நிலைநிறுத்தப் பட்டதாயிற்று.

(5) பிராட்டியை இகழ்தல்

(20) அதனோடு உருவம் இல்லாத பிரும்மத்துக்கு அழகான ஆண் உருவம் கொடுத்து ஆடையுடுக்கச் செய்து, அவனோடு பெண் உருவில் உள்ள மகாலக்ஷ்மியையும் சேர்த்து, பரிவாரங்கள், இருப்பிடங்கள் இவற்றை விரிவாக வருணித்து, வைணவத்தை உருவாக்குகிறார் (ராமானுஜர்). (201, 202) ஸ்ரீ வைஷ்ணவ ஆசார்யர்கள் பெண் என்றும் மகாவிஷ்ணுவின் பத்நி என்றும் சொல்லிய பிறகு அவளுக்கு ஏதாவது தொழிலைக் கொடுத்தாக வேண்டும் என்று சிந்தனை செய்து நமக்கும் மகாவிஷ்ணுவுக்கும் நடுவில் நின்று நமக்காகப் பரிந்து பேசுகிறாள் (புருஷகாரம்) என்று புதிதான கருத்தை உருவாக்குகிறார்கள். மனித உருவைக் கடவுளுக்குக் கொடுத்தபிறகு, அவருக்கு ஒரு மனைவியையும் கற்பித்த பிறகு உலக வாழ்கையில் உள்ள அநேக அம்சங்களை அங்கு கற்பிப்பது இவர்களுக்கு எளிதானதாக ஆகிவிட்டது. தம்பதி (கணவன் மனைவி) என்ற உறவை ஏற்படுத்திய பிறகு மகாலக்ஷ்மிக்கு மதிப்புக்

கொடுக்க ஆசாரியர் தயங்கவில்லை. இவள் பெருமையை விளக்குவதற்காக விஷ்ணுவின் பெருமையைச் சிறிது இறக்கத் தயங்கியதும் இல்லை. மகாலக்ஷ்மி என்ற கொள்கை தேவி வழிபாட்டின் வழியாக முக்கியத்துவம் பெற்றிருக்கிறது ... மகாலக்ஷ்மி தத்துவத்திற்குப் பெருமை கொடுக்க அளவற்ற உயர்ந்த குணங்கள் உள்ள விஷ்ணுவுக்கும் கோபம் என்ற மாசை கற்பிக்கிறார்கள்......இந்தக் கருத்தை ராமாயணத்திலும் ஆசாரியர்கள் ஏறிட்டுக் காண்பிக்கிறார்கள். (209,210) ராமாநுஜர் இயற்றியதாகக் கூறப்படும் கத்யத்ரயம் என்ற நூலில் ஸ்ரீபூமிநீளா நாயகன் என்ற தொடர் காணப்படுகிறது. ஆனால் அவருடைய வேதாந்த சங்கிரகத்தில் 'மகிஷி' என்ற ஒரு மனைவிதான் குறிப்பிடப்படுகிறாள். அதனால் பிற்காலத்தில் கருத்தளவில் லக்ஷ்மிதத்துவமே பூமி நீளாவாகப் பரவியது என்று கருத வேண்டிவருகிறது. (212, 213, 214) ஸ்ரீ ஸூக்தத்தில் ஸ்ரீ, லக்ஷ்மி என்ற இரண்டு சொற்களும் ஒன்றுசேர்ந்து விடுகின்றன. 'விஷ்ணு பத்நீ' என்ற சொல் உலகத்தின் தலைவி என்ற பொருளில் வருகிறதேயன்றி பட்டர் குறிப்பிடுவதுபோல லக்ஷ்மி என்ற கருத்தில் வரவில்லை...எது எங்ஙனமாயினும் ஸ்ரீ என்ற சொல் விஷ்ணுவின் மனைவி என்ற பொருளிலோ தெய்வம் என்ற பொருளிலோ வேதத்தில் வழங்கப்படவில்லை. (220, 221, 222, 226, 229) தக்ஷபிரஜாபதியின் பெண்கள் பதின்மருள் ஒருத்தியான லக்ஷ்மி தர்மதேவதைக்கு மணம் செய்துகொடுக்கப்பட்ட செய்தியும் காணப்படுகிறது...மகாலக்ஷ்மியை இந்திரனோடும் மற்றவர்களோடும் சேர்க்கும் கதைகளும் புராணங்களும் காணப்படுகின்றன. மகாபாரதம் ஆதிபருவத்தில்—லக்ஷ்மி இந்திரனுடைய பத்நி ஆதலால், பாண்டவர் ஐவரும் சென்ற பிறப்பில் ஐந்து இந்திரர்களாக இருந்ததால் லக்ஷ்மி அவதாரமான திரௌபதி அந்த ஐவரையும் ஒருசேர மணந்தது பொருத்தமே என்ற செய்தி காணப்படுகிறது...ஸ்ரீஸூக்தத்தில் லக்ஷ்மி தேவஸ்கன் (குபேரன்) கீர்த்தி மணி இவற்றோடு தொடர்பு கொண்டிருக்கும் செய்தி காணப்படுவதால் லக்ஷ்மிக்குக் குபேரனுடைய தொடர்பும் அறியப்படுகிறது...மகாபாரதம் வனபருவத்தில் ஸ்கந்தனுடைய மனைவிமார்களாகத் தேவசேனையோடு லக்ஷ்மி, சஷ்டி முதலியவர்களும் குறிப்பிடப்படுகிறார்கள். இங்கு லக்ஷ்மி ஒரு சரீரத்தோடு ஸ்கந்தனை அடைந்த செய்தியைக் காண்கிறோம். பாரதத்தில் லக்ஷ்மி தேவசேனை என்ற உருவத்தோடு ஸ்கந்தனைக் கூடியிருக்கும் செய்தியும் குறிப்பிடப்படுகிறது. (250, 251) மஹாலக்ஷ்மியைப்பற்றி 'சதுஸ்ஸ்லோகி' என்ற நூல் எழுதியுள்ளார் (ஆளவந்தார்). ஆனால் பிற்

காலத்தில் தோன்றிய புருஷகார் கொள்கைக்கு இவர் காலத்தில் இடமேயில்லை. (251) பத்னியை ஒப்புக்கொள்ளும் இவரும் இவருடைய வேதாந்தக் கருத்துக்களை வெளியிடும் நூல்களில் சொல்லவில்லை. புருஷகாரம் என்ற சொல்லை இவர் உபயோகப்படுத்தவேயில்லை.

ஸுத₃ர்ஶனம் ஆசிரியரின் மறுப்பு

(20) "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யெள" என்று *புருஷஸூக்தத்திலேயே பரமபுருஷனுக்கு ஸ்ரீதே₃வியைப் பத்னியாகச் சொல்லியிருப்பதைக் கணிசியாமல் ஸ்ரீ ராமானுஜர் உருவாக்கியதாகக் குற்றஞ்சாட்டுவது அஹோவின் ஆணவத்தையே காட்டுகிறது. (201, 202)* "லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்த்தி₃ஷ்டா பரமர்ஷிபி₄ லக்ஷ்மீ: புருஷகாரேண வல்லப₄ா ப்ராப்தியோகி₃நீ" *முதலானவிடங்களில் ஸ்ரீபாஞ்சராத்ரஸம்ஹிதையிலேயே புருஷகாரத்வம் பிராட்டிக்குக் கூறப்பட்டுள்ளது. மேலும், தந்தையின் சீற்றத்தை ஆற்றித் தனயனையும் தந்தையையும் சேரவிடும் தாயின் செயலே புருஷகாரத்வம். புருஷஸூக்தம் பிராட்டியைப் பரமபுருஷனுக்குப் பத்னியாகப் படித்ததிலிருந்தே ஜக₃ந்மாதாவான அவளுக்கு இப்புருஷகாரத்வம் உண்டென்று ஸித்₃தி₄க்கும். ஆகையால் வேத₃ாக₃மங்களிலிருந்து விளங்குவதும், உலகநடைமுறைக்கு மிகப் பொருந்தியதுமான புருஷகாரக்கொள்கையை ஸ்ரீ வைஷ்ணவாசார்யர்கள் புதிதாக உருவாக்குகிறார்கள் என்று உளறுவது அஹோவின் லக்ஷ்மீ த்₃வேஷத்தையும், ஸ்ரீ வைஷ்ணவாசார்ய வித்₃வேஷத்தையும் காட்டுகிறது. வைஷ்ணவத்தின் ஒவ்வோர் ரஸத்தையும் காப்பியடித்து உருவாக்கப்பட்ட ஶைவம்—லக்ஷ்மீ தத்துவத்திற்குப் போட்டியாக ஶக்திதத்துவத்தை உருவாக்கியிருப்பது வரலாற்று ரீதியில் காணும் உண்மையாயிருக்க, ஆதி₃ஶங்கரர் முதலான ப்ராசீந வேத₃ாந்திகள் ஶாக்தத்தை எடுத்துக் கழிக்கக்கூடத் தகுதியற்ற மதம் என்று உபேக்ஷித்திருக்க, "மகாலக்ஷ்மி என்ற கொள்கை தேவி வழிபாட்டின் வழியாக முக்கியத்துவம் பெற்*

திருக்கிறது" என்று எழுதுவது ஶாக்தஸஹவாஸத்தால் ஏற்பட்ட பிதற்றலேயாகும். "விஷ்ணுவுக்குக் கோபம் என்ற மாசைக் கற்பிக்கிறார்கள்" என்று எழுதுவது ஆராய்ச்சியின்மையால் ஏற்பட்டது. கோபம் என்பது யாருக்கு யார் விஷயத்தில் ஏற்படுகிறது என்பதை ஒட்டியே குணமாகவோ (தேசாகவோ). தோஷமாகவோ. (மாசாகவோ) ஆகும் என்பதைக்கூட உணரகில்லார் அஹோ! கோபம் என்பது பெண்ணுக்கு மாசு; புருஷனுக்கே தேசு. புருஷனுக்கும் நல்லோர்கள் விஷயத்தில் ஏற்பட்டால் அது மாசு. தீயவர்கள் விஷயத்தில் ஏற்பட்டால்தான் தேசு. தாமஸஶாஸ்த்ரங்களைப் பின்பற்றி பெண்ணுக்குக் கடும் கோபத்தை ஒப்புக்கொள்ளும் ஶாக்தர்களையும். நல்லோர்களான ரிஷிகள் விஷயத்திலும். தேவர்கள் விஷயத்திலும். தேவாதிதேவன் விஷயத்திலும் கோபத்தைக் காட்டிய சிவனைப் பரம்பொருளாகக் கொள்ளும் சைவர்களையும் கட்டி அணைத்துக்கொண்டிருக்கும் அஹோ—ஸாத்விக ப்ரமாணங்களையொட்டி, நாரீணும் உத்தமையான பிராட்டியை அஜ்ஞாத நிக்ரஹையாகவும், புருஷோத்தமனைத் தீயவர்களிடமே கோபத்தை உடையவனாகவும் நிரூபிக்கும் வைஷ்ணவர்களைத் தூற்றுவது-ஶாக்தசைவர்களாக மாறிவிட்ட மாயாவாதிகளின்மேல் அவர்க்குள்ள அபிமானத்தையும், வைஷ்ணவர்களிடம் அவர்க்குள்ள த்வேஷத்தையுமே காட்டுகிறது. கோபம் பெண்ணுக்கே மாசாகும்; புருஷோத்தமனுக்குத் தீயவர்களிடம் கோபம் ஏற்படாவிடில் அதுவே மாசாகும். ருக்வேதமந்திரங்களில் இந்திரன், விஷ்ணு ஆகியவர்கள் பல அஸுரர்களைக் கடுங் கோபங்கொண்டு அழித்ததாகக் கூறப்படுகிறது. உபனிஷத்திலும் "பீஷாऽஸ்மாத் வாத: பவதே" முதலான மந்திரங்களில் தன் ஆணையை மீறுபவர்களிடம் பரமாத்மா கடுங் கோபங்கொண்டு தண்டித்துவிடுவான் என்று காட்டப்பட்டது. இப்படியிருக்கப் புருஷோத்தமனுக்கு ஏற்படும்

கோபத்தை மாசாக அஹோ எழுதுவது அவர்க்கு வேத₃ வேதா₃ந்தங்களில் அடியோடு பரிசயமில்லை என்பதையே காட்டுகிறது. "காலாக்₃நி ஸத்₃ருஶ: க்ரோதே₄" "கோபஸ்ய வஶமேயிவாந்" முதலான நூற்றுக்கணக்கானவிடங்களில் ராமபிரானுக்குக் கோபமுண்டென்று வால்மீகி முழங்கி யிருக்க, 'ஆசாரியர்கள் இந்தக் கருத்தை ராமாயணத்திலும் ஏற்றிக் காண்பிக்கிறார்கள்' என்று அஹோ எழுதுவது அவர்க்கு ஸ்ரீ ராமாயணத்திலும் பரிசயமில்லையெனக் காட்டுகிறது. (209, 210) ஸ்ரீ ஸூக்தம், பூ₄ஸூக்தம், நீளா ஸூக்தம் என்ற மூன்று ஸூக்தங்கள் வைதி₃கர்கள் அனைவராலும் ஓதப்படுகின்றன. ஸ்ரீ பூ₄மிகளைப் புருஷஸூக் தம் விஷ்ணுபத்னிகளாக ஓதிற்று. நீளா ஸூக்தம் நீளா தே₃வியை விஷ்ணுபத்னியென்றே ஓதிற்று. இப்படியிருக்க, "பிற்காலத்தில் லக்ஷ்மிதத்துவமே பூமி நீளாவாகப் பரவி யது" என்று அஹோ எழுதுவது அவரது வேத₃ பரிசய மின்மையைக் காட்டுகிறது. வேதா₃ர்த்த₂ ஸங்க்₃ரஹத்தை 'வேதா₃ந்த சங்கிரகம்' என எழுதுவது ஸம்ப்ரதா₃ய பரிசயமின்மையைக் காட்டுகிறது. (212, 213, 214) ஸ்ரீஸூக்தம் 'ஸ்ரீ:' என்ற சொல்லையும், 'லக்ஷ்மீ:' என்ற சொல்லையும் பர்யாயமாகப் படித்தது. புருஷஸூக்தம் லக்ஷ்மியைப் பரமபுருஷனின் பத்னியாகப் படித்திருக்கிறது. இப்படியிருக்க, "ஸ்ரீ என்ற சொல் விஷ்ணுவின் மனைவி என்ற பொருளிலோ, செய்வம் என்ற பொருளிலோ வேதத்தில் வழங்கப்படவில்லை" என்று எழுதுவதும், ஸர்வஜ்ஞஸார்வபௌமரான ப₄ட்டரைத் தூற்றுவதும் அஹோவின் அஹம்பா₄வத்தையே காட்டுகிறது. (220, 221, 222, 226, 229) "தே₃வதிர்யங்மநுஷ்யேஷு புந்நாமா ப₄க₃வாந் ஹரி: ஸ்த்ரீநாம்நீ லக்ஷ்மீ:" "ஸ்ரீர் தே₃வஸேநா மைத்ரேய! தே₃வஸேநாபதிர் ஹரி:" என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் சொல்லப்பட்ட ரீதியில் எல்லாப் புருஷர் களிடமும் உள்ள பும்ஸ்த்வாவஹமான பெருமைகள் பரம புருஷனின் அம்ஶமாகும்; ஸ்த்ரீகளிடமுள்ள ஸ்த்ரீத்வாவஹ

மான பெருமைகள் பிராட்டியின் அம்சமாகும். இதனால் தே₃வஸேனை முதலானவர்களை லக்ஷ்மியாகவும், தே₃வ ஸேநாபதி முதலானவர்களை விஷ்ணுவாகவும் சாஸ்திரங் களில் கூறியிருக்கிறது. குபே₃ரன் முதலானோர் லக்ஷ்மியின் அருள்பெற்ற பரிவாரமாகையால் அளவற்ற செல்வம் பெற்றார்கள் என்றும் சாஸ்திரங்கள் கோ₄ஷிக்கின்றன. இப்படியிருக்கையில். லக்ஷ்மிக்கு இந்திரனோடும். கந்த னோடும். குபே₃ரனோடும் ப்ராக்ருதமான தொடர்பு உள்ளது போல அஹோ எழுதுவது அவர் ராவணாதி₃களைப்போல் அஸஹ்யாபசாரத்தில் ஊன்றியிருப்பவர் என்று காட்டு கிறது. (250, 251) சது:ஶ்லோகியில் "ஈஷத் த்வத்" என்று தொடங்கும் ஶ்லோகத்தின் பிற்பகுதி பிராட்டியின் புருஷ காரத்வத்தை விளக்குகிறது என்பதை எல்லா ஆசார்யர் களும் ஒருமுகமாக ப்ரமாணங்காட்டி விளக்கியுள்ளனர். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதா₃ய த்₃வேஷியான அஹோவிற்கு இது விளங்காததில் வியப்பில்லை. (251) க₃த்₃யத்ரயத்தின் தொடக்கத்திலேயே பிராட்டியின் புருஷகார க்ருத்யத்தைக் காட்டியிருக்கிறார் எம்பெருமானார். க₃த்யத்ரயத்தையே எம்பெருமானார் க்ருதியன்று என்று பிதற்றும் அஹோவிற்கு எம்பெருமானாரின் கொள்கைகள் ஒருகாலும் விளங்க மாட்டா. ஆக, பிராட்டியை இகழ்ந்துரைத்ததும் அப்ரா மாணிகம் என்று நிலைநாட்டப்பட்டது.

(6) ஆழ்வார்களை இகழ்தல்

(9) கற்பனையுலகில் சஞ்சரித்துக்கொண்டு திவ்ய தேசங்களில் அர்ச்சாவதார மூர்த்திகளைத் தரிசித்து ஆனந்தப்பட்டு, அம்மூர்த்தி களை இராமன் கண்ணன் முதலிய அவதாரங்களாகக் கற்பனையில் கண்டு அம்மூர்த்திகளிடம் அவ்வவதார திருவிளையாடல்களை ஏறிட்டுப் பாசுரம் பாடிக் கற்பனையுலகில் இறைவனைக் கூடியும் பிரிந்தும் முறையே மகிழ்ந்தும் துயருற்றும் வாழ்ந்த திவ்வியக் கவிகள் வாக் கில், அரசர்கள் ஊர்கள் பற்றிய செய்திகளில் சிறிதளவு வரலாற்றுத் தொடர்பான செய்தியே புலனாதல் கூடும். (15) இராமாநுஜர் ஆழ் வாருடைய பக்தி தெய்வீக உணர்ச்சியைப் பெறுதற்குரிய அடிப்

படையேயன்றி வீடுபேறு அளிக்கவல்ல பக்தி ஆகாது என்று கருது கிருர். பின்வந்த பேருரையாசிரியர்களும், ஆழ்வார்கள் வர்ண தர்மங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் ஆதலின், உபநிஷத்துக்களில் கூறப்பட்ட பக்தியோக நெறியை அவர்கள் பின்பற்ற இயலாததால், அவர்கள் பிரபத்தி யோகநிஷ்டர்கள்தாம் என்று விளக்கம் கூறுகின்ற னர். (246, 247, 248) ஆசாரியர் 'ப்ரபன்ன சந்தான கூடஸ்தரான நம்மாழ்வாருடைய நூல்கள் பாடல்கள் உருவத்தில் ப்ரத்யட்சமாக இருந்து வருகின்றன. அவரைப்போன்ற மற்ற ஆழ்வார்கள் இருந்தும் அவர்களுடைய பாடல்களுக்குத் தனித்த இடத்தைக்கொடுத்து ஆழ்வார் களுள் இவர் ஒருவரே ஆசார்ய பரம்பரையில் சேர்க்கப்பட்டுள்ளார். நாராயணனை இஷ்டபரதேவதையாகக் கொள்ளுமிவர். வாஸுதேவன், சங்கர்ஷணன், ப்ரத்யும்நன். அநிருத்தன் என்ற ஆகமப் பெயர்களைக் குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது. பூமகள் – மண்மகள் — ஆயர்மகள் இவர்களை மனைவிகளாகச் சொல்லுமிவர் மஹா லக்ஷ்மிக்கு தனியாக ஒரு பாடலைக்கூட அர்ப்பணம் பண்ணவில்லை. பட்டர் குறிப் பிட்டபடி பகவானைச் சொல்லுமிடங்கள் இவளையும் சொல்லியதாக நினைக்கிருர் போலும். சரணுகதி பண்ணுபவர்கள் முதலில் லக்ஷ்மியை சரணுகதி பண்ணவேண்டும். லக்ஷ்மீதான் புருஷகாரம் என்ற கருத்துக் கள் இங்கு இடம் பெறவில்லை. இவர் தன் பாசுரங்களில் பகவானைக் கருணைக் கடலாகவே அநுபவித்துப் பேசுவதால் புருஷகாரம் என்ற கொள்கையே இவருடைய கருத்துக்கு எதிரானதென்று தெரிகிறது. அவ்விதமே இவருடைய நூல்களில் காணப்படும் சரணுகதி எல்லா நூல்களிலும் சொல்லப்படும் சரணுகதியே. உபாயமாகப் பற்றப்பட்ட தில்லை. மேலும் இவரை ப்ரபந்ந ஸந்தானகூடஸ்தராக எல்லா ஆசாரியர்களும் வர்ணிக்கிருர்கள். உண்மை அப்படி இல்லை. இவர் பக்தியோக நிஷ்டர்தான். இவரது பக்தி ராமாநுஜர் கூறும் உப நிஷத்தைப் பின்பற்றிய உபாசனை இல்லை. புராணங்களில் சொல்லப் பட்டுள்ள கடவுளிடம் அன்பைச் செலுத்துவதே. நம்மாழ்வார் பக்தி யோக நிஷ்டர் என்றுதான் திருக்குருகைப் பிரான் பிள்ளான் கூறு கிருர். பத்தாவது பத்தில் உள்ள ஒரு பாசுரத்திற்கு விளக்கம் கூறும்போது 'பத்துடைய அடியவர்க்கெளியன்' என்ற பாசுரத்தில் ஆரம்பித்த பக்தியோக சுலபத்வத்தை நிகமிக்கிருர் என்ற கருத்தை வெளியிட்டிருக்கிருர். இதனுல் ஆருயிரப்படி உரைப்படி நம்மாழ்வார் பக்தியோக நிஷ்டர்தான். இவர் மோட்சோபாயமாகக் கர்ம ஞான பக்திகளை மட்டும் குறிப்பிடுகிருர். ப்ரபத்தியை உபாயமாக நேருக்கு நேராகக் குறிப்பிடவில்லை. ப்ராசீனமாக பன்னீராயிரப்படிவரை

இதே கருத்து தொடர்ந்து வருகிறது. ஆனால் இருபத்துநாலாயிரப்படி, முப்பத்தாருயிரப்படி வியாக்கியானங்களில் புதுவழி ஆரம்பிக்கப்படு கிறது. ''மயர்வற மதிநலம் அருளினன்'' என்ற இடத்தில் ஆரம்பித்த ப்ரபத்தியோக சுலபத்வத்தை இங்கு நிகமிக்கிறார் என்று அவர்கள் கூறுகிறார்கள் ; இது ஒரு புதிய திருப்பம். ராமானுஜருக்கு அந்தரங்கராயிருந்த பிள்ளான் கூறிய வழியை மீறிப் புதிய வழியை ஏன் கண்டுபிடிக்கிறார் என்பது புரியவில்லை. ஆனால் ஒன்று தெளி வாகிறது. வைணவ சம்பிரதாயத்தில் ராமாநுஜர் பக்தியை வற்புறுத்துகிறார். பிற்காலத்தவர்கள் ப்ரபத்தியை வற்புறுத்துகிறார் கள்.......நம்மாழ்வாருடைய பக்தி உபநிடதத்தில் சொல்லப்படும் பக்தியில்லை. புராணங்களில் காணப்படும் விபவாவதாரங்களில் ஈடு படுவது பக்தி என்று இவர் நினைப்பதாகத் தெரிகிறது. ராமாநுஜர் உபநிடதத்தில் சொல்லப்பட்டுள்ள உபாசனங்களையே பக்தி என்கிறார். இந்த விஷயத்தில் ஆழ்வாருடைய கருத்தும் ராமானுஜருடைய கருத்தும் ஒத்துப்போகவில்லை. ராமானுஜர் உபநிடதத்துக் கொள்கை களை வற்புறுத்துகிறார். ஆழ்வார்கள் எல்லா மக்களுக்கும் பொதுவான பக்தியைச் சொல்லுகிறார்கள். ஆழ்வார்கள் அடிக்கடி எம்பெருமானைச் சரணம் புகுகிறார்கள். அர்ச்சாவதாரத்திலேயே சரணாகதி பண்ணு கிறார்கள் என்றும் லோகாசாரியார் கூறுகிறார். ஆனால் இந்தச் சரணாகதி பாஞ்சராத்ர ஆகமத்தில் சொல்லப்பட்டுள்ள சரணாகதி யாகத் தெரியவில்லை. உலக வழக்கத்தைப் பின்பற்றியதே...சரணா கதியைப் பற்றி உள்ள கருத்துக்கள் பாஞ்சராத்ர ஆகமத்திலேயே வளர்க்கப்பட்டுள்ளன. அந்தக் கருத்துக்களுக்கு இங்கு பேச்சில்லை. ஐந்து அங்கங்களோடு கூடினது சரணாகதி என்று ஆழ்வார் எங்கும் வெளியிடவில்லை. மேலும் 'த்வயம்' என்ற மந்திரம் சரணாகதிக்கு மிகவும் முக்கியமானது. உரையாசிரியர்கள் நம்மாழ்வாருடைய பாடல்களுக்கு உரை கூறுங்கால் த்வயத்தினுடைய விளக்கமாகவே அவை அமைந்திருப்பதாகக் கொள்கிறார்கள். ஆனால் எட்டு எழுத்து என்ற அஷ்டாக்ஷரத்தைச் சொல்வதுபோல் ஆழ்வார்கள் த்வயத்தைப் பற்றிச் சொல்லவேயில்லை. ஆழ்வார்கள் பக்தியோக நிஷ்டர்கள் அல்லர் என்று அறுதியிட்டுக்கூறும் பெரியவாச்சான்பிள்ளையும் வடக்குத்திருவீதிப்பிள்ளையும் ஆழ்வார்கள் வேறு ஜாதியில் பிறந் திருப்பதால் உபநிடதத்தில் சொல்லப்பட்டுள்ள பக்தியோகத்திற்கு இவர்கள் அதிகாரிகள் அல்லர் என்று கூறிவிட்டார்கள்...இவ்விதம் வைணவ சம்பிரதாயத்திற்குக் கொள்கைகளை வழங்கும் மூன்றுவகை நூல்களும் ஒவ்வொன்றும் தனித்தனியே அமைந்திருப்பதைப் பார்க்கி றோம். (298, 299, 300) ரிக் வேதக்காலத்திற்குப் பிறகு தெய்வங் களை வருணித்துப் பாடும் பாடல்கள் தமிழிலுள்ள பரிபாடல்களே, இப் பரிபாடல்களே ஆழ்வார்களுக்குத் தெய்வத்தைப் பற்றிப் பாட

வழிவகுத்துக் கொடுத்தன...சடகோபர் பொதுநோக்கு:- நம்மாழ்வார் திருவாய்மொழியின் முதல் இரண்டு பதிகங்களில் தம்முடைய அடிப் படையான கருத்துக்களை வெளிப்படுத்தி, மும்மூர்த்திகளும் சமம் என்ற கருத்தைத் திருவாய்மொழியில் ஆங்காங்குப் புலப்படுத்தி வேதாந்தக் கருத்துக்களுக்கும் சமய சமரசக் கருத்துக்களுக்கும் இடையிடையே இடம் அளித்து, பகவானையே பரம்பொருளாகக் கொள்பவர் ஆனாலும் மற்ற தேவதைகளையும் மறுக்காமல் புகழ்ந்து பேசி 'அரியை அயனை அரனை அலற்றி அவாவற்று வீடுபெற்ற குரு கூர்ச் சடகோபன்' என்ற நிலையில் திருவாய்மொழியை முடிக்கும் திறன் இவருடைய பரந்த மனப்பான்மையைத் தெளிவாகஎடுத்துரைக்கிறது... நாராயணனின் ஒரு கூறுகச் சிவபெருமான் உள்ளான் என்று குறிப்பி டும் நம்மாழ்வாரின் தெய்வக்கருத்தைக் கண்டுபிடிப்பதில் பிற்காலத்தவ ரான திருவாய்மொழி உரையாசிரியர்கள் மிகுந்த சிக்கலுக்கு உள்ளா கின்றனர். (304)பகவான் ஆலயங்களில் பிம்பங்களாக இருந்து அருள் செய்கிறுன். திருமகள், மண்மகள், ஆயர்மடமகள் மூவரும் அவனுக்குத் தேவிகள் என்று குறிப்பிடும் ஆழ்வார்கள் தத்துவ ஹித புருஷார்த்தங் களைத் தங்கள் கருத்தில் பட்டவாறு சுதந்திரமாக பேசுகிறுர்கள்.

ஸுதர்ஸனம் ஆசிரியரின் மறுப்பு

(9) தமக்கு ப்ராப்தமான அத்வைத மதத்தைக் கைவிட்டு, ஆதிஸங்கரருடைய ப்ரஸ்தாநத்ரயபாஷ்யத் திற்கு முரணாய் அவர்பேரில் பிற்காலத்தில் ஏறிடப்பெற்ற ஸ்தோத்ரங்களையும், தேவீபாகவதம் முதலிய தாமஸ நூல்களையும் பற்றிக்கொண்டு, அவற்றிலுள்ள ஶைவ ஶாக்தமதக் கற்பனைகளிலேயே திளைத்துக்கொண்டு ஐந்தா வது மடக்கற்பனை, ஆத்திசூடியில் அரன்கற்பனை, நைஷ தத்தில் யோகலிங்கக்கற்பனை முதலான எண்ணிறந்த கற்பனைகளைத் திட்டமிட்டுச்செய்துவரும் தம் ஆசார் யரோடுள்ள ஸஹவாஸத்தாலே துர்யோதந ப்ரக்ருதியான இவர்க்கு — பகவந் நிர்ஹேதுக க்ருபையாலே ஆழ்வார் களுக்கு ஏற்பட்ட பகவதநுபவங்களெல்லாம் கற்பனை யாகத் தோன்றுவதில் வியப்பில்லை. (10) "கண்ணனல்லால் இல்லை கண்டீர் சரண்" என்று அறுதியிட்டு, அடிக்கீழமர்ந்து புகுந்த ஆழ்வார்—ஸித்தோபாயநிஷ்டை, பரகதஸ்வீகார நிஷ்டை என்று புகழப்படும் தலைசிறந்த ப்ரபத்திநிஷ் டையை உடையவா, அவரிடமுள்ள பக்தி முதலான எல்லாமே ஸ்வயம ப்ரயோஜனமானவை என்பதே எம் பெருமானருடையவும், அவர் வழிவந்த திவ்யப்ரபந்த

வ்யாக்₂யாதாக்கள் அனைவருடையவும் ஸித்₃த₄ாந்தம் என்பதை அஹோ உணர்வாராக. (98) ஆறாயிரப்படிக்கும், இருபத்துநாலாயிரப்படி முப்பத்தாறாயிரப்படிகளுக்கும் ஏதோ விரோத₄மிருப்பதுபோலே அஹோ பிதற்றுவது—திருவாய்மொழி வ்யாக்₂யானங்களை கு₃ருமுக₂மாக ஸேவிக்காமல், குற்றங்கண்டுபிடிக்கவேணும் என்னும் த்₃ருஷ்டியோடு ஏடு பார்த்துப் படித்ததனால் ஏற்பட்டது. முதல் பத்திலே, 2, 3 திருவாய்மொழிகளுக்கான ப்ரவேஶத்திலே "ப₄க்தியோக₃த்தை உபதே₃ஶிக்கிறார்" என்பது ஆறாயிரப்படி. "ப₄க்தியோக₃த்தை அருளிச்செய்கிறார்" என்பது இருபத்துநாலாயிரப்படி. "ப₄க₃வத்₃ப₄க்தியைப்பண்ணி ஆஶ்ரயியுங்கோள் என்று பரோபதே₃ஶப்ரவ்ருத்தராகிறார்" என்பது முப்பத்தாறாயிரப்படி. ஆக, வீடுமின் முற்றத்திலும், பத்துடையடியவரிலும் ஆழ்வார் ப₄க்தியோக₃த்தைப் பிறர்க்கு உபதே₃ஶிக்கிறார் என்பதே எல்லா ஆசார்யர்களுடைய திருவுள்ளமும் என்று விளங்குகிறது. பத்தாம் பத்தில் "சார்வே" திருவாய்மொழியுரையில் "பத்துடையடியவரிலே ப்ராரப்₃த₄மான ப₄க்தியோக₃ஸாலப₄த்வத்தை நிக₃மிக்கிறார்" என்பது ஆறாயிரப்படி. ஆறாம்பத்தில், "அகலகில்லேன்" என்னும் கடைசிப்பாசுரத்தின் உரையில், "உன் திருவடிகளை, அநந்யஶரணனான அடியேன் அநந்யப்ரயோஜநனாய்க்கொண்டு, பெரியபிராட்டியார் புருஷகாரமாக ஶரணம் புகுந்தேன்" என்பது ஆறாயிரப்படி. மற்ற வ்யாக்₂யானங்களும் இப்படியே உள்ளன. ஆகையால், ஆழ்வார் ப₄க₃வான் ஒருவனையே உபாயமாகக்கொண்ட ப்ரபத்திநிஷ்டர் என்பதும், அவ்வளவு பக்குவமில்லாத பிறர்க்கு,கீ₃தையில் கண்ணனைப்போலே 'ஸாத₄நப₄க்தியைப் பற்றியாவது பரமபுருஷனைப் பரமபத₃த்தில் பெற்று அநுப₄வியுங்கள்' என்று (1-2, 3) திருவாய்மொழிகளில் உபதே₃ஶிக்கிறார் என்பதுமே ஸகலாசார்யர்களின் திருவுள்ளம் என்று விளங்குகிறது. இவ்வர்த்த₂மே "வீடுமின்" ப்ரவேஶத்திலும், "சார்வே" ப்ரவேஶத்திலும் ஈட்டில் விரிவாக நிரூபிக்கப் பட்டது. கு₃ருமுக₂மாகக் கேளாமையாலே அஹோ ஈட்டையும், ஆறாயிரப்படியையும் சரியாகப் புரிந்து கொள்ளாமல் அவற்றினிடையே விரோத₄முள்ளதாக மயங்கு

இரூர். "நம்மாழ்வாரிடமிருக்கும் ப$_4$க்தி ஸ்வயம் ப்ரயோஜன ப$_4$க்தியே; அவர் ப்ரபத்திநிஷ்ட$_2$ரே; ஆயினும் அவ்வளவு மஹாவிஶ்வாஸமில்லாதார்க்கு அவர் வேதா$_3$ந்த விஹிதமான ஸாத$_4$நப$_4$க்தியை உபதே$_3$ஶிக்கிறார்" என்று மர்த்த$_2$ங்கள் பிள்ளானோடு, நம்பிள்ளையோடு வாசியற அனைவர்க்கும் உடன்பாடு என்பதை கு$_3$ருமுக$_2$மாக வ்யாக்$_2$யானங்களை முழுவதும் ஸேவித்தால்தான் விளங்கும். எல்லா ஆழ்வார்களுடைய பாசுரங்களையும், ரஹஸ்யங்களையும் நாத$_2$முனிகளுக்கு ஆழ்வாரே உபதே$_3$ஶித்தபடியால் அவரே ஓராண்வழி பரம்பரையில் ஆசார்யராகச் சேர்க்கப்பட்டதில் பொருந்தாமை ஒன்றுமில்லை. பாஞ்சராத்ரத்தை ஆழ்வார் மொழிபெயர்க்கவில்லையாகையால், அவர் வ்யூஹ மூர்த்திகளின் பெயரைச் சொல்லாததினாலும் குறையில்லை. எம்பெருமானை விஶேஷ்யமாகவும், பிராட்டியை விஶேஷணமாகவும் அறுதியிட்டிருந்த விஶிஷ்டாத்$_3$வைதியாகையாலே பிராட்டியைப் பற்றித் தனித்துப் பாடாததினாலும் குறையில்லை. "அகலகில்லேன்" பாசுரத்தில் த்$_3$வயார்த்த$_2$த்தை அநுஸந்தித்துப் பிராட்டியை ஆழ்வார் புருஷகாரமாகப் பற்றி சரணாக$_3$தி பண்ணியிருப்பது அஹோவிற்குக் கண்ணிருந்தும் புலப்படவில்லை. சரணாக$_3$தியை அதி$_4$காரி விஶேஷணமாகவேகொண்டு, ப$_4$க$_3$வானையே உபாயமாகக் கொண்டவராகையாலே, ஆழ்வார் 'சரணாக$_3$தி உபாயம்' என்று சொல்லாததினாலும் குறையில்லை. பாஞ்சராத்ர ஆக$_3$மத்தில் சொல்லப்பட்ட தலைசிறந்த ஶரணாக$_3$தி நிஷ்டை$_2$யையே தாம் உடையவராயிருப்பதை ஆழ்வார் பல பாசுரங்களில் காட்டியிருப்பது பாஞ்சராத்ர விரோதி$_4$யான அஹோவிற்குப் புலப்படாததில் வியப்பில்லை. ஆகையால், பாஞ்சராத்ரம், ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகள், அவற்றுக்கு உரையிட்ட (எம்பெருமானார் வழிவந்த) ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள் ஆகிய மூன்றுக்கும் அணுமாத்ரம் விரோத$_4$லேஶமுமில்லை என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். வைஷ்ணவ விரோதி$_4$யான அஹோவிற்கு ஒருபோதும் விளங்காது. பிற்பட்ட பன்னீராயிரப்படியை ஈடு, இருபத்திநாலாயிரப்படிகளுக்கு முற்பட்டதாக எழுதுவதிலிருந்து இவர்க்கு ஸம்ப்ரதா$_3$ய ஜ்ஞானமே அடி

யோடு இல்லை என விளங்குகிறது. எம்பெருமான் கடுங் கோபங்கொண்டு ஹிரண்யராவணாதிகளை அழித்ததாக ஆழ்வார் பல பாசுரங்களில் பாடியிருக்கையில், "பகவானைக் கருணைக் கடலாகவே" என்று பகவானுக்குக் கோபமே இல்லையென்றும் "அகலகில்லேன்" பாசுரத்தில் ஆழ்வார் பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றியிருக்கையில் 'புருஷ காரக்கொள்கை ஆழ்வார் கருத்துக்கு எதிரானது' என்றும் எழுதியிருப்பதிலிருந்து இவர்க்கு ஆழ்வார் பாசுரங்களில் பரிசயமே இல்லையென விளங்குகிறது. இத்தகையவர் வைண வத்தைப் பற்றி நூல் எழுத முன்வந்தது அதிஸாஹஸமே. (110)ருக்வேதமும் முதலான வேதங்களில் விஷ்ணுவைப்பற் றிப் பாடியிருக்கும் மந்திரங்களை அடியொற்றிச் சங்ககாலச் சான்றோர்களும், ஆழ்வார்களும் பாடியிருக்கிறார்கள். அதை அவர்களே தங்கள் நூல்களில் குறித்திருக்கிறார்கள். அப்படி யிருக்க, 'சங்ககாலப பரிபாடல்களே ஆழ்வார்களுக்கு தெய் வத்தைப் பற்றிப்பாட வழிவகுத்துக் கொடுத்தன" என்று எழுதுவது தவறு. "சடகோபர் பொதுநோக்கு" என்னும் தலைப்பில், காமகோடிபீடாதிபதி சொல்லிக்கொடுத்ததைக் கிளிப்பிள்ளைபோலே எழுதுகிறார். இதற்குப் பலமுறை பதில் எழுதிய பின்பும்,திருப்பித்திருப்பி அதையே எழுதுவது இவர் களுக்கு மனஸ்ஸாக்ஷியே இல்லை எனக்காட்டுகிறது. "பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே" "தாமோதரன் உருவாகிய சிவற்கும் திசைமுகற்கும் ஆமோதரமறிய எம்மானை" என்று பிரமருத்திரர்க்கு ஆத்மா வாகவும் தலைவனாகவும் இருப்பவன் திருமாலே என முழங்கி யிருக்க, ஆழ்வார் த்ரிமூர்த்திஸாம்யவாதமும் செய்வதாக வெட்கமில்லாமல் எழுதுகிறார். "அரியை அயனை அரனை" "சிவனாய் அயனாய்" என்று படித்த ஆழ்வார், "நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்" என்று அசே தனப்பொருள்களாகவும் படித்திருப்பதற்கு இவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பது உலகிற்குத் தெரியவேண்டும். "அரியை அரனை" முதலான பாசுரங்களை வேதாந்தங்களில் முழங்கப்படும் சரீரசரீரிபாவத்தைக் காட்டி மிக அழகாக நிர்வஹித்திருக்கும் ஆசாரியர்களுக்கு எந்தச் சிக்கலுமில்லை. பாசுரங்களிலுள்ள அசேதந பரமபுருஷ ஸாமாநாதிகரண்

யத்தையும், விஷ்ணுபாரம்யஶேஷங்களையும், ப்₃ரஹ்ம ருத்₃ரர்களுக்குத் தாழ்வை முழங்கும் இடங்களையும் நிர் வஹிக்க முடியாமல் தவிக்கும் காமகோடியும் அஹோவுமே மிகுந்த சிக்கலுக்கு உள்ளாகின்றனர். (113) மனம்போன படியெல்லாம் பேசும் காமகோடிக்குத் தன்னை விற்றுவிட்ட அஹோவே ஒரு ப்ரமாணத்திற்கும் கட்டுப்படாமல் மனம் போனபடி சுதந்திரமாக இந்நூலை எழுதியுள்ளார். ஆழ்வார்கள் எல்லாவிடத்திலும் ப்ரமாணங்களை அடியொற் றிப் பேசுகிறார்களேயொழிய எவ்விடத்திலும் சுதந்திர மாகப் பேசவில்லை. ஆக, ஆழ்வார்களை இகழ்ந்ததும் அந்யாய்யமானது என்று நிரூபிக்கப்பட்டது.

(7) ஆசாரியர்களை இகழ்தல்

(75) திருவரங்கக்கோயிலோடு இராமானுஜரை இணைப்பதற்கு வரலாறு சிறிதும் இடம் தரவில்லை. இராமாநுஜரின் பெருமையைத் திருவரங்க ஆலய நிர்வாகத்தோடு இணைத்துப் பேசுவது கற்பனையின் விசித்திரமேயாம். (121) ஆனால் ஏற்றத் தாழ்வுகளை ஒப்புக்கொண்டா லும் இதுவும் ஒருவழியில் பல தேவதை கொள்கையாகத்தான் நிற் கிறது. அதனால் ஒரே கடவுள்தான். பல கிடையாது என்று மத சீர்திருத்த ஆசார்யர்கள் கூற ஆரம்பித்தனர். பழங்கால கொள்கை களை மாற்றி புதிதாக ஒரே தேவதை கொள்கையை வற்புறுத்தினர். (177) இதிகாசப் புராணங்களில் ஒவ்வொரு நோக்கத்தோடு ஒவ்வொரு கதை அமைந்திருப்பதால் இவைகளைக்கொண்டு வைணவக் கருத்துக் களை விளக்க முடியவில்லை. ஆகவே ஆசாரியர்களுடைய காலத்தில் நடந்த அநேக சம்பவங்களைக் குருபரம்பரை என்ற நூலில் ஒன்று சேர்த்துப் புராணத்திற்குப் பதிலாக அதை வைத்துக்கொண்டு விட்டார்கள். (206, 207, 208) அஷ்டாக்ஷரத்தில் லக்ஷ்மியின் நேரான தொடர்பு இல்லாததனால், நேருக்கு நேராக லக்ஷ்மி சம்பந்தம் உடைய 'த்வயம்' என்ற மந்திரத்தில் முன் வாக்கியத்தி லும் ஸ்ரீ என்ற சொல்லைச் சேர்த்து அக்குறையை நீக்கிவிட்டார்கள்.... புருஷகாரம் என்ற கருத்தை அடிப்படையாகக்கொண்டு பல விளக் கங்கள் காணப்படுகின்றன. ஆனால் இந்த கொள்கை, இயற்கை, யுக்தி, லோகாநுபவம் இதையே அடிப்படையாகக் கொண்டதென்று வேதாந்த தேசிகர் கூறுகிறார். இதனால் மூலநூல்களில் இக்கருத்து இடம்பெறவில்லை என்று ஏற்படுகிறது. ஆனால் மணவாள மாமுனிகள் பாஞ்சராத்ர நூலை மேற்கோளாகக் காண்பிக்கிறார். (304) ஆழ்வார்க ளுடைய பாடல்களுக்குப் பிற்காலத்தில் உரை வரைந்த பேரறிஞர்கள் தம்காலத்து வைணவக் கருத்துக்களுக்கெல்லாம் அப்பாடல்களில் இடம் காட்டவேண்டும் என்ற எண்ணத்தால் பல வடமொழி நூற்

செய்திகளையும் ஆழ்வார்கள் பாடல்களின் கருத்துக்களாக வலிய அமைத்து, உரை செய்துள்ளனர். தமிழ் மொழி இலக்கணம், நிகண்டு, மொழி இலக்கியமரபு இவைகளைக்கொண்டே ஆழ்வார்களின் பாடல்களுக்கு விளக்கம் கூறவேண்டி இருக்க இதனைவிடுத்து வடமொழி வான்மீகி ராமாயணத்தை அடிப்படையாகக்கொண்டு விளக்கம் கூறுவதின் காரணம் புரியவில்லை. இவற்றைத் திவ்விய பிரபந்த உரை என்பதைவிட வைணவ சம்பிரதாயத்தை விரித்துக் கூறும் நூல் என்று கூறுவதே மிகவும் பொருத்தமானது.

ஸுதர்ஶனம் ஆசிரியரின் மறுப்பு

வைணவத்தையும் வைஷ்ணவர்களையும் இகழ்வதற்காகவே காமகோடியினால் தூண்டப்பட்டு இந்நூலை எழுதியிருக்கும் அஹோவினால் பற்பல விடங்களில் வைஷ்ணவாசார்யர்கள் அக்ரமமாக இகழப்பட்டிருப்பதை ஏற்கனவே காட்டி, அவற்றைத் தலையெடுக்க முடியாதபடி கண்டித்தோம். ஏற்கனவே எடுக்கப்படாத சில சில விடங்கள் மேலே அச்சிடப்பெற்றிருக்கின்றன. அவற்றைக் கண்டிப்போமினி. (25) இது கல்வெட்டுகளிலிருந்து தொகுத்தெழுதப்பெற்ற கோயிலொழுகு, ஆறாயிரப்படி குருபரம்பரை முதலான நூல்களுக்கும், திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களுக்கும் முரணானது. இவ்வாதாரங்களைப் பின்பற்றி, திருவரங்கர் செல்வம் முற்றும் திருத்தினவராக எம்பெருமானார் இன்றளவும் கொண்டாடப் படுகிறார். "ஸ்ரீமந் ஸ்ரீரங்கஶ்ரியம்...." "ராமாநுஜார்யதிவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்" என்று அநுஸந்திக்காத வைஷ்ணவன் இல்லை. இதைக்கூட மறுக்குமிவர் திருமண்காப்பை அழித்துவிட்டு. காமகோடியிடமிருந்து சாம்பலை வாங்கிப் பூசிக்கொண்டு விடலாம். (43) "பூதஸ்ய ஜாத: பதிரேக ஆஸீத்" "ஈஶதே தேவ ஏக:" "ஏகோ தேவா நாம் ப்ரபவ:" "திவ்யோ தேவ ஏகோ நாராயண:" "ஏகோ ஹவை நாராயண ஆஸீத்" "ஸ ஆத்மா அங்காந்யந்யா தேவதா:" முதலான நூற்றுக்கணக்கான வேதவேதாந்த வாக்யங்களில் ஒருதேவன் மற்ற எல்லா தெய்வங்களுக்கும் தலைவனாகவும், ஆத்மாவாகவும், நியாமகனாகவும், காரணனாகவும், ஸம்ஹாரகனாகவும் இருக்கிறான் என்று கோஷிக்கப் பட்டிருக்கையில், ஆயிரக்கணக்கான இதிஹாஸபுராண

பாஞ்சராத்ர வசனங்கள் இதை வலியுறுத்துகையில், ஒரு தெய்வக் கொள்கையை ஆசார்யர்கள் ஏதோ ஒரு காலத்தில் கூற ஆரம்பித்தனர் என்று எழுதும் இவர் ஒரு ப்ரமாணத்தையும் கணிசியாமலோ, அல்லது கணிசித்தும் ஆசார்யர்களை தூ₃ஷிக்கவேண்டும் என்னும் அபி₄ருசியினாலோ எழுதுகிறார் என்பது வெளிப்படை. (75) இதிஹாஸ புராணங்களால் விளக்கமுடியாத வைணவக் கருத்து எதுவுமே இல்லையாகையால், ஆசார்யர்கள் பெரும்பாலும் அவற்றைக்கொண்டே விளக்க நூல்களை அருளியுள்ளனர். குருபரம்பரைக் கதைகளை ஆசார்யர்கள் ஒரு சில இடங்களிலேயே எடுத்துள்ளனர். அஹோரவின் காமாலைக்கண்ணுக்கு எல்லாம் விபரீதமாகவே படுகையால் புராணத்திற்கு பதிலாக கு₃ருபரம்பரையை வைத்துக்கொண்டு விட்டார்கள் என்று எழுதுகிறார். 'பெரியபுராணம்' என்று சைவர்கள் செய்ததை வைணவத்தின்மேல் ஏறிடுகிறார். (88) "த்₃வய மந்திரம்' கட₂வல்லியில் இருப்பது என்று ஆசார்யர்கள் அருளியுள்ளனர். த்₂வயோபனிஷத்திலும் காணப்படுகிறது. அப்படியிருக்க, எதையும் கற்பிக்கும் ஸ்வபா₄வமுள்ளவருடன் சேர்க்கையாலே, ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களிடம் அத்தன்மையைக் காண்கிறார். வேதா₃ந்ததே₃ஶிகரும் புருஷகாரக்கொள்கை பல ப்ரமாணங்களிலிருந்து ஸித்₃தி₄ப்பதாகப் பலவிடங்களில் காட்டியிருக்க, 'மூல நூல்களில் இது இடம் பெறவில்லை' என்று அவர் கருதுவதாக எழுதுவது பெரும்பொய். 'மாமுனிகள் பாஞ்சராத்ர நூலை மேற்கோளாகக் காண்பிக்கிறார்' என்று எழுதுகிறவர் அப்ரமாணங்கள் வேதா₃ந்த தே₃ஶிகர் காலத்திலிருந்த ஆசார்யர்களாலேயே கையாளப்பட்டவை என்பதை அறியகில்லாரந்தோ! (112) 'மஹாமஹோபாத்தியாய' என்று அரசினராலும், 'தா₃க்ஷிணாத்யகலாநிதி₄' என்று காமகோடியாலும் பட்டமளிக்கப்பட்ட 'தமிழ்த்தாத்தா' உ. வே. சாமிநாதய்யர் முதலான நடுநிலையாளர்கள் தி₃வ்யப்ரப₃ந்த₄ வ்யாக்யானங்களைப் புகழ்ந்திருக்க, இன்றளவும் பல தமிழ்ப் புலவர்கள் அவற்றைக் கொண்டாடி ஈடுபடாநிற்க, தமிழில் அரிச்சுவடிகூடப் படிக்காதவராய், ஆயிரக்கணக்கான தமிழிலக்கணத் தவறுகளுள்ள இவ்வபத்த நூலை அச்சிடவும்

அரைகுறைத் தமிழ்ப்பண்டிதர்களின் உதவியை நாடிய வரான இவ்வஹோ தென்மொழி வடமொழி நூல்களைக் கரைகண்டவர்கள் அருளிய தி₃வ்யப்ரப₃ந்த₄வ்யாக்யானங் களை இகழ்வது கேவலம் த்₃வேஷத்தாலேயே என நடுநிலை யாளர்க்கு நன்கு விளங்கும். வடமொழியிலுள்ள வேத சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட அர்த்த₂ங்களே தி₃வ்யப்ர ப₃ந்த₄ங்களிலும் காணப்படுகின்றன என்று வ்யாக்₂யா தாக்களான பேராசிரியர்கள் நிலைநாட்டியிருப்பது – ஒரு ப்ர மாணத்திலும். ஒரு மொழியிலும் சரியான அறிவில்லாத இவ்வஹோவிற்கு ஒருபோதும் விளங்காது. ஆக. ஆசார்யர் களை இகழ்ந்திருப்பதும் துவேஷத்தினுலேயே என நிலை நாட்டப்பட்டது.

மற்றும் பல தவருன கருத்துக்கள்

இதுவரையில் அஹோ நூலிலுள்ள பல தவருன கருத்துக்களை எடுத்துக்காட்டிக் கண்டித்தோம். இவர்க்கு எந்தப் ப்ரமாண நூலிலும் சரியான அறிவில்லை என்பதைக் காட்டினும். மற்றும் சிலவிடங்களைக்காட்டி இதை முதலிப் போம் இனி. பக்கம் 209-ல் 'பூ₄மியும் நீளா தே₃வியும் லக்ஷ்மியின் அவதாரம் தான்'' என்று வேதா₃ந்ததே₃ஶிகர் கருதுவதாக அஹோ எழுதுவதிலிருந்து இவர்க்கு தே₃ஶிக க்₃ரந்த₂ங்களில் அடியோடு பரிசயமில்லை என விளங்குகிறது. பக்கம் 142ல் பரமதப₄ங்க₃ம் என்ற தே₃ஶிக க்₃ரந்த₂த்தின் பெயரை பரமபக₃ப₄ங்க₃ம் என்று எடுக்கிருர். இதனுல் இவர்க்கு தே₃ஶிக க்₃ரந்த₂ங்களின் பெயர் கூடச் சரியாகத் தெரியாது என விளங்குகிறது. 247-ம் பக்கத்தில் பன்னீரா யிரப்படியை இருபத்து நாலாயிரப்படிக்கும், முப்பத்தாரு யிரப்படிக்கும் ப்ராசீனமானதாக எழுதுகிருர். அவற்றுக்கு முன் அச்சிடப்பட்டிருப்பதால் அவற்றிற்கு முற்பட்டது என மயங்கினுர் என்பது தெளிவு. பக்கம் 256ல் 'வடக் குத் திருவீதிப்பிள்ளையின் சீடரான பெரியவாச்சான பிள்ளை'' என்று எழுதுகிருர்! ஆகையால் இவ்வஹோ கு₃ருமுக₂மாக எதையும் கேட்டறியாமல் ஆசார்ய க்₃ரந் த₂ங்களை ஏடுபார்த்து அரைகுறை அறிவுபெற்று நூல்

எழுதத் தொடங்கியவர் என்று விளங்குகிறது. "ஸ்வரூபம் என்பது பகவானுடைய வடிவத்தைக்குறிக்கும். குணம் என்பது பகவானுடைய இயற்கையைக் குறிக்கும். ரூபம் என்று நல்ல குணங்களைக் குறிக்கும். விபூதி என்பது அவனுடைய மாண்பைக்குறிக்கும்" என்று பக்கம் 275ல் எழுதியிருப்பதிலிருந்து விஶிஷ்டாத்₃வைத ஸ்ரீவைஷ்ணவ ஸித்₃த₄ாந்தத்தில் இவரது அறிவு ஶூந்யம் என விளங்குகிறது. பக்கம் 276ல் பரரூபத்தையும அவதாரம் என எழுதுவது இதை வலியுறுத்துகிறது. பக்கம்-292ல் கைவல்யத்தை விளக்கியிருப்பது — உப₄யஸம்ப்ரதா₃யத்திலும் இவரறிவு சுத்த ஶூன்யம் எனக்காட்டுகிறது. "தீயிற் பொலிகின்ற" என்ற பாசுரத்திற்குப் பக்கம் 313ல் பொருளுரைத்திருப்பது — ஆழ்வார்கள் பாசுரங்களுக்கும் அவப்பொருள்களையே கூறக்கற்றவரிவர் எனக்காட்டுகிறது. 322-ம் பக்கத்தில் வைஷ்ணவமதத்தில் துரீயப்₃ரஹ்மவாத₃ம் கூறப்படுகிறது என்று கூறுவதன்மூலம் வைஷ்ணவ மதத்தின் அடிப்படையே அறியாதவரிவர் என விளங்குகிறது. இத்தகையவர் வைணவத்தைப்பற்றி நூலெழுதமுற்பட்டு. வைணவத்தைத்தாறுமாறாகத் தாக்கியெழுத. அதை ஒரு விஷ்ணுதே₃வஸ்தா₂னத்தார் வெளியிட்டிருப்பது நமது நாட்டிலேயே நடக்கக்கூடிய உலக அதிசயங்களில் ஒன்றாகும்!!.

முடிவுரை

இவ்வண்ணமாக வைணவத்தின் அடிப்படையான உருவ வழிபாட்டையும். ஆலயங்களையும். ஆகம வழிபாட்டு முறைகளையும். வைணவத்தின் உயிர் நாடியான திருமாலையும். திருமகளையும், ஆழ்வார்களையும், ஆசாரியர்களையும் பலவாறு இகழ்ந்திருக்கும் இந்நூல் பாஞ்சராத்ர ஆகம முறைப்படி வழிபாடு நடக்கும் வைஷ்ணவ ஆலயமான திருக்குடந்தை சார்ங்கபாணி ஸ்வாமி தேவஸ்தானத்தினரால் வெளியிடப் பட்டிருப்பது எவ்வகையிலும் நியாயமற்றது. இதன் தன்மையை உணராமல் வெளியிட்டு விட்ட பின்பு, இனியாவது இதன் தன்மையை உணர்ந்து இந்நூலின் பிரசாரத்தை உடனடியாகத் தடை செய்யவேண்டும் என்று வைணவ உலகம் அறநிலைய அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறது.

அநுபந்தம்

ஸ்ரீரங்கநாத₂ பாது₃கா பத்திரிகையின் க₂ண்ட₃நம்

[ஆனந்த சித்திரையிதழில் வெளிவந்தது.]

வரலாற்றில் பிறந்த வைணவம்:-

என்கிற நூல் நம்முடைய பார்வைக்கு வந்தது. இந்நூல் விஷயமாகப் பலர் பலவாறாகப் பேசுகிறார்கள். ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமதாண்டவன் திருமலைக்கு எழுந்தருளும்போது ஸ்ரீமான் அனந்தசயனமய்யங்கார் (முன்னாள் லோக்ஸபைத்தலைவர் மாஜி பீஹார் கவர்னர்) இந்நூலைப் பற்றிப் பேசி மிகவும் வருத்தமுற்றார்.

அதன்பின் ஸ்ரீ மதாண்டவன் இந்நூலை ஆமூலாக்ரம் வாசிக்கும்படி நேர்ந்தது. பங்களூரிலும் பல வித்வான்கள் வாசித்தார்கள். இந்நூலை இயற்றியவர் திருக்குடந்தை ராமாநுஜ தாத்தாச்சாரியர் என்பவர். இவர் உயர்குலத்தில் பிறந்தவர். ஸ்ரீ விசிஷ்டாத்வைத மத ப்ரவர்த்தகரான ஸ்ரீமந்நாதமுனிகள், ஸ்ரீ ஆளவந்தார், பெரிய திருமலை நம்பிகள் முதலான பரமாசார்யர்கள் குலத்தில் தோன்றியவர். இவருடைய வம்சஸ்தர்களுக்கு உபயஸிம்ஹாஸநாதிபதிகள் என்று பிரஸித்தி. ஸ்ரீபாஷ்யம், பகவத்விஷயம் என்கிற இரண்டு கிரந்தங்களுக்கு உபதேஷ்டாக்களாக ஸ்ரீராமாநுஜரால் நியமிக்கப்பட்டவர்களுடைய வம்சம். இவருடைய பெரிய தகப்பனார் பட்டு ஸ்வாமி என்று மிகவும் பிரஸித்தர். ஞாநாநுஷ்டான ஸம்பந்நர். இவருடைய தகப்பனார் சுருதி, ஸ்மிருதி, மீமாம்ஸா, ச்ரௌதம் ஸ்ரீபாஷ்யம் முதலான சாஸ்திரங்களில் நிகரற்ற பாண்டித்யமுள்ளவர். யாகாதிகள் அநுஷ்டானம் பண்ணி மிகப் பிரஸித்தரானவர்.

இந்த அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாத்தாச்சாரியரும் வேதம் தர்மசாஸ்த்ரம், மீமாம்ஸை, இதிஹாஸ புராணங்கள் முதலானவைகளில் சிறந்த பாண்டித்யம் பெற்றவர். இவர் இந்நூலை எழுதினவராக இப்புத்தகத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது, இப்புத்தகத்தில் வாக்யரசனைகளைப் பார்த்தால் இவர் எழுதியதாகத் தெரியவில்லை. ஆகிலும் இவர்

எழுதியதாக அச்சிடப்பட்டதைத் தான் நாம் நம்பவேண்டும். இந்நூல் முற்றிலும் வைதிக மதத்திற்கும் இந்து மதத்திற்கும் பூர்வர்களுடைய அநுஷ்டானத்திற்கும் விசேஷமாக அநாதி ஸித்தமான வைதிகமான விசிஷ்டாத்வைத மதத்திற்கும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்கும் விருத்தங்களான அம்சங்களால் நிறைந்திருக்கிறது. ஆனல் இவர் இந்நூலை எழுதியிருக்கமாட்டார். ஆனல் ஸ்ரீமத் ராமாயணத்தில் ஜாபாலி நாஸ்திகவாதம் பேசியதுபோல் இவரும் ஏதோ மனதில் வைத்துக்கொண்டுள்ள காரணத்தால் எழுதினரோ என்னவோ தெரியவில்லை. எப்படி சிந்தித்துப் பார்த்தாலும் இவர் இந்நூலை எழுதியிருக்கவேண்டாம்.

மேலும் இந்நூலை திருக்குடந்தை ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமி தேவஸ்தானத்தில் வெளியிட்டதாகத் தெரிகிறது. ஸம்பிரதாயத்தில் மிகவும் சிறந்ததாகவும், 108 திருப்பதிகளிலும் மிகவும் உயர்ந்ததாயும் மறைந்துபோன நாலாயிரதிவ்ய பிரபந்தத்தை மீண்டும் பிரகாசிப்பித்தவராயும், திராவிட ச்ருதி தர்சகர் என்று பிருதம் வாய்ந்தவரும் நம்மாழ்வாரால் அர்ச்சிராதி மார்க்கத்தைப் பேசும்போது நினைவுக்குவந்து பாடப்பெற்றவரும், திருமழிசையாழ்வாருக்கு அர்ச்சா ஸமாதியைக் குலைத்துக்கொண்டு எழுந்திருந்து பேசவந்தவரும், சேஷிசேஷபாவத்தை மறந்து திருமழிசையாழ்வார் அமுது செய்தபின் அமுது செய்தவரும் திருமங்கையாழ்வாருக்கு நாக்கொட்டின போதெல்லாம் கர்ப்பூரமும் கண்ட சர்க்கரையாயிருந்தவரும், திருமங்கையாழ்வாருடைய ஆறு பிரபந்தங்களாலும் பாடல் பெற்றவருமான ஸ்ரீஆராவமுதாழ்வான் என்கிற ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி நித்ய வாஸம் பண்ணுகிற தேவஸ்தானத்தில் இப்புத்தகம் வெளியிடப்பட்டது மிகவும் வருத்தப்படக்கூடிய விஷயம். பங்களூரில் ஆஸ்திகர்களான பல வித்வான்களுடைய அபிப்ராயமிது.

—கைங்கர்யம் ரங்காச்சாரி.

அக்நிஹோத்ரியும் வைணவமும்

அநுபந்தம்-2

பிரசுரம்-2
27—4—1974.

தார்மிக ஹிந்து மிஷன்,
சென்னை-15.

அக்நிஹோத்ரம் ஸ்ரீ. உப. வே. ராமானுஜ தாதாசார்யர் வேத, வேதாந்த, பாரங்கதரா, சாஸ்த்ரீய தர்ம விசாரசீலரா ?

இந்த அக்நிஹோத்ரம் ஸ்ரீ. உப. வே. ராமானுஜ தாதாசார்யர் ஸ்வாமியால் கும்பகோணம் (திருக்குடந்தை) ஸ்ரீ சாரங்கபாணிப் பெருமாள் தேவஸ்தான ஆதரவிலும், செலவிலும் எழுதப்பட்டுப் பிரசுரமாயிருக்கும் ''வரலாற்றில் பிறந்த வைணவம்'' என்ற வம்பு நூலைப் பற்றி திருச்சி ''ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்'' என்ற மாதப் பத்திரிகை மூலம் (32-வது மறுப்புப் பிரசுரமாக) விமர்சனம் செய்திருக்கும் ஸ்ரீரங்கம் கோயில் வேதபாராயண ஸ்வாமி ஸ்ரீ. உப வே. A. ராமஸ்வாமி அய்யங்கார், அதைக் 'கலங்கிய சிந்தையில் பிறந்த நூல்' என்று வர்ணித்திருக்கிறார். ஆனால், தமது கட்டுரையின் முடிவில் ''இந்த ஸ்வாமி 'திடீரென்று நாராயணபதம் ப்ரஸித்திபெற்றது ஆராய்ச்சிக்குரிய விஷயம்' என்று எழுதுவது யாரை ஏமாற்றவோ தெரியவில்லை'' என்றும் எழுதிவிட்டுப் பிறகு, ''முடிவாக இந்நூலை ஆராய்ச்சி என்னும் பெயரில் ஒரு ஸ்ரீ வைஷ்ணவர்-அதிலும் ஸாமான்யரன்று, ஒரு வேதம் ஸலக்ஷணம், மூன்று வேதபாஷ்யம் நன்றாகப் பார்த்துக் கற்று அறிந்தவர், ஸ்ரீமந்நாதமுநிகள் திருவம்சத்தில் பிறந்தவர் என்று சொல்லப்படும் ஒரு ஸ்வாமி—எழுதினார் என்று நினைக்கும்பொழுது நம்முடைய தௌர்ப்பாக்கியத்தையே நொந்து கொள்ள வேண்டியிருக்கிறது. எம்பெருமான்தான் இவரைப் பொறுத்தருளவேண்டும்'' என்றும் எழுதியிருக்கிறார்.

''கலங்கிய சிந்தையில் பிறந்த நூல்'' இது, என்று தலைப்பில் வர்ணித்துவிட்டு, 'மூன்று வேதபாஷ்யம் நன்றாகப் பார்த்துக் கற்று அறிந்தவர் இவர்' என்று கலங்கிய சிந்தையை உடைய இந்தத் தாத்தாசார்ய ஸ்வாமியை எப்படிப் புகழவும் முடிந்தது என்பது நமக்குச் சிறிதும் விளங்கவில்லை. அதிலும் இவர் 'ஸாமாந்ய ஸ்ரீ வைஷ்ணவர் அன்று' என்று கூட இவரால் வர்ணிக்கப்பட்டிருப்பதும் நம் சிந்தையைக்கூட சிறிது கலக்கத்தில் இறக்கியிருப்பதாகவே நாமும் பயப்படவேண்டியதாயிருக்கிறது. 'மூன்று வேதபாஷ்யங்களை

நன்ருகப் பார்த்துக் கற்றறிந்தவர் இவர்' என்று இந்த ஸ்ரீரங்கம் கோயில் வேதபாராயண ஸ்வாமி அறிவித்திருப்பதை வரலாற்று மூலம் மறுக்கக்கூடிய முழுவிவரம் நம்மிடமில்லை. ஆகையால், மிகவும் க்ருபை செய்து இவர், இந்தத் தாதாசார்யர் ஸ்வாமி எவரிடமிருந்து இந்த மூன்று வேதபாஷ்யங்களையும் நன்ருகக் கற்றுப் பிறகு பார்த்துத் தெளிந்து உறுதிப்பட்டார் என்பதை, இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சநப் பத்திரிகை மூலமே பஹிரங்கமாக வெளியிட்டால் மிகவும் உபகாரமாயிருக்கும் என்று நாம் நினைக்கின்ருேம் ஏனென்ருல், இவருக்குப் பாடம் சொன்ன பெரியவர்கள் இப்படித்தான் இவருக்கு விளக்கம் தந்தார்களா, அல்லது அவர்களுடைய புத்திப்போக்குக்கு மேல் இவருடைய தனிரக மூளை இவ்வாறு ஒரு விமர்சனத்தைச் செய்ய முனைந்ததா என்றுமுள்ள ஒருவித நிச்சயமான முழு முடிவை நாம் செய்து கொள்ள இயலும்.

ஆனுல், 'திடீரென்று நாராயணபதம் பிரஸித்திபெற்றது ஆராய்ச்சிக்குரிய விஷயம்' என்று இவர் குறிப்பிட்டிருப்பதைக் கவனித்தால், மனுஸ்ம்ருதியைக்கூட ஸ்வப்நத்திலும் கண்டிராத இவர், ஒரு வேதபாஷ்யத்தைக்கூடப் பார்த்திருக்க முடியாது என்றுதான் உறுதியாகக் கூறவேண்டி வருகிறது. மேலும் இவருடைய (மூல) நூலின் 15-வது பக்கத்தில் 'நாராயணு என்னும் நாமம்' என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு வரைந்திருப்பதையும் சேர்த்துக் கவனித்தால், இவர் வேத அடிப்படையிலேயே 'ஞான சூன்யர்', 'சாஸ்த்ரீய தர்ம விசாரசக்தியே அடியோடு அற்றவர்' என்றுதான் சொல்ல வேண்டிவரும். இவர் இத்தலைப்பின் அடியில் குறிப்பிட்டிருப்பது;

"தெய்வத்திற்குப் பலபல பெயரிட்டு பலபல முறையில் வழிபாடு கூறும் வேதத்திலிருந்து, 'விஷ்ணுவே ஒரே கடவுள்' என்று அறுதியிடும் வைணவம் எப்படித் தோன்றியிருத்தல் கூடும் என்ற ஆராய்ச்சி தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. விஷ்ணு என்ற சொல்லினை அடிப்படையாகக்கொண்டு அமைத்து வைணவம் பரம்பொருளின் பெயராக விஷ்ணு என்பதனை முக்கியமாகக் கொள்ளாமல், 'நாராயணன்' என்ற பெயரையே சிறப்பாகக் குறிப்பிடுகிறது" (என்று)

முதல்முதலாக, 'விஷ்ணு' என்பதும், 'நாராயணன்' என்பதும் காரணமோ, அடிப்படைக் கருத்தோ இல்லாமல், (உலகில் வழங்கப்படும் பல நாமங்கள்) வெறும் அடையாளப் பெயர்கள் என்று இவர் நினைத்திருப்பதை நோக்கும்பொழுது, வேதபாஷ்ய வாஸனையையோ. அவைகள் சம்பந்தப்பட்ட வேறு நூற்களின் அறிவையோ, அவை

களின் உட்கருத்துக்களை விளக்கியிருக்கும் வேறு பல ஸம்ப்ரதாயப் பெரியோர்களின் நற்பழக்கங்களையோ இவர் அடியோடு பெற்றிருக்க முடியாதவர், வெறும் கர்வ மனப்பான்மைகொண்டு ஆங்கிலேயர்களின் விஷம நூற்களின் அடிப்படையில் ஊறின வரட்டு விஷமப் பிரசார ஆசைகொண்ட பித்தர் இவர், என்றுதான் மிக்க மனவருத்தத்துடன் சொல்லவேண்டிவரும். தமது சொற்பொழிவுகளிலும் கட்டுரைகளிலும், சில ஆங்கிலேய வம்பர்களின் நூற்களிலிருந்து ஒன்றிரண்டு மேற்கோள்களைக் குறிப்பிட்டுக்கொண்டும், ஆங்கிலமறியாத பல வைதிக சிஷ்டர்களைப் பயமுறுத்திக்கொண்டும் விளங்கி வருகிறவர் இவர், என்பது ஏற்கனவே நமக்குத் தெரிந்த விஷயம். ஆகையால், ஸ்ரீரங்கம் கோயில் வேதபாராயண ஸ்ரீ உப. வே. A. ராமஸ்வாமி அய்யங்கார் மாதிரி இவருடைய வேத வேதாந்த ஞானத்தைப் பற்றியோ, அவைகள் சம்பந்தப்பட்ட இவருடைய கருத்துக்கள் விஷயமான விசாரசீலதையைப் பற்றியோ எவ்விதத் தவறுன அபிப்ராயமும் நம்மிடம் கிடையாது. அதிலும் இவருடைய இந்த வம்பு நூலைக் கவனித்தபின், நம் பழைய அபிப்ராயமே உறுதிப்படுகிறதே ஒழிய, அதை மாற்றிக்கொள்ளவேண்டிய அவசிய நிலைமை எதுவும் புதிதாக நம்மிடம் முளைத்துவிடவில்லை என்றுதான் நாம் கூறுவோம்.

பொதுவாகப் பல பேச்சாளர்களும், 'ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்' பத்திரிகை மூலம் தங்களுடைய கண்டனக் கருத்துக்களை அறிவித்துவரும் பல கட்டுரையாளர்களும் 'நாராயண' பதமோ, 'விஷ்ணு' வென்ற பதமோ மிகப் பழைய 'ரிக்வேத'த்திலே காணப்படுவதாகத் தெரிவித்துவரும் தோரணையும்கூட நமக்குச் சற்று பிடிக்காமல்தான் இருக்கிறது. ஏனென்றுல் அப்பதங்கள், ஸ்ரீ. உப. வே. ராமாநுஜ தாதாசார்யர், து. க. ஜகந்நாதாசார்யர் என்பனபோன்ற, வெறும் அடையான மாறுதலுக்காக ஏற்பட்ட அர்த்தமற்ற, கருத்தற்ற பெயர்களாக மதித்துப் பேசுவதுபோல் நினைக்கக்கூடியதாக அது ஆகிறது. 'நாராயணன்', 'விஷ்ணு' என்ற சொற்கள் அடிப்படைக் கருத்துக்களற்ற வெறும் அடையாளப் பெயர்களுமல்ல, அடையாள வேற்றுமைகளைக் குறிப்பிடுகிற (வேறு எவர்களாலும் இடப்பட்ட) பதங்களுமல்ல, நாமகரணங்களுமல்ல. பெரியோர்கள் தந்திருக்கும் விளக்கங்களை நன்கு பொறுப்புடன் கவனித்தால், இந்த ஸ்ரீ.உப.வே. அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசார்யர் ஸ்வாமி வேத, வேதாந்த பாஷ்யங்களின் ஞானம், அவைகளைச் சார்ந்த இதர மத ஆராய்ச்சி நூல்களின் சம்பந்தம், பரம்பரையாகத் தொடர்ந்து வந்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய சிஷ்டர்களின் ஸஹவாஸம் எதுவுமே

அடியோடு இல்லாத ஒரு பெரும் தான்றோன்றி இவர், அநாதியான ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் துரதிருஷ்ட காலவசமாகத் தோன்றியிருக்கும் கலி மஹாபுருஷனின் புது உருவம் இவர், என்றுதான் மிக்க மன வேதனையுடன் நம்மை நினைக்கவும், வெளியிட்டுச் சொல்லவும் செய்யும்.

'விஷ்ணு:' (**विष्णुः**) 'நாராயண:' (**नारायणः**) இரண்டுமே நிரம்ப அர்த்தமுள்ள காரணப்பெயர்கள்; வெறும் ஆள் வேற்றுமைக்காக மிகச் சாதாரண ரீதியில் உலகில் வழங்கப்படும் பெயர்களைப்போல் அல்ல என்பதை நிரூபிக்க சில மேற்கோள்கள் இங்கு குறிப்பிடப்படுகின்றன:

"நாராயண:' (**नारायणः**) என்ற பதம் 'மனுஸ்ம்ருதி'யில் விளக்கப்பட்டிருப்பது:

आपो नारा इति प्रोक्ताः आपो नै नरसूनवः।
ता यदस्यायनं पूर्वं तेन नारायणः स्मृतः॥

(அத்யாயம்-1 — ச்லோகம்-10)

இந்த 'மனுஸ்ம்ருதி'யின் மிகப் பிரஸித்த உரையாசிரியரான ஸ்ரீமத் குல்லூகபட்டர் (**श्रीमत्कुल्लूकभट्टः**) 'மந்வர்த்தமுக்தாவளீ' (**मन्वर्थ-मुक्तावली**) என்ற மிகச் சிறந்த விளக்கஉரை (வ்யாக்யான) மூலம், இந்த ச்லோகத்தைப்பற்றிய முன் விளக்க அறிவிப்பில் "**इदानीमागमप्रसिद्धनारायणशब्दार्थनिर्वचनेन उक्तमेवार्थं द्रढयति**" என்று கூறிவிட்டுப் பிறகு, இந்த 'நாராயண' பத தாத்பர்யத்தை வெகு விரிவாகவே அடியில் குறிப்பிடப்படுகிறவண்ணம் அறிவித்திருக்கிறார்:

"**आपो नाराशब्देनोच्यन्ते। अप्सु नाराशब्दस्याप्रसिद्धेस्तदर्थमाह-यतस्ता नराख्यस्य परमात्मनः सूनवोऽपत्यानि। 'तस्येदम्' इत्यण्प्रत्ययः। यद्यपि अणि कृते ङीप्प्रत्ययः प्राप्तः, तथापि छान्दसलक्षणैरपि स्मृतिषु व्यवहारात् 'सर्वे विधयश्छन्दसि विकल्प्यन्ते' इति पाक्षिको ङीप्प्रत्ययः। तस्याभावपक्षे सामान्यलक्षणप्राप्ते टापि कृते नारा इति रूपसिद्धिः। आपोऽस्य परमात्मनो ब्रह्मरूपेणावस्थितस्य पूर्वमयनमाश्रय इत्यसौ नारायण इत्यागमेष्वाम्नातः। गोविन्दराजेन तु आपो नरा इति पठितं व्याख्यातं च। नरायण इति प्राप्ते 'अन्येषामपि दृश्यते' इति दीर्घत्वेन नारायण इति रूपम्। अन्ये त्वापो नारा इति पठन्ति॥ १०॥**

'நரர்கள்' என்றோ, 'நாரர்கள்' என்றோ, 'மனிதர்கள்' என்றோ, 'ஜலம்' என்றோ, 'ஞானம்' என்றோ, எவ்வகையில்

(नाराः) 'நாரா:' என்ற பதம் விளக்கப்பட்டபோதிலும், அத்தனைக்கும் மூலகாரணமாக, உற்பத்தி ஸ்தானமாக இருக்கிற இந்த புருஷன் இந்த 'நாராயண' சப்தத்தினால் (சொல்லினால்) குறிப்பிடப்படுகிறான் என்பது மட்டும் எல்லோராலும் நிராக்ஷேபமாக ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயம். மிகப் பொருத்தமுள்ள கருத்துரையுமாகும். 'ஸத்', 'அஸத்' என்ற எல்லாவற்றிற்கும் ஹ்ருதயகோசமாக, அடிப்படை இருப்பிடமாக, உற்பத்தி ஸ்தானமாக இருக்கும் இந்தப் புருஷன் 'ப்ரஹ்ம' பதத்தினாலும் அழைக்கப்படுகிறான் என்று அடுத்த 11-வது ச்லோக மூலம் சந்தேகமற அந்த 'மனு'வே தெரிவித்திருக்கிறார். அந்த 11-வது ச்லோகம் பின்வருமாறு;

यत्तत्कारणमव्यक्तं नित्यं सदसदात्मकम्।
तद्विसृष्टः स पुरुषो लोके ब्रह्मेति कीर्त्यते॥ ११ ॥

தமது 'நாமலிங்காநுசாஸநம்' (नामलिङ्गानुशासनं) என்ற நூலில் 'ஸ்ரீஅமரஸிம்ஹன்', ஒரே ஒரு வ்யக்தியே (புருஷனே) பல பெயர்களாலே அழைக்கப்படுகிறான் என்று நிரூபிக்கும் வண்ணம் நன்கு அப்படிப்பட்ட பல பதங்களைச் சேர்த்து, பின்வருமாறு கோர்த்திருக்கிறார் :

"विष्णुः नारायणः कृष्णो वैकुण्ठो विष्टरश्रवाः..."என்று 'ஸ்வர்க்க' வர்க்கத்தில் (18—22 முடிய) தொகுத்திருக்கிறார்.

"நாராயணன்" என்று சொன்னாலும், "விஷ்ணு" என்று அழைத்தாலும் "ப்ரஹ்மம்" என்று வேறு சொல்லால் குறிப்பிட்டாலும் எல்லாம் ஒருவரையே (ஒருபுருஷனையே) குறிப்பிடுகிறது என்றும், வேறு வேறு காரணங்களினாலும், சந்தர்ப்பங்களினாலும் அத்தனை வார்த்தைகளும் அர்த்தமுள்ளவைகளேயாகுமென்றும், அவைகள் எல்லாம் ஒருவரையே காண்பிக்குமென்றும் அந்த அமரகோசத்தின் கருத்து.

'ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம'த்தில் 'நாராயண' பதத்திற்கு 'பாஷ்யம்' (விரிவுரை) எழுதுகையில் ஆதி ஸ்ரீசங்கராசார்யர் தமது கருத்துக்கு ஆதாரமாக இதே 'மனு' வசனத்தை எடுத்துக் காண்பித்திருக்கிறார். பின்வருமாறு வேறு பல விளக்கங்களையும் எழுதி அவைகளுக்கு மூலமான பல நூற்களின் வாக்கியங்களையும் அறிவித்திருக்கிறார் :

नर आत्मा, ततो जातान्याकाशादीनि नाराणि कार्याणि तानि अयं कारणात्मना व्याप्नोति, अतश्च तान्ययनमस्येति नारायणः।

'यच्च किञ्चिज्जगत्सर्वं दृश्यते श्रूयतेऽपि वा।
अन्तर्बहिश्च तत्सर्वं व्याप्य नारायणःस्थितः॥'—इति मन्त्रवर्णात्।
(ना. उ. १३। १-२॥)

'नराज्जातानि तत्त्वानि नाराणीति ततो विदुः।
तान्येव चायनं तस्य तेन नारायणस्स्मृतः।'—इति महाभारते।

नाराणां जीवानामयनत्वात्प्रलय इति वा नारायणः, 'यत्प्रयन्त्यभिसंविशन्ति' (तै. उ. ३ : १) इति श्रुतेः। 'नाराणामयनं यस्मात्तस्मान्नारायणः स्मृतः' इति ब्रह्मवैवर्तात्।

'நாராயண பதம் திடீரென்று பிரஸித்தி பெற்றது ஆராய்ச்சிக்குரிய விஷயம்' என்றும், 'விஷ்ணு' பதம் முக்கியமாகக் கொள்ளப்படாமல் 'நாராயணன்' என்ற பெயரே சிறப்பாக (நவீனமாக)க் குறிப்பிடப்படுகிறது' என்றும் எழுதியிருக்கும் ஸ்ரீ ராமாநுஜ தாதாசார்யருக்கு மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் 'மனு' 'ஆதி ஸ்ரீ சங்கரர்' முதலிய பெரியோர்களுடைய வாக்கியங்களைக் கவனிக்க (ஸாவகாசம்) நேரவில்லை போலும்! கீதா பாஷ்ய முகவுரையிலும், அதன் பல ச்லோக விளக்கங்களிலும் அதே ஆதிசங்கரரால் கூறப்பட்டிருப்பவைகள் இன்னும் பல கீழே பிரசுரிக்கப்படுகின்றன. அவைகளையும் ஊன்றி கவனிப்பவர்களுக்கு ஸ்ரீராமாநுஜ தாதாசார்யருடைய வரலாறு விவரங்கள் எவ்வளவு தூரம் மதிக்கத் தகுந்தவைகள் என்பதும், எல்லா வேத பாஷ்யங்களையும் இவர் நன்குகப் பார்த்தவர் என்று ஸ்ரீரங்கம் வேதபாராயண ஸ்வாமி ப்ரமிப்பது சிறிதாவது அர்த்தமுள்ளதாக ஆகக்கூடியதாயிருக்கிறதா என்பதும், மிகமிகத் தெளிவாகவே நிரூபணமாகும் என்பது நம் அபிப்ராயம்.

'கீதாபாஷ்ய' முகவுரையில் ஆதி ஸ்ரீ சங்கரர் கூறியிருப்பது:—
"........जगतःस्थितिं परिपिपालयिषुः स आदिकर्ता नारायणाख्यो विष्णुः ...."

"ममैवांशो ......(அத்-15.. ச்லோ-7) அதற்கு ஸ்ரீ சங்கரபாஷ்யம்:—
"ममैव परमात्मनः नारायणस्य...." (ஸ்ரீ காமகோடி க்ரந்தமாலா- நி. 1. ஸ்ரீ ராமாயண ப்ரசுராலயம், சென்னை, மைலாப்பூர். இயற்றியவர்: டாக்டர் N. வீழிநாதன், M.A., Ph.D., (சென்னை ஸர்வகலாசாலை, ஸம்ஸ்க்ருதபாஷா, உயர்தர வேதாந்த விஷய, உபந்யாஸகர்).

"ईश्वरः सर्वभूतानां.... (அத்-18—ச்லோ-61) அதற்கு ஸ்ரீ சங்கர பாஷ்யம்:—"ईश्वरः ईशनशीलो नारायणः...."—கோரக்பூர் கீதா பிரஸ் பதிப்பு. அநுவாதகர்: ஸ்ரீ ஹரிக்ருஷ்ணதாஸ கோயந்தகா.

இவைகள் எல்லாவற்றுடன் ஆதி ஸ்ரீ சங்கரரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு நடந்து வரும் பெரும் பீடங்களின் சிஷ்ட அதிபர்களாயுள்ள ஆசார்ய ச்ரேஷ்டர்களான ஸ்வாமிகளுடைய கையொப்பங்களாகக் கருதப்படும் 'நாராயண ஸ்ம்ருதி' 'நாராயண ஸ்மரணம்' என்ற நிர்ப்பந்தமான பதங்களின் உபயோகங்களும் பொதுமக்களால் ஆழ்ந்து கவனிக்கப்பட வேண்டிய அதிநுட்பமான விஷயங்கள். ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யர் ஸ்வாமிகளின் புகழ்பெற்ற பிரதிநிதியான, இந்த 'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்ற அருமை நூலாசிரியர் ஸ்ரீ. உ.ப.வே. ராமாநுஜ தாதாசார்யர் ஸ்வாமிக்கு இதுகூடத் தெரியாதுபோலும்! இந்த நிலைமையில் மூன்று வேதங்களின் பாஷ்யங்களையும் ஆராய்ந்த விசாரசீலர் இவர், என்று ஸ்ரீரங்கம் ஸ்வாமி புகழ்ந்திருப்பதை எப்படி ஒப்புக்கொள்ளுவது என்பது நமக்குச் சிறிது கூடப் புரியாமலேயே இருக்கிறது. ஆனால், இந்தப் புகழை அடைந்திருக்கும் இவருடைய அதிருஷ்டத்தைப் பற்றி நாம் சிறிது கூட அசூயைப்படவில்லை. இவருடைய மிகப் புதிய அருமை நூலும் இந்தப் பிரசித்தியை இன்னும் அதிகமாகவே வளர்க்கட்டும், பரப்பட்டும்! நமக்கு அதிக சந்தோஷமே!!

ஸ்ரீ ராமாநுஜருக்கு முன்னமேயே இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு அடிப்படையில் அஸ்திவாரக் கல்லைப் பரப்பி அவருக்கும் வழிகாட்டியாயிருந்து, அவரைத் தமக்குப் பின் தமது ஸம்ப்ரதாயப் பரிபாலகராக இருக்க பகவானையும் வேண்டி, தமது மனப்பூர்வமான ஆசீர்வாதங்களையும் அவருக்குத் தந்தருளியிருக்கும் 'ஸ்ரீ ஆளவந்தார்' (ஸ்ரீ யாமுநாசார்யர்) தமது 'கீதார்த்த ஸங்க்ரஹம்' என்ற நூலின் முதலெடுப்பான ச்லோகத்திலேயே 'ஸ்ரீபகவத்கீதா' சாஸ்த்திரத்தினல் காண்பிக்கப்பட்டிருக்கும் 'பரப்ரஹ்மம் ஸ்ரீமந்நாராயணனே' என்று வெகு அழுத்தமாகச் சுட்டிக் காண்பித்திருக்கிறர். அது பின்வருமாறு

स्वधर्मज्ञान वैराग्य साध्य भक्त्येक गोचरः।
नारायणः परं ब्रह्म गीताशास्त्रे समीरितः॥ १॥

ஸ்ரீ 'விஷ்ணு ஸஹஸ்ரநாம' பலச்ருதியில் ஸ்ரீ வேதவ்யாஸர் கூறியிருப்பது:

ऋषयः पितरो देवा महाभूतानि धातवः।
जङ्गमाजङ्गमं चेदं जगन्नारायणोद्भवम्॥ १३०॥
योगो ज्ञानं तथा सांख्यं विद्याः शिल्पादिकर्म च।
वेदाः शास्त्राणि विज्ञानमेतत् सर्वं जनार्दनात्॥ १३१॥

एको विष्णुर्महद्भूतं पृथग्भूतान्यनेकशः।
त्रींलोकान्व्याप्य भूतात्मा भुङ्क्ते विश्वभुगव्ययः॥ १३२॥

"விஷ்ணு" (विष्णु) என்ற சொல் 'ஆதி ஸ்ரீ சங்கர'ரால் 'ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்ய'த்தில் பின்வருமாறு விளக்கப் பட்டிருக்கிறது:—

"वेवेष्टि व्याप्नोतीति विष्णुः विषेर्व्याप्त्यभिधायिनो नुक्प्रत्ययान्तस्य रूपं विष्णुरिति। देशकालवस्तुपरिच्छेदशून्य इत्यर्थः।

* * *

सर्वभूतस्थमेकं नारायणं कारणपुरुषमकारणं परं ब्रह्म शोकमोह-विनिर्मुक्तं विष्णुं ध्यायन्न सीदति' इत्यात्मबोधोपनिषदि॥ ३॥

* * *

'विशतेर्वा नुक्प्रत्ययान्तस्य रूपं विष्णुरिति।'

இந்த 'விஷ்ணு', 'நாராயணன்' என்ற பதங்களை விட 'ஹரி' என்ற பதமானது மிகப் பிரஸித்தமாகக் குறிப்பிடப்படுவதும், வேதாரம்பத்திலும், அக்ஷராப்யாஸத் துவக்கத்திலும், வேதபாராயண உபஸம்ஹாரத்திலும் (முடிவிலும்) 'ஹரி: ஓம்' என்று சொல்லப்பட்டு வரும் விஷயத்தை ஏன் இவர் வம்புக்கு இழுக்கவில்லையோ தெரியவில்லை! 'லக்ஷ்மி'யை 'ஹரிப்ரியை' என்று விளக்கப் பதச் சேர்க்கையைச் செய்திருக்கும் 'அமரஸிம்ஹன்' கூட, விஷ்ணு பதத்தோடு 'ஹரி' என்ற பதத்தையும் சேர்த்துத் தொகுக்கவில்லை. 'ராம' பதத்தையும் ஆக்ரஹத்துடன் அவர் ஒதுக்கிவிட்டார். அம்மாதிரி வைஷ்ணவ வரலாற்றைப் பற்றி பேசும்பொழுது 'விஷ்ணு' பதஸ்தானத்தில் 'நாராயண' பதம் பிரஸித்தி பெற்ற மாதிரி, 'ஹரி' என்ற பதமும் முன்னணியில் நின்றுவருகிறது ஏன், எதனுல், என்று விசாரம் செய்ய, இவருக்குத் தெரியாதா, அல்லது இவர் மறந்து விட்டாரா என்ற விஷயமும் இவருடைய நூல் சம்பந்தமாகக் கேட்கப்படவேண்டிய கேள்வியாகவே இருக்கிறது.

இவ்வாருன பல பதங்கள் வேதங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதா இல்லையாவென்பதும், அவைகளின் கவனத்திற்கு வராவிட்டால் அப்பதங்களின் ஸ்திதிக்கும் உபயோகத்திற்கும் இடமில்லையென்பதும், அவைகள் குறிப்பிடப் பட்டிருக்கிற சந்தர்ப்பங்களிலிருந்து அவைகளின் ஆயுளையும், வேறுவகைகளில் அவைகளுடைய பழமையையோ புதுமையையோ, கௌரவாகௌரவங்களையோ அளக்க முயலுவதும், மிகவும் கேவலமான, இளப்பமான மட்டபுத்தியையே

குறிப்பதாக ஆகும். உலகம் தோன்றும் காலத்தோடு இணைந்த நிரம்ப அர்த்தமுள்ள மூலச் சொல்லுக்கு காலக் கணக்கா, ஜாதகக் குறிப்புப் பேச்சா? அதைப்பற்றிப் பிரஸ்தாபம் இந்த நூலில் முதல் முதலில் காணப்படுகிறது, அல்லது, இல்லை, என்ற பைத்தியக்கார வாதமா? அதற்கு ஸமாதானம் செய்யவும் ஒரு முயற்சியா? தாயோடு தான் பிறந்த காலத்தைப்பற்றிச் சர்ச்சை செய்யும் குழந்தையைப் பற்றி என்னென்று நினைப்பது?

இவ்விஷயமாக இனி விவரணம் தேவையில்லை. ஏராளமாக இக்கருத்தைப் பின்பற்றிய பல ஆதாரங்கள் எடுத்துக் காண்பிக்கப் பட்டு விட்டன. மேலும் இன்னும் ஏராளமாகவும் இருக்கின்றன. இவைகளனைத்தையும் இங்கு அடுக்கடுக்காகக் குறிப்பிட்டுப் பிரசுரிப் பதும் அனுவசியம், சாத்தியமுமில்லை,

இவைகளையெல்லாம் கவனித்துத் தமது வாதங்களை ஒழுங்கு படுத்திக்கொள்ளச் சக்தியற்ற ஸ்ரீ தாத்தாசார்யர் ஸ்வாமியை 'மூன்று வேதங்களின் பாஷ்யங்களை நன்ருகப்பார்த்துக் கற்றறிந்தவர்' என்று ஸ்ரீரங்கம் கோயில் வேதபாராயணஸ்வாமி புகழ்மாலையையும் கூடவே தமது கண்டனக் கட்டுரையில் அவருக்குச் சூட்டியிருப்பது எப்படி அர்த்தமுள்ளதாக ஆகும் என்பது நமக்குப் புரியவில்லை.

இந்த அக்னிஹோத்ரம் ஸ்ரீ. உப. வே. தாதாசார்யஸ்வாமியைக் கொண்டு தங்களுடைய விஷம நோக்கங்களைச் சாதித்துக்கொள்ள முனைந்த இந்நூலின் பிரசாரக் குழுவினர்களும், அவர்களுக்கு ஆதரவாயிருந்த சென்னை ஹிந்து மத ஸ்தாபன அறநிலையப் பாது காப்பு அரசாங்க அதிகாரிகளும், அதிகமான பரிபூர்ண சாஸ்திர ஞானமும், ஆராய்ச்சி திறமையும், விசார சீலதையும் இவருக்கு இருக்கிறதாக நினைத்துப் பெரிதும் ஏமாந்து பல அபவாதங்களுக்கும் ஆளாகிவிட்டனர். இவரை அவமானப் படுத்த இவரை இவர்கள் தூண்டியிருக்கலாமோ என்று கூட நாம் சிறிது சந்தேகப்படுகின் ரோம். இந்த சந்நிதியில் வெகுநீண்ட காலமாக எழுந்தருளியிருந்து தமது பக்தகோடிகளுக்கு மிகக் கருணையுடன் ஸேவை கொடுத்துக் கொண்டிருக்கும் ' ஸ்ரீ சார்ங்கபாணிப் பெருமாளும் ' இம்மாதிரி இவ ருடைய யோக்யதையை அம்பலப்படுத்தி, இவருடைய கர்வத்திற் கும் அர்த்தமற்ற புகழுக்கும் ஒரு முற்றுப்புள்ளியை வைத்துவிட வேண்டும் என்று ஒருகால் ஸங்கற்பித்திருப்பரோ என்றுகூட நாம் நினைக்கவேண்டிய நிலைமை இப்பிரசுர வரலாற்றின் போக்கிலிருந்து நாம் கணக்கிடவேண்டியதாயிருக்கிறது.

வைதிக ஸ்ரீ வைஷ்ணவ உலகிற்கும் ஸம்ப்ரதாய கௌரவத்திற் கும் பெரும் தீங்கை விளைவிக்கத் துணிந்த இந்த அக்னிஹோத்ரம்

ஸ்ரீ. உப. வே. ராமானுஜதாதாசார்ய ஸ்வாமியின் செய்கையை அம்பலப்படுத்த, தாங்கள் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தையும் அதன் தர்மங்களையும் பாதுகாத்துக் கொண்டு பெரும் தொண்டைச் செய்துவருவதாகச் சொல்லிக்கொண்டு ஆடம்பரமாக வாழ்ந்துவரும் ஸ்ரீ வைஷ்ணவதர்ம பீட ஸ்தாபனங்களும், தனிப்பட்ட ஆசார்ய பரம்பரை நபர்களும், மௌனமாகவும், நொண்டி ஸமாதானங்களைச் சொல்லிக்கொண்டும் ஒதுங்கி நின்றுகொண்டிருக்கும் சமயம், மிகப் பொறுப்புடனும் அளவுகடந்த அக்கரையுடனும் தங்களுடைய கடமைகளை, தகுந்த சமயத்தை நழுவவிடாது வேத கௌரவம், வைதிக ஸ்ரீவைஷ்ணவப் பொது ஸம்ப்ரதாயம், எல்லாவற்றையும் பாதுகாக்க அக்கரை கொண்ட, திருச்சி 'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்', பெருமாள்கோயில் (காஞ்சீபுரம்) 'ஸ்ரீராமானுஜன் முதலிய பத்திரிகைகளையும் அவைகளின் சிறந்த ஆசிரிய நிபுணர்களையும், பொதுவான ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்கள் அனைவருமே புகழவும், அவர்களுக்குத் தங்களுடைய நன்றியைத் தகுந்தபடி இவ்விஷயமாகச் செலுத்தவும் என்றும் கடமைப்பட்டிருக்கின்றனர் என்பது நம் ஆழ்ந்த அபிப்ராயம்.

'நாராயண' பதத்திற்கும் 'விஷ்ணு' பதத்திற்குமுள்ள சம்பந்தம் எவ்விதமென்பதை வாசகர்கள் மேலே கொடுக்கப் பட்டிருக்கும் பல விவரங்களிலிருந்து நன்கு உணர்ந்துகொள்ள முடியும். இவ்வெல்லா விஷயங்களையும் நேர்மையான முறையில் கவனிப்பவர்களுக்கு ஸ்ரீ. உப. வே. ஸ்ரீ ராமாநுஜ தாதாசார்யருடைய 'வரலாற்றில் பிறந்த வைணவம்' என்ற நூல் எவ்வளவு அபத்தமானது என்பது வெகு செம்மையாகவும் மிகத் தெளிவாகவும் விளங்கும். இவர் இதை எழுதத்துணிந்தது அறிவு ததும்பிய ஸாஹஸத்தினுலா, அல்லது அறியாமையின் முதிர்ச்சியாலா என்பது நமக்கு ஊஹிக்க முடியாமலிருக்கிறது. அதைப் பற்றிய ஆராய்ச்சியும் தற்சமயம் தேவையில்லை, விமர்சமும் அவசியமில்லை. உயர்ந்த குலத்தில், ஆசார சீலர்களான பெரும் பரம்பரையில் பிறந்திருக்கும் இவரைப்பற்றி நாம் வருத்தப்பட்டு வெறுப்படைவதா, அல்லது அனுதாபப்பட்டுக் கவலையை அடைவதா என்ற விசாரமே பெருங் கடலில் நம்மை மூழ்கடித்திருக்கிறது. ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்திற்கும் பெரும் உதவியைச் செய்திருப்பவராக இவர் ஆகிருரா அல்லது அதைக்கெடுக்க முயன்றவராக இவர் நினைக்கப்பட வேண்டியவரா என்பதும் நமக்குப் புரியவில்லை. இவ்வளவு ஆராய்ச்சிகளுக்கும் விளக்கங்களுக்கும் காரணமாயிருந்திருக்கும் இவரை ஒரு வகையில் போற்றத் தகுந்தவர் என்றே தான் நாம் நினைக்கவேண்டியதாயுமிருக்கிறது.

—தார்மிக ஹிந்து மிஷன்.

து. க. ஜகந்நாதாசார்ய ஸ்வாமிக்கு ஸ்ரீரங்கம் வேதபாராயணம் A. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியின் பதில்

தார்மிகஹிந்துமிஷன் பிரசுரம்-2 ஸுதர்ஶனம் ஆநந்த வைகாசி இதழில் பிரசுரமாகியுள்ளது. அதில் அடியேனைப் பற்றிய ப்ரஸ்தாவம் உள்ளது. "(அக்நிஹோத்ரம்) தாதாசார்யர் ஸ்வாமி எவரிடமிருந்து இந்த மூன்று வேத பாஷ்யங்களையும் நன்ருகக் கற்றுப் பிறகு பார்த்துத் தெளிந்து உறுதிப்பட்டார்" என்பதை அடியேன் வெளிப் படுத்தவேண்டும் என்று அக்கட்டுரையில் கேட்கப்பட் டுள்ளது. "மூன்று வேதபாஷ்யங்களும் நன்ருகப் பார்த்துக் கற்றறிந்தவர்" என்று இவரைப்பற்றி லோகப்ரஸித்$_3$தி$_4$ இருப்பதைக்கொண்டே அப்படி எழுதினேனேயொழிய, இவர் இன்னரிடமிருந்து இன்னஇன்ன வேதபாஷ்யங்களைக் கற்றவர் என்று அறிந்து எழுதியதல்ல. வாக்ய ஸந் நிவேஶமும் நேரே அறிந்த விஷயத்தைத் தெரிவிப்பதாக அமையவில்லை என்பதைக் காணலாம். "நல்லறிவிழந் தால் அதை மீண்டும் பெறுவது கடினம்" "இவர் மனம் போனபடி எழுதியிருக்கிருர்" "(இவர் இப்படி) எழுதுவது யாரை எமாற்றவோ தெரியவில்லை" முதலான வாக்யங் களில் (லோகப்ரஸித்$_3$தி$_4$யின்படி) இவர் பெற்றிருந்த நல் லறிவை இவர் இழந்துவிட்டார் என்றும், பிறரை ஏமாற்று வதற்காக ப்ரமாணங்காட்டாமல் மனம்போனபடி எழுது கிருர் என்றும் தெளிவாகக் காட்டியிருக்கிறேன். ஆகை யால் ஜகந்நாதாசார்ய ஸ்வாமி லோகப்ரஸித்$_3$தி$_4$யை எழுதியதற்காக அடியேனைக் குறைகூறுவது உசிதமல்ல. உண்மையில் தாதாசார்யர் எந்த வேதபாஷ்யத்தையும், எவ ரிடமும் கற்றறிந்தவரல்ல;அப்படி லோகப்ரஸித்$_3$தி$_4$யிருப்பது பொய்ப்பிரசாரத்தினுலானது என்று தேறினுல் அது அடியேனுக்கு அநிஷ்டமுமல்ல என்பதை விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.—

A. ராமஸ்வாமி அய்யங்கார்.

குமுதத்தில் அஹோவின் மதத்₃ரோஹம்

[ஸுத₃ர்ஶனம் ஆசிரியர்]

வாராங்கநைகள் (தா₃ஸிகள்) ஸமூஹத்தை நீண்டகாலம் கெடுத்துவந்தனர். அந்த ஸ்தா₂னத்தைச் சில வாரப் பத்திரிகைகள் இக்காலத்தில் ஏற்றுக்கொண்டு, சோரம் போகும் கதைகளையும், காமரஸத் துணுக்குகளையும், அரை நிர்வாணப் படங்களையும் வெளியிட்டு, சிறுவர்முதல் கிழவர் வரையில் ஆண்பெண் வாசியில்லாமல் லட்சக்கணக் கான பாமரமக்களது மனத்தைக் குட்டிச்சுவராக்கி வருகின்றன. இவற்றுக்கு அரசாங்கமோ, சமூகமோ எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்கவில்லை. ஏழை, பணக்காரர் என்னும் வாசியில்லாமல் லட்சக்கணக்கான மக்களைத் தங்கள்பால் ஈர்த்து, அவர்களுடைய ஒழுக்கத்தைக் குலைத்துவரும் மாபாதகச் செயலைச் செய்துவருகின்றன இப்பத்திரிகைகள். நம் தமிழ்நாட்டில் இவ்வாரப்பத்திரிகை களுக்குத் தலைமை வகிப்பது 'குமுதம்' என்னும் பத்திரிகை. அதில் 8—8—74 இதழில், "யானைக்குத் திருமண்" என்னும் தலைப்பில் சில கடிதங்கள் வெளியாகியுள்ளன. அவற்றில் வைணவர்களின் மத நம்பிக்கையைக் குலைக்கவென்றே அரும்பாடுபட்டுவரும் மதத்₃ரோஹியான அஹோ ஓர் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தைப் படித்தாலே அஹோ எந்த ஆதாரத்தையும் காட்டாமல் பல ப்ரமாணங் களுக்கு முரணாக மனம்போனபடி பெரும் பொய்களை எழுதக்கூடியவர் என்று விளங்கும். அக்கடிதத்தை மறுத்து, "தார்மிக ஹிந்துமிஷன்" ஸ்ரீ உ. வே. T. K. ஜகந்நாதாசார்யஸ்வாமி குமுதத்திற்கு ஓர் கடிதம் எழுதினார். குமுதத்திற்கு அதைப் பிரசுரிக்கும் நேர்மையில்லை. ஸ்ரீவைஷ்ணவர்களாவது உண்மையை உணர்ந்துகொள் வதற்காக, குமுதத்தில் அஹோவின் கடிதத்தையும், அதற்கு T. K. ஜகந்நாதாசார்ய ஸ்வாமியின் மறுப்புரையையும்

அடுத்தபடி அச்சிட்டு, நமது முடிவுரையுடன் இவ்வநுபந் தத்தைப் பூர்த்திசெய்வோம்.

குமுதத்தில் அஹோரவின் கடிதம்

ஆகமங்களின்படி பெருமாளின் நெற்றியில் வடகலைத் திரு மண்ணோ, தென்கலைத் திருமண்ணோ எதுவும் கிடையாது. எம் பெருமானின் திருவடியைப் பற்றிக் கொண்டவர்கள் என்பதற்கு அடையாளமாக ஆரம்பத்தில் மொத்தையாக அந்த வடிவத்தை நெற்றியில் அப்பிக் கொண்டார்கள். பிறகு அதன் நடுவே அழ குக்காக ஒரு குங்குமப் பொட்டு வைப்பது வழக்கமாகி, இப் போதைய திருமண்ணாக உருவாயிற்று. நூற்றைம்பது வருடங் களுக்கு முன்னால் வரையில் வடகலை தென்கலை பற்றிய சண்டைகள் கிடையாது. கோவில்களை நிர்வகிக்கும் பொறுப்பை வெவ்வேறு பிரிவினரிடம் ஒப்படைத்தார்கள் வெள்ளைக்காரர்கள். அதைத் தொடர்ந்து வழக்குகள் ஏற்பட்டன. விஷயம் தெரியாத வெள்ளைக் கார ஜட்ஜுகள் மனம் போனபடி தீர்ப்பளிக்கத் தொடங்கினார்கள். வைணவத் தலங்களில் இம்மாதிரி வழக்குகளினால் லட்சக்கணக் கான ரூபாய்களும் நூற்றுக்கணக்கான குடும்பங்களும் பாழாகி இருக்கின்றன.

திருக்குடந்தை அக்னிஹோத்ரம் ராமானுஜ தாத்தாசாரியர்.

"சென்னை-15 தார்மிக ஹிந்து மிஷன்" ஸ்தாபகரான ஸ்ரீ உ. வே. து. க. ஜகந்நாதாசார்யஸ்வாமி "குமுதம்" ஆசிரியருக்கு எழுதிய கடிதம்

திருக்குடந்தை அக்னிஹோத்ரம் ராமாநுஜ தாதாசார்யர் எழுதிய தாக திருமண் சரித்திர வரலாற்றை 8—8—74 குமுதத்தில் தாங்கள் பிரசுரித்திருக்கிறீர்கள். மற்ற சில துணுக்குகளும் கிண்டல்களும் அதே பக்கத்தில் வெளியாகியிருக்கிறது. அவைகளை விட்டு திருமண் வரலாற்றைப்பற்றிமட்டும் சில வார்த்தைகள் தற்சமயம் கவனிக்கப் படுகிறது. ''ஆகமங்களின்படி திருமண் குறிகள் கிடையாது'' என்றும் ''எம்பெருமானின் திருவடியைப் பற்றிக்கொண்டவர்கள் என்பதற்கு அடையாளமாக ஆரம்பத்தில் மொத்தையாக அந்த வடிவத்தை நெற்றியில் அப்பிக்கொண்டார்கள். பிறகு அதன் நடுவே

அழகுக்காக ஒரு குங்குமப் பொட்டு வைப்பது வழக்கமாகி, இப்போதைய திருமண்ணாக உருவாயிற்று'' என்று அவர் பழங்காலம் நேரில் இருந்து பார்த்தவர்போல் எழுதியிருக்கிறார். நூல் ஆதார வாக்கியங்களைக் குறிப்பிடவில்லை. பெருமாளுக்குத் திருமண்காப்பு சாற்றிவருவதின் கருத்தை ஏன் கவனித்து விளக்காமல் ஒதுக்கி விட்டாரோ தெரியவில்லை. தற்சமயம் நடந்துவரும் விஷய அடிப் படையைவிட்டு பழைய நிலைகளை இவர் குறிப்பிடுவதின் கருத்து விளங்கவில்லை.

தற்கால அரசியல் கொடிபேதங்களின் கருத்துக்கள் அவைகளைப் பார்த்தவுடன் புரிந்துகொள்ளும்படியாக இருக்கின்றனவா? அவைகளை உபயோகிப்பவர்களின் மனோநிலைமைக்கும் கொள்கைகளுக்கும் அடையாளங்கள் தானே கொடிகள். அவைகளைப்போல் திருமண் குறிமாறுபாடுகள் சில கருத்து வேற்றுமைகளின் அடையாளங்கள் என்று கண்ணியமாக நினைத்து அவைகளைக் கிண்டல் செய்யாம லிருக்க ஏன் இந்த நவீன நாகரீகர்களுக்கு பெரும்புத்தியோ — சம புத்தியோ வரவில்லை?

அரசியல் கட்சிகள் பரஸ்பர குஸ்திகள் போட்டுக்கொள்வதைப் பார்த்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு இந்த வைஷ்ணவக்கலைச் சண்டை விஷயமாகமட்டும் புத்தி கூறவோ— கிண்டல் செய்யவோ— என்ன அக்கரை வந்தது என்பது கவனிக்கத்தகுந்த விஷயம்.

காட்சிச்சிறப்பை உடைய இயற்கை வளங்களையோ—யோக்கியர் களாக உள்ள தேசத் தலைவர்களையோ—அல்லது ''ஸ்டை''யில் தேர்ந்தவர்களாக பிரகடனம் செய்துகொள்ளும் அழகிய ஆண்களையோ, தன் அட்டைப்படத்தில் போடாமல் இதழ் தவறாமல் பெண்களது முகவடிவ ''அழகை'' மட்டும் மாற்றி-மாற்றி போட்டு வருவதன் உட்கருத்துமட்டும் விசாரிக்கத்தகுந்த விஷயமில்லையா?

இதழுக்குள் பிரசுரிக்கப்படும் கருத்துச் சிறப்புகளுக்கு அதிகம் செலவழிப்பதைவிட்டு அட்டை காகிதத்திற்கும்-பலவர்ணப் படங் களுக்கும் ''குமுதம்'' ஏன் வீணாகப் பணத்தை வாரி இறைத்து வருகிறது என்று இதன் சிறப்பாசிரியர், பிரசுர நிர்வாஹிகள், மற்ற பொதுமக்கள் முதலியோர்களுக்கு ஏன் விசாரிக்கத்தோன்றவில்லை என்று கேட்பவர்களுக்கு எவ்வித பதில் கிடைக்கும்?

இத்தகைய மத, சம்பிரதாய கொள்கைகள் சம்மந்தமான சச்சரவைப் பிரசுரித்து "குமுதம்" கிண்டல் செய்யலாமென நினைக்கிறதா? அல்லது தகுந்த, நியாயமான, திருத்தங்களை கொண்டுவர நினைக்கிறதா?

ஸ்ரீ ராமாநுஜ தாதாசாரியர் சர்வசாஸ்த்ர நிபுணரும் அல்ல— வைணவ சம்பிரதாயத்தின் ஒப்புக்கொள்ளப்பட்ட-பிரதிநிதியும் அல்ல.

கும்பகோணம் சாரங்கபாணி தேவஸ்தான பணத்தில் – ஆளும் கட்சி – தி.மு.க.வுடன் "மேல் தலைவர்களுடன்" கலந்து பிரசுரிக்கப் பட்டிருக்கும் "பெரும் தகராறுகள் நிரம்பிய" "வரலாற்றில் பிறந்த வைணவம்" என்ற இவரது நூல் வெகுவாகக் கண்டிக்கப்பட்டு வருகையில் இவர் மீண்டும் வைஷ்ணவர்களை 'குறைவுசெய்யும்' பணியில் பிடிவாதமாக—இறங்கியிருப்பது எதிரிகளுக்கு உதவலாம். ஆனால், இது மத சமூகதுரோக வேலையாகக் கருதப்படும்.

இந்தத் திருமண் விஷயத்தை பல ஆதாரங்களுடன் தமது 'வம்பு' புத்தகத்தில் ஏன் எழுதாமல் விட்டுவிட்டாரோ?

து. க. ஜகந்நாதாசாரியார்.

ஸுத₃ர்ஶனம் ஆசிரியரின் முடிவுரை

"ஆகமங்களின்படி பெருமாளின் நெற்றியில் திருமண் கிடையாது" என்று அஹோ கூறுவது வேதா₃ந்த தே₃ஶிக ஸ்ரீஸூக்தி விருத்₃த₄ம். எப்படியெனில்: ஸச்சரித்ர ரக்ஷையில் இரண்டாமதி₄காரத்தில் அர்ச்சாவதாரங்களில் தீ₃பஶிகா₂ காரமான ஊர்த்₄வபுண்ட்₃ரமே உள்ளதாகையால் ஹரிபாத₃ாகாரமான ஊர்த்₄வபுண்ட்₃ரத்தை ப₄ாக₃வதர்கள் த₄ரிக்கலாகாது என்று ஆக்ஷேபித்துக்கொண்டு ஸமா த₄ானம் சொல்லிவருகையில் "ந ச தீ₃பஶிகா₂காரமேவ அர்ச்சாவதாரேஷு ஊர்த்₄வபுண்ட்₃ரம் குரு இதி விதி₄ரஸ்தி, யேந ஸம்ஸ்தா₂நாந்தராணி பரித்யஜேரந்" [அர்ச்சாவதாரங் களில் தீ₃பஶிகா₂காரமாகவே ஊர்த்₄வபுண்ட்₃ரம் இட வேண்டுமென்னும் விதி₄யில்லையே; ஆகையால் ஹரி பாத₃ாகாரம் முதலான மற்ற ஊர்த்₄வபுண்ட்₃ரங்களையும்

அர்ச்சாவதாரவிஷயத்தில் கைவிடவேண்டியதில்லை] என்று தெளிவாக ஹரிபாத₃ாகாரமான ஊர்த்₄வபுண்ட்₃ரமும் அர்ச்சாவதாரத்தில் உண்டு என்று காட்டியிருக்கிறார் ஸ்ரீ தே₃ஶிகன்.

அதற்குமேல் "எம்பெருமானின்...திருமண்ணாக உரு வாயிற்று" என்று அஹோ எழுதியிருப்பது, தே₃ஶிகன் அந்த ஸச்சரித்ரரக்ஷையின் இரண்டாமதி₄காரத்தில் ஶ்ருதி, ஸ்ம்ருதி, பாஞ்சராத்ரம், வைகா₂நஸம, புராணங்கள் முத லானவற்றிலிருந்து திருமண் விஷயமாக எடுத்துக்காட்டி யிருக்கும் நூற்றுக்கணக்கான ப்ரமாணங்களுக்கு விருத்₃த₄ மானது. "நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னால் வரையில் வடகலை தென்கலை பற்றிய சண்டைகள் கிடை யாது" என்பதோடு நிறுத்திக்கொள்ளாமல், "கோவில்களை நிர்வஹிக்கும் பொறுப்பை வெவ்வேறு பிரிவினரிடம் ஒப்படைத்தார்கள் வெள்ளைக்காரர்கள்" என்று அஹோ எழுதியிருப்பது அவர் ப்₃ரஹ்மாண்ட₃ப்புளுகர் என்று காட்டுகிறது. வெள்ளைக்காரர்கள் இந்நாட்டுக்கு வந்து இதை ஜயித்துக் கைப்பற்றிக்கொண்டது இருநூறு வருடங்களுக்குள்ளேயே ஆகும். அதற்கு முன்பே ஸ்ரீவைஷ்ணவக் கோயில்கள் ஸ்ரீராமாநுஜ தி₃வ்யாஜ்ஞையின் படி கோயில் கடைத்தலை இருந்து வாழும் ஸ்ரீவைஷ்ண வர்களாலே நிர்வஹிக்கப்பட்டு வந்தன. அவை எந்தக் கலையைச் சேர்ந்தவர்களால் நிர்வஹிக்கப்பட்டு வந்தன என்பதை இன்றும் பெரும்பாலான கோவில்கள் — குறிப் பாகக் கலைச்சண்டை இல்லாத பாண்டிநாட்டுக் கோயில் கள் முழுவதும் — சாட்சி சொல்லுகின்றன. ஆழ்வார்கள் காலத்திலிருந்து இன்றுவரையில் கலைமாறுபாடு இல்லாமல் கோயில் கைங்கர்யங்களிலேயே ஊன்றி நிற்கும் பூர்வஶிக₂ ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹம் இவ்விஷயத்தில் மறுக்கவோ, மறக் கவோ, மறைக்கவோ வொண்ணாத சாட்சியாய் விளங்கி வருகிறது. ஒரு சில கோவில்களில் ஒரு குறிப்பிட்ட கலையினர்

ஆக்ரமித்தார்கள் என்பதையும், ஆக்ரமிக்கப்பட்டவர்கள் அரசாட்சி செலுத்தி வந்த வெள்ளேயரிடம் முறையிட்டார்கள் என்பதையும், அவர்கள் தங்களால் இயன்றவரையில் நியாயம் வழங்கினுர்கள் என்பதையும் ஸ்ரீரங்கம், காஞ்சீபுரம், ஸ்ரீபெரும்பூதூர், திருவல்லிக்கேணி முதலான கோயில்கள் பற்றிய ஏராளமான நீதிமன்ற ரிகார்டுகள் சாட்சி கூறுகின்றன. இவற்றில் பலவற்றை ஸ்ரீ காஞ்சீ மஹாவித்வான் ஸ்வாமி பலமுறை அச்சிட்டு வெளியிட்டிருக்கிருர். பல வழக்குகள் I.L.R., A.I.R., M.L.J., முதலான லா ரிபோர்ட்டுகளிலும் அச்சிடப்பட்டுள்ளன. அச்சிடப்படாமலுள்ள ஏராளமான ரிகார்டுகள், கோயில் தென்ஞசார்ய ஸம்ப்ரதா₃ய ஸம்ரக்ஷண ஸப₄ாவைப் போன்ற ஸபை₄களின் வசத்திலும், கோயில் கலே வழக்குகளில் ஈடுபட்ட தனிப்பட்டவர்களிடத்திலும் இன்றும் காணக்கிடைக்கின்றன. முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போலே, இவையெல்லாவற்றையும் மறைத்துவிடலாம் என்று துணிவுகொண்ட அஹோ, கோவில்களெல்லாம் அநாதி₃காலமாக வெள்ளேக்காரர்கள் கையில் இருந்ததுபோலவும், அதை அவர்கள் 150 வருஷத்திற்குள் குறிப்பிட்ட கலேயாரிடம் ஒப்படைத்ததுபோலவும் பெரும்பொய்யை எழுதுவதும், அதைப் பொய்க்கதைகளே எழுதிப்பிழைக்கும் ஓர் பத்திரிகை வெளியிடுவதும் இந்த நாட்டில் இக்காலத்திலேயே நடக்கக்கூடிய உலக அதிஶயங்களில் ஒன்ருகும். "நீறுபூசிக் கொள்ளும் பழக்கம் வேத₃ங்களிலும், இதிஹாஸங்களிலும், பழைய இலக்கியங்களிலும் காணப்படாததால், அது நவீனமாகச் சிவனடியார்கள் கைக்கொண்ட பழக்கமாகும்" என்று ஒருவர் எழுதினுல் அதைக் குமுதம் வெளியிடுமா? ஊருக்கிளேத்தவர்கள் வைஷ்ணவர்கள், அவர்களேப்பற்றி என்னவெளியிட்டாலும் கேட்பாரில்லே என்னும் எண்ணத்திஞலன்ருே மதத்₃ரோஹியின் இக்கடிதம் குமுத₃த்தில் வெளியிடப்பட்டுள்ளது. நிற்க.

அஹோவின் இக்கடிதம் பற்றிய பல உண்மைகளை, இம்மாதம் வெளிவரவிருக்கும் ஸ்ரீராமாநுஜனில் ஸ்ரீகாஞ்சீ மஹாவித்₃வான் ஸ்வாமி வெளியிடவிருக்கிருர். அதைக் கண்டு அன்பர்கள் தெளிவடைவார்களாக. நிற்க.

சோரம்போகும் கதைகளை வெளியிடும் வாரப்பத்திரிகையில், மத சோரம்போன அஹோவின் கடிதம் பிரசுரிக்கப்பட்டதிலும், அதை மறுக்கும் கடிதத்திற்கு இடமில்லாமல் போனதிலும் ஆச்சரியமில்லை. ஆயினும், இக்கடிதம் அஹோவின் வேஷத்தைக் கலைத்துவிட்டது. இத்தகையவரோடு இனியும் வைஷ்ணவ குலத்திற் பிறந்தவர்கள் ஸ்நேஹம் கொண்டிருந்தால், அவர்களது வைஷ்ணவத்வத்தையும் சங்கிக்க அடுக்கும். நிற்க, ஸுத₃ர்ஶனத்தில் வெளிவந்த மறுப்புரைகளுக்கு எவ்வித ஸமாத₄ானத்தையும் வெளியிட இயலாத அஹோ, நம்மைக் கண்டபடி இகழும் வசவுச் சுவடியொன்றைப் பிறர் பெயரில் அச்சிட்டு வருவதாகத் தெரிகிறது. ஏற்கனவே இவர் தன் உறவினனை ஓர் காலிப்பையலின் பெயரில் கேட்பார் செவிசுடும் கீழ்மை வசவுகளைப் பெய்து சில சுவடிகளை வெளியிட்டிருப்பதைப் பலர் அறிவர். இவற்றிலிருந்து — நமது இந்நூலில் ப்ரமாணங்களோடு நிரூபிக்கப்பட்ட விஷயங்களுக்குத் தம்மால் பதிலிறுக்கமுடியாது என்பதை இவர் காட்டிக் கொண்டவராகிருர். பயங்கொள்ளித்தனமாகப் பிறர் பெயரில் எழுதப்படும் வசவுநூல்களுக்கு மதிப்பளித்து நாம் பதிலிறுக்கமாட்டோம். தைரியமிருந்தால், இவ்வஹோ நமது நூலிலுள்ள மறுப்புக்களுக்கு, ஆத₄ாரங்காட்டி ஸமாத₄ானமுரைத்துத் தம் பெயரிலேயே நூல் எழுதட்டும். அப்படி எழுதினுல் நாமும் அதை ஆராய்வோம். பிறர் பெயரில் வசவுச்சுவடிகளையே வெளியிட்டால், அவற்றைக் காற்கடைக்கொள்வோம்.

—[❋]—

ஸ்ரீஸூக்திமாலா வெளியீடுகள்

பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு
முதலானவற்றோடு கூடிய பெரியவாச்சான்பிள்ளை முதலான
பூர்வாசார்யர்களின் க்₃ரந்த₂ங்கள், ஆழ்வாரருளிச்செயல்கள்.

க்₃ரந்த₂ங்கள்	விலை	தபால்
1. பரந்த ரஹஸ்யம் முதலிய எட்டு ரஹஸ்யங்கள்	(அச்சில்)	
2. ஸ்தோத்ரரத்நசது:ஶ்லோகீ ஜிதந்தே வ்யாக்யானங்கள்	8-00	1-00
3. திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	1-50	-40
4. முதல் திருவந்தாதி வ்யாக்யானம்	1-88	-50
5. பெருமாள் திருமொழி		
6. திருமாலை வ்யாக்யா		
7. திருவாசிரியம் பெரி	சில்)	
8. சது:ச்லோகீ வ்யாக்	2-50	-50
9. கத்ய வ்யாக்யானங்	4-50	-50
10. நாச்சியார் திருமொ		
11. திருச்சந்தவிருத்த வ்	3-00	-65
12. நான்முகன் திருவந்		
	5-00	-75
13. ஸ்ரீராமாயண த	3-50	-75
ஷை இரண்டாம்	7-00	1-00
14. திருப்பள்ளியெழுச்சி	0-50	-20
15. பாசுரப்படி ராமாய		-10
16. அமலனாதிபிரான் வ்		
17. கண்ணிநுண்சிறுத்தா		
*18. சிறியதிருமடல் வ்யா	3-00	-65
19. முமுக்ஷுப்படி வ்யா	3-00	-65
20. பெரியதிருமடல் வ்ய	5-00	-75
21. முதல் திருவந்தாதி,		
	3-00	-65
22. இரண்டாந்திருவந்தாதி வ்யாக்யானம் [விவரணத்துடன்]	4-00	-85
23. ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் முதலியவை	12-00	1-50
24. ஸ்ரீவசநபூ₄ஷண வ்யாக்யானம்		
4-அரும்பதவுரைகளுடன் முதல் பாகம்	6-00	1-20
25. மூன்றாந்திருவந்தாதி வ்யாக்யானம் [விவரணத்துடன்]	4-00	-85
26. அருளிச்செயல் ரஹஸ்யம் [பூ₄ஷணத்துடன்]	2-50	-65
27. திருவெழுகூற்றிருக்கை வ்யாக்யானம் [விவரணத்துடன்]	1-00	-35
28. கைசிகபுராணம்	1-00	-25
29. பகவத்விஷயம் (முதலிரண்டு திருவாய்மொழிகள்)	25-00	5-00
ஷை இரண்டாம் பாகம் (முதற்பத்து 3-10 திருவாய்மொழிகள்)	28-00	5-00
30. உப₄யவேத₃ாந்த ஐககண்ட்₂யம்	2-50	-50
31. கோயிலொழுகு	3-00	-50
32. யதிராஜ வைப₄வம்—வடுகநம்பி அருளியது [விவரணத்துடன்]	1-00	-25
33. நாலாயிர திவ்யப்ரபந்தம் [முதலாயிரம்]	7-00	1-00